கடவுள்துணை.

நாலடியார்

என்று வழங்கும்

நாலடி நானூறு மூலமும்

அதற்கு

மஹாவித்வான்

கோமளபுரம்-இராசகோபாலப்பிள்ளையவர்கள்

இயற்றிய

உரையும்.

இவை

சென்னை இந்துதியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ம-ரா-ரா-ஸ்ரீ கோ. வடிவேலுசெட்டியாரவாகளால

பார்வையிடப்பட்டு,

ம-ரா-ரா-ஸ்ரீ

கல்குளம்-சுப்புசாமி முதலியார், பி. ஏ.,

அவர்கள் இயற்றிய

ஆங்கிலேய மொழிபெயர்ப்புடனு

பென்ஷன் சுபேதார். தஞ்சை. சாம்பசிவம்பிள்ளை

அவர்கள் குமாரர்

தஞ்சை. எஸ். குமாரசுவாமிப்பிள்ளையவர்களால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

சென்னை.

1903.

[*All Rights Reserved.*]

INTRODUCTION.

The Nâladiyâr is a work on Ethics whose composition and compilation are ascribed to a period when the last or the third Sangam or Academy at Madura flourished. Unlike the Kural, it is not the work of one author but the production of a number of Jaina ascetics. But all the stanzas or quatrains were originally more or less in a scattered state which after a time were compiled and edited by one Pathumanâr, of whom nothing but his name is known at present. This compiler or Editor, if he may be so called, has tried his best to work them into a kind of harmony with the arrangement of the famous Kural. The result of such a forced and artificial arrangement is that the title of a chapter very often gives little or no clue to the contents thereof, and it is open to question why one particular stanza in one chapter may not with equal propriety be transferred to another. Some of the quatrains in a chapter are, we may say without fear of contradiction, irrelevant. Some are redundant. This remark applies to certain chapters * as well. A few of the quatrains may be said to be of a much older date than the Kural, but most of them are decidedly of a much later date and often seem to indicate an acquaintance with it.†

* Chapters XXXV and XXXVI.

† Page xiv of Dr. Pope's Introduction to the Kural.

This work stands next in estimation to the Sacred Kural among the Tamils and throws, as Dr Pope observes, a flood of light upon the whole ethical and social philosophy of the Tamilians.

The misery of embodied existence of the individual soul in successive and infinitely varied forms, and the happiness resulting from the release of the embodied soul, are often expressed with much force and illustrated with every kind of figure. It is assumed that conscious existence either on earth or in heaven or hell is an absolute evil. The doctrines expounded in the work are in the main acceptable to all sects of the Tamil speaking Hindus. That relating to 'Old Deeds' or 'பழவினை' ....ver, differs from that held by the Hindus in general and the Jaina idea is considered to be of a lower standard. Whatever may be the defects in the ork, there is in it a 'strong sense of moral obligation, an earnest aspiration after righteousness, a fervent unselfish charity and a loftiness of aim that are y impressive.' Some veteran scholars like Pope, Ellis and others have shown in many ways that they

really proud of having as their fellow subjects such a people as the Tamils who delight so much in compositions thus remarkably expressive of hunger and thirst after righteousness. Dr. Pope says,* "They are the foremost among the peoples of India, and the Kural and the Naladi have helped to make them so."

Many of the quatrains are of an epigrammatic character and have become household words through

* Page 1 of Dr. Pope's Introduction to the Naladiyar.

out the Tamil speaking land. The fifteen millions of Tamil speaking people now living in South India and elsewhere, owe their moral nature either directly or indirectly to the Nâladi and the Kural.

Such is the greatness of the Nâladi, and no Tamilian, even though it has been called 'Velân Vedam'† should ignore its existence and go in search of other works of other lands which, he may fancy, will give him a better training in morality.

It is but natural for students of Tamil to have a desire to know something about such a work. The origin of this work, however, is lost in oblivion, and there is no trustworthy account of it now available. The tradition concerning this is that at one time 8,000 of the Jain ascetics sought the protection of the Pandiyan King when the country they lived in was afflicted by a severe famine. Those sages were in the court of the Pandiyan King for some years. When years of plenty succeeded, they asked leave of the king to depart to their places; but the king was not willing to grant the permission. So all the ascetics are said to have departed without notice to their own places in one night. When this was known to the king, he felt sorry, and when a search was ordered to be made, it was found that each ascetic had left in his seat a quatrain. All these were collected and brought before the king, which seemed to be rather disconnected, and he was able to make neither head nor tail out of them. The king in anger ordered them to be thrown into the river

† The Vedas of the Velâlâs—a section of the Tamils.

Vaikai. Some of them were carried away by the current, and others floated against it and collected near the banks in three places. One of these collections is supposed to be the *Naladi* and the other two are the Palamoli (பழமொழி) and the Arranerichchâram (அறநெறிச்சாரம்). The latter two collections are decidedly of an inferior type, and some of the verses in them cannot be credited with the antiquity claimed for. There are other versions of the tradition not materially different from this. But there is one which gives out that the Nâladi comprises the quatrains of certain Jaina works which floated against the current in connection with the test of the greatness of the Jains in the pre-

of Kûn Pandiyan and Tiru Jnâna Sambandar. This, however, is not consistent with the tradition connected with the disputation of the Jains with Jnâna Sambandar. Very little credit can be given to these traditions generally. Some seem to interpret the first tradition in an allegorical way, *viz*—These are verses of various ancient Tamil poets which the stream of time has not been able to sweep

y into oblivion.* This might be a possible interpretation of the tradition.

Now as to the age of this work. The Rev. Dr U. Pope thinks that this must have been composed between † 800 and 1200 A. D., and again, probably in the 11th century. ‡ As it has already been

page xiv, Dr Pope's Introduction to the Kural.

Dr. Pope's Introduction to the Naladiyar, page x.

Dr. Pope's Introduction to the Kural, page xiv.

observed some of the quatrains are certainly ancient and older than the Kural couplets. The Nâladi stands first in a stanza $ which enumerates some eighteen works belonging to a certain class of composition known as Keelkanakku. All these eighteen are supposed to be of the last Sangam period. The fifth in the list, *viz*, the முப்பால் or Kural, is considered to have been written in the first || century A.D. These works and others included in two other collections known as Pattuppâttu and Ettu thogai and the Epics like the Silâppadikâram and the Manimekalai must have come into existence either before or at the time when the last Sangam flourished at Madura. Many learned men would date this Sangam as of the earliest century of the Christian era, or of the second century. Others would bring it to the eleventh or the twelfth century. Mr. L. C. Innes, a great Tamil scholar (late Judge * of the High Court of Judicature at Madras) is one of those who share this view, and he says that about 1100 A. D. the so called third Sangam was being held † (at Madura). He says the period of Tiruvalluvar is about this time. ‡ At about the same time, Rudran Kannanâr wrote a poem in

---

‘ நாலடி நான்மணி நானூற்ப தைந்திணை முப்
பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம்
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யெனப்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.”

|| p. 34. l. 15, Essay on Tamil Literature by Prof. Sesahagiri Sastriyar, M. A.

* Retired in 1883.

† Page 335, Asiatic Quarterly Review, April 1902.

‡ Ibid.

praise of Karikâla Chola and another in praise of Tondaimân; Sittalai Sâttanâr was at the court of Senguttuvan, the Chera king; Ilangovadigal, brother of Senguttuvan and author of the Silappadikâram, and Sâttanâr the author of the Manimekalai who both quote Tiruvalluvar * were contemporaries and wrote these epics at about this time.

There are a few—and among whom the late Prof. Seshagiri Sastriyar in his Essay on Tamil Literature †—who have gone to the length of doubting if ever a Sangam existed or its existence were not simply legendary.

We shall not, however, waste our time in disproving the last of the three views expressed in regard to the last Sangam at Madura. Granting then the positive existence of the Academy at Madura, we shall have to examine whether the view placing it in the 11th or 12th century is sound or that carrying it to the early centuries of the Christian era is correct.

First let us take up the former of these two views and examine it in the light of the internal and external evidence that we have now at our disposal. Mr. L. C. Innes in connection with the discussion of the subject of the "Age of Manikka Vâsagar" in

---

Distich No. 55. "தெய்வீ தாழாஅள் கொழுநற் றுறுழ
தகுவான் பெய்யெனப் பெய்யுமழை" Katturai Kathai (No. 23) ll. 201-202, Silappadhikaram. Siraisei Kathai, No. 22, ll. 59-60, Manimekalai.

† p. 39 ll. 2-4.

an article in the Asiatic Quarterly Review, * devotes some ten paragraphs to the solution of the age of the last or third Sangam †. We are very much indebted to Mr. Innes for his able and excellent article which incidentally, in addition to his main theme, brings out in bold relief the conclusions already arrived at in regard to the time of some other well-known names in the South Indian history, both literary and religious. But we are sorry to be obliged to point out for the present that his conclusion regarding the age of Tiruvalluvar and the Sangam is wrong and utterly untenable as can be presently seen. Let us then first clear the ground by proving that his conclusion regarding the age of Tiruvalluvar or his Kural (viz. 1100 A. D.) is wrong. Mr. Innes says that the Kural, which is quoted in Manimekalai and Silappadikâram $ which he thinks he has proved to be of the time of *Gaja Bâhu* (Gaja Bâhu II of Ceylon—1142 A. D.) referred to in the latter work, must have been written some years before the composition of these two epics and therefore places it at about 1100 A. D. Perhaps he is under the impression that the Kural is not quoted in any other work of an anterior date. It has been settled that Nambi Andâr Nambi compiled the Tamil Saiva Bible or the Sacred Books in Tamil known as the Tirumurai about the end of the 10th century (985-1000) and Mr. Innes fixes his seal

---

* Vol. XIII, No. 26, April 1902 (Third Series.)

† pp 324-328, Asiatic Quarterly Review, April 1902.

$ page 335. Ibid; See also lines 3-4 of Vanjinamâlai, Kathai No 21. & footnote * on page 6.

of approbation to this In Book XI, page 49, the Kural † is quoted (Distich 1101.) The way in which the couplet is quoted in the body of the text shows in what estimation its author was held and the hoary antiquity to which the work must belong. At any rate it is now clear that the Kural is not a work of 1100 A. D. as supposed by Mr. Innes or even 985 or 1000 A.D; the time ascribed ‡ to Nambi Andâr Nambi or even of 825 A. D. which is supposed to be the time of Sundarar, one of the Devaram hymners and of Seramân Perumâl Nâyanâr, the author of the *Atiyulâ* (wherein distich 1101 is quoted) but very many centuries earlier (than 825 A. D.). The Kural is anterior to the Puranânuru, ¶ a very ancient work. The Kural has also been quoted by the Tamil commentators like Ilambûranar, Senâvaraiyar, Nachinârkkiniyar, Perâsiriyar, Parimelalagar, and Adiyârkkunallâr. The period when these men flourished is not clearly known. But it is certain that Perâsiriyar lived prior to Nachinârkkiniyar as the former is quoted by the latter, whose time has been fixed to be between the 8th and 9th cen-

---

† See page 335, line 12. Asiatic Quarterly, 1902.

Subbaraya Chettyar's Edition, Madras.—இரு ஆதியுளா பேரினம்பெண், II 3-4. "கண்டுகேட் கண்டுயிர்த் தற்றறிவு கூம் புலனு மொண்டொடி கண்ணே யுளவென்று பன்னுடயோர் கட்டு ரையை மேம்படுத்தான் &c"

‡ See page 335, Asiatic Quarterly Review; April, 1902.

¶ Vide lyric No. 34. & Dr. Pope's article in the Indian Antiquary, 1900, page 251, Footnote, No. 8. But it is held by some that many of the lyrics in the Purananuru are older than the Kural.

tury.* *i. e.* before the compilation of the sacred books by Nambi Andâr Nambi. In Tirukovaiyâr commentary (which is attributed to Nachinârkkiniyar by some and to Perâsiriyar by others), we find that the Kural † and the Nâladi § are quoted. In any case this carries the Kural to a much earlier date than that of Nambi's who lived after the time of Nachinârkkiniyar.

Now as to the date of the last Sangam. There were, as can be gathered from the Mahâwamso, the historic chronicle of Ceylon, two Ceylon kings of the name of Gajabâhu, one ‡ of the date of 113 A.D. and the other ¶ of 1142 (1127 ?) A. D. It is said in the Mahâwamso that Gajabâhu, the king of

---

* page 671, Madras Christian College Magazine, 1900—The Age of Nachinarkkiniyar by S. Anavaratavinayakam Pillai, M.A.

† குறள் 983: அன்புநாணெனப்பிறவு கண்ணோட்டம் வாய்மையேமை ந்தசால் பூன்றியதூண்—vide commentary on stanza 25 of Tirukkovaiyar. குறள் 824: முகத்தினினிய நகாஅ வகத்தின்னா வஞ்சரை யஞ்சப்படும். vide stanza 87 of the Kovaiyar.

§ நாலடி, நான்தன்மை: 9, "குழிந்தாழ்ந்தகண்ணை" commentary on stanza 102 of Kovaiyar. ஈ பொறையுடைமை:5, "தூற்றுதே தூரவிடல்." vide stanza 110 of the Kovaiyar.

‡ See page lxii (39-Gajabahu I or Gamini) of Appendix I of Vol I of Mahawamso translated by George Tournour, 1837.

¶ Do, page lxv (118-Gajabahu II in 1127). This date Mr. Tirumalaikolundu Pillai seems to have followed (page 101, line 1 of his work—The Age of Manikkavasagar) which Mr. Innes corrects into 1142 (vide. Mr. Innes's article—Asiatic Quarterly, April 1902, page 325*0 foot note.*) which date is given in the Mahawamso, Part II translated by L C. Wijesimha Mudaliyar, 1889. See page xxiii (126-Gajabahu II) of the Introduction.

Ceylon [He was a contemporary of Senguttuvan, brother of Ilangovadigal the author of Silappadikâram, and of Karikâla Chola, and he was present at the court of the Chera king as is mentioned * in the Epic.] invaded † the Chola Kingdom in revenge for the Cholas having invaded Ceylon. It has been held by some that Gajabâhu referred to in the Epic must be Gajabâhu I and consequently the Silappadikâram (also Manimekalai) must be a work of 113 A.D. or thereabouts and that Sittalai Sâttanâr a member of the last Sangam being of that time, the last Sangam must be about that date (113 A. D.) or earlier.

But what Mr. Innes says is this:—The expedition of Gajabâhu was to revenge an invasion of Ceylon by the Cholas. It is found that from 103 B. C. to 90 B. C. there were Tamil usurpers ruling in Ceylon. The close of this period (90 B. C.) is 203 years prior to 113 A. D. the time of Gajabâhu I. It seems very improbable, observes Mr. Innes, that

(1) the desire for revenge could have continued so long as 203 years.

(2) the Cholas could have invaded Ceylon at this early date (113 A. D.) owing to the disadvantage of the geographical position.

He further points out that there were Tamil usurpers in Ceylon from 1037 to 1065 A. D. and that Gajabâhu II reigned in 1142; and from 1065,

* Silappadikaram, Kathai No. 30, line 160. and page 325, Asiatic Quarterly, April 1902.

† page 325, Asiatic Quarterly Review, 1902.

the end of the usurpation period to 1142 a period of 77 years is not very long and the memory of the usurpation might have sufficiently survived to lead to reprisals on the part of Gajabâhu II.

Therefore Mr. Innes concludes it must be only Gajabâhu II that is referred to in the Epic as a contemporary of Senguttuvan, but not Gajabâhu I.

Again, in 1117. A. D., Ramânuja the great Vaishnava Reformer owing to the persecutions of one Karikâla Chola fled to the court of Bitti Deva, king of Dwâra Samudra whom he converted from the Jaina to the Vaishnava faith.* Ten years after his flight (i. e. in 1127) there was a Chola king, named Kulottunga II, whose (grand?) father Kulottunga I [Rajendra Chola II, 1064(1070†)-1113] had a general named Karunâkara, with the title of Tondaimân. As mentioned above there was one Karikâla Chola who persecuted Ramânuja. Rudran Kannanâr a poet of the last Sangam age composed two out of the ten idylls known as *Pattuppâttu*; one was addressed to a Karikâla Chola and the other to a prince Tondaimân. The poems are contemporary laudations. The Epic Silappadikâram which is of the Sangam age speaks of Karikâla Chola as of that time. At the time of the so-called Sangam age there were two Kings named Karikâla Chola and Tondaimân to whom poems were addressed and in the period of Ramânuja (1127 A. D.) there were also two princes of these identical names. Does not this, Mr. Innes

* page 30, line 7, Bishop Caldwell's History of Tinnevelly vide page 7, Epigraphia Indica, 1902.

observes, show that they were respectively the same people, and that the Sangam and the time of Ramânuja coincided? Of course Mr. Innes would answer in the affirmative and has done so by fixing 1100 A. D. (1142 or 1127 A.D.) as the age of the last Sangam. The decision pronounced is that the Sangam age is about 1100 or about the time when Ramânuja flourished. It is a pity that the works included in the Pattuppâttu, Ettuthokai and eighteen Keelkanakku and Epics like the Chintamani, the Silappadikâram and the Manimekalai are to be pronounced as the works of the time of Ramânuja! This injustice has appealed to our heart and understanding. Let us consider how far this is just or unjust. Let us therefore see whether we can with justice and fairness reverse the decision of the late judge and pass a different judgment in this case or whether we shall be obliged simply to uphold his decision.

With regard to the age of the Kural, we have already pointed out that his decision is wrong.

Now with regard to his decision as to the date of the third and last Sangam—Let us take his arguments one by one and examine,—

(1) The desire for revenge could not have continued for 203 years. Therefore it was not Gajabâhu I that took revenge, but it must be Gajabahu II.—The desire for revenge may or may not have continued so long. Sometimes it does; but there is something more which will help us in finding out the truth. Mr. Innes thinks that the usurpation for which re-

venge should have been taken is the one ending with the year 90 B. C. (103 B. C. to 90 B. C.). But the "Singhalese annals give us an invasion of Ceylon by Cholas about 247 B. C., a second invasion a hundred years later and a third in the year 110. A. D. A counter invasion of Chola territories by Singhalese took place in 113 A. D. and subsequent to this, warfare between the two races was of constant occurrence" *. This passage makes it clear that the revenge was for the third Chola invasion of 110 A. D. and that it was undertaken in 113 A. D. (*i. e.* 3 years after, when the injury inflicted could not have been forgotten) by Gajabâhu I.

(2) With regard to his second argument, we may say that it was not impossible even though difficult for the Cholas to invade Ceylon at that period and the Chola army need not have passed through the Pandiyan Kingdom but might have crossed the Bay at other points in the Tanjore coast, and the last line of the passage above quoted shows clearly that at that very early time (113 A. D.) warfare between the two races was of constant occurrence. The value of his second argument is thus lost.

(3) His next argument in the light of the information given above loses its weight, and there is no necessity to consider that it was only Gajabâhu II that should have taken revenge.

The one thing that remains to be considered is how far the Sangam may be taken to Ramânûja

* page 16, "Sketch of the Dynasties of Southern India by Robert Sewell, 1883.

or Ramânuja to the Sangam; both of which, I think, are impossible.

As far as it is known at present there is only one Karikâla Chola known to Tamil Literature, and as far as Tondaimân is concerned, we may also say, that there is only one *king* of that name known to literature. The *Pattinappâlai*, the 9th of the ten idylls is addressed to king Karikâla Chola whose capital was Pukâr. But Karikâla Chola of Ramânuja's time must be different, the Chola capital at that time being Tanjore and not Pukâr. What is described in the poem as the capital of the king is *Pukâr* and *not any other place*. Further a reference to this work being accepted by king Karikâla made in the Kalingattupparani (stanza 21 * of Rajapâram-pariyam) of about the 11th century A. D.† indicates clearly that the date of Karikâla's reign must be placed many centuries prior to the date of the composition of this poem. The list of important events § described subsequent to the above reference which should have taken place in the course of several

---

'தழுவு செந்தமிழ் பரிசில் வாணர் பொன்,
பத்தொ டாறுது ரூயிரம்பெறப் பன்ன பட்டினப்
பாலை தெரிண்டதும்.'

Mr. V. S. Suryanarayana Sastriyar of the Madras Christian College seems to have assigned the composition of this poem to the 12th century.—vide page 17. Introduction to his Edition of the work. But Kulottunga referred to in the poem is *not* Kulottunga II, and it has been decided to be Kulottunga I (1070 A. D.), vide pp 230-232, Part II of Vol II of the South Indian Inscriptions, Edited by Dr. Hultzsch.

Stanzas 22-26.

centuries confirms our conclusion that Karikâla Chola of Pattinappâlai must have lived in the early centuries of the christian era and that he cannot be identified with the Karikâla of Ramânuja's time. It is only tradition which gives the name of Ramânuja's persecutor as Karikâla Chola. This Karikâla is no Chola king either. For there seems to be no room for a Karikâla Chola in the Chola country in the beginning of the 12th century or the time of Ramânuja (1117 A. D.). The ground seems pre-occupied by Rajendra Chola, Vikrama Chola and Kulottunga Chola, but he may have been a local prince, an ardent saiva, between Rajendra's death and Kulottunga's (Kulottunga II) accession. * This Karikâla † cannot be the king to whom the Pattinappâlai was addressed. Now as to Tondaimân. The poem *Perumpânârrupadai* of Rudran Kannanâr is addressed to Tondaimân Ilantiraiyan. This might be the king Tondaimân referred to ‡ by Sundaramurti Nâyanâr, one of the Devâram hymners. The nature of the reference is such that it can be safely inferred that the king Tondaimân preceded the Nâyanâr by several centuries, and that he seemed to Sundarar an antique mythological personage. The *king* Tondaimân

* See page 30, Bishop Caldwell's History of Tinnevelly.

† see page 153, Vol II-part II of the South Indian inscriptions, edited by Dr. Hultzsch.

‡ Book vii, page 78, சொல்லரும்புகழான் தொண்டைமானீன் களிற்றைச் சூழ்கொடி முல்லையாற்கட்டிட், டெல்லையிலின்ப மவின் பெற வெளிப்பட்டருளிய விறைவனேயென்றும், கல்லவர்ப்பரவும் திரு முல்லைவாயில் நாதனே நரைவிடையேறீ, பல்கலைப்பொருளே பதிதொ யர் கலையாய்ப் பாசுபதா பரஞ்சுடரே.

who is known to Literature and is a contemporary of Karikâla, cannot be the same man as Karunâkara Tondaimân, the general of Kulottunga I (Vijayadharan) and the contemporary of Ramânuja.

As was shown in the foregoing paragraphs it may be reiterated here that it was (1) King Gajabâhû I that invaded the Chola territory in 113 AD. (2) and it was he that was referred to in the Silappadikâram as the contemporary of Senguttuvan, brother of Illangovadikal, and of Karikâla. (3) The Pattinappâlai was addressed to this Karikâla and not to the Karikâla of Ramânuja's time. (4) Tondaimân to whom the Perumpânârrupadai was addressed was not the Tondaimân of Ramânuja's time but one of a very old date.

Now the inference that cannot be easily challenged is that Gajabhâhu I, Karikâla and Senguttuvan were of the period when these Epics were written or we may say that the two Epics, the Silappadikâram and the Manimekalai were written about A. D. 113 (the time of Gajabâhu I) and the Sangam, one of whose members Seettalai Sâttanâr being a contemporary of Gajabâhu I and the author of the epic Manimekalai, is of this period. We can roughly say that the third or last Sangam flourished about the end of the first or the beginning of the second century A. D.

The Nâladiyâr, a work of the Sangam age (so is the Kural) must therefore be of the first century A. D., and cannot be brought down to the eleventh or twelfth century.

We have thus ventured to draw certain conclusions differing from those of Mr. Innes in the Asiatic Quarterly Review. Our views are impersonal and not intended to hurt any one's feelings. We have only thought it well for our readers to be familiar with both these different views. But we shall be very glad and grateful if our conclusions regarding the age of the last Sangam and of Tiruvalluvar be refuted on better evidence not as yet within our reach.

We have only to conclude with the expression of a hope that, when foreigners make such a critical study of our language and literature and present to the world their interesting discussions, our English educated countrymen will give far more attention to such a fascinating study seeing that they have within their easy reach better sources of information than those possessed by foreigners. We should like to see this most important duty done by our countrymen with some earnestness were it only to resist the ever swelling wave of discouragement to the pursuit of Dravidian studies, if not in conformity with the patriotic sentiments and the ethical and philosophical traditions which are the glory of Southern India.

Madras,
April 20, 1903. } K. K. M.

கடவுள்துணை

முகவுரை.

ஏறக்குறைய இரண்டாயிர * வருடங்களுக்கு முன் பாண்டிநாட்டின் கண்ணுள்ள மதுரைமா நகரத்தில் அரசாய் வீற்றிருந்தி உக்கிரப்பெருவழுதி யென்னும்வேந்தனால் ஆதரிக் கப்பட்டுவந்த புலவர்கூட்டத்துள் ஒரு பகுதியாராகியசமண முனிவர்களால் நாலடியார் இயற்றப்பட்டதென்ப. இந்நாலடி யார், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்றற் றொடக்கத்தனவாய் வழங்கப்படும் தொகைநூல்க ளுள் பதினெண் கீழ்க்கணக்குள் ஒரு பகுதியாயுள்ளது. இதனை,

> 'நாலடி நான்மணி நானூற்ப தைந்திணைமுப்
> பால்கடுகிங் கோவை பழமொழி மாமூல
> மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
> கைந்நிலைய வங்கீழ்க் கணக்கு.''

என்னும் வெண்பாவினாலறிக.

முன்னொரு காலத்தில் சமண முனிவர்கள் எண்ணாயிர வர் அக்காலத்து நேரிட்டபஞ்சத்துக்கு ஆற்றுதவராகித் தம துதேசத்தை விட்டுப் பாண்டிய நாட்டையடைந்து அந்நாட் டரசனாகிய உக்கிரப்பெருவழுதியால் யாதொன்றும் குறை வு நேரிடாதபடி ஆதரிக்கப்பட்டு வந்தனர். அவ்வாறு ஆத ரிக்கப்பட்டு வந்த முனிவர்கள் தமது தேசம் பஞ்சம் நீங்கி செழிப்புற்ற தறிந்து தத்தமூர்க்குப் போமாறு பாண்டியனை விடைவேண்டினர். அவ்வரசன் கல்வி கேள்வி யறிவொ ழுக்கங்களிற் சிறந்த இம்முனிவர்களை விட்டுப்பிரிய மனமில் லாதவனாகி அவர்களுக்கு விடைகொடாதிருந்தனன். இதனை யறிந்த சமண முனிவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெண்பாவினை யெழுதித் தாம் வீற்றிருந்த ஆசனத்தின்கீழ் வைத்துவிட்டு யாருமறியாதபடி இரவின்கண் தனித்தனி யாகப் பிரிந்து போயினர். விடிந்தபிறகு அரசன் அம்முனி

* 'நாலாயிர வருஷங்களுக்கு முன்' என்று சொல்பவருமுளர்.

வர்களைக் காணுது கவலிற்றவனாய் அவர்களுறைவிடங்களை ஆராய்ந்துழி, அவரவர்களது பீடத்தின் கீழ் ஒவ்வோர் வெண்பா எழுதிய தனித்தனிச் சீட்டுகள் இருக்கக் கண்டனன். அவைகளை எடுத்து ஒன்று சேர்த்து ஆராய்ந்தபோது கருத்துவகையால் ஒன்றற்கொன்று ஒவ்வாதிருந்தமையைக் கண்டு அவற்றை வைகையாற்றின்கண் எறிந்து விடும்படி செய்தனன். எறிந்துவிட்ட அச்சீட்டுகளுள் நானூறு எதிரேறிக் கரைசேர்ந்தன. கரைசேர்ந்த அவற்றின் ஏற்றத்தைக் கண்டு அவற்றையொரு நூலாக்கி நாலடியார் என்று பெயரிட்டு வழங்கியும் எதிரேறாது கரைசேர்ந்தனவற்றைப் பழமொழி என்றும், அறநெறிச்சாரமென்றும் பெயரிட்டு வழங்கினனென்க. இது,

> "மன்னன் வழுதியர்கோன் வையைப்பே ராற்றின்கண்
> எண்ணி யிருநான்கோ டாயிரவர்—நண்ணி
> எழுதியிடு மேட்டுக்கு ளேடெதிரே யேறும்
> பழுதிலா நாலடியைப் பார்."

என்னும் செய்யுளானும் மறிதற்பாற்றும்.

இவ்வாறன்றிச் சைவ சமயாசாரியருள் ஒருவரான திருஞான சம்பந்த சுவாமிகளிடம் சமணர்கள் அனல்வாதம் செய்து தோற்றுப் புனல்வாதஞ் செய்ய வுடன்பட்டு அவருடன் சென்று வைகையாற்றின்கண் தாம் பாடிய பாடல்களை விட்டார்கள். அவற்றுள் நானூறு வைகையாற்றிற் கெதிர்முகமாக நாலடி எதிரேறிச்சென்று திரும்பினதால் அக்காலத்துள்ளார் அவற்றை எடுத்து ஓர் நூலாக்கி நாலடியார் என்று வழங்கினரென்றுங்கூறுப.

ஏதீது எவ்வாறாயினும், இதீது ஓரரிய பெரிய சிறந்த நூலென்பது இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்களாலும் பின்வந்த நூலாசிரியர்களாலும் போற்றப்பட்டதால் நன்கு விளங்கும்.

'வெள்ளாண் மரபுக்கு வேந்தெனச் சான்றோர்
செல்லாருங்கூடி யெடுத்துரைத்த—சொல்லாய
நூலடி நானூறு நன்கினிதா வெண்மன்னத்தீது
சீலமுடை னிற்க தெளிந்து.

என்று பிற்காலத்து வழங்கும் வெண்பாவாலும் இதன் பெருமை இனிது புலப்படும்.

அன்றியும் தமிழ் மொழியை அளவுகடந்த ஆவத தோடுகற்றுச் சிறிவர்க் குபயோகமாகும் சிற்றிலக்கணங்க ளும் தமிழ் கற்கும் அன்னியர்க் குபகாரமாகும் துணை நூல் களும் செய்து ஆங்கில மறிந்தார்க்குத் தமிழ்மொழி மாட் சியை யுணர்த்த வெண்ணித் தமிழ் நூல்களை யாங்கிலத்துக் காட்டிய டாக்டர் போப் துரையவர்களும் நாலடியார் திருக் குறள் திருவாசகம் என்னும் மூன்று நூல்களையும் ஆங்கில மொழிபெயர்ப்போடு அதிக ஆர்வத்துடன் வெளியிட்டிருக் கின்றனர். அதனாலும் இந்நூலின் உயர்வு வெளியாம்.

இந்நாலடியா ரானது மனு முதலிய தரும சாஸ் திரங்களையும் சமண சாஸ்திரத்தையும் தழுவிக் கூறப்பட் டுள்ளது. இந்நூல் சமண மதத்தின் சிறப்பியலைக் கூறுது மிபாது வியலையே கூறுவதாலும் பொதுவியல்பு ஆரிய மதத் தின் பொதுவியல்புக்கு மாறுபடாமையாலும், இஃது ஆரி யர்களாலும் பிரமாணமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. மற்றுஞ் சமயவாதிகள் நிலையாமை முதலியவற்றைக்கூறுமிட த்து இந்நூலைப் பெரும் பிரமாணமாக எடுத்தாண்டுளாரென் பது அவ்வம்மத நூல்களின் உரையைப் பார்த்தால் நன்கு விளங்கும். இந்நூல் கூறும் விஷயம் முக்கியமாகக் கவனிக்கத்தக்கதென்பது அதனது அதிகார அட்டவணை யாலேயே இனிது புலப்படும்.

இந்நாலடியாரிற்குப் பதுமனா ரென்பவர் அதிகார அடைவு ஏற்படுத்தி அவ்வதிகார அடைவுக்கு ஏது கூறி ஒரு பிழிப்புரை இட்டிருக்கின்றனர். இப்பொழிப்புரையைத் தழுவி தெளிவுறுமாறு இலக்கணக் குறிப்புடனே சொ

லாற்றல் பொருளாற்றல்களே நன்குவிளக்கி, சென்றநூற்றாண்டின்கண்ணிருந்த சிறப்புற்றவித்துவான்களுள் ஒருவராயும், மகா பிரசித்தி பெற்றிருந்த அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் அவர்கள் மாணாக்கருள் ஒருவராயும், சென்னை பிரசிடென்சி காலேஜில் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தியவருமான கோ. இராசகோபாலப்பிள்ளையவர்கள் இயற்றிய அரிய பெரிய உரையை மூலத்தோடு சேர்த்தும் பொழிப்புரையைப் பதவுரைக்குக் கீழே கூட்டியும் ம-ரா-ரா-ஸ்ரீ கல்குளம்-துப்புசாமி முதலியார், B. A. அவர்கள் இயற்றிய ஆங்கிலேய் மொழிபெயர்ப்பை விசேஷ உரையின் கீழ்ச் சேர்த்தும் பலர்க்கும் உபயோகமாகும்படி அச்சிட்டனன்.

[மேற்சொன்ன இராஜகோபாலப்பிள்ளையவர்களால்இயற்றப்பட்ட உரை 37-அதிகாரங்களுக்கேகிடைத்தது. மற்றைய 3 - அதிகாரங்களுக்கு அவரது மாணாக்கருள் ஒருவரதிய சென்தோம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் திருமயிலை வித்வான் சண்முகம் பிள்ளையவர்கள் தம்முடைய ஆசிரியரிடத்தில் வைத்துள்ள அன்பின் பெருக்கினால் அவரிடம் கேட்டவாறு உரை எழுதித் தந்தனர்.

சென்னை யூனிவர்சிட்டியார் நாலடியாரின் நாற்பது அதிகாரத்துள் ஈற்றிலுள்ள பொதுமகளிர், கற்புடைமகளிர், காமநுதலியல் என்னும் மூன்று அதிகாரம் தவிர மற்றைய 37-அதிகாரங்களையே, F. A. பரீக்ஷைக்குப் பாடமாக ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த 37 அதிகாரங்களும் பலவிருடங்களாகச் சிறு சிறு பாகமாகப் பாடம் வைக்கப்பட்டன. அவ்வப்போது வைத்த அதிகாரங்களுக்கு, கோ. இராசகோபாலப்பிள்ளையவர்கள் அவ்வப்போது உரைஎழுதிவெளியிட்டனர். பரீக்ஷைக்கு ஏற்படுத்தும் பாடங்களின் 'நோட்ஸ்கள்' பரீக்ஷை முடிந்தவுடன் பேரூரின்றி யழிந்துபோவதுதெரிசித்தமல்லவா? அவ்வாறே இராசகோபாலப்பிள்ளையவர்கள் எழுதிய 37-அதிகாரங்களின் உரையும் பலவாறுமறிச் சிதறிவிட்டன. சில அதிகாரங்களின் உரையை ஒன்று சேர்த்தும் படிப்பதற்கும் ஏலாதனவாய் இருந்தன.

[இது நிற்க; யாம் நாலடியாரை உரையுடன் அச்சிட வேண்டுமென்று இந்து தியாலாஜிகல் ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் கோ. வடிவேலு செட்டியார் அவர்களிடம் போசித்த போது அவர்கள் இராசகோபாலப்பிள்ளை யவர்களியற்றிய நாலடியார் உரையை அச்சிடலாமென்றும் அஃது இருக்கும் உரைகளில் சிறந்ததென்றும் தம்மிடத்தில் 27-அதிகாரங்களுக்கு உரை இருக்கிறதென்றும் கூறி அவ்விருபத்தேழு அதிகார உரையைத் தந்ததோடு மற்ற பத்து அதிகாரங்களின் உரையும் திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையவர்களிடத்திலிருந்தும் வாங்கிக்கொடுத்தார். இவர் மூலமாக எனக்கு இந்த 37-அதிகாரங்களுக்கும் உரை கிடைத்ததால்தான் இதனையே அச்சிட்டேன். இது கிடைக்காவிட்டால் வேறு உரையாவது அச்சிட்டிருப்பேன்; அல்லது வேறு உரை எழுதுவித்தாவது அச்சிட்டிருப்பேன். பேரூரில்லாமல் அழிந்துபோவதாக இருந்த நாலடியாரின் இராசகோபாலப் பிள்ளையவர்களின் உரையை அழியாதோங்குமாறு அச்சிடும்வண்ணம் பிரேரேபித்தவரது நன்றி மறக்கற்பாலதன்று.]

அச்சிடுங்காலையில் இதனை இயன்றவளவு பரிசோதித்து ஒழுங்குபடுத்தித் தந்த கோ. வடிவேலு செட்டியார் அவர்களுக்கு யான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இதிற் பிழையுளதாயின் உலகம் பொறுக்க.

T. S. K.

கடவுள் துணை.

நாலடியார்

அதிகார அட்டவணை

			பக்கம்
கடவுள் வாழ்த்து		Invocation... ...	1

1. அறத்துப்பால்—On Virtue.

அதிகாரம்.			
1.	செல்வநிலையாமை	The Instability of riches...	2
2.	இளமைநிலையாமை... ...	The Instability of youth...	12
3.	யாக்கைநிலையாமை... ...	The Instability of the body	22
4.	அறன்வலியுறுத்தல்... ...	The Power of virtue... ...	31
5.	தூயதன்மை	The Impurity of the body.	41
6.	துறவு	Renunciation	51
7.	சினமின்மை	The Absence of Anger ...	61
8.	பொறையுடைமை	Patience	70
9.	பிறன்மனைநயவாமை... ...	Against Adultery	80
10.	ஈகை	Liberality	89
11.	பழவினை	The effects of actions done in a former birth	99
12.	மெய்மை	Truth....	107
13.	தீவினையச்சம்	Fear of misconduct....	117

11. பொருட்பால்—On Property.

14.	கல்வி	Learning	126
15.	குடிப்பிறப்பு	High birth	136
16.	மேன்மக்கள்	Great men...	145
17.	பெரியாரைப்பிழையாமை	Against reproaching the great...	155
18.	நல்லினஞ்சேர்தல்	Association with the good..	164
19.	பெருமை...	Greatness (moral)	173
20.	தாளாண்மை	Perseverance.	182
21.	சுற்றந்தழால்	The support of kindred...	192
22.	நட்பாராய்தல்... ...	Scrutiny in the choice of friendship	201

அதிகாரம்.		பக்கம்.
23.	நட்பிற்பிழைபொறுத்தல் ...	Bearing and forbearing in friendship... 211
24.	கூடாநட்பு	Unreal friendship 220
25.	அறிவுடைமை ...	Possession of practical wisdom 230
26.	அறிவின்மை	The want of wisdom... ...239
27.	நன்றியில்செல்வம்	Profitless wealth 248
28.	ஈயாமை...	Absence of Charity... ...259
29.	இன்மை	Poverty 268
30.	மானம்	Honour 278
31.	இரவச்சம்	The dread of Begging ...288
32.	அவையறிதல்...	Knowledge of the audience.296
33.	புல்லறிவாண்மை	Insufficient knowledge ...306
34.	பேதைமை	Folly 315
35.	கீழ்மை	Lowness. 324
36.	கயமை	Baseness 333
37.	பன்னெறி	Miscellaneous Topics. ...342
38.	பொதுமகளிர்...	Harlots 352
39.	கற்புடைமகளிர்	Chaste women 360

111. காமத்துப்பால்—On Love.

40.	காமநுதலியல்	The Characteristics of love 370

உரைச்சிறப்புப்பாயிரம்.

இஃது

இவ்வுரையாசிரியர்பால்

இயற்றமிழ்பயின்ற

திருமயிலை வித்துவான் சண்முகம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நூலடிக்குச் சார்பாகி நுண்பொரு ளனைத்துநனி தூவ
லாகிற்கும், காலடிக்குப் பதமென வெனவிஞ்ஞான் றேருரை
யை நலக்கச்செய்தான், மாலடிக்கே மனங்குழையு நங்களி
ராமானுசனை வழுத்து வோனெம்,போலடித்தோன் டரை
யாள்வோனிராசகோபாலனியற் புலவ னேறே.

இஃது

அச்சிற் பதிப்பித்த விஷயமாக

பாங்கிமலை வித்வான்

மஹாமஹ-ஸ்ரீ ம. இராஜகோபால பிள்ளையவர்கள்

இயற்றியன.

வெண்பா.

உறுதி பயக்கு முயர்நா லடியைப
பெறுதி ருரையொடெனப் பேணி—மறுதப
வச்சிட் டளித்தான்கு மாரசா மிப்பிள்ளை
மெச்சு வுலகம் வியந்து.

சந்தவிருத்தம்.

பண்டுசீரி யோர்நலம் பயக்குநூ லிதமெனப்
பற்றுநா லடிக்கையைந்த பழமையாய வுரையினைக்
கொண்டருஞ் பெருந்தெருட்சி கூர்ந்ததற்கு மோருரை
குயிற்றினனெர் புலவர்கோனஃ திற்றைநாட்டிண் சிறு
கண்டுகூட்டி யதனைமூலு கவியொடேற்ற வொருதமிழ்ச்
சீலனைக்கொ டணிபடுத்தி யுச்சிலேற்றி யுதவின
மண்டலங் களிக்கவே குமாரசாமி பிள்ளையாம்
வள்ளல்தஞ்சை நகரினன்கொள் ளு

நாலடியார்.

நான்கு என்னும் வரையறைப் பண்புப்பெயர்; தளை யால் அடுக்கப்படுவதென்னும் பொருளில் அடி புகுதி, இ, செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. இம்மூன் றுறுப்பால் முடிந்து நின்ற அடி என்னுங் காரணப்பெயர்; ஆகிய இரண்டுசொல்லும் பண்புத்தொகை நிலைத்தொடரா கிய ஒருசந்தி பெற்ற நால்டி என்பது பாக்களுள் முதன்மை பெற்ற வெண்பாவுக்குப் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகைக்காரணப் பெயராயிற்று. முதற்பா ஆதல்பற்றி இப்பாவை அந்தணர் சாதி என்பர், வெண்பாப் பலவற்றுள்ளும் குறள் வெண்பா இரண்டடியாயும், சிந்தியல் வெண்பா மூன்றடியாயும், பஃறொடைவெண்பா நான்கின்மிக்க பலவடியாயும் வருதலாலும், சவலை வெண்பா நான்கடியாய் வருவதாயினும் இலக்கியங்களுள் பயின்று வருவதன்றுத லாலும், இங்கு வெண்பா என்றது நேரிசை இன்னிசை வெண்பாக்களை எனக்கொள்க. இருசொல்தொக்கு ஒரு மொழிபோல நின்ற இந்நாலடி என்னும் பெயர் வெண்பா வின் தொகுதியாகிய நூலுக்குச் சினையாகு பெயராயிற்று. அவ்வெண்பா தன்னுலாகிய நூலுக்காதலால் கருவியாகு பெயராமெனினும் பொருந்தும். புறவுரைச் செய்யுளைச் சிறப்புப்பற்றி, உயர்திணை ஆண்பாற் படர்க்கை விகுதி புணர்த்துத் தனியனென வழங்கல்போலச் சிறப்புப்பற்றி உயர்திணைப் பல்லோர்படர்க்கை விகுதி புணர்த்து நாலடியார் என வழங்கலாயிற்று. திருக்கோவையார், திருக்களிற்றுப் படியார், திருவுந்தியார் என்பனவற்றி னீற்றையும் உற்று நோக்குக. இந்நூல் நாலடி நானூறெனவும் வழங்கும். இது பால், அதிகாரம், செய்யுள் என மூன்று றுப்படங்கிய பிண்ட மெனப்படும். இஃது இலக்கண நூற்குப் பொருந்துமே அன்றிப் பழமொழிதார் கதையின்மேற் செல்லு நூலுக்குப் பொருந்தாது. அது தோலெனப்படும். இஃது இலக்கண நூலாமாறு எங்ஙனமெனின், அறம் பொருள் இன்பங்களி னிலக்கணமும், அவற்றின் பாகுபாட்டி னிலக்கணமும் கூறுதலாலென்க. இப்பெற்றி யறியாதார் பழமொழிதார் கதையின்மேற் செல்லு நூலுக்கு இவ்விலக்கணத்தை மயங்கி ஏற்றிக் கூறுவர்.

கடவுள்துணை.

NALADIYAR:

நாலடியார்

மூலமும் உரையும்.



Invocation

கடவுள் வாழ்த்து.

வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்
கானிலந் தோயாக் கடவுளே—யாநிலஞ்
சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் மூள்ளத்து
முன்னி யவைமுடிக்க வென்று.

இதன்பதப்பொருள். வான்-மேகத்தில், இடு - தோன்றுகின்ற, வில்லின்-இந்திரதநுவைஒப்ப, வரவு-பிறக்கும் பிறப்பின் தன்மையை, அறியா-அறிந்து, வாய்மையால்-சத்தியத்தினால், கால்-திருவடிகள், நிலம்தோயாத-பூமியில்படியாத, கடவுளே-முதற்கடவுளே,எம்உள்ளத்து-எம்முடைய உள்ளத்தில், முன்னீயவை-நினைத்தவை, முடிகஎன்று-நிறைவேறுக என்று, யாம்-நாம், சென்னி-தலை, நிலம் உற வணங்கி-பூமியில் படியும்படி வணங்கி, சேர்தும் - இடைவிடாது சிந்திப்போம், எ-று.

பொழிப்புரை. மேகத்தில் தோன்றுகிற இந்திரதநுவை யொப்பப் பிறக்கும் பிறப்பின் தன்மையை யறிந்து சத்தியத்தினால் திருவடிகள் பூமியில் படியாத முதற்கடவுளே யெம்முடைய உள்ளத்தில் நினைத்தவை நிறைவேறுக என்று நாம் தலை பூமியில்படியும்படி வணங்கி யிடைவிடாது சிந்திப்போம் என்பது.

இந்நாலடியார் பலமுனிவர்செய்த செய்யுட்டொகுதி என்பதனைத்தற்கு, கடவுள் வாழ்த்துக்கூறிய அபியுத்தர் யாம் சேர்தும் எனப்பன்மையாற்கூறினர். இந்நூல் பலமுனிவர் செய்ததனைரென்பது,

மன்னன் வழுதியர்கோன் வையைப்பே ராற்றின்கண்
எண்ணி யிருகான்கோ டாயிழவர்-நண்ணி
எழுதியிடு மேட்டுக்கு ளேடெடுத்தே யேறும்
பழுதில்லா நாலடியைப் பார்

என்றும் இவ்வெண்பாவா லுணர்க. வான் - இடவாகுபெயர். கால் - முதலாகுபெயராய் அடியை யுணர்த்தியதுபோ முன்னியலை என்றது அறம் பொருளின்பங்களே.

Knowing, as we do, man's advent here on earth whose appearance and disappearance is like that of the rainbow in heaven, let us draw ourselves near to the Supreme Being whose feet never touch the earth, and prostrate ourselves before Him and pray that what our mind conceives may find a happy consummation.

Part I.

ON VIRTUE.

க. அறத்துப்பால்.

அஃதாவது அறத்தினதுபகுப்புணர்த்துவது. அப்பகுப்புச் செல்வ நிலையாமைமுதல் தீவினையச்சம் ஈறாகக்கிடந்த பதின் மூன்றதிகாரங் களும். இஃது ஆறும்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன் மொழித் தொகைப்பெயர்; விரிந்தால் அறத்தினது பகுப்புணர்த்துவ தென விரியும். அறம்-இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றனையுந் தருதல் பற்றி அதனை முதற்கண் வைத்தனர்.

Chapter I—The Instability of Riches

1-ஆம் அதிகாரம். செல்வநிலையாமை.

அஃதாவது செல்வத்தினது நிலையாமையை யுணர்த்துவது. நிலை யில் பொருளே உணர்ந்தன்றி நிலையுடைப்பொருளில் மனஞ்செல் லாதாதலால், நிலையில் பொருளைக் கூறுவார், அவற்றுள் இம்மை மறுமை தீர்வதாகிய பொருளினதுநிலையாமையை முதற்கண் கூறி னார். செல்வநிலையாமை என்பது ஆறும் வேற்றுமைத் தொகைநிலைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகிய காரணப்பெயர்; விரிந் தால் செல்வத்தினது நிலையாமையை உணர்த்துவதென விரியும்.

1. அறுசுவை யுண்டி யுமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

இ-ள். அறுசுவை - அறுசுவையாகிய, உண்டி - உணவை, இல்லாள் - மனையாள், அமர்ந்து - விரும்பி, ஊட்ட - உண்பிக்க, நீக்கி - (முற்சிகையை) நீக்கி, மறுசிகை - பிற்சிகையை, உண்டாரும் - உண்ட செல்வரும், வறிஞர் ஆய் - வறுமை யுடையராகி, ஓரிடத்து - தாம் உண்டு வாழ்ந்த இடத்தில், சென்று - (ஒருவர் மனையிடத்துப்) போய், கூழ் இரப்பர் எனின் - கூழை யாசிப்பாராயின், செல்வம் ஒன்று - செல்வமாகிய ஒருபொருள், உண்டாக - நிலைமை யுடையதாக, வைக்கல்பாற்று அன்று - வைத்தெண்ணுதலாகிய பான்மை யுடையதன்று, எ - று.

பொ-ரை. அறுசுவையாகிய வுணவை மனையாள் விரும்பி யுண்பிக்க முற்சிகையை நீக்கிப் பிற்சிகையை யுண்ட செல்வரும் வறுமை யுடையராகித் தாம் உண்டுவாழ்ந்த இடத்தில் (ஒருவர் மனையிடத்துப்) போய்க் கூழை யாசிப்பாராயின், செல்வமாகிய வொரு பொருள் நிலைமை யுடையதாக வைத்தெண்ணுதலாகிய பான்மை யுடையதன்று என்பது.

சிகை - பிடியளவு கொண்ட உணவு. மறுசிகை என்றதனால் நீக்கி என்னும் வினைக்கு முற்சிகையாகிய செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மறுபொருள் மறுமொழி என்பனபோல நின்ற மறு சிகை பண்புத்தொகைநிலைத்தொடர்; விரிந்தால் மறுமையாகிய சிகை என விரியும். சென்று என்பது முன் நடந்ததியா ரென்பதையும், கூழ் என்பது இரக்கப்படும் பொருளி னிழிவையும் காட்டிவந்தன. உண்டி உண்ணப்படுவதென்பது பொருளாதலால், உண்கூபகுதி, அ - சாரியை, இ - செயப்படு பொருண்மை விகுதி, தகரம் டகரமானதும் உகரக்கேடும் சந்தி. இம்மை - உயர்வு சிறப்பு.

It generally happens that those (in affluent circumstances) who eat their meal of six kinds of flavours served by their beloved wives, after rejecting a portion not liked by them, have to go and beg here and there to keep themselves alive. If so, wealth ought not to be considered a thing of any moment. (1)

2. துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லீரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.

இ-ள். செல்வம் - செல்வப்பொருள், அகடு உற - நடுவு நிலைமையாக, யார்மாட்டும் - எத்தன்மையாரிடத்தும், நில்லாது - நிலை பெறுதலில்லாதாகி, சகடக்கால் போல - வண்டியினது உருளையைப் போல, வரும் - கீழ்மேலாகமாறும், (ஆதலால்) துகள்தீர் - குற்றம் நீங்கிய, பெருஞ் செல்வம் - மிக்க செல்வம், தோன்றியக்கால் - (ஒருவனுக்கு) உளதாயின், தொட்டு - (தோன்றியகாலம்) தொடங்கி, பகடு நடந்த - ஏர் நடந்ததனு லுண்டாகிய, கூழ் - உணவை, பல்லாரோடு - விருந்தினர் முதலிய பலரோடும், உண்க - அவ னுண்ணக் கடவன், எ - று.

பொ-ரை. செல்வப் பொருள் நடுவுநிலைமையாக எத்தன்மையரிடத்தும் நிலைபெறுத லில்லாதாகி வண்டியினது உருளையைப் போலக் கீழ்மேலாக மாறுமாதலால், குற்றம் நீங்கிய மிக்க செல்வம் ஒருவனுக்கு உளதாயின் அது தோன்றியகாலம் தொடங்கி ஏர் நடந்ததனு லுண்டாகிய வுணவை விருந்தினர் முதலிய பலரோடும் அவனுண்ணக் கடவன் என்பது.

அறத்தின் வழியிற் றேடியீ பொருளென்பார் 'துகடீர் பெருஞ் செல்வம்' எனவும், தோன்றுதல் ஒருதலை யன்றென்பார் 'தோன்றியக்கால்' எனவுங் கூறினர். பகடுநடந்த கூழென்பது பஞ்சாலியன்ற பட்டமென்பதுபோல வந்தது. அது நடந்தகூழ், சுட்டபுண், சுட்ட வடு என்பனபோலக் காரணப் பொருளதாகிப் பிறபெயர் கொண்டது. பகடு ஏரையுணர்த்தவந்த குறிப்புச் சொல். உற என்னும் வினையெச்சம் நில்லாதென்னும் மறைவினையின் முதனிலையோடு முடிந்தது. அகடென்றது தன்னைச் சிலகாள்முன் பெற்றனராதலால் இவர்பால் நிற்றல்வேண்டும், பலகாள் முன்பெற்றனராதலால் நில்லாமை வேண்டும் ஏன்னும் நடுவுநிலைமையை. கால் - உவமையாகுபெயர்.

Wealth does not stay with any for ever; but goes on and on like the wheel of a cart. When you have acquired wealth in a blameless way, from that day see that you eat food feeding at the same time as many as possible. (2)

3. யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றேரு—மேனை
வினையுலப்ப வேறுகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாற்றூர் கொள.

இ-ள். யானை எருத்தம் - யானையினது பிடர், பொலிய - விளக்கமாகத் தோன்றும்படி, குடை நிழற்கீழ் - வெண்கொற்றக் குடை நிழலில், சேனை - மிக்க சேனையையுடைய, தலைவர் ஆய் - அரசராகி, சென்றேரும் - எதி உலாப்போன செல்வர்களும், ஏனை வினை - தீவினையானது, உலப்ப - கெடுப்பதினால், வேறு ஆகி - அச் செல்வத்தை இழந்து, தாம் கொண்ட - தாம் மணஞ் செய்த, மனை யாளை - இல்லாளையும், மாற்றூர்கொள - பகைவர்கள் கொண்டு செல் லும்படி, வீழ்வர் - வறியராவர், எ - று.

பொ-ரை. யானையினது பிடர் விளக்கமாகத் தோன்றும்படி வெண்கொற்றக் குடை நிழலில் மிக்க சேனையையுடைய அரசராகி யுலாப்போன செல்வர்களும் தீவினையானது கெடுப்பதினால் அச் செல்வத்தை யிழந்து தாம் மணஞ் செய்த இல்லாளையும் பகைவர்கள் கொண்டு செல்லும்படி வறியவராவர் என்பது.

இவரேறுதலால் யானை யெருத்தம் பொலிவ தாயிற்றெனவே இவரது பொலிவு கூறவேண்டா தாயிற்று. இச்செல்வப் பெருக்கிற் குக் காரணம் நல்வினையாதலால் "ஏனைவினை" என்பது தீவினைக் காயிற்று. ஏனை பிறிதென்னும் பொருளதாகிய இடைச்சொல். செல் வமாகிய உயர்ந்த நிலையினின்று வறியராக மாறுதலால் 'வீழ்வர்' என் றார். செல்வப் பொருளேயன்றி மனையாளையு மென்னும் இறந் தது தழீஇயதனேடு உயர்வு சிறப்புப் பொருளதாகிய உம்மை தொகுத் தப்பட்டது.

Those who rode (to the battle-field) on the neck of elephants as Commanders-in-chief of great armies, if fortune changes, may lose their position and become poor, while their wives are led away captives by the enemies. (3)

4. நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றினை வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று

இ-ள். வாழ்நாள் - (நீர்) தேகத்தோடு கூடிவாழ நியமித்தநாள்கள், சென்றன செல்கின்றன - செல்கின்றன செல்கின்றன, கூற்றம் - யமன், செறுத்து - கோபித்து, உடன் - விரைந்து, வந்தது வருகின்றான் வருகின்றான், (ஆதலால்) நின்றன நின்றன - நிலைபெற்றன நிலைபெற்றன வென்று (உம்மால்) நினைக்கப்பட்ட செல்வப் பொருள்கள், நில்லா என - நிலைபெறா என்று, உணர்ந்து - உண்மையை உணர்ந்து, ஒன்றின ஒன்றின - (உம்மால்) இசைந்தன இசைந்தனவாகிய அறங்களை, செயின் - செய்யக் கருதுவீராயின், வல்லே செய்க - விரைந்து செய்யக்கடவீர், எ - று.

பே-ரை. நீர் தேகத்தோடு கூடிவாழ நியமித்த நாள்கள் செல்கின்றன செல்கின்றன. யமன் கோபித்து விரைந்து வருகின்றான் வருகின்றான். ஆதலால் நிலைபெற்றன நிலைபெற்றன வென்று உம்மால் நினைக்கப்பட்ட செல்வப்பொருள்கள் நிலைபெறாவென்று உண்மையை உணர்ந்து உம்மால் இசைந்தன இசைந்தன வாகிய அறங்களைச் செய்யக் கருதுவீராயின் விரைந்து செய்யக்கடவீர் என்பது.

கூற்று - சொல்லால் அஃறிணையாதலால் அதன்வினையும் வந்ததென அத்திணையாயிற்று. நின்றன நின்றன என்னும் அடுக்குப் பேதைமை காரணமாகத் துணிந்த துணிவும், மனம் வாக்குக் காயமென்னுமிவற்றால் செய்யப்படுவன ஆதலால் ஒன்றின ஒன்றின என்னும் அடுக்குப் பன்மையும், மற்றிரண்டும் அவலமும் குறித்து நின்றன. செல்கின்றன, வருகின்றது என்னும் நிகழ்காலச் சொற்களைச் சென்றது வந்தது என இறந்தகாலத்தாற் கூறியது முறையே விரைவும், துணிவும் பற்றி என்க.

Your days are gone! are gone!! Death pressing close has come! Understand that what is generally said to be "*Permanent*" is never so (but passes out of existence altogether). Therefore do at once what befits you with all your might. (4)

5. என்ஞான் மொன்றுதங் கையுறப் பெற்றக்கால்
பின்னீவ தென்று பிடித்திரா—முன்சின
கொடுத்தா ருயப்போவர் கோடிநீக் கூற்றங்
கெடுத்தாறு செல்லுஞ் சுரம்.

இ-ள். என் ஆனும் - யாதாயினும், ஒன்று - ஒரு பொருளை, தம் கை உற - தமது கையில் கிடைக்கும்படி, பெற்றக்கால் - பெறுவாராயின், பின் - மூப்பின் காலத்தில், ஆவது என்று - பயன்படுவதை

ன்று, பிடித்து - இறுகப்பிடித்து, இராழல் - வாளா இராமல், முன்னே - இளமையிலேயே, கொடுத்தார் - (அறத்தின்பொருட்டுப் பிறர்க்கு) கொடுத்தவர், கோடு இல் - நடுவு நிலைமையுள்ள, தீக்கூற்றம் - அருளில்லாத யமன், தொடுத்து - பாசத்தாற் கட்டி, செல்லும் - போகின்ற, சுரம் - காட்டினது, ஆறு - வழி, உய்ய - தப்பும்படி, போவர் - சுவர்க்கம் புகுவார், எ - று.

பொ-ரை. யாதாயினும் ஒரு பொருளைத் தமது கையில் இடைக்கும்படி பெறுவாராயின் மூப்பின் காலத்தில் பயன் படுவதென்று இறுகப்பிடித்து வாளா இராமல் இளமையிலேயே யறத்தின்பொருட்டுப் பிறர்க்குக் கொடுத்தவர் நடுவு நிலைமையுள்ள அருளில்லாத யமன் பாசத்தாற் கட்டிப் போகின்ற காட்டினது வழி தப்பும்படி சுவர்க்கம் புகுவார் என்பது.

• இராமல் என்னும் வினையெச்சம் ஈறு தொகுத்தலாய் இரா என நின்றது. கோடு முதனிலைத் தொழிற்பெயர், அதன் பொருள் வளைதல். கோடில் எனவே நடுவுநிலைமை யுடையானென்பது பெற்றும். "பீட்பிதுக்கிப் பிள்ளையைத் தாயலறக் கோடல்" ஆகிய அருளின்மையைப்பற்றித் 'தீக்கூற்றம்' என்றார். கூற்றமென்பதில் அம் சாரியை, என் விளுப்பெயர்.

If you have got something with you, don't retain it, saying "This will be useful for some other day" (but make proper use of it at once); for, those who make good use of it by giving it to those that are worthy, will find it easy to cross the desert-road easily, along which, death, a very unyielding foe, drags his captives away. (5)

6. இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை—யூற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குஞ் ஞாலத்
தமீஇ இந்தமீ இந் தண்ணம் படும்.

இ-ள். பெரும்பொருள்-பெருமையைத் தருவதாகிய பொருளை, ஊற்று வைத்தீர் - மீதூரியும் வைத்துள்ள செல்வீர்களே, இழைத்த நாள் - (உடலோடு கூடிவாழ்) அளவுசெய்துள்ள நாள்கள், பிழைத்து ஒரீஇ - (அவ்வளவில்) தவறிப்போய், எல்லை இகவா - தம் அளவைக் கடவா; கூற்றம் - (அளவுசெய்துள்ள நாள்முடிவில் வரும்) யமனினின்றும், குதித்து - அப்புறப்பட்டு, உய்ந்தார் - உயிர் பிழைத்திருப்

பவர், ஈங்கு இல்லை - இவ்வுலகத்திலில்லை, நாளை - இனி, தண்ணம் - சாப்பறை, தழீஇம் தழீஇம் பலம் தழீஇத் தழீஇமென ஒலிக்கும், (ஆதலால்) வழங்குமின் - (அறத்தின்பொருட்டு) இன்றே யதனைக் கொடுங்கோள், எ-று.

பொ-ரை. பெருமையைத் தருவதாகிய பொருளை மிகுதியும் வைத்துள்ள செல்வர்களே! உடலோடு கூடிவாழ அளவுசெய்துள்ள நாள்கள் அவ்வளவில் தவறிப்போய்த் தம் அளவைக்கடவா; அளவு செய்துள்ள நாள்முடிவில் வரும் கமனினின்றும் அம்புறப்பட்டு உயிர் பிழைத்திருப்பவர் இவ்வுலகத்திலில்லை. இனிச் சாப்பறை தழீஇத் தழீஇமென ஒலிக்கும். ஆதலால் அறத்தின்பொருட்டு இன்றே அதனைக் கொடுங்கோள் என்பது.

இழைத்தநாளி னெல்லை யினைத்தென உணரப் படாதாதலால் 'நாளை' எனப் பொதுப்படக் கூறினர். நாளை என்பது எதிர்காலத்தை உணர்த்த வந்ததோர் குறிப்புமொழி. தழீஇத்தழீஇமென்பதனீற்றில் 'என' என்னும் இடைச்சொல் எஞ்சிநின்றது. நாளை என்றதனால் இன்றென்னும் நிகழ்காலம் வருவிக்கப்பட்டது.

The time once allotted to man to remain on earth is never extended (even for a second). None here has escaped death's power and got free. O hoarder of enormous wealth! dispense it. (Perhaps) to-morrow your funeral drum may sound. (6)

7. தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலுங்
கூற்ற மளந்துறுங் நாளுண்ணு—மாற்ற
வறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில்.

இ-ள். கூற்றம் - யமன், தோற்றம் சால் - தோன்றுத லமைந்துள்ள, ஞாயிறு - சூரியன், நாழியாக - அளக்குங் கருவியாக, தம் நாள் - உம் ஆயுளாகிய தானியத்தை, வைகலும் - நாள்தோறும், அளந்து உண்ணும் - அளவுசெய் துண்ணுவான், (அஃதன்றியும்) யாரும் - ஏவ்லோரும், பிறந்தும் - உலகில் பிறந்தும், (பிறப்பின் பயனாகிய அறத்தை அடையாவிடின்) பிறவாதாரில் - பிறவாதவர்களில் வைத்தெண்ணப்படுவார்கள், (ஆதலால்) அருளுடையீராகி - அருளுடையீராய், ஆற்ற - மிகுதியாக, அறம் செய்மின் - ஈதலாகிய அறத்தைச் செய்யுங்கோள், எ-று.

பொ-ரை. யமன் தோன்றுதலமைந்துள்ள சூரியன் அளக்குங் கருவியாக உம் ஆயுளாகிய தாளியத்தை நாள்தோறும் அளவு செய்துண்ணுவான். அஃதன்றியும் எல்லோரும் உலகில் பிறந்தும் பிறப்பின் பயனாகிய அறத்தை அடையாவிடின் பிறவாதவர்களில் வைத்தெண்ணப்படுவார்கள். ஆதலால் அருளுடையீரிய் மிகுதியாக நற்செலாகிய அறத்தைச் செய்யுங்கோள் என்பது.

தந்துரைத்தலெல்லாம் இசையெச்சம். ஞாயிற்றை நாழியாக உருவகஞ் செய்தாற்போல நாளை ஊருவகஞ் செய்யாமையால் இஃது ஏகதேச வுருவகம். அதிகாரத்தால் அறம் சிறந்த ஈகையின்மேல் நின்றது. வருந்துவார்மேல் யாதொரு தொடர்பும் வேண்டாமலே செல்லும் அருள் காரணமாக அறஞ்செய்த லுளதாவ தாதலால், 'அறஞ்செய் தருளுடையீ ராகுமின்' என்பதில் அருளுடையீராகி அறஞ்செய்ம்மின் எனப் பின் முன்னாக நிறுத்தி விகுதிபிரித்துக் கூட்டி உரைக்க. தீவினைசெய்தாரைத் தண்டித்தற்குரியோன் கூற்றுவனுதலால் அறஞ்செய்யாதாளை அவன் 'உண்ணும்' என்றார்.

Death measures out your days with the Sun as the measure, and thus every day your life is being diminished. Do deeds of virtue full of kindly grace. Otherwise, even those that are born will be reckoned among the unborn. (7)

8. செல்வர்யா மென்றுதாஞ் செல்வுழி யெண்ணுத
புல்லறி வாளர் பெருஞ்செல்வ—மெல்லில்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

இ-ள். யாம் செல்வர் என்று நாம் இதுபொழுது செல்வமுடையோ மென்று களித்து, தாம் செல் உழி - தாம் இனிச் செல்லும் மறுமையுலகத்தை, எண்ணுத - நினைத்தலில்லாத, புல் அறிவாளர் - சிற்றறிவினை யாளுதலுடையாரது, பெருஞ்செல்வம் - மிக்க செல்வம், எல்லில் - இரவில், கருங்கொண்மூ - கரியமேகம், வாய்திறந்த - வாய்திறந்தசனலினிண்டாகிய, மின்னுப்போல - மின்னலைப்போல, தோன்றி - சிறிதுகாலந் தோன்றி நின்று, மருங்கும் அற - இருந்த இடமுந் தோன்றாமல், கெட்டுவிடும் - அழிந்துபோம், என்று.

பொ-ரை. நாம் இதுபொழுது செல்வமுடையோ மென்று களித்துத் தாம் இனிச்செல்லும் மறுமையுலகத்தை நினைத்தலில்லாத சிற்றறிவினை யாளுதலுடையாரது மிக்க செல்வம், இரவில் கரிய

மேகம் வாய்திறந்ததனலுண்டாகிய மின்னலைப்போலச் சிறிதுகாலந் தோன்றி நின்று இருந்த இடமும் தோன்றுமல் அழிந்துபோம் என்பது.

நாம் தனித் தன்மைப்பன்மை. செல்வர் தன்மையில் படர்க்கை வந்த வழுவமைதி. மறுமையுலகமென்றது சுவர்க்க நரகங்களை. புல்லறிவாளர் பெருஞ்செல்வம் எல்லில் மின்னுப்போற் சிறுன்றி யென்றமையால், நிதலாலேஅறிவுடையோரா லறியப்படுவதாகிய விளக்கம் பெருதென்பதாயிற்று. மின் - தொழிலுவமம். மருங்குமென்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று.

The wealth of those fools who think, "we are very rich" but never think of their future end, dies out like the lightning that peeps through the black thunder cloud. (8)

9. உண்ணு ளெளிதிரு ணேங்கு புகழ்செய்யான்
றுன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
விழந்தானென் றெண்ணப் படும்.

இ-ள். உண்ணுன் - (ஒருவன் நல்லுண்டிகளை) உண்ணுமலும், ஒளிதிருன் - மதிப்பை நிலைக்கச்செய்யாமலும், ஙங்கு - பெருகுகின்ற, புகழ் - உரையும் பாட்டுமாகிய புகழை, செய்யான் - செய்துகொள்ளாமலும், துன் அருகேளிர் - பெறுதலரிய உறவினரது, துயர் களையான் - வறுமைத் துன்பத்தை நீக்காமலும், கொன்னே - கைம்மாறு வேண்டாமலே, வழங்கான்-(இரப்பவர்க்குக்) கொடாமலும், பொருள் காத்திருப்பான் எல் - செல்வப் பொருளைக் காத்திருப்பானுயின், அஆ-ஐயோ, இழந்தான் என்று - அவன் அப்பொருளை இழந்தானென்று, எண்ணப்படும் - (அறிவுடையோரால்) மதிக்கப்படுவான், எ-று.

பொ-ரை. ஒருவன் நல்லுண்டிகளை யுண்ணுமலும் மதிப்பை நிலைக்கச்செய்யாமலும் பெருகுகின்ற உரையும் பாட்டுமாகிய புகழைச் செய்துகொள்ளாமலும் பெறுதலரிய வுறவினரது வறுமைத் துன்பத்தை நீக்காமலும் கைம்மாறு வேண்டாமலே யிரப்பவர்க்குக்கொடாமலும் செல்வப்பொருளைக் காத்திருப்பானுயின், ஐயோ அப்பொருளை யவன் இழந்தானென்று அறிவுடையோரால் மதிக்கப்படுவான் என்பது.

ஒளி தான் வாழுநாளில் எல்லாராலும் மதிக்கப்படும் மதிப்பு. தான் உளனுகி ஒளிகிறல் புகழ் செய்தல்களைச் செய்துகொள்ள வேண்டுதலால் உண்ணுனென்று தொடங்கி, கேளிர் துயர்களைதலால்

மற்றவரும் இவனது கேண்மையை விரும்பி மதிக்கப்படுதலால் ஒளி நிறலும், கொன்னே வழங்கலால் புகழ்செய்தலும் உண்டாவன ஆதலால் காரிய காரணங்களை முறை நிரனிறையாக வைத்துக் கூறினர். அஆ - அருளின்கட் குறிப்பாய்வந்த இடைச்சொல். தொழீஇ பயனின்மைப் பொருளதாகிய இடைச்சொல்; அது தகைம்மாறு வேண்டாமைக் காயிற்று. இழந்தான் தனிவினல் எதிர்காலம் இறந்தகாலமாக வந்த காலவழுவமைதி.

He, who eats not, who does not shine amongst the people surrounding him, who does no praiseworthy deeds, who does not relieve his suffering friends and relations but hoards his welath in vain, will be considered to have lost it once for all. (9)

10. உடாஅது மூண்ணுதுந் தம்மூடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கெடாஅது
வைத்தீட்டி ஞரிழப்பர் வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி.

இ-ள். வான்தோய் - சுவர்க்கத்தைத் தீண்டுகின்ற, மலைநாட - மலைநாட்டார்களே, உடாதும் - (நல்லாடைகளை) உடுக்காமலும், உண்ணுதும் - (ஐம்புல நுகர்ச்சிகளை) அநுபவியாமலும், தம் உடம்பு - தம் மூடம்பை, செற்றும் - வருத்தியும், கெடாத - தாம் கெடாமைக்குக் காரணமாகிய, நல் அறமும் - துறவறத்தையாயினும், செய்யார் - செய்யாமலும், கொடாது உம் - (வறியவர்க்குக்) கொடாமலும், ஈட்டி வைத்தார் - பொருளைத் தேடிவைத்தவர்கள், இழப்பர் - (அதனை) இழந்தவராவர், (அதற்கு) ஈட்டி உய்க்கும் - தேனைத்தேடி (கூட்டில்) சேர்க்கும், தேனீக்கரி - தேனீக்கள் சாட்சியாம், எ-று.

பொ-ரை. சுவர்க்கத்தைத் தீண்டுகின்ற மலைநாட்டரசனே! நல்லாடைகளை யுடுக்காமலும், ஐம்புலநுகர்ச்சிகளை யநுபவியாமலும், தம்மூடம்பை வருத்தியும், தாம் கெடாமைக்குக் காரணமாகிய துற வறத்தையாயினும் செய்யாமலும், வறியவர்க்குக் கொடாமலும் பொருளைத் தேடிவைத்தவர்கள் அதனை யிழந்தவராவர். அதற்குத் தேனைத் தேடிக் கூட்டில் சேர்க்கும் தேனீக்கள் சாட்சியாம் என்பது.

உடுக்காமலும், உண்ணுமலும், தம்மூடம்பைச் செறுத்தல் ஆறந் தோற்குரிய செயலாதலால், நல்லறமென்றது துறவறத்தின் மேல் நின்றது. உடம்பு செறுத்தலாகிய அரியசெயல் தாம் வேண்டாமலே அமைதலால் செற்றுமென்ற உம்மை உயர்வு சிறப்பு. நல்லறமு

மென்ற உம்மை இல்லறத்தையே அல்லி எனப்பொருள் தரலால் இறந்தது தழீஇய எச்சவும்மை. சொடாதுமென்ற இறந்தது தழீஇய எச்சவும்மை தொகுத்தலாயிற்று. வான் இடவாகு பெயர்.

Those who stint in clothes and food and mortify their bodies, yet never do deeds of virtue but simply hoard up their wealth, shall lose it. O lord of high hilly country! This truth the hoarding bee attests. (10)

Chapter II—The Instability of Youth

2-ஆம் அதிகாரம். இளமை நிலையாமை.

அஃதாவது இளமையினது நிலை இல்லாமையை உணர்த்துவது. இளமை செல்வத்தை அநுபவித்தற்குரிய காலமாதலால் இஃதின் பின் வைக்கப்பட்டது.

11. நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்ற விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
யின்னுங் கெழுந்திருப் பார்.

இ-ள். நல் அறிவாளர் - குற்றமற்ற அறிவை யாளுத லுடையோர், நரைவருமென்று எண்ணி - மூப்புவருமென்று கருதி, குழவியிடத்தே - இளமையிலேயே, துறந்தார் - (யானென்னும் அகப்பற்றையும் எனதென்னும் புறப்பற்றையும்) விட்டார், புரைதீராத - (காமவெகுளி மயக்கமாகிய) குற்றம் நீங்குதலில்லாத, மன்றத - நிலை பெறுதலில்லாத, இளமை - இளமைப்பருவத்தை, மகிழ்ந்தாரே - (நன்கு மதித்துக்) களித்தவர்களே, கோல் ஊன்றி-(மூப்பில் நடத்தற்கரிதாதலால்) கோலை யூன்றி, இன்னுங்கு - துன்பத்தோடு, எழுந்திருப் பார் - எழாநிற்பர்கள், எ-று.

பொ-ரை. குற்றமற்ற அறிவை யாளுத லுடையோர் மூப்பு வருமென்று கருதி யிளமையிலேயே யானென்னும் அகப்பற்றையும் எனதென்னும் புறப்பற்றையும் விட்டார். காமவெகுளி மயக்கமாகிய குற்றம் நீங்குதலில்லாத நிலை பெறுதலில்லாத இளமைப் பருவத்தை நன்கு மதித்துக் களித்தவர்களோ மூப்பில் நடத்தற்காதரவாகக் கோலையூன்றித் துன்பத்தோடு எழாநிற்பர்கள் என்பது.

நரை மூப்பை யுணர்த்தவந்ததோர் குறிப்புச்சொல். குழவி இகரஈற்றதாகிய பண்புப்பெயர். ஏ-இரண்டும் பிரிநிலையாதலால் இளமை

யில் துறந்தார் மனமொழிமெய்கள் அலைவில்லாமல் நிற்பதினாலும், நல்வழியிற் செல்லுதலாலும் வரும் இன்பங்களே நெடுநாள் அநுபவிப் பாரென்பதும், இளமை மகிழ்ந்து துறவாதார் அவ்விளமையில் சுரம் வெகுளி நீங்கத்தால் விளையுந் துன்பங்களையே யன்றி மூப்பில் கோ லான்றி வீழுதலாகிய துன்பத்தையும் அநுபவிப்பாரென்பதும் கருத் தாகக்கொள்க. புரைதீராத, மன்னுத என்னும் பெயரெச்ச மிரண் டுங்கி இளமையென்னும் வினைமுதலைக் கொண்டன.

Thinking that grey hairs will appear, the wise have left the world even while they were in tender years; but those who are very joyous of their youth which is so very transitory, and never free from fault, shall ere-long with great pain try to lift themselves up with the help of a walking-stick. (1)

12. நட்புநா ரற்றன நல்லா ருழங்கினு
ரற்புத் தளையு மவிழ்ந்தன—வுட்காணுய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்தேதே
யாழ்கலத் தன்ன கலி.

இ-ள். நட்புநார் - உறவுகளாகிய பாசங்களும், அற்றன - அறுந்தன, நல்லாரும் - (நின்னிடத்து) மிக்க விருப்பமுள்ள மகளிர்க ளும், அழிகினர் - விருப்பங் குறைந்தனர், அன்புதளையும் - (மனைவி புத்திரர் முதலியோர் வைத்த) அன்புகளாகிய கட்டுகளும், அவிழ்ந் தன - நெகிழ்ந்தன, உள்காணுய் - (இவற்றை) உனக்குள் ஆராய், வாழ்தலின் - (இளமையை மகிழ்ந்து) வாழ்ந்ததினால், ஊதியம் - பயன், என் உண்டு - யாதுளதாயிற்று, ஆழ்-(கடலில்) முழுகுகின்ற, கலத்து அன்ன - மரக்கலத்துள்ள நாய்களனுக்குவந்த துன்பத்தை ஒத்த, கலிவ - துன்பமே, வந்தது - உளதாயிற்று, எ-று.

பொ-ரை. உறவுகளாகிய பாசங்களும் அறுந்தன. நின்னிடத்து மிக்க விருப்பமுள்ள மகளிர்களும் விருப்பம் குறைந்தனர். மனைவி புத்திரர் முதலியோர் வைத்த அன்புகளாகிய கட்டுகளும் நெகிழ்ந் தன. இவற்றை யுனக்குள் ஆராய். இளமையை மகிழ்ந்து வாழ்ந்ததி னால் பயன் யாதுளதாயிற்று. கடலில் முழுகுகின்ற மரக்கலத்துள்ள நாய்களனுக்கு வந்த துன்பத்தையொத்த துன்பமே உளதாயிற்று என் பது.

இளமையில் மகிழ்ந்தோர்க்குப் பயனெனக்கொண்டநட்புமுதலி யன அற்றுப்போக, இனிச் செய்யத்தக்கதாகிய செயலின்மை உண்

டானமையின் இளமையும், மூப்பும் பயன்படாமற் சென்றன வென்று இளமை யுடையானுக்கு இவ்வுடம்பு நிலையாமையைக் கூறினாயிற்று. உறவினர் பலராதலால் நட்பும், அன்பு செய்தற்குரியார் மனைவி பூதிதார் முதலிய பலராதலால் அன்பும் பலவாயின. அற்புத்தளை - பண்புத்தொகையாகவும், மூன்றும் வேற்றுமைத் தொகையாகவும் கொள்ளக் கிடந்தது. ஆம் - அசை. கலம் - உயிரில் பொருளாதலால் துயர்தற்குரிய நாய்கன்மேல் நின்றது.

The ties of friendship are broken; the good people have dwindled in numbers; the bonds of affection have been loosened. The cry (of those who have to bemoan your death) comes up as from a sinking ship. Carefully think of these. What is the fruit or gain of this life of thine? (2)

13. சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினரா
பற்கழன்று புண்டம் பழிகாறும்—மிற்செறிந்து [யப்
காம நெறிபடரும் கண்ணிணர்க் கில்லேயே
யேம நெறிபடரு மாறு.

இ-ள். சொல் தளர்ந்து - (பேசும்) சொற்களின் வலிகுறைந்தனராகி, கோல் ஊன்றி - (ஆதரவாகக்) கோலை ஊன்றினராகி, சோர்ந்த - தள்ளாடிய, நடையினர் ஆய் - நடையை உடையார்களாகி, பல்கழன்று - பற்கள் உதிர்ந்தனராகி, புண்டம் - (உடலாகிய) பொருள், பழிகாறும் - (கண்டோரால்) பழிக்கப்படுமளவும், இல் செறிந்து - இல்வாழ்க்கையில் நீங்காதிருந்து, காமநெறி - காமவழியில், படரும் - செல்லுதற்குரிய, கண்ணிணர்க்கு - சிற்றறிவுடையாருக்கு, ஏமம் - (தம்முயிர்க்குக்) காவலாகிய, நெறி - துறவறவழியில், படரும் ஆறு - செல்லுதற்குரிய வகை, இல்லையே - உண்டாகாதிலதே ஆம், எ - று.

போ-ரை. நோய் சொற்களின் வலிகுறைந்தனராகி, ஆதாவாகக் கோலை ஊன்றினராகி, தள்ளாடிய நடையை உடையார்களாகி, பற்கள் உதிர்ந்தனராகி, உடலாகிய பொருள் கண்டோரால் பழிக்கப்படுமளவும் இல்வாழ்க்கையில் நீங்காதிருந்து, காமவழியில் செல்லுதற்குரிய சிற்றறிவுடையாருக்குத் தம் முயிர்க்குக் காவலாகிய துறவற வழியில் செல்லுதற்குரிய வகை யுண்டாவதிலதே யாம் என்பது.

தளர்ந்து, கழன்று என்னுஞ் சினை வினைகள் முதலின்மேல் நின்றன. எ - தேற்றம். இளமை நிலைமையாகிய இழிவைப்பற்றி உட

லைப் 'பண்டம்' எனவும், வினைத்தூய்மை கெடுத்துக் கூற்றத்தினின்று நீக்கி முத்தியை அடைவித்தலால் துறவுநெறியை 'எமநெறி' எனவுங் கூறினார்.

Those who stick themselves up to the wordly life even when they have become so old that their words falter, are obliged to support themselves on a staff, their teeth fall away and their bodies are despised, and they can't find their way out which would lead them to their proper goal. (3

14. தாழாத் தளராத் தலைநடுங்கத் தண்டூன்றி
வீழா விறக்கும்மிவண்மண்டுங்—சூழில்லா
மம்மர்கொண் மாந்தர்க்கணங்காகுந் தன்கைக்கோ
லம்மனைக்கோ லாகிய ஞான்று.

இ-ள். தாழா - கூனலாகி, தளரா - உடல் தளர்ந்து, தலை நடுங்கா - தலை நடுங்கி, தண்டு ஊன்றி - (நடத்தற்காதரவாகத்) தடியை ஊன்றி, (நடந்து,) வீழா - விழுந்து, இறக்கும்-(மீளவும்) எழுந்து செல்லும், இவள் மாட்டும் - இத்தன்மையாளிடத்தும், சூழ் இல்லாத - முதிர்ந்த அறிவில்லாத, மம்மர்கொள் - காமத்தைக் கொள்ளுகின்ற, மாந்தர்க்கு - மனிதர்களுக்கு, தன் கைக்கோல் - தம்மூடைய கையிற் பிடித்த கோல், அம்மனைக்கோல் - அந்த மனைவியினது கைக்கோல், ஆகிய ஞான்று - ஆகிய காலத்தில், அணங்கு ஆகும் - (அம்மயக்கம்) துன்பந் தருவதாகும், எ-று.

பொ-ரை. கூனலாகி யுடல் தளர்ந்து தலை நடுங்கி நடத்தற் காதரவாகத் தடியை ஊன்றி நடந்து விழுந்து மீளவும் எழுந்து செல்லும் இத்தன்மையாளிடத்தும், முதிர்ந்த அறிவில்லாத காமத்தைக் கொள்ளுகின்ற மனிதர்களுக்குத் தம்மூடைய கையிற்பிடித்த கோல் அந்த மனைவியினது கைக்கோல் ஆகிய காலத்தில் அம்மயக்கம் துன்பந்தருவதாகும் என்பது.

இல்லாத என்னும் காரணப்பொருட்டாகிய பெயரெச்சக் குறிப்பு மம்மரென்னுங் காரியப்பெயர்கொண்டது; பண்புத்தொகையாகவுங் கொள்ளலாம்; காழில்லாமையாகிய மம்மரென் விரியும். மம்மர் - பேதைமை. இது காரியத்தைக் காரணமாகவும், அணங்கு காரணத்தைக் காரியமாகவுங் கூறிய உபசாரவழக்கு. இவண்மாட்டென்ற உம்மை இழிவுசிறப்பு. இவள், மனை என்பன சாதியொருமை. தன்பன்மையிலொருமை வந்த வழுவமைதி. மம்மர்தருந் துன்பமாவது

தாம் ஊன்றி நடந்தகோல் தாம் சோர்ந்த நடையுமிலராகிய பின், தம்மின் இளையராகிய மனைவியர்க்குக் கைக்கோலா யமைந்தபோது இல்வாழ்க்கை நடவாமையாலாம் துன்பம். அகரச்சுட்டுக் கட்டழிகும், கட்டிளமையு முடையாளெனக் கருதிய உயர்வின்கண் வீழ்ந்தது. அம்மனை என்பதை ஒரு சொல்லாகக்கொண்டு தாயென்பாருமுளர். தலை நடுக்கா ஏனப் பாடங் கூறுவாருமுளர். அவர் மூப்பில் தாழ்தல், தளர்தல் இயல்பாதல் போலத் தலை நடுங்கல் இயல்பாமென உணராரா போலும்.

The people will be subject to grief who, by their folly, cherish fond desires to a woman who, like her mother, in her old age, should become decrepit or hunch-backed, whose head would become shaky and who would have to support herself on the very staff of her mother owing to her faltering steps. (4)

15. எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்று—டனக்குத்தா
யாகி யவளு மதுவானற் றுய்த்தாய்க்கொண்
டேகு மளித்திவ் வுலகு.

இ-ள். எனக்குத்தாய் ஆகியாள் - (இம்மையில்) எனக்குத் தாயானவள், என்னை - (அன்புமிக்க) என்னை, ஈங்கு இட்டு - இவ்வுலகத்தில் வைத்து, தனக்குத்தாய் நாடியே - தனக்குத் தாயைத்தேடியே, சென்றுள் - போயினுள், தனக்கு - தேடிப்போன தனக்கு, தாய் ஆகியவளும் - தாயானவளும், அது ஆனல் - தனக்குத் தாயைத் தேடிச் செல்லுதலானல், தாய் - ஒருதாய், தாய்கொண்டு - தனக்குத் தாயைத் தேடிக்கொண்டு, ஏகும் - போகும், அளித்து - எளிமையுடையது, இவ்வுலகு - இந்த உலகம், எ-று.

பொ-ரை. இம்மையில் எனக்குத் தாயானவள் அன்புமிக்க என்னை இவ்வுலகத்தில்வைத்துத் தனக்குத் தாயைத் தேடியே போயினுள், தேடிப்போன தனக்குத் தாயானவளும் தனக்குத் தாயைத் தேடிச் செல்லுதலால் ஒருதாய் தனக்குத் தாயைத் தேடிக்கொண்டு போகும் எளிமையுடையது இந்த உலகம் என்பது.

ஆதலால் நான் இளமையை மகிழாமல் பிறப்பினுக்கு அஞ்சித் துறவறத்தை யடைவேன் என்பது. இஃது இசையெச்சம். அன்பிற் சிறந்தவளாதலால் தாயின்மேல் வைத்துக் கூறினர். நாடியே சென்றுளென்பது இலக்கணை. எ-பிரிநிலை. அது நாடிச்சென்றதைச் சுட்

டிய்து. 'எகுமளித்திவ்வுல்கு' என்வே ஏகுமெளிமையுடைய தன்று அவ்வுலகென்பதாயிற்று. அவ்வுலகென்றது வீடுலகத்தை. "அதனிற் போருனின் மீளப் பூவியில்வந் தாரில்லே" என்ரூர் பிறரும்.

My mother left me here on earth and went in search of a mother (*i. e.* to be born again). Even her mother went in a similar way. If that be so, the way of this world is that one mother after another goes in search of a new mother, (i. e) (there is a ceaseless chain of births and deaths). (5)

16. வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னு மகிழ்ச்சி
யறிவுடை யாளர்க ணில்.

இ-ள். வெறி அயர் - வெறியாடுதலைச் செய்கின்ற, வெம் களத்து - பலியிடுமிடத்து, வேன்மகன்-வெறியாட்டாளனுடைய, பாணி-கையில், முறி - தளிர்கள், ஆர் - இடையிடையே தங்கிய, நறுகண்ணி-மணமமைந்த மலர்மாலை, முன்னர் - தன்னெதிரில், தயங்க - விளங்காநிற்க, மறி - (அதைக்கண்ட) ஆடு, குளகு - உணவாக, உண்டது அன்ன - (அதை) உண்ட மகிழ்ச்சியை ஒத்த, மன்னுத - நிலைபெறுதலில்லாத, மகிழ்ச்சி - இளமையால் வரும் மகிழ்ச்சி, அறிவுடையாளர் கண் - நல்லறிவுடைமையை ஆராய்தலுடையாரிடத்து, இல் - இல்லே, எ - று.

பொ-ரை. வெறியாடுதலைச் செய்கின்ற பலியிடுமிடத்து வெறியாட்டாளனுடைய கையில் தளிர்கள் இடையிடையே தங்கிய மண மமைந்த மலர்மாலே தன்னெதிரில் விளங்காநிற்க, அதைக்கண்ட ஆடு உணவாக அதை உண்ட மகிழ்ச்சியை யொத்த நிலைபெறுதலில்லாத இளமையால் வரும் மகிழ்ச்சி நல்லறிவுடைமையை யாராய்தலுடையாரிடத்து இல்லே என்பது.

வெறி-ஆவேசங்கொண்டாடுதல். ஆடு முதலியவற்றைக் கொலே செய்யுமிடமாதலால் பலியிடுமிடத்தை 'வெங்களம்' என்ரூர். குளகு இலேமேயும் விலங்கினுணவு. "இலேதுங்கர் விலங்குணவே குளகென்வியம்பலராகும்" என்பதுங்காண்க. அம்மாலேயைத் தன்னுயிர்க்குக் கேடு தரும் உற்பாதமாகக் குறியாமல் ஆடு அதை யுண்கேளிப்பதை உவமித்தமையால் 'மகிழ்ச்சி' என்றது இளமையில் இல்வாழ்க்கையைமகிழ்ச்சியை. யாரெழுதியது இவ்வெழுத்தாணி என்பதுபோல் நின்ற

உண்டதென்பது வினைமுதல் வினையைக் கருவியின்மே லேற்றிக் கூறும் வினையாலணையும் பெயர். இது ஈறுதொகுத்தலாய் நின்றது.

The wise never exult over a transitory joy like the foolish to whose joy there is no bound even when it is of a fleeting nature. These are like the stupid goat, which, just brought for sacrifice, without ever knowing what fate awaits it the next moment, tries to crop the tender shoots of the garland that dangle in the hand of the Pûjari (who is to cut off its head in a moment). (6)

17. பனிபடு சோலிப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதும்
வேற்கண்ணா ளென்றிவளே வெஃகன்மின் மற்றிவளுங்
கோற்கண்ணா ளாகுங் குனிந்து.

இ-ள். இளமை - (நீர் மகிழும்) இளமைப்பருவம், பனிபடு - குளிர்ச்சி உண்டாகிய, சோலை - சோலையிலுள்ள, பயன் மரம் எல்லாம் - பயன் தரும் மரங்களெல்லாவற்றினின்றும், கனி உதிர்ந்து வீழ்ந்தால் அற்று - பழங்களுதிர்ந்து வீழ்ந்தாற்போலுந் தன்மையது, இவளும் - (நீரேயன்றி) இத்தன்மையதாகிய இளமையுடையாளும், குனிந்து - கூனலாகி, கோல் கண்ணாள் ஆகும் - (வழிதெரிந்து நடப்பதற்குத்) கோலாகிய கண்ணுடையாளாவள், (ஆதலால்) வேல்கண்ணாள் என்று - (இது போழ்து) வேல்போலுங் கண்ணுடையா ளென்று, இவளை - இத்தன்மையாளை, நனி பெரிதும் - மிகவும், வெஃகன்மின் - விரும்பாதிருங்கோள், எ - று.

போை. நீர் மகிழும் இளமைப்பருவம் குளிர்ச்சி உண்டாகிய சோலையிலுள்ள பயன்தரும் மரங்களெல்லாவற்றினின்றும் பழங்களுதிர்ந்து வீழ்ந்தாற்போலுந் தன்மையது. நீரேயன்றி இத்தன்மையதாகிய இளமையுடையாளும் கூனலாகி வழிதெரிந்து நடப்பதற்குக் கோலாகிய கண்ணுடையாளாவள். ஆதலால் இது போழ்து வேல் போலுங் கண்ணுடையாளென்று இத்தன்மையாளை மிகவும் விரும்பாதிருங்கோள் என்பது.

பயன்மரமெல்லா மென்பதனீற்றில் ஐந்தனுருபு தொகுத்தல் பெற்றது. கனி தொழிலுவமமாதலால் இளமை சிறிதுகாலமிருந்து கழியுமென்பது கருத்து. உதிர்ந்து வீழ்தரலென்னும் ஒருபொருட் பன்மொழி அவ்விளமையினது நிலையாமையை இழித்தற்கண்ணும், கனிபெரிதும் என்னும் ஒருபொருட் பன்மொழி வெஃகலின் மிகுதி

வின்மையை உணர்த்தற் கண்ணும் வந்தன. சுட்டிரண்டில் ஒன்று இளமையினது நிலையாமையையும், மற்றது குனிந்து கோற்கண்ணளாதலையுஞ் சுட்டிநின்றன. முன்னுள்ள உம்மை முற்று; பின்னுள்ள உம்மை இறந்தது தழீஇயதெஞ்சு உயர்வு சிறப்புவினாருளது. கனியினது செழுமைக்குக் காரணமாயிருத்தலால் 'பனிபடுசோலைப் பயன்மரம்' என்றும், இளமைநிலையாமை யாவர்க்கும் ஒக்குமாதலால் 'மரமெல்லாம்' என்றும் கூறினர்.

Youth is like the fruit of the fruit-bearing trees in a grove and liable to fall away in time. That being the case, don't cherish fond desires for a woman, thinking that she is now in her youth and looks very beautiful and has eyes sharp and bright as javelin. The very woman is liable to lose her sight and will have to be guided by a stick. (7)

18. பருவ மெனைத்துள பல்லின்பா லேனை
யிருசிகையு மூண்டீரோ வென்று—வரிசையா
லுண்ணுட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோ
ளெண்ணு ரறிவுடை யார்.

இ-ள். பருவம் - வயது, எனைத்து - எவ்வளவினது, உள - உதிராமலுள்ள, பல்லின்பால் - பல்லின்பகுப்பு, ஏனை - எவ்வளவு உள்ளன, இருசிகையும் - மூற்சிகை பிற்சிகையாகிய பல உணவுகளையும், உண்டீரோ என்று - (இளமையில்) உண்டீரா வென்று, வரிசையால் - முறைமையில், உள்நாட்டம் - (இளையோர்) தமக்குள் நாடிக் கேட்டலை, கொள்ளப்படுதலால் - அடையப்படுதலால், யாக்கைக் கோள் - உடலின் தன்மையாகிய இளமையை, அறிவுடையார் - நல்லறிவுடையோர், எண்ணுர் - பொருளாக்கமதியார். எ-று.

பொ-ரை. வயது எவ்வளவினது; உதிராமலுள்ள பல்லின் பகுப்பு எவ்வளவு உள்ளன; மூற்சிகை பிற்சிகையாகிய பல உணவுகளையும் இளமையில் உண்டீரா வென்று முறைமையில் இளையோர் தமக்குள் நாடிக்கேட்டலை யடையப்படுதலால், உடலின் தன்மையாகிய இளமையை நல்லறிவுடையோர் பொருளாகமதியார் என்பது.

எனைத்து ஒன்றன்பாற்கை விகுதிபெற்ற பண்படியாகப்பிறந்த பெயர். இதன்பகுதி எத்தனை என்பதன் மரூஉ. வரிசையாவது மூப்புக்குக் காரணம் பருவமுதிர்ச்சி யாதலால் முன்னர்ப் 'பருவமெனைத்து' என்றும், உடலே நெடுங்காலங்கொண்டு செலுத்தற்குரிய வலி

யது மெலிய தென்னும் எவ்லா வுணவுகளிலும் வலியதைத் தின்னு தற்குக் கருவி பல்லாதலால் அதன்பின் 'பல்லின்பாலேனே' என்றும், 'இருசிகையுமுண்டீரோ' என்றும் விஞவும் முறை. வரிசையால்உருபு மயக்கம். ஏனைய என்பது ஈறுதொகுத்தலாயிற்று. உன்னூட்டமென் னுங் காரணம் விஞவுதலாகிய காரியத்தின்மேல் நின்றது. எல்லா வுணவுகளாவன:—உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என் பன. தின்பன ஒன்றும் வன்மையுள்ளன.

"What is your age? How strong are your teeth? Are you able to chew hard and soft food?"—Such are the searching questions one is confronted with, Such being the decaying nature of the body, the wise never feel any anxiety for it. (8)

19. மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னுது
கைத்துண்டாம் போழ்தே கரவா—தறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியா
னற்கா யதிர்தலு முண்டு.

இ-ள். தீ வளியால் - கோடைக் காற்றால், முற்றி யிருந்த - நன்குபழுத்த, கனிஒழிய - (மரங்களில்) பழங்கள் உதிராதிருக்க, நல் காய் - வன்மையாகிய காய்கள், உதிர்தலும்உண்டு - உதிர்தலுமுளது, (ஆதலால்) யாம் - நாம், இளையம் - (இதுபோழ்து) இளமைப் பரு வத்தையுடையோம், நல்வினை - அறவினையைப் பின், மற்று அறி வாம் - விரையாமல் ஆராய்ந்து செய்வோம், என்னாது - என்று நினை யாமல், கைத்து உண்டு ஆம்போழ்தே - பொருள் உண்டாகுங் காலத் தில்தானே, கரவாது - இல்லையென மறுக்காமல், அறம் செய்ம்மின் - ஈதலாகிய அறத்தைச் செய்யுங்கோள், எ-று.

பொ-ரை. கோடைக்காற்றால் நன்கு பழுத்த மரங்களில் பழங் கள் உதிராதிருக்க வன்மையாகிய காய்கள் உதிர்தலுமுள்ளது. ஆதலால் நாம் இதுபோழ்து இளமைப்பருவத்தை யுடையோம்; அறவினை யைப்பின் விரையாமல் ஆராய்ந்து செய்வோம் என்று நினையாமல் பொருள் உண்டாகுங் காலத்தில்தானே இல்லையென மறுக்காமல் ஈதலாகிய அறத்தைச் செய்யுங்கோள் என்பது.

விரையாமல் அறிவாமென்றது மூப்பின்காலத்தில் அறிவாமென் பதை. மற்று வினைமாற்றுப்போருளது. உதிர்தல் நிறுபான்மையாத லால் உம்மை இழிவுசிறப்பு. கைத்து இடமடியாகப்பிறந்த பெயர், கை பகுதி, த் சந்தி, து ஒன்றன்படர்க்கை விகுதி. ஏ தேற்றம். கைத்

துண்டாம்போழ்தே என்றதனால் இளமைபோலச் செல்வமும் நிலையாதென்பதை வற்புறுத்தற்கென்க. நல்ல காற்றடித்தமையால் மரம் சாய்ந்தது என்பதிற்போல நன்மைப்பண்பு வன்மைக்காயிற்று.

Don't say, "Let us (first) know what charitable deeds are, and afterwards try to do them", but do them when you have something in your hand without hoarding it. When unfavourable hot wind blows, both ripe and unripe fruits fall away. (9)

20. ஆட்பார்த் தூழலு மருளில்கூற் றுண்மையாற்
றீக்கிப் பிழைப்புக் காலத்தாற் கொண்டீய்ம்மின்-பீட்பிது
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்த னன்று.

இ-ள். ஆள்-(தான் கொண்டுபோகும்) ஆளை, பார்த்து - ஆராயாநின்று, உழலும் - திரியாநின்ற, அருள் இல் கூற்று - கருணையின்மையாகிய யமன், உண்மையால் - உள்ளுயிருத்தலால், தோட்கோப்பு - (நீர் இனிச் செல்லும் வழிக்கு) ஆற்றுணைவாகிய தருமத்தை, காலத்தால் - இளமையில்தானே, கொண்டு - செய்துகொண்டு, உய்ம்மின் - பிழையுங்கோள், பீள் - இளங்கருவினின்றும், பிதுக்கி - வெளிப்படுத்தி, பிள்ளையை - பிள்ளையினுயிரை, தாய்அலற - பெற்றவள் அலறியழும்படி, கோடலால் - கொண்டுபோதலால், அதன் - அவ்வியமனது, மற்றுக்கள்ளம் - வஞ்சத்தொழிலை, கடைப்பிடித்தல் - மறவாதிருத்தல், நன்று - நன்மையைத் தருவதாகும், எ-று.

பொ-ரை. தான் கொண்டுபோகும் ஆளை யாராயா நின்றுதிரியா நின்ற கருணையின்மையாகிய யமன் உள்ளுயிருத்தலால், நீர் இனிச் செல்லும் வழிக்கு ஆற்றுணைவாகிய தருமத்தை இளமையில்தானே செய்துகொண்டு பிழையுங்கோள்; இளங்கருவினின்றும் வெளிப்படுத்திப் பிள்ளையினுயிரைப் பெற்றவள் அலறியழும்படி கொண்டுபோதலால், அவ்வியமனது வஞ்சத்தொழிலை மறவாதிருத்தில் நன்மையைத் தருவதாகும் என்பது.

தோட்கோப்பு ஏழாம்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த. அன்மொழித் தொகைப்பெயர்; விரிந்தால் தோளில் சேர்க்கப்படும் உணவின்கட்டு எனவிரியும். இது நற்றுமைவிழிக்கு உணவுபோல்வதாகிய அறத்தின்மேலது. காலத்தால் வேற்றுமை மயக்கம். பிள்ளை இடவாகுபெயராய் உயிரின்மேல் நின்றது. அருளென்றது அதனாரணமாகவரும் கண்ணோட்டத்தை. உடையாளும் அறியாவகை பீட்

ற்றக் குடையாராகச் சென்றவர்களும் இறந்தனர்களென்று பூமியில் குறிக்கப்பட்டு பலராலியச் சொல்லப்பட்டாரல்லாமல் அச்சாவினின்றும் தப்பினவர் இந்த உலகத்தில் இலர் என்பது.

செல்வமிகுதியை உணர்த்தற்கு 'மலைமிசைத்தோன்றும் மதியம் போல்' என உவமைகூறினர்; குடையரும் என்னும் உயர்வுசிறப்பும்மை தொகுத்தலாயிற்று. குடையரும் தஞ்சமென்றெடுத்துத் தூற்றப்பட்டாரென்று கூறவே மற்றவர் தஞ்சமாலைக் கூறவேண்டாதாயிற்று. நிலமிசை என வேண்டாது கூறினர்; நிலையாமையையுடையதென்னும் இழிவுபற்றி. இவ்வுலகென்பதற்கு இளமை நிலையாமையில் கும் பாட்டில் இவ்வுலகென்பதற் குரைத்தாங்குரைக்க.

Even kings who rode on the neck of elephants under the shade of the state umbrellas resembling the full moon on the summit of a mountain, have one day to succumb to death. Such is their end. There is none on earth exempt from death. (1)

22. வாழ்நாட் கலகாய் வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால்—வாழ்நா
ளுலவாமு னெப்புர வாற்றுமின் யாரு
நிலவார் நிலமிசை மேல்.

இ-ள். வாழ்நாட்கு - (நீர் தேகத்தோடு கூடி) வாழ நியமித்த நாள்களுக்கு, அலகு ஆய் - அளவாக, வயங்கு - விளங்குகின்ற, ஒளி மண்டிலம் - சூரியன், வீழ்நாள் - உதியாதநாள், படாது - உண்டாகாமல், எழுதலால் - உதித்தலால், யாரும் - எத்தன்மையாரும், நிலமிசைமேல் - பூமியில், நிலவார் - நிலைத்தலிலர், (ஆதலால்) வாழ்நாள் - வாழ்நாள்கள், உலவாதமுன் - (அறஞ்செய்யப் பெறாமல்) கெடாதமுன்னே, ஒப்புரவு - அறத்தை, ஆற்றுமின் - செய்யுங்கோள், எ-று.

பெ-ரை. நீர் தேகத்தோடு கூடி வாழ நியமித்த நாள்களுக்கு அளவாக விளங்குகின்ற சூரியன் உதியாத நாள் உண்டாகாமல் உதித்தலால் எத்தன்மையாரும் பூமியில் நிலைத்தலிலர். ஆதலால் வாழ்நாள்கள் அறஞ்செய்யப்பெறாமல் கெடாதமுன்னே அறத்தைச் செய்யுங்கோள் என்பது.

காலமாகிய அருவப்பொருள் சூரியனாகிய அளவையால் அளக்கப்படுதலால் வயங்கொளிமண்டில மெழுதலை 'அலகு' என்றார். ஆக் என்பது ஆயெனத்திரிந்து நின்றது; இஃது எழுதலா லென்பதனோடு முடிந்தது. ஒளி மண்டிலம் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்

மொழித்தொகைக் காரணப்பெயர். யாவருக்கும் ஒத்த ஒழுகுகமாதலால் ஈகையை 'ஒப்புரவு' என்றார். மிசைமேல் ஒருபொருட் பன்மொழி; இங்ஙனம் கொள்ளாமல், மேல் என்பதற்கு வாழ்நாள் முடிந்தபின் என உரைத்தலுமாம். ஒப்புரவைத் துறவறத்தின்மேலேற்றி நிலமிசைமேல் - எல்லா வுலகங்களுக்கும் மேலாகிய முத்திபுலகத்தில், யாரும் - துறவறஞ் செய்யாத எல்லாரும், நிலவார் - விளங்குதலிலர், என உரைத்தலுமாம். யாருமென்பதில்லா வினை எஞ்சாமைப் பொருளது.

Our days are measured by the rising and setting of the Sun. Before our days are exhausted, see that you do deeds of virtue. No one for ever remained on earth. (2)

23. மன்றங் கறங்க மணப்பறை யாயின
வன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
யொலித்தலு மூண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்.

இ-ள். மன்றம் - உறவினர் முதலிய பலர் கூடிய இடத்தில், கறங்க - ஒலியுண்டாம்படி, மணப்பறை ஆயின - மணத்திற் கொட்டும் பறையா யமைந்தவை, அன்று - அத்தினத்தில், ஆங்கே - அம்மணப்பந்தலிலே, அவர்க்கு - மணக்கோலங் கொண்டவர்க்கு, பின்றை - பிற்பொழுதில், பிணப்பறை ஆய் - பிணத்திற்குக் கொட்டும் பறைகளாகி, ஒலித்தலும் - ஒலிக்குதலும், உண்டு ஆம் என்று - உளதாகுமென்று, உய்ந்துபோம் ஆறே - (இல்வாழ்க்கையினின்றும்) தப்பிப்போகும் துறவற நெறியையே, மாண்டார் மனம் - மாட்சிமைப்பட்ட அறிவுடையாரது மனம், வலிக்கும் - துணியும், எ-று.

பொ-ரை. உறவினர் முதலிய பலர்கூடிய இடத்தில் ஒலியுண்டாம்படி மணத்திற் கொட்டும் பறையா யமைந்தவை அத்தினத்தில் அம்மணப்பந்தலிலே மணக்கோலம் கொண்டவர்க்குப் பிற்பொழுதில் பிணத்திற்குக் கொட்டும் பறைகளாகி ஒலிக்குதலும் உளதாகுமென்று இல்வாழ்க்கையினின்றுந் தப்பிப்போகும் துறவற நெறியையே மாட்சிமைப்பட்ட அறிவுடையாரது மனம் துணியும் என்பது.

மூன்றை மணப்பறையாயின என்றமையால், ஆண்பாலாரும் பெண்பாலாரும் அடங்க 'அவர்க்கு' எனச் சுட்டினார். ஆங்கென்பதும் அது. ஏ பிரிநிலை. அன்றென்றதனால் பின்றை பிற்பொழுதுக்காயிற்று. ஒலித்தலுமென்றவும்மை இழிவு சிறப்பு. ஆறே என்னும் ஏ பிரிநிலை

யாதலால், பிறப்பிற்குக் காரணமாயுள்ள ஆவாநீங்காத இல்வாழ்க்கை உய்ந்துபோமா றன்றென்பதாயிற்று.

The drums that sound in the festive hall, the very day may serve as funeral drums. Knowing this, the mind of the wise is turned to the path which leads to heaven. (3)

24. சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினே—நன்றேகாண்
மூக்காலெக் கொட்டியுண் மூடித்தீக் கொண்டெழுவார்
செத்தாரைச் சாவார் சுமந்து.

இ-ள். சென்று - (கொட்டுவோர் ஓரிடத்தி) சென்று, ஒரு கால் - ஒருமுறை, பறையினை - பறையை, எறிப - கொட்டுவார், சிறு வரை நின்று - சிறிதுபொழுது சும்மா இருந்து, எறிப - கொட்டுவார், மூக்காலே - மூன்றுமுறை, கொட்டின் - கொட்டினால், செத்தாரை - செத்தவரை, உள் - வீட்டினுள், மூடி - (கோடியால்) மூடி, தீக் கொண்டு - தீயைத் தாங்கி, சாவார்-இனிச் சாகஇருப்போர், சுமந்து-சுமவாநின்று, எழுவர் - (புறத்தே) செல்வர், நன்றே - (இத்தன்மை யான வாழ்க்கை) இன்பமுடையதோ, காண் - நீ ஆராய், எ-று.

பொ-ரை. கொட்டுவோர் ஓரிடத்திற் சென்று ஒருமுறை பறையைக்கொட்டுவர், சிறிதுபொழுது சும்மா இருந்துகொட்டுவர், மூன்றுமுறை கொட்டினால் செத்தவரைவீட்டினுள் கோடியால் மூடித் தீயைத் தாங்கி இனிச் சாக இருப்போர் சுமவா நின்று புறத்தே செல்வர். இத்தன்மையான வாழ்க்கை இன்பமுடையதோ நீ ஆராய் என்பது.

நின்றென்பதில் நிற்றல் கொட்டே லின்மைக்காயிற்று. சிறு வரை பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் கார ணப்பெயர். சிறுவரை நில்லாமல் கொட்டாராதலால் நின்றே என் னும் ஏ தேற்றம், நன்றே என்னும் ஏ எதிர்மறை. சுமந்து சுமவாநின் றென்னும் நிகழ்கால வினையெச்சந் திரிந்துநின்றது. செத்தார் சாதி ப்பன்மை.

When one is dead, the funeral drum is sounded. It is sounded a second time a little while after. When it is sounded for the third time, the corpse is shrouded in a winding sheet and is carried on the bier to the burning ground by those who have to follow suit some day or other. (4)

25. கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப் [ண்டீண்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும் - மணங்கொ
ண்டுண்டுண் டென்னு மூணர்விஞர் சாற்றுமே
தொண்டொண்டொ டென்னும் பறை.

இ-ள். சுற்றத்தார் - உறவினர், கணங்கொண்டு - கூடிநின்று, கல் என்று அலற - கல்லென்று அலறி அழும்படி, பிணம்கொண்டு - பிணத்தைச் சுமவாகின்று, காடுஉய்ப்பார் - மயானத்தில் செலுத்து வோரை, கண்டும் - கண்டிருந்தும், மணம்கொண்டு - மணத்தை விரும்பி, ஈண்டு - இவ்வுலகத்தில், உண்டு உண்டு உண்டு என்னும் - இன்பம் உண்டென்றே கருதுகின்ற, உணர்விஞன் - அறிவில்லாணுக்கு, தொண் தொண் தொடென்னும் பறை - தொண் தொண் தொடு என்று ஒலிக்கும் பறையொலி, சாற்றும் - (அவ்வாசையை விடு விடு விடு என்று) சொல்லுவதுபோலும், எ-று.

பொ-ரை. உறவினர்கூடி நின்று கல்லென்று அலறி அழும் படி பிணத்தைச் சுமவாகின்று மயானத்தில் செலுத்துவோரைக் கண் டிருந்தும், மணத்தை விரும்பி இவ்வுலகத்தில் இன்பம் உண்டென் றே கருதுகின்ற அறிவில்லாணுக்குத் தொண் தொண் தொடு என்று ஒலிக்கும் பறை யொலி அவ்வாசையை விடு விடு விடு என்று சொல் லுவது போலும் என்பது.

கணங்கொண்டு ஒருசொல்லின் தன்மையது. கண்டும் உண் டுண் டென்னுமென்ற குறிப்பினுல் உணர்விஞனென்பது உணர் விலாணுக் காயிற்று. உம்மை உயர்வுசிறப்பு. தந்தாணத்தன எல்லாம் இசையெச்சம். அதற்குத் துணிவுப்பொருளது. தொண்டொண் டொடு என்பது கொட்டுவோர் பறையைக் கொட்டி நிறுத்துங்காலத் தில் மூன்றுமுறைதட்டி நிறுத்தும் ஒலியை உணர்த்துங்குறிப்பு. அது சாற்றும் என்றது தற்குறிப்பேற்றவணி. பறை கருவியாகு பெயர்.

To the man who witnesses how the dead are removed from the house and carried to the place of burning or burial amidst the crying and lamentations of relatives, and yet marries and thinks of the life as something permanent, funeral drum speaks out about the perishable state of the body. (5)

26. நார்த்தொடுத் தீர்க்கிலெ னன்நூய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர்—பழிக்கிலென்

தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூற்றன் புறப்பட்டக் கால்.

இ-ள். தோற்பையுள் நின்று - உடலாகிய தோற்பையில் தங்கி, தொழில்-(முன்செய்த) இருவினைகளும், அற-முற்றுப்பெற, செய்து-(அவற்றின் பயனைச்) செய்து, ஊட்டும் - (உடலோடுகூடிய தனக்கு) உண்பிக்கின்ற, கூற்றன் - உயிராகிய கூற்றன், புறப்பட்டக்கால் - (உடலினின்றும்) புறப்பட்டபின், நார்த்தொடுத்து - (அவ்வுடலை) நாரினால் கட்டி, நார்க்கில் என் - இழுத்தால் என்னபயன், நன்று ஆய்ந்து - (அது செய்யாமல்) மிகுதியாக (ஆடை அணி முதலியவற்றை) ஆய்ந்தெடுத் தணிந்து, அடர்க்கில் என் - அடக்கஞ் செய்தால் என்னபயன், பார்த்த உழி - (அதுவுஞ் செய்யாமல்) கண்டவிடத்தில், பெய்யில் என் - எறிந்தால் என்னபயன், பல்லோர் - (பார்த்தவிடத்திருக்கக்கண்ட) பலரும், பழிக்கில் என் - பழித்தால் என்னபயன், (ஒருபயனுமில்லை.) எ-று.

போ-ரை. உடலாகிய தோற்பையில் தங்கி முன்செய்த இருவினைகளும் முற்றுப்பெற அவற்றின் பயனைச் செய்து உடலோடு கூடிய தனக்கு உண்பிக்கின்ற உயிராகிய கூத்தன் உடலினின்றும் புறப்பட்டபின் அவ்வுடலை நாரினால் கட்டி இழுத்தால் என்னபயன்; அது செய்யாமல் மிகுதியாக ஆடை அணி முதலியவற்றை ஆய்ந்தெடுத்தணிந்து அடக்கஞ்செய்தால் என்னபயன்; அது செய்யாமல் கண்டவிடத்தில் எறிந்தால் என்னபயன்; பார்த்தவிடத் திருக்கக் கண்ட பலரும் பழித்தால் என்னபயன் ஒருபயனு மில்லை என்பது.

பார்த்த என்னும் பெயரெச்சத்தீறு தொகுக்கப்பட்டது. பார்த்த இடமென்றது அடக்கஞ்செய்வதற்கெனக் குறிக்கப்படாத இடம். நன்று குறிப்புவினையெச்சம். இருவினைகளுக்குத் தக்க பலவுருக்களை மாறிமாறிக் கொள்ளலால் உயிரைக் கூத்தனென்றார். நார்த் தொடுத்து நார்த்தலை முன்னே கூறியது உடலினிழிவுபற்றி.

When once the body is bereft of the life, what if it is tied to a rope and dragged on, or embalmed and buried carefully, or thrown into a ditch, or despised by all? (6)

27. *படிமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்*
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித்—தடுமாற்றந்
தீர்ப்பெம்மா னென்றுணருந் தெண்ணறிவாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.

இ-ள். ஓர் யாக்கை - இழிதன்மையாகிய உடல், மழை - மழையில், பல் - தோன்றி மறைகின்ற, மொக்குளின் - குமிழியைப்போல, பல்காலும் - பலமுறையும், தோன்றி - காணப்பட்டு, கெடும் - அழியும், இது என்று - இத்தன்மையதென்று, எண்ணி - (அவ்வுடலை) அவமதித்து, தமோற்றம் - பிறவித்தமோற்றத்தை, யாம் தீர்ப்பெம் என்று - நாம் ஒழிப்போமென்று, உணரும் - (தீர்க்கும் வழியை) ஆராய்கின்ற, திண் அறிவாளரை - கலங்காத அறிவை ஆளுதலுடையாரை, நீள்நில த்தின்மேல் - பெரிய பூமியில், நேர்ப்பார் யாவர் - ஒப்பார்யாவர், (ஒருவருமிலர்) எ-று.

பொ-ரை. இழிதன்மையாகிய உடல் மழையில் தோன்றி மறைகின்ற குமிழியைப்போலப் பல முறையும் காணப்பட்டு அழியும். இத்தன்மையதென்று அவ்வுடலை அவமதித்துப்பிறவித் தமோற்றத்தை நாம் ஒழிப்போமென்று தீர்க்கும் வழியை ஆராய்கின்ற கலங்காத அறிவை ஆளுதலுடையாரைப் பெரியபூமியில் ஒப்பார்யாவர்; ஒருவருமிலர் என்பது.

அருவமாயும் நித்யமாயுமுள்ள உயிர்க்குத்தோன்றலும் கெடுதலுமில்லாமையால், அத்தோன்றலையும் கெடுதலையும் உருவமாயும் அநித்தமாயுமுள்ள உடலின்மேலேற்றித் 'தோன்றிக்கெடும்' என்றும், கெடாது நிற்பதாகிய ஒருடலின்மையாலும் உயிர் தான்செய்த வினைப்பயனை உடலோடு கூடிநின்றே அநுபவிக்தல் வேண்டுமாதலாலும் 'பல்காலும்' என்றும் கூறினர். ஒன்றென்னும் வாயறைப் பண்பு இழிதனை யுணர்த்தியது. இது என்னும் குறிப்பு வினைமுற்றின் பகுதியாகிய இகரச்சுட்டு தோற்றக் கேடுகளைச் சுட்டிநின்றது.

Who can be compared to the wise who, knowing that the body is like a bubble on the surface of water, try to do things which will help them towards their goal. (7)

28. யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கைநீர் லாய பயன்கொள்க—யாக்கை
மலையாடி மஞ்சுபோற் றோன்றிமற் றுங்கே
நிலையாது நீத்து விடும்.

இ-ள். யாக்கை - உடம்பு, மலை - மலையின்மேல், ஆடும் - உலவுகின்ற, மஞ்சுபோல - மேகம்போல, தோன்றி - (பூமியில்) காணப்பட்டு, ஆங்கே - அத்தோன்றிய நிலையில்தானே, நிலையாது - நிலைதிரிதலால், மற்று நீத்துவிடும் - (பூமியை) நீக்கிவிடும், (ஆதலால்) யாக்

கையை - உடம்பை, யாப்பு உடைத்து ஆக - உறுதியுடையதாக, பெற்றவர் - (முன்செய்த நல்வினையால்) பெற்றவர்கள், தாம் பெற்ற - தாம் பெற்றுள்ள, யாக்கையால் - அவ்வுடம்பினால், ஆய பயன் - தக்கஅறப் பயனை, கொள்க - கொள்ளக்கடவர். எ-று.

போ-னை. உடம்பு, மலையின்மேல் உலவுகின்ற மேகம்போலப் பூமியில் காணப்பட்டு அத்தோன்றிய நிலையில் தானே நிலைத்திராமல் பூமியை நீக்கிவிடும். ஆதலால் உடம்பை உறுதியுடையதாக முன் செய்த நல்வினையால் பெற்றவர்கள் தாம் பெற்றுள்ள அவ்வுடம்பினால் தக்க அறப்பயனைக் கொள்ளக் கடவர் என்பது

மலையாமெஞ்சை உடலுக்கு உவமித்தமையால் உடல் தோன்று தற்குரிய இடமாகிய பூமி வருவிக்கப்பட்டது. மாதுட யாக்கையை அடைதல் ஒருபேறென்பார் 'பெற்றவர்' என்றும், அதனை வற்புறுத்தற் குத் தாம்பெற்ற 'யாக்கை' என்றும், பிறப்பின்பயன் அறனே ஆதலால் அதனைப் 'பயன்' என்றும் கூறினர். யாக்கையாலென்னும் மூன்றனுருபு கொள்க என்னும் வியங்கோள் கொண்டது. மற்று வினை மாற்றில் வந்தது.

Let those who have got a strong and healthy body try to make proper use of it and realize the good which it is capable of producing, for the body is like the mist on the mountain top and is liable to dissolve itself soon. (8)

29. புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
யின்னினியே செய்க வறவினை—யின்னினியே
நின்ரு னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்ரு னெனப்படுத லால்.

இ-ள். இன்னினியே - இப்போதே, நின்ரான் - நின்றனன், இருந்தான் - உட்கார்ந்தான், கிடந்தான் - படுத்தான், தன்கேள் - தன் சுற்றத்தார், அலற - அலறியழும்படி, சென்ரான் எனப்படுதலால் - இறந்தானென்று சொல்லப்படுதலால், புல் நுனிமேல் - புல்லினது நுனியிலுள்ள, நீர்போல - நீரைப்போல, நிலையாமை என்று - (உடல்) நிலையில்லாமையையுடைய தென்று கருதி, இன்னினியே - உடலோடு கூடியிருக்கின்ற பொழுதே, அறவினை - அறத்தொழிலை, செய்க - செய்துகொள்க, எ-று.

போ-னை. இப்போதே நின்றனன், உட்கார்ந்தான், படுத்தான், தன் சுற்றத்தார் அலறியழும்படி இறந்தானென்று சொல்லப்படுத

லால் புல்லினது நுனியிலுள்ள நீரைப்போல உடல் நிலையில்லாமை யையுடைய தென்று கருதி உடலோடுகூடி இருக்கின்றபொழுதே அறத்தொழிலைச் செய்துகொள்க என்பது.

ஒருகாலத்திற்றானே நிற்றலும், இருத்தலும், கிடத்தலும் செல்லுதலுமாகிய பலதொழிலும் நடத்தல் கூடாதாதலால் ஒருவனிருந்த நிலையைக் கண்டோர் கூறுங் கூற்றாகின்றன, இருந்தான், கிடந்தான், சென்றனனைக் கூறினர். இன்னினியே என்றதனை இருந்தான் முதலியவற்றோடுங் கூட்டுக. இன்னே என்பதுபோல இன்னினி நிகழ் காலமும் உணர்த்தும் இடைச்சொல். ஏ இரண்டும் பிரிநிலை. நிலையாமை என்னுங் குணத்தின்பெயர் குணியின்மேல் நின்றது ஓர் மரபுவழு வமைதி. அதிகாரத்தால் வந்தியையுதலால் யாக்கை எனமிகைபடக் கூறுதொழிந்தார்.

Think that the body is like a dew-drop on the blade of a grass, and do at once deeds of virtue. We have heard many a time of a man that he was just then alive, he was standing there, sitting here, lying there, alas! he is no more!! (9)

30. கேளாதே வந்து கிளைகளா யிற்றொன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரமெழியீச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

இ-ள். இல் - ஓர் குடும்பத்தில், கேளாதே - உணராதவகையே, வந்து - (கருவில்) சேர்ந்து, கிளைகள்ஆய்த்தோன்றி - முறையுடையார்களாய்ப் பிறந்து, மரன் - மரத்தில், சேக்கை - தன்கூடு, ஒழிய - தன்னினீங்கும்படி, சேண் - நெடுந்தூரவிடத்தில், வாளாதேநீங்கு - சொல்லாமலே நீங்கிச் செல்லுகிற, புள்போல - பறவையைப்போல, யாக்கை - தம்மூடல், தமர்க்கு - உறவினரிடத்து, ஒழிய - தம்மினீங்கும்படி, நீத்து - நீக்கிவிட்டு, வாளாதே - உணராதவகையே, போவர் - செல்வார், மாந்தர்கள் - மனிதர்கள், எ று.

பொ-ரை. ஓர் குடும்பத்தில் உணராதவகையே கருவில் சேர்ந்து முறையுடையார்களாய்ப் பிறந்து, மரத்தில் தன்கூடு தன்னினீங்கும்படி நெடுந்தூரவிடத்தில் சொல்லாமலே நீங்கிச் செல்லுகிற பறவையைப்போல, தம்மூடல் உறவினரிடத்து தம்மினீங்கும்படி நீக்கிவிட்டு உணராதவகையே செல்வார் மனிதர்கள் என்பது.

கேளாது, வாளார்து என்பன மௌனமும், அவை தாமும் பிறரும் உணரார்வகையின்மேல் நின்றன, இது இலக்கணை; து பகுதிப்பொருள் விகுதி. தமக்கெனச் சுதந்தரமின்றி இருவினைவயப்பட்டு வந்துதோன்றலும், போதலும்ஆதலால் கேளாதேவந்துதோன்றி, வாளாதேபோவர் என்றார். புள் முட்டையிட்டுப் பொரித்தலுக்காகக் கட்டிய கூட்டில் அவ்வினை செய்துமுடித்தபின் அக்கூட்டைவிட்டு நீங்குதல்போல, மாந்தர்கள் இருவினைப் பயனை அநுபவித்தற்காக வந்து தோன்றி, அப்பயனை அநுபவித்தபின் அவ்வுடலை விட்டு நீங்குவரென்பது. புள் தொழிலுவமம். தமிழ்க்கு என்னும் நான்காவது ஏழாவதனிடப் பொருளது.

Men are born in a family and live as relations, and after all leave them and go away leaving their body alone to their relatives, like birds which leave for good their nests on the tree. (10)

Chapter IV—The Power of Virtue.

4-ஆம் அதிகாரம்: அறன்வலியுறுத்தல்.

அஃதாவது நிலைபேறில்லாத செல்வம், இளமை, யாக்கைபோலாகாமல் இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றையுந் தருவதாகிய அறத்தினது நிலைபேற்றைக் கூறுவது. அதிகாரமுறைமையும் இதனுல் விளங்கும்.

31. அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறுஅர் புறங்கடை—பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தாற் றவஞ்செய்யா தார்.

இ-ள். மேலைத்தவத்தால் - முற்பிறப்பிற்செய்த தவத்தின் பயனுகிய செல்வச் செருக்கால், தவம் செய்யாதார் - (மறுமைக்குவேண்டிய) தவத்தைச் செய்யாமல் பிறந்தவர், அகத்தாரே - இல்வாழ்க்கையுடையாரே, வாழ்வார் என்று எண்ணி - உயிர்வாழ்பவரொன்று மதித்து, அண்ணாந்து - தலை நிமிர்ந்து, நோக்கி - (அவர் மனையின் மேனிலையைப்) பார்த்து, தாம் புகப்பெறுர் - தாமாக நுழைதலைப்பெறுமலி, புறங்கடை - தலைவாயிலை, பற்றி - பிடியாகின்று, மிக வருந்தி - மிகுதியாக வருந்தாகின்று, இருப்பர் - யாதொரு முயற்சியு மில்லாதிருப்பர், எ - று.

பொ-ரை. முற்பிறப்பிற் செய்த தவத்தின் பயனுகிய செல்வச் செருக்கால் மறுமைக்கு வேண்டிய தவத்தைச் செய்யாமல் பிறந்தவர் இல்வாழ்க்கையுடையாரே உயிர்வாழ்பவரென்று மதித்து, தலைகிமிர்ந்து அவர் மனையின் மேனிலையைப் பார்த்து, தாமாக ஏறுதலைப் பெருமல் தலைவாயிலைப் பிடியாநின்று, மிகுதியாக வருந்தாநின்று யாதொரு முயற்சியு மில்லாதிருப்பார் என்பது.

அண்ணாத்தற்குரியது தலையாதலால் அண்ணாந்தென்னுஞ் சினை வினைநோக்கி என்னும் முதல் வினை கொண்ட தெனக. அண்ணாந்து என்னு குறிப்பால் நோக்கி என்பதற்குச் செயப்படு பொருளாக மேனிலை வருவிக்கப்பட்டது. புக எண்ணுஞ் செயவெனெச்சம் தொழிற் பெயர்ப் பொருள்பட நின்றது. புறங்கடை, மீகண் என்பதுபோலப் பின்மூன்றுக்குத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை. ஒருவர் முற் பிறப்பிற் செய்த தவங் காரணமாக மறுபிறப்பிற் செல்வம் அநுபவிப் பர். அவர் அம்மறுமையில் அநுபவிக்கும் செல்வச் செருக்கால் மறுபிறப்பிற்கு வேண்டியதவஞ் செய்யாவிட்டால் அவ் வருபிறப்பில் வறியராவராதலால் 'தவத்தால் தவஞ்செய்யாதார்' என்று தவஞ்செய்யாமைக்குத் தவத்தைக் காரணமாகக் கூறினர். முன்னுள்ள தவம் காரணவாகு பெயர். பொருளில்லான் "செத்த பிணத்திற் கடை" ஆதலால் அகத்தாரே என்னும் ஏ-பிரிநிலை.

Those who do not take to penance now as the result of their good deeds in the former birth, have to lead a domestic life now and have to remain at the outer gate with a dejected mind. (1)

32. ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து
போவாநா மென்னுப் புலைநெஞ்சே—யோவாது
நின்றுஞற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துணை.

இ-ள். நாம் ஆவாம் என்று - நாம பெருகுவோமென்று கருதி, அறம்மறந்து - அறஞ்செய்தலைமறந்து, ஆக்கம் நசைஇ - செல்வப் பொருளே விரும்பாநின்று, நாம் போவாம் - நாம் இறப்போம், என்னு-என்று கருதாத, புலைநெஞ்சே - இழிதன்மையை யுடையமன்மே, ஓவாது - (கெய் தொழிலில்) நீங்காமல், நின்று - தளராமல், உஞற்றி-முயன்று, வாழ்தி எனினும் - வாழ்வாயாகுமி, நின்வாழ் நாள்கள் - உன்னுடைய வாழ்நாள்கள், சென்றன - (வீணே இம்முயற்சியில்

மிகுதியும்) கழிந்தன, செய்வது - (இனி மறுமைக்கு) உன்னல் செய்யப்படுவதனை, உரை - சொல்லாய், எ-று.

போ - மா.. நாம் பெருகுவோமென்று கருதி அறஞ்செய்தலை மறந்து செல்வப்பொருளை விரும்பாநின்று நாம் இறப்பேம் என்று கருதாத இழிதன்மையையுடைய மனமே! செய்தொழிலில் நீங்காமல், தளராமல் முயன்று வாழ்வாயானாலும் உன்னுடைய வாழ்நாள்கள் வீணே இம்முயற்சியில் மிகுதியும் கழிந்தன. இனி மறுமைக்கு உன்னல் செய்யப்படுவதனைச் சொல்லாய் என்பது.

எனவே உடல் மழைமொச்சுளைப் போல்வதாதலால் சாதற்கேழிலன்றி வேறிலதென்பது குறிப்பெச்சம். உளற்றி வாழ்தியெனினுமென இம்மைச்செயலைக்கூறி முடித்து, செய்வதென எதிர்காலத்தால் கூறினமையால் இவ்வினையா லணையும்பெயர் மறுமைக் கருமத்துக்காயிற்று. எனினுமென்ற இழிவுசிறப்பும்மையால் வாழ்தல் நிச்சயமன் றென்பது கருத்து. என்று என்னும் இறந்த காலவினை யெச்சம் சொல்லெச்சம். ஆக்கம் ஒருவன் இம்மையில் ஆகுதற்குக் காரணமாகிய செல்வத்துக்காதலால் காரியவாகுபெயர். புலை பகுதிப் பொருள் விகுதியாகிய ஐயீற்றுப் பண்புப்பெயர். மனம், பிறப்பு வீடென்னும் இரண்டனையும் அடைவதற்குச் சாதனமாவது இம்மானுடயாக்கையோடுகூடி நின்றபோதே ஆதலின் அது கருதித்தான் வாழ்நாளை 'நின் வாழ்நாள்' எனக் கூறுவரெனினுமாம்.

O mind! you think that you can live for ever and acquire wealth and hoard it. You forget to do deeds of charity. You never think for a moment that you would have to leave this world one day or other. Even supposing that you manage to obtain the longest life on earth, you will one day have to go out. Your life is daily being diminished. Say! what are you going to do? (2)

33. வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா
மனத்தி னழியுமாம் பேதை—நினைத்தனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார்.

இ-ள். பேதை - அறிவில்லான், வினைப்பயன் - தினைப்பயன், வந்தக்கால் - தன்னை வந்தடைந்தால், மனத்தின் அழியா - மனத்தில் ஊக்கங்கெட்டு, வெய்ய உயிர்க்கும் - மிகுதியாக மூச்செறிவான்

அதனை - அத்தீவினைப்பயனை, நினைத்து - (நூலளவையால்) ஆராய்ந்து, தொல்லையது என்று - முன்னை வினையாலானதென்று, உணர்வாரே - உணரவல்லவரே, தடுமாற்றத்து - பிறவித் தடுமாற்றத்தினது, எல்லை - எல்லையாகிய வினையை, இகந்து ஒருவுவர் - கடந்து நீங்குவார், எ-று.

பொ - ரை. அறிவில்லான் தீவினைப்பயன் தன்னை வந்தடைந்தால் மனத்தில் ஊக்கங்கெட்டு மிகுதியாக மூழ்கிசிறிவான். அத்தீவினைப் பயனை நூலளவையால் ஆராய்ந்து முன்னை வினையாலானதென்று உணரவல்லவரே பிறவித்தடுமாற்றத்தினது எல்லையாகிய வினையைக் கடந்து நீங்குவார் என்பது.

பைய, வலிய என்பனபோல் வெய்ய என்பது வினையெச்சக் குறிப்பு. மனத்தினழிதல் காரணமாக உயிர்த்தலுளதாவ தாதலால், உயிரா அழியுமென்பனவற்றைப் பின்முன்னாக நிறுத்தி விருதிபிரித்துக் கூட்டி உரைக்க. பேதை பண்பாகுபெயர். தொல்லை என்பதும் அவ்வாகுபெயர். பிறவித் தடுமாற்றத் தொல்லையாவது வினையுள்ள வழியும் பிறவியுள்ளதா மாதலால் அவ்வினையை அத்தடுமாற்றத்துக் கெல்லை என்றார். ஏ - பிரிநிலை.

When a fool comes to enjoy the fruit of his action in the former birth, he can never bear himself up but succumbs to it. The wise understand its nature and suffer it boldly, and bear themselves up cheerfully. (3)

34. அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனு மாற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு.

இ - ள். பெறுதல் அரு - பெறுதல் அருமையாகிய, யாக்கையை - உடம்பை, பெற்ற பயத்தால் - அடைந்த அறப்பயனால், பெரும்பயனும் - பெருமையாகிய தவப்பயனையும், ஆற்றவேகொள்க - மிகுதியாகவே பெறக்கடவரிகள், கரும்பு - கரும்பு, ஊர்ந்த - தன்னை ஆலையிலாட்டியதனிலுண்டாகிய, சாறு - உதவல்போல - சாற்றை உதவுதல்போல, சாலவும் - மிகவும், பின் உதவி - மிறுமைக்குரிய பயனைத்தந்து, அதன் கோதுபோல - அக்கரும்பின் சக்கைபோல, போகும் - ஒழியும், உடம்பு - உடல், எ-று.

பொ - ரை. பெறுதலருமையாகிய உடம்பை அடைந்த அறப் பயனுக் பெருமையாகிய தவப்பயனையும் மிகுதியாகவே பெறக்கடவர் கள். கரும்பு தன்னை ஆலையிலாட்டி. யதனலுண்டாகிய சாற்றை உதவுதல்போல மிகவும் மறுமைக்குரிய பயனைத் தந்து அக்கரும்பின் சக்கைபோல ஒழியும் உடல் என்பது.

ஒருவன் வீடடைதற்குரியது மானுடயாக்கை ஆதலால் 'அரும் பெறல் யாக்கை' என்றும், அதனைப் பெறுதல் முன்செய் நல்வினைப் பயனுதலால் 'பெற்ற பயத்தால்' என்றுங் கூறினர். காரியம் காரணத் தின் பின்னதாதலால் பயன் பின் எனப்பட்டது. அது பண்பாகு பெயர். பெற்றதே பயனுதலால் பெற்ற என்னும் காரணப் பொருட் டாகிய இறந்தகாலப் பெயரெச்சம் பயமென்னுஞ் செயற்பெயரையும், ஊர்ந்த என்னுங் காரணப்பொருட்டாகிய அக்காலப் பெயரெச்சம் சாறு என்னும் காரியப்பெயரையுங் கொண்டன. உதவல் என்பது சொல்லெச்சம். வாளாபயனென்னுது அதனைப் பெருமை என்னும் அடைகொடுத்தோதினமையாலும், உடலுக்குக் கரும்பை உவமை யாக்கினமையாலும் பெரும் பயனென்றது தவத்தை. அரும்பெறல் யாக்கையைப் பெறுதற்குரிய அறப்பயனைக் கொண்டதே அன்றி எனப்பொருள் தரலால் உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. பெரும் பயன் செய்துகொள்ளலாவது விரதங்களினுல் உணவைக் குறைத்தல், கோடையில் வெயிலில் நிற்றல், மழையிலும் பனியிலும் மடி முதலியவற்றில் நிற்றல் முதலிய செயல்களால் உடலை உலர்த்தி, மனத்தைப் பொறிகளின் வழியே போகவொட்டாமல் நிறுத்தல்.

You have got this human form which is rather difficult to get. So try to realize as much good as possible with the help of it. What the body is capable of producing is like the juice of the sugar-cane which will be of use in future, whereas the body is, like the refuse, flung away.

35. கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
தரும்பெழுந்து வேங்காற் றுயராண்—டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்

இ-ள். சிறுகாலை - (கரும்பு) பதனழியாத காலத்தில், கரும்பு ஆட்டி - அக்கரும்பை (ஆலையில்) ஆட்டி., கட்டி - சருக்கரைக் கட்டி யை, கொண்டார் - பெற்றவர், தரும்பு எழுந்து - (அது) தருப்பாதி,

வேம் கால்-(தீயில்) எரியும்போது, ஆண்டு-அதுகண்டவிடத்து, துயர் உழவார்-துன்பப்படார், (அதுபோல) வீழ்ந்து-(விரத முதலியவற்றால்) வருந்தி, உடம்பின் பயன்கொண்டார்-உடம்பாலாகிய அறப்பயனைப் பெற்றவர், கூற்றம் வருங்கால் - யமன் வருகின்றீ மரணகாலத்தில், பரிவது இலர் - (தம்முடலின் கேட்டைக்குறித்து) இரங்குதலில்லார், எ-று.

பொ -ரை. கரும்பு பதனழியாத காலத்தில் அக்கரும்பை ஆலியில் ஆட்டிச் சீருக்கரைக் கட்டியைப் பெற்றவர் அது தூரும்பாகி தீயில் எரியும்போது அதுகண்டவிடத்துத் துன்பப்படார். (அதுபோல) விரத முதலியவற்றால் வருந்தி உடம்பாலாகிய அறப்பயனைப் பெற்றவர் யமன் வருகின்ற மரணகாலத்தில் தம்முடலின் கேட்டைக்குறித்து இரங்குதலில்லார் என்பது.

சிறுகாலை என்பது விடியல், அதுபத னழியாத காலத்துக்காயிற்று. கட்டி தொழிலடியாகப் பிறந்தபெயர், இ-வினைமுதற் பொருண்மை வீகுதி. கட்டுதல் - இறுகுதல். உடம்பின்பயன் மூன்றனுள் கருவிப்பொருண்மையில் வந்த ஆரும்வேற்றுமைத் தொகைப்புணர்ச்சி. யோகியர்க்கும் வாழ்நாள் முடிவில் யமதரிசனமா மென்பது நூற்றுணிபாதலால் 'கூற்றம் வருங்கால்' என்றார். இது வேற்றுப் பொருள் வைப்பென்னும் அணி.

Those who have got the juice from the sugar-cane and converted it into sugar-candy, would never feel sorry when the refuse (presed sugar-cane) is burnt away. Similarly those who have acquired what they should have acquired from the possession of this body, will never feel sorry when it is separated by the God of Death. (5)

35. இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென்—றெண்ணி
யொருவுமின் தீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்.

இ-ள். கூற்றம் - யமன்வருதல், இன்றுகொல் - இவ்விளமையிலோ, அன்றுகொல் - மூப்பின் காலத்திலோ, என்றுகொல் - இடைநின்ற காலத்திலோ, என்னாது-என்று எண்ணமல், பின்றையே - பிடரினிடத்தே, நின்றது என்று எண்ணி - நின்றன னென்று கருதி, மாண்டார் - மேன்மையான அறிவுடையாரால் விலக்கிய, தீயவை -

தீயகருமங்களை, ஒருவுமின் - நீக்குங்கோள், ஒல்லும் வகையால் - செய்யக்கூடியவகையால், அறம் - (அவர்களால் விதித்த) நற்கருமங்களை, மருவுமின் - தழுவி நடவுங்கோள், எ-று.

பொழிப்புரை. யமன் வருதல் இவ்விளமையிலோ மூப்பின் காலத்திலோ இடைநின்றகாலத்திலோ என்று எண்ணுமல் பிள்ளையிடத்தே நின்றுளனென்று கருதி மேன்மையான அறிவுடையோரால் விலக்கிய தீயகருமங்களை நீக்குங்கோள்; செய்யக்கூடிய வகையால் அவர்களால் விதித்த நற்கருமங்களைத் தழுவி நடவுங்கோள் என்பது.

வருதல் சொல்லெச்சம். பகுதிப்பொருள் விகுதியாகிய தல் என் பதன் தகரம் றகரமாய், ஐகாரச்சாரியை ஏற்றுநின்ற பின்னை என் னும் பண்புப்பெயர் ஆகுபெயராய்ப் பிடரை யுணர்த்திற்று. மறுபிற ப்பும் இருவினைப்பயனும் கடவுளு மில்லையென்றும், இன்பமும் பொருளும் ஒருவனுற் செய்யப்படுவனவென்றுங் கூறும் உலோகாயி தர் மூதலியோராற் கூறப்பட்டனவற்றை நீக்குதற்கு 'மாண்டாரறம்' என்றார். ஒல்லும்வகை மருவுதலாவது இல்லறத்தைப் பொருளளவுக் கேற்கவும் துறவறத்தை உடலினிலைமைக் கேற்கவும் தழுவி நடத்தல். கொல் ஐயப்பொருளது.

"What day will Yama come? Today! To-morrow!"—Don't begin to discuss like this. But think that Yama is always behind you, get yourself clear away from sin, and do deeds of charity. (6)

37. மக்களா லாய பெரும்பயனு மாயுங்கா
லெத்துணையு மாற்றப் பலவாஞற்—றொக்க
வுடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்தூண்ணப் பண்ணப் படும்.

இ-ள். மக்களால்-மக்கட்பிறப்பினுல், ஆய-உண்டாகுதற்குரிய, பெரும்பயனும்-பெருமையாகியபயன்களும், ஆயுங்கால்-(நூல்களால்) ஆராயுமிடத்து, எத்துணையும்-எவ்வளவு சிறிதும், ஆற்ற-செய்வதற்கு, பல - பலவாயிருக்கின்றன, ஆதலால்-ஆயின், தொக்க-(எழு தாதுக்க ளால்) கூடிய, உடம்பிற்கே-உடலுக்கே, ஒப்புரவு-(ஒத்த) நன்மை களை, செய்து ஒழுகாது-செய்து வாழாமல், உம்பர்-துறக்கத்தில், கிடந்து-நீங்காதிருந்து, உண்ண - (சுகத்தை) அநுபவிக்கும்படி, பண்ணப் படும்-(உயிர்க்குரிய நன்மையாகிய சில அறங்களைச்) செய்தலே தருமி யாம், எ-று.

பொ-ரை. மக்கட் பிறப்பினால் உண்டாகுதற்குரிய பெருமையாகிய பயன்களும் நூல்களால் ஆராய்புமிடத்து எவ்வளவு சிறிதும் செய்வதற்குப் பலவாயிருக்கின்றன. ஆயின் ஏழு தாதுக்களால்கூடிய உடலுக்கே ஒத்த நன்மைகளைச் செய்து வாழாமல் துக்கத்தில் நீங்கா திருந்து சுகத்தை அநுபவிக்கும்படி உயிர்க்குரிய நன்மையாகிய சில அறங்களைச் செய்தலே தகுதியாம் என்பது.

மக்கள் பொருளாகுபெயர். மூன்னுள்ள உம்மை உயர்வு சிறப்பு. பின்னுள்ள உம்மை இழிவு சிறப்பு. மூன்றே பல என்றும், உடம்பிற்கே ஒப்புரவு என்றும் கூறினமையால் உயிர்க்கு ஒத்த நன்மைகளென்பது வருவிக்கப்பட்டது. பல - பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. எ-பிரிநிலை.

What men can do in this world is of great difference in kind and degree. Don't do things that will be of use only to the life in this world, but see that you do what can help you to the other world. (7)

38. உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

இ-ள். உறக்கும் துணையது-சுருங்கிய அளவினதாகிய, ஓராலம் வித்து-சிறிய ஆலம்விதை, ஈண்டி-மூளைத்து வளர்ந்து, இறப்ப-(மற்ற மரங்களினும்) மிகுதியாக, நிழல் பயந்தால் ஆங்கு - நிழலைத் தந்தாற் போல, தான்-(செய்யப்படும்) அறம், சிறிது ஆயினும்-சிறியதா யிருப்பினும், தக்கார்கை - (அறிவு ஒழுக்கங்களால்) தகுதியுடையாரது கையில், பட்டக்கால்-படுமாயின், அறப்பயனும்-அவ்வறத்தின் பயனும், வான்சிறிது ஆக-ஆகாயத்தைச் சிறியதாகும்படி, போர்த்துவிடும்-தனக்குள்ளாக்கிக்கொள்ளும், எ-று.

பொ-ரை. சுருங்கிய அளவினதாகிய சிறிய ஆலம் விதை மூளைத்து வளர்ந்து ஏற்ற மரங்களினும் மிகுதியாக நிழலைத் தந்தாற்போல, செய்யப்படும் அறம் சிறியதாயிருப்பினும் அறிவு ஒழுக்கங்களால் தகுதியுடையாரது கையிற் படுமாயின் அவ்வறத்தின் பயனும் ஆகாயத்தைச் சிறியதாகும்படி தனக்குள்ளாக்கிக்கொள்ளும் என்பது.

உறக்கு சுருக்கமென்னும் குறிப்புணர்த்தும் உரி. உறங்குமென்பது உறக்குமென வலித்தலாயிற் றெனக்கொண்டு, உறங்கும் துணை

யது - உறங்கிவிழுங் காலத்தின் அளவினதாகிய என உரைத்துமாம். நிழற்பயந்தாங் கென்பதில் ஏகாரம் சந்த இன்பப்பொருட்டுத் திரிந்தது. முடிவிலாத பயனைத் தருமென்பதனை 'வான்சிறிதாப்போர்த்து விடும்' என்பது இலக்கணை. அவ்வறம் தன்பயனைத் தராதிராதாதலால் போர்த்து விடும்' என்றார்.

The Banyan seed, small as it is, when thrown in the proper soil, grows to a huge size and gives shelter to many at a time. So also, however small be your charity, when it is given to the worthy people, it enlarges itself and makes heaven itself look small. (8)

39. வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

இ-ள். வைகலும் - நாள்தோறும், வைகல் - பொழுது கழிதலை, தம் வாழ்நாள்மேல் - தமது ஆயுளின்மேல், வைகுதல்வைத்து - தங்குதலாக வைத்து, வைகலை - அப் பொழுது கழிவை, உணராதார் - உணருமியல் பில்லாதவர், வைகலும் - தினமும், வைகல்வர - பொழுது கழிவுவரா நிற்க, கண்டும்-கண்கூடாகப் பார்த்திருந்தும், அஃது உணரார் - அப்பொழுது கழிவை உணர்ந்து துன்புறுமல், வைகலும்-தினமும், வைகலை - அப்பொழுது கழிவை, வைகும் என்று - (முட்டின்றி) கழியா நிற்குமென்று, இன்புறுவர் - மகிழ்வார், எ-று.

பொ-ரை. நாள்தோறும் பொழுது கழிதலைத் தமது ஆயுளின் மேல் தங்குதலாக வைத்து அப் பொழுது கழிவை உணருமியல்பில்லாதவர் தினமும் பொழுது கழிவுவரா நிற்கக் கண்கூடாகப் பார்த்திருந்தும், அப்பொழுது கழிவை உணர்ந்து துன்புறுமல் தினமும் அப்பொழுது கழிவை முட்டின்றி கழியா நிற்குமென்று மகிழ்வார் என்பது.

வைகற்றம் என்பதில் றகரம் சந்தவின்பப் பொருட்டுவந்த விரித்தல் விகாரம். மூன்றும் அடியினீற்றில் நின்றவைகுதல் தங்குதலென்னும் பொருளது, மற்ற வினைகள்கள் நாள்கழிதலென்னும் பொருளன். பொழுது கழிதலைத் தம் வாழ்நாளில் வைத்துணர்வாராயின் இன்புறுமல் விரைந்து அறஞ்செய்வ ரென்பது குறிப்பெச்சம். இது சொற்பொருட்பின் வருநிலை.

Daily a man may observe that that day is gone and is never to come back; he must have sense to see that that day is a part of his life snatched away from him. But some, though they see that days come and go, never take into their heads that they form part of their life and that their life is diminished by so much daily, but feel very glad of passing their days in that way. (9)

40. மானங் வருங்கல நீக்கி யுயிரவென் னு
மீன விளிவினுல் வாழ்வேன்மன்—ஈன்த்தா
னூட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

இ-ள். ஈனத்தால் - இழிதொழிலினால், ஊட்டியக்கண்ணும் - உண்பித்த விடத்தும், இவ்வுடம்பு - இந்த உடம்பு, உறுதிசேர்ந்து - தளராமையை யடைந்து, நீட்டித்து - (ஆயுளை) நீள்வித்து, நிற்கும் எனின் - நிலைக்குமாஞல், மானம் - மானமாகிய, அருகலம்-(இழந்தால் பெறுதல்) அருமையாகிய அணியை, நீக்கி - விடித்து, இரவு என்னும் - இரத்தலென்று சொல்லப்படும், ஈனம் - அவமதிப்பாகிய, இளிவினுல் - இழி தொழிலினால், வாழ்வேன்மன்-உயிர்வாழ்வேன், எ-று.

போ-வை. இழி தொழிலினால் உண்பித்த விடத்தும் இந்த உடம்பு தளராமையை யடைந்து ஆயுளை நீள்வித்து நிலைக்குமாஞல் மானமாகிய (இழந்தால் பெறுதல் அருமையாகிய) அணியை விடித்து இரத்தலென்று சொல்லப்படும் அவமதிப்பாகிய இழிதொழிலினால் உயிர் வாழ்வேன் என்பது.

மற்ற அணிபோலக் கள்வர் முதலியோரால் கவரப்படாமையையும், எக்காலத்தும் உளதாவதாகிய தன்மையையு முடையதாய்த் தன்னை உடையானை அழகுசெய்தலால் மானத்தை 'அருங்கலம்' என்றார். நிலைத்தலில்லாத உடம்பைப் பாதுகாத்தற்பொருட்டு நிலைத்தலுடைய மானத்தின்மீது நீக்கி வாழ்தலென்னும் பொருள் தருதலால் மன் ஒழியிசைக்கண் வந்தது. இளி என்பதும், பின்னுள்ள ஈனமென்பதும் பண்பாகுபெயர்கள். உடல் நிற்பதற்குக் காரணமாகிய ஆயுளென்னுஞ் செய்ப்படுபொருள் நீட்டித்தென்னும் வினையெச்சத்துக்கு வருவித்துரைக்கப்பட்டது.

If it can be guaranteed that this body can endure for a very long time by feeding it by begging, then at least I can give up my dignity and honour, and take to begging, mean as it is. (10)

Chapter V—The Impurity of the Body.

5-ம் அதிகாரம்: தூய்மைதன்மை.

அஃதாவது மாதரை விரும்பாத சுத்தராந்தன்மை. பொதுவகை யால் அறஞ்சுவலி யுறுத்தல் கூறி, இனிச் சிறப்புவகையால் துறவு கூறுவாராதலால் அதற்கு முற்றும் பகையாகிய அவ்விருப்பத்தை ஒழித் தல் வேண்டுமென்னுங் கருத்தால் அவ்விருப்பம் வைத்தற்குரிய மாதர் தீமைவைக் கூறுகின்றமையின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

41. மாக்கேழ் மடநல்லா யென்றற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ லெய்யதோர் புக்கில்—யாக்கைக்கீ
ரீச்சிற கன்னதோர் தோலினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்.

இ-ள். ஓர் ஈச்சிறகு - சிறிய ஈயினது சிறகை, அன்னது - ஒத்த தாகிய, ஓர் தோல் - சிறிதுதோல், அறினும் - அறுந்தாலும், காக்கை - (அப்புண்ணைக் குத்தவரும்) காக்கையை, கடிவது - ஓட்டுவதாகிய, ஓர் கோல் - ஒரு சிறுகொம்பு, யாக்கைக்கு - (நிலையாததாகிய) உடலுக்கு, வேண்டும் - வேண்டப்படும், (அப்படியிருக்க) மா-(நிறத்தாலும் மென் மையாலும்) மாந்தளிர், கேழ் - ஒப்பாகிய, மடம் நல்லாய் - இளமை வாய்ந்த சிறந்த அழகுடையாளே, என்று அரற்றும் - என்று கதறுகி ன்ற, சான்றவர் - (கல்வி யறிவு கேள்விகளால்) நிறைவில்லாதவர், நொய்யது - மிகச் சிறியதாகிய, ஓர் புக்கில-ஒப்பற்ற நிலைத்தவீட்டை, நோக்கார்கொல் - (தம்மூயிர்க்குக்) கருதார்களோ, எ-று.

பொ-ரை. சிறிய ஈயினது சிறகை ஒத்ததாகிய சிறிது தோல் அறுந்தாலும் அப்புண்ணைக் குத்தவரும் காக்கையை ஓட்டுவதாகிய ஒரு சிறுகொம்பு நிலையாததாகிய உடலுக்கு வேண்டப்படும். அப்படி யிருக்க நிறத்தாலும் மென்மையாலும் மாந்தளிர் ஒப்பாகிய இளமை வாய்ந்த சிறந்த அழகுடையவளே என்று கதறுகின்ற கல்வியறிவு கேள்விகளால் நிறைவில்லாதவர் மிகச் சிறியதாகிய ஒப்பற்ற நிலைத்த வீட்டைத் தம்மூயிர்க்குக் கருதார்களோ என்பது.

மாக்கேழ் என்பதற்குத் திருமகளொப்பாகிய என உரைத்தலு மாம். மடநல்லாய் என்பதைப் பண்புத்தொகைநிலைத் தொடராக்கி மடமாகிய நல்லாய் என உரைத்தலே அன்றி, மடமென்னும் எழு வாய் வருமொழியின் முதனிலையாகிய நல் என்பதனோடு முடிந்ததாகக் கொண்டு, நிணவழுவமைதி யாக்கி, இளமை மிக்காய் என உரைத்

தலும் பொருந்தும். இம்மைப் பயன் முதலியவற்றைத் தராமையால் புனைந்துரைத்தலே 'நீரற்றும்' என்றும், நோக்குதலினது சிறுமையைப் புக்கிலின்மேலேற்றி 'நொய்யதோர் புக்கில்' என்றும் கூறினர். அவ்வரற்றுமென்றி குறிப்பால் சான்றவரென்னும் இறந்தகால வினைப்பெயர் சான்பிலாருக் காயிற்று. கொல் ஒருபால் நிகழ்ந்த ஐயப்பொருளது, புக்கில் ஒருசொற்றன்மையது.

Even when a little flesh as big as a fly's wing, is cut off from the body, a stick is needed to scare away the crows (that might possibly come to tear off the flesh). The lusty address a woman in a very fondling tone, but the wise know the nature of the body and are never mindful of it. (1)

42. தோற்போர்வை மேலுந் தொளைபலவாய்ப் பெய்யும் மறைக்குஞ், மீப்போர்வை மாட்சித் துடம்பானுன்—மீப் போர்வை, பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப், பைம்மறியாப் பார்க்கப் படும்.

இ-ள். தோல் போர்வைமேலும் - தோலாற்சமைந்த போர்வையின் மேலிடத்தும், பல தொளையாய் - பலதொளைகளை யுடையதாகி, பொய் - அருவருக்கத்தக்க உறுப்புகளை, மறைக்கும் - மறையச்செய்யும், மீப்போர்வை - மேற்போர்வையால், மாட்சித்து-(விரும்பத்தகும்) பெருண்மையுடையது, உடம்பு - உடல், ஆனல் உம் - (அது) அப்பெருமையை யுடையதா யிருப்பினும், மீப்போர்வை - அம்மேற் போர்வையால், பொய் - அவ்வருவருக்கத்தக்க உறுப்புகளை, மறையா - மறையவைத்து, காமம் - (அவ்வுடம்பினிடத்துக்) காமத்தை, புகலாது - கருதுதல் செய்யாமல், அதனை - அம்மேற்போர்வையை, பை-பையமறித்துப் பார்ப்பதுபோல, மறியா - மறித்து, மற்றுப்பார்க்கப்படும் - (மனத்தால்) நோக்குதலே தகுதி, எ-று.

பொ-ரை. தோலாற்சமைந்த போர்வையின் மேலிடத்தும் பல தொளைகளையுடையதாகி அருவருக்கத்தக்க உறுப்புகளை மறையச்செய்யும் மேற்போர்வையால் விரும்பத்தகும் பெருமையுடையது உடல்; அது அப்பெருமையை யுடையதாயிருப்பினும், அம்மேற்போர்வையால் அவ்வருவருக்கத்தக்க உறுப்புகளை மறையவைத்து அவ்வுடம்பினிடத்துக் காமத்தைக்கருதுதல் செய்யாமல் அம்மேற்போர்வையைப் பையை மறித்துப் பார்ப்பதுபோல மறித்து மனத்தால் நோக்குதலே தகுதி என்பது.

பார்ப்பாராயின் மாக்தேழ் மடநல்லா யென்றரற்றுரென்பது கருத்து. பேதை கண்ணுக்கினிதாகிய மீப்பேர்வையாலாகிய மாட்சியை உண்மையெனக் கொள்ளுதலால் அருவருக்கும் உள்ளுறுப்புகளைப் 'பெரும்' என்றார். உள்ளே பல தொளைகளையுடையதா யிருப்பதும் அன்றி எனப் பொருள் தரலால் மேலும் என்ற உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. ஆனுலென்பதனீற்றில் உயர்வு சிறப்பும்மை தொகுத்தல். மறையா - தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாயினும், இங்குப் பிறவினையாய் நின்றது. மறையவைத்தென்றது நினையாமல் வைத்தென்பதனை. மற்று வினைமாற்றுப் பொருளது. ஆயென்னும் வினையெச்சம் மாட்சித்தென்னுங் குறிப்பு வினைமுற்றையும், மறையா என்னும் செய்யா என்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம் புகலாது என்னும் எதிர்மறை வினையெச்சத்தின் முதனிலையையுங் கொண்டன. தொளை பலவாயென்பது குணியைக் குணமாகக் கூறுவதோர் மரபுவழுவமைதி.

This body has a covering of skin. It has got many holes all over. The outer covering screens from sight all the ugly looking matter inside the body. One should not cherish fond desire to such a thing, but should judge of its nature from its inner view. (2)

43. தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வெழிலியுமே—யெக்காலு
முண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

இ-ள். பெரியோர் - பேரறிவுடையோர், எக்காலும் - அலங்காரம் செய்துகொண்டகாலத்தும் செய்துகொள்ளாக்காலத்தும், வினை - பலவகைத் தொழிலாற்சமைத்த, உண்டி-உணவுப்பொருள்கள், உள்-உள்ளிடத்து, உறைக்கும் என - உறைக்குமென்று, கண்டு - உணர்ந்து, கைவிட்ட - முற்றும் விட்ட, மயல் - (பெண்ணுருவிய) தருப்பு, தக்கோலம் - தக்கோலமரத்தின் மலரை, தின்று - (மணமுண்டாம் படி) மென்று, தலை நிறைய - தலையில் நிரம்ப, பூச்சூடி - மலர்களைத் தரித்து, பொய்க்கோலம் - தனக்கியற்கையல்லாத மற்ற அலங்காரத்தை, செய்ய - செய்துகொள்வதினால், ஒழியுமே - (அவ்வுண்டி உள் ளுறைத்தல்) ஒழிந்துபோகுமோ போகாது, எ-று.

பொ-னை. பேரறிவுடையோர் அலங்காரம் செய்துகொண்ட காலத்தும் செய்துகொள்ளாக் காலத்தும் பலவகைத் தொழிலாற்

சமைத்த உணவுப்பொருள்கள் உள்ளிடத்து உறைக்குமென்று உணர்ந்து முற்றும் விட்ட பெண்ணுகிய தருமம்பு தக்கோலமரத்தின் மலரை மூணுமுண்டாம்படி மென்று, தலையில் நிரம்ப மலர்களைத் தரித்து, தனக்கியற்கையல்லாத மற்ற அலங்காரத்தைச் செய்துகொள்வதினால் அவ்வுண்டி உள்ளுறைத்தல் ஒழிந்துபோகுமோ போகாது என்பது.

கோலத்துக்குரிய மற்ற அணியாடைகளைத் தரித்தல் முதலியவை அடங்கப் 'பொய்க்கோலம்' என்றார். தக்கோலம் முதலாகுபெயர். பொய்ம்மை இங்கு இயற்கையல்லாமைக் காயிற்று. ஏ எதிர்மறை ஆதலால் பொய்க்கோலத்தைக் கண்டு மகிழாமல் உண்டியுள்ளுறைக்கும் புண்ணுடலென உண்மையுணர்ந்து துறவுகொள்க என்பது இசையெச்சம்.

The wise have learnt that the body is ever destined to give out a bad and disagreeable smell as the result of the digestive process of the food taken, and have consequently abandoned it. If one chew aromatic drugs and dress his hair with fragrant flower, will the body cease to give out disagreeable odour? (3)

44. தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற—விடுவேனே
வுண்ணீர் கலந்தக்கா னுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

இ-ள். உள்நீர் - உள்ளிடத்துள்ள நீர், கலந்தக்கால்-(நோயால்) நீக்கிவிடப்பட்டால், நுங்குசூன்றிட்டது அன்ன - நுங்கைத்தோண்டியதை ஒத்த, கண் நீர்மை - கண்ணினதுசெயலை, கண்டு - உணர்ந்து, ஒழுகுவேன் - (துறவு வழியில்) நடப்பேனுகிய நான், (உருவிஞல்) தெள்நீர் - தெளிவாகிய நீரில் பூத்த, குவளை - குவளைமலர், (மெய்யாலும் பிறழ்தற் றொழிலாலும்) பொருகயல் - போர்செய்கின்ற சேல்மீன், (மெய்யாநீரும் உருவுதற்றொழிலாலும்) வேல் - வேலாயுதம், என்று - என்று (பெண்ணினுடைய கண்ணைச்) சொல்லி, கண்இல் - அறிவில்லாத, புல்மாக்கள் - இழிவாகிய மாந்தர்கள், கவற்ற - (என் மனத்தைக்) கவலைப்படுத்தலால், விடுவேனே-(என் ஊக்கத்தை) விடுவேனேவிடேன், எ-று.

பொ-ரை. உள்ளிடத்துள்ள நீர் நோயால் நீக்கிவிடப்பட்டால் நுங்கைத் தோண்டியதை ஒத்த கண்ணினது செயலை உணர்ந்து துறவு வழியில் நடப்பேனுகிய நான் (உருவிஞல்) தெளிவாகிய நீரில் பூத்த

குவளைமலர் (மெய்யாலும் பிறழ்த்தற்றொழிலாலும்) போர் செய்கின்ற சேல்மீன் (மெய்யாலும் உருவுதற்றொழிலாலுக்) வேலாயுதம் என்று பெண்ணினுடைய கண்ணைச் சொல்லி அறிவில்லாத இழிவாகிய மூர்த்தர்கள் என் மனத்தைக் கவலைப்படுத்தலால் என் ஊக்கத்தை விடவேனே விடேன் என்பது.

தெளிவு ஆழநீர்க்குண்மையால் குவளையினது செழுமைதோன்றத் 'தெண்ணீர்க்குவளை' என்பாராயினர். குவளை முதலாகுபெயர். ஓ எதிர்மறை. தங்கு தொழிலாகுபெயர். தொழிலும் பண்பினு ளடங்குதலால் குழிதற்றொழில் நீர்மை எனப்பட்டது. கவற்றல் கண்ணைப் புனைந்துரைக்குஞ் சொல்லால் கேட்போர்க்கு அக்கண்ணினிடத்து விருப்பமுண்டாக்கல்.

If those who are blind to the true state of things, say that woman's eye is like that of a lily, or warring carp, or is sharp and bright like javelin, would I accept the statement as true? (Certainly not). When the water is removed, the eye will resemble the palmyra fruit scooped out. I will consider it in that light and never be duped. (4)

45. முல்லை முகைமுதலவன் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற—விடுவேனே
வெல்லாருங் காணப் புறங்காட் டிருந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

இ-ள். எல்லாரும் - யாவரும், காண - விளக்கமாகக் காணும்படி, புறங்காடு - சுடுகாட்டில், உதிர்ந்து உக்க - உதிர்ந்து கிடக்கின்ற, பல் என்பு நீர்மை - பல்லாகிய எலும்பினது தன்மையை, கண்டு - உணர்ந்து, ஒழுகுவேன் - (துறவு வழியில்) நடப்பேனுகிய நான், முறுவல் (பெண்ணினுடைய) பல்லை, முல்லைமுகை என்று - (மெய்யாலும் உருவாலும்) முல்லை அரும்பென்றும், முத்தென்று - (உருவால்) முத்தென்றும், இவை - இவ்வுவமைகளை, பிதற்றும் - விடாது பேசுகின்ற, கல்லாத - கற்றறிவில்லாத, புல்மாக்கள் - இழிவாகிய மாந்தர், கவற்ற - (அவ்வாறு புனைந்துரைத்து என் மனத்தை) கவலைப்படுத்தலால், விடவேனே - (என் ஊக்கத்தை) விடவேனே விடேன், எ-று.

பொ-ரை. யாவரும் விளக்கமாகக் காணும்படி சுடுகாட்டில் உதிர்ந்து கிடக்கின்ற பல்லாகிய எலும்பினது தன்மையை உணர்ந்து துறவு வழியில் நடப்பேனுகிய நான் பெண்ணினுடைய பல்லை மெய்

யாலும் உருவாலும் மூல்லை அரும்பென்றும் உருவால் முத்தென்றும் இவ்வுவமைகளே விடாது பேசுகின்ற கற்றறிவில்லாத இழிவாகிய மூர்க்கர் அவ்வாறு புனைந்துரைத்து என்மனத்தைக் கலவலப்படுத்தலால் என் ஊக்கத்தினை விடுவேனோ விடேன் என்பது.

பிதற்றுதல் ஒரு பொருளையே விடாமல் பேசுதல், "பிடித்தொன்னை விடாதுபேசல் பிதற்றுதலென்றுபேரே" என்னும் நிகண்டாலு முணர்க. கல்லாமை அதன் காரியமாகிய அறிவின்மையின்மேல் நின்றது. எல்லாருமென்றது கல்லாப்புன்மாக்களையும் அன்போல்வாரையும் உதிர்ந்து உக்க ஒரு பொருட் பன்மொழி. மூல்லைமுகை, முத்தென்பவையே அன்றி இப்பெற்றிய ஆய் கழுமுள், முருந்து முதலியவற்றையுங் கூறுகின்றனரென்பார் முத்தென்பவை பிதற்றுமென்னுமல் 'முத்தென்றிவை பிதற்றும்' என்றார். உள்ளத்தினிகழும் விருப்பைக் கண்பார்வையாலும், முறுவல் நகையாலும் புன்மாக்களுக்குப் புலப்படுப்பன ஆதலால் அவ்விரண்டையுங் கூறி, அவற்றுள்ளும் நோக்கத்தின் பின்னே நகை நிகழ்வதாதலால் முதற்கட் கண்ணையும், அதன் பின் முறுவலையும் வைத்தனர். இவ்வாறு மாதருடைய கண்ணையும் பல்லையும் புனைந்துரைத்தல் மரபாதலாலும், கல்வியறிவு பெண்பாலாராற் பெறப்படாமையால் கல்லாப்புன்மாக்கள் ஆண்பாலாரை யுணர்த்தலாலும், அதிகாரத்தாலும் இவ்விருவகையவரும் பெண்பாலாருடையன என உணர்க. மேலே நீர்மை என்றதை இங்குப் பல்லுக்கும் கூட்டுக.

Will I allow fools to lead me astray by their praise that a woman's teeth resemble *mullai* buds, pearls, and so forth? But I will think of them in the state I find them in the burning ground. (5)

46. குடரும் கொழுவுங் குருதியு மென்புந்
தொடருரம்பொடு தோலு—மிடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்று
ளெத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.

இ-ள். குடரும் - குடலும், கொழுவும் - இறைப்பையும், குருதியும் - உதிரமும், என்பும் - எலும்பும், தொடரும் நரம்பொடு தொடர்ந்துள்ள நரம்புகளோடு, தோலும் - (மேலேபோர்த்த) தோலும், இடை இடையே - (எலும்பு நரம்புகளுக்கு) நடுவுநடுவே, வைத்த தடியும் - வைத்த இறைச்சியும், வழும்பும் - நிணமும், ஆம் - ஆகும் (உடல்); இவற்றுள் - குடல் முதலியவற்றுள், எத்திறத்தாள் - எக்கூ

ற்றினள், ஈர்கோதையாள்-(இழிசனரே உங்களால் விரும்பப்பட்ட) வாடாத பூமாலையை அணிந்தாள், எ-று.

பொ-னை. குடலும், இரைப்பையும், உதிரமும், எலும்பும் சேர்டார்ந்துள்ள நரம்புகளோடு மேலேபோர்த்த தோலும் எலும்பு நரம்புகளுக்கு அடிவு கடுவே வைத்த இறைச்சியும் நிணமும் ஆகும் உடல். இழிசனரே! உங்களால் விரும்பப்பட்ட வாடாத பூமாலையை அணிந்தவள் நீ குடல் முதலியவற்றுள் எக்கூற்றினள்? என்பது.

உடலென்பது சொல்லெச்சம். மற்றென்பது அசை. ஆமென்பதைப் பெயரெச்சமாக்கி வரும்புமாகிய இவற்றுளென உரைத்து ஒருமுடிபாக்கினும் பொருந்தும். குடர் முதலியவாகக் கூறியவற்றுக்கே அன்றி மற்ற வுறுப்புக்கும் கொழுமையைத் தரத்தக்க உணவு தங்குதற்கு இடமாதலின் அவ்விரைப்பையைப் பண்பாகு பெயராலே 'கொழு' என்றும், இத்தன்மையதாகிய உடலுடையாள்மேல் வீசும் மணம் இயற்கை யன்று; மலர், மெய்ப்பூச்சு முதலியவற்றாலாகிய செயற்கையா மென்பார் 'ஈர்ங்கோதையாள்' என்றும் கூறினர்.

The body is composed of entrails, blood, bone, skin and connecting tendons with here and there flesh interposed, and fat. Of these, what sort of a creature is the woman who wears the fresh garlands? (6)

47. ஊறி யுதர்த்தக்க வொன்பது வாய்ப்புலனும்
கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தைப்—பேதை
பெருந்தோளி பெய்வளா யென்னுமீப் போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு.

இ-ள். குழம்பு ஊறி - மலக்குழம்பு சுரப்பதனால், உவர்க்கத்தக்க - அருவருக்கத்தக்க, ஒன்பது வாய்ப்புலனும் - ஒன்பது தொளையினிடங்களும், கோதி - (அம்மலக்குழம்பை) சிதறி, அலைக்கும் - (அச்சிந்திய குழம்பால்) மூழ்கு விக்கின்ற, கும்பத்தை - குடத்தை, பேதை - அறிவிலான், மீப்போர்த்த - (அதன்மேல்) போர்க்கப்பட்ட, கருதோலால் - பெருமையாகிய தோலினால், கண்விளக்கப்பட்டு - தன் கண்கள் மழுக்கப்பட்டு, பெருதோளி - பெருமையாகிய தோளையுடையீரே, பெய்வளாய் - அணியப்பெற்ற வளையலையுடையாரே, என்னும் - என்று அழைப்பான், எ-று.

பொ-னை. மலக்குழம்பு சுரப்பதனால் அருவருக்கத்தக்க ஒன்பது தொளையினிடங்களும் அம்மலக்குழம்பைச் சிதறி, அச்சிந்திய குழ

ம்பால் மூழ்குவிக்கின்ற குடத்தை, அறிவிலான், அதன்மேல் பேர்க்கப்பட்ட பெருமையினாகிய தோலினுல் தன் கண்கள் மழுக்கப்பட்டுப் பெருமையாகிய தோளையுடையாளே! அணியப்பெற்ற வளைபுலையுடையாளே! என்று அழைப்பான் என்பது.

ஊறி ஊற என்பதன் திரிபு. உவர்க்க என்பது உவரென ஈறு தொக்குதலையிற்று. புலன் இடத்தின்மேல் நின்றதை உடலினின்றும் ஒன்பது வாயின்வழியாகக் குழம்பு வெளிப்படுத்தல்பற்றி, அவ்வொன்பது வாய்ப்புலனை வினைமுதலாக்கியும், அக்குழம்பு விளைந்து தங்குதற்கு இடமாயிருத்தலாகிய இழிவுபற்றி உடலைக் கும்பமென்றும், அவ்வுடலினிழிவை யுணரமாட்டாமையால் அவளைப் பேதையென்றும், அவ்விழிவை யுணரவொட்டாது அவாவச் செய்தலாற் கருந்தோலென்றும் பேதை புனைந்துரைப்பது பெரும்பான்மையும் ஒருத்தியினது அகத்துறுப்பையும், புறத்துறுப்பையுமே யாதலால் பெருந்தோளி, பெய்வளாயென்றுங் கூறினர். கண்விளக்கம் மங்கலம்.

The body wherein the filthy matter is being jostled from side to side reaching the nine prominent holes, is considered by the fools as something great. When it is that of a woman, the fool calls her "a maiden of beautiful shoulder, wearing brilliant bracelets!" (7)

48. பண்டமறியா பயிசாந்துங் கோதையுங்
கொண்டுபோ ராட்டுவார் கண்டிலர்கொன்—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்து
முடைச்சாகா டச்சிற் றுழி.

இ-ள். முடை - நீநாற்றத்தையுடைய, சாகாடு - உடலாகிய வண்டில், அச்சு இற்ற உழி - (உயிராகிய) அச்சுமரம் முறிந்தவிடத்து, பெடை - பேடையும், சேவல் - சேவலுமாகிய, வல்கழுகு - வலிய கழுகுகள், மண்டி - நெருங்கி, பேர்த்திட்டு - திருப்பி, குத்தும் - குத்தா நிற்கும், (இதனைப்) பண்டம் அறியார் - உடலாகிய பொருளினிழிவை அறியாதவராய், பயிசாந்தும் - (தேய்த்தலால்) உண்டாகிய சந்தனத்தையும், கோதையும் - மலர்மாலையையும், கொண்டு - முயன்று பெற்று, போராட்டுவார் - (அத்தன்மையதாகிய உடலை) நன்கு மதித்து அணியும் பேதையர், கண்டிலர் கொல் - பார்த்துணர்ந்திலரோ, ஈறு.

பொ-ரை: தீ நாற்றத்தை யுடைய உடலாகிய வண்டில் உயிராகிய அச்சுமரம் முறிந்தவிடத்து பேடையும் சேவலுமாகிய வலிய கழுகுகள் நெருங்கித் திருப்பிக் குத்தா நிற்கும். இவ்வுடலாகிய பொருளினிழிவை அறியாதவராய்த் தேய்த்தலால் உண்டாகிய சந்தனத்தையும் மலர் மாலையையும் முயன்றுபெற்று அத்தன்மையதாகிய உடலை கன்குமதித்து அணியும் பேதையர் இதனைப் பார்த்துணர்ந்திலரோ என்பது.

பார்த்துணர்வாராயின் பாராட்டாரென்பது குறிப்பெச்சம். பாராட்டுவரெனப் பொதுப்படக் கூறினமையால், உடலென்றது ஆண்பாலார் பெண்பாலா ரிருவருடலையும். வண்டிலியங்குதற்கு அச்சுப்போல, உடலியங்குதற்கு உயிர் அமைந்ததாதலால் இவ்வாறு அவ்வுடலுயிர்களை உருவகப் படுத்தினர்; இது மூடை என்ற அடையால் விளங்கிற்று. அச்சு-உருளை கோத்தமரம். இற்ற நாலுதொகுத்தலாயிற்று; இச்சினவினை முதன்மேல் நின்றது. உம்மை தொக்கு ஒரு மொழிபோல நின்ற பெடைச்சேவலென்பது அத்தொகை மாத்திரையினில்லாமல் தன்னோடு வன்கழுகென்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலையாய்ப் புணர்ந்தமையின் இடையே சந்திச் சகரமொற்றுப் பெற்றது.

When the life is off the body, vultures, male and female, approach it and tear away the flesh piece-meal. Those who do not know the nature of the body, dress it in a very good fashion and smear it with sandal and adorn it with garlands. Have not these people seen the final disposal of these bodies ? (8)

49. கழிந்தா ரிடுதலை கண்டார்நெஞ் சுட்கக் [ரைப்
குழிந்தீழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—யொழிந்தா
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

இ-ள். கழிந்தார் - உயிர் நீங்கினவரது, இடுதலை - இகொட்டிலுள்ள தலைகள், கண்டார்-(தம்மைப்) பார்த்தவர்கள், நெஞ்சு உட்க - மனம் அஞ்சும்படி, குழிந்து ஆழ்ந்த - மிகுதியுமாழ்ந்த, கண்ண ஆய்-கண்களையுடையன ஆகி, தோன்றி - தோற்றப்பட்டு, ஒழிந்தாரை - தமது நிலைமையில்லாரை, போற்றி-(மனத்தைப் புலன்களில் செல்லாமல்) பாதுகாத்து, நெறிநின்மின் - துறவு நெறியில் நில்லுங்கோள், இதன் பண்பு - இவ்வுடலினது தன்மை, இற்று என்று - இந்நிலையா

கிய தன்மையதென்று, சாலச்சிரித்து- மிகச்சிரியா நின்று, சாற்றும் கொல் - சொல்வதுபோலும், எ-று.

பொ-ரை. உயிர் நீங்கினவரது இடுகாட்டிலுள்ள தலைகள் தம்மைப் பார்த்தவர்கள் மனம் அஞ்சும்படி மிகுதியுமாழ்ந்த கண்களையுடையனவாகித் தோற்றப்பட்டுத் தமது நிலைமையில்லாரை மனத்தைப் புலன்களில் செல்லாமல் பாதுகாத்துத் துறவுநெறியில் நில்லுங் கோள்; இவ்வுடலினதுதன்மை இந்நிலையாகியு தன்மையதென்று மிகச் சிரியாநின்று சொல்வதுபோலும் என்பது.

இற்றென்றது தம்முடைய நிலைமையை ஆதலால் இது என்னுஞ் சுட்டு உடலின் மேலது. பற்கள்தோன்ற வாய் மிகத் திறந்தபடியிருத்தலால் அது சாலச்சிரித்துச் சாற்றுவதாகக் குறிக்கப்பட்டது. குழிந்தாழ்ந்த ஒருபொருட் பன்மொழி. வாழ்நாண் முடியுமுன்னே போற்றி நெறிநிற்றல் வேண்டுமாதலால் 'ஒழிந்தாரை' என்றார். இவ்விரண்டனுருபு சாற்றுமென்னும் வினைகொண்டது. இதிலை என்பதில் இடை - சுடுகாட்டை உணர்த்தவந்த குறிப்புச்சொல். இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அணி. கொல் இவ்வணியைச் சார்ந்துவரும் இடைச்சொல்.

The skull of the departed with its fearful eye-sockets, strikes terror into those that look at it, and seems to grin and preach a devout sermon to the surviving men—viz., you people look at me and take lesson; walk in the path of righteousness; (you should know) you will one day be reduced to my position.

50. உயிர்போயார் வெண்டலை புட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்குஞ் செம்மாப்பவரைச்—செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ண மென்பதனுற் றம்மையோர்
பண்டத்துள் வைப்ப திலர்.

இ-ள். உயிர்போயார் - உயிர் நீங்கினவரது, வெள்தலை - தசையில்லாத தலைகள், உட்கச் சிரித்து - (கண்டோர் நெஞ்சு) அஞ்சும்படி நகைத்து, செம்மாப்பவரை - (இல்வாழ்க்கையில்) மயங்கிக் கிடப்பவரை, செயிர் - அம்மயக்கமாகிய குற்றத்தினின்றும், தீர்க்கும் - நீங்கச்செய்யும், செயிர் தீர்ந்தார் - அக்குற்றத்தினின்று நீங்கினவர், இதன் வண்ணம் - இவ்வுடலின் தன்மையை, கண்டு - கண்கூடாகக் கண்டு, இற்று - இந்நிலையாமையை யுடையது, என்பதனால் - நுணர்ந்த மெய்யறிவினால், தம்மை-தங்களை, ஓர் பண்டத்துள் - ஒரு பொருளில், வைப்பது - வைத்து மதித்தல், இலர்-இலராவர், எ-று.

பொ-ரை. உயிர் நீங்கினவரது தசையில்லாத தலைகள் கண்டோர் நெஞ்சு அஞ்சும்படி நகைத்து இல்வாழ்க்கையில் மயங்கிக் கிடப்பவனை அம்மயக்கமாகிய குற்றத்தினின்றும் நீங்கச் செய்யும். அக்குற்றத்தினின்று நீங்கினவர் இவ்வுடலின் தன்மையை கண்கூடாகக் கண்டு இந்நிலையாமையை யுடையது என்றுணர்ந்த மெய்யறிவினால் சங்கரை ஒருபொருளில் வைத்து மதித்தல் இலராவர் என்பது.

வெண்மைப் பண்பு கலப்பின்மையை யுணர்த்திற்று. செம்மாப்பவர் வினையாலணையும் பெயர், இது சொல்லின் தன்மையது. பகுதி செம்மா; சேமம் யா-இவற்றுள் மூன்மொழி கடைக்குறையாய்ச் சேம் என நின்று, செம்என முதல் குறுகி பின்மொழியின் மரூஉ ஆகிய ஆ என்பது புணர்ந்து, மகரம் இரட்டி அவ்வாறு நின்றது. என்பது எனினும் வினையாலணையும்பெயர் அறிவின்மேலது; என்று உணரவல்லது அதுவேயாதலால்.

The skull of the dead seems to grin and terrify those who lead a domestic life, and clear them of their folly. Those who have renounced this worldly life know the final disposal of the body and do not think of their body as of great moment. (10)

Chapter VI—Renunciation

6-ம் அதிகாரம்: துறவு.

அஃதாவது மேற்கூறிவந்த புறமாகிய செல்வத்தினிடத்துளதாகிய எனதென்னும் புறப்பற்றையும், அகமாகிய உடலினிடத்துளதாகிய நானென்னும் அகப்பற்றையும், செல்வம் உடல் இவற்றினிலையாமையை உணர்ந்து விடுதலை யுணர்த்துவது. அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

51. விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்
தவத்தின்முன் னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது.

இ-ள். விளக்குப்புக - விளக்குப்புகாநிற்க, இருள் - முன்இருள், மாய்ந்தால் ஆங்கு - அழிந்தால்போல, ஒருவன் தவத்தின்முன் - ஒருவன்செய்த தவத்துக்குமுன், பாவம் - முன்செய்த பாவம், நில்லாதாம் - நிலைத்திராதாகும், விளக்குநெய் தேய்விடத்து - தீபம் நெய்

குறையுமிடத்து, இருள் சென்று - இருள்போய், பாய்ந்தால் ஆங்கு - பரவினாற்போல, நல்வினை - தவம், தீர்விடத்து - செய்தல் நீங்குமிடத்து, தீது - பாவம், நிற்கும் - நிலைபெறும், எ-று.

பே-ரை. விளக்குப் புகாநிற்க மூன்றிருள் அழிந்தால்போல ஒருவன் செய்த தவத்துக்குமுன், முன்செய்த பாவம் நிலைத்திராதாகும். தீபம், நெய்குறையுமிடத்து இருள்போய்ப் பரவினாற்போலத் தவம்செய்தல் நீங்குமிடத்துப் பாவம் நிலைபெறும் என்பது.

விளக்கு ஒளிபெருகுதற்குக் காரணம் நெய்பரந்தாற்போலத் தவம் பெருகுதற்குக் காரணம் மனமொழி மெய்களாற்செய்யும் செயலென்பதும், ஒளியுடைய தேயுவின் அபாவமே இருளாதல்போலத் தவத்தினது அபாவமே பாவமென்பதும் கருத்து. உவமையில் நெய்யென்றமையால் பொருளிலும் செயலென்பது வருவிக்கப்பட்டது. தேய்விடத்து, தீர்விடத்து என்பன நிகழ்கால வினையெச்சம்; இடத்தென்னும் விகுதியே காலங்காட்டியது. தல் என்னும் புடை பெயர்ச்சி விகுதி புணர்ந்துகெட்டு முதனிலை திரிந்த விளக்கென்னுந் தொழிற் பெயர் விளங்குதலுடைய தீபத்துக்குத் தொழிலாகுபெயர்; இவ்வாறன்றித் தான் காரணமாகநின்று பிறபொருள்கள் விளங்குதலாகிய காரியத்தைச் செய்கின்றமையால் காரியமாகுபெயரெனலுமாம். முன்னில்லாதாமென்பதை மூன் இல்லாதாமெனப் பதம் பிரித்து உரைத்தலுமாம்.

When a lamp enters, the darkness vanishes. So does the sin in the presence of penance. As the light diminishes and finally goes out when the oil in the lamp is exhausted, giving room to darkness, so, when good deeds are out, the sinful acts slowly take their place. (1)

52. நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்—தொலைவில்லைச்
சாத்தமூஞ் சோதிடமு மென்றுங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்.

இ-ள். நிலையாமை என்று - (வளர்தல் சுருங்கல் ஆகிய இவற்றுள் ஒன்றில்) நிலைத்தலில்லாமையும், நோய் என்று - நோயும், மூப்பு என்று - மூப்பும், சாக்காடென்று - சாதலும், (இருத்தலை) எண்ணுகந்தி, தலையாயார் - முதன்மையாகிய அறிவுடையார், தம் கருமம் - தம்மூயிர்க்குரிய செயலாகிய தவத்தை, செய்வார் - செய்வார்கள்,

தொலைவு இல்லாத - முடிவு இல்லாத, சத்தமும் - இலக்கணநூலும், சோதிடமும் - கணிதநூலும், என்ற-என்று சொல்லப்பட்ட, இவை-இந்நூல்களே, பிதற்றும் - விடாது பேசுகின்ற, பித்தரின் - பேதையர் போல, பேதைமை யுடையார் இல் - பேதைமை யுடையாரில்லை, எ-று.

பொ-ரை. வளர்தல் சுருங்கல் ஆகிய இவற்றுள் ஒன்றில் நிலைத்தலில்லாமையும், நோயும் மூப்பும் சாதலும் இருத்தலையும் கருதி முதன்மையாகிய அறிவுடையார் தம்மூயிர்க்குரிய செயலாகிய தவத்தைச் செய்வார்கள். முடிவு இல்லாத இலக்கணநூலும், கணிதநூலும் என்று சொல்லப்பட்ட இந்நூல்களே விடாதுபேசுகின்ற பேதையர் போலப் பேதைமை யுடையாரில்லை என்பது.

இருத்தல் சொல்லெச்சம். பின்னே சாக்காடென்றமையால் நிலையாமை வளர்தல் சுருங்கல்களின் மேல்நின்றது. என்ற என்னும் பெயரெச்சம் ஈறுதொகுக்கப்பட்டது. நிலையாமையுடைய உடற்கு வரும் வருத்தத்தை நோக்காமல் தவத்தினைச் செய்தலால், பிறப்பு நோய் மூப்புச் சாக்காடுகளால் அநாதியாகத் துன்பமடைந்து வருகின்ற உயிர் ஞானம் உதித்து வீட்டைப் பெறுதலைக் கருதித் தவத்தைத் 'தங் கருமம்' என்றும், சத்தமும் சோதிடமும் அறநூல் முதலியவற்றை உணர்தற்குக் கருவியெனக் கருதாது, அவ்விருநூலையுங் கற்றமட்டில் நின்று பாராட்டுகின்றமை கருதிப் 'பிதற்றும் பித்தரில் பேதையாரில்' என்றுங் கூறினர்.

The wise, thinking of the unstable nature of wealth and youth, and of the disease, dotage and death which the body is subject to, will do what is best for them. None will be more foolish and crazy than those who devote their whole time to the study of Logic and Astrology. (2).

53. இல்ல மிளமை யெழில்வனப்பு மீக்கூற்றஞ்
செல்வம் வலியென் றிவையெல்லா—மில்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாமுய்யக் கொண்டு.

இ-ள். தலையாயார் - (அறிவுவொழுக்கங்களில்) முதன்மையானவர், இல்லம் - இல்வாழ்க்கையும், இளமை - இளமைப் பருவமும், எழில் - எழுச்சியும், வனப்பு - அழகும், மீக்கூற்றம் - சொற்செலவும், செல்வம் - பொருட்செல்வமும், வலி - வலியும், என்ற - என்று சொல்லப்பட்ட, இவை எல்லாம் - இவைகளெல்லாம், மெல்ல - மெள்ள,

நிலையாமை - நிலைபெறுமல்கழிதலை, கண்டு - கண்கூடாகக் கண்டு, நெடியார் - காலநீட்டியாமல், தாம் உய்ய - தாம் பிழைக்கும்படி, கொண்டு - துணிவுகொண்டு, துறப்பர் - யாவெனவெதன்னும் இருபிற்றையுந் துறப்பார்கள், எ-று.

பொ-ரை. அறிவு வொழுக்கங்களில் முதன்மையானவர் இல்வாழ்க்கையுக், இளமைப்பருவமும், எழுச்சியும், அழகும், சொற்செலவும், பொருட்செல்வமும், வலியும் என்று சொல்லப்பட்ட இவைகளெல்லாம் மெள்ள நிலைபெறுமல் கழிதலைக்கண்கூடாகக் கண்டு காலநீட்டியாமல் தாம் பிழைக்கும்படி துணிவுகொண்டு யாவெனவெதன்னும் இருபற்றையுந் துறப்பார்கள் என்பது.

எழில் வனப்பு என்பவற்றிற்கு முறையே அழகும் மாமைநிறமும் என உரைத்தல், மாமை இளமையிலடங்குதலாலும், மீக்கூற்றென்பதனைப் பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயரெனக் கொண்டு, அதற்கு மேலாகிய சொல்லாற்பிறந்த புகழென உரைத்தல் "புகழல்லால் பொன்றாது நிற்பதொன்றில்" என்பதனாலும் பொருந்தா என்க. மாமை இளமையில் தோன்றும் ஒளி. எழுச்சி என்றது முயற்சியோடு திரிதலை. எழில் - இல்விகுதி ஈற்றதாகிய தொழிற்பெயர். மீக்கூற்றம் யாவரும் மறுக்காமல் மேன்மையாகக் கொள்ளுஞ்சொல். அது ஈற்றில் சாரியை பெற்றது. இல்லம் முதலியவை உடையாரறியாமலே கழிதலால் 'மெல்ல நிலையாமை' என்றார். நெடித்தல் - கால நீட்டித்தல்.

The wise, considering the unstable nature of the domestic life, youth, beauty, wealth, strength and similar things, will renounce this world with a view to reach their goal. (3)

54. துன்பம் பலநா ளுழந்து மொருநாளே
இன்பமே காமுறுவ ரேழையார்—இன்பம்
இடைதெரிந் தின்னமை நோக்கி மனையா
ளடைவொழிந்தா ரான்றமைந் தார்.

இ-ள். ஏழையார் - அறிவிலார், பலநாள் - மிகுதியாகிய காலமெல்லாம், துன்பம் உழந்தும் - துன்பத்தால் வருந்தியும், ஒருநாளே - இடையிடையே, இன்பமே - சுகத்தையே, காமுறுவர் - விரும்புவார், ஆன்று - (கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்து, அமைந்தோர் - அதற்குத் தக்கபடி அடங்கி நடக்கும் பெரியோர், இன்பம் - சுகத்தின் சிறுமையை, இடை தெரிந்து - நடுவுநிலையாக ஆராய்ந்து,

இன்னுமை - துன்பத்தின் மிகுதியை, நோக்கி - அறிந்து, மனை ஆறு - இல்வாழ்க்கையின் வழியில், அடைவு - சார்ந்து நடப்பதை, ஒழிந்தார் - நீங்கினார், எ-று.

பொ-ரை. அறிவிலார் மிகுதியாகிய காலமெல்லாம் துன்பத்தால் வருந்தியும் சிறிதுபோழ்து அநுபவிக்கும் சுகத்தையே விரும்புவர். கல்வியறிவு கேள்விகளால் நிறைந்து அதற்குத் தக்கபடி அடங்கி நடக்கும் பெரியோர் சுகத்தின் சிறுமையை நடுவுநிலையாக ஆராய்ந்து துன்பத்தின் மிகுதியை அறிந்து இல்வாழ்க்கையின் வழியில் சார்ந்து நடப்பதை நீங்கினார் என்பது.

நாள் காலத்தின்மேலும், பல ஒன்றென்பனமுறையே மிகுதி சிறுமையின் மேலும் நின்றன. நாளையென்பதில் ஐ சாரியை. வீடினது நித்தியமாகிய பேரின்பத்தினின்றும் நீக்குதலால் ஏ பிரிநிலை. இல்வாழ்க்கை இன்பந்தருவதுபோலத்தோன்றுதலால் 'இன்பம் இடை தெரிந்து' என்றார். காமுறுவர் ஒருசொல்லின் தன்மையது; பகுதி காமுறு; இது, உறு என்பது புணர்ந்தபோது காமம் கடைக்குறை பெற்றது.

The foolish people, even when they are put to much suffering, will yearn after the fleeting pleasures of a day arising from domestic life; whereas the wise knowing the varied and changing nature of the pleasures and difficulties attending thereon, have quitted the household paths. (4)

55. கொன்னே கழிந்தன் றிளமையு மின்னே
பிணியொடு மூப்பும் வருமா—றுணிவொன்றி
யென்னெஞ் சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு.

இ-ள். எழுநெஞ்சே - அடங்காத இயல்புள்ள மனமே, இளமையும் - இளமைப் பருவமும், கொன்னே - பயனில்லாமலே, கழிந்தன்று - கழிந்தது, இன்னே - இப்போதே, மூப்புஞ் - முதுமையும், பிணியொடு வரும் - நோயோடு கூடிவரும், நமக்கு நல்நெறிசேர - நமக்கு நல்லொழுக்கமாகிய துறவு சேரும்படி, துணிவு ஒன்றி - கலங்காமையைப் பொருந்தி, என்னெஞ்சு சூழாது - என்னிடத்து ஆராயாமல், போதியோ - (புலன்களின்மேல்) செல்லுகின்றாயோ, எ-று.

பொ-ரை. அடங்காத இயல்புள்ள மனமே! இளமைப்பருவமும் பயனில்லாமலே கழிந்தது. இப்போதே முதுமையும் நோயோடு

கூடிவரும். நமக்கு நல்லொழுக்கமாகியதுறவு சேரும்படி கலங்காமை யைப் பொருந்தி என்னிடத்து ஆராயாமல் புலன்களின்மேல் செல் லுகின்றாயோ என்பது.

கழிந்தன்றென்னும் ஒன்றன் படர்க்கை இறந்தகால வினைமுற் றில் அன்சாரியை. மனமொழி மெய்கள் அலைதலில்லாமல் நிற்றல், அவை நன்னெறியில் செல்லல் இவற்றால் வரும் இன்பத்தை நெடு நாள் அநுபவித்தலாகுமாதலால் இளமையுமென்ற உம்மை ஒருபுடை எதிரது தழீஇயதனோடு உயர்வு சிறப்புப் பொருளாது. மூப்புமென்ற உம்மை ஒருபுடை இழந்தது தழீஇயதனோடு இழிவு சிறப்புப் பொரு ளது. முதிராமல் அடங்கி நின்றநோய் பெருகி வெளிப்படுதற்குரிய காலம் அது ஆதலால் 'பிணியொடு மூப்பும் வரும்' என்றார். பிணி தொழிலாகுபெயர். என்னொடு என்னு மூன்றனுருபு ஏழாவதன்னிடப் பொருளது.

Youth has been expended in vain; disease and dotage are pressing close. O Mind! are you not going to co-operate with me in my search to find out the right path? (5)

56. மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையால்—பூண்ட
மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றறிந்தார்.

இ-ள். மாண்ட - மாட்சிமைப்பட்ட, குணத்தொடு - தன்மை யோடு, மக்கள்பேறு - பிள்ளைப்பேறு, இல் எனினும் - இல்லாதவளா யினும், பூண்டான் - கொண்டநாயகன், கழித்தற்கு - நீக்கிவிடுதற்கு, அருமையால் - கூடாதவளா யிருத்தலால், பூண்ட - விட்டொழியாத, மிடியென்னும் - இடுக்கண் தருவதென்று சொல்லப்படும், காரணத் தின் - காரணத்தைப்பற்றி, மேல் - முற்காலத்தில், முறைக்கண் - நூல்களில், கடி என்றார் - (மணத்துக்குக்) கடியென்று பெயரிட்டனர், கற்று - நூல்களைக் கற்று, அறிந்தார் - சொல்லியல் புணர்ந்த புலவர், எ-று.

பொ-ரை. மாட்சிமைப்பட்ட தன்மையோடு பிள்ளைப்பேறு இல்லாதவளாயினும் கொண்ட நாயகன் நீக்கிவிடுதற்குக்கூடாதவளா யிருத்தலால் விட்டொழியாத இடுக்கண்தருவதென்று சொல்லப்படும் காரணத்தைப்பற்றி முற்காலத்தில் நூல்களில் மணத்துக்குக் கடி

யென்று பெயரிட்டனர். நூல்களைக் கற்றுச் சொல்லியல் புணர்ந்த புலவர் என்பது.

அருமையுடையாளை 'அருமை' என்றும், மிடியையுந் தருவதனை 'மிடி' என்னுங் கூறியது ஓர் மரபு வழுவமைதி. அருமையாலென்னும் ஏதுப்பொருளதாகிய மூன்றனுருபும், காரணத்தின் என்னும் அப் பொருளதாகிய ஐந்தனுருபும் விரவி அதிக்கி யென்றுரென்னும் வினை கொண்டன. கடியென்னும் இடுகுறியாகிய உரிச்சொல்லைக் கடுமைய தென்னும் பொருளதாகிய காரணப்பெயராகக் கொண்டமையால் இதுபிரிநிலை நவிற்சியணி. கடுமை பகுதி, இ-ஒன்றன் படர்க்கை விகுதி, விகுதிப்புணர்ச்சியில் மையீறும், விகுதி யுயிராதல் பற்றி உகரமும் கெட்டது சந்தி. கடுமை இங்குத் துன்பத்தின் மேலது. இவ்வாறு கொடுமை (வலேவு) என்னும் பண்படியாகக் கொடி, கருமை என்னும் பண்படியாகக் கரி என்னும் பெயர்கள் வருதல் காண்க. மேல் முறையென்பன பண்பாகு பெயர்கள்.

As it is rather difficult to abandon the wife even if she be without children and good quality, so the learned, taking into account the troubles of married life, gave it the name of *Kadi* (a thing to be avoided) in their ancient books. (6)

57. ஊக்கித்தாங் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்
தாக்கருந் துன்பங்க டாந்தலே வந்தக்கா
னீக்கி நிறூஉ மூவோரே நல்லொழுக்கங்
காக்குந் திருவத் தவர்.

இ-ள். ஊக்கி - முயன்று, தாம்கொண்ட - தாம்பூண்ட, விரதங்கள் - தவங்கள், உள் உடைய - தம்மில் கலங்கும்படி, தாக்கு அரு துன்பங்கள் - நீக்குதற் கருமையாகிய துன்பங்கள், தலைவந்தக்கால் - தம்மிடத்து வந்தால், நீக்கி - (அத்துன்பங்களை) நீங்கச் செய்து, நிறூஉம் - (விரதங்களை) நிலைக்கச்செய்யும், உரவோரே - பேரறிவுடையோரே, நல் ஒழுக்கம் - நல்லொழுக்கங்களை, காக்கும் - விடாமற்செய்யும், திருவத்தவர் - (கண்டோரால் விரும்பப்படும்) அழகிய தவமுடையார், எ-று.

பொ-ரை. முயன்று தாம் பூண்ட தவங்கள் தம்மில் கலங்கும் படி நீக்குதற் கருமையாகிய துன்பங்கள் தம்மிடத்து வந்தால், அத் துன்பங்களை நீங்கச்செய்து விரதங்களை நிலைக்கச்செய்யும் பேரறி

வுடையோரே நல்லொழுக்கங்களை விடாமற் செய்யும் (கண்டோரால் விரும்பப்படும்) ஆழகிய தவமுடையார் என்பது.

ஊக்கல் - ஊக்கங்கொள்ளல். அது தன் காரியமாகிய மூயலவின்மேல் நின்றது. பின்னுள்ள தாம் அசை. தாக்குதலாகிய காரணம் நீக்குதலாகிய காரியத்தின்மேலது. தாக்குதல் - பொருதல். அது முதனிலைத் தொழிற்பெயர். நிறையும் சொல்லிசை யளபெடையாதலால் பதப்பிரிவிலும் அதனை நீக்காதுகொள்க. நில் என்னுந் தன்வினைப்பகுதி, பிறவினைப்பகுதிக் துவ்விகுதிப் பூண்ர்ச்சியில் தகரத்தினும் லகரக் கேடுமாகிய சந்தி பெற்ற நிறு பகுதி, உம் பெயரெச்ச விகுதி, பகுதி உகரம் ஊகாரமானதும் அளபெழுந்ததும் நீட்டல் விகாரம், விகுதி உகரக்கேடு முதற்குறை. ஏ பிரிநிலை. திருவத்தவர் என்பதில் அ சாரியை.

They alone will be considered capable of adhering to good conduct, who, even when troubles unbearable prevent them from adhering to the penance, are able to keep them at bay and to go on boldly with their work. (7)

58. தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

இ-ள். தம்மை இகழ்ந்தமை - (பிறர்) தம்மை அவமதித்ததை, தாம் பொறுப்பது உம் அன்றி - தாம் பொறுத்துக் கொள்ளுதலு மல்லாமல், மற்று எம்மை - இகழ்தற்குக் காரணமில்லாத எம்மை, இகழ்ந்த - இகழ்ந்ததனலாகிய, வினைப்பயத்தால் - தீவினையாகிய பயனால், உம்மை - மறுமையில், எரிவாய் - தீ நிரம்பிய, நிரயத்து - நரகத்தில், வீழ்வர் என்று - வீழ்வாரென்று, பரிவதும் - (அவரிடத்து) இரக்கங்கொள்ளுதலும், சான்றோர் கடன் - தவவொழுக்கம் நிறைந்தவரது கடமையாம், எ - று.

பொ-ரை. பிறர் தம்மை அவமதித்ததைத் தாம் பொறுத்துக் கொள்ளுதலு மல்லாமல் இகழ்தற்குக் காரணமில்லாத எம்மை இகழ்ந்ததினலாகிய தீவினையாகிய பயனால் மறுமையில் தீ நிரம்பிய நரகத்தில் வீழ்வாரென்று அவரிடத்து இரக்கங்கொள்ளுதலும் தவவொழுக்கம் நிறைந்தவரது கடமையாம் என்பது.

பொறுத்தலும், பரிவதும் கடனெனவே பொறுக்காமல் வெகுளி கொள்ளல் கடனன்றென்பதாயிற்று. இங்கு இகழ்தல் "ஆற்றவா ராற்றி லிகழாமை" என்பதிற்போல அவமதித்தலே யுணர்த்திற்று. பொறுப்பதின்பத னீற்றில் எதிரது தழீஇய எச்சவும்மை தொகுத்தல். நிரயத்து வீழ்தல் திண்ணமாதலால் கொல் அசைநிலைப் பொருளது. இகழ்ந்த காரணத்தினு லுண்டாம் பயன் தீவினையே யாதலால் வினைப்பயனென்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத் தொடரென்க. ஆளபெடை இன்னிசைக்கண் வந்தது. மற்றுப் பிறி தென்னும் பொருளது.

The duty of the great is not only to forbear the wrong-doings of others but to pity them and sympathize with them for the troubles they would have to undergo in the hell as the result of their action. (8)

59. மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாய வேட்கை யவாவினைக்—கைவாய்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்.

இ-ள். மெய் வாய் கண் மூக்குச் செவி என - உடம்பு வாய் கண் மூக்குச் செவிகளென்று, பேர்பெற்ற - பெயர்களைப் பெற்றுள்ள, ஐவாய - ஐம்பொறிகளே வழியாகவுடைய, வேட்கையினை - விருப்பங்களேயும், அவாவினை - (அவற்றிற்குரிய பொருள்களைப் பெற வேண்டுமென்னும்) ஆசையையும், காத்து - (தன்னிடத்துண்டாகா மல்) காத்து, கைவாய் - தவவொழுக்கத்தில், கலங்காமல் - கலங்குத லில்லாமல், ஊய்க்கும் - தன்னைச் செலுத்தவல்ல, ஆற்றல் உடை யான் - மனவலி யுடையான், விலங்காது - தவறுத லுண்டாகாமல், வீடு பெறும் - வீட்டுலகத்தை அடைவான், எ - று.

பொ-சை. உடம்பு, வாய், கண், மூக்கு, செவிகளென்று பெயர் களைப் பெற்றுள்ள ஐம்பொறிகளே வழியாகவுடைய விருப்பங்களே யும் அவற்றிற்குரிய பொருள்களைப் பெறவேண்டுமென்னும் ஆசை யையும் தன்னிடத்துண்டாகாமல் காத்து, தவ வொழுக்கத்தில் கலங்கு தல் இல்லாமல் தன்னைச் செலுத்தவல்ல மனவலியுடையான் தவ றுதல் உண்டாகாமல் வீட்டுலகத்தை அடைவான் என்பது.

ஊறு, சுவை, ஒளி, நாற்றம் ஓசை யென்னும் ஐம்புலங்களின் மேலும் செல்லும் விருப்பத்துக்கு வழியா யிருத்தலால் ஐம்பொறி

களை ஐஉாயென்றார். வாய இடமடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். குறிப்பு மூற்றுப் பெயரெச்சமாய் வேட்கை யென்னும் பெயர் கொண்டதெனினும் பொருந்தும். விருதி அ பலவின் படர்கையதென்க. ஐம்புருபை வேட்கை யென்பதனோடும் கூட்டுக. வேட்கையவா வேணவா எனவும் வருதலுமுண்டு.

The man who is able to control the five senses and direct himself on the right path without diffidence, will without fail attain *mukti* or *moksha*. (9)

60. துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளா
ரின்பமே காமுறுவ ரேழையா—ரின்ப
மிசைதொறு மற்றத னின்னுமை நோக்கிப்
பசைதல் பரியாதா மேல்.

இ-ள். ஏழையார் - அறிவில்லார், துன்பமே - துன்பமொன்றே, மீதூர - மிகுதியாகவர, கண்டும் - உணர்ந்தும், துறவு-துறவுநிலையை, உள்ளார் - அடைய நினையாமல், இன்பமே - (இல்வாழ்க்கையில் சிறிதாக வரும்) இன்பத்தையே, காமுறுவர் - விரும்பாநிற்பார், மேல் - மேலாகிய வறிவுடையார், இன்பம் - இன்பமானது, இசைதொறும் - (தம்மிடத்து) வருந்தோறும், அதன் - அவ்வின்பத்துக்குக் காரணமாகிய, இன்னுமை - துன்பத்தை, நோக்கி - சீர்தூக்கி, பசைதல் - (அவ்வின்பத்தை) விரும்புதலை, பரியாது - கொள்ளார், எ - று.

பொ-ரை. அறிவில்லார் துன்பமொன்றே மிகுதியாக வர உணர்ந்தும் துறவு நிலையை அடைய நினையாமல் இல்வாழ்க்கையில் சிறிதாகவரும் இன்பத்தையே விரும்பாநிற்பார். மேலாகிய வறிவுடையார் இன்பமானது தம்மிடத்து வருந்தோறும் அவ்வின்பத்துக்குக் காரணமாகிய துன்பத்தைச் சீர்தூக்கி அவ்வின்பத்தை விரும்புதலைக் கொள்ளார் என்பது.

இன்பத்திற்குக் காரணமாகிய துன்பமென்றது ஐம்புல நுகர்ச்சிப் பொருள்களை யுழந்து தேடுதலால் வருந் துன்பத்தை. துன்பத்தின்னளவுக்கு அதனுற்பெறும் இன்பம் சிற்றளவினதென உணராமாட்சிமையால் அவரை 'ஏழையார்' எனவும், உணரவல்லாருக்கு அவ்வின்பத்தை விரும்பலும் ஒருபாரமாகத் தோன்றலால் 'பசைதல் பரியாது' எனவும் கூறினர். பரித்தல் - சுமத்தல். ஏ இரண்டும் பிரிநிலை மேல் பண்பாகுபெயர்.

Fools, even though they feel the sufferings of this worldly life, never think of renouncing it. The wise being aware of the fact that the latter end of joy is woe, would never stick themselves to it. (10)

Chapter VII—The Absence of Anger

7-ம் அதிகாரம்: சினமின்மை.

அஃதாவது கோபஞ் செய்தற்குக் காரணமாகிய குற்ற மொருவனிடத்துண்டான காலத்துங் கோபஞ் செய்யாமையை உணர்த்துவது. காமவெகுளி மயக்கமாகிய மூன்றில், சினம் அருண் முதலியவற்றைக் கெடுத்தலால் அது துறவினர்க் காகாதென அதனதின்மை துறவின்பின் வைக்கப்பட்டது ; ஆயினும் இது யாவருக்கும் பொதுவெனக் கொள்க.

61. மதித்திறப் பாரு மிறக்க மதியா
மிதித்திறப் பாரு மிறக்க—மிதித்தேறி
யீயுந் தலைமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

இ-ள். மதித்து - (தம்மை) நன்குமதித்து, இறப்பாரும் - நடப்பவரும், இறக்க - நடக்கக்கடவர், மதியாது - நன்குமதியாமல், மிதித்து - இழிவுபடுத்தி, இறப்பாரும் - நடப்பவரும், இறக்க - நடக்கக்கடவர், ஈயும் - (நாலறிவுயிரினதாகிய) ஈயும், மிதித்து - காலான்மிதித்து, தலைமேல் ஏறி இருத்தலால் - தம்முடைய தலையின்மேல் ஏறியிருத்தலால், அஃது அறிவார் - அவ்வீயினறியாமையை அறியும்இயல்பினர், காயும் - (தம்மை அவமதித்தோரைக்) கோபிக்கின்ற, கதம் இன்மை - கோபமிலராதல், நன்று - நன்மையைத் தருவதாம், எ-று.

பொ-ரை. தம்மை நன்குமதித்து நடப்பவரும் நடக்கக்கடவர். நன்கு மதியாமல் இழிவுபடுத்தி நடப்பவரும் நடக்கக்கடவர். நாலறிவுயிரினதாகிய ஈயும் காலான்மிதித்துத் தம்முடைய தலையின்மேல் ஏறியிருத்தலால் அவ்வீயினறியாமையை அறியுமியல்பினர் தம்மை அவமதித்தோரைக் கோபிக்கின்ற கோபமிலராதல் நன்மையைத் தருவதாம்என்பது.

மதியாது ஈறு தொகுக்கப்பட்டது. முன்னுள்ள மிதித்தல் இழிவுபடுத்தலுக்காயிற்று. இருத்தலாலென்னும் ஏதுப்பொருட்டாகிய மூன்றனுருபு இன்மை என்னுங் குறிப்புத் தொழிற்பெயர் கொண்டது. துறந்தார்க்கு நட்பும் பகையும் கூடாமையின் 'மதித்திறப்பாரும்'

'மிதித்திறப்பாரு மிறக்க' என்றும், மிதித்திறப்பதற்குக் காரணம் அறிவு நூல் கேட்குஞ் செவியறிவில்லாமையாதலால் அஃதொரு பொருளல்லரென்பார் 'ஈயும்' என்றும், கதம் தான் காரணமாகநின்று மிதித்திறப்பார்மேற் சாபம் விடுவித்துச் செய்த தவத்தை இழப்பித்தலால் அஃதில்லாமை 'நன்று' என்றுங் கூறினர்.

Let those who think rightly of us, do so! Let those who despise us, do so! We see the fly, insignificant as it is, treads upon us and rests itself on our head. Knowing this as we do, it is better not to be angry with anybody. (1)

62. தண்டாச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது
கண்டுழி யெல்லாங் கூறப்பவோ—மண்டி
யடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு முள்ளத் தவர்.

இ-ள். மண்டி - (தவவொழுக்கத்தில்) மிகுதியுஞ் சேர்ந்து, ஆற்ற - மிகுதியும், இளிவந்தபோழ்தின் - (அத்தவவொழுக்கத்துக்குக்) குறைவு நேரிட்டபோது, அடிபெயராது - அந்நிலையில் தளராமல் நின்று, முடிகிற்கும் - இறக்கவல்ல, உள்ளத்தவர் - ஊக்கமுடைய முனிவர், தம் இன் னுயிரை - தம் இனிமையாகிய உயிரை, தண்டாத - கெடுதலில்லாத, சிறப்பின் - சிறந்த தவவொழுக்கத்தில், தாங்காது - கொண்டிராமல், கண்ட உழி எல்லாம் - கண்ட விடங்களிலெல்லாம், துறப்ப ஓ - செல்ல விடுவரோ விடார், எ - று.

பொ-ரை. தவவொழுக்கத்தில் மிகுதியுஞ் சேர்ந்து மிகுதியும் அத் தவவொழுக்கத்துக்குக் குறைவு நேரிட்டபோது அந்நிலையில் தளராமல் நின்று இறக்கவல்ல ஊக்கமுடைய முனிவர் தம் இனிமையாகிய உயிரைக் கெடுதலில்லாத சிறந்த தவவொழுக்கத்தில் கொண்டிராமல் கண்ட விடங்களிலெல்லாம் செல்ல விடுவரோ விடார் என்பது.

கண்டவிடங்களென்றது காம வெகுளி மயக்கங்களை. வினையாகிய மாசுதீர்ந்து சுத்தமான அந்தக்கரணங்களை யுடையாராதலால் கண்டுழி எல்லாந் துறவாராயினர். முடிகிற்கு மென்பதற்கு முடிக்கவல்ல வென்பொருளைத்தல், இது தன் வினையாவதல்லது பிறவினை யாவதன்றுதலால் குற்றமென்க. அழியாத வீடுபேற்றைத் தருவதாதலால் தவவொழுக்கத்தைத் 'தண்டாச் சிறப்பு' என்றார். ஓ எதிர்மறை. முடிகிற்கு மென்னுங் காரியப்பொருட்டாகிய பெயரெச்

சம் உள்ளத்தவரென்னும் பெயரின் முதனிலையாகிய உள்ளமென்னுங் காரணப்பெயர்கொண்டது. இதனை இரு சொல்லாகக்கொண்டு உள்ளம் தவரெனப் பிரித்தலுங் கூடும்.

When dishonour is thrust upon the great so that it will be difficult for them to move either backward or forward, even then they will stand to their principle and fight out their ground. Will such people give room to anger and cast off their life. (2)

63. காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொ
லோவாதே தன்னைச் சுடுதலா—லோவாதே
யாய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றுங்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

இ-ன். ஒருவன் - (அறிவில்லாத) ஒருவன், தன் வாய் காவாது - தன் வாயைக் காக்கமாட்டாமல், திறந்து சொல்லும்-திறந்து சொல்லுகின்ற, சொல் - கடுஞ்சொல், தன்னை-சொல்லிய அவனை, ஓவாதே - விட்டொழியாமலே நின்று, சுடுதலால் - வருத்துதலால், ஓவாதே - இடைவிடாமலே, ஆய்ந்து - (அறிவு நூல்களை) ஆராய்ந்து, அமைந்த - நிரம்பிய, கேள்வி - மெய்ஞ்ஞானக் கேள்வியையுடைய, அறிவுடையார் - துறவினர், எஞ்ஞான்றும் - எக்காலத்தும், கறுத்து - கோபித்து, காய்ந்து அமைந்த - அக்கோபித்தலால் அமைந்த சாப மொழிகளை, சொல்லார் - சொல்லார்கள், எ-று.

பொ-ரை. அறிவில்லாத ஒருவன் தன் வாயைக் காக்கமாட்டாமல் திறந்து சொல்லுகின்ற கடுஞ்சொல் சொல்லிய அவனை விட்டொழியாமலே நின்று வருத்துதலால், இடைவிடாமலே அறிவு நூல்களை ஆராய்ந்து நிரம்பிய மெய்ஞ்ஞானக் கேள்வியையுடைய துறவினர் எக்காலத்தும் கோபித்து அக்கோபித்தலால் அமைந்த சாப மொழிகளைச் சொல்லார்கள் என்பது.

காவாதென்றதனால் சொல் கடுஞ்சொலென்பது பெற்றும். துறவினர் தம்மை ஒருவன் வைத கடுஞ்சொல் அவனையே சார்ந்து வருத்துதலால் தாம் தமது தவம் குறையுழ்படிச் சாபமொழிகளைக் கூறார் என்பது. சொல் தன்னை வருத்துதலாவது அதனாலாகிய வினைப்பய னடைதல். எ இரண்டும் தேற்றம். கர்க்கமாட்டாத இறுவை முடித் தற்கு வாய் திறந்தென வேண்டாது கூறினர். ஒருவன் வைதவைவு அவனையே வருத்துமென்ப தறிந்திருத்தலால் தாம் சினந்து கடுஞ் சொல் சொல்லாரெனினும் பொருந்தும். காய்ந்து காரணப் பெயரூட்

டாகிய இறந்தகாலச் செயலிவனெச்சத் திரிபு. அமைந்த இறந்தகால வினைப்பெயர்.

He who does not control his tongue but gives free scope to it, will have to suffer the consequence. The wise, because of their learning, will never give expression to their feeling in an angry tone. (3)

64. நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோ—ரோர்த்ததனை
உள்ளத்தா னுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமோங் கீழ்.

இ-ள். நிகர் அல்லார் - (தம்மோடு) ஒப்பல்லாதவர், நேர்வித்து - (தம்மை) ஒப்பாக்கிக்கொண்டு, நீர் அல்ல - இனிமையல்லாத சொற்களை, சொல்லியக்கால் - சொல்லினால், விழுமியோர் - சிறந்த குறவு நிலையுடையோர், வெகுண்டு வேர்க்கார் - கோபங்கொண்டு வேர்க்கார், அதனை - அக்கடுஞ்சொல்லை, உள்ளத்தான் உள்ளி - மனத்தாற் கருதி, ஓர்ந்து - ஆராய்ந்து, ஊர் கேட்ப - ஊரிலுள்ளார் கேட்கும்படி, உரைத்து - (பலரோடும்) சொல்லி, உராய் - (சுவர் முதலியவற்றில்) உராய்ந்து, துள்ளி - துடித்து, தூண் முட்டும் - தூணினிடத்து முட்டுவார், கீழ் - கீழானவர், எ - று.

பொ - ரை. தம்மோடு ஒப்பல்லாதவர் தம்மை ஒப்பாக்கிக் கொண்டு இனிமையல்லாத சொற்களைச் சொல்லினால் சிறந்த குறவு நிலையுடையோர் கோபங்கொண்டு வேர்க்கார். அக் கடுஞ் சொல்லை மனத்தாற் கருதி ஆராய்ந்து ஊரிலுள்ளார் கேட்கும்படி பலரோடும் சொல்லிச் சுவர் முதலியவற்றில் உராய்ந்து துடித்துத் தூணினிடத்து மூட்டுவார் கீழானவர் என்பது.

நேர்வித்து என்பதில் வினவிகுதி தொகுக்கப்பட்டது. நீர் இனிமைக்காயிற்று. அல்ல - பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயர். வேர்த்தல் வெகுளலின் காரியமாதலால் வேர்த்து வெகுளார் என்பதனைப் பின் முன்னாக நிறுத்தி விகுதி பிரித்துக் கூட்டுக. ஓர்தென்பது தொடைநோக்கி ஓர்த்தென வலித்தலாயிற்று. விழுமியோர் பல கடுஞ் செயற்களுக்கும் வெகுளாமை தோன்ற 'நீரல்ல' என்றும், கீழாயினோர் கடுஞ்சொல் ஒன்றுக்கும் வெகுளாதிரா ரென்பது தோன்ற 'அதனை' என்றும் கூறினர். உராய் இறந்தகால வினையெச்சம். உரி பகுதி. உகரத்தின் திரிபாகிய ய் விகுதி. உராவுதல் - உராய்தல். ஊர் இடவாகு பெயர். கீழ் பண்பாகுபெயர்.

The great will never fret and be angry with those who are not their equals, when they begin to speak of them in a despising tone. The low-minded in similar circumstances, fret over it and make much of it. (4)

65. இளையா னடக்க மடக்கங் கிளைபொரு
ளில்லான் கொடையே கொடைப்பய—னெல்லா
மொறுக்கு மதுக்கை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

இ-ள். இளையான் - இளமைப்பருவ முடையான், அடக்கம் எ - அடங்கியொழுகுதலே, அடக்கம் - அடக்கமாம், கிளை - கிளைப்பதற்குக் காரணமாகிய, பொருள் இல்லான் - மிக்க பொருளில்லாதவன், கொடையே - கொடுத்தலே, கொடைப்பயன் - கொடையாகிய பயனும், எல்லாம் - யாவரையும், ஒறுக்கும் - வெல்லவல்ல, மதுகை - வலியையும், உரன் - அவ்வலியை (காலம் இடமறிந்து காட்டவல்ல) அறிவையும், உடைய - உடையானாகிய, ஆளன் - ஆளுதற் றொழிலுடையான், பொறுக்கும் - (பிறர் குற்றத்தைப்) பொறுத்துக்கொள்ளுகின்ற, பொறையே - பொறுமையே, பொறை - பொறுமையாம், எ - று.

பொ-ரை. இளமைப்பருவ முடையான் அடங்கியொழுகுதலே அடக்கமாம். கிளைப்பதற்குக் காரணமாகிய மிக்க பொருளில்லாதவன் கொடுத்தலே கொடையாகிய பயனும். யாவரையும் வெல்லவல்ல வலியையும், அவ்வலியைக் காலம் இடமறிந்து காட்டவல்ல அறிவையும் உடையானாகிய ஆளுதற் றொழிலுடையான் பிறர் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுகின்ற பொறுமையே பொறுமையாம் என்பது.

முதுமையோன்டக்கம், பொருளுடையான் கொடை, மதுகையுரங்களில்லான் பொறை யிவற்றினின்றும் பிரித்தலால் எ பிரிநிலை. கொடையே என்னும் ஏகாரத்தை அடக்க மென்பதனோடுங் கூட்டுக. பொருளுடைமைக்குப் பயன் கொடையே யாதலின் கொடையென வாளா கூறாது 'கொடைப்பயன்' என்றார்; பொருள் ஒருவன் பெருகுதற்குக் காரணமாதலால் கிளையென்னும் அடைகொடுத்தோதப்பட்டது. அடக்கம் அடங்குதலென்னும் பொருட்டாய்த் தன்வினைத் தொழிற்பெயரானதல்லாது பிறவினைத் தொழிற் பெயராகாமையாலும், அம் விகுதி தன்வினைப்பகுதி யோடன்றிப் பிறவினைப் பகுதியோடு புணர்தலின்மையாலும் அடக்க மென்பதற்கு அடக்குத

லெனப் பொருள் கொள்ளுதல் குற்றமென்க. கொடை, பொறை - ஐ விகுதி தொழிற்பெயர். எல்லாமென்னுந் திணைப்பொதுப்பெயர் ஒறுக்கு மென்றதனால் உயர்திணைக்காயிற்று.

The humility of the young and robust man, the charity of the man with little means, and the forgiveness of the valiant and brave man, are indeed praiseworthy. (5)

66. தல்லெறிந் தன்ன கயவர்வா யின்ஞச்சொ
லெல்லாருங் காணப் பொறுத்துய்ப்ப—ரொல்லை
யிடுநீற்றுற் பையவிந்த தாகம்போற் றத்தங்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

இ-ள். இடு நீற்றால் - (மந்திரித்து) வீசிய நீற்றினால், ஒல்லை - அவ்வீசியகாலத்தில், பை அவிந்த - (ஆடுங்காலத்து விரித்த) படம் அடங்கிய, நாகம்போல் - நாகத்தைப்போல, தம்தம் - தம்தம்முடைய, குடிமையான் - உயர்குடிப்பிறப்பின் தன்மையால், வாதிக்கப்பட்டு - வருத்தப்பட்டு, எறிந்தது கல் அன்ன - எறிந்ததாகிய கல்லே ஒத்த, கயவர்வாய் - கீழ்மக்கள் வாயினின்றும் வரும், இன்ஞச்சொல் - துன்பந் தருஞ் சொற்களை, எல்லாரும் - பகைவர் நட்பினர்களாகிய யாவரும், காண - பார்க்கையில், பொறுத்து - பொறுத்துக்கொண்டு, உய்ப்பர் - (மனத்தை நன்னெறியில்) செலுத்துவர், எ-று.

பொ-ரை. மந்திரித்து வீசிய நீற்றினால் அவ்வீசிய காலத்தில் ஆடுங்காலத்து விரித்த படம் அடங்கிய நாகத்தைப்போலத் தம் தம் மூடைய உயர்குடிப்பிறப்பின் தன்மையால் வருத்தப்பட்டு, எறிந்ததாகிய கல்லே ஒத்த கீழ்மக்கள் வாயினின்றும் வரும் துன்பந் தருஞ் சொற்களைப்பகைவர் நட்பினர்களாகிய யாவரும் பார்க்கையில் பொறுத்துக்கொண்டு மனத்தை நன்னெறியில் செலுத்துவர் என்பது.

காண என்னும் வினையெச்சம் காரண காரியப் பொருளதன்றி நிகழ்காலத்தில் வந்தது. பெருமைக் குணமில்லாரைக் கயவரென்பது வழக்கு. இன்ஞமையைத் தருஞ் சொல்லை இன்ஞச்சொலென்றது ஓர் மரபு வழுவமைதி. ஒல்லை காலவிரைவு. தனியராயிருந்த காலத்தினும் பலர் கூடியகாலத்தில் சினங் கொள்ளுதல் யாவர்க்கும் மியல்பாக, இவர் சினங் கொள்ளாத சிறப்புத் தோன்ற 'எல்லாருங் காணப் பொறுத்து' என்றார்.

The great, subjected as they are to the traditions of their birth, like the serpent whose fury is at an end when

sacred ash is thrown on it, are obliged to bear the bitter words of the low in sight of all and let them pass. (6)

67. மாற்றாராய் நின்றுதம் மாற்றற்பார்க் கேலாமை
யாற்றுமை யென்னு ரறிவுடையா—ராற்றுமை
நேர்த்தின்னு மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னு செய்யாமை நன்று.

இ-ள். மாற்றார் ஆய் நின்று - பகைவராய் நின்று, தம்மாறு - தமது பகையை, ஏற்பார்க்கு - ஏற்கத்தக்க வலியில்லார்க்கு, ஏலாமை - (அவரது பகைமை) ஏற்று நில்லாமையை, ஆற்றுமை - வலியில் லாமை, என்னுர் - என்று சொல்லார், அறிவுடையார் - பேரறிவுடை யோர், (ஆதலால்) அவர் - அவ்வலியில்லார், நேர்வித்து - (தம்மைச்) சமஞக்கிக்கொண்டு, இன்னு - துன்பந் தருவனவற்றை, செய்தக் கால் - செய்வாராயின், ஆற்றுமை - (தம்மி லெழுங் கோபத்தியைத்) தணிக்காமல், தாம் - (வலியோராகிய) தாம், பேர்த்து - மீட்டு, அவ ரை - அவரை, இன்னு செய்யாமை - துன்பந் தருவன செய்யாமை, நன்று - நன்மை தருவதாம், எ-று.

போ-ரை. பகைவராய் நின்று தமது பகையை ஏற்கத்தக்க வலியில்லார்க்கு அவரது பகைமை ஏற்று நில்லாமையை வலியில் லாமை என்று சொல்லார் பேரறிவுடையோர். ஆதலால் அவ்வலி யில்லார் தம்மைச் சமஞக்கிக்கொண்டு துன்பந் தருவனவற்றைச் செய்வாராயின் தம்மி லெழுங் கோபத் தீயைத் தணிக்காமல் வலி யோராகிய தாம் மீட்டுஅவரைத் துன்பந்தருவன செய்யாமை நன்மை தருவதாம் என்பது.

ஆற்றுமை இரண்டனுள் முன்னது எதிர்மறைத் தொழிற் பெயர்; பின்னது எதிர்மறை வினையெச்சம். மாறு ஏற்பார் என்றது மறுக்க வலியில்லாமையால் மாறு ஏற்பாராயினுஎன விளக்குதலால் ஏற்பாரை வலியில்லா ரென்னூர். இன்னுவைத்தருஞ் செயல்களே இன்னு என்றது காரியவாகுபெயர். இன்னுமை - இனிமையல் லாமை, அஃதாவது துன்பம். இங்ஙு மையீறுகெட்டுஇன்னு என நின் றது. குவ்விருதி ஏற்று நன்னு என்பதுபோல இன்னுங்ஙு எனவும் வரும். வினைமுதனிலையோடன்றி மற்ற முதனிலையோடு எதிர்மறை யாகாரம் புணராதென்னும் இலக்கண முணராதார் இன்னு என் பதில் ஆ எதிர்மறையென்பர். பேர்த்து வினைமாற்றுப் பொருள் தாகிய இடைச்சொல். அவரை என்னும் இரண்டாவதை ஏழாவ

தாகத் திரிக்கின் இன்ஞ செய்யாமையில் இன்ஞவைச் செய்யாமை என இரண்டாவதை விரிக்க.

The great won't mistake our forgiveness to our enemies and attribute it to lack of power on our part to take vengeance. If our enemies do some injury to us, it is better not to take any action against them with a view to injure them. (7)

68. நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கு—மடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் ருனே தணியுமே
சீர்கொண்ட சான்ரோர்சி னம்.

இ-ள். நீசர் வெகுளி - கீழ்மக்களுடைய கோபம், நெடுங்காலம் ஓடினும் - பலநாள் சென்ருலும், நெடுங்காலம் - இல்லாத தாகுங் காலம், இன்றி - இல்லாமல், பரக்கும் - பெருகும், சீர்கொண்ட - சிறந்த தவவொழுக்கத்தைக் கொண்ட, சான்ரோர் சினம் - (ஞர்ண நூற் கேள்வியால்) நிறைந்தவரது கோபம், அடுங்காலை - காய்ச்சுங் காலத்தில், நீர்கொண்ட - நீர்பெற்ற, வெப்பம்போல் - வெப்பத்தைப் போல, தானே தணியும் - தானே ஆறிப்போம், எ-று.

பொ-ரை. கீழ்மக்களுடைய கோபம் பலநாள் சென்ருலும் இல்லாத தாகுங்காலம் இல்லாமல் பெருகும். சிறந்த தவவொழுக்கத்தைக்கொண்ட ஞானநூற் கேள்வியால் நிறைந்தவரது கோபம் காய்ச்சுங் காலத்தில் நீர்பெற்ற வெப்பத்தைப்போலத் தானே ஆறிப் போம் என்பது.

பரக்கும் செய்யுமென்முற்று; பர பகுதி, க் சந்தி, கு சாரியை, உம் எதிர்காலவிகுதி, உகரக்கேடு சந்தி. சான்ரோர் சினத்துக்கு அடுங்காலை நீர்கொண்ட வெப்பத்தை யுவமை கூறினமையால், அது பிறர் துன்பந் தருவன செய்யுந் துணையு நிகழுமென்பதும், தானே தணியு மென்றதனுல் பிறர் வேண்டுகோளும், பேர்த்தும் இன்ஞ செய்தலுமின்றிக் கெடுமென்பது மாயிற்று. ஏ பிரிநிலை.

The anger of the low, even though it had its origin long since, will never end but go on spreading like wild fire, where as that of the great will subside (gradually) like the heat of hot water. (8)

69. உபகாரஞ் செய்ததனை யோராதே தங்க
ளபகார மாற்றச் செயினு—முபகாரம்

தாஞ்செய்வ தல்லாற் றவற்றினுற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்.

இ-ள். உபகாரஞ் செய்ததனை - (தாம்) உபகாரஞ் செய்ததை, ஓராது - உணராமல், தங்கண் - தம்மிடத்து, அபகாரம் - அபகாரத்தை, ஆற்ற - மிகவும், செயினும் - (ஒருவர்) செய்தாராயினும், உபகாரம் - உபகாரத்தையே, தாம் செய்வது அல்லால் - தாம் செய்வதல்லாமல், தவற்றினுல் - (அவர் செய்த) அபகாரத்தால், தீங்கு - (பிரதி) அபகாரத்தை, ஊக்கல் - செய்ய முயலல், வான்தோய் - விண்ணுலகத்தை அளாவிய, குடி பிறந்தார்க்கு - உயர் குடியில் பிறந்தவர்க்கு, இல் - உண்டாகாது, எ-று.

பொ-சை. தாம் உபகாரஞ் செய்ததை யுணராமல் தம்மிடத்து அபகாரத்தைமிகவும் ஒருவர் செய்தாராயினும், உபகாரத்தையே தாம் செய்வதல்லாமல் அவர் செய்த அபகாரத்தால் பிரதி அபகாரத்தைச் செய்ய முயலல் விண்ணுலகத்தை அளாவிய உயர் குடியில் பிறந்தவர்க்கு உண்டாகாது என்பது.

ஓராதென்றதனால் உபகாரம் காரணமின்றிச் செய்ததென்பது பெற்றும். தவறு முதனிலைத் தொழிற்பெயர், அது அபகாரத்தின் மேலது. வான் இடவாகுபெயர். வான்றோய் குடியென்பது "வானுயர் தோற்றம்' என்றுற்போன்ற இலக்கணை.

Even when one forgetting the good done to him, does something injurious to his benefactor, that benefactor born high as he is, will never think of doing him harm but always try to do him some good. (9)

70. கூர்த்தநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினு ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் செல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு.

இ-ள். நாய் - நாயானது, கூர்ந்து - (சினம்) மிகுந்து, கௌவிக் கொள்ள-கௌவிக்கொள்ள, கண்டும்-கண்டிருந்தும், தம் வாயால்-(கடியுண்ட) தம்முடைய வாயினால், பேர்த்துக் கௌவினர் - அதற்கு மாறாகக் கடித்தவர், ஈங்கு இல்லை - இவ்வுலகத்தில் இலர், (அது போல) கீழ்மக்கள் - கீழானவர், நீர்த்து அன்றி - இனிமையுடைய சொல்லை அல்லாமல், கீழ் ஆய - இழி பொருளைத் தருஞ் சொற்களை,

சொல்லியக்கால்-சொல்லினால், மேன்மக்கள் - மேலானோர், மீட்டு - பிரதியாக, சொல்பவோ - (கீழாய சொல்லைச்) சொல்லார், எ-று.

பொழிப்பு. நாயானது சினம் மிகுந்து கௌவிக்கொள்ளக்கண்டிருந்தும், கடியுண்ட தம்முடைய வாயினால் அதற்கு மாறாகக் கடித்தவர் இவ்வுலகத்தில் இலர். அதுபோலக் கீழானவர் இனிமையுடைய சொல்லை அல்லாமல் இழிபொருளைத் தருஞ் சொற்களைச் சொல்லினால் மேலானோர் பிரதியாகக் கீழாய சொல்லைச் சொல்லார் என்பது.

உவமை அஃது அவர்க் கியல்பென்பதை விளக்கியது. இஃது இல்பொருளுவமை. பொருளின திழிவைச்சொல்லின்மேலேற்றிக் 'கீழாய' வென்றார்; இஃது இறந்தகால வினைப்பெயர். ஓ எதிர்மறை. தம்வாயா லெனவேண்டாது கூறியவதனால், இன்சொற்களோடு பயின்றவாய் என்பது முடிந்தது. கீர்த்தென ஒருமையாற் கூறினார்; இன்சொலொன்றுங் கூறியறியா ரென்பதை யுணர்த்தற்கு.

When a dog bites one, one does not repeat the bite. So if the low people utter base words, will the great repeat them the in return? (10)

Chapter VIII—Patience

8-ஆம் அதிகாரம்: பொறையுடைமை.

அஃதாவது ஒருவன் காரணத்தினாலாயினும், அறிவின்மையாலாயினும் தம்மிடத்துக் குற்றஞ் செய்வானுயின் தாமும் அவனிடத்துக் குற்றஞ் செய்யக் கருதாமல் பொறுமை யுடையராதல். முன் சினமின்மையைக் கூறிக் குறை வருமையால் அதனையே பொறையுடைமையெனக்கூறினமையின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

71. கோதையருவிக் குளிர்வரை நன்னாட
பேதையோ டியாது முரையற்க—பேதை
யுரைப்பிற் சிதைந்துரைக்கு மொல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

இ-ள். கோதை - மாலைபோல விழுகின்ற, அருவி-அருவியினை யுடைய, குளிர்வரை - குளிர்ச்சியாகிய மலையைச் சார்ந்த, நல்நாட - நல்ல நாட்டரசனே, பேதையோடு - அறிவில்லானிடத்து, யாதும் - நன்மையைத் தருஞ் சொல்லையும், உரையற்க - சொல்லா திருக்கக் கடவாய், உரைப்பின் - சொல்லுவாயாயின், பேதை - அவ்வறிவிலான், சிதைந்து - கோபித்து, உரைக்கும் - (கடிஞ்சொல்) சொல்லு

வான், (ஆதலால்) ஒல்லும் வகையான் - கூடும் வகையினால், வழுக்கி- (அவனினின்றும்) தப்பி, கழிதலே - நீங்கிவிடுதலே, நன்று - நன்மையைத் தருவதாகும், எ-று.

பொ-ரை. மாலைபோல விழுகின்ற அருவியினையுடைய குளிர்ச்சியாகிய மலையைச் சார்ந்த நல்ல நாட்டரசனே! அறிவில்லானிடத்து நன்மையைத் தருஞ் சொல்லையும் சொல்லாதிருக்கக்கடவாய். சொல்லுவாயாயின் அவ்வறிவிலான் கோபித்துக்கடுஞ்சொல்சொல்லுவான். ஆதலால் கூடும்வகையினால் அவனினின்றும் தப்பி நீங்கிவிடுதலே நன்மையைத் தருவதாகும் என்பது.

நன்னுட என்றது ஆகூ முன்னிலை. இச் செய்யுள்கள் செய்தவர்கள் முனிவர்களாதலாற் பெண்பாலார் பெயரையும் வாயாற்கூற அஞ்சிப் பெரும்பாலும் ஆகூ முன்னிலையாற் கூறினர். பேதை பண்பாகுபெயர். ஈ தேற்றம். மூன்றனுருபு ஏழாவதனிடப் பொருளது, உருபு மயக்கமன்று.

O Chieftain of cool hilly country! Don't talk to the fool; for he will utter some nonsense. It is better to avoid him by all possible means. (1)

72. நேரல்லார் நீரல்ல சொல்லியக்கான் மற்றது
தாரித் திருத்த றகுதிமற்—றேரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலஞ்
சமழ்மையாக் கொண்டு விடும்.

இ-ள். நேர் அல்லார் - (தமக்குச்) சமனல்லாதவர், நீர் அல்ல - இனிமையல்லாத சொற்களே, சொல்லியக்கால் - சொல்லினால், (தவவொழுக்கமுடையார்) தரித்து - பொறுத்து, இருத்தல் - (தம் மனத்தை ஒழுக்கத்தில்) இருத்துதல், தகுதி - உரியதாகும், மற்றது - பொறுத்திராமையை, பொங்கு நீர் - கடலாற் சூழப்பட்ட, ஞாலம் - பூமியிலுள்ள உயர்ந்தோர், புகழ்மை ஆக - புகழின் தன்மையாக, கொள்ளாது - கருதார், சமழ்மை ஆக - இழிவின் தன்மையாக, கொண்டுவிடும் - கருதாமலிரார், எ-று.

பொ-ரை. தமக்குச் சமனல்லாதவர் இனிமையல்லாத சொற்களைச் சொல்லினால் தவவொழுக்கமுடையார் பொறுத்துத் தம் மனத்தை ஒழுக்கத்தில் இருத்துதல் உரியதாகும். பொறுத்திராமையைக்

கடலாற் சூழப்பட்ட பூமியிலுள்ள உயர்ந்தோர் புகழின் தன்மையாகச் கருதார்; இழிவின் தன்மையாகக் கருதாமலிரார் என்பது.

தவத்தின் வளர்ச்சிக்குப் பொறை இன்றியமையாத தாதலால் அவர்க்கு அதுதகுதியாயிற்று. தரித்தென்பதுதாரித்தெனநீட்டல்பெற்றது. உலகங் கண்ணுகஉடையது உணர்வு மிகுதி யுடையாரை யாதலால் ஞாலம் ஆகுபெயராய்அவரையுணர்த்திற்று.அதுசொல்லால் அஃறிணையாதலான் கொள்ளாதென அத்திணைவினைகொண்டது. பொங்கு நீர் ஞாலமென்னும் இயற்பெயர்ப்பொருளை வீசேடிக்க வந்தது. ஒவ்விசேடணம் வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர். கொண்டுவிடும் என்பதில் விடு விகுதி தீணிவுப்பொருண்மை விகுதி. இருத்தல் பிறவினைத் தொழிற்பெயர், பகுதி இருத்து. மற்று, ஒரும் அசை.

If those who are not in any way equal to us utter something undesirable, it is better for us to keep quiet. Otherwise the world would never think highly of us, but consider us to be low. (2)

73. காதலார் சொல்லுங் கடுஞ்சொ லுவந்துரைக்கு
மேதிலா ரின்சொலிற் றீதாமோ—போதெலா
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
வாவ தறிவார்ப் பெறின்.

இ - ள். போது எல்லாம் - பேரரும்புகளிலெல்லாம், மாதர் வண்டு - அழகாகிய வண்டுகள், ஆர்க்கும் - ஒலிக்கின்ற, மலிகடல் - (வளம்) நிறைந்த கடலினது, தண்சேர்ப்ப - குளிர்ச்சியாகிய துறைவனே, ஆவது - (ஒருவன்) தான் பெருதற்குக் காரணமாகிய நன்மையை, அறிவார் - அறிந்துசொல்ல வல்லாரை, பெறின் - பெற்றிருப்பானாயின், காதலார் - (தன்னிடத்து) உள்ளன்புடையார், சொல்லும் - சொல்லுகின்ற, கடுசொல் - (செவிக்கு) இனிமையல்லாத சொல், உவந்து - மேலன்பு காட்டி, உரைக்கும் - சொல்லுகின்ற, ஏதிலார் - உள்ளன்பிராதவரது, இன்சொலின் - (செவிக்கு) இனிமையாயுள்ள சொல்லினும், தீது ஆமோ - தீமையைத் தருவதாகுமோ ஆகாது; ஏ - று.

பொ-ரை. பேரரும்புகளிலெல்லாம் அழகாகிய வண்டுகள் ஒலிக்கின்ற வளம்நிறைந்த கடலினது குளிர்ச்சியாகிய துறைவனே! ஒருவன் தான் பெருவதற்குக்காரணமாகிய நன்மையை அறிந்து சொல்ல

வல்லாரைப் பெற்றிருப்பாளையின், தன்னிடத்து உள்ளன்புடையார் சொல்லுகின்ற (செவிக்கு) இனிமையல்லாதசொல் மேலன்பு காட்டிச் சொல்லுகின்ற உள்ளன்பில்லாதது (செவிக்கு) இனிமையுள்ள சொல்லினும் தீமையைத் தருவதாகுமோ ஆகாது என்பது.

முன் காதலாரென்றமையால் எதிலார் அஃதில்லாருக் காயிற்று. ஏதிலார் பண்பழியாகப் பிறந்த பெயர். எதில் பகுதி, ஏதுவினுப் பெயர். வடமொழியரயின் உகரங்கெடாது நிற்றல்வேண்டி மாதலால் அஃது அன்று. அதன் பொருள் உற்வுபாது மில்லாரென்பது. ஐக்த னுருபு எல்லேப்பொருள்து. ஓ-எதிர்மறை. ஆவது ஒன்றன் படர்க்கை எதிர்கால வினைப்பெயர். அறிவாரென்பது உயர்திணைப் பெயராதலாலும், இரண்டாம்வேற்றுமைத் தொகையாதலாலும், அறிவார்ப் பெற்றினை இயல்பின் விகாரமாயது.

O King of the sea on whose shores the bees buz in the flower plants! Is the severe reproach of those who are interested in our welfare, in any way worse than the apparently sweet words of strangers? (3)

74. அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனு
லின்புற்று வாழு மியல்பினு ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது.

இ-ள். அறிவது - அறிதற்குரிய நூல்களே, அறிந்து - (விபரீத ஐயமில்லாமல்) அறிந்து, அடங்கி - (அவை கூறிய வழியில்) அடங்கி நடந்து, அஞ்சுவது - அஞ்சவேண்டிய தீச்செயல்களே, அஞ்சி - (செய்வதற்கு) அஞ்சி, உறுவது - (தம்மை) நீங்காதனவாகிய அறங்களே, உலகு உவப்பச்செய்து - உயர்ந்தோர் (கண்டு) மகிழும்படிச் செய்து, பெறுதலால் - பெற்ற பொருள்களால், இன்பு உற்று - மகிழ்ந்து, வாழும் - வாழ்கின்ற, இயல்பினர் - இயல்புடையார், எஞ்ஞான்றும் - வறியராகிய காலத்தும், துன்பு உற்றுவாழ்தல் - துன்பத்தை யடைந்து உயிர்வாழ்தல், அரிது - இல்லே, எ - று.

பொ-ரை. அறிதற்குரிய நூல்களே விபரீத ஐயமில்லாமல் அறிந்து அவை கூறிய வழியில் அடங்கி நடந்து, அஞ்சவேண்டிய தீச்செயல்களேச் செய்வதற்கு அஞ்சித் தம்மை நீங்காதனவாகிய அறங்களே உயர்ந்தோர் கண்டு மகிழும்படி செய்து, பெற்ற பொருள்களால் மகி

ழ்ந்து வாழ்கின்ற இயல்புடையார் வழியவராகிய காலத்தும் துன்பத்தை யடைந்து உயிர் வாழ்தல் இல்லை என்பது.

அறிவது, அஞ்சுவது, உறுவது, பெறுவது என்னும் செயப்பாட்டு வினையுஞினையும் பெயர்கள் சாதியொருமை. இவற்றினிடையே பகுதிகுறி தொகுத்தல் பெற்றது. அறிதற்குரிய நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு இவற்றை உணர்த்துவன.

If one tries to know what one should know; if he is humble, if he does things in a way to be spoken well of by the world, his life in this world will never be beset with troubles. (4)

75. வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்காற்
றேற்ற வொழுக்க மொருவன்க ணுண்டாயி
னாற்றுந் துணையும் பொறுக்க பொறானெயின்
மாற்றுதே தூர விடல்.

இ-ள். இருவர் - இரண்டுபேர், வேற்றுமை இன்றி - (நான் நீ என்கிற) வேறுபாடு இல்லாமல், கலந்து நட்டக்கால் - (மனம்) கலந்து சிநேகித்தால், ஒருவன்கண் - (இருவருள்) ஒருவனிடத்து, தேற்றாத ஒழுக்கம் - (மற்றவர்க்கு) அறிவிக்கக்கூடாத தீய ஒழுக்கம், உண்டாயின் - உளதானால், ஆற்றும் துணையும் - (மற்றவன்) பொறுத்துக்கொள்ளுமளவும், பொறுக்க - பொறுத்துக்கொள்ளக் கடவன், பொறான் ஆயின் - பொறுத்துக்கொள்ளக் கருத்திலனானால், தாற்றாதே-(செய்தவனது தீய ஒழுக்கத்தைப்) பலரறியச் சொல்லாமலே, தூரவிடல் - (அவனது நட்பைத்) தூரவிடக்கடவன், எ - று.

பொ-ரை. இரண்டுபேர் நான் நீ என்கிற வேற்றுபாடு இல்லாமல் மனம் கலந்து சிநேகித்தபின் இருவருள் ஒருவனிடத்து மற்றவர்க்கு அறிவிக்கக்கூடாத தீய ஒழுக்கம் உளதாயின் மற்றவன் பொறுத்துக் கொள்ளுமளவும் பொறுத்துக்கொள்ளக்கடவன். பொறுத்துக் கொள்ளக் கருத்திலனானால் செய்தவனது தீய ஒழுக்கத்தைப் பலரறியச் சொல்லாமலே அவனது நட்பைத் தூர விடக்கடவன் என்பது.

தேற்றாத வொழுக்கத்தை இவன் தாற்றுவானெயின் அதனாலுண்டாம் மானக்கேடும், அவனைப் பலகாலம் பலவழியால் ஆராய்ந்து நட்புக்கொண்டிலனென்னும் பழிப்பும் தன்னைச் சார்தலால் தாற்றாதே எனப் பிரிநிலை ஏகாரம் கொடுத்தோதினர். தேற்றாத என்னும் வினை

தன்வினை பிறவினை இரண்டுக்கும் பொதுவாதலால், அதற்கு அறிந்து செய்யாத எனவும் உரைக்க. பிறவினையானபோது காரியப்பொநட்டமுய்ச் செயப்படுபொருள் கொண்டதெனவும் தன்வினையாய் நின்றபோது காரணப்பொருட்டாய்க் காரியப்பெயர் கொண்டதெனவும் கொள்க.

If two men of the same temperament become friends, and if the conduct of one of them is found afterwards to be untrustworthy, it is better for the other to put up with the conduct of his friend as far as possible; if it is found difficult, it is better to leave him aloof without exposing his weakness. (9)

76. இன்ன செயினு மினிய வொழிகென்று
தன்னையே தாழ்வி னல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் வில்ல லரிது.

இ-ள். கானக நாட - காட்டைச்சார்ந்த நிலத்தையுடையானே, விலங்கிற்கும் - மிருகங்களுக்கும், வில்லல் - (மருவியிருந்து) பிரிதல், அரிது - இலது, (ஆதலால்) இன்னசெயினும் - (நட்பினர்) துன்பந் தருவனவற்றைச் செய்தாராயினும், இனிய - (நாம் முன்செய்த தீவினைப்பயன் இவர் வழியாக வந்தன ஆதலால்) அவை இனிமையுடன், ஒழிக என்று - (நீங்கென்று கொள்ளுதலே) ஒழியக்கடவோமென்று, தன்னையே - (அத்தீவினைசெய்த) உன்னையே, தான் நோவின் - நீ நொந்துகொள்ளுதலினின்று, அல்லது - நீங்கி அவரை நொந்துகொள்ளுதலில், துன்னி - சார்ந்து, கலந்தாரை - நட்டோரை, கைவிடுதல் - கைவிடாதே, எ - று.

பொ-ரை. காட்டைச்சார்ந்த நிலத்தையுடையானே! மிருகங்களுக்கும் மருவியிருந்து பிரிதல் இலது. ஆதலால் நட்பினர் துன்பந் தருவனவற்றைச் செய்தாராயினும், நாம் முன் செய்த தீவினைப்பயன் இவர் வழியாக வந்தன ஆதலால் அவை இனிமையுடன் நீங்கென்று கொள்ளுதலே ஒழியக்கடவோமென்று அத்தீவினை செய்த உன்னையே நீ நொந்துகொள்ளுதலினின்று நீங்கி அவரை நொந்துகொள்ளுதலில் சார்ந்து நட்டோரைக் கைவிடாதே என்பது.

ஏ-பிரிநிலை. நோ-முதனிலைத் தொழிற்பெயர். ஐந்தனுருபு நீக்கற்பொருளது. அல்லது குறிப்பு வினைப்பெயர். துன்னி என்னும் இறந்தகால வினையெச்சம் கைவிடுதலென்னும் ஏவலொருமை எதிர்

மறை வினைகொண்டது; ஒருசொல்லின் தன்மையதாகிய கைவிடு பகுதி, து சாரியை; அல் எதிர்மறை ஏவலொருமை விகுதி; உகரக் கேடு சந்தி. விலங்கு முதனிலைத் தொழிலாகுபெயர். செயினுமென்ற உம்மை செய்யாமையின் மிகுதியை விளக்கி நிற்றலால் எதிர்மறை விலங்கிற்கு மென்றது இழிவுசிறப்பும்மை. தான், தன் முன்னிலையில் படர்க்கைவந்த வழுவமைதி.

O Lord of wood lands! If a friend does a harmful act to us it will be better to take it in good part, and to thank ourselves for having once associated with him, and to put out our anger. It is not good to abandon our friends. Even among animals, the tie of friendship is strong and unbreakable. (6)

77. பெரியார் பெருநட்புக் கோடலுஞ் செய்த
வரிய பொறுப்பவென் றன்றே—வரியரோ
வொல்லெ னருவி யுயர்வரை நன்னாட
நல்ல செய்வார்க்குத் தமர்.

இ-ள். ஒல் என - ஒல்லென ஒலிக்கும், அருவி - அருவியை யுடைய, உயர்வரை நல் நாட - உயர்வாகிய மலையைச்சார்ந்த நல்ல நாட்டை யுடையானே, நல்ல - (நட்டோர்க்கு) இதமாயினவற்றை, செய்வார்க்கு - செய்பவர்க்கு தமர் - உறவாவோர், அரியரோ - இலரோ (பலருளர்), பெரியார்-பெருமைக்குணமுடையாரது, பெரு நட்பு - மேன்மையாகிய நட்பினை, கோடல்-(சிறியோர்) தேடிக்கொள்ளுதல், தாம் செய்த - (அறிவின் சிறுமையால்) தாம்செய்த, அரிய - பிறரால் (பொறுத்தல்) கூடாத தீயசெயல்களை, பொறுப்ப என்று அன்றே - பொறுப்பார்களென்று கருதியேயாம், எ-று.

பொ-ரை. ஒல்லென ஒலிக்கும் அருவியையுடைய உயர்வாகிய மலையைச்சார்ந்த நல்ல நாட்டை யுடையானே! நட்டோர்க்கு இதமாயினவற்றைச் செய்பவர்க்கு உறவாவோர் இலரோ பலருளர். பெருமைக்குணமுடையாரது மேன்மையாகிய நட்பினைச் சிறியோர் தேடிக்கொள்ளுதல் அறிவின் சிறுமையால் தாம்செய்த (பிறரால் பொறுத்தல் கூடாத) தீயசெயல்களைப் பொறுப்பார்களென்று கருதியேயாம் என்பது.

ஆதலால் பெரியார் பெறையுடையராயிருத்தல் வேண்டுமென்பது இசையெச்சம். என்று இடைச்சொல்லியாகப் பிறந்த இறந்தகால வினையெச்சம். என் பகுதி, ற் இறந்தகால இடைநிலை, உ வினை

யெச்சவிகுதி. அன்று என்னும் பண்படியாகப்பிறந்த ஒன்றன்படர்க் கைக் குறிப்பு வினைமுற்றுக்கு வினைமுதல் கோடல். ஓ-எதிர்மறை. இவ்விரண்டு எதிர்மறையுங் கூடித் தேற்றப்பொருள் தந்தன. அறிய ரோ என்பதும் அது.

O King of the country possessing lofty hills giving rise to good many noisy torrents! Is it not with a view that the great will forgive (the faults of others) that association with them is sought after? Is it difficult to find associates to those who always do good acts?

78. *வற்றிமற் றூற்றப் பசிப்பினும் பண்பிலார்க்*
கற்ற மறிய வுரையற்க—வ்ற்றம்
மறைக்குந் துணையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிவிலா தார்.

இ-ள். வற்றி - (உண்ட உணவு) முழுதும அற்றமையால், ஆற்ற மற்றுப் பசிப்பினும் - மிகுதியும் பசித்தாலும், பண்பு இல்லார்க்கு - (அப்பசியை நீக்கவல்ல) இயல்பில்லாதவர்க்கு, அற்றம் - (தமது) இல்லாமையை, அறிய - (அவர்) அறிந்துகொள்ளும்படி, உரையற்க - வெளிப்படுத்தா தொழியக்கடவர், தம்மை - தம்முயிரை, துறக்கும் - விடவல்ல, துணிவு இல்லாதார் - துணிவில்லாதவர், அற்றம் - இல்லாமையை, மறைக்கும் - இல்லாமற்செய்யவல்ல, துணையார்க்கு - நட்பினர்க்கு, உரைப்ப - சொல்லுவார், எ-று.

பொ-ரை. உண்ட உணவு முழுதும் அற்றமையால் மிகுதியும் பசித்தாலும் அப்பசியை நீக்கவல்ல இயல்பில்லாதவர்க்குத் தமது இல்லாமையை அவர் அறிந்துகொள்ளும்படி வெளிப்படுத்தா தொழியக்கடவர். தம்முயிரை விடவல்ல துணிவில்லாதவர் இல்லாமையை இல்லாமற்செய்ய வல்ல நட்பினர்க்குச் சொல்லுவார் என்பது.

தம்மைத் துறக்குந் துணிவுள்ளார் அவர்க்கும் உரையாரென்பது குறிப்பெச்சம். வற்றி காரணப்பொருட்டாகிய இறந்தகாலச்செயவெனெச்சத்திரிபு. இல்லார்பசி காலமுறை தவறுது உண்பார்பசியினுந் துன்புஞ் செய்வதாதலால் மற்றுப்பசிப்பினு மென்றும், பொருட்டில் மறைக்குந் துணையார்க் குரைத்தல் தமக்குக் கருத்தன்மையின் உரைக்க என்னுமல் உரைப்ப என்றுங் கூறினர். மற்று வினைமாற்றுப்பெயருளது. அற்றம் தொழிற்பெயர். அறு பகுதி, அம் புடைபெயர்ச்சி விகுதி, பகுதி முற்றியலுகரமாதலால் நகரமிரட்டல் விரித்தல்விகா

சம், உகரக்கேடு சந்தி. எ-ஈற்றசை. மானங்கெடாத இரவுங் கூடா தென்பது கருத்து. வற்றி என்பதற்கு உடல் இளைத்த என உரைத் தலுமாம்.

Even though one starves to death, it is better for him not to go and beg at the doors of the unsympathetic. Those who would not rather die of hunger, should go to those who would not despise and expose them. (8)

79. இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினு
மின்பத்தின் பக்க மிருந்தைக்க —வின்ப
மொழியாமை கண்டாலு மோரங்கருவி நாட
பழியாகா வாறே தலை.

இ-ள். ஒங்கு அருவி நாட - உயர்ந்த அருவியையுடைய நாட் டானே, இன்பம் - இன்பத்தை, பயந்த - தந்த, ஆங்கு - அவ்வொழுக் கத்தில், இழிவு - துன்பம், தலை - நின்னிடத்து, வரினும் - நேரிடி னும், இன்பத்தின் பக்கம் - இன்பத்தின் பக்கத்தில், இருந்தைக்க - விரும்பினின்ற உனக்கு, இன்பம் ஒழியாமை - (ஒரொழுக்கத்தில்) இன்பம் இடைவிடாது வருதலை, கண்டாலும் - அறிந்தாலும், பழி - (அறிவுடையோரால்) பழித்தல், ஆகாத ஆறே - உண்டாகாத ஒழுக் கமே, தலை - தலைமையானது, எ-று.

பொ-ரை. உயர்ந்த அருவியையுடைய நாட்டானே! இன்பத் தைத் தந்த அவ்வொழுக்கத்தில் துன்பம் நின்னிடத்து நேரிடினும் இன்பத்தின் பக்கத்தில் விரும்பினின்ற உனக்கு ஒரொழுக்கத்தில் இன்பம் இடைவிடாது வருதலை அறிந்தாலும் அறிவுடையோரால் பழித்தல் உண்டாகாத ஒழுக்கமே தலைமையானது என்பது.

ஆதலால் பழியாகாத ஆற்றிலே ஒழுகுக என்பது இசை யெச் சம். இன்ப துன்பங்களிரண்டில் ஒருவர் விழைவது இன்பமேயா மாதலின், 'இன்பத்தின் பக்க மிருந்தைக்க' என்றும், இன்பம் ஒழியாது வருதலின் அருமை நோக்கி 'ஒழியாமை கண்டாலும்' என் றும் கூறினர். முன்னது இறந்தது தழீஇய எச்சவும்மை, பின்னது எதிர்மறையும்மை. இருந்தை என்னு முன்னிலை யொருமை யிறந்த காலவினைப்பெயர். இருந்தைக்கு எனக் குவ்வுருபேற்று, "கு ஐ ஆனென்வரூஉமிறுதி, அ ஓடு சிவணுஞ் செய்யுளுள்ளே" என்பதி னோத்தாதலின் அக்குவ்வுருபு அகரத்தைப் பொருந்தி இருந்தைக்க என

கின்றது. இதனை வியங்கோள் வினையாக்கி உரைக்கினும் பொருந்தும்.

If something is at first capable of giving pleasure and afterwards of producing great calamity, that pleasure is no pleasure at all. Even if the pleasure is enduring for ever, it is better if it is not blameworthy. (9

80. தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணுர்கைத் துண்ணற்க—வான்க
வையக மெல்லாம் பெறினு மூரையற்க [விந்த
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

இ-ள். தான் கெடினும் - (ஒருவன்) தான் கெடுவானாயினும், தக்கார் கேடு - மேலோர் கெடுதலை, எண்ணற்க - ஆராயாதொழியக்கடவன், தன் உடம்பின் - தன்னுடலினது, ஊன் கெடினும் - தசை யழிவதாயினும், உண்ணுர் கைத்து - அநுபவிக்கத் தகாதவருடைய பொருளை, உண்ணற்க - அநுபவியாதிருக்கக்கடவன், வான் கவிந்த - ஆகாயத்தால் கவியப்பட்ட, வையகம் எல்லாம் - பூமி முழுமையும், பெறினும் - பெறுவானாயினும், பொய்யோடு - பொய்யுடன், இடைமிடைந்த - இடையில் கலப்புற்ற, சொல் - சொற்களை, உரையற்க - சொல்லா தொழியக்கடவன், எ-று.

போ-பா. ஒருவன் தான் கெடுவானாயினும் மேலோர் கெடுதலை ஆராயா தொழியக்கடவன். தன்னுடலினது தசை யழிவதாயினும் அநுபவிக்கத் தகாதவருடைய பொருளை அநுபவியாதிருக்கக் கடவன். ஆகாயத்தால் கவியப்பட்ட பூமி முழுமையும் பெறுவானாயினும் பொய்யுடன் இடையில் கலப்புற்ற சொற்களைச் சொல்லா தொழியக்கடவன் என்பது.

தக்கார் கெடுதலால் தன்கேடும், உண்ணுர் கைத்துண்ணலால் தன்னுடம்பின் ஊன்கேடும் ஒழிதலும், பொய்யோ டிடைமிடைந்த சொல் உரைத்தலால் வையகமெல்லாம் பெறுதல் கூடுதலும் உளவாவன ஆயினும் அவை செய்யற்க என்பது. உம்மைகள் மூன்றும் உயர்வுசிறப்பு. உண்ணத்தகாதார் தெய்வம், குரு, தன்னைத் தேறினோர், எளியர் முதலானோர். கைத்து என்பதில் அத்துச்சாரியை னைக்கொண்டு உண்ணுர் கைத்துண்ணற்க என்பதற்கு உண்ணத் தகாதவரிடத் துண்ணற்க என வுரைத்தலும் பொருந்தும். கைத்து இடமடியாகப் பிறந்த பெயர்; கை பகுதி, த் சந்தி, து ஒன்றன் பட்டர்

க்கை விகுதி. வையகமெல்லாம் ஒருமையிற் பன்மை வந்த வழுவமைதி.

If it so happens that one is to be ruined, he should not think of ruining others. Even if one's body is being reduced in size, he should not feed it with food received from unworthy hands. Even though one is to possess all the worlds, he should not utter words mixed with lies. (10)

Chapter IX—Aginst Adultery

9-ம் அதிகாரம்: பிறர்மனை நயவாமை.

அஃதாவது காம மயக்கத்தால் பிறருடைய மனையாளை விரும் பாமையை யுணர்த்துவது. துறவியர் தாம் விட்ட காம வின்பத்தை மீண்டும் கொள்ளல் கூடாமைபற்றி இஃது அதன்பின் வைக்கப்பட்டது. இதுவும் பொது.

81. அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவா
னிச்ச நினையுங்காற் கோக்கொலைபா—னிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்றூர
நம்பற்க நாணுடை யார்.

இ-ள். அச்சம் - (பிறன் மனையாளை விரும்பி ஒழுக்கால் வரும்) அச்சம், பெரிது - பேரளவை யுடையது, அதற்கு - அவ்வச்சத்தி னளவுக்கு, இன்பம் - (அவ்வொழுக்கத்தால் வரும்) இன்பம், சிறு அளவு - சிறிய அளவை யுடையது, நிச்சம் - அவ்வொழுக்கத்தின் உண்மையை, நினையுங்கால் - ஆராயுமிடத்து, கோ - அரசனால், கொலை - வருத்துதலுளது, நிச்சலும் - எப்போதும், கும்பிக்கே - கும்பிபாகமென்னும் நரகத்துக்கே, கூர்த்த - காரணமாய் மிகுந்த, வினை - பாவமுளது, (ஆதலால்) நாண் உடையார் - (பகை பழி பாவங்களுக்கு) அஞ்சுதலுடையார், பிறன் தாரம் - பிறனுடைய மனையாளை, நம்பற்க - விரும்பாதிருக்கக்கடவர், எ-று.

பொ-ரை. பிறன் மனையாளை விரும்பி ஒழுக்கலால் வரும் அச்சம் பேரளவை யுடையது. அவ்வச்சத்தி னளவுக்கு அவ்வொழுக்கத்தால் வரும் இன்பம் சிறிய அளவை யுடையது. அவ்வொழுக்கத்தின் உண்மையை ஆராயுமிடத்து அரசனால் வருத்துதலுளது. எப்போதும் கும்பிபாகமென்னும் நரகத்துக்கே காரணமாய் மிகுந்த பாவமுளது. ஆதலால் பகை பழி பாவங்களுக்கு அஞ்சுதலுடையார் பிறனுடைய மனையாளை விரும்பாதிருக்கக்கடவர் என்பது.

எப்போது மென்றது நினைத்தல், முயலுதல், உண்ணுதல் நிக ழுங்காலத்தை. சூம்பிபாகமென்பது கும்பி எனக் குறைந்து நின்றது. ஏ-பிரிநிலை. குவ்வுருபு இரண்டில் முன்னது ஐந்தாவதற்குரிய எல் லைப் பொருளது; பின்னது நிமித்தகாரண காரியப்பொருளது. நம் பற்க நசையுங்கிய குறிப்புணர்த்தும் உரியடியாகப் பிறந்த எதிர்மறை வியங்கோள்.

Fear of detection is great (in the act of committing adultery); the pleasure of such stealthy enjoyment is little. Slight thought will show that we have to pay our head for it. This is an action which will carry us to the hell. Therefore let those who have their honour to protect, not depend upon their neighbours' wives for pleasure. (1)

82. அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்ஞர நச்சுவார்ச் சேரா—பிறன்ஞர
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.

இ-ள். அறம் - அறமும், புகழ் - புகழும், கேண்மை - நட்பும், பெருமை - பெருமித நடையும், இந்நான்கும் - ஆகிய இந்நான்கும், பிறன் தாரம் - பிறனுடைய மனையாளை, நச்சுவார் - விரும்பி நடக்கு மியல்பினரை, சேரா - அடையா, பிறன் தாரம் - பிறன் மனையாளை, நச்சுவார் - விரும்பி நடக்கும் அவ்வியல்பினரை, பாவம் - பாவமும், பழி - குடிப்பழியும், பகை என்று - பகையும், அச்சத்தோடு - அஞ்சி நடத்தலோடு, இந்நாற்பொருள் - இந்நான்கு பொருளும், சேரும் - (தாமே வந்து) அடையும், எ-று.

பொ-ரை. அறமும், புகழும், நட்பும், பெருமித நடையும் ஆகிய இந்நான்கும் பிறனுடைய மனையாளை விரும்பி நடக்கு மியல் பினரை அடையா. பிறன் மனையாளை விரும்பி நடக்கும் அவ்வியல் பினரைப் பாவமும், குடிப்பழியும், பகையும், அஞ்சி நடத்தலோடு இந் நான்கு பொருளும் தாமே வந்தடையும் என்பது.

அறம், புகழ், கேண்மை, பெருமை யென்பவற்றிற் சேற்கப் பாவம், பழி, பகை, அச்சம் என்பவை முறை நிரனிறையாயினும் செய்யுள் நோக்கிப் பிறழவைத்தனர். பாவமென்னும் பண்பும், பகை, பழி, அச்சமென்னும் தொழிலும் பொருளென்றது நியாய நூலார் மதம்பற்றி. பெருமையும், அச்சமும் நடையின்மேனின்றன. மூற் றும்மை விகாரத்தால் தொக்கது.

Charity, praise, friendship, & greatness—all these four can never be the attributes of those who seek to enjoy another's wife. What will adhere to such people are these four, *viz.* hatred, disgrace, guilt and fear. (2)

83. புக்கவிடத் தச்சம் போதருமேபோ தச்சந்
துய்க்குமிடத் தச்சந் தோன்றுமற்—கைப்பச்ச
மெக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில் புகல்.

இ-ள். புக்க இடத்து-(பிறன் மனையாளை விரும்பிப்) புகுந்ததனியிடத்தில், அச்சம் - அச்சமுளது, போதரும் போது - தன்னிடம் மீண்டு வரும்போது, அச்சம் - அச்சமுளது, துய்க்குமிடத்து - அநுபவிக்கையில், அச்சம் - அச்சமுளது, தோன்றுமல் - (அத்தியோழுக்கம்) வெளிப்படாதபடி, காப்பு - காத்துக்கொள்ளுதலில், அச்சம் - அச்சமுளது, எக்காலும் - எக்காலத்திலும், அச்சம் தரும் - (அவ்வொழுக்கம்) அச்சத்தைத் தரும், உட்கான் - இவ்வச்சங்களைக் கருதாதவனுகி, பிறன் இல் - பிறன் மனையாளிடத்து, புகல் - விரும்பிச் செல்லல், எவன் - எத்தன்மையது, எ-று.

போ-வை. பிறன் மனையாளை விரும்பிப் புகுந்த தனி யிடத்தில் அச்சமுளது. தன்னிடம் மீண்டு வரும்போது அச்சமுளது. அநுபவிக்கையில் அச்சமுளது. அத்தியொழுக்கம் வெளிப்படாதபடி காத்துக்கொள்ளுதலில் அச்சமுளது. எக்காலத்திலும் அவ்வொழுக்கம் அச்சத்தைத் தரும். இவ்வச்சங்களைக் கருதாதவனுகிப் பிறன் மனையாளிடத்து விரும்பிச் செல்லல் எத்தன்மையது என்பது.

துய்க்குமிடத்து நிகழ்கால வினையெச்சம். துய் பகுதி, க் சந்தி, கு, உம் சாரியை, உகரச்கேடு சந்தி, இடத்து நிகழ்கால வினையெச்சவிகுதி. முன்னுள்ள அச்சம் நான்கனோற்றில் உளது சொல்லெச்சம். எக்காலு மென்பதில் உம்மை முற்றுதலால் எகரவினு எஞ்சாமைப் பொருளது. எக்காலுமச்சந் தருமெனவே பிறர்மனை நயத்தலால் இன்பஞ் சிறிதுமில்லை யென்பது. போதரு மென்பதில் போ படர்க்கையிடத்துச்சொல்லாயினும் அதனுலே தா என்னும் தன்மையிடத்துச் சொல் புணர்ந்து போதா என ஒருசொற் றன்மைப்பட்டு இவ்விடத்துக்குரியதாயிற்று. தன்மை என்றது அண்மையை.

There is fear when you enter another's house with this evil intent. When you near her (neighbour's wife) there is again the fear of detection. Even when you enjoy her, there is similar

fear. To keep your action secret is another point to be feared. As this enjoyment is ever productive of fear, how is that people, without ever thinking of it, try to enjoy another's wife ? (3)

84. காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறைபுங்
மாணின்மை செய்யுங்கா லச்சமா—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
வின்ப மெனக்கெனைத்தாற் கூறு.

இ-ள். காணின் - (பிறன்மனைமேலே விரும்பிச் செல்லுதலே அயலவர்) காண்பாராயின், குடி - நினது குடிக்கு, பழி ஆம் - பழி உளதாகும், கை உறின் - (கொண்டோன் முதலியோர்) கையிலகப்பட்டால், கால் குறையும் - கால் குறைபடும், ஆண் இன்மை - ஆண்மையில்லாமையாகிய தீயொழுக்கத்தை, செய்யுங்கால் - செய்யாநிற்கையில், அச்சம் ஆம் - அச்சமுளதாம், நீள் நிரயம் - பெருநரகத்தினது, துன்பம் - துன்பத்துக்குக் காரணமாகிய பாவத்தை, பயக்கும் - (அவ்வாணின்மை) தரும், துச்சாரி - தீயொழுக்க முடையோனே, நீகண்ட இன்பம் - நீ அநுபவித்த இன்பம், எனைத்து - எவ்வளவையுடையது, எனக்குக் கூறு-(அவ்வொழுக்கத்தை இகழும்) எனக்குச்சொல், எ-று.

போ-ரை. பிறன்மனையாளே விரும்பிச் செல்லுதலே அயலவர் காண்பாராயின் நினதுகுடிக்குப் பழியுளதாகும். கொண்டான்முதலியோர் கையிலகப்பட்டால் கால் குறைபடும். ஆண்மையில்லாமையாகிய தீயொழுக்கத்தைச் செய்யாநிற்கையில் அச்சமுளதாம். பெருநரகத்தினது துன்பத்துக்குக் காரணமாகிய பாவத்தை அவ்வாணின்மை தரும். தீயொழுக்கமுடையானே ! நீ அநுபவித்த இன்பம் எவ்வளவையுடையது (அவ்வொழுக்கத்தை இகழும்) எனக்குச் சொல் என்பது.

எனவே அத்தீயொழுக்கம் இம்மை மறுமையிரண்டிடத்தும் துன்பந் தருமென்பதாயிற்று. இத்தீயொழுக்கத்தைப் பரதாதமென்னும் இன்பநூலுடையானை நோக்கிக் கூறியது இச்செய்யுள். பிறன்மனையடைதற் பொருட்டுத் திரிவது காலாதலால் அதன்மேல் வைத்துக் கால் குறையு மென்றாராயினும் அதனை உபலக்கணமாகக் கொண்டு ஏனையுறுப்புங் குறையுமெனவுங் கொள்க. உட்பகையாகிய காமத்தை அடக்கும் திண்மையில்லாமல் அதற்குள்ளாகி யொழுகலே 'ஆணின்மை' என்றார். செய்யுங்காலென்பதும் நிகழ்கால வினையெச்சம். காரணமாகிய பாவித்தைக் காரியமாகிய துன்பமென்றது உபசார வழக்கு.

If anybody find you out in the act, there is the stigma that will ever be attached to the family. If you are caught hold of, there is the fear of your limbs being cut off. There is the fear when you enjoy. As this act will carry you to the hell and make you suffer, O man of evil action! What is the nature of the pleasure which you derive from such enjoyment? Please tell me. (4)

85. செம்மையொன் றின்றிச் சிறியர் தினத்தராய்க்
கொம்மை வரிமுலையா டோண்மரீஇ—யும்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றூரே யிம்மை
யலியாகி யாடியுண் பார்.

இ-ள். உம்மை - முற்பிறப்பில், சிறியார்-கீழோருடைய, இனத்தர் ஆய் - கூட்டத்தோடு நட்புச் செய்தவராகி, செம்மை ஒன்றும் - நடுவுநிலைமை சிறிதும், இன்றி - இல்லாமல், வரி - தொய்யிலாகிய கோல மெழுதிய, கொம்மை முலையாள் - வட்டமாகிய முலையையுடைய பெண்ணினது, தோள் மரீஇ - தோள்களை விரும்பி, வலியால் - (பொருளுடல்களினது) வலியினால், பிறர் மனைமேல் - பிறர் மனையாளாகிய அவளிடத்து, சென்றூரே - சென்றவரே, இம்மை - வருபிறப்பில், அலி ஆகி - பேடிகளாகி, ஆடி - நடனஞ்செய்து, உண்பார் - (அதனால் வரும் பொருளால்) உயிர் வாழ்பவர், எ-று.

பொ-ரை. முற்பிறப்பில் கீழோருடைய கூட்டத்தோடு நட்புச் செய்தவராகி நடுவுநிலைமை சிறிதும் இல்லாமல் தொய்யிலாகிய கோல மெழுதிய வட்டமாகிய முலையையுடைய பெண்ணினது தோள்களை விரும்பிப் பொருளுடல்களினது வலியினால் பிறர் மனையாளாகியஅவளிடத்துச் சென்றவரே வருபிறப்பில் பேடிகளாகி நடனஞ் செய்து அதனால் வரும் பொருளால் உயிர்வாழ்பவர் என்பது.

அவாவுதற்குக் காரணமாதல்பற்றிக் கொம்மை வரியென விசேடணந்தந்து 'முலையாள்' எனவும், பொருளுடல்களினது வலியுடையாராஞ் சிறப்புத்தருதிச் 'சென்றூர்' எனவும், சென்ற இழிபு கருதி 'அலி' என்னும் கூறினர். சென்றூர், அலி முறையே சிறப்பு இழிப்புதலைப் பற்றி வந்த பால்வழுவமைதிகள். நடுவு நிலைமையாவது தன் மனைவியைப் பிறனொருவன் கூடப் பொறுதவன் அது பிறனுக்கு முண்டெனக் கருதிச் செய்யாமை. ஒன்றென்பது ஈற்றில் இழிவு சிறப்புமும்மை தொகுத்தல். மருவல் - விரும்புதல். பிறர்மனை சுட்டுப்பொருளது. ○

Those who, in their former birth, had no pure heart, kept bad company, enjoyed women of beauty, and forced another's wife to yield to their wishes, are the people who are now born as eunuchs and suffer. (5)

86. பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிப்புக்க—மெல்லியற்
காதன் மனையாளு மில்லாளா மென்னெருவ்
னேதின் மனையாளை நோக்கு.

இ-ள். நாள் கேட்டு - (தந்தை முதலியோர்) நல்லநாள் விசாரித்து, பல்லார் - (உறவினர் முதலிய) பலரும், அறிய - அறியும்படி, பறை அறைந்து - பறை கொட்டுவித்து, கல்யாணம் செய்து - கல்யாணஞ் செய்யப்பட்டமையால், கடி புக்க - (தன்னு விடப்பட்ட) காவலிலுள்ள, காதல் - தன்னிடத்து விருப்பமுள்ள, மெல் இயல் - மென்மையாகிய தன்மையுடைய, மனையாளும் - மனைவியும், இல்லாள் ஆக - தன் மனையினிடத்து இருக்கையில், ஒருவன் - ஒருவன், ஏதில் மனையாளை - அயலான் மனைவியை, நோக்கு - கருதுதல், என் - யாதுகாரணம், எ-று.

பொ-ரை. தந்தை முதலியோர் நல்லநாள் விசாரித்து உறவினர் முதலியபலரும் அறியும்படி பறைகொட்டுவித்துக் கல்யாணஞ் செய்யப்பட்டமையால் தன்னுலிடப்பட்ட காவலிலுள்ளதன்னிடத்து விருப்பமுள்ள மென்மையாகிய தன்மையையுடைய மனைவியும் தன் மனையினிடத்து இருக்கையில் ஒருவன் அயலான் மனைவியைக் கருதுதல் யாது காரணம் என்பது.

அறைந்து என்பதில் பிறவினை விகுதியாகிய விவ்விகுதியும், கல்யாணஞ் செய்து என்பதில் செயப்பாட்டு வினைப்பொருண்மை விகுதியாகிய படு விகுதியுந் தொகுத்தலாயின. பின்னுள்ள வினையெச்சம் காரணப் பொருட்டாகிய செயவெனெச்சத்திரிபு. தனக்குப் பணிந்து நடக்கும் ஒழுக்கமும், தன்னின் இளமையு முடையாளென்பார் 'மெல்லியன் மனையாள்' என்றார். பருதிப்பொருள் விகுதியாகிய மையீறு கெட்ட ஏதின்மை பண்பாகுபெயர். உம்மை உயர்வு சிறப்பு. பல்லாரென்பத னீற்றில் முற்றும்மை தொகுக்கப்பட்டது.

When there is in the house the wife who has been united to one in lawful wedlock, on an auspicious day, amidst rejoicings, the blowing of trumpets and the beating of drums, why should one go in search of another's wife? (6)

87. அம்ப லடுலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பு
நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
றலைநக்கி யன்ன துடைத்து.

இ-ள். அயல் - அயலிலுள்ளார், அம்பல் எடுப்ப-தன்பழி யெடுத்துக் கூறவும், தமர் - (அஃதறிந்த) உறவினர், அஞ்சி - பயந்து, பரீஇ-வருந்தவும், வம்பலன் - பிறனுடைய, பெண் - மனையாளை, மரீஇ - சேர்ந்து, மைந்து - பாவமாகிய குற்றத்தை, உற்று - அடைந்து, நம்பும் - அவ்விருப்பமும், நிலைமை இல் - நிலைத்த வின்மையாகிய, நெஞ்சத்தான் - மனமுடையானது, துப்புரவு - அநுபவம், பாம்பின் தலை - விடப் பாம்பினது தலையை, நக்கினல் அன்னது - நக்கினாலொத்த அபாயத்தை, உடைத்து - உடையது, எ-று.

பொ-ரை. அயலிலுள்ளார் தன் பழியெடுத்துக் கூறவும் அஃதறிந்த உறவினர் பயந்து வருந்தவும் பிறனுடைய மனையாளைச் சேர்ந்து பாவமாகிய குற்றத்தை யடைந்து அவ்விருப்பமும் நிலைத்த வின்மையாகிய மனமுடையானது அநுபவம் விடப்பாம்பினது தலையை நக்கினாலொத்த அபாயத்தை யுடையது என்பது.

அவ்விருப்பமும் நிலைத்தலில்லாமை என்றது முன்மருவின பிறன்மனைவிபால் வைத்த விருப்பம் சின்னாள் சென்றபின் குறைந்து வேறு பிறன்மனைவிபால் வைத்தல்பற்றி. உம்மை இழிவு சிறப்பு. நம்பு விருப்பாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொல். உவமையால் ஒருகாலத்து மரணமும் நேருமென்பது. பரீஇ செயவெனச்சித் திரிபு. வம்பலன் உரியடியாகப் பிறந்தபெயர்; வம்பு (நிலையின்மை) பகுதி, அல் சாரியை, அன் ஆண்பாற் படர்க்கை விகுதி, உகரக்கேடு சந்தி. இதன்பொருள் நட்புப்பகை யிரண்டும் நிலையில்லான் என்பது. இஃது இங்குப் பிறனென்னும் பொருளில் வந்தது.

The pleasure which one seeks in another's wife, subjecting himself to the contempt of others, and putting his relatives to a miserable plight, is something like the pleasure expected when one licks the head of a serpent (with a view to get the gem.)(7)

88. பரவா வெளிப்படா பல்லோர்கட் டங்கா
வுரவோர்கட் காமநோ யோஎ கொடிதே
விரவாரு ணணுப் படலஞ்சி யார்து
மூரையாத் துள்ளாறி விடும்.

இ-ள். உரவோர் கண் - அறிவுடையாரிடத்துத் தோன்றும், காம நோய் - காம நோய்கள், பரவா - பெருகமாட்டா, வெளிப்படா, (உள்ளே பெருகின்) புறத்தே தோன்றமாட்டா, பல்லோர்கண் தங்கா - (புறத்தே தோன்றின்) பின் அறிந்த பலரிடத்தும் தங்க மாட்டா, (ஆதலால் அவை). ஓ கொடிதே - மிகக் கொடுமை யுடை யனவே ஆம், விரவாருள் - பகைவரிடத்து, நாணுப்படல் - (அவ்வறி யுடையோர்) நாணுதலை, அஞ்சி - அஞ்சுதலால், யாதும் - (அக்காம நோய்கள்) சிறிதும், உரையாது - (தம்மை) வெளிப்படுத்தாமல், உள் ஆறிவிடம் - உள்ளே அடங்கிப்போம், எ-று.

பொ-ரை. அறிவுடையாரிடத்துத் தோன்றும் காம நோய்கள் பெருகமாட்டா; உள்ளே பெருகின் புறத்தே தோன்றமாட்டா; புற த்தே தோன்றின் பின் அறிந்த பலரிடத்துந் தங்கமாட்டா; ஆதலால் அவை மிகக் கொடுமையுடையனவேயாம். பகைவரிடத்து அவ்வறி யுடையோர் நாணுதலை அஞ்சுதலா லக்காம நோய்கள் சிறிதும் தம்மை வெளிப்படுத்தாமல் உள்ளே யடங்கிப்போம் என்பது.

தோன்றிய இடப்பன்மைபற்றிக் காமநோய் பலவாயின. பல் லோர்கட் டங்காமையாகிய கொடுமைபற்றித் தோன்றிய செறலால் பன்மைப்பால் கொடிதென ஒருமைப்பாலானது பால்வழுவமைதி. ஓ - இழிவுசிறப்பு. எ - தேற்றம். மனதினையும் உடலையும் வருத்துத லால் காமம் நோயெனப்பட்டது. பல்லோர்கட் டங்காமையாவது மற் றோரும் அறிய அப்பல்லோருந் தூற்றுதல். அஞ்சி செயவெனெச்சத் திரிபு. உரையாதென்னும் எதிர்மறை வினையெச்சம் அஃறிணைக் கண் இளக்குறைபோலக் கூறும் மரபு வழுவமைதியாகிய இலக்கணை.

The lust of the wise people will not show itself out, will never spread, and will not come to the notice of the public. That lust is a terrible one! Because of the shame, the wise will never give utterence to it but will see that it subsides. (8)

89. அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
மவற்றினு மஞ்சப் படும்.

இ-ள். அம்பும் - (எய்யப்பட்ட) அம்பும், அழலும் - தீயும், அவிர் கதிர் - விளங்குகின்ற கிரணங்களையுடைய, ஞாயிறும் - சூரியனும்,

வெம்பி - கொதித்து, சுடினும் - வருத்தினும், புறம் சுடும் - உடலை வருத்தும், காமம் - காமமானது, வெம்பி - வெப்பமுடையதாகி, மனத்தைக் கவற்றி - மனத்தைக் கவலைப்படுத்தி, சுடுதலால் - வருத்துதலால், அவற்றினும் - அவ்வம்பு முதலியவற்றிற்கு அஞ்சுதலினும், அஞ்சப்படும் - (அக்காமத்தை) அஞ்சுதலே தகுதி, எ-று.

பொ-ரை. எய்யப்பட்ட அம்பும் தீயும் விளங்குகின்ற கிரணங்களையுடைய சூரியனும் கொதித்து வருத்தினும் உடலை வருத்தும். காமமானது வெப்பமுடையதாகி மனத்தைக் கவலைப்படுத்தி வருத்துதலால் அவ்வம்பு முதலியவற்றிற்கு அஞ்சுதலினும் அக்காமத்தை அஞ்சுதலே தகுதி என்பது.

சுடினுமென்னும் எதிர்மறை உம்மை அவ்வம்பு முதலிய மூன்றும் தம்மியல்பின்மிக்குச் சுடமாட்டாமையை உணர்த்திற்று. சுடுதல் அம்புக்கின்றாயினும் அழல், ஞாயிறு என்னும் மிகுதிபற்றி அவற்றின் வினைகொண்டது. ஆதலால் அம்பு மழலும் ஞாயிறும் சுடினுஞ் சுடுமென்றது ஓர் மரபு வழுவமைதி. அம்பு வெம்புதல் உடையான் தொழிலை உடைமையின்மே லேற்றிக் கூறும் அவ்வழுவமைதி. படும் தேற்றப்பொருள் தரும் ஒருவகைத் தொழிற்பெயர்.

The arrow, the fire, and the heat of the sun, at the highest, will injure only the outside. As the lust burns the very essence of the mind, it must be feared above all these.

90. ஊருழ ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்.

இ-ள். ஊருள் - (ஒருவன் தானிருக்கும்) ஊரில், எழுந்த - பற்றி எழுந்த, உருகெழு - வெப்பமிக்க, செந்தீக்கு - செந்நிறமாகிய பெருந்தீயினின்றும், நீருள் குளித்தும் - (ஆறு குள முதலிய) நீரில் குளித்தும், உயல் ஆகும் - தப்புதல் கூடும், காமம் - காமத்தீ, நீருள் குளிப்பினும் - நீரில் மூழ்கியிருப்பினும், சுடுமே - சுடாமலிராது, காமம் - அக்காமத்தீ, குன்று ஏறி - மலைமீதேறி, ஒளிப்பினும் - (குகை முதலியவற்றில்) ஒளித்திருப்பினும், சுடும் - சுடாமலிராது, எ-று.

பொ-ரை. ஒருவன் தானிருக்கு மூரில் பற்றி யெழுந்த வெப்பமிக்க செந்நிறமாகிய பெருந்தீயினின்றும் ஆறு குள முதலிய நீரில் குளித்துந் தப்புதல் கூடும். காமத்தீ நீரில் மூழ்கியிருப்பினும் சுடாம

லிராது; அக்காமத்தி மலமீதேறி குகை மீதலியுவற்றி னொளித்திருப் பினுஞ் சுடாமலிராது என்பது.

ஊருணெழுந்த உருகெழு என்ற விசேடணத்தால் தீச்தி என் றது பெரிய தீயை என்பது பெற்றும். ஐந்தாவத னீங்கற்பொருளில் வந்த குவ்வுருபு உயலென்னுங் தொழிற்பெயர் கொண்டது. குளித்து மென்ற உம்மை அப்புறப்பட்டென்றி எனப்பொருள் தருதலால் இறந்தது தழீஇய எச்சவும்மை. நீங்காது உடனின்று சுடுங்கொடுமை க்குறி இருமுறை காமஞ் சுடுமென்றார். தேற்றப் பொருளதாகிய ஏகாரத்தைப் பின்னுங் கூட்டுக. உரு என்னும் பண்படி விகுதி பெறின் உருப்பமெனப் பம் விகுதி பெறும்.

We can escape the fire that has broken out in a village, and even if we are hurt a little we can plunge ourselves into a pool and get off safe; whereas we cannot escape the fire of lust, for it will go on burning, whether we dip ourselves into the water, or get ourselves to the mountain top. (10)

X Chapter—Liberality.

10-ம் அதிகாரம்: ஈகை.

அஃதாவது வறியராய் இரந்தவர்க்கு மறுக்கர்மல் ஈதலியுணர்த் துவது. ஈகை காரியவாகுபெயர். பிறன்மேன் நய்த்தலாகிய தீமை செய்தாரையும் பொறுத்து, அவர் இரப்பினும் வேண்டியதை ஈய வேண்டுமென்றற்கு இஃது அதன்பின் வைக்கப்பட்டது. இஃதில்ல றத்தானே நோக்கிற்று.

91. இல்லா விடத்து மியைந்த வளவினு
ளுள்ள விடம்போற் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு.

இ-ள். இல்லாத இடத்தும் - (மிக்க பொருள்) இல்லாத நிலை மையிலும், இயைந்த அளவினுல் - (தம்மிடத்து) இசைந்துள்ள பொ ருள்களின் மட்டில், உள்ள இடம்போல் - மிக்க பொருளுள்ள நிலை மையில் மகிழ்வதுபோல, பெரிது உவந்து - மிகுதியும் மகிழ்ந்து, மெல்ல - சிறிதாக, கொடையொடு - கொடுத்தலாகிய நற்செயலோடு, பட்ட - நீங்குதலில்லாத, குணன் உடைய மாந்தர்க்கு - நற்குண முடைய மக்களுக்கு, ஆண்டைக்கதவு - துறக்கவுலகத்துக் கதவுகள், அடையா ஆம் - மூடப்படாதன ஆகும், எ-று.

பொ-ரை. மிக்க பொருள் இல்லாத நிலைமையிலும் தம்மிடத்து இசைந்துள்ள பொருள்களின் மட்டில் மிக்கபொருளுள்ள நிலைமையில் மகிழ்வதுபோல மிகுதியும் மகிழ்ந்து சிறிதாகக் கொடுத்தலாகிய நற்செயலோடு நீங்குதலில்லாத நற்குணமுடைய மக்களுக்குத் துறக்க வுலகத்துக் கதவுகள் மூடப்படாதன ஆகும் என்பது.

அளவிலுலென்பது வேற்றுமை மயக்கம். பெரிதுவக்காராயின் கொடுத்தல் நடவாதாதலால் 'பெரிதுவந்து' என்றும், ஆண்டைக்கதவு அடைக்கப்படாமைக்குக் காரணம் கொடையே அன்றிக் குணமுமா மென்பார் 'கொடையொடு குணனுடை மாந்தர்' என்றுங் கூறினர். ஈற்றில் ஐகாரச் சாரியை பெற்று நின்ற முதனீண்ட ஆண்டையென் னுஞ் சுட்டுப்பெயர், முதனிலையாகிய அகரஞ் சேய்மையைச் சுட்டுவ தாதலால் துறக்கத்தின்மேல் நின்றது. உயர்வுபற்றிக் கதவு பன்மைப் பாலாயிற்று.

Even in adverse circumstances, to give according to their means with a rejoicing heart as in the prosperous times, is the nature of the good people. To such people the gates of heaven can never be closed. (1)

92. முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

இ-ள். முன்னர் - எதிரில், சாம் நாள் - இறக்கும் நாளும், முனி தக்க - வெறுக்கத்தக்க, மூப்பு - முதுமையும், உள - உண்டாயிரு க்கின்றன, பின்னரும் - அவை யன்றியும், பீடு - (வலி முதலியவற் றின்) மிகுதியை, அழிக்கும் - கெடுப்பதற்குரிய, நோய் உள - நோய் களும் உண்டாயிருக்கின்றன, (ஆதலால்) கைத்து உண்டாம்போழ்து - (மிக்க) பொருளுண்டாயிருக்குங்காலையில், கொன்னே - பயனில்லா மலே, பரவன்மின் - (மேலும் பொருள் தேடுதல் கருதி) பலவிடங் களிலும் செல்லாதிரும், பற்றன்மின் - இறுகப்பிடியாதிரும், பாத்து - (பிரமசாரி முதலிய பதின்மருக்கும்) பகுத்தீந்து, உண்மின் - (நீவிரும்) உண்ணும், யாதும் - சிறிதும், கரவன்மின் - (இரப்பவரை) மறுக்காம லிரும், எ-று.

பொ-ரை. எதிரில் இறக்கும் நாளும் வெறுக்கத்தக்க முதுமை யும் உண்டாயிருக்கின்றன. அவை யன்றியும் வலி முதலியவற்றின்

மிகுதியைக் கெடுப்பதற்குரிய நோய்களும் உண்டாயிருக்கின்றன. ஆதலால், மிக்க பொருளுண்டாயிருக்குங் காலையில் பயனில்லாமலே மேலும் பொருள்தேடுதல் கருதிப் பலவிடங்களிலுஞ் செல்லாதிரும். இறுகப் பிடியாதிரும். பிரமசாரி முதலிய பதின்மருக்கும் பருத்தீந்து நீரிரும் உண்ணும். சிறிதும் இரப்பவரை மறுக்காமலிரும் என்பது.

பரவுதல் பலவிடங்களிலுஞ் செல்லுதல். தம்முள் சுருக்கித்த ஒரெண்ணினளவு தேடுவோமெனக் கொண்டார்க்கே இப்பரவுதல் உண்டாவதாதலால் அது ஈற்றுதற்கும், பிரித்துண்ணுமைக்கும், காத்தலுக்குங் காரணமாதல்பற்றி முதற்கண் வைத்தனர். கொன் - பயனின்மைப் பொருளதாகிய இடைச்சொல். பாத்து என்னும் இறந்தகால வினையெச்சத்தின் பகுதியாகிய பா-பகு என்னும் முதனிலைத் தனி வினையின் மரூஉ. பிரம்சாரி முதலிய பதின்மர்:—பிரமசாரி, வானப் பிரஸ்தன், சந்நியாசி, ஆதரித்தவரால் துறக்கப்பட்டவர், தரித்திரர், ஒருவருமின்றித் தம்பால் வந்திறந்தவர், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார். முனிய என்னும் செயவெனெச்சம் ஈறு தொகுக்கப்பட்டது.

While wealth is in your possession, eat sharing the food with others daily, and hide not your power to do so. Never waste your time in idle thoughts, for the day of death is waiting before you. So is the detestable dotage. Behind is the disease that humbles pride. (2)

93. நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தாந் தூய்ப்பினு மீண்டுங்கா லீண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.

இ-ள். கொடுத்து - (இரப்போர்க்குக்) கொடுத்து, தாம் தூய்ப்பினும் - தாம் அநுபவிப்பினும், ஈண்டுங்கால் - வளருங் காலத்திலே, ஈண்டும் - வளராநிற்கும், விடுக்கும் - (தப்பாமல்) விடுத்தற்குரிய, வினை - நல்வினை, உலந்தக்கால் - முடிந்ததாலல், இடுக்கு உற்று - உலோப குணத்தைப் பெற்று, பற்றினும் - தாம் இறுகப்பிடிப்பினும், நில்லாது - நிலைபெறாது, செல்வம் - பொருட்செல்வம், (இரந்தறியாதார்) நடுக்கு உற்று - (வறுமையால்) தளர்ச்சியை அடைந்து, தற்சேர்ந்தார் - தம்மைச் சார்ந்தவரது, துன்பம் துடையார் - (அவர் வேண்டி வந்த பொருளை யீந்து) துன்பத்தை ஒழிக்கார், எ-று.

பொ-ரை. இரப்போர்க்குக் கொடுத்துத் தாம்அநுபவிப்பினும் வளருங்காலத்திலே வளரா நிற்கும். தப்பாமல் விதைத்தற்குரிய நல்வினை முடிந்ததாலல் உலோபகுணத்தைப்பெற்று தாம். இறுகப்பிடிப்பினும் நிலைபெறாது பொருட்செல்வம். இஃதறியாதார் வறுமையால் தளர்ச் சியை யடைந்து தம்மைச் சார்ந்தவரது (அவர் வேண்டிவந்த பொரு ளாயிந்து) துன்பத்தை யொழிக்கார் என்பது.

நடுங்கு, இடுங்கு என்னும் முதனிலைகள் புடைபெயர்ச்சி விகுதி யாகியதல்-புணர்ந்துகெட்டமாதிரையில் நடுக்கு இடுக்கு எனத்திரிந் தன ஆதலால் இவைமூதனிலைதிரிந்த தொழிற்பெயரென்பர். தற்சேர் ந்தாரென்பதில் தன் பன்மையி னொருமைவந்த வழுவமைதி. இஃ தறியாதார் என்பது இசை எச்சம். இச்செய்யுள் ஏற்புழி எடுத்துக் கூட்டும் அடிமறிச் செய்யுள்.

Some people never relieve the woes of men who seek their help. Although men spend and enjoy wealth, it will grow at the time when it is destined to grow. Even if men cling to it, it flies when "former deeds" that brought it have lost their power. (3)

94. இம்மி யரிசித் துணையாயினும் வைகலு
நும்மி லியைவ கொடித்துண்மி—னும்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்
தடாஅ வடுப்பி னவர்.

இ-ள். குண்டு நீர் - கடலால் சூழப்பட்ட, வையத்து - உலகத் தில், அடாத - (தமக்கென்று வுணவு) சமைக்காத, அடுப்பின்அவர் - அடுப்பினையுடைய அவ்விரப்போரை, உம்மை - முற்பிறப்பில், கொ டாதவர் - (தம்பால் இரந்தோர்க்கு) ஈயாதவர், என்பர் - என்று அறி வுடையோர் கூறுவர், (ஆதலால்) வைகலும் - நாடோறும், நும்மில் - உம்மிடத்து, இயைவ - அடைந்துள்ள பொருள்களில், இம்மி அரிசி - இம்மியென்னும் அளவைக்கொண்ட அரிசியினது, துணை ஆயினும் - அளவுள்ள பொருளே யாயினும், கொடித்து - (அறத்தின்பொருட்டுக்) கொடித்து, உண்மின் - (பொருளுடையீர்) உண்ணுங்கோள், ஈறு.

பொ-ரை. கடலால் சூழப்பட்ட வுலகத்தில் தமக்கென்று உண வைச் சமைக்காத அடுப்பினையுடைய அவ்விரப்போரை முற்பிறப்பில் தம்பால் இரந்தோர்க்கு ஈயாதவரென்று அறிவுடையோர் கூறுவர். ஆதலால் நாடோறும் உம்மிடத் தடைந்துள்ள பொருள்களில் இம்மி

யென்னும் அளவைக் கொண்ட அரிசியினது அளவுள்ள பொருளே யாயினும் அறத்தின் பொருட்டுக் கொடுத்துப் போருளுடையீர்! உண் ணுங்கோள் என்பது.

இம்மி என்பது மிகச்சிறிதென்பற்குக் காட்டியதோரளவு. அது அணு இருபத்தொன்று கொண்டது. அவ்வளவைக்கொண்ட பொ ருள் மத்தங்காய்ப்புல்லரிசி. இம்மி அரிசி பண்புத்தொகைநிலைத்திணை பண்பாகுபெயர். ஆன்-ஆயினென்பதன் மரூஉ. குண்டி நீர் பண்புத் தொகைப் புறத்தீப்பிறந்த அன்மொழித்தொகையாகிய காரணப்பெ யர். குண்டி- ஆழம். அடுப்பினவர் "தெருண்டவறிவினர்" என்றாற் போல இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது. அடாவடிப்பி னென்றமையால் அவர் இரப்போர்மேனின்றது. சுட்டு இழிப்பில் வந்தது.

You had better eat daily after giving something to the needy according to your means, even though it be but a fraction of a grain of rice. Those who wander in this world girt by waters of the deep, without ever cooking their food on their hearth, are considered by the great to be those who never gave aught to the poor in their former birth. (4)

95. மறுமைபு மிம்மையு நோக்கி யொருவற்
குறுமா றியைவ கொடுத்தல்—வறுமையா
லீத லிசையா தெனினு மிரவாமை
யீத லிரட்டி யுறும்.

இ-ள். இயைவ - (ஒருவன் தன்னுல் கொடுப்பதற்கு) இசைந்த பொருள்களை, மறுமையும்-மறுமைப் பயனையும், இம்மையும்-இம்மைப் பயனையும், நோக்கி-நன்குணர்ந்து, ஒருவற்கு-(இரந்த) ஒருவனுக்கு, உறும் ஆறு - உரிமையாம் வழியில், கொடுத்தல் - கொடுக்கக்கடவன், ஈதல்-(அவ்வாறு) கொடுத்தல், வறுமையால் - வறுமையினுல், இசை யாது எனினும் - இசையாதாயினும், இரவாமை - (தான்பிறர்பால்) யாசிக்காமையால், ஈதல் - ஈதலால் வரும் மேம்பாட்டினும், இரட்டி- இருமடி மேம்பாடு, உறும் - அடைவான், எ-று.

பொ-ரை. ஒருவன் தன்னுல் கொடுப்பதற் கிசைந்த பொரு ள்களை மறுமைப் பயனையும் இம்மைப் பயனையும் நன்குணர்ந்து இர ந்த ஒருவனுக்கு உரிமையாம் வழியில் கொடுக்கக் கடவன். அவ்வாறு கொடுத்தல் வறுமையினுல் இசையாதாயினும் தான் பிறர்பால் யாசி

காமையால் ஈதலாவதும் மேம்பாட்டினும் இருமடிமேம்பாடு அடைவான் என்பது.

மறுமை இம்மை இரண்டும் இடவாகுபெயர். அல்லிரண்டின்பயனுவன முறையே துறக்க இன்பம், புகழ்முதலியன. ஈதல் தருவியாகுபெயர். உறுமாறென்றதனையால் ஒருவன் இரப்போனுக்க பிற்று.

Let one give in charity as much as possible taking into consideration the after effects of such deeds both in this birth and the next. But if it be not possible, on account of poverty, to give anything to the poor, at least to refrain from begging is twice as great as giving. (5)

96. நடுவூருள் வேதிகைச் சுற்றுக்கோட் புக்க
படுபேணியன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணு மாக்க
ளிடுகாட்டி ஏற்றுப் பேன.

இ-ள். பலர்நச்ச - பலரும் விரும்பும்படி, வாழ்வார் - வாழ்பவர், நடுவூருள்-ஊர்நடுவில், வேதிகைச்சுற்று-மேடையின் வட்டத்தினுல், கோள்புக்க - கொள்ள (அதனுவில்) உள்ள, படுபேனை - பயனுண்டாகும் பெண்பேனையை, அன்னர் - ஒப்பாவர், குடி-(தம்முடைய) குடும்பம், கொழுத்தக்கண்ணும் - (தம்பால்) செல்வ மிக்கவிடத்தும், கொடுத்து - (ஏற்போர்க்குச்) கொடுத்து, உண்ணுதமாக்கள்-(தாமும்) அனுபவியாத மனிதர்கள், இடுகாட்டுள் - சுடுகாட்டிலுள்ள, ஏற்றுப்பேன அன்னர் - ஆண்பேனையை ஒப்பாவர், எ-று.

போ-ரை. பலரும் விரும்பும்படி வாழ்பவர் ஊர்நடுவில் மேடையின் வட்டத்தினுல் கொள்ள அதனுவில் உள்ள பயனுண்டாகும் பெண்பேனையை யொப்பாவர். தம்முடைய குடும்பம் தம்பால் செல்வ மிக்க விடத்தும் ஏற்போர்க்குக் கொடுத்துத் தாமும் அனுபவியாத மனிதர்கள் சுடுகாட்டிலுள்ள ஆண்பேனையை யொப்பாவர் என்பது.

பலர்நச்ச வாழ்வார்பால் நச்சிவந்த பலரும் மூன்றங்குதற் கிடம் பெறுவாரென்பார் படுபேனையாகிய உவமையை 'வேதிகைச் சுற்றுக் கோட்புக்கீ' எனவிகேடித்தும், பெருஞ்செல்வத்தினரென்பார் 'குடி கொழுத்தக்கண்ணும்' என்றும், அறத்தின்பொருட்டுக் கொடுத்தலில் லாமையில் அச்செல்வப்பயன் பெறுத லிலரென்பார் அவரை 'ஏற்றுப்பேன' என்றுங் கூறினர். மூன்றுள்ள அன்னரென்னுங் குறிப்பு வினைமுற்றைப் பின்வாக்கியத்துக்குங் கூட்டுக, பண்புத்தீற்றுமை,

பொருட்டாகிய ஊர்நடு என்னும் ஆறும்வேற்றுமைத் தொகைகளிலேத் தொடர் பின் முன்னுக நின்றமையால் நடுவுரேன்பது இலக்கணப் போலி. ஒரு சார் விலங்கின் ஆணின் பெயராகிய ஏறு என்பதைப் பனைக்குக் கூறியது ஓர்மரபுவழுவமைதி. ஒருசார்விலங்குக்குரியதை "ஆனுட னேருமை பன்றி யாய்மயிர்க் கவரி தங்கு, மரவெடு மரை புல்லாயு மாறுகொள் சுரவும் ஏறும்" என்னும் நிகண்டாலு முணர்க.

Those who live resorted to by many, are like the fertile palm in the centre of the town. Those who, even when they are rolling in wealth, give not to the poor before they eat, are like the sterile palm in the burning-ground. (6)

97. பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு முலகஞ்
செயற்பால செய்யா விடினுங்—கயற்புலால்
புன்னே கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
வென்னே யுலகுய்யு மாறு.

இ-ள். கயல்-சேல்மீனினது, புலால்-முடை நாற்றத்தை, புன்னே-புன்னே மலர்கள், கடியும்-(தம்மணத்தால்) விலக்குகின்ற, பொருகடல்-(அலைகளால் கரையைத்) தாக்குகின்ற கடலினது, தண்சேர்ப்ப-குளிர்ந்த துறையையுடையானே, பெயல்-பெய்தலையுடைய, நல்-கார்ப்பருவத்தில், மழைபெய்யாக் கண்ணும்-மழைபெய்யாவிடினும், உலகம்-உயர்ந்தோர், செயல்-செய்தலாகிய, பால்-வகைப்பட்ட அறங்களை, செய்யாவிடினும்-செய்யாவிட்டாலும், உலகு-உலகத்துயிர்கள், உய்யும் ஆறு-(இறவாமல்) வாழும் விதம், என்னே-உளதாவதேது, எ-று.

பொ-ரை. சேல்மீனினது முடை நாற்றத்தைப் புன்னைமலர்கள் தம்மணத்தால் விலக்குகின்ற அலைகளால் கரையைத் தாக்குகின்ற கடலினது குளிர்ந்த துறையையுடையானே! பெய்தலையுடைய கார்ப் பருவத்தில் மழை பெய்யாவிடினும் உயர்ந்தோர் செய்தலாகிய வகைப்பட்ட அறங்களைச் செய்யாவிட்டாலும் உலகத்துயிர்க ளிறவாமல் வாழும் விதம் உளதாவதேது என்பது.

காலவகையாறனுள் கார்ப்பருவமொன்றுகலின் அதனைப் பெயற் பாலென்றும், உலகு உய்தலுக்குச் செயற்பாலசெய்தல் மழைபெய்தல் போல இன்றியமையாததாதலின் அதனேடு இதனையும் உடன்வைத் துக் கூறினர். மாதர் கண்களுக்கு உவமை கூறுஞ் சிறப்புக்கருதிக் கய லென்றாராயினும் மற்றமீன்களினது புலாலுமுண்டெனக் கொள்க. புன்னே முதலாகுபெயர், என்னே எவனென்பதன் மரூஉ.

O Lord of the sea, with its cool shore where the bad smell of fish is changed by the fragrance of the *punnai* flower! If rain falls not in due season, if the world fails to do its duty, how is the world to go on then? (7)

98. ஏற்றகை மாற்றுழை யென்னுங் தாழ்வரையா
தாற்றுதார்க் கீவதா மாண்கட—ணுற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து.

இ-ள். மலிகடல் - (வளம்) நிறைந்த கடலினது, தண்சேர்ப்ப - தண்ணியதுறையையுடையானே, ஆற்றின் - (கொடுத்தலைச்) செய்தால், மாறு ஈவார்க்கு - (தாம்ஈந்ததற்குப்) பிரதிகொடுப்பவர்க்கு, ஈதல் - கொடுத்தல், பொலிகடன் என்னும் - விளக்கமாகிய கடனென்று சொல்லப்படும், பெயர்த்து - பெயருடையது, (ஆதலால்) ஏற்ற கை - (தம்மிடத்து) ஏந்தியகையை, மாற்றுமை - இல்லையென மறுக்காமல், என் ஆனும் - எவ்வளவு சிறியதையாயினும், ஆற்றுதார்க்கு - (பிரதிசெய்ய) வலியில்லாத இரப்போர்க்கு, தாம்வரையாது - தாம் (அவரை) ஏற்றுக் கொண்டு, ஈவது - கொடுப்பதே, ஆண்கடன்ஆம் - ஆண்மகனது கடமையாம், எ-று.

பொ-ரை. வளம்நிறைந்த கடலினது தண்ணியதுறையை யுடையானே! கொடுத்தலைச் செய்தால்தாம் ஈந்ததற்குப் பிரதிகொடுப்பவர்க்குக் கொடுத்தல் விளக்கமாகிய கடனென்று சொல்லப்படும் பெயருடையது. ஆதலால் தம்மிடத்து எந்தியகையை இல்லையென மறுக்காமல் எவ்வளவு சிறியதையாயினும் பிரதிசெய்ய வலியில்லாத இரப்போர்க்குத் தாமவரை ஏற்றுக்கொண்டு கொடுப்பதே ஆண்மகனது கடமையாம் என்பது.

அவரை ஏந்துக்கொள்ளலாவது முகமலர்ந்து இன்சொல்லாலுபசரித்தல். வரைதல்-நீக்குதல். என் ஓர் வகை விளிப்பெயர். இங்கு இரண்டனுருபு தொகை; "என்னலும் அளப்பரிது" என மூன்றனுருபும், "என்னுக் கடைவுடையேன்யான்", "என்னுக்கோ வளர்கின்றதே?" என நான்கனுருபு மேற்றுவரல் காண்க. ஆகென்பது ஆயினென்பதன் மரூஉ. இவ்வாறே ஆயில் ஆல், எனின் என், எனில் ஏல் எனவரும். யாவரும் அறிந்ததென்பார் 'பொலிகடன்' என்றார்.

To give to the needy according to one's means without denying, is the duty of a man. O Lord of the swelling sea's

cool shore ! Giving anything to those who are in a position to return it at a future time in some shape or other, will be considered as *loan* and not as *charity*. (8)

99. இறப்பச் சிறிதென்னு தில்லென்னு தென்றீ
மறப்பயன் யார்மாட்டுஞ் செய்க—முறைப்புதவி
ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோல்
பைய நிறைத்து விடும்.

இ-ள். இறப்பச்சிறிது - (ஒருவன் நம்மால் கொடுக்கப்படும் பொருள்) மிகச் சிறிது, என்னுது -என்று (தனக்குள்) எண்ணுமல், இல் என்னுது - (அதுபற்றி) இல்லே என்று மறுக்காமல், அறப்பயன்- அறமாகிய பயனே, யார்மாட்டும் - (எற்போர்) எல்லாரிடத்தும், என்றும் - எந்நாளும், செய்க - செய்துவரக்கடவன், (அப்படிச் செய்துவரின் அது) முறை - முறையாக, புதவின் - (வீடுகளின்) வாயிலில், ஐயம் - பிச்சைக்கு, புகும் - நுழைகின்ற, தவசி - விரதியினது, கடிஞைபோல் - பிட்சாபாத்திரத்தைப்போல, பைய - மெல்ல, நிறைத்து விடும் - (அறத்தினுல் அவனுயிரை) நிரம்பச்செய்துவிடும், எ-று.

பொ-ரை. ஒருவன் நம்மால் கொடுக்கப்படும் பொருள் மிகச் சிறிதென்று தனக்குள் எண்ணுமல் அதுபற்றி இல்லே யென்று மறுக்காமல் அறமாகியபயனே யேற்போ ரெல்லாரிடத்து மெந்நாளும் செய்துவரக் கடவன். அப்படிச் செய்துவரின் அது முறையாக வீடுகளின் வாயிலில் பிச்சைக்கு நுழைகின்ற விரதியினது பிட்சா பாத்திரத்தைப்போல மெல்ல அறத்தினு லவனுயிரை நிரம்பச் செய்துவிடும் என்பது.

இல்லென்னுதென்ற குறிப்பாலும், அதிகாரத்தாலும் அறம் ஈகையின்மேலதாயிற்று. ஐயம் புகுகின்ற தவசியினது ஏற்குங் கலத்தைப் புகுதலானது, இரக்கப்படு பொருளால் நிரப்புவதுபோல எந்நாளும் சிறிது சிறிதாக அறத்தைச் செய்யின் அவ்விடைவிடாத செயல் அவனுயிரை அறத்தால் நிரப்புமென்பது. உம்மை மூற்றும்மையாதலால் யார் என்னும் வினுப் பெயரின் முதனிலையாகிய யார் எஞ்சாமைப் பொருளது. கடிஞை உயிர்க்கு உவமமெனக் கொள்க; அறப்பயனை அதுபவிப்பது அவ்வுயிராதலால்.

Don't say, "we have got very little", "we have nothing with us", but give in charity what you can. Like the bowl of the mendicant presented for doles from door to door, it will become full (9)

100. கடிப்பிடி கண்முரசங் காதத்தோர் கேட்ப
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்ப,
நடிக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடித்தா ரெனப்படுஞ் சொல்:

இ-ள். கடிப்பு இடி - குறுந்தடியால் அடிக்கப்பட்ட, கண்முரசம் - கண்ணையுடைய முரசொலியை, காதத்தோர் கேட்பர் - காததூரத்திலுள்ளோர் கேள்விப்படுவர், இடித்து முழங்கியது - (மேகம்) இடியாகின்று முழங்கியதை, ஓர்யோசனையோர் கேட்பர்-ஒருயோசனை தூரத்திலுள்ளோர் கேள்விப்படுவர், சான்றோர் - (ஞானவொழுக்கங்களில்) நிறைந்தவர்க்கு, கொடித்தார் - அவர் வேண்டியதை (இவர்) கொடித்தார், எனப்படும் சொல் - என்று (அறிவுடையோரால்) சொல்லப்படும் புகழ், அடுக்கிய - (ஒன்றின்மே லொன்றாக) அடுக்கப்பட்ட, மூவுலகும் - மூவுலகத்துள்ளாரும், கேட்கும் - கேள்விப்படுவர், எ-று.

போ-ரை. குறுந்தடியால் அடிக்கப்பட்ட கண்ணையுடைய முரசொலியைக் காததூரத்திலுள்ளோர் கேள்விப்படுவர். மேகம் இடியாகின்று முழங்கியதை யொரு யோசனைதூரத்திலுள்ளோர் கேள்விப்படுவர். ஞானவொழுக்கங்களில் நிறைந்தவர்க்கு அவர் வேண்டியதை யிவர் கொடித்தாரென்று அறிவுடையோரால் சொல்லப்படும் புகழ் ஒன்றின்மே லொன்றாக அடுக்கப்பட்ட மூவுலகத்துள்ளாருங் கேள்விப்படுவர் என்பது.

முரசத்துக்குக் கண்ணென்றது தோல் விரித்த பக்கத்தை. முரசம் கருவியாகுபெயர். காதம், யோசனை அவ்வொலிகள் சென்று பரவும் எல்லையைக் குறித்தன. இடித்தலும் முழங்கலும் ஒருகாலத்தாதலால் இடித்து இடியாகின்றென்பதன் திரிபு. இடித்தென்றதனால் மேகம் வருவிக்கப்பட்டது. மூவுலகும் கேட்குமென்றது பூமி முற்றும் முள்ளாரே யன்றிப் பாதலத்திலும் சுவர்க்கத்திலு முள்ளவர்களும் கொடித்தார் புகழையெடுத்துக் கூறலே. சான்றோர் என்பதன் ஈற்றில் குவ்வுருபு தொகுத்தலாய் நின்றது.

The sound of a drum struck by a stick will spread to a distance of a *katham* (10 miles). The noise of thunders spread to a distance of a *yojanai*. The words that "men given excellent gifts" will reach all the three worlds. (10)

Chapter XI—The effects of actions done a former birth

11-ம் அதிகாரம்: பழவினை.

அஃதாவது முன்செய் வினையைப்பற்றிக் கூறுவது. நியத்தருந்த செல்வமுண்டாமைக்கும், அஃதில்லாது இரக்கத்தக்க வுறுமையுடை மைக்கும் முன்செய்தவினை காரணமாதல் பற்றி, இஃது ஈகையின் பின் வைக்கப்பட்டது.

101. பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாய் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவினை நாடிக் கொளற்கு.

இ-ள். பல் ஆவுள் - பல பசுக்களுள், உய்த்து விடினும் - செலுத்தி விட்டாலும், குழக்கன்று - இளங்கன்று, தாய் - தன் தாயை, நாடிக்கோடலை - தேடிப் பெறுதலில், வல்லது ஆம்-சதுரப்பாடுடைய தாகும், தொல்லைப் பழவினையும் - முன்செய்தவினையும், தன்செய்த-தன்னைச்செய்த, கிழவினை - உரியவினை, நாடிக்கொளற்கு - தேடிப் பெறுவதில், அன்ன தகைத்தே-கன்றையொத்த தன்மை யுடையதே யாம், எ-று.

பொ-ரை. பல பசுக்களுள் செலுத்திவிட்டாலு மிளங்கன்று தன் தாயைத் தேடிப் பெறுதலில் சதுரப்பா டுடையதாகும். முன் செய்த வினையும் தன்னைச்செய்த உரியவினைத் தேடிப் பெறுவதில் கன்றையொத்த தன்மையுடையதேயாம் என்பது.

இளங்கன்று தன்னையீன்ற பசுவைப் பாலுண்ணுங் காலத்தில் தேடியடைவதுபோல முன்னை வினை தன்னைச் செய்தவனையே அடையுங்காலத்தில் வந்தடையுமென்பது கருத்து. கோடலை என் பது உருபு மயக்கம். தொல்லைப்பழமை ஒருபொருட் பன்மொழி. எ-தேற்றம். குழக்கன்றென்பதைக் குழவு கன்றெனப் பிரிக்க.

If a tender calf is sent forth amidst a herd of kine, it identifies its own mother; so also one's old deeds go in search of the man who was the author of them (in the former birth).(1)

102. உருவு மிளமையு மொண்பொருளு முட்கு
மொருவழி நில்லாமை கண்டு—மொருவழி
யொன்றையு மில்லாதான் வாழ்க்கை யுடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து.

இ-ள். உருவும் - நல்ல உருவமும், இளமையும் - பயன்படு மிளமையும், ஒள் பொருளும் - ஒளியைத் தரவல்ல பெருளும், உட்கும்- (அச்செல்வங் காரணமாகப்) பிறர் அஞ்சும் மதிப்பும், ஒருவழி- ஒருவனிடத்து, நில்லாமை - உண்டாயிராமையை, கண்டும் - கண்டறிந்தும், ஒன்றேயும் - (நான்குள்) ஒன்றையாவது, ஒருவழி - ஒருவாறு, இல்லாதான் - பெறுதலில்லாதவன், வாழ்க்கை - (ஒருவன்) உயிர்வாழ்தல், உடம்பு - உடலை, இட்டு நின்று - எடுத்து நின்று, வீழ்ந்தக்கது - (முடிவில்) வீழுந் தகுதியாகிய செயலை, உடைத்து - உடையது, எ - று.

பொ-ரை. நல்ல வுருவமும், பயன்படு மிளமையும், ஒளியைத் தரவல்ல பொருளும், (அச்செல்வங் காரணமாகப்) பிறரஞ்சும் மதிப்பும் ஒருவனிடத்து உண்டாயிராமையைக் கண்டறிந்தும், நூன்கு ளொன்றையாவது ஒருவாறுபெறுதலில்லாதவனியொருவனுயிர்வாழ்தல் உடலை யெடுத்து நின்று முடிவில் வீழுந் தகுதியாகிய செயலையுடை யது என்பது.

பயன்படு மிளமையாவது எல்லா இன்பங்களையும் அநுபவிப்பற்குரிய இளமை. உருவுமுதலிய நான்களுள் உருவொழிந்த மற்றை மூன்றில் ஒன்றேனும், இரண்டுமேனும் ஒவ்வொருவனிடத் துண்டா வனவன்றி நான்கும் ஒருங்குநிற்ற லருமையாதல் கருதி 'ஒருவழி நில்லாமை' என்றார். கண்டறிவானுயின் உருவு செல்வம் உடை உண்டாதற்குக் காரணம் முன்செய் நல்வினையென் றுணர்ந்து அறத தைச் செய்வான்; அஃதில்லாமையால் அவன் வாழ்க்கைப் பயனில தாகி நின்று வீழ்ந்தக்க துடைத்தாயிற்று. வீழும் என்னும் பெயரெச் சம் ஈற்றயிர் கெட்டு நின்றது. பலருள்ளும் தன்னுடையானுக்கு ஒளியைத் தரவல்லதாதலால் பொருள் 'ஒண்பொருள்' எனப்பட்டது. ஒளி யாவரும் அறிய நிற்றல். நின்றென்றது அவன் உயிருளளுய்த் திரிதலை. வீழ்தலையே தக்கதென்றாதலால் வீழ்ம் என்னும் பெய ரெச்சம் தக்கதென்னும் செயற் பெயர் கொண்டது. ஒன்றேனும் இல் லாமையைக் கண்டு தக்கதென்றமையால் இது தெளிவுபற்றி எதிர் காலம் இறந்தகாலமாயிற்று.

Beauty and youth, wealth and reference never remain in one way (permanent). Even after knowing this if a man does not do deeds of virtue, his life has simply possessed a body and had at the end thrown it off without making proper use of it. (2)

103. வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றுன்
விளங்காய் திரட்டினு நில்லைக் களங்கனியைத்
கீழ்சொனச் செய்தாரு மில்.

இ-ள். வளம்பட - மிக்க செல்வம் உண்டாம்படி, வேண்டார் தார் - விரும்பி முயலாதவர், யார் - யாவர், யாரும் இல்லை - ஒருவரு மிலர், (அவ்வாறு வேண்டி முயலினும்) விளங்காய் - விளங்காயை, திரட்டினர் உம் - திரண்ட உருவினதாகச் செய்தவரும், இல்லை - (இங்கே) இலர், களங்கனியை - களம் பழத்தினை, கார் என - கருமை யுடையதாக, செய்தாரும் - (இங்கே) செய்தவரும், இல் - இலர், (அவைபோல) அவர் அவர் - அவரவர்கள், ஆற்றுன் - (முற் பிறப் பில்) செய்தவினையினால், போகம் - (அநுபவிப்பதற்குரிய) சுகங்கள், அளந்தன - அளவுசெய்யப்பட்டன, ஆதலால் தாம் வேண்டியவாறு உண்டாகாவாம், எ-று.

பொ-ரை. மிக்க செல்வ முண்டாகும்படி விரும்பி முய லாதவர் ஒருவருமிலர். அவ்வாறு வேண்டி முயலினும் விளங்கா யைத் திரண்ட வுருவினதாகச் செய்தவரு மிங்கே யிலர். களம்பழ த்தைக் கருமையுடையதாக இங்கே செய்தவரு மிலர். அவைபோல அவரவர்கள் முற்பிறப்பில் செய்த வினையினு லநுபவிப்பதற்குரிய சுகங்கள் அளவு செய்யப்பட்டன. ஆதலால் தாம் வேண்டியவாறு உண்டாகாவாம் என்பது.

ஈற்றில் தந்துமீரத்தது இசையெச்சம். யாவர் என்னும் வினாப் பெயரின் மரூஉ ஆகிய யாசென்பதன் முதனிலை இன்மைமேல் நின்றது. யாருமில்லை என்றது அதனை வற்புறுத்தற்கு. ஆற்று - முத னிலைத் தொழிற்பெயர். மூன்றனுருபு கருத்தாப்பொருளது. அடக்கு எஞ்சாமைப் பொருளது. திரட்டினுசென்பதனிற்றில் எதிரதுதழீஇய எச்சவும்மை தொகுத்தல். காசென்னுங் குணத்தின் பெயர் குணி யின்மேல் நின்றது.

There is no one who does not wish to prosper in this world. But the attainment of it and the enjoyment thereof depends upon one's own efforts. No one ever attempted to give to the woodapple its round shape, nor the black colour to the *Kala* fruit.

104. உறற்பால நீக்கி லுறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவு மன்னவா மாரி

வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்.

இ-ள். மாரி - மழை, வறப்பில் - பெய்யாதகாலத்தில், தருவாரும் - பெய்விக்க வல்லவரும், இல்லை - இலர், சிறப்பில் - மிகப்பெய்யுங் காலத்தில், அதனை - அம் மழையை, தணிப்பாரும் - பெய்யாதொழியச் செய்ய வல்லவரும், இல் - இலர், (அவைபோல) உறல் பால - துன்பப்படுதலின் வகையனவாகிய பழவினைகளை, நீக்கல்-பரிகரிக்குஞ் செயல்கள், உறுவர்க்கும்-முனிவர்களாலும், ஆகா-உண்டாகா, பெறல்பால் - சுகப்படுதலின் வகையையுடைய, அனையவும் - அந்நல்வினைகளும், அன்ன - (அவர்களால்) பரிகரிக்குஞ் செயல்களை அடையமாட்டா, எ - று.

(பொ-ரை.) மழைபெய்யாத காலத்தில் பெய்விக்க வல்லவரு மிலர். மிகப் பெய்யுங் காலத்தி லம்மழையைப் பெய்யாதொழியச் செய்ய வல்லவரு மிலர். அவைபோலத் துன்பப்படுதலின் வகையனவாகிய பழவினைகளைப் பரிகரிக்குஞ் செயல்கள் முனிவர்களாலு மூண்டாகா. சுகப்படுதலின் வகையையுடைய அந்நல்வினைகளு மவர்களால் பரிகரிக்குஞ் செயல்களை யடையமாட்டா என்பது.

உறல் பெறல் இரண்டும் முறையே துக்கத்தையும், சுகத்தையு மடைதற்குரிய வினைகள். இப்பொருளிலே ஊறு பேறு என்பனவழங்குதல் காண்க. குவ்வருபு மூன்றுவதற்குரிய ஏதுப்பொருட்டில் வந்தது. நீக்கல் முயற்சியின் வகையைப்பற்றிப் பன்மையாயிற்று. வறப்பு, சிறப்பு என்னுந் தொழிற் பெயர்கள் அவ்வக்காலத்தின்மேல் நின்றன.

Even saints cannot prevent the predestined ills nor could they stop the gains we are destined to receive. In time of draught nobody could make the rainfall; nor could one stop it when it falls in abundance during the season. (4)

105. தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்
நினைப்பிக் கிடந்த செவனுண்டா மேலை
வினைப்பய னல்லாற் பிற.

(இ - ள்.) பனைத்துணையார் - பனையளவினராகிய பெரியோர், தம்தேசு - தமது மகிமையை, உள் அடக்கி - அம்முள் அடங்கவைத்து, தினைத்துணையர் ஆகி - தினையளவினராகிய சிறியராகி, பாடு

அழிந்து - பெருமை கெட்டு, வைகலும் வாழ்வர் - போகூழ் முடியு மளவும் உயிர்வாழ்வர், (அவ்வாறு வாழ்தல்) உண்டு ஆம் - (அநுபவிக் குமளவும்) உள்ளதாகின்ற, மேலை வினைப்பயன் - முன்செய் வினையி னது பயனே, அல்லால் - அல்லாமல் (அஃதொழிந்து) நினைப் பக்கிடந்தது எண்ணக்கிடந்தவை, பிற எவன் - வேறு சிலை, எ-று.

(பொ-ரை.) பனையளவினராகிய பெரியோர் தமது மகிமை யைத் தம்முள் ளடங்துவைத்துத் தினையளவினராகிய சிறியராகிப் பெருமைகெட்டுப் போகூழ் முடியுமளவு முயிர்வாழ்வர். அவ்வாறு வாழ்தல் அநுபவிக்குமீளவு முள்ளதாகின்ற முன்செய்வினையினது பய னே யல்லாமல் அஃதொழிந்து எண்ணக்கிடந்தவை வேறு எவை என்பது.

தினைபனை என்பன சிறுமை பெருமைகட்குக் காட்டிய அளவை. கிடந்த தென்னும் வினைப்பெயர் பன்மையி லொருமைவந்த வழுவ மைதி. மேலை பழுதிப்பொருள்விகுதியாகிய ஐயீற்றுப் பெண்பாற்பெயர். கீல்வி அறிவு கேள்வி முதலியவற்றுற் பெரியரும் மகிமைகெட்டு வாழ் தல் முன்செய் வினைப்பயனேயாமென்பது கருத்து.

Those who were great like stately palms, when their greatness is gone, become small and have to live in obscurity. This is the result of their former deeds. If you think of it what other cause can there be ? (5)

106. பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரேல்—கல்லாதார்
சேதன மின்னுமச் சேறகத் தின்மையால்
கோதென்று கொள்ளாதாங் கூற்று.

(இ - ள்.) பல்கேள்வி - பலவாகிய நூற்கேள்விகளால், ஆன்ற - நிறைந்த, பயன் - (பிறப்பின்) பயனே, உணர்வார் - உணர்ந்து ஒழுகு ம் நல்லோர், வீயவும் - இறக்கவும், கல்லாதார் - (அவையொன்றும்) உணராத தீயோர், வாழ்வது - (நெடுநாள்) உயிர்வாழ்தலின் காரண த்தை, அறிதிர் எல் - அறியவிரும்புவீராயின், கல்லாதார் - அம்மூடர், சேதனம் என்னும் - நல்லறிவென்று சொல்லப்படும், அச்சேறு - அந் தச்சாரம், அகத்து - உள்ளத்தில், இன்மையால் - இல்லாதலால், கூற் று - யமன், கோது என்று - (அவரைச்) சாரமில்லாப் பொருளென்று தருதி, கொள்ளாது ஆம் - கொள்ளாமல் விடுவன்போலும், எ - று.

(பொ-ரை.) பலவாகிய நூற்கேள்விகளால் நிறைந்த பிறப்பின் பயனை யுணர்ந்தொழுகும் நல்லோ ரிறக்கவும், அவையொன்றும்

உணராத தீயோர் நெடுநா ளுயிர்வாழ்தலின் காரணத்தை யறிய விரும்புவீராயி னீழ்மூடர் நல்லறிவென்று சொல்லப்படும் அந்தச் சாரம் உள்ளத்தி லிலராதலால் யமன் அவரைச் சாரமில்லாப் பொரு ளென்று கருதிக் கொள்ளாமல் விடுவான்போலும் என்பது.

வீயவென்பது காரணகாரியமிரண்டுமின்றி வந்ததாதலால் நிகழ் காலவினையெச்சம். ஆன்ற-என்னும் இறந்தகாலப்பெயரெச்சத்துக்கு அகலென்பதன் மரூஉ ஆகிய ஆலென்பது துணை. இன்மை குறிப்புத் தொழிற்பெயர். அச்சேறு ஏண்பதில் அகரச்சுட்டுப் பிறப்பின் பயனை உணர்த்தலைச் சுட்டி நின்றது. கல்லாதார் பலர் இறப்பினும் அவர் வாழ்தலொன்றுமே பயனுணர்வார் இறத்தலினும் அறிவுடையோர்க் குக் கவலை தருதலின் அதற்குக் காரணங் கூறுவாராயினர். பழவினை யாகிய காரணத்தை ஒழித்துக் கவி தான்கருதியதொன்றைக் காரண மாக ஏற்றிக் கூறினமையின் இது தற்குறிப்பேற்ற அணி.

Those who are in possession of profound learning die off early, whereas the unlearned joyously live on. If you want to know the cause of it, it is this:—the God of Death finding no juice of goodness or greatness in the unlearned and considering them mere refuse, throws them away and does not like to take them with him. (6)

107. இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண
நெடுங்கடை நின்றூழல்வ தெல்லா—மடம்பம்பூ
வன்னங் கிழிக்கு மலைகடற் றண்சேர்ப்ப
முன்னை வினையாய் விடும்.

இ-ள். அடம்பம்பூ - அடம்பங் கொடியின் மலரை, அன்னம் - அன்னங்கள், கிழிக்கும் - (மூக்கால்) கோதுகின்ற, அலை - அலைகளை வீசுகின்ற, கடல் - கடலினது, தண்சேர்ப்ப - குளிர்ச்சியாகிய துறை யையுடையானே, இடும்பைகூர் - துன்பம் மிகுகின்ற, நெஞ்சத்தார் - மனமுடையோர், எல்லாரும் - (அத்துன்பமிகுதியில்லாத) எல்லா ரும், காண - கண்டிரங்கும்படி, நெடுகடை - நெடுங்கால முடிவுவரை யும், நின்று - இறவாமல், உழல்வது எல்லாம் - வருந்தி உயிர்வாழ்வ தற்செல்லாம், முன்னைவினை - பழவினையே, ஆய்விடும் - காரண மாய்விடும், எ-று.

பொ-ரை. அடம்பங்கொடியின் மலரை யன்னங்கள் மூக்கால் கோதுகின்ற அலைகளை வீசுகின்ற கடலினது குளிர்ச்சியாகிய துறை

யையுடையானே! துன்பம் மிகுகின்ற மனமுடையோர் அத்துன்ப மிகுதியில்லாத ஏல்லாரும் கண்டிரங்கும்படி நெடுங்கால முடிவு வரைமி றவாமல் வருந்தி உயிர்வாழ்வதற் கெல்லாம் பழவினையே காரணமாய்விடும் என்பது.

பிணி, வறுமை, மூப்பு முதலியவற்றால் வருவன என்பதற்கு இடும்பை எனப் பொதுப்படக் கூறினர். இடையே இறத்தல் வாழ்க்கைக்குக் கடையெனப் படுமாயினும் அதனோடு இதனிடை வேற்றுமை தோன்ற மனிதர்க்கு வருத்த நீறுபிராயம் 'நெடுங்கடை' எனப் பட்டது. இப்பிராயத்தின் பன்மை நோக்கி வாழ்வதென்னுந் தொழில் பன்மையாயது.

O Lord of the sea's cool shore where swans sport in waves tearing to shreds the *adambu* flower! the fact that the people are reduced to a miserable state and are obliged to beg in the streets in sight of all, must be attributed to their former deeds.

108. அறியாரு மல்ல ரறிவு தறிந்தும்
பழியோடு பட்டவை செய்தல்—வளியோடி
நெய்த னறவுயிர்க்கு நீள்கடற் றண்சேர்ப்ப
செய்த வினையான் வரும்.

(இ-ள்.) வளியோடி-காற்றுச்செல்லா நின்று, நெய்தல் நறவு-நெய்தற்பூவினது மணத்தை, உயிர்க்கும்-வீசுகின்ற, நீள்கடல்-நீண்டவடிவினதாகிய கடலினது, தண் சேர்ப்ப - குளிர்ச்சியாகிய துறையையுடையானே, அறிவது-அறியப்படும் நூற்பொருள்களை, அறியாரும்-கற்றுணராதவரும், அல்லர் - அல்லார், அறிந்தும் - கற்றுணர்ந்தும், பழியோடுபட்டவை - பழிப்போடு பொருந்திய கருமங்களை, செய்தல்-செய்தல், செய்தவினையான் - ஊழினால், வரும் - உண்டாகும், எ-று.

போ-ரை. காற்றுச்செல்லா நின்று நெய்தற்பூவினது மணத்தை வீசுகின்ற நீண்ட வடிவினதாகிய கடலினது குளிர்ச்சியாகிய துறையையுடையீரே! அறியப்படும் நூற்பொருள்களைக் கற்றுணராதவரும், அல்லார் கற்றுணர்ந்து பழிப்போடு பொருந்திய கருமங்களைச் செய்தல் ஊழினால் உண்டாகும் என்பது.

அறியாருமென்ற வும்மை இழிவுசிறப்பு. அறிவது அறிந்தபின் பழியோடு பட்டவை செய்யாரென்பதை உணர்த்தலால் அறிந்தும் என்ற வும்மை உயர்வு சிறப்பு. ஓடி ஓடாநின்றென்னும் நீசழ்கால

வினையெச்சத் திரிபு. நெய்தல் முதலாகுபெயர். நீள்கடல் வினைத்தொகைக்குறிப்பு.

Some, even though they are not ignorant and even though they are versed in Shastras, take to doing deeds unworthy of them. O Lord of the wide sea's cool shore where breezes scather lily's fragrance! this is the result of their former deeds.(8)

109. ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்துணையும்
வேண்டார்மற் றீமி விழைபய—னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது.

இ-ள். ஈண்டுநீர் - பெருகிய கடலாற் சூழப்பட்ட, வையத்துள்-பூமியில், எல்லாரும்-யாவரும், எத்துணையும் - எவ்வளவுசிறிதும், தீயனபமாயினவற்றை, வேண்டார் - விரும்பார், விழைபயன் - விரும்பப்படும் பயன்கள், நல்லவை - இன்பமாயினவேயாம், வேண்டினும்-(நல்லவற்றை) விரும்பினும், வேண்டாவிடினும் - (தீயவற்றை) விரும்பாவிடினும், உறற்பால - வருதலின் வகையவாகிய அவை, தீண்டாமல் - வந்துசேராமல், விடுதல்- (அவர்களை) ஒழிதல், அரிது-இலது, எ-று.

பொ-ரை. பெருகிய கடலாற் சூழப்பட்ட பூமியில் யாவரும் எவ்வளவு சிறிதுந் தீன்பமாயினவற்றை விரும்பார். விரும்பப்படும் பயன்கள் இன்பமாயினவேயாம். நல்லவற்றை விரும்பினுந் தீய்வற்றை விரும்பாவிடினும் வருதலின் வகையாகிய அவை வந்து சேராமல் அவர்களை யொழிதலிலது என்பது.

மன் அசைநிலை. ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர் இம்மூவகை நீராலுங்கூடிப் பெருகிய நீராதலால் கடல் ஈண்டுநீர் எனப்பட்டது. தீண்டாமல் ஈறு தொகுக்கப்பட்டது. சுகமொன்றையே உலகோர் பயனுகக் கருதுதலால் அதனை 'விழைபயன்' என்றார்.

No one ever desires evil things but choice fruit of good things on this vast earth bound by the oceans great. Yet whether they desire or not, it is difficult to avoid what fate has already assigned.

110. சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
வுறுகாலத் தூற்றுகா வாமிடத்தே—யாருஞ்

சிறுகாலைப் பட்ட பொறியு மதனை
யிறுகாலத் தென்னை பரிவு.

இ-ள். சிறுகாலை - கருவில் அமையுங்காலத்தில், பட்ட - அமைந்திடந்த, பொறியும் - ஊழ்களும், சிறுகா - (தம்மளவில்) குறைந்துபோகா, பெருகா - வளரா, முறை பிறழ்ந்து - (அடையுங்காலத்தினது) முறைமைதவறி, வாரா - வரமாட்டா, உறுகாலத்து - துன்பம் வந்தகாலத்தில், ஊற்று ஆகா - ஊன்றுகோல்போ லுதவி ஆகா, ஆம் இடத்தே - உதவியாகுதற்குரிய காலத்தே, ஆகும் - உதவியாகும், அதனால் - அப்போகூழால், இறுகாலத்து - (தம்முயற்சி) அழியுங்காலத்தில், பரிவு - (அவ்வழிவைக் குறித்து) இரங்குதல், என்னை - யாது, எ-று.

பொ-ரை. கருவி லமையுங்காலத்தில் அமைந்து கிடந்த ஊழ்களுந் தம்மளவில் குறைந்து போகா; வளரா; அடையுங் காலத்தினது முறைமை தவறி வரமாட்டா; துன்பம் வந்தகாலத்தி லூன்றுகோல் போ லுதவியாகா; உதவியாகுதற்குரிய காலத்தே யுதவியாகும். அப்போகூழால் தம்முயற்சி யழியுங்காலத்தி லவ்வழிவைக்குறித்து இரங்குதல் யாது என்பது.

விடியலாகிய சிறுகாலை இங்கு கருவிலமையுங் காலத்தின் மேல் நின்றது; அதுபிறப்பிற்கு முதற்காலமாதலாலென்க. ஊழ்: ஆகூழ் - போகூழென இரண்டாகலால் பன்மையாயது. ஊன்றென்னும் முதனிலை தல் விகுதிபுணர்ந்து கெட்டமரித்திரையில் ஊற்றெனவிகாரப்பட்டதாதலால், இது முதனிலைதிரிந்த தொழிற்பெய ரெனப்பட்டு, அத்தொழிற்குரிய கோலை உணர்த்தலால் தொழிலாகு பெயராம். பொறியுமென்ற உம்மை எதிரதழீஇய எச்ச உம்மையாதலால், ஊழின் காரியமாகிய சுகதுக்கங்களும் அவ்வாறுமென்பது.

The effect of the good deeds done in the former birth never decreases nor increases, nor will it be perceived before its due time. When one suffers from the effect of former bad deeds, why should one grieve?

Chapter XII—Truth

12-ஆம் அதிகாரம்: மெய்ம்மை.

அஃதாவது மக்கள் தம்மியல்பு குன்றுமையாகிய மெய்ம்மையை யுணர்த்துவது. அம்மெய்ம்மையும் ஊழினுதல்பற்றி இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

111. இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை—நசைபழுங்க
நின்றேமாப் பொய்த்த னிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து.

இ-ள். நிரைதொடீஇ - முறையாகப்பூண்ட வளையலையுடையாளே, இசையாத - (ஒருவன் தன்னால் கொடுத்தற்கு) இயலாத, ஒரு பொருள் - யாதேனும் ஒருபொருளே, இல் என்றல் - (எற்றேனுக்கு எற்ற காலத்தே) இல்லையென்று சொல்லுதல், யார்க்கும் - பெருஞ் செல்வர்க்கும், வசை அன்று - பழிப்பன்று, வையத்து - உலகத்தில், இயற்கை - இயல்பாம், நசை - (எற்றேன்) ஆசையால், அழுங்க - வருந்தும்படி, நின்று - (கொடுப்பேனென்ற நிலையில்) நீங்காதுநின்று, ஓடி - செல்லாநின்று, பொய்த்தல் - பொய்சொல்லல், செய் நன்றி - (ஒருவன்) செய்த உபகாரத்தை, கொன்றாரின் - அழித்தாருடைய குற்றத்தைப்போல, குற்றம் உடைத்து - குற்றமுடையது, எ-று.

பொ-ரை. முறையாகப் பூண்ட வளையலை யுடையாளே! ஒருவன் தன்னால் கொடுத்தற்கியலாத யாதேனு மொருபொருளே எற்றேனுக்கு எற்றகாலத்தே யில்லையென்று சொல்லுதல் பெருஞ் செல்வர்க்கும் பழிப்பன்று, உலகத்தில் இயல்பாம். எற்றேன் ஆசையால் வருந்தும்படி கொடுப்பேனென்ற நிலையில் நீங்காது நின்று நின்று பொய் சொல்லல் ஒருவன் செய்த வுபகாரத்தையுடைய குற்றத்தைப் போலக் குற்றமுடையது.

நிரைதொடி வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர். செய்ந்நன்றியைக் கொன்றவரை உவமித்தமையால் இவர்க்குப் பிராயச்சித்தமில்லை என்பதாம். ஓடிப் பொய்த்தலாவது, எற்றவன் பலமுறை வரும்படி பலகாள் கொடுப்பேனென்று பொய் கூறிவருதல். ஒருபொரு ளென்பதில் ஒன்று இன்னதெனக் குறிக்கப்படாமைக்கண் வந்தது.

O Maiden graced with many armlets! To say "no" when a man is asked a boon and if it is not in his power to confer it, is no disgrace to him. Such answer will be considered natural. But to promise to give and to delay and cheat the man in the end, is worse than the ingratitude of the most ungrateful. (1)

112. தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
யெக்காலுங் குன்ற லிலராவ—ரக்காரம்

யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாந்
தேவரே தின்னினும் வேம்பு.

இ-ள். யாவர்தின்னினும் - நரகர்தின்றாலும், அக்காரம் - சர்க்கரை, கையாது-கைக்காது, தேவரே தின்னினும்-தேவர்களேதின்றாலும், வேம்பு - வேம்பின் விதை, கைக்கும் - கசக்கும், (அவைபோல) தக்காரும் - (அறிவு ஒழுக்கங்களால்) சுகுதியுடையாரும், தக்கவர் அல்லாரும் - சுகுதியுடையாரல்லாதவரும், எக்காலும் - எக்காலத்திலும், தம் நீர்மை - தம்முடைய இயற்கை, குன்றல் இலர் ஆவர் - குறைதலில்லாராயிருப்பர், எ-று.

பொ-ரை. நரகர்தின்றாலுஞ் சர்க்கரை கைக்காது; தேவர்களேதின்றாலும் வேம்பின் விதை கசக்கும். (அவைபோல) அறிவு ஒழுக்கங்களால் சுகுதியுடையாருஞ் சுகுதியுடையாரல்லாதவரு மெக்காலத்திலுந் தம்முடைய வியற்கை குறைதலில்லாராயிருப்பரென்பது.

எக்காலுமென்றது செல்வம், வறுமை, உயிர்க்கிழுதி முதலியன நேரிட்ட காலத்தை மென்பதனை. தேவரே என்பதில் ஏ - உயர்வுசிறப்பு. வேம்பு முதலாகுபெயர். நீர்மை என்னும் எழுவாய் குன்றலென்னும் பயனிலை கொண்டது. ஆமிரண்டும், எயும் அசை. பின்னே தேவரென்றதனால் யாவரென்றது நரகரை. முன்னுள்ள உம்மை இழிவு சிறப்பு. பின்னுள்ள உம்மை உயர்வு சிறப்போடு எதிர்மறைப் பொருளது.

The great and the low will never change their nature. Sugar will never taste bitter whoever may taste it; margosa will never lose its bitterness even though the Devás taste it. (2)

113. கலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவ—ரேலா
விடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட்
டொடர்புடையே மென்பார் சிலர்.

(இ - ள்.) ஈர்குன்றநாட - குளிர்ச்சியாகிய மலைநாட்டையுடையானேகால் ஆடு போழ்தில் - (தாளாண்மையுடையரர்ய்த்) திரியுங் காலத்தில், பலர் - பலபேர், வானத்துமேல் - ஆகாயத்தின் மேலிடத்தில், ஆடு - விளங்குகின்ற, மீனின் - விண் மீன்களினும், கழிகிளைஞர் ஆவர் - மிக்க உறவினராவர், எலாத - (யாவரும் விரும்பி) ஏற்றுக்கொள்ளாத, இடர் - வறுமைத் துன்பத்தை, ஒருவர் உற்றக்கால் -

ஒருவர் அடைவாராயின், சிலர் - சிலரே, தொடர்பு உடையேம் - (முன்னே யாம்) நட்புடையோம், என்பார் - என்று சொல்லுவர், எ-று.

பொ-ரை. குளிர்ச்சியாகிய மலை நாட்டை யுடையாய்! தாளாண்மை யுடையராய்த் திரியுங் காலத்தில் பலபே ருகாயத்தின் மேலிடத்தில் விளங்குகின்ற விண்மீன்களினும் மிக்க வுறவின ராவர். யாவரும் விரும்பி ஏற்றுக்கொள்ளாதவறுமைத் துன்பத்தை யொருவ ரடைவாராயின், சிலரே முன்னே யாம் நட்புடையோ மென்று சொல்லுவர் என்பது.

மேல் இடவாகுபெயர். இலனென்பதனீற்றில் தேற்றேகாரம் விகாரத்தால்தொக்கது. கழிகிளாஞென்றது நெருங்கியவுறவினரை.

O Lord of the dripping hills! When a man is in prosperity, his friends and relations will be as numerous as the stars of the heaven. When his prosperity is gone, it is very few that recognize his former relationship or friendship. (3)

114. வடுவிலா வையத்து மன்னிய மூன்றி
னடுவண தெய்த விருதலையு—மெய்து
நடுவண தெய்தாதா னெய்து முலைப்பெய்
தடுவது போலுந் துயர்.

இ-ள். வையத்து - உலகத்தில், வடு இல்லாமல் - (அவ்வாறிருக்கிய) குற்றமில்லாஞகி, மன்னிய - நிலைபெறும்படி, மூன்றில் - அறமு பொருளின்பமாகிய மூன்று பொருளில், நடுவணது - (அவற்றின்) இடையில் நின்றதாகிய பொருளை, எய்த - (ஒருவன்) அடைய, இரு தலையும் - (அப்பொருளுக்கு) முன்னும் பின்னும் நின்ற அறத்தையும் இன்பத்தையும், எய்தும் - (அதுகாரணமாக) அடைவான், நடுவ ணது-இடையில் நின்றதாகிய அப்பொருளை, எய்தாதான் - அடையா தவன், உலைப்பெய்து - (கொல்லன்) உலையிலிட்டு, அடிஎதுபோ லும் - காய்ச்சுவதினுலுண்டாம் துன்பத்தை ஒக்கும், துயர் - துன் பத்தை, எய்தும் - (பொருளின்மையால்) அடைவான், எ - று.

பொ-ரை. உலகத்தில் லக்ஷணத்திப்பாகிய குற்றமில்லாஞகி நிலை பெறும்படி அறம்பொருளின்பமாகிய மூன்று பொருளில் அவற்றி னிடையில் நின்றதாகிய பொருளை யொருவனடைய அப்பொரு ளுக்கு முன்னும் பின்னும் நின்ற அறத்தையும் இன்பத்தையும் அதி காரணமாக அடைவான். இடையில் நின்றதாகிய அப்பொருளை

அடையாதவன் கொல்லன் உலையிலிட்டுக் காய்ச்சுவதினுலுண்டாகும் துன்பத்தையொக்கும் துன்பத்தைப் பொருளின்மையா லடைவான் என்பதி.

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர்" ஆதலின் வகுவிலாமில் மன்னிய வென்வும், இம்மை-மறுமை - வீடென்னும் மூன்றினையுந் தருவதாதலால் அறம் மூதலிலும், இம்மை-மறுமை இரண்டினையுந் தருவதாதலால் பொருளிடையிலும், இம்மை ஒன்றையே தருவதாதலால் இன்பம் கடையிலும் வைத்து அறிவுடையோரால் எண்ணப்பட்டமையால் பொருளே கவேண்டு என்றும், மற்ற இரண்டையும் இருதலையும் என்றுங் கூறினர். வைத்தமுறையே காலத்தைப் பற்றி அறம் முதலும், இடத்தைப்பற்றி இன்பம் முதலுமாக நிற்றலாய் அவை பண்பாகுபெயரால் தலையெனப்பட்டன. அவெது எதிர்காலவினைப்பெயர். இடைவிடாது நின்று வருத்துவதாகிய பொருளின்மைக்கு உவமித்தமையால், உலீத்தியிடைவிடாதுநின்றகொல்லனுலைக்காயிற்று. இலாமல் என்னும் எதிர்மறை வினையெச்சம் ஈறுதொகுத்தல். மன்னிய என்னும் செய்யிய என்னும் வினையெச்சம் எய்த எனினும் செயவெனெச்சங்கொண்டது.

Of the three things (Virtue, Wealth and Love) that endure on this faultless earth, if one has got the midmost (wealth) he is likely to gain the two extremes also. He who has not got it, will have to suffer the cruel pain that one would feel when put into the (blacksmith's) furnace. (4)

115. நல்லாவின் கன்றுயி ருகும் விலைபெறாஉங்
கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் - சொற்செல்லும்
புல்லீரூப் போழ்தி னுழுவேபோன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்.

(இ-ள்.) நல் ஆவின் - உயர்சாதிப் பசுவினது, கன்று ஆயின் - கன்றுயிருப்பின், நாகும் - இளங்கன்றும், விலைபெறும் - மிக்க விலையைப்பெறும், (அதுபோலக்) கல்லாரே ஆயினும்-கல்வி யறிவில்லாராயிருப்பினும், செல்வர் - பொருட்செல்வ முடையாரது, வாய்ச்சொல் - வாய்ச்சொல்லானது, செல்லும் - (யாவராலும்) ஏற்றுக்கொள்ளப்படும், நல்கூர்ந்தார் சொல் - பொருட்செல்வ மில்லாரது சொற்கள், புல் ஈரப்போழ்தின் - (நிலம்) சிறிதீரமாகிய காலத்தில், உழுவேபோல் - உழுதற்கருவியேபோல, மீது ஆடி - (கேட்போர்) உள்ளத்திற் பதியாமல், செல்லா ஆம் - ஏற்றுக்கொள்ளப்படாதனவாம், எ-று.

பொ-ரை. உயர்சாதிப் பசுவினது கன்று யிருப்பின் இளங்கன்றும் மிக்க விலையைப்பெறும். அதுபோலக் கல்வியறிவில்லாராயிருப்பினும் பொருட்செல்வ முடையாரது வாய்ச்சொல்லானது யாவராலு மேற்றுக்கொள்ளப்படும். பொருட்செல்வ மில்லாரது சொற்கள் நிலைத் திறிதாகிய காலத்தி லுழுதற் கருவியேபோலக் கேட்போ ருள்ளத்திற் பதியாமல் ஏற்றுக்கொள்ளப் படாதனவாமென்பது.

ஆவின் கன்றென்பது பருவத்தைக் குறித்தலின்றி இன்னதனுல் ஈனப்பட்டதென்னும் பொருளிலும், காகென்பது பருவத்தைக் குறிப்பதிலும் வந்தன. உம்மைகள் இழிவு சிறப்பு. சொற் செல்லுதலாகிய சிறப்புக்கருதி வாய்ச்சொல் என வேண்டாது கூறப்பட்டது. செல்வர் ஒருவாறு ஒருமுறை ஒரு பொருளைப்பற்றிக் கூறினும் செல்லுதல் நோக்கி, ஒருமையாக்கொள்ளினும் பொருந்தும்படி 'சொற்செல்லும்' எனவும், செல்வமில்லார் பலவாறு பலமுறை ஒரு பொருளைப்பற்றிக் கூறினும் செல்லாமை நோக்கிச் 'சொற்செல்லா' எனவும் கூறினர். உழவு தொழிலாகுபெயர்; உழு பகுதி, அ சாரியை, உகரக்கேடு சந்தி, வு புடைபெயர்ச்சி விகுதி.

Even heifer fetches a good price if it is the calf of a good and healthy cow. So the words of the rich pass current even though they are not learned. Words of the poor, like the plough where the moisture is scanty, merely graze the surface and are not of any value. (5)

116. இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்று
மடங்காதார் சென்று மடங்கார்—தடங்கண்ணு
யுப்பொடு நெய்பா லயிர்காயம் பெய்தடினுங்
கைப்பரு பேய்ச்சுரையின் காய்.

இ-ள். தடவு கண்ணுப்-பெருமையாகிய கண்களையுடையாளே, பேய்ச் சுரையின் காய் - பேய்ச் சுரைக்காய்கள், உப்பொடு - உப்புடனே, நெய - நெய்யையும், பால் - பாலையும், தயிர் - தயிரையும், காயம் - காயவகைப் பலவற்றையும், பெய்து - இட்டு, அடினும் - சமைப்பினும், கைப்பு அறு - (தம்மியற்கையாகிய) கசப்பு நீங்கா, (அதுபோல) என்றும் - கற்ற காலத்தும், அடங்காதார் - அடங்கியொழுகு நியல்பில்லாதவர், இடம்பட - (தம்மூள்ளத்தின்) இடத்தில் பொருந்தும்படி, மெய்ஞ்ஞானம் - உண்மையாகிய ஞான நூல்களை, கற்பினும் - கற்றாராயினும், என்றும் அடங்கார் - எக்காலத்தும் அடங்கியொழுகார், எ - று.

பொ-ரை. பெருமையாகிய கண்களையுடையாளே! பேய்ச் சுரைக்காய்கள் உப்புடனே நெய்யையும் பாலையுந் தயிரையுங் காயவைத்துப், பலவற்றையு மிட்டுச் சமைப்பினுந் தம்மியற்கையாகிய கசப்பு நீங்கா; அதுபோல, கற்ற காலத்தும் அடங்கியொழுகு மியல் பில்லாதவர் தம்முள்ளத்தினிடத்தில் பொருந்தும்படி யுண்மையாகிய ஞான நூல்களைக் கற்றாராயினு மெக்காலத்தும் அடங்கி யொழுகா ரென்பது.

என்றும் என இருமுறை கூறியது அவாதடங்காமையின் மெய்ம்மையை இழித்தற்கும், உப்பை ஒடுக்கொடித்துப் பிரித்தது நெய்ம்மூதலியவற்றினும் இன்றியமையாத தென்பதற்கும். ஞானம் காரியவாகுபெயர். கற்றபின் அடங்கியொழுகலும், உப்போடு நெய் முதலியவற்றைப்பெய்து சமைத்தபின் கைப்பறுதலும் உண்டாதல் வேண்மோதலால் உம்மைகள் உயர்வு சிறப்புப்பொருளனவாய் நின்றன; என்றும் அடங்காதா ராதலின் அவர் ஆசிரியனை வழிபட்டடங்கிக் கல்லாமையையும், பேய்ச்சுரைக்காயை உப்போடு நெய்ம்மூதலியபெய்து அடிவாரின்மையையும் உணர்த்தின னெனக்கொள்ளின் எதிர்மறை உம்மைகளுமாம். இடமென்பதைப் பண்புப் பெயராகக்கொண்டு, இடம்பட என்பதற்கு விரிவாக என உரைத்தலுமாம்.

O wide-eyed maiden! Although you cook wild gourd in salt, ghee, milk, curd and spices, it does not lose its bitterness. So the low-minded men, even if they read and understand all works on ancient wisdom, never become disciplined. (6)

117. தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
வென்னை யவரொடு பட்டது—புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
யுறற்பால யார்க்கு முறும்.

இ-ள். புன்னை - புன்னையினது, விறல் - (பிறரால் நாற்றத்தைக் கடிதலாகிய) வெற்றி யமைந்த, பூ கமழ் - மலர்கள் மணக்கின்ற, கானல் - சோலையையுடைய, வீங்கு நீர்ச்சேர்ப்ப - கடலினது துறையை யுடையானே, உறற்பால - அன்பப்படுதலின் வகையனவாகிய வினைகள், யார்க்கும் - எத்தன்மையார்க்கும், உறும் - வந்தடையும், (ஆதலால்) தம்மை இகழ்வாரை - தம்மை இகழ்பவரை, தாம் - தாம், அவரின் முன் - அவரினும் முற்பட, இகழ்க - இகழ்க்கடவர், அவரொடு பட்டது - அவரோடு தமக்குண்டாகிய உறவு, என்னை - என்ன பயனுளது, எ - று.

பொ-ரை. புன்னையினது (புலால் நாற்றத்தைக் கடிதலாகிய) வெற்றியமைந்த மலர்கள் மணக்கின்ற சோலையையுடைய கடலினது துறைவையுடையானே! தன்பப்படுதலின்வகையனவாகிய வினைகள் எத்தன்மையர்க்கும் வந்தடையும். ஆதலால் தம்மை இகழ்பவரைத் தாம் அவ்விகழ்வாரினும் முற்பட இகழக்கடவர். அவரோடு தமக்குண்டாகிய உறவு என்னபயனுளது என்பது.

ஐந்தனுருபு உறழ்பொருளில் வந்தது; உறழ்பொருளாவது மாறுபடக்கூறப்படுவது. தன்பந்தருவதாகிய ஊழ் விடாதாதலால், உறவை மதியாமல் இகழ்வாரை இகழ்வதினால் தம்பயன் கெடுமெனக் கருதாமல் அவரினும் மிகுதியாக இகழ்க என்பது கருத்து.

When men scorn you, you had better also do the same to them. What has a man to do with them? Lord of the shore where the beautiful *Punnai* flowers scatter their fragrance in the grove which surrounds the swelling tide! What is ordained is to come to all. (7)

118. ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போ
லொருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள லீங்கு.

இ-ள். ஆ - பசுக்கள், வேறு உருவின - பலவகைப்பட்ட உருவமுடையன, ஆயினும் - அவ்வாறு அமைந்திருப்பினும், ஆ - அப்பசுக்கள், பயந்த - கொடுத்த, பால் - பால்கள், வேறு உருவினஅல்ல - பலவகைப்பட்ட உருவமுடையன வல்லன, ஈங்கு - இவ்வுலகத்தில், நெறி - (அறத்தை ஆசரிக்கும்) ஒழுக்கங்கள், ஆ போல - பசுக்களைப் போல, பல உருவுகொளல் - பலவகைகளைக் கொள்ளுதலே அன்றி, அறம் - அவ்வறத்தின் பயன்கள், பால்போல - பாலைப்போல, ஒருதன்மைத்து ஆகும் - ஒருதன்மையுடையன ஆகும், எ-று.

பொ-ரை. பசுக்கள் பலவகைப்பட்ட வுருவமுடையன. அவ்வாறமைந்திருப்பினும் அப்பசுக்கள் கொடுத்த பால்கள் பலவகைப்பட்ட வுருவமுடையன வல்லன. இவ்வுலகத்தி லறத்தையாசரிக்கு மொழுக்கங்கள் பசுக்களைப் போலப் பலவகைகளைக் கொள்ளுதலே யன்றி யவ்வறத்தின் பயன்கள் பாலைப்போல ஒருதன்மையுடையன வாகும் என்பது.

அறம் சாதியொருமை. அன்றி சொல்லெச்சம். பசுவின்பன்மை நோக்கிப் பாலும் பன்மையாயது.

The milk obtained from various cows has the same colour though the cows themselves vary in colour. The way of virtue is of one nature like the milk, though the schools that teach it here are, like the cows, of many forms. (8)

119. *யாஅ ருலகத்தோர் சொல்லில்லார் தேருங்கால்*
யாஅ ருபாயத்தின் வாழாதார்—யாஅர்
இடையாக வின்ஞ தெய்தாதார் யாஅர்
கடைபோகச் செல்வ முய்த்தார்.

இ-ள். தேருங்கால் - ஆராய்ந்து பார்க்கின், உலகத்து - உலகத்தில், ஓர் சொல் - ஒரு நிந்தைச்சொல்லை, இல்லார் - உடையரா யிராதவர்; யார் - ஒருவருமிலர், உபாயத்தின் - தந்திரத்தால், வாழாதார் - உயிர் வாழாதார், யார்-ஒருவருமிலர், இன்ஞதது - துன்பந்தருவதை, இடை - (தம் வாழ்நாளில்) இடையில், ஆக - உண்டாக, எய்தாதார்-அடையாதவர், யார் - ஒருவருமிலர், கடை - தம் வாழ்நாளின் முடிவு வரையும், போக - இடைவிடாது செல்லும்படி, செல்வம் - செல்வத்தை, உய்த்தார் - கொண்டு அநுபவித்தவர், யார் - ஒருவருமிலர், எ - று.

பொ-ரை. ஆராய்ந்து பார்க்கி னுலகத்தில் ஒரு நிந்தைச் சொல்லை யுடையராயிராதவ ரொருவருமிலர். தந்திரத்தா லுயிர்வாழாதா ரொருவருமிலர். துன்பந்தருவதைத் தம் வாழ்நாளில் இடையிலுண்டாக அடையாதவ ரொருவருமிலர். தம்வாழ்நாளின் முடிவு வரையு மிடைவிடாது செல்லும்படி செல்வத்தைக்கொண்டநுபவித்தவ ரொருவருமிலர் என்பது.

குற்றமில்லா ரில்லையாதலால் 'யார் உலகத்தோர் சொல்லில்லார்' எனவும்; சாமம், பேதம், தானம், தண்டம் என்னும் இவை பெரும்பான்மையும் அரசர்க்குரியனவாயினும் மற்றையோர்க்குஞ் சிறுபான்மை யுரியனவாதலால் பொதுவாக 'யார் உபாயத்தின் வாழாதார்' எனவுங் கூறினர். யார் கடைபோகச் செல்வ முய்த்தாரென்றதும் பெரும்பான்மைபற்றி. ஒன்றென்னும் அடைபற்றியும், பின்னே கூறும் உபாயம், இன்ஞதது, கடைபோகுஞ் செல்வம் என்பனவற்றைப்பற்றியும் சொல் நிந்தையின்மேலது.

If you consider it well, (please say) who in this world has not obtained some fame or other? Who has not prospered in this world by his prudence? Who has not endured some grief or other, and who has enjoyed prosperity to the very end?

120. தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற்
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை—யாங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயமின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது.

இ-ள். கூற்றம் - யமன், கொண்டு - (தம்மைப்) பிடித்து, ஓடும் பொழுது - விரைந்து செல்லும்போது, ஆங்கு - ஒற்றுமையாகக் கூடி வாழ்ந்த காலத்தில், தாம் போற்றி - (உண்டி முதலியவற்றால்) தாங்கள் பாதுகாத்து, புனைந்த - (ஆடையணி முதலியவற்றால்) அழகு செய்த, உடம்பும் பயம் இன்று - உடம்பும் பயன்படுதலில்லை, (ஆதலால்) யாங்கணும் - எல்லா நூற்களிலும், தேரின் - ஆராயின், தம்மொடு செல்வது - தம்முடன் செல்லுந்துணை, தாம் செய்தவினை அல்லால் - தாம் செய்தவினை அல்லாமல், மற்றுபிறிது இல்லை - வேறொரு பொருளில்லை, எ-று.

பொ-ரை. யமன் தம்மைப்பிடித்து விரைந்து செல்லும்போது ஒற்றுமையாகக் கூடிவாழ்ந்த காலத்தில் உண்டிமுதலியவற்றால் தாங்கள் பாதுகாத்து ஆடையணி முதலியவற்றால் அழகு செய்த உடம்பும் பயன்படுதலில்லை. ஆதலால் எல்லா நூற்களினும் ஆராயின் தம்முடன் செல்லுந்துணை தாஞ்செய்த வினையல்லாமல் வேறொருபொருளில்லை யென்பது.

செல்வது ஒன்றன்படர்க்கை எதிர்கால வினைப்பெயர். உண்டி முதலியன-நல்லுணவு, பனி காற்று வெயிலில் வருந்தாது வைத்தல், பிணிவரின் மருந்துண்ணல் என்பன. உம்மை முற்றுமை யாதலால் யா வினா எஞ்சாமைப்பொருளது. மற்றது உயர்வுசிறப்பு. மற்று பிறி தென்னும் பொருட்டு.

What accompanies a man to the other world, is his deeds, good or bad. Nothing else could accompany him. The body that has been so carefully attended to and preserved during life, is of little value when *Yama* carries away the life or soul.

Chapter XIII—Fear of misconduct.

13-ஆம் அதிகாரம், தீவினையச்சம்.

அஃதாவது தீயவினையைச் செய்தற்கு அஞ்சுதலையுணர்த்துவது. முன் செய்வினையானது வருபிறப்பில் செய்தவன் செல்வம், வறுமை முதலியனவடைதற்குக் காரணமாதலையும், அவ்வினைக்கு இயைய இயல்பு குன்றுமையாகிய மெய்ம்மையையும் முன் உணர்த்தினவர் துன்பத்தருந் தீவினை செய்யாமையை இதனு லுணர்த்தலால் இது மெய்ம்மையின்பின் வைக்கப்பட்டது.

121. துக்கத்துட் டோங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடிட புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

ஈ-ள். சுடுகாடு - இடுகாடுகள், துக்கத்துள் - துன்பத்துக்குக் காரணமாகிய இல்வாழ்க்கையில், தூங்கி - சோம்பியிருந்து, துறவின் கண் - துறவு வழியில், சேர்கலாத - சேரும் உணர்வில்லாத, மக்கள்-மக்களது, பிணத்த - பிணங்களே யுடையன, தொக்க - (ஒன்றை யொன்று பிரியாமல்) சேர்ந்துள்ள, விலங்கிற்கும் - (சிலவகை) மிருகங்களின் பிணங்களுக்கும், புள்ளிற்கும் - பறவைகளின் பிணங்களுக்கும், காடு - சுடுகாடுகள், புலன் கெட்ட - மெய்யறிவில்லாத, புல் அறிவு ஆளர் - சிற்றறிவை யாளுதலே யுடையாரது, வயிறு ஏ - வயிறுகளேயாம், எ-று.

பொ-ரை. இடுகாடுகள் (சுடுகாடு) துன்பத்துக்குக் காரணமாகிய இல்வாழ்க்கையில் சோம்பியிருந்து துறவுவழியில் சேரும் உணர்வில்லாத மக்களது பிணங்களே யுடையன. ஒன்றையொன்று பிரியாமல் சேர்ந்துள்ள சிலவகை மிருகங்களின் பிணங்களுக்கும் பறவைகளின் பிணங்களுக்குஞ் சுடுகாடுகள், மெய்யறிவில்லாத சிற்றறிவை யாளுதலே யுடையாரது வயிறுகளேயாம் என்பது.

துக்கந் தருவதிலிருப்பவர் அதில் நின்றும் நீங்குதல் செய்யாமையால் 'தூங்கி' என்றும், அருளில்லாராய் விலங்கு பறவைகளே உண்ணலாகிய பெரும்பாதக வினைகளைச் செய்கின்றமையால் அவரை இழித்தற்குப் 'புலன்கெட்ட புல்லறிவாளர்' என்றுங்கூறினர். புல்லறிவாளரென்றது தாம் மெய்யறிவிலரா யிருந்தும் அருளுடையார் கூறும் உறுதிமொழியைக்கேட்கும் இயல்பில்லாரை. தேற்றேகாரத்தை வயி றென்பதனோடு கூட்டுக. மக்கட்பிணம் திரிந்து வேறுபடும் தற்கிழ

மைப் பொருளதாகிய ஆறும் வேற்றுமைத்தொகை. பிணத்த பொருளடியாகப் பிறந்த பல்வின்படர்க்கைக் குறிப்பு முற்று.

The burning-ground is filled with corpses of men that would not give themselves up to self-renouncing life, but oscillate amidst domestic sorrows. The stomach of the low is the burning ground for beasts and birds. (1)

122. இரும்பார்க்குங் காஞ்சா யெதிலார்க்காளாய்க்
கரும்பார் கழனியுட் சேர்வர்—சுரும்பார்க்குங்
காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குறும்பூழுங்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார்.

இ-ள். சுரும்பு ஆர்க்கும் - வண்டுகள் ஆரவாரிக்கின்ற, காட்டுள் ஆய் - காட்டிலிருந்து, வாழும் - வாழ்வதற்குரிய, சிவலும் - கவுதாரியையும், குறும்பூழும் - காடையையும், கொண்டு - பிடித்து வந்து, கூட்டுள் ஆய்ந்த பஞ்சரத்தில் இருக்க, வைப்பார் - வைத்து வளர்ப்பவர், இரும்பு (மறுமையில்) இருப்பு விலங்கினுல், ஆர்க்கும் - பூட்டப்பட்ட, காலர் ஆய் - கால்களுடையாராகி, எதிலார்க்கு - அயலார்க்கு, ஆள் ஆய் - அடிமைகளாய், கரும்பார் - கருநிலத்திலும், கழனியுள் - வீளை நிலத்திலும், சேர்வர் - சேர்ந்து தொழில் செய்வர், எ - று.

பொ-ரை. வண்டுகளாரவாரிக்கின்ற காட்டிலிருந்து வாழ்வதற்குரிய கவுதாரியையுங் காடையையும் பிடித்துவந்து பஞ்சரத்திலிருக்கவைத்து வளர்ப்பவர், மறுமையிலிருப்பு விலங்கினுற்பூட்டப்பட்ட கால்களுடையாராகி யயலார்க்கு அடிமைகளாய்க் கருநிலத்திலும் வீளைநிலத்திலுஞ் சேர்ந்து தொழில் செய்வர் என்பது.

பாலென்றது நிலத்தை. கருநிலமென்பது நீரில் மலியில் வனத்தில் பயன்படாத நிலம். "வெற்பினீரினில் வெவ்வனத்தில், கறைபடு மிருதிதானே கூநிலமாகுமென்ப" என்னும் நிகண்டாலுமுணர்க. அந்நிலத்தில் தொழில் செய்தலாவது அதனைத் திருத்தி உழுது கொழுமை யுண்டாக்கிப் பயிரிடல். இரும்பு கருவியாகுபெயர். இது ஆர்க்குங்கால் என்றவிடத்தால் விலங்கின்மேலது. கருத்தின்படி இயங்கலும், வேண்டியவாறு தானெயெடுத்தலும் காமதுரர்ச்சியுமில்லாமற்செய்ல்பற்றிக் கொலையிலுமொடாக்குமாதலால் இதுவுஞ் செய்தல் கூடாதென்பது கருத்து. கரும்பார்கழனி என்பதற்குக் கரும்பு ஆர் கழனி எனப் பதம் பிரித்துக் கரும்புகள் நிறைகின்ற கழனி என உரைப்பினும் பொருந்தும்.

Those who confine in cages (birds like) partridges and quails that dwell in jungles where beetles hum (amidst flowers,) will be put in chains, will become slaves and will some day be confined in hell. (2)

123. அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவ—ரக்கா
லலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.

இ-ள். அக்கால் - கழிந்த பிறப்பில், அலவனை - ஞண்டை, காதலித்து - விரும்பி, கால் முறித்து - அதனது கால்களை ஒடித்து, தின்ற-தின்றதனாலாகிய, பழவினை - முன்னைவினை, வந்து அடைந்தக்கால் - வந்தடைந்தால், விரல் அழுகி - விரல்கள் அழுகி யில்லாதனவாய், அக்கு போல் - சங்குமணியைப்போல நிறமுடையனவாய், அங்கை ஒழிய - உள்ளங்கை இருக்கும்படி, துக்கத் தொழுநோய் - துக்கத்தைத் தரவல்ல குட்டநோய், எழுப - உண்டாவார்கள், எ-று.

பொ-ரை. கழிந்த பிறப்பில் ஞண்டை (நண்டை) விரும்பி அதனது கால்களை யொடித்துத் தின்றதனாலாகிய முன்னைவினைவந் தடைந்தால் விரல்களழுகி யில்லாதனவாய்ச் சங்குமணியைப் போல நிறமுடையனவா யுள்ளங்கை இருக்கும்படித் துக்கத்தைத் தரவல்ல குட்டநோய் யுண்டாவார்கள் (உண்டாகப்பெறுவார்கள்) என்பது.

போலென்னும் இடைச்சொலடியாகிய முதனிலை வினையெச்சப்பொருள் பட்டது. அங்கை பின்முன்னுகத் தொக்க உறுப்புத்தற் கிழமைப் பொருளதாகிய ஆறாம்வேற்றுமைத்தொகை. அலவன் ஆண்மைப்பெயரன்று; சாதிப்பெயர், களவனென்பதும் அது. நோயெழுப தினைவழுவமைதி. எ - இரண்டும் அசை. தின்ற காரணப் பொருட்டாகிய இறந்தகாலப் பெயரெச்சம்.

Some in former birth loved to feed on crabs and had their joints broken. Such people, when their old deeds begin to produce their fruit, will have their palms eaten away by leprosy and their fingers fallen off and have to wander in this world as lepers. (3)

124. நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉ
மெரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்—பரப்பக்

கொடுவினைய ராகுவர் கோடாரும் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

இ-ள். நெய் போல்வதும் - நெய்யும், நேருப்பு அழல் - தீ னது வெப்பத்தை, சேர்ந்தக்கால் - சேர்ந்தால், எரிப்பச்சுட்டு - (சார்ந்தவரை) வேகும்படி சுட்டு, எவ்வநோய் - துன்பந்தரும் நோயை, ஆக்கும் - உண்டாக்கும், கோடாரும் - (நல்லொழுக்கத்தினின்றும்) தவறுதலில்லாதவரும், கடுவினையர் ஆகியார் - கொடுமையாகிய தொழிலைச் செய்பவராயினரை, சார்ந்து - சேர்ந்தனால், கோடி - (தம் மொழுக்கத்தினின்றும்) தவறி, பரப்ப - மிகுதியாக, கொடுவினையர் ஆகுவர் - (தம்மொழுக்கத்துக்கு)மாறுகிய தொழில் செய்பவர் ஆகுவார், எ - று.

பொ-ரை. நெய்யும் தீயினது வெப்பத்தைச் சேர்ந்தால் சார்ந்தவரை வேகும்படி சுட்டுத் துன்பந்தரும் நோயை யுண்டாக்கும். நல்லொழுக்கத்தினின்றுந் தவறுதலில்லாதவருங் கொடுமையாகிய தொழிலைச் செய்பவராயினரைச் சேர்ந்தனால் தம்மொழுக்கத்தினின்றுந் தவறி மிகுதியாகத் தம்மொழுக்கத்துக்கு மாறுகிய தொழில் செய்பவராகுவரென்பது.

அழலென்பதன் ஈற்றுலகரம் சந்த இன்பப்பொருட்டுத் திரிந்தது. போல்வது உரையசை இடைச்சொல். உம்மைகள் எரிப்பச்சுடாத இயல்பினதென்பதையும் கோடாத ஒழுக்கத்தினரென்பதையும் உணர்த்தலால் உயர்வு சிறப்பு. கொடுமை செம்மைக்கு மாறுகிய பண்புணர்த்துஞ்சொல். இக்கொடு என்பதன் விகாரம் கோடாரென்பதன் முதனிலை.

Even ghee, cold as it may appear at first, when it comes in contact with heat, becomes hot and inflicts injury on those who touch it. So too good men in company of bad associates spoil their character and become a source of injury to others. (4)

125. பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வளரை வரிசையா நந்தும்—வரிசையில்
வாணூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

இ-ள். பெரியவர் - பேரறிவுடையாரது, கேண்மை - நட்பு, பிறைபோல - பிறைபெருகுவது போல, நாளும் - தினமும், வரிசை வரிசையாக - முறை முறையாக, தானே நந்தும் - தானே பெருகும்,

சிறியார் தொடர்பு - சிற்றறிவுடையாரது நட்பு, வான் உயர் - ஆகாயத்தில் தவிழ்ந்து செல்லும், மதியம்போல் - பிறைந்தமதி குறைவது போல, வைகலும் - தினமும், வரிசையால் - முறையில், தானே யும் - தானே குறையும், எ - று.

போ-ரை. பேரறிவுடையாரது நட்புப் பிறை பெருகுவதுபோலத் தினமும் முறை முறையாகத் தானே பெருகும்; சிற்றறிவுடையாரது நட்பு ஆகாயத்தில் தவழ்ந்து செல்லும் பிறைந்தமதி குறைவதுபோலத் தினமும் முறையில் தானே குறையும் என்பது.

பெரியவர்கேண்மை-பெரியரோடு பெரியவர் செய்யுங்கேண்மை என்பது. சிறியார் தொடர்பும் அது. நாளும், வைகலும் என்றது நட்புக்கொண்டபின் நிகழும் நாட்களை. அதற்கு இடைவிடாமைப் பொருளது. தான் கீழ்த்திசையில் தோன்றி மேற்றிசையிற் செல்லுதல் யாவராலும் காணப்படுதலால் மதியத்துக்கு வானென்னும் அடை கொடுக்கப்பட்டது. நாள் செல்லச் செல்லத் தம் இயல்பு தம்மில் தெரிந்து ஒருவரையொருவர் நட்டல் மிகுதலால் அவர் நட்புக்குப் பிறையும், அவ்வாறு தெரிந்தபின் ஒருவரையொருவர் நட்டல் குறைதலால் அவர் நட்புக்கு மதியமும் உவமையாயின. தானே என்பது பெரியவர் கேண்மைக்கும் கூட்டுக. எ - பிரிநிலை. ஒருவரையொருவர் நட்புக்கொள்ளச் செய்வன அவரவருடைய நற்குண நற்செய்கைகளின் உண்மையும் இன்மையுமாதலின் கேண்மை தானே நந்தும், தொடர்பு தானே தேயுமெனக் கேண்மை தொடர்புகளின் மேல் வைத்துக்கூறினர். வரிசையால் உருபு மயக்கம். முறை என்றது பெருகுதல் குறைதலிரண்டிற்கும் ஒரு நிகரனவாய் நிகழும் முறையை.

The great men's friendship gradually increases like the crescent moon; but friendship with the low, like the moon on its decline, will by degrees dwindle away of itself. (5)

126. சான்றோரெனமதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தாய்க்குச்
சான்றாண்மைசார்ந்தார்கணில்லாயின்—சார்ந்தாய்கேள்
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து.

இ-ள். சான்றோர் என - (இவர் பலநற்குணங்களாலும்) நிறைந்தோரென்று, மதித்து - எண்ணி, சார்ந்தாய்மன் - மிகுதியும் நட்புக்கொண்டாய், சார்ந்தாய்க்கு - (அவ்வாறு எண்ணி) நட்புக்கொண்டவனுக்கு, சார்ந்தார்கண் - (நின்னால்) நட்புக்கொள்ளப்பட்டாரிடத்து,

சான்றுண்மை - (பல நற்குணங்களாலும்) நிறைந்து (அவற்றை) ஆராந்தன்மை, இல் ஆயின் - உண்டாயிருத்தல் இல்லை ஆனால், சார்ந்தாய் கேள் - (ஆராயாமல்) நட்புக் கொண்டவனே கேள், (அந்நட்பு) ஒருவன் ஒருவன், சாந்து - சந்தனம், அகத்து உண்டு - உள்ளே இருக்கிறது என்று - என்று எண்ணி, செப்பு - செப்பினை, இறந்து (மேல்மூடியைத்) திறந்து, அகத்து - (அச்செப்பின்) உள்ளிடத்து, பாம்பு - பாம்பை, கண்டதன் - கண்டதனால் உண்டாகிய அச்சத்தை, உடைத்து - உடையது, எ - று.

பொ-ரை. இவர் பல் நற்குணங்களாலும் நிறைந்தோரென்றெண்ணி மிகுதியும் நட்புக்கொண்டாய்; அவ்வா றெண்ணி நட்புக் கொண்ட நினக்கு (நின்னால்) நட்புக்கொள்ளப்பட்டாரிடத்துப் பல நற்குணங்களாலும் நிறைந்து அவற்றையாராய்ந்தன்மை யுண்டாயிருத்தலில்லையானால் ஆராயாமல் நட்புக் கொண்டவனே கேள்! அந்நட்பு ஒருவன் சந்தனம் உள்ளே யிருக்கிறதென் றெண்ணிச் செப்பினை (மேல்மூடியைத்) திறந்து அச்செப்பி னுள்ளிடத்துப் பாம்பைக்கண்டதனால் உண்டாகிய வச்சத்தை யுடையது என்பது.

வினைமுதல் வினையைக் காரியத்தின்மேலேற்றிக்கூறிய ஒன்றன் படர்க்கை இறந்தகால வினைப்பெயராகிய கண்டது அச்சத்தின்மேலது. நீயடைந்த பயனையொத்த பயனை அவனடைந்தா னென்பான் நீயடைந்ததையவனடைந்தான் என்றாற்போல நின்றகண்டதுடைத்து என்பதற்குக் கண்டதனால் உண்டாகிய அச்சத்தை ஒத்த அச்சத்தை உடையதெனவுரைக்க. மன் மிகுதிப்பொருளது. குணத்தையும் செய்கையும் பலவாறு ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டுமென்பது கருத்து.

You judged a man to be great and began to move with him on terms of intimacy. How find you yourself if you don't find that greatness in him? It is something like finding a cobra inside a casket while you opened it thinking it contained an odorous unguent. (6)

127. யாஅ ரொருவ ரொருவர்தம் மூள்வத்தைத்
தேருந் துணைமை யுடையவர்—சாரல்
கனமணி நின்றிமைக்கு நாடகேண் மக்கண்
மனம்வேறு செய்கையும் வேறு.

இ-ள். சாரல் - சாரலில், கன மணி - பெருமணிகள், இமைக்கும் - இடைவிடாமல் ஒளியெறிக்கும். நாட - மலைநாட.

யுடையானே, மக்கள் - மனிதருடைய, மனம் வேறு - எண்ணமும் வேறு, செய்கையும் வேறு - (புறத்தில்) செய்யுஞ் செயலும் வேறு, (ஆதலால்) யார் ஒருவர் - எவரொருவர், ஒருவர்சம் - ஒருவருடைய, உள்ளத்தை - எண்ணத்தை, தேரும் - ஆராய்ந்து துணியும், துணை மை - கருவியாகிய அறிவை, உடையவர் - உடையராவர் (ஒருவருமிலர்) எ-று.

பொ-கை. சாரலில் பெருமணிக ளீடைவிடாமல் ஒளியெறிக்கும் மலை நாட்டை யுடையானே! மனிதருடைய எண்ணமும் வேறு, புறத்தில் செய்யுஞ் செயலும் வேறு. ஆதலா லெவரொருவர் ஒருவருடைய வெண்ணத்தை யாராய்ந்து துணியுங் கருவியாகிய அறிவை யுடையராவர்? ஒருவருமிலர் என்பது.

ஆதலால் பலநாள் பலவழியால் ஆராய்ந்து ஒருவரை நட்புக் கொள்ளவேண்டும்; இல்லையாயின் அவர் தீக்குணத்தால் தம் நற்குண மாறித் தீவினை செய்ய உடன்படுவரென்பது. தேர்தற்குக் கருவியாதல்லால் அறிவைத் 'துணை' என்றார். சாரல்தொழிலாகுபெயர். இமைக்கு மென்பதில் இமைத்தல் கண்ணின்மேலிதழைக் கீழிதழோடு பொருத்தல்; அது தனக்குக் காரணமாகிய ஒளிசெய்தலின்மேல் நிற்றலால் காரணத்தைக் காரியமாகக் கூறுவதோ ருபசார வழக்காம்.

O Lord of the mountainous regions where sparkle gold and gems! Hear me! men's minds are in one way and their actions the other way. Which man has got the power of understanding the innermost intentions of another man? (7)

128. உள்ளத்தா னள்ளா துறுதிற் றொழிலராய்க்
கள்ளத்தா னட்டார் கழிகேண்மை—தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும்.

இ-ள். புனல் - அருவி நீர், தெள்ளி - தெளிவுடையதாகி, செதும்பு - சேற்றை, நின்று அலைக்கும் - நீங்காமலே கழுவுகின்ற, பூங்குன்றநாட - பொலிவாகிய மலைநாட்டானே, உள்ளத்தால் - மனத்திலுள், நள்ளாது - நட்புச் செய்யாமல், உறுதி - (தாம் அடையும்) பயனுக்குத் தகுந்த, தொழிலராய் - (நட்பின்) செயலை யுடையராகி, கள்ளத்தால் - வஞ்சனையினால், நட்டார் - நட்புச்செய்தவரது, கழிகேண்மை - மெய்ந்நட்பு செய்யும் நட்பு, மனத்துக்கண் - (அவரால் நட்புச் செய்யப்பட்டவருடைய) மனத்தில், மாசு ஆய் - குற்றத்தைத் தருவதாகி, விடும் - (பின்) ஒழியும், எ-று.

பொ-ரை. அருவி நீர் தெளிவுடையதாகிச் சேற்றை நீங்காமல் கழுவுகின்ற பெரிவாகிய மலை நாட்டானே! மனத்தினால் நட்புச் செய்யாமல் தாமடையும் பயனுக்குத் தகுந்த நட்பின் செய்கை யுடையராகி வஞ்சனையினால் நட்புச் செய்தவரது நெஞ்சாலும் நட்பு (அவரால் நட்புச் செய்யப்பட்டவருடைய) மனத்தில் றத்தைத் தருவதாகிப் பின் ஒழியும் என்பது.

புனலென்பது னீற்று லகரம் எதுகைத் தொடைநோக்கி றகர மாகத் திரிந்தது. அவர் பயனை அடைந்தமாத்திரத்தில் விட்டொழி லே இவர் கருதுந்தோறு மனத்துக்குத் துன்பந்தருதலால் 'கேண்மை மனத்துக்கண் மாசாய்' என்றும், பின் அவரை நட்புச் செய்யாத லால் 'வீடும்' என்றுங் கூறினர். நாளினது மிகுதி கேண்மையின்மே லேற்றப்பட்டது. மாசு தருவதனை மாசென்றது உபசாரம். மலைக் குச் சேறு காற்றுறப்படியும் புழுதியாலாகியது. அலைக்கு மென்னும் காரணப் பெயரூட்டாகிய பெயரெச்சம் பூவென்னும் காரியப்பெயர் கொண்டது.

O Lord of the land of flowery hills where the torrents wash away in different directions! The guileful friendship of those who are not united to us in heart, will end in bitter disappointment and will be a source of great bitterness. (8)

129. ஒக்கிய வொள்வாடன் னென்னுர்கைப் பட்டக்கா
லூக்க மழிப்பதூஉ மெய்யாகு—மாக்க
மிருமையுஞ் சென்று சுடுதலா னல்ல
கருமமே கல்லார்கட் டீர்வு.

இ-ள். ஒக்கிய - (ஒருவன் கொல்லும்படி) உயர்த்திய, ஒள்வாள் - கூரியவாள், தன் ஒன்னுர்கை - தன் பகைவர்கையில், பட்டக்கால் - அகப்படின், ஊக்கம் - (அவ்வாள் தன்னுடைய) மனவலியை, அழிப் பதும் - போக்குவதும், மெய் ஆகும் - உண்மையாகும், (அதுபோல) ஆக்கம் - (தன்) கைப்பொருள், (பகையாரிடத்துச் சேரின்) (அது) இருமையும் - (தன்னுடைய) இம்மை மறுமைப் பயன்களை, சென்று - தொடர்ந்து, சுடுதலால் - அழித்தலால், கல்லார்கண் - பகையா ரிடத்தினின்றும், தீர்வு - நட்பு நீங்குதல், நல்ல கருமமே - அறிச்செய் கையேயாம், எ-று.

பொ-ரை. ஒருவன் கொல்லும்படி யுயர்த்திய கூரியவாள் தன் பகைவர் கையில் அகப்படின் அவ்வாள் தன்னுடைய மனவலியைட்

போக்குவதும் உண்மையாகும். அதுபோலத்தன்கைப்பொருள் பேதையாரிடத்துச் சேரின் அது தன்னுடைய இம்மை மறுமைப்பயன்களைத் தொடர்ந் தழித்தலால், பேதையாரிடத்தினின்றும் நட்பு நீங்குதல் அறச்செய்கையாம் என்பது.

ஒக்கின் பிறவினை; ஒங்கிய தன்வினை. ஒன்னுசென்னும் எதிர் மறை வினைப்பெயரின் முதனிலை ஒன்னென்பதன் மரூஉ ஆகிய ஒன். தன் உயிரைப் போக்குதலு மெய்யார்கு மென்பதனை அழிப்பதுமென்ற எதிரதுதழீஇய எச்சவும்மையால் தழுவினார்; இது ஒரு காலத்துத் தவறலுங் கூறுமாதலின். உவமைக்கண் பட்டக்கா லென்றதனைப் பொருளுக்குங் கொள்க. தான் தந்தபொருளால் பேதையர் செய்யுந் தீச்செயல், கொடுத்த தனக்கு இம்மையில் புகழையும், மறுமையில் துறக்கத் இன்பத்தையு மழித்தலின் அது இருமையுஞ் 'சுடும்' என்றும், மூன்னுணர்ந்து அவரினின்றும் நீங்கின் பொருள் தருதலும், அதனால் வரும் பழிபாவமுந் தம்மை யடையாமையால் 'தீர்வு நல்ல கருமமே' என்றுங் கூறினர். எ-தேற்றம். உறுதித் தொழிலருடைய கேண்மையை அவர் வேண்டியதைத் தாராமலே நீக்குக என்பது கருத்து.

If the glittering sword of a man falls into the hands of his enemy, it will deaden his spirit. The effect of bad deeds will show itself in both the worlds. So it is better to keep ourselves aloof from those whose actions are bad. (9)

130. மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
யெனைத்தூழி வாழ்தியோ நெஞ்சே—யெனைத்துஞ்
சிறுவரைமே லாயினுஞ் செய்தகன் றல்லா
லுறுபயனே வில்லை யுயிர்க்கு.

இ-ள். நெஞ்சே - மனமே, மனை - இல்வாழ்க்கையில் வைத்த, பாசம் - விருப்பத்தை, கைவிடாய் - பற்றறவிடாய், மக்கட்கு என்று-(தேடும்பொருள்) சந்ததியார்க்குதவுமென்று, ஏங்கி-வருந்தித் தேடா நின்று, எனைத்து ஊழி - எத்தனை ஊழிகாலம், வாழ்தியோ - வாழ்வாயோ, உயிர்க்கு உறுபயனே - (உடலோடு கூடிநின்ற) உயிருக்குப் பிறப்பினால் அடையும் பயனே, எனைத்தும் - எவ்வளவும், சிறு வரையே ஆயினும் - சிற்றளவினை யுடையதாயிருப்பினும், செய்த நன்று அல்லால் - செய்யப்பட்ட அறமல்லாமல், இல்லை - வேறுதுணை யில்லை, எ-று.

பொ-ரை. மனமே! இல்வாழ்க்கையில் வைத்த விருப்பத்தைப் பற்றறவிடாய்; தேடும்பொருள் சந்ததியார்க்கு உதவுமென்று வருந்தித்

தேடாநின் றெத்தனை யூழிகாலம் வாழ்வாயோ. உடலோடுகூடிநின்ற உயிருக்குப் பிறப்பினு லிடையும் பயனு எவ்வளவும் சிறிதளவினை யுடையதா யிருப்பினுஞ் செய்யப்பட்ட அறமல்லாமல் வேறுதுணை யில்லை.என்பது.

மக்கட்கென ஏற்றுக்கோடற் பொருளைக் கூறவே அதற்கிசைந்த செயப்படுபொருளாகிய பொருள் வருவிக்கப்பட்டது. எனைத்தென் பதில் எனை எத்தனையென்பதன் மரூஉ. துவ்வாதது பகுதிப்பொருளது. பிறப்பு வீடென்னும் இரண்டினையும் அடைதற்குச் சாதனமாதல் பற்றித் தான் உடலோடு கூடிவாழும் வாழ்க்கையை அதன்மேலேற்றி 'வாழ்தி' என்றும், வாழ்தற்கிடனாய உடல் மழைமொக்குளிற்றோன் றிக் கெடுமிதென்று உணரமாட்டாப் பேதைமையைக் குறித்து 'வாழ் தியோ' என்றுங் கூறினர். மூன்றுள்ள ஓ இரக்கப் பொருளது, பின் னையது உயர்வுசிறப்புப் பொருளது.

O mind! thou leavest not the bonds of domestic life. How long are you to be so yearning for children? There is nothing more useful to the soul than the good one does, however small it may be. (10)

Part II.

ON PROPERTY.

உ. பொருட்பால்.

அஃதாவது பொருளினது பகுப்புணர்த்துவது. இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றினையுந் தருவதாகிய ஆறத்தை முன்னு ணர்த்தினராதலால் இம்மை மறுமை இரண்டினைத் தருவதாகிய பொருளை அதன்பின் கூறல் முறையாதல் பற்றி இஃததன்பின் வைக் கப்பட்டது.

Chapter XIV—Learning.

14-ம் அதிகாரம்: கல்வி.

அஃதாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றலை யுணர்த்துவது. பொருளை அறத்தின் வழியில் தேடுதற்கும், தேடியபொருளைப் பய படுத்தற்கும் கருவியா யமைந்தது கல்வியறிவாதலின் இதனை முத கண் கூறுகின்றனர்.

131. குஞ்சி யழகுங் கொடுந்தாணைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு.

இ-ள். குஞ்சி அழகும் - சிகையின் அழகும், கொடுந்தாணை - (முடித்துக் கட்டுதலாலாகிய) வளைவுள்ள ஆடையினது, கோடு அழகும் - கரையினதழகும், மஞ்சள் அழகும் - மெய்ப்பூச்சினது அழகும், அழகு அல்ல-(ஒருவனுக்கு) அழகல்லவாம், நெஞ்சத்து - மனத்தில், யாம் நல்லம்-நாம் நல்லபிறப்பினேம், என்னும்- என்று கருதுகின்ற, நடுவுநிலைமையால் - நடுவுநிலைமையாகிய கருத்தைத் தருதலால், கல்வி அழகே - கல்வியின் அழகே, அழகு - அழகாம், எ-று.

பொ-ரை. சிகையினழகும் முடித்துக் கட்டுதலாலாகிய வளைவுள்ள ஆடையினது கரையினதழகும் மெய்ப்பூச்சினது அழகும் ஒருவனுக்கு அழகல்லவாம். மனத்தில் நாம் நல்ல பிறப்பினேம் என்று கருதுகின்ற நடுவு நிலைமையாகிய கருத்தைத் தருதலால் கல்வியின் அழகே அழகாம் என்பது.

குஞ்சியழகு முதலிய நான்கும் மூன்றுவதற்குரிய எதுப்பொருளில் வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைகள். கொடுமை-வளைவு. கொடுங்கோல், கொடுவாள், கொடும்புறம் முதலியவற்றிலுமுணர்க. மஞ்சள் நிறத்தினால் வந்த தலைமைபற்றி மெய்ப்பூச்சுக்குக் கருவியாகு பெயராயிற்று. என்னுதலே நடுவுநிலைமை யாதலால் என்னுமென்னும் பெயரெச்சம் நடுவுநிலைமையென்னும் செயற்பெயர் கொண்டதென்க. நடுவு நிலைமையைத் தருவதனை நடுவுநிலைமை யென்றார். குஞ்சிமுதலியனபோல நிலையில்லாத உடலுக்கன்றி நிலையுடைய உயிர்க்கு அறிவாகிய விளக்கத்தைத் தந்து அழகு செய்தலின் கல்வியழகுக்குப் பிரிநிலை ஏகாரங் கொடுக்கப்பட்டது. கல்வியறிவுடையார் தம் பிறப்பு நற்பிறப்பெனக்கருதலே தருகியாதலின் ஆகு நடுவுநிலைமையாயிற்று.

The beauty of the tuft of hair is no beauty : nor the beauty of the dress, nor the beauty attained by coloring the face with saffron tint, but the learning which one possesses is the thing which may, with all propriety, be said to beautify him. (1)

132. இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றூழ்ளராக்—கேடின்று

லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்ம ரறுக்கு மிருந்து.

இ-ள். இம்மை - இப்பிறப்பின் பயனை, பயக்கும் - தரும்; ஈய - (பிறருக்கு) ஈவதினால், குறைவு இன்று - குறைதல் இல்லது, தம்மை - கற்றதம்மை, விளக்கும் - (அறிவினால்) விளங்கச்செய்யும், தாம் உளர் ஆக - தாம் உள்ளவராகச் செய்தது, கேடு இன்று - கெடுதல் இலது, (ஆதலால்) ஏம்மை உலகத்தும் - எவ்வுலகத்திலும், கல்விபோல் - கல்வியைப்போல, மம்மர் - பேதைமையாகிய நோயை, அறுக்கும் - ஒழிக்கின்ற, மருந்து - மருந்தை, யாம் காணேம் - யாம் கண்டிலோம், எ-று.

பொ-ரை. இப்பிறப்பின் பயனைத் தரும்; பிறருக்கு ஈவதினால் குறைதலிலது; கற்ற தம்மை அறிவினால் விளங்கச் செய்யும்; தாம் உள்ளவராகச் செய்து கெடுதலிலது. ஆதலா லெவ்வுலகத்திலுங் கல்வியைப் போலப் பேதைமையாகிய நோயை ஒழிக்கின்ற மருந்தை யாங் கண்டிலோம் என்பது.

இம்மை கிரணவாகுபெயர். பிறப்பின்பயன் அறமென நூல்களால் துணிந்தறிவது கல்வியைக்கொண்டாதலால் 'இம்மை பயக்கும்' என்றும், பொருட்செல்வம் போலாது இது வளர்செல்வ மென்பார் 'ஈயக்குறைவின்று' என்றும், புகழுமோருடம்பெனப்படுதலால் 'தாமுளராய்ச் செய்து' என்றும், கள்வர்முதலியோரால் கொள்ளப்படாதலில் நிலைத்தலுடையதென்பார் 'கேடின்று' என்றுங் கூறினர். செய்தென்னுஞ் சொல் எஞ்சி நின்றது. தான் முதற்காரணமாய் நின்று உயிர்க்குப் பிறப்பை எய்துவித்துத் துன்பஞ் செய்தலின் பேதைமைநோய் எனவும், அதனை யொழிக்கவல்லது கல்வியறிவேயாதலால் அக்கல்வி 'மருந்து' எனவும் உருவகஞ் செய்யப்பட்டன.

Learning is of great utility in this birth. It cannot diminish in quantity or quality but always increases as it is spent; it is not productive of evil. We have not seen anywhere any remedy equal to this in removing the delusions of sense. (2)

133. களர்நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
வினைநிலத்து நெல்லின் விழுமிதாக்—கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

இ-ள். சான்றோர் - (ஒழுக்கங்களால்) நிறைந்தோரும் நிலத்து - உவர் நிலத்தில், பிறந்த - தோன்றிய, உப்பினை - உப்பை,

விளைநிலத்து - வயலில் தோன்றிய, நெல்லின் - நெல்லைக்கொள்வது போல, விழுமிது ஆக - சிறப்புடையதாக, கொள்வர் - கொள்வார்கள், (அதுபோலக்) கடைநிலத்தோர் ஆயினும்-கீழ்மையாகிய இடத்தில் வைப்பதற்குரிய வருணத்தாராயினும், கற்றறிந்தோரை - கற்றறிந்தவரை (முதன்மையாகியவருணத்தாரைப்போல), தலைநிலத்து-மேன்மையாகிய இடத்தில், வைக்கப்படும் - வைத்தலே தகுதி, எ-று.

பொ-ரை. ஒழுக்கங்களால் நிறைந்தோரும் உவர் நிலத்தில் தோன்றிய உப்பை, வயலில் தோன்றிய நெல்லைக் கொள்வது போலச் சிறப்புடையதாகக் கொள்வார்கள். அதுபோலக் கீழ்மையாகிய இடத்தில் வைப்பதற்குரிய வருணத்தாராயினும் கற்றறிந்தவரை முதன்மையாகிய வருணத்தாரைப் போல மேன்மையாகிய இடத்தில் வைத்தலே தகுதி என்பது.

களர் நிலத்து, விளைநிலத்து என வேண்டாது கூறியது உப்பு, நெல் தோற்றியவிடத்தின் இழிவுயர்வுகளை உணர்த்தற்கு. கடலினீராதலும், அந்நிலத்தைமிதித்தலுஞ் செய்யாராதலின் உம்மை இழிவு சிறப்பு, அது தொகுத்தலாயிற்று, பின்னுள்ள உம்மையும் அது. கடை தலை என்பன முறையே கீழ்மை, மேன்மைகளை உணர்த்தின.

Salt, though it is manufactured in a marshy soil, is considered better than the paddy that comes from good fields. The learned, though they spring from the lowest caste, will be considered great and honoured accordingly. (3)

134. வைப்புழிக் கோட்படா வாய்த்தியிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர்—செறின்வவ்வா
ரெச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

இ-ள். வைப்பு உழி - வைத்த இடத்தினின்று, கோட்படா - (ஞாதியர் முதலியோரால்) கொள்ளப்படா, வாய்த்தீ - கிடைக்கப் பெற்று, ஈயின் - (ஏற்போர்க்கு) ஈந்தால், கேடு இல்லை - குறைதல் இல்லை, மிக்க - (தம்மினும்) மிகுத்த, சிறப்பின்-சிறப்புடைமையால், அரசர்செறின் - அரசர் கோபிப்பாராயின், வவ்வார் - அபகரிக்கக் கருதார், (ஆதலால்) ஒருவன் - அறிவுடைய ஒருவன், மக்கட்கு - புதல்வர்க்கு, எச்சம் என - தானிறந்தபின் ஒழிந்து நிற்கும் பொருள்களாக, மற்றுச்செய்வன - தேடிவைக்கும் பொருள்கள், விச்சை-கல்வியறிவுளே, பிற அல்ல-மற்றப் பொருள்களல்லவாம், எ-று.

பொ-ரை. வைத்த விடத்தினின்று ஞாதியர் முதலியோரால் கொள்ளப்படா; கேடுக்கப்பெற்று ஏற்போர்க்கு ஈந்தால் குறைதல் இல்லை; தம்மினும் மிகுந்த சிறப்புடைமையால் அரசர் கோபிப்பாரா யின் ஆகரிக்கக் கருதார்; ஆதலால் அறிவுடைய வொருவன் புதல் வர்க்குத் தானிறந்தபின் ஒழித்து நிற்கும் பொருள்களுள்ளுக் தேடி வைக்கும் பொருள்கள் கல்வியறிவுகளே, மற்றப் பொருள்களல்ல வாம் என்பது.

வைப்பு தொழிலாகுபெயர். வைப்புழி இருபெயரொட்டுப் பண் புத் தொகைநிலை. வைப்புழி என்றது மனத்தை. பொருள் கல்விப் பொருள் செல்வப் பொருளென இரண்டாயடங்கலின் பிற செல்வப் பொருளுக்கு ஆயிற்று. தந்தை கற்பிப்பினும் அமையப்பெறுத லரு மை நோக்கி 'வாய்த்து' என்றும், பிறவற்றிற்குக் கோட்படுதலி முத லிய மூன்று முண்மையின் எச்சமெனப்படா வாதலால் 'பிறவல்ல' வென்றுங் கூறினர். கல்வி எண்ணெழுத்தென்பன நோக்கியும், பொருள் மணி பொன்முதலியன நோக்கியும் பன்மையாயின. மிக்க சிறப்பாவது சென்றவிடமெல்லா முள்ளார் ஏற்றுக்கொண்டி பொருட்கொடை யும், பூசையும் அச்சத்தாலன்றி உவந்து செய்தல். எச்சம் தொழி லடியாகப் பிறந்த பெயர். எஞ்சு பகுதி, அம் வினைமுதற்பொருண்மை விகுதி, பகுதி குற்றியலுகரமாதலால் மெல்லொற்று வல்லொற்றாக னதும், உகரக்கேடும் சந்தி. அம் விகுதி புடைபெயர்ச்சி விகுதியெனக் கொண்டி தொழிலாகுபெய ரெனினும் ஒக்கும். விச்சை ஆரிய மொழிச்சிதைவு; விஞ்சை எனவும் வழங்கும்.

Learning cannot be robbed of a man possessing it. There will be no diminution in it when it is freely given away. It cannot be taken possession of by the king, even though he is angry with the man and wants to deprive him of this. The property which a man can properly bequeath to his son is education and no other property will serve him better. (4)

135. "கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி
ராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

இ-ள். கல்வி - சல்விகள், கரை இல - முடிவில்லன, கற்ப நாள் - கற்பவரது வாழ்நாள்கள், சில-(கல்வியி னளவின்மைக்கு) வாயிருக்கின்றன, மெல்ல - மெல்லெனக் கற்க, நினைக்கின் - நிலை

தால், பிணிபல - (இடையேவரும்) பிணிகள் பலவாயிருக்கின்றன, (ஆதலால்) நீர் ஒழிய - நீர் நீங்க, பால் உணா - பாலை யுண்ணுகின்ற, குருகின் - அன்னத்தைப்போல, தெள்ளிதின் - குற்றமற்ற அறிவினால், ஆராய்ந்து - ஆராய்ந்து துணிந்து, அமைவுடைய - (ஞானநூல்களைக் கற்பதற்குத்) தகுதியுடைய நூல்களை, கற்றுத் தேரிய - (நல்லோர்) கற்று அறிவார்கள், எ-று.

பொ-ரை. கல்விகள் முடிகின்றன. கற்பவரது வாழ்நாள்கள் கல்வியினளவின்மைக்குச் சிலவாயிருக்கின்றன. மெல்லெனக் கற்கநினைத்தால் இடையே வரும் பிணிகள் பலவாயிருக்கின்றன. ஆதலால் நீர்நீங்கப் பாலையுண்ணுகின்ற அன்னத்தைப்போலக் குற்றமற்ற அறிவினாலாராய்ந்து துணிந்து ஞானநூல்களைக் கற்பதற்குத் தகுதியுடைய நூல்களை நல்லோர் கற்று அறிவார்கள் என்பது.

மெல்ல என்னும் உடன்பாட்டு வினையெச்சக் குறிப்புக் கற்றலின் மேல்நின்றது. சில பல முறையே சின்மை பன்மை என்னும் பண்படியாகப் பிறந்த பலவின் படர்க்கைக் குறிப்புமுற்று.

The realm of education is so very extensive and boundless. The days of the learners are few; if you think of your life, it is subject to very many diseases. So think well and learn those that will be of use, like the bird which is able to separate water from milk and take the latter. (5)

136. தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணு
யவன்றுணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்.

இ-ள். தோணி - மரக்கலத்தை, இயக்குவான் - நடத்துவோன், தொல்லை வருணத்து-பழமையாகவழங்கும் வருணங்களில், காணின்-ஆராயின், கடைப்பட்டான் என்று-கடையானவனென்று, இகழார்-அவமதியாமல், அவன் துணை ஆக - (தமக்கு) அவன் துணையாக, ஆறு போயது அற்று - ஆற்றில் சென்றது போலும், நூல்கற்ற மகன் துணை ஆக - நூல்களைக் கற்றுணர்ந்தவன் துணையாக, நல்லை - நல்ல நூற்பொருள்களை, கொளல் - பெறுதல், காணுய் - நீ அறி, எ-று.

பொ-ரை. மரக்கலத்தை நடத்துவோன் பழமையாக வழங்கும் வருணங்களில் ஆராயின் கடையானவனென்று அவமதியாமல் தமக்கு அவன் துணையாக ஆற்றில் சென்றது போலும் நூல்களைக்

கற்றுணர்ந்தவன் துணையாக கல்ல நூற்பொருள்களைப் பெறுதல் நீ அறி என்பது.

போயுதென்னும் இறந்தகாலத் தொழிற்பெயரினீறும், துணையாக வென்னுஞ் செயவெனெச்சத்தீறும் தொகுக்கப்பட்டன, படைப்புத் தொட்டு வழங்கி வருதலின் 'தொல்லைவருணத்து' என்றும், ஒருவன் மகனெனப்படுதல் குலத்திலுலன்று கல்வியறிவாலென்பார் 'கற்ற மகன்' என்றுங் கூறினர். மகன் - ஆடவன்.

No one looks at the ferry boatman with contempt even though he comes of a low caste, but will be glad to cross the river with his help. So don't care of the origin of the learned teacher but try to acquire useful knowledge with his help. (6)

137. தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலிலரெஃகுடையார் தம்முட்—குழீஇ
நகலினினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி.

இ-ள். தவல் அரு - தவறுதலின்மையாகிய, தொல் கேள்வி - பழைய நூற்கேள்விகளையும், தன்மையுடையார் - நல்லொழுக்கத்தையு முடையாரும், எஃகு உடையார் - கூரறிவுடையாருமாயினோர், தம் முன் இகல் இலர் - தம்மில் பகையிலராகி, குழீஇ - கூடி, நகலின் - மகிழ்ந்து உரையாடுதலினும், இனிது ஆயின் - (எமக்கு) இன்பந்தருவ தாலுல், அகல் வானத்து - (மற்றப் பூதங்களினும்) விசாலித்த ஆகாயத் தின், உம்பர் - மேலிடமாகிய சுவர்க்கத்தில், உறைவார் - வசிக்குந் தேவர்களுடைய, பதி - அமராவதி நகரத்தை, காண்பாம் - பார்க்க விரும்புவோம், எ-று.

பொ-ரை. தவறுதலின்மையாகிய பழைய நூற் கேள்விகளையும் நல்லொழுக்கத்தையு முடையாருங் கூரறிவுடையாருமாயினோர் தம் மில் பகையிலராகிக் கூடி மகிழ்ந்து உரையாடுதலினுமெமக்கு இன்பந் தருவதாலுல், மற்றப் பூதங்களினும் விசாலித்த வாகாயத்தின் மேலிட மாகிய சுவர்க்கத்தில் வசிக்குந் தேவர்களுடைய வமராவதி நகரத்தைப் பார்க்க விரும்புவோம் என்பது.

தவறலில்லாமை யென்றது உள்ளபடி உணருந் தன்மையை. தூலின்று தொன்மை கேள்வியின்மே லேற்றப்பட்டது. நகல் மணமாகிய மகிழ்வுக்காதலின் அது காரணத்தைக் காரியமாகக் கூ உபசாரவழக்கு. எஃகு - கூர்மை; அஃது அறிவின் மேலது. இனிதா

யிற் காண்பாம் எனவே நிலவுலகில் இதனின் இனிதில்லை யென்ப தும், உடற்குரிய சுகத்தைத் தருவதன்றி இதுபோலப் பேதைமையை யொழித்து உயிர்க்கு இன்பந்தருவ தன்றென்பதும், ஆதலின் காணக் கடவ மல்லவென்பதும் குறிப்பெச்சம். உம்பர் - மேல்; அதுபண்பாகு பெயராய்ச் சுவர்க்கத்தையுணர்த்தியது.

When great men of varied learning bright & sharp as metal, without hatred, assemble together and spend their time in pleasant conversation, can there be better bliss than this even in the world of the Gods? (7)

138. *கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை*
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு.

இ-ள். கனை - ஒலிக்கின்ற, கடல் - கடலினது, தண்சேர்ப்ப - தண்மையாகிய துறையை யுடையானே, (ஒருவன்) கற்று அறிந்தார் - கற்றுணர்ந்தவரிடத்துச் செய்யும், கேண்மை - நட்பு, கரும்பு - கரும்பை, நுனியின் - நுனியினின்று, தின்றல் அற்று - தின்றற் போல நாள் செல்லச்செல்ல விருப்பந் தருவதாகும், பண்பு இலாத - கற்றறிந்த குணமில்லாத, ஈரம் இல்லாளர் - அன்பின்மையை யாளுத லுடையாரிடத்துச் செய்யும், தொடர்பு - நட்பு, நுனி நீக்கி - நுனியினின்று தின்னுதலை நீக்கி, தூரின் - வேரினின்று, தின்றல் அன்ன - தின்றற்போன்ற, தகைத்து - நாள் செல்லச்செல்ல வெறுக்குந் தன்மை யுடையது, எ-று.

போ-னை. ஒலிக்கின்ற கடலினது தண்மையாகிய துறையை யுடையானே! ஒருவன் கற்றுணர்ந்தவரிடத்துச் செய்யும் நட்பு கரும்பை நுனியினின்று தின்றற்போல நாள் செல்லச்செல்ல விருப் பந் தருவதாகும். கற்றறிந்த குணமில்லாத அன்பின்மையை யாளுத லுடையாரிடத்துச் செய்யும் நட்பு நுனியினின்று தின்னுதலை நீக்கி வேரினின்று தின்றற்போன்ற (நாள் செல்லச்செல்ல வெறுக்குந்) தன்மை யுடையதென்பது.

பண்பு அதிகாரத்தால் கற்றறிந்த குணத்துக்காயிற்று. நுனிநீக்கி என உவமையிற் கூறியதற் கியையப் பொருளிலுங் கற்றறிந்தார் கேண்மையைக் கொள்ளலை நீக்கி என உரைத்துக்கொள்க. நுனியி னின்று தின்னுதலை நீக்குதற்கும், கற்றறிந்தார் கேண்மையைக் கொள்ளுதலை நீக்குதற்கும் காரணம் மூன் இனிமை தராமையும்,

தூரினின்று தின்னுதற்கும் பண்பிலா ஈரமிலாளரோடு தொடர்பு கொள்ளுதற்கும் காரணம் முன் இனிமை தருகையுமாம்.

Lord of the shore of the boisterous and bellowy sea! the friendship with the learned will be like tasting the sugar-cane from the top (downwards), and friendship with the unlearned is like tasting it from the other end. (8)

139. கல்லாரே யாயினுங் கற்றுரைச் சேர்ந்தொழுகி
னல்லறிவு நாளுந் தலைப்படுவர்—தொல்சிறப்பி
னெண்ணிறீப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

இ-ள். தொல் - பழமையாகிய, சிறப்பின் - சிறப்பினையுடைய, ஒள்நிறம் - விளக்கமாகிய நிறமமைந்த, பாதிரிப்பூ - பாதிரி மலரை, சேர்தலால் - சேர்ந்திருந்தலே, புதுஓடு - புதுமையாகியோடு, தண்ணீர்க்கும் - (தன்னைச்சார்ந்த) குளிர் நீர்க்கும், தான் பயந்தால் ஆங்கு - (தான்பெற்ற மணத்தைத்) தந்தாற்போல, கல்லாரே ஆயினும் - (ஒருவர் பல நூல்களையும்) கற்றறிவில்லாரே ஆயினும், கற்றுரைச் சேர்ந்து - கற்றறிவுடையாரைச் சார்ந்து, ஒழுகின் - (அவர்க்கிணங்க) நடப்பாராயின், நாளும் - ஒவ்வொருநாளும், நல் அறிவு - கல்வியறிவு, தலை - தம்மிடத்தி, படுவர் - உண்டாகப்பெறுவர், எ-று.

பொ-ரை. பழமையாகிய சிறப்பினையுடைய விளக்கமாகிய நிறமமைந்த பாதிரிமலரைச் சேர்ந்திருந்தலே புதுமையாகிய ஓடு தன்னைச் சார்ந்த குளிர் நீர்க்கும் தான்பெற்ற மணத்தைத் தந்தாற்போல ஒருவர் பல நூல்களையுங் கற்றறிவில்லாரே ஆயினுங் கற்றறிவுடையாரைச் சார்ந்து அவர்க்கிணங்க நடப்பாராயின் ஒவ்வொருநாளுங் கல்வியறிவு தம்மிடத்து உண்டாகப்பெறுவர் என்பதாம்.

தொல்சிறப்பு தான் மணமுடைமையால் தொன்று தொட்டு யாவரும் மேற்கொள்ளுதல். 'புத்தோடு தண்ணீர்க்குத்தான் தந்தாற் போல்' என்றமையால், கல்லாரும் தம்மிடத் திண்டாகப்பெற்ற அறிவைத் தம்மைச் சார்ந்தவருக்குத் தாம் தருவரென்றுரைக்க. நல்லறிவு தலைப்படுதல் தாமொழுகு மொழுக்கத்தாலும், பிறர்க்குத் தாமுரைத்தலாலும் தோன்றுதலால் அவர்பிறர்க் கீதலைக்கூறாது விட்டனர். மண் பாத்திரத்தை ஒடென்றது நறுமணமின்மையாகிய இழிவுபற்றி. நல் வழக்கிலுங்காண்க. பெருஞ்செல்வத்தினர் புதுப்பானையில் நீரின் பேரரும்புகளைப் பெய்து, அவை தன்கு மலர்ந்தாயபின், மலர்

களைந்து அப்பாத்திரத்தில்நீர்வார்த்து, மணம்பெற்ற அந்நீரைஸ்தான பானங்களுக்கு உபயோகப்படுத்துவர். இதனைத்தெரிக்காட்டுவமை.

If the uneducated associate with the educated, they will improve their knowledge and find themselves better, just as the tasteless water, when *padri* flower is thrown into it, gains a fresh fragrance and tastes well. (9)

140. அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
உலகநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.

இ-ள். அலகுசால் - (மொழித் திறத்தின் மூட்டறுத்தலுக்குத் தக்க) அளவு அமைந்த, கற்பின் - கல்வியறிவால், அறிவுநூல் - ஞான நூல்களை, கல்லாது - கற்க விரும்பாமல், உலகநூல் - உலகத்துக்குரிய நூல்களை, ஓதுவது எல்லாம் - கற்பது முழுமையும், கலகல - கலகல வென, கூம் - இரைகின்ற, துணை அல்லால் - அளவுடையதல்லாமல், கொண்டு - (அந்நூலறிவைப்) பெற்று, தடுமாற்றம் - (பிறவியினது) நிலைமாறுதலினின்றும், போம் - நீங்குகின்ற, துணை - துணைசெய்வதை, அறிவார் இல் - அறிபவர் இலர், எ-று.

போ-னை. மொழித்திறத்தின் மூட்டறுத்தலுக்குத்தக்க அளவு அமைந்த கல்வியறிவால் ஞானநூல்களைக் கற்கவிரும்பாம லுலகத்துக் குரிய நூல்களைக் கற்பது முழுமையுங் கலகலவென இரைகின்ற அளவுடையதல்லாமல், அந்நூலறிவைப்பெற்றுப் பிறவியினது நிலைமாறுதலினின்றும் நீங்குகின்ற துணைசெய்வதை அறிபவரிலர் என்பது.

கற்பு காரணவாகுபெயர். அறிவுநூலொழிந்த நூல்கள் உலகிற் புகழ் பொருளீட்டுதற்கே பயன்படுமாதலால் அவற்றை ஓதுவதைக் 'கூஉந்துணை' என்றும், அறிவுநூல் கல்லார் பலராதல் நோக்கித் 'துணையறிவாரில்' என்றும் கூறினர். துணையாயுள்ளதென்றது துறவறத்தை. கலகல ஒலிக்குறிப் புணர்த்தும் உரிச்சொல்லாகிய இரட்டைக் கிளவி.

Of what use is it if a man goes on learning new things without any limit, if he does not read and understand the works on wisdom? If his knowledge is confined only to those relating to the topics of this world, it will seem to be of some significance here and will be of very little avail and can't help one to the other world. (10)

Chapter XV—High Birth

15-ஆம் அதிகாரம்: குடிப்பிறப்பு.

அஃதாவது உயர்குடியிற் பிறந்தாரது தன்மையைக் கூறுவது. கல்வியறிவுற்றிப் பிறர் தலைநிலத்துவைத்தல் முதலிய பூசை செய்யற் காணுமைக்குக் காரணமாகிய இது கல்வி யறிவுடையானுக்கு இன்றி யமையாததென வுணர்த்த இது அதன்பின் வைக்கப்பட்டது. இது பற்றியன்றே ஆத்திரையன் பேராசிரியன் நல்லாசிரியனிலக்கணங் கூறுகையில் "வலம்புரிமுத்திற் குலம்புரிபிறப்பும்" எனக் குடிப்பிற ப்பை முதற்கணெடுத் தோதியதூஉ மென்க.

141. உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணுங்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்ரு
ரிடுக்கண் டலைவந்தக் கண்ணு மரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று.

இ-ள். அரிமா - சிங்கமாகிய மிருகம், இடுக்கண் - (பசியால் வரும்) துன்பம், தலைவந்தக்கண்ணும் - தன்னிடத் துண்டாயினும், கொடிப்புல் - படர் புல்லை, கறிக்குமோ - மேயுமோ மேயாது, (அது போல) உடுக்கை - உடுக்கும் ஆடையால், உலறி - பொலிவழிந்து, உடம்பு அழிந்தக்கண்ணும் - (பசிமுதலியவற்றால்) உடம்பு மெலிந்தா லும், குடிப்பிறப்பு ஆளர் - உயர்குடிப் பிறப்பின் தன்மையை யாளுந் தலுடையார், தம் கொள்கையின் - தமக்குரிய ஒழுக்கத்தினின்றும், குன்ரூர் - குறைதலிலர், எ-று.

பொ-ரை. சிங்கமாகிய மிருகம் பசியால் வீருந் துன்பந் தன்னி டத் துண்டாயினும் படர்புல்லை மேயுமோ மேயாது; அதுபோல உடுக் கும் ஆடையால் பொலிவழிந்து பசிமுதலியவற்றால் உடம்பு மெலிந் தாலும் உயர்குடிப் பிறப்பின் தன்மையை யாளுந்தலுடையார் தமக் குரிய ஒழுக்கத்தினின்றுங் குறைதலிலர் என்பது.

கொடிப் புல்லைக் கறியாமை அரிமாவுக்கு இயல்பானாற் போலத் தங்கொள்கையிற் குன்றுமை குடிப்பிறப்பாளர்க்கு இயல்பாமென் பது. ஆகவே புல்கறித்தல் மற்ற பசு முதலியவற்றிற்கு இயல்பானாற் போலத் தங்கொள்கையிற் குன்றல் குடிப்பிறப்பில்லார்க்கு இயல்பா மென்பது பெறப்பட்டது. உடுக்கை தொழிலடியாகப் பிறந்த பெயர்ச் சொல்; உடு பகுதி, க்கை சாரியை, ஐ செயப்படு பொருண்மை விகுதி, தொழிலாகுபெயரெனின் புடைபெயர்ச்சி விகுதியாகிய கை விகுதியென்க. அரிமா இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலை.

If persons belonging to a good family become very poor owing to misfortune and appear in a very poor dress and emaciated frame, they will never swerve from the righteous conduct. If the lion is beset with hunger and hardship, would he satisfy his hunger by taking grass ? (1)

142. சான்றுண்மை சாய லொழுக்க மிவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது—வான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வ
மெய்தியக் கண்ணும் பிறர்க்கு.

இ-ள். வான்தோயும் - சுவர்க்கம் பொருந்துகின்ற, மைதவழ் - மேகங்கள் தவழ்கின்ற, வெற்ப - மலையை யுடையானே, சான்று ஆண்மை - (பலநூற் கேள்விகளாலும்) நிறைந்து (அவற்றை) ஆளுந் தன்மை, சாயல் - மேன்மை, ஒழுக்கம் - நல்லொழுக்கம், இவை மூன்றும் - ஆகிய இவை மூன்றும், வான்தோய் - சுவர்க்கந் தீண்டும்படி உயர்ந்த, குடிப்பிறந்தார்க்கு - குடியில் பிறந்தவர்களிடத்து, அல்லது - (உண்டாவன) அல்லாமல், பெரு செல்வம் - மிக்க செல்வப் பொருள், எய்தியக்கண்ணும் - வந்தாலும், பிறர்க்கு - உயர் குடியில் பிறவாதவரிடத்து, படா - உண்டாகா, எ-று.

பொ-ரை. சுவர்க்கம் பொருந்துகின்ற மேகங்கள் தவழ்கின்ற மலையையுடையானே ! பலநூற்கேள்விகளாலும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை, மேன்மை, நல்லொழுக்கம் ஆகிய இவை மூன்றும் சுவர்க்கந் தீண்டும்படி யுயர்ந்த குடியிற் பிறந்தவர்களிடத்து உண்டாவன அல்லாமல் மிக்க செல்வப்பொருள் வந்தாலும் உயர் குடியிற் பிறவாதவரிடத்து உண்டாகா என்பது.

சாயல்-மேன்மை; அது கருத்தும், சொல்லும், செயலும், தம்மு ள்ள மாறுமையும்; பழி பாவங்களுக்கு அடங்குதலுமாகிய தன்மை. வான் - இடவாகு பெயர். வான் தோய் குடி என்றது இலக்கணை. அல்லது என்னும் குறிப்பு வினையெச்சம் படா என்னும் வினை கொண்டது.

O Lord of the mountains towering high piercing the cloudy regions ! True excellence, dignity and good conduct: these three are the attributes of those who are born of a good family. Others, even though they may be in possession of enormous wealth, are not likely to possess these. (2)

143. இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்ற வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்ற வுணரற்பாற் றன்று.

இ-ள். குடிப்பிறந்தார் - உயர் குடியில் பிறந்தவர், இருக்கை - (தாம் பணியத்தக்காரைக் காணின்) இருந்த இடத்தினின்று, எழலும் - எழுந்து நிற்றலையும், எதிர் செலவும் - (அவர் தம்மை நோக்கி வரின்) எதிர்கொண்டுபோகுதலையும், விடுப்ப - (அவர் தமக்கு) விடை கொடுக்க, ஏனை ஒழிதலோடு - மற்றுப் பிரிதலுடனே, இன்ன உம் - இவைபோன்ற செயல்களையும், குன்றுத - ஒருகாலத்தும் கெடாத, ஒழுக்கம் ஆகக்கொண்டார் - ஒழுக்கமாகக்கொண்டார், கயவரோடு - இழிகுடிப் பிறந்தவரால், ஒன்று ஆக - அவ்வொழுக்கம் ஒரு பொருளாக, உணரல் பாற்று அன்று - உணரப்படுதலாகிய பான்மையுடையதன்று, எ-று.

பொ-ரை. உயர் குடியிற் பிறந்தவர் தாம் பணியத் தக்காரைக் காணின் இருந்தவிடத்தினின்று எழுந்து நிற்றலையும், அவர் தம்மை நோக்கிவரின் எதிர்கொண்டு போகுதலையும், அவர் தமக்கு விடை கொடுக்க மற்றுப் பிரிதலுடனே இவைபோன்ற செயல்களையும் ஒரு காலத்தும் கெடாத ஒழுக்கமாகக்கொண்டார். இழிகுடிப் பிறந்தவரால் அவ்வொழுக்கம் ஒரு பொருளாக உணரப்படுதலாகிய பான்மையுடையதன்று என்பது.

ஏனை வினைமாற்றுப் பொருளில் வந்த இடைச்சொல். தாம் அவ்வாறொழுகாவிடினும் அதனைத் கருதுதலுமில்லையாதலின் 'கயவரோ டொன்ற வுணரற்பாற் றன்று' என்றார். இருக்கை மேதாழிலாகுபெயர். இன்ன என்பது ஈற்றில் இறந்தது தழீஇய எச்சவும்மை தொகுத்தலாயிற்று. குன்றுத, ஆக என்பவற்றினீறும் அவ்விகாரம் பெற்றன. கயவரோடு என்னு மூன்றனுருபு வினைமுதற் பொருளது. இஃது இக்காலத்து அருகியன்றிவாராது. கயவரென்பது வழக்கு.

To rise from the seat (as a mark of respect), to go half way to meet them (their guests), and to take leave of them only when they ask (the host) to stop: these are the acts of men born of a noble family. This conduct cannot be the characteristic of the low. (3)

144. நல்லவை செய்யி னியல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகு—மெல்லா
மூணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னே
புணருரு மொருவர்க் கெனின்.

ஓ-ள். நல்லவை செய்யின் - நற்கருமங்களைச் செய்வாராயின், இயல்பு ஆகும் - (தமக்கு) இயல்பாகும், தீயவை செய்யின் - தீக்கருமங்களைச் செய்வாராயின், பல்லவர் - பலரும், தூற்றும் - யாவரு மூணரும்படி பேசுகின்ற, பழி ஆகும் - நிந்தை உண்டாவதாம், (இங்ஙனமாதலால்) ஒருவர்க்கு - ஒருவருக்கு, புணரும் எனின் - (உயர் குடிப்பிறப்பு) இசையுமானால், எல்லாம் - (தம்குடிப்பிறப்பிற்குரிய) எல்லாவற்றையும், உணரும் - அறிந்தொழுகும், குடிப்பிறப்பின் - உயர்குடிப்பிறப்பினால், ஊதியம் - உண்டாம்பயன், என்னே - யாதோ, (அறியேன்) எ-று.

பொ-ரை. நற்கருமங்களைச் செய்வாராயின் தமக்கு இயல்பாகும்; தீக்கருமங்களைச் செய்வாராயின் பலரும் யாவரு மூணரும்படிப் பேசுகின்ற நிந்தை யுண்டாவதாம். இங்ஙனமாதலால் ஒருவருக்கு உயர்குடிப் பிறப்பு இசையுமானால் தம் குடிப்பிறப்பிற்குரிய எல்லாவற்றையும் அறிந்தொழுகும் உயர் குடிப்பிறப்பினால் உண்டாம்பயன் யாதோ அறியேன் என்பது.

நல்லவை செய்தால் குடிப்பிறப்புக் குரியதாய் நின்று புகழ் தராமையாலும், தீயவை செய்தால் அது பழியைத் தருதலாலும் ஊதியம் என்னே என இரங்கியது குடிப்பிறப்பின் மேன்மையைக் குறிப்பித்தற்கென்க. எல்லாமென்றது உடம்பினது ஒழுக்கத்தைக் கூறினமையின், அஃதொழிந்தவாக்கினது மெய்ம்மையையும், மனத்தினது பழிபாவங்கட்கு நாணும் நாணத்தையும். உணருமென்னுங் காரியப் பொருட்டாகிய பெயரெச்சம் குடிப்பிறப்பென்னுங் காரணப்பெயர் கொண்டது. ஓ-இரக்கப்பொருளது. முன்செய்த அறத்தால் குடிப் பிறப்பு ஒருவர்க்குக் கூடுமென்பார் 'புணருமெனின்' என்றார்.

If a man does a good act, no blame will attach to him; if he does evil acts, many will blame him; if a man is born in a good family which can understand what is good and what is bad, what better gain is he capable of obtaining in this world? (4)

145. கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்ச—மெல்லா

மிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்
மாணக் குடிப்பிறந் தார்.

இ-ள் கல்லாமை - (ஒருவர் தம்மை ஏதேனும் ஒன்றை விஞ்ஞவிய காலத்தில்) தெரியாமை, அச்சம் - தம்மிடத்துண்டாமோ என அஞ்சுதலும், கயவர் - கீழ்மக்களுடைய, தொழில் - இழிதொழில், அச்சம் - தம்மிடத்துண்டாமோ என அஞ்சுதலும், சொல்லாமை யுள்ளும் - பொய் முதலியவற்றைத் தாம் சொல்லாதிருக்கையிலும், ஓர் சோர்வு - அவற்றுள் ஒன்றை மறப்பினுல் பேசுதல், அச்சம் - தம்மிடத்துண்டாமோ என அஞ்சுதலும், எல்லாம் - தமக்கு இன்றியமையாதனவாகிய எல்லாவற்றையும், இரப்பார்க்கு - இரப்பவருக்கு, ஒன்று - அவர் வேண்டியதாகிய ஒருபொருளை, ஈயாமை - கொடாமை, அச்சம் - தமக்கு இயையுமோ என அஞ்சுதலும் (உயர்குடியிற்பிறந்தவரிடத்துண்டாவனவாம், இம்மாணுத - இன்ன பெருமைக் குணங்களுண்டாகாத, குடிப்பிறந்தார் - இழிகுடியிற் பிறந்தவர், மரத்தார் - மரத்தினியல்புடையார்.

போ-ரை. ஒருவர் தம்மை ஏதேனுமொன்றை விஞ்ஞிய காலத்தில் தெரியாமை தம்மிடத் துண்டாமோவென அஞ்சுதலும், கீழ்மக்களுடைய இழிதொழில் தம்மிடத்துண்டாமோவென அஞ்சுதலும், பொய் முதலியவற்றைத் தாம் சொல்லாதிருக்கையிலும் அவற்றுள் ஒன்றை மறப்பினுல் பேசுதல் தம்மிடத்துண்டாமோவென அஞ்சுதலும், தமக்கு இன்றியமையாதனவாகிய எல்லாவற்றையு மிரப்பவருக்கு அவர் வேண்டியதாகிய ஒருபொருளைக் கொடாமை தமக்கியையுமோவென அஞ்சுதலும், உயர்குடியிற் பிறந்தவரிடத்துண்டாவனவாம். இன்ன பெருமைக் குணங்களுண்டாகாத் இழிகுடியிற் பிறந்தவர் மரத்தினியல்புடையார் என்பது.

தந்துரைச்சனவெல்லாம் இசையெச்சம். கல்லாமை அதன் காரியமாகிய தெரியாமைக் காணமையின் காரியவாகுபெயர். பொய்முதலியன: பொய், சூளினை, வன்சொல், பயனில என்பன. இவை வாக்கின் குற்றம். சோர்வு தன்னுலுண்டாம் பேசுதலின்மேல் நின்றது. இதனை அதித்த ஒன்றென்னும் வரையறைப் பண்பு அக்குற்ற நான்கனுள் ஏதேனும் ஒன்றென்பதை யுணர்த்தியது. கயவர் தொழிலென்ற மாத்திரையில் ஈயாமை அடங்குமாயினும் இஃது இம்மையிற் புகழையும், மறுமையில் இன்பத்தையுந்தராத இழிவுபற்றி வேறுக்கியும், வடிவால் ஒத்தாராதலால் மக்களுக்குள்ள கல்லாமை யச்சமுதலியவை இல்லாமைபற்றி அவரை 'மரத்தார்' என்றுங் கூறினர். மரம் பொருளாகு

பெயராய் இயல்பினை உணர்த்தியது. இவ்வணியும் அன்னமணிகளா லிழைத்தி தென்பான் அம்மணிகளாலிழைத்த தென்றல்போல இன்ன மாறு என்பது இம்மாறு என நின்றது.

Want of education causes fear; the acts of the fools cause fear; if something goes wrong in the course of utterance, that causes some fear; inability to give alms to those that beg, causes some fear. Those who are born in such bad circumstances, are like the dead wood. (5).

146. இனநன்மை யின்சொலொன் றீதன்மற் றேனை
மனநன்மை யென்றிவை யெல்லாங்—கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே யுள.

இ-ள். கன்மணி - கனமாகிய மணிகள், முத்தோடு - முத்துக ளோடு, இமைக்கும் - ஒளிவிடுகின்ற, முழங்கு - முழங்குகின்ற, உவரி - கடலினது, தண்சேர்ப்ப - குளிர்ச்சியாகிய துறையை யுடை யானே, இனநன்மை - (சேர்தற்குரிய) இனத்தினது நன்மையும், இன்சொல் - (வறியார் தம்மிடத்து வந்தபோது) இன்சொல் சொல் லுதலும், ஒன்று ஈதல் - (அவர் வேண்டியதாகிய) ஒரு பொருளைக் கொடுத்தலும், மற்று ஏனை மனநன்மை - அவையல்லாத மனத்தின் நன்மையும், என்ற இவையெல்லாம் - என்று சொல்லப்பட்ட இவை யெல்லாம், இற்பிறந்தார் கண்ணே - உயர்குடியிற் பிறந்தவரிடத்தே, உள - (இயல்பாக) உண்டாவனவாம், எ-று.

பொ-ரை. கனமாகிய மணிகள் முத்துகளோடு ஒளிவீசுகின்ற முழங்குகின்ற கடலினது குளிர்ச்சியாகிய துறையை யுடையானே! சேர்தற்குரிய இனத்தினது நன்மையும், வறியார் தம்மிடத்து வந்த போது இன்சொல் சொல்லுதலும், அவர் வேண்டியதாகிய ஒரு பொரு ளைக் கொடுத்தலும், அவையல்லாத மனத்தின் நன்மையும் என்று சொல்லப்பட்ட இவை யெல்லாம் உயர் குடியிற் பிறந்தவரிடத்தே இயல்பாக உண்டாவனவாம் என்பது.

இற்பிறந்தார் கண்ணே என்னும் பிரிநிலை ஏகாரத்தால் இழிகுடி யிற் பிறந்தாரிடத்து இவை யியல்பாக உண்டாவன அல்லவென்பதும் பிறப்பித்தபோதும் நெடுங்காலம் அவரிடத்து நில்லாவென்பதும் பெற் றும். இன்சொல் இல்லாதபோது இரப்போர் நீங்குவராதலின் அதனின் முன்னும், ஈதலே அதன் பின்னும் மனநல மில்லாதபோதும் அவை

யிரண்டும் பயன்படாமைபற்றி இறுதியில் அதனையும், இவற்றை வளர்ப்பித்தற் சிறப்புப்பற்றி முதலில் இனநலத்தையும் வைத்தனர். மற்று ஏனை ஒருபொருட் பன்மொழி. என்ற என்னும் பெயரெச்சத் தீறு தொகுத்தல்.

O Lord of the sea whose shore glitters with gold, gems, and pearls! Good company, kind words, good heart, all these can be found in those who are born in a good family. (6)

147. செய்கை யழிந்து சிதன்மண்டிற் றூயினும்
பெய்யா வொருசிறை பேரி—லுடைத்தாகு
மெவ்வ முழந்தக் கிடத்துங் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை.

இ-ள். பேர் இல் - பெரியவீடு, செய்கை - கட்டிய வுறுப்புகள், அழிந்து - கெட்டு, சிதல் - செல்லினல், மண்டிற்றூயினும்-மொய்க்கப்பட்டதாயினும், பெய்யாத - (மழையினது) தீரொழுக்கில்லாத, ஒருசிறை - ஒருபக்கத்தை, உடைத்து ஆகும் - உடையதாயிருக்கும், (அதுபோல) குடிப்பிறந்தார் - உயர் குடியிற் பிறந்தவர், எவ்வம் - (வறுமையினது) தன்பத்தினல், உழந்தக் கடைத்தும் - வருந்திய காலத்தும், செயல்பாலவை - செய்தற்பான்மையாகிய கடமைகளை, செய்வர் - செய்யாமலிரார், எ-று.

பொ-ரை. பெரியவீடு கட்டிய வுறுப்புகள் கெட்டுச் செல்லினல் மொய்க்கப்பட்டதாயினும் மழையினது தீரொழுக்கில்லாத ஒரு பக்கத்தை யுடையதாயிருக்கும்; அதுபோல உயர்குடியிற் பிறந்தவர் வறுமையினது தன்பத்தினல் வருந்தியகாலத்துஞ் செய்தற் பான்மையாகிய கடமைகளைச் செய்யாமலிரார் என்பது.

கடன்கள் ஈகைமுதலாயின. செய்கை தொழிலாகுபெயர். பெய்யாத என்றதினல் மழைதீ ரென்பது வருவிக்கப்பட்டது. உழந்தக் கடைத்து இறந்தகாலவினையெச்சம்; உழ பகுதி, த் சந்தி, த் சாரியை, உகரக்கேடும் ககரத்தோற்றமுஞ் சந்தி, கடை இறந்தகாலவினையெச்சவிகுதி, த் சந்தி, விகுதிபற்றிவந்தமையால் தி பகுதிப் பொருள் விகுதி. பொருளுக்கேற்பப் பேரில் உவமைகூறினர்; பெய்யாவொரு சிறை உடையதாவது அதுவாகலின்.

A big house even though it is in a very dilapidated condition infested with a swarm of white ants, there may be in it some room free from wind and rain and sun (which will be capable of

giving shelter to a few). So also persons born in a good family, even if they are reduced to a very poor state, will do what they could do. (7)

148. ஒருபுடை பாம்பு கொளினு மொருபுடை
யங்கண்மா ஞாலம் விளக்குறூஉந்—திங்கள்போல்
செல்லாமை செவ்வனோர் நிற்பினு மொப்புரவிற்
கொல்கார் குடிப் பிறந்தார்.

இ-ள். ஒருபுடை - ஒருபாதியை, பாம்பு கொளினும் - (இராகு வாகிய) பாம்புகொண்டாலும், ஒருபுடை - மற்றொருபாதியால், அம் கண் - அழகிய இடமகன்ற, மாஞாலம் - பெரியபூமியை, விளக்கு - பிரகாசிப்பித்தலை, உறும் - பொருந்துகின்ற, திங்கள்போல்-முழுமதி போல, குடிப்பிறந்தார் - உயர்குடியிற் பிறந்தவர், செல்லாமை - (செய்யவேண்டியகடன் வறுமையால்) நடவாமையானது, செவ் வன் - நன்றாக, நேர்நிற்பினும் - எதிரில் நின்றாலும், ஒப்புரவிற்கு - செய்யக்கடவனவற்றைச் செய்தற்கு, ஒல்கார்-சோர்வடையார், எ-று.

பொ-ரை. ஒரு பாதியை இராகுவாகிய பாம்பு கொண்டாலும் மற்றொரு பாதியால் அழகிய இடமகன்ற பெரிய பூமியைப் பிரகாசிப் பித்தலைப் பொருந்துகின்ற முழுமதிபோல, உயர்குடியிற் பிறந்தவர் செய்யவேண்டிய கடன் வறுமையால் நடவாமையானது நன்றாக எதி ரில் நின்றாலும் செய்யக் கடவனவற்றைச் செய்தற்குச் சோர்வடை யாரென்பது.

ஒருபுடைஞாலம் விளக்குறுந் திங்களை உவமித்தமையால் தங்க ளாலியன்றமட்டுஞ் செய்யாதிரா ரென்பதும், அஃது அவர்க்கியற்கை யென்பதும் பெற்றும். விளங்கு என்னும் பகுதி தல் விகுதிபுணர் ந்து கெட்டுமாத்திரத்தில் மெல்லொற்று வல்லொற்றுய்த்திரிந்து நின் றமையால் விளக்கு முதனிலை திரிந்த தொழிற்பெய ரென்க. செவ் வன் பண்புப்பெயர். செம் பகுதி, அன் பகுதிப்பொருள் விகுதி, மக் ரம் வகரமெய்யானதும், தனிக்குறின் முன் ஒற்றிரட்டியதும் சந்தி. இது நிற்பினென்னும் வினையை விசேடித்து நின்றமையால் உரிச் சொலென்க.

When one side of the moon is swallowed by the snake (i.e. obscured during the Eclipse) the other side sheds its lustre on earth. So also persons of a noble family even when they are beset with all kinds of difficulties will never stop doing what they should. (8)

149. செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்—புல்வாய்
பூருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோல்
பொருமுர ணேற்றுத லின்று.

இ-ள். செல்லாவிடத்தும் - (செய்யவேண்டிய கடமை வறுமையால்) நடவாக்காலத்தும், குடிப்பிறந்தார் - உயர்குடியிற் பிறந்தவரால், செய்வன - செய்யப்படும் ஒப்புரவுகள், செல்லிடத்தும் - (பொருள் முதலியவற்றால்) நடக்கக் கூடியகாலத்தும், சிறியவர் - இழிகுடியிற் பிறந்தவர், செய்யார் - (பிறர் கற்பிக்கத் தெரிந்தகாலத்திலும்) செய்யும் வலியிலராவார், புல்வாய் - இரலையென்னும் மான், பூருமம் - கல்லணையை, பொறுப்பினும் - தாங்கினும், பாய் - தாவியோடவல்ல, பரிமாபோல் - குதிரைபோல, பொரு - (போர்முகத்தில்) செய்கின்ற, முரண் ஏற்றுதல் - போர்செய்ய வல்லதாகுதல், இன்று - இலது, எ - று.

பொ-ரை. செய்யவேண்டிய கடமை வறுமையால் நடவாக்காலத்தும், உயர்குடியிற் பிறந்தவரால் செய்யப்படும் ஒப்புரவுகள் பெருள் முதலியவற்றால் நடக்கக்கூடிய காலத்தும், இழிகுடியிற் பிறந்தவர் பிறர் கற்பிக்கத் தெரிந்த காலத்தும் செய்யும் வலியிலராவார். இரலையென்னும் மான் கல்லணையைத் தாங்கினும் தாவியோடவல்ல குதிரைபோலப் போர்முகத்தில் செய்கின்ற போர் செய்ய வல்லதாதல் இலதென்பது.

புல்வாய் பருமம் பொறுப்பினு மென்றமையால் பிறர் கற்பிக்கத் தெரிந்தகாலத்து மென்பது வருவிக்கப்பட்டது. மற்றவை காரணமாகவும், வினைமுதலர்கவும் எஞ்சி நின்றவை. பரிமா இருபெயரொட்டுப் பண்புத்தொகை. பின்மொழியிற் பொருள் சிறந்து நின்ற பொருமுர ணென்பதில் பொருதல் செய்தல் மாத்திரையாய் நின்றது.

Even in poverty-stricken condition, men of noble family will do what they should do. Persons of low origin even if they be in a position to do good deeds, will never do even what is absolutely necessary. If saddle and bridle be put upon a deer, will it be of service in the battle-field like the horse? (9)

150. எற்றென்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தா
ரற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத்—தூற்றுவ

ரற்றக் கடைத்து மதல்யா றகழ்ந்தக்கா
றெற்றெனத் தெண்ணீர் படும்.

இ-ள். *சூடிப்பிறந்தார்* - உயர் குடியிற் பிறந்தவர், *எஃறு ஒன்றும்* - எத்தன்மையதாகிய ஒரு பொருளும், *இல்லாவிடத்தும்* - (தம்மிடத்து) இல்லாத காலத்தும், *அற்று* - (ஆதரிப்பவர்) இல்லாராகி, *தற்சேர்ந்தார்க்கு* - தம்மை யடைந்தவர்க்கு, *அசைவிடத்து* - தளர்வு வந்தவிடத்து, *ஊற்று ஆயர்* - ஊன்றுகோல் போல உதவுவார், *அகல் யாறு* - விசாலித்த யாறு, *அற்றக் கடைத்தும்* - நீர்வற்றிய காலத்தும், *அகழ்ந்தக்கால்* - (பிறர் அடைந்து) தோண்டினால், *தெற்றென* - விரைவாக, *தெள்நீர்* - தெளிவாகிய நீர், *படும்* - ஊறும், எ-று.

பொ-ரை. உயர்குடியிற் பிறந்தவர் எத்தன்மையதாகிய ஒரு பொருளும் தம்மிடத்து இல்லாத காலத்தும், ஆதரிப்பவர் இல்லாராகித் தம்மை யடைந்தவர்க்குத் தளர்வு வந்தவிடத்து ஊன்று கோல் போல உதவுவார். விசாலித்தயாறு நீர்வற்றிய காலத்தும் பிறர் அடைந்து தோண்டினால் விரைவாகத் தெளிவாகிய நீர் ஊறும் என்பது.

எற்றென்னுங் குறிப்பு வினைப்பெயர் ஒன்றென்னு மாகுபெயர்ப் பொருளினிழிவை யுணர்த்தற்கண் வந்தது. என் பகுதி, று ஒன்றன் படர்க்கை விகுதி, னகரம் றகரமானது சந்தி. தற்சேர்ந்தா ரென்றதனால் அற்றென்பதற்கு ஆதரிப்பவ ரில்லாராகி என்பது உரைக்கப்பட்டது. தன் பன்மையி னொருமைவந்த வழுவமைதி. ஊன்றுகோல் வழுக்கி வீழ்வார்க்கு வீழாதபடி தானின்று தடுத்துதவுதல் போலத் தற்சேர்ந்தார்க்குத் தளர்வு வந்தவிடத்து அத்தளர்வைத் தாமேற்றுத் தடுத்துதவுதல்.

Persons born of a good family even when they are reduced to a state of poverty, will help the needy that come to them, just as the river, though dry during the hot weather, is able quench the thirst of those that come to it (by a little digging in the bed of the river). (10)

Chapter XVI—Great men

16-ஆம். அதிகாரம். மேன்மக்கள்.

அஃதாவது மேலோரது தன்மையைக் கூறுவது. மேலோராவர் குடிப்பிறந்தவரே ஆதலின், முன் அதிகாரத்து அவரது இயல்புகூறிக் குறைவறுமல் இவ்வதிகாரத்தாலுங் கூறுகின்றமையின், இது அதின் பின் வைக்கப்பட்டது.

151. அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் றிங்கண்
ழுறுவாற்றுஞ் சான்றோ ரஃதாற்றூர் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.

இ - ள். அம் கண் - அழகிய இடமகன்ற, விசும்பின் - ஆகாயத்தில் நின்று, அகல் நிலா - பரவுகின்ற சந்திரிகையை, பாரிக்கும் - பரப்புகின்ற, திங்களும் - சந்திரனும், சான்றோரும் - (நற்குணங்களால்) நிறைந்தவரும், ஒப்பர் - (தம்மில்) ஒப்பாவர், திங்கள் - சந்திரன், மறு - (தனக்குண்டாகிய) களங்கத்தை, ஆற்றும்-பொறுத்திருக்கும், சான்றோர் - அந்நிறைந்தோர், ஒருமாசு - சிறிதுகளங்கம், உறின் - (ஊழினுல் தம்மைப்) பொருந்தினுல், அஃது ஆற்றூர் - அதைப் பொறுத்திராமல், தெருமந்து (உள்ளம்) கலங்கி, தேய்வர் - (உயிர்) குன்றுவார், எ-று.

பொ-ரை. அழகிய இடமகன்ற ஆகாயத்தில் நின்று பரவுகின்ற சந்திரிகையைப்பரப்புகின்ற சந்திரனும், நற்குணங்களால் நிறைந்தவரும் தம்மில் ஒப்பாவர். சந்திரன் தனக்குண்டாகிய களங்கத்தைப் பொறுத்திருக்கும்; அந்நிறைந்தோர் சிறிது களங்கம் ஊழினுல் தம்மைப் பொருந்தினுல் அதைப் பொறுத்திராமல் உள்ளங் கலங்கி யுயிர் குன்றுவா ரென்பது.

உலகுக்குத் தண்மையாகிய நிலாவை விரித்துப் புறவிருளை ஒட்டியாவர்க்கும் தண்மையாய் விளங்கலாலும், சான்றோர் தண்ணளியைச் செய்து அகவிருளை ஒட்டி யாவர்க்கும் மென்மையராய் விளங்குதலாலும் திங்களுஞ் சான்றோரு மொப்பரென்றது சிறப்பினுல் வந்த இணைவழுவமைதி. ஒப்புடைய இவ்விருபொருளையும் ஒரு பொருளாக வைத்துப் பின் வேற்றுமைப்படக் கூறினமையின் இது வேற்றுமைச் சமமென்னும் அணி. திங்களை அங்கண் விசும்பினென்று விசேடித்தது மேன்மக்கள் உயர்குடியிற் பிறந்தவரென்றற்கு. தெருமந்து என்னும் இறந்தகால வினையெச்சத்துக்குப் பகுதி தெருமர். செய்யுளாதலால் அஃதெனச் சுட்டுமுன்வந்தது.

The great may be compared to the moon that brightens the whole earth by its lustre from the extensive heaven above. But there is this difference, *viz.*, the moon does not care for the blot it has got, whereas the great if any blemish attaches itself to them, will gradually pine away (and will never recover because of the loss of honour they have sustained.) (1)

152. இசையு மெனினு மிசையா தெனினும்
வசைதீர வெண்ணுவர் சான்றோர்—விசையி
னரிமா வுளங்கிழித்த வம்பினிற் றீதோ
வரிஞாப் பிழைப்பெய்த கோல்.

(இ-ள்.) சான்றோர் - மேன்மக்கள், இசையும் எனினும் - (ஒரு காரியம் தம்மால்) எளிதில் முடியுமாயினும், இசையாது எனினும் - எளிதில் முடியாதாயினும், வசைதீர - பழி இல்லாததாக, எண்ணுவர் - எண்ணிச்செய்வர், விசையின் - (எய்த) வேகத்தினால், அரிமா - அரியாகிய விலங்கினது, உளம் - மார்பை, கிழித்த - பிளந்த, அம்பினில் - அம்பினும், அரிமா - சிங்கமாகிய விலங்கு, பிழைப்ப - தப்பிப்போக, எய்தகோல் - எய்யப்பட்ட அம்பு, தீதோ - (பழிப்பாகிய) குற்றமுளதோ இலதோ, எ-று.

பொ-ரை. மேன்மக்கள் ஒரு காரியம் தம்மால் எளிதில் முடியுமாயினும் எளிதில் முடியாதாயினும் பழி யில்லாததாக வெண்ணிச்செய்வர். எய்த வேகத்தினால் அரியாகிய விலங்கினது மார்பைப் பிளந்த அம்பினும், சிங்கமாகிய விலங்கு தப்பிப்போக எய்யப்பட்ட அம்பு பழிப்பாகிய குற்றமுளதோ இலதென்பது.

உளம் தானியாகுபெயர். பிழைப்ப என்னும் செயவெனெச்சம் ஈறு தொகுத்தலாயிற்று. கிழிப்பதற்கு விசையுங் கருவியாதலால் இன் உருபு கருவிப்பொருளது. ஒ-எதிர்மறை. மேன்மக்கள் பழிப்புண்டாகுத காரியத்தையே செய்வாரென்பது கருத்து. இது வேற்றுப்பொருள் வைப்பு.

The great, whether they gain or lose, will never change their decision. Is not the arrow that has been aimed at a lion and failed to hit it, better than the one which has rent in twain the heart of a jackal? (2)

153. நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினுஞ் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறு—நுரங்குவரு
வள்ளமெனு நாரிஞற் கட்டியுள வரையால்
செய்வர் செயற்பா லவை.

இ-ள். சான்றோர் - மேன்மக்கள், நல்கூர்ந்து - வறுமை யடைந்ததினால், நரம்பு எழுந்தார் ஆயினும் - நரம்புகள் தோன்றும்படி இளைத்தாராயினும், குரம்பு எழுந்து - (தமதொழுக்கத்தின்) வரம்புக்குப்

புறம்பாகி, குற்றம் கொண்டு - குற்றமான செயலே மேற்கொண்டு, ஒரூர் - நடவாமல்; கவல் - கவலையை, தாவு - பற்றுகின்ற, உள்ளம் - மனத்தை, உரம் என்னும் - நல்லறிவென்று சொல்லப்படும், நரிலுஞ் கயிற்றினால், கட்டி - (வறுமைத் துன்பத்தால் தளராமல்) கட்டி, உளவரையால் - உள்ள பொருளளவினால், செயற்பாலவை - செய்யும் பான்மையவாகிய கடமைகளை, செய்வர் - செய்வார், எ-று.

பொ - ரை. மேன்மக்கள் வறுமை யுண்டாந்தனால் நரம்புகள் தோன்றும்படி இளைத்தாராகினும், தமதொழுக்கத்தின் வரம்புக்குப் புறம்பாகிக்குற்றமான செயலே மேற்கொண்டு நடவாமல், கவலையைப் பற்றுகின்ற மனத்தை நல்லறிவென்று சொல்லப்படுங் கயிற்றினால் வறுமைத் துன்பத்தால் தளராமல் கட்டி, உள்ள பொருளளவினால் செய்யும் பான்மையவாகிய கடமைகளைச் செய்வார் என்பது.

நல்கூர்தலி நரம்பெழுதலுக்குக் காரணமாதலால் நரம்பெழுந்து நல்கூர்ந்தா ரென்பதைப் பின் முன்னாக நிறுத்தி விகுதி பிரித்துக் கூட்டி உரைத்தார். கவல் முதனிலைத் தொழிற்பெயர். கட்டிதலாவது வலுமைக் கவலையால் தளராமற் செய்தல். அவ்வாறு செய்யவல்லது நல்லறிவே ஆதலால் அதனை காரென உருவகப்படுத்தினர்.

The great, though they by force of circumstances have been reduced to poverty and appear in an emaciated form, will never cross the line and go about begging, but they, bound and directed by wisdom and perseverance, will do what they should do. (3)

154. செல்வுழிக் கண்ணெழுநாட் காணினுஞ் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் றோன்றப்—புரிந்தியாப்பர்
நல்வரை நாட சிலநா ளடிப்படின்
கல்வரையு மூண்டா நெறி.

இ-ள். நல்வரை நாட - வளமிகுந்த மலையைச் சார்ந்த நாடானே, சான்றவர் - மேன்மக்கள், செல்வுழிக்கண் - (தாம்) செல்லும் வழியில், ஒருநாள் - ஒருபோது, காணினும் - (ஒருவரைக்) கண்டாராயினும், தொல்வழி - தம்மூதாதையர் தொடங்கிவரும் முறையையுடைய, கேண்மையில் - நட்பினரில், தோன்ற - (அவரும் ஒருவராகத்) தோன்றும்படி, புரிந்தியாப்பர் - விரும்பி (உள்ளத்தில்) பொருந்த நட்புக் கொள்வர், கல்வரையும் - கல்மலையினிடத்தும், சிலநாள் - சிலதினம்,

அடிபடின் - (மக்களுடைய) காலடிபட்டால், நெறி உண்டாம் - வழி யுண்டாகும், எ - று.

பொ-ரை. வளமிகுந்த மலையைச் சார்ந்த நாடனே! மேன் மக்கள் (தாம்) செல்லும் வழியில் ஒருபோது ஒருவரைக் கண்டாராயி னும் தம்மோதாதையர் தொடங்கிவரும் முறையையுடைய நட்பினரில் அவரும் ஒருவராகத் தோன்றும்படி விரும்பி யுள்ளத்தில் பொருந்த கட்புக் கொள்வர். நல்மலையினிடத்தும் சிலதினம் மக்களுடைய காலடிபட்டால் வழியுண்டாகுமென்பது.

மேன்மக்கள் யாவரிடத்தும் மிக்க அன்புடையா ரென்பதே கருத்து. கல்லென வேண்டாது கூறியது மலையினது திண்மையை யுணர்த்தற்கு. நெறி என்றது அடிப்படுதலாலாகிய தேய்வை. செல் வழி என்பதில் வகரம் உடம்படுமெய் யல்லாதமெய்; உழி - இடம், வழிக்காயிற்று. செல்லுதற்குரிய இடம் அதுவாதலின், இது வேற்றுப் பொருள் வைப்பணி.

O Lord of the land of high hills! If the great happen to meet one on the way by chance, they will move with him on terms of great intimacy. A way will be cut clear even on rocky ground if there be constant wearing of foot-steps for some days. (4)

155. புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா வொருவ னுரைப்பவுங்—கண்ணேடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாரு ணைல் பரிந்து.

இ-ள். எழுத்தின் புல்லா - இலக்கணத்தினைப் பொருந்துதலில் லாத, பொருள் இல் - உண்மைப் பொருளுணர்ச்சி யில்லாத, வறு கோட்டி - வறியர் கூடிய சபையில், கல்லாத ஒருவன் - கல்வியறிவில் லாத ஒருவன், உரைப்பவும் - (நாணமின்றி ஒன்றினை) பொருளினை விரித்துச் சொல்லவும், நல்லார் - மேன்மக்கள், (தாம் அதற்குச் செவி கொடாராயின்) அவன் - அக்கல்வியறிவில்லான், பல்லாருள் - பல ருள்ளும், நாணல் - நாணுதலுக்கு, பரிந்து - இரங்கி, கண்ணேடி - தாட்சிணிய மூடையாராகி, வருந்தியும் - வருத்தமுற்றும், கேட்பர் - கேட்டுக்கொண்டிருப்பர், எ-று.

பொ-ரை. இலக்கணத்தினைப் பொருந்துதலில்லாத உண்மைப் பொருளுணர்ச்சியில்லாத வறியவர் கூடிய சபையில் கல்வியறிவில்லாத

ஒருவன் நாண்மின்றி யொன்றின் பொருளினை விரித்துச் சொல்லவும் மேன்மக்கள் தாம் அதற்குச் செவிகொடாராயின், அக்கல்வியறிவில்லான் பலருள்ளும் நாணுதலுக்கு இரங்கி தாட்சணியமுடையாராகி வருத்தமுற்றுங் கேட்டுக்கொண்டிருப்பர் என்பது.

அறிவினை என்றுற்போல எழுத்தின் என்பதில் இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது. கோட்டியில் கூடினவரது வறுமையை அதன்மே லேற்றி வறுங்கோட்டி என்றனர். பொருளில் வறுமை பொருளின்மையாகிய வறுமை எனவிரிவதினால் பண்புத்தொகைநிலை என்க. இதனால் வறுமை இன்னதென விளங்கிற்று. எழுத்தினைப் புல்லாமையையே பொருளின்மை யென்றமையால் புல்லாப் பொருளின்மையென்பதும் பண்புத்தொகைநிலை; விரிந்தால் புல்லாமையாகிய பொருளின்மையென விரியும். இப்புல்லா என்ப தொன்றும் ஈறுகெட்ட பெயரெச்சமாய்க் காரணப் பொருட்டாய் நின்றதெனினுமாம் பொருந்தும்.

If a fool with no knowledge worth mentioning enters in an assembly and begin to discourse on topics of which he knows nothing, the great men seated there will be listening to it with patience, lest their disapproval expressed then and there will subject him to the hisses and contempt of many. (5)

156. கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
யிடித்துநீர் கொள்ளினு மின்சுவைத்தே—யாகும்
வடுப்பட் டவைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூரார்தம் வாயிற் சிதைந்து.

இ-ள், கரும்பினை - கரும்பை, கடித்து - துண்டஞ்செய்து, கண் தகர - கணுக்கள் நொறுங்கும்படி, நூறி இடித்து - மிகுதியும் பொடியாம்படி செய்து, நீர்கொள்ளினும் - சாற்றைக் கொண்டாலும், இன்சுவைத்தே ஆகும் - (அது) இனிமையாகிய உருசியையுடையதே யாகும், (அதுபோல) குடிப்பிறந்தார் - உயர்குடியிற் பிறந்தவர், வடுப்பட - (சமதுபுகழ்க்குக்) குற்றமுண்டாம்படி, வைது - (தீயோர்) இகழாநின்று, இறந்தக்கண்ணும் - வரம்பு கடந்து நடக்கினும், சிதைந்து - மனநிலை கெட்டு, தம்வாயின் - தம்வாயினால், கூரார் - தீயசொற்களைச் சொல்லார், எ-று.

பொ-ரை. கரும்பைத் துண்டஞ்செய்து கணுக்கள் நொறுங்கும்படி மிகுதியும் பொடியாம்படிச் செய்து சாற்றைக் கொண்டாலும் அது

இனிமையாகிய உருசியையுடையதேயாகும். அதுபோல உயர்குடியிற் பிறந்தவர் தமது புகழ்க்குக் குற்றமுண்டாம்படி தீயோர் இகழாநின்று வரம்புகடந்து நடக்கினும் மனநிலைகெட்டுத் தம் வாயினல் தீயசொற் களைச் சொல்லார் என்பது.

நூறி யிடித்து ஒருபொருட் பன்மொழி. இன்பம் சிறப்புப்பெய ரும், சுவை பொதுப்பெயருமாதலால் இன்சுவை இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலை. சுவைத்து குறிப்பு வினைமுற்று. வாயினென வேண்டாது கூறினர்; நற்சொலன்றித் தீயசொல் பயிலாமையாகிய சிறப்புக்கருதி. உவமைக்கு இன்சுவைத்தே என்ற தேற்றேகாரத்தால் குடிப்பிறந்தார் மனஞ்சிதையாமையும், தீயசொற்களைக் கூறுமையுமே அவர்க்கியல்பென்பது பெற்றும்.

If the sugarcane is bitten or twisted, broken or pressed out, it gives out only sweet juice; persons of good birth even if they are abused, will never use abusive language in turn. (6)

157. கள்ளார்கள் ஞண்ணூர் கடிவ கடிந்தொரீஇ
யெள்ளிப் பிறரை விகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூறூர் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்.

இ-ள். வடு அறு - குற்றமற்ற, காட்சியார் - அறிவினையுடையார், கள்ளார் - (பிறர்பொருளைக்) களவுசெய்யார், கள் உண்ணூர் - மது உண்ணார், கடிவ - (நூல்கள்) விலக்கும் தீயசெயல்களே, கடிந்து - (தாமும்) விலக்கி, ஒரீஇ - அவற்றினின்றும் விலகி, பிறரை - மற்ற வரை, எள்ளி - அவமதித்து, இகழ்ந்து உரையார் - இகழ்ந்துபேசார், தள்ளியும் - சேர்ந்தும், வாயின் - தம்வாயினல், பொய்கூறூர் - பொய் சொல்லார், சாயின் - (இவ்வொழுக்கத்தால் தம்செல்வம்) அழிவதா யின், பரிவது இலர் - (அதைக்குறித்துத்) துன்பப்படுதலிலர், எ-று.

பொ-ரை. குற்றமற்ற அறிவினை யுடையார் பிறர்பொருளைக் களவுசெய்யார், மது வுண்ணூர், நூல்கள் விலக்குந் தீயசெயல்களைத் தாமும் விலக்கி அவற்றினின்றும் விலகி மற்றவரை அவமதித்து இகழ்ந்து பேசார். சேர்ந்தும் தம்வாயினல் பொய்சொல்லார். இவ் வொழுக்கத்தால் தம் செல்வமழிவதாயின் அதைக்குறித்துத் துன் பப்படுதலிலரென்பது.

கள்ளார் எதிர்மறை வினைமுற்று, உடன்பாட்டில் கட்டார், கள்ளின்னூர், கள்வார் எனவீரும். இவர்க்குள்ளதாவது பிறர்க்குண்டாஞ் சோர்வுபோலாது உயிர்க்குணமாகிய சோர்வாதலால் தள்ளிதிமென்ற உம்மை இழிவுசிறப்பு. கள்ளமுதலிய நான்கையுமே அன்றி இவைபோன்ற மற்ற தீச்செயல்களையுங் கடிந்தொழுகுவினை மேன்மேற் கள்ளாமை கள்ளுண்ணாமைக்கும், இகழ்ந்துரையாமை பொய் கூறாமைக்கும் இடையே கடிவகடிந் தொரீஇ என்பதை ஒவைத்தனர்.

Persons of deep insight and faultless understanding, will never commit theft, will never take to drinking, will avoid those that ought to be avoided, never treat any with contempt, never utter falsehood even in jest. If they are reduced to poverty, they never grieve at it. (7)

158. பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனுய்த்—தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வவற்கு.

இ-ள். பிறர் மறையின்கண் - (தன்னிடத்துப்) பிறர் சொல்லிய இரகசியத்தை வெளிப்படுப்பதில், செவிடு ஆய் - கேளாதவன்போலாகியும், திறன் - (வருத்தம்) வகை யுடையனவற்றை, அறிந்து - உணர்ந்து, ஏதிலார் - அயலாருடைய, இல்கண் - மனைவியரை நோக்குவதில், குருடனுய் - கண்ணில்லாதவன்போலாகியும், தீய - தீமையைத் தரும், புறங்கூற்றின் - பிறர்பழியைப் புறத்தில் சொல்வதில், மூகை ஆய் - வாயில்லாதவன்போலாயும், நிற்பானேல் - (ஒருவன்) நிற்பானுனல், அவற்கு - அவனுக்கு, யாது அறமும் - வேறே எத்தன்மையதாகிய அறத்தையும், கூறவேண்டா - (அறிவுடையோர்) சொல்ல வேண்டுவதில்லை, எ-று.

பொ-ரை. தன்னிடத்துப் பிறர் சொல்லிய இரகசியத்தை வெளிப்படுப்பதில் கேளாதவன் போலாகியும், வருத்தம் வகையுடையன வற்றை யுணர்ந்து அயலாருடைய மனைவியரை நோக்குவதில் கண்ணில்லாதவன்போலாயும், தீமையைத்தரும் பிறர் பழியைப் புறத்தில் சொல்வதில் வாயில்லாதவன்போலாகியும் ஒருவன் நிற்பானுனல், அவனுக்கு வேறே யெத்தன்மையதாகிய அறத்தையும் அறிவுடையோர் சொல்ல வேண்டுவதில்லை என்பது.

மறை வெளிப்பட்டால் குற்றம்விளைதலின் அஞ்சிப் பிறர்க்கு மறைத்து ஒருவன் சொல்லிய சொல்; இது தொழிலடியாகப் பிறந்த

பெயர், மறு பகுதி, ஐ செயப்படு பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. மறுக்கப்பட்டதென்பது பொருள். செவிநுகர் மூகை என்னும் தினையின் விகாரப் பண்புகள் முதற்பொருளே யுணர்த்தினமையால் அவை பண்பாகுபெயர். செவிடன் ஒருவன் சொல்லியதைக் கேட்டு உள்ளத்தில் வைத்தலும் பிறர்க்கு வெளிப்படுத்தலும் இல்லாமை போலப் பிறருடைய இரகசியத்தைக் கேட்டுள்ளத்தில் வைத்தலும், பிறர்க்கு வெளிப்படுத்தலும் இல்லாதல் வேண்டுமாதலால் 'செவிடாய்' என்றும், தன்மனைவியைப் பிறன் விரும்பின் தனக்குண்டாம் வருத்தம்போலத் தான் அது செய்யின் அவனுக்குண்டாமென வுணரின் செய்யாதலால் 'திறனறிந்து' என்றும் கூறினர். வினையெச்சம் காரணப்பொருட்டாய் நின்றது. பிறர் மறைகளை வெளிப்படுத்தல் இரகசத்துக் கேதுவாகிய பாவமாதலால் பின்னவற்றோடு எண்ணப்பட்டது. "நட்டான் மறைகாவாவிட்டவன் செல்வுழிச்செல்க" என்பதனை முணர்க.

If one be deaf to others' secrets, be blind to his neighbour's wife, dumb in the matter of backbiting, to such an one, no way of virtue need be taught. (8)

159. பண்ணுளுஞ் சென்றக்கால் பண்பிலார் தம்முழை
யென்னானும் வேண்டுப வென்றிகழ்ப—வென்னானும்
வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர்
காண்டொறுஞ் செய்வர் சிறப்பு.

இ-ள். பண்பு இல்லார் - உயர்ந்த குணமில்லாத கீழோர், தம் உழை - தம்மிடத்து, பல்நாளும் - பலநாளும், சென்றக்கால் - இவர் செல்வாராயின், என் ஆனும் - எப்பொருளே ஆயினும், வேண்டுப என்று - வேண்டிக் கேட்பாரென்று, இகழ்ப - (ஒருவரைக் கண்ட முதன்முறையே) அவமதிப்பார், என் ஆனும் - எப்பொருளேயாயினும், வேண்டினும் - வேண்டிக் கேட்பாராயினும், நன்று என்று - அது நன்மையைத் தருவதென்று கருதி, விழுமியோர் - சிறந்தகுணமுடைய மேன்மக்கள், காண்தோறும் - (அவர்தம்மிடத்துவரக்) காணுந்தோறும், சிறப்புச் செய்வர் - உபசரித்தல் செய்வார், எ-று.

பொ-ரை. உயர்ந்த குணமில்லாத கீழோர் தம்மிடத்துப் பலநாளும் இவர் செல்வாராயின் எப்பொருளேயாயினும் வேண்டிக்கேட்பாரென்று ஒருவரைக்கண்ட முதன்முறையே அவமதிப்பார். எப்பொருளேயாயினும் வேண்டிக் கேட்பாராயினும் அது நன்மையைத் தருவ

தென்று கருதிச் சிறந்த குணமுடைய மேன்மக்கள் அவர் தம் பிடத்து வரக் காணுந்தோறும் உபசரித்தல் செய்யாரென்பது.

வேண்டிய தொன்றை ஈந்தால் மறுமையி லுதவுதற் சிறப்புப் பற்றி அதனை நன்றென்பாராயினர். இது குறிப்பு வினைமுற்று. சிறப்புச் செய்தல் கண்டமாத்திரையில் முகம் மலர்ந்து இன்சொல் கூறுதல் முதலியன செய்தல். இடைச்சொல் பெயரோடொக்குமாதலின் காணென்னும் வினைத்தொகையாகிய காலங்கரந்த பெயரெச்சம் ஏழாவதனிடப்பன்மைப் பொருள்தரும் தொறு என்னும் இடைச் சொல் கொண்டது. அதை கூடித்த உம்மை முற்று.

If one goes several times and begs of the unworthy, they will say, "this man comes and troubles us very often", and begin to treat him with contempt. If the same goes to the great men, they will welcome him gladly and try to help him as much and as often as possible. (9)

160. உடையீரிவரென் றொருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வ—ருடைய
பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட விடத்து.

இ-ள். நல்ல குலத்தலை - உயர் குடியிற் பிறந்தாரிடத்து, பட்ட விடத்து - சேர்ந்த காலத்து, உடைய - (தோண்டி எடுக்குந்தோறும் பொருளை) உடையதாயிருக்கிற, பிலத்தலை - சுரங்கத்தில், பட்டது - சேர்ந்தது, போலாதே - போலாகாதோ ஆகும், (இஃது அறியாதார்) இவர் உடையார் என்று - இவர் மிக்க பொருளுடையாரென்று, ஒருதலையாக - துணிவாக, பற்றி - ஆதரவாகக்கருதி, கடையாயார் பின்-கீழாயினர் பின்னே, சென்று - போய், வாழ்வார் - உயிர்வாழ்வர், எ - று.

பொ-ரை. உயர்குடியிற் பிறந்தாரிடத்துச் சேர்ந்த காலத்துத் தோண்டி யெடுக்குந்தோறும் பொருளையுடையதா யிருக்கின்ற சுரங்கத்தில் சேர்ந்தது போலாகாதோ ஆகும். இஃதறியாதாரிவர் மிக்க பொருளுடையாரென்று துணிவாக ஆதரவாகக் கருதிக் கீழாயினர் பின்னேபோ யுயிர்வாழ்வர் என்பது.

பிலத்தலை, குலத்தலை என்பன சந்த இன்பப் பொருட்டு மெலித்தலாயின. செல்வரை உடையாரென்றது உலகவழக்குப்பற்றி. எ -

எதிர்மறை.உடையபிலம் தன்னையடைந்தவர்க்கு வேண்டியவளவுதன் னிலுள்ள பொருளைத் தருதல்போல உயர்குடியிற் பிறந்தவர் தம்மை யடைந்தவர்க்குத் தம்மிடத்துள்ளபொருளைக்கரவாதளிப்ப ரென்பது.

Some go after the low thinking they are very wealthy. Is it not something like finding a treasure-trove when we get hold of really great men? (10)

Chapter XVII—Against reproaching the great

17-ஆம். அதிகாரம், பெரியாரைப் பிழையாமை.

அஃதாவது குடி, கல்வியறிவு, ஒழுக்க முதலியவற்றால் பெரிய ராயினாரை அவமதித்து கடவாமையை யுணர்த்துவது. மூன் றதிகாரத்தாலுங் கூறிய குடிப்பிறந்தாரது குணங்களையறிந்து அவ ரோடு சார்வானுக்குரிய ஒழுக்கத்தைக் கூறுகின்றமையின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது. பொதுப்படப் பெரியாரென்றமையால் குடிமுதலியவற்றில் பெரியாரை எனக்கோடலே அன்றி, வலியிற் பெரியராகிய அரசரையும், தவத்திற் பெரியராகிய மூனிவரையும் எனக் கொள்ளலுமாம்.

161. பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபி
னார்க்கு மருவி யணிமலை நன்னாட
போர்க்குதல் யார்க்கு மரிது.

இ-ள். ஆர்க்கும் - ஒலிக்கின்ற, அருவி - அருவியானது, அணி. அழகு செய்கின்ற, நல் - நன்மையாகிய, மலைநாட - மலைநாட்டையு டையானே, பொறுப்பர் என்று எண்ணி - பொறுக்கு மியல்பினரென் றெண்ணி, புரை தீர்ந்தார் மாட்டும் - (பாவமாகிய) குற்றமற்றவ ரிடத்தும், வெறுப்பன - (அவரால்) வெறுக்கப்படுவனவாகிய குற்றங் களை, செய்யாமை வேண்டும் - செய்யாதிருத்தலே தகுதி, வெறுத்த பின் - கோபங் கொண்டபின், போர்க்குதல் - (அதனை) நீக்குதல், யார்க்கும் அரிது - (கோபிக்கப்பட்ட) எவர்க்கும் கூடாதாதலால், எ - று.

பொ-ரை. ஒலிக்கின்ற அருவியானது அழகுசெய்கின்ற நன்மை யாகிய மலைநாட்டை யுடையானே! பொறுக்கு மியல்பினரென் றெண்ணிப் பாவமாகிய குற்றமற்றவரிடத்தும் அவரால் வெறுக்கப் படுவனவாகிய குற்றங்களைச் செய்யாதிருத்தலே தகுதி. கோபங்கொ

தென்று கருதிச் சிறந்த குணமுடைய மேன்மக்கள் அவர் தம் மிடத்து வரக் காணுந்தோறும் உபசரித்தல் செய்வாரென்பதி.

வேண்டிய தொன்றை ஈந்தால் மறுமையி லுதவுதற் சிறப்புப் பற்றி அதனை நன்றென்பாராயினர். இது குறிப்பு வினைமுற்று. சிறப்புச் செய்தல் கண்டமாத்திரையில் முகம் மலர்ந்து இன்சொல் கூறுதல் முதலியன செய்தல். இடைச்சொல் பெயரோடொக்குமாதலின் காணென்னும் வினைத்தொகையாகிய காலங்கரந்த பெயரெச்சம் ஏழாவதனிடப்பன்மைப் பொருள்தரும் தொறு என்னும் இடைச் சொல் கொண்டது. அதை அடுத்த உம்மை முற்று.

If one goes several times and begs of the unworthy, they will say, "this man comes and troubles us very often", and begin to treat him with contempt. If the same goes to the great men, they will welcome him gladly and try to help him as much and as often as possible. (9)

160. உடையா ரிவரென் றொருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வ—ருடைய
பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட விடத்து.

இ-ள். நல்ல குலத்தலை - உயர் குடியிற் பிறந்தாரிடத்து, பட்ட விடத்து - சேர்ந்த காலத்து, உடைய - (தோண்டி யெடுக்குந்தோறும் பொருளை) உடையதாயிருக்கிற, பிலத்தலை - சுரங்கத்தில், பட்டது - சேர்ந்தது, போலாதே - போலாகாதோ ஆகும், (இஃது அறியாதார்) இவர் உடையார் என்று - இவர் மிக்க பொருளுடையாரென்று, ஒரு தலையாக - துணிவாக, பற்றி - ஆதரவாகக்கருதி, கடையாயார் பின்-கீழாயினர் பின்னே, சென்று - போய், வாழ்வார் - உயிர்வாழ்வர், எ - று.

பொ-ரை. உயர்குடியிற் பிறந்தாரிடத்துச் சேர்ந்த காலத்துத் தோண்டி யெடுக்குந்தோறும் பொருளையுடையதா யிருக்கின்ற சுரங்கத்தில் சேர்ந்தது போலாகாதோ ஆகும். இஃதறியாதாரிவர் மிக்க பொருளுடையாரென்று துணிவாக ஆதரவாகக் கருதிக் கீழாயினர் பின்னேபோ யுயிர்வாழ்வர் என்பது.

பிலத்தலை, குலத்தலை என்பன சந்த இன்பப் பொருட்டு மெலித்தலாயின. செல்வரை உடையாரென்றது உலகவழக்குப்பற்றி. எ -

எதிர்மறை.உடையபிலம் தன்னையடைந்தவர்க்கு வேண்டியவளவுதன் னிலுள்ள பொருளைத் தருதல்போல உயர்குடியிற் பிறந்தவர் தம்மை யடைந்தவர்க்குத் தம்மிடத்துள்ளபொருளைக்கரவாதளிப்ப ரென்பது.

Some go after the low thinking they are very wealthy. Is it not something like finding a treasure-trove when we get hold of really great men? (10)

Chapter XVII—Against reproaching the great

17-ஆம். அதிகாரம், பெரியாரைப் பிழையாமை.

அஃதாவது குடி, கல்வியறிவு, ஒழுக்க முதலியவற்றால் பெரிய ராயினாரை அவமதித்து நடவாமையைவுணர்த்துவது. மூன்று இரண் டதிகாரத்தாலுங் கூறிய குடிப்பிறந்தாரது குணங்களையறிந்து அவ ரோடு சார்வானுக்குரிய ஒழுக்கத்தைக் கூறுகின்றமையின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது. பொதுப்படப்பெரியாரென்றமையால் குடிமுதலியவற்றில் பெரியாரை எனக்கோடலே அன்றி, வலியிற் பெரியராகிய அரசரையும், தவத்திற் பெரியராகிய முனிவரையும் எனக் கொள்ளலுமாம்.

161. பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபி
னார்க்கு மருவி யணிமலை நன்னாட
பேர்க்குதல் யார்க்கு மரிது.

இ-ள். ஆர்க்கும் - ஒலிக்கின்ற, அருவி - அருவியானது, அணி. அழகு செய்கின்ற, நல் - நன்மையாகிய, மலைநாட - மலைநாட்டையு டையாயே, பொறுப்பர் என்று எண்ணி - பொறுக்கு மியல்பினரென் றெண்ணி, புரை தீர்ந்தார் மாட்டும் - (பாவமாகிய) குற்றமற்றவ ரிடத்தும், வெறுப்பன - (அவரால்) வெறுக்கப்படுவனவாகிய குற்றங் களை, செய்யாமை வேண்டும் - செய்யாதிருத்தலே தகுதி, வெறுத்த பின் - கோபங் கொண்டபின், பேர்க்குதல் - (அதனை) நீக்குதல், யார்க்கும் அரிது - (கோபிக்கப்பட்ட) எவர்க்கும் கூடாதாதலால், எ - று.

பொ-ரை. ஒலிக்கின்ற அருவியானது அழகுசெய்கின்ற நன்மை யாகிய மலைநாட்டை யுடையாயே! பொறுக்கு மியல்பினரென் றெண்ணிப் பாவமாகிய குற்றமற்றவரிடத்தும் அவரால் வெறுக்கப் படுவனவாகிய குற்றங்களைச் செய்யாதிருத்தலே தகுதி. கோபங்கொ

ண்டபின் அதனை நீக்குதல் (கோபிக்கப்பட்ட) எவர்க்கும் கூடாதாதலால் என்பது.

தவீத்தால் பாவம் நீங்கினவராதலால் முனிவரைப் 'புரைதீர்ந்தார்' என்றும், அவர் கோபங்கொண்டு சபிப்பாராயின் அது தண்டயுண்டு தராது நீங்காதாதலால் 'பேர்க்குதல்யார்க்குமரிது' என்றும் கூறினர். புரைதீர்ந்தார்மாட்டு மென்ற உயர்வு சிறப்பும்மையால் மற்றை நிடத்துச் செய்யாமையைக் கூறவேண்டாதாயிற்று.

We must not do what is disagreeable and distateful even to the faultless men, thinking that we will be forgiven. O Lord of the country covered with hills giving rise to many torrents! After once such people show their dislike it is very difficult to soothe their anger. (1)

162. பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்து—மன்னே
பயனில் பொழுதாகக் கழிப்பரே நல்ல
நயமி லறிவி னவர்.

இ-ள். நல்ல - குற்றமற்ற, நயம் இல் - இன்பம் பொருந்துதலில்லாத, அறிவின் அவர் - அறிவினையுடைய அப்பேதையர், பொன்னேகொடுத்தும் - பொன்னையே விலைகொடுத்தும், புணர்தற்கு அரியாரை - கூடுதற்கு அருமையாயினாரை, கொன்னே - அவ்விலையில்லாமலே, தலைக்கூடப் பெற்றிருந்தும் - தாம் கூடும்படிப் பெற்றிருந்தும், அன்னே - ஐயோ, பயன்இல் - பயன் இன்மையாகிய, பொழுதாக - காலமாக, கழிப்பர் - (தம்வாழ்நாளைக்) கழிப்பார், எ-று.

பொ-ரை. குற்றமற்ற இன்பம் பொருந்துதலில்லாத அறிவினையுடைய அப்பேதையர் பொன்னையே விலை கொடுத்தும் கூடுதற்கு அருமையாயினாரை அவ்விலை யில்லாமலே தாம் கூடும்படி பெற்றிருந்தும் ஐயோ! பயன் இன்மையாகிய காலமாகத் தம் வாழ்நாளைக் கழிப்பாரென்பது.

பொன்னே கொடுத்து மென்றது புணர்தற் கரியாரைக் கூடுதலைச் சிறப்பித்தற்கு. உம்மை உயர்வு சிறப்பு. முதலிலுள்ள வும் அப்பொருளது. இடையிலுள்ளது இழிவு சிறப்போடு தேற்றப்பொருளது. ஈற்றிலுள்ளது ஈற்றசை. அன்னே என்னும் இடைச்சொல் இரக்கப்பொருளது. நயத்தைச் செய்தலால் இன்பம் நயமெனப்பட்டது. நயம்-நன்மை.

Though one has got by his side the great ones whom it is very difficult to get even by gift of gold, of what use is it for him if he wastes his time and does not gain from them what he should? (2)

163. அவமதிப்பு மின்ற மதிப்பு மிரண்டு
மிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணரா
கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வீடித்தநூ லார்.

இ-ள். அவமதிப்பும் - அவமதித்தலும், ஆன்ற மதிப்பும் - நன்கு மதித்தலும், இரண்டும் - ஆகிய இவ்விரண்டும், மிகை மக்களான் - மேன்மக்களால், மதிக்கல் பால - மதிக்கலாகிய பான்மையுடையன, நயம் உணராத - (ஒருவருடைய குணச் செயல்களினுடைய) நன்மை யை யுணரமாட்டாத, கை அறியாத - மதிக்கும் முறைமை உணராத, மாக்கள் - கீழோர், இழிப்பும் - இழித்துக் கூறுதலேயும், எடுத்து ஏத்தும் - எடுத்துப் புகழ்தலேயும், வடித்த - முனிவர்களால் குற்றமறச் சொல்லப்பட்ட, நூலார் - நூல்களே யுணர்ந்தவர், வையார் - பொருளாக வைத்து எண்ணுர்கள், எ - று.

பொ-ரை. அவமதித்தலும், நன்குமதித்தலும் ஆகிய இவ்விரண்டும் மேன்மக்களால் மதித்தலாகிய பான்மை யுடையன. ஒருவருடைய குணச்செயல்களினுடைய நன்மையை யுணரமாட்டாத மதிக்கும் முறைமை யுணராத கீழோர் இழித்துக் கூறுதலேயும் எடுத்துப் புகழ்தலேயும் முனிவர்களால் குற்றமறச் சொல்லப்பட்ட நூல்களே யுணர்ந்தவர் பொருளாகவைத்து எண்ணுர்கள் என்பது.

ஆதலால் மேன்மக்கள் நன்குமதிக்கும்படி ஒருவன் நடக்க வேண்டுமென்பது இசையெச்சம். வைத்தலாவது மேன்மக்களால் மதிக்கப்படும் அவமதிப்பு நன்குமதிப்புகளோடு சேரவைத்தல். மிகை புடைபெயர்ச்சி விகுதியாகிய ஐயீற்றுத்தொழிற்பெயர். அது குடி, கல்வியறிவு, ஒழுக்கங்களில் சிறத்தலின்மேல் நின்றதும் ஆன்ற இறந்த காலப் பெயரெச்சம், ஆல் பகுதி, இது அகலென்பதன் மரூஉ. உணராத, அறியாத எனப் பெயரெச்ச மிரண்டடுக்கி மாக்களென்னும் வினைமுதற்பெயர் கொண்டன.

Regard and disregard have got their value when they come from the respectable quarters. The learned would care little for the remarks good or bad when they come from the worthless people. (3)

164. விரிகிற நாகம் விடருள தேனு
முருமின் கடிஞ்சினஞ் சேணின்று மூட்கு
மருமை யுடைய வரண்சேர்ந்து மூய்யார்
பெருமை யுடையார் செறின்..

இ-ள். விரி - படம் விரிகின்ற, நிறம் - ஒளியையுடைய, நாகம் - நாகமானது, விடர் - ஆழமாகிய வெடிப்பிடத்தில், உளது எனும் - உள்ளதாயினும், உருமின்-இடியினது, கடுஞ்சினம் - மிக்க கோபமாகிய ஒலி, சேண்நின்றும் - நெடுந்தூரத்தி லிருக்கவும், உட்கும் - அதற்குத் தான் அஞ்சும், (அதுபோல) பெருமை உடையார் - (வலியின்) மிகுதி யுடைய அரசர், செறின் - கோபிப்பாராயின், அருமை உடைய - (பகைவர் கடப்பதற்கு) அரிமையுடைய, அரண் - காவலாகிய இடத்தை, சேர்ந்தும் - (அடைக்கலமாகச்) சேர்ந்தும், உய்யார் - அதற்கு அஞ்சுதலினின்றும் தப்பார், எ-று.

போ-ரை. படம் விரிகின்ற ஒளியையுடைய நாகமானது ஆழ மாகிய வெடிப்பிடத்தில் உள்ளதாயினும், இடியினது மிக்க கோபமா கிய ஒலி நெடுந்தூரத்தி லிருக்கவும் அதற்குத் தான் அஞ்சும். அது போல வலியின் மிகுதியுடைய அரசர் கோபிப்பாராயின் பகைவர் கடப்பதற்கு அருமையுடைய காவலாகிய இடத்தை அடைக்கலமாகச் சேர்ந்தும் அதற்கு அஞ்சுதலினின்றும் தப்பார் என்பது.

ஒருவர்க்குக் கோபம் பிறந்தபோது இரைந்துபேசல் இயல்பாதலால் உருமின் பேரொலிமேற் 'கடுஞ்சினம்' என்றார். இஃது இலக்கணை. நின்றுநிந்த என்பதன் திரிபு. அரண்பண்பாகுபெயர். சேணென்றது கடுஞ்சினம் தோன்றிய இடத்தை. அரணென்ற குறிப்பால் பெருமை யுடையார் அரசருக்காயிற்று.

The loud roar of thunder terrifies the serpent reposing in a crevice in earth even though it is very far off. If the great are angry, their enemies will be terrified even though they take shelter in a strong castle. (4)

165. எம்மை யறிந்திலி ரெம்போல்வா ரில்லென்று
தம்மைத்தாங் கொள்வது கோளன்று—தம்மை
யரியரா நோக்கி யறனறியுஞ் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள்.

இ-ள். எம்மை - (ஒருவர்) எம்முடைய கல்வியறிவு முதலி வற்றை, அறிந்திலிர் - அறியவில்லை, எம்போல்வார் - எம்மை ஒத்த

வர், இல் என்று - இலரென்று, தம்மை - தம்மை, தாம் கொள்வது - தாம் மதித்துக்கொள்வது, கோள் அன்று - கொள்ளுக யன்று, அறன் அறியும் - அறத்தை யறிந்தொழுகும், சான்றோர் - பெரியோர், தம்மை அறியர் ஆக - தம்மை அருமையானவராக, நோக்கி - மதித்து, பெரியர் ஆக - பெருமை யுடையாராக, கொள்வது - ஏற்பது, கோள் - கொள்கை, எ - று.

பொ-ரை. ஒருவர் எம்முடைய கல்வி யறிவு முதலியவற்றை அறியவில்லை, எம்மை ஒத்தவர் இலரென்று தம்மைத் தாம் மதித்துக் கொள்வது கொள்கையன்று. அறத்தை யறிந்தொழுகும் பெரியோர் தம்மை அருமையானவராக மதித்துப் பெருமையுடையாராக ஏற்பது கொள்கை என்பது.

கோள் கொள்ளென்னும் பகுதி புடைபெயர்ச்சி விகுதியாகிய தல் விகுதி புணர்ந்து கெட்டமாத்திரையில் முதனீண்டு நின்றமையால் முதனிலை திரிந்து தொழிற்பெயராம். அறன், நடுவு நிலைமை, ஒளவியமில்லாமை இவற்றையுடையாரே ஒருவருடைய பெருமையை உள்ளபடி கொள்வராதலால் 'அறனறியுஞ் சான்றோர் கொள்வது கோள்' என்றார்.

'You don't know anything about us. There is no one equal to us'—such an estimation of self is not proper. The esteem and regard that comes to one from the great who know the way of virtue, is of proper value. (5)

166. நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
யல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

இ-ள். நளிகடல் - பெருமையாகிய கடலினது, தண் சேர்ப்ப - குளிர்ந்த துறையை யுடையானே, சிறியவர் - கீழ்மக்களது, கேண்மை - நட்பு, நாள் - உதயகாலத்தின், நிழல்போல - நிழல் குறைதல்போல, விளியும் - முறையே குறையும், தொல் - ஆந்தாதை மூதாதை முதலியோரைத் தொடங்கிவருகின்ற, புகழ் ஆளர் - புகழை ஆளுதலுடையாரது, தொடர்பு - நட்பு, விளிவு இன்றி - குறைதலில் லாமல், அல்கு - பொழுது சுருங்குதலா லுண்டாகும், நிழல்போல - நிழல் நீளுதல்போல, அகன்று அகன்று - இடைவிடாமல் நீண்டு, ஓடும் - செல்லாநிற்கும், எ-று.

பொ-ரை. பெருமையாகிய கடலினது குளிர்ந்த துறையையுடையானே! கீழ்மக்களது நட்பு உதய காலத்தின் நிழல் குறைதல் போல முறையே குறையும்; தம் தாதை மூதாதை முதலியோரைத் தொடங்கி வருகின்ற புகழை ஆராதலுடையார்தம் நட்புக்குறைதலில்லாமல் பொழுது சுருங்குதலாலுண்டாகும் நீழல் நீளுதல்போல இடைவிடாமல் நீண்டு செல்லாநிற்கும் என்பது.

காலென்றது பகலின் முற்பிற்கை. அல்குதல் சுருங்குதல், இது நிழலென்றமையால் பகற்பொழுது சுருங்குதற்காயிற்று. அல்கென்னும் வினைத்தாகையாகிய காலங் கரந்தி பெயரெச்சம் காரணப் பொருட்டு பிற்பகற் பொழுது கழியும்வரை நிழல்நீண்டுகொண்டே செல்லுதல்போலத் தொல்புகழாளர் தம்மில்செய்யும் நட்பு அவர் முடியும்வரை நீண்டே செல்லுமாதலால் அவரை அவமதியாமல் ஆடங்கி நடந்து துணைகொள்க என்பது கருத்து. நிழற்போல என்பதில் லகரம் சந்த இன்பப்பொருட்டு. நகரமாகத் திரிந்தது. அடுக்கு இடைவிடாமைப் பொருளது.

O Lord of the cool sea-shore! The friendship with the low will gradually diminish and finally die out like the shadow of the forenoon, but friendship with the praiseworthy ones, will gradually increase like the shadow of the afternoon. (6)

167. மன்னர் திருவு மகளிர் செழினலமுந்
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா—துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மரமெல்லா
மூழைதங்கட் சென்றூர்க் கொருங்கு.

இ-ள். மன்னர் - அரசருடைய, திருவும் - செல்வமும், மகளிர் - மாதருடைய, எழில் நலமும்-குற்றமற்ற சுகமும், துன்னியார் - (அவமதியாமல்) நெருங்கியிருப்பவர், துய்ப்பர் - அனுபவிப்பார், தகல் - (இன்னார்) தகுதியுடையாரென்ல், வேண்டா - வேண்டுவதில்லை, துன்னி - நெருங்க, குழைகொண்டு - தளிரைப் பெற்று, தாழ்ந்த - தாழ்ந்துள்ள, குளிர்மரம் எல்லாம்-குளிர்ந்தநிழலீத் தருகின்ற மரங்களெல்லாம், தங்கண் - தம்மிடத்து, சென்றூர்க்கு - சென்று நெருங்கினவர்க்கு, ஒருங்கு ஊழை - வேற்றுமையில்லாமல் இடமாம், ஈ-று.

பொ-ரை. அரசருடைய செல்வமும் மாதருடைய குற்றமற்ற சுகமும் (அவமதியாமல்) நெருங்கியிருப்பவர் அனுபவிப்பார். இன்னார் தகுதியுடையாரென்ல் வேண்டுவதில்லை, நெருங்கத்தளிரைப்பெற்றுத்

தாழ்ந்துள்ள குளிர்ந்தநிழலைத்தருகின்ற மரங்களெல்லாம் தம்மிடத்துச் சென்று தெருங்கினவர்க்கு வேற்றுமையில்லாமல் இடமாம் என்பது.

தகல் தொழிற்பெயர், அல் விகுதி. நெடுநாள் துன்னியிருத்தலுக்குறைவிலாவிருப்பத்தால் தரப்படுதலால் 'எழினலம்' என்றும், நிழலினது மிகுதியைச்சிறப்பித்தற்குக் 'சூழைசொண்டு தாழ்ந்த' என்றும், நிழலாதல் உயர்ந்தோர் தாழ்ந்தோரென்னும் வேற்றுமையின்றி யென்பார் 'ஒருங்கு' என்றும் கூறினர். நிழலினது குளிர்ச்சி மரத்தின்மே லேற்றப்பட்டது. வெயிலின் வெப்பத்தை ஏற்பவை தாமாதலா லென்க. துன்னியார் பல்லோர் பகுக்கை இறந்தகால வினைப்பெயர். இதில் இன்னென்னும் இறந்தகால இடைநிலையின் னகரக்கேடு கடைக்குறை. மன்னர் திருவோடு மகளிரெழினலத்தைக் கூறியது ஒப்புமைக் கூட்டவணி. இச்செய்யுள் வேற்றுப் பொருள்வைப்பு.

Just as the trees with their cool branches afford shelter to those who approach them, so also the wealth of kings, the beauty of maidens will be easily enjoyed by those who ever and anon attend on them. There is no gainsaying this. (7)

168. தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர் நோய்செய்யும்—பெரிய
ஞலவா விருங்கழிச் சேர்ப்பபூப்பார் மாட்டும்
கலவாமை கோடி யுறும்.

இ-ள். பெரிய - பெருமையுடைய, உலவாத - கெடாத, இருகழி - நெடிய அளத்தையுடைய, சேர்ப்ப - துறைவனே, தெரிய - (விபரீத வையமின்றி மெய்ப்பொருள்) விளங்கும்படி, தெரியும் - ஆராயும், தெரிவு இல்லார் கண்ணும் - அறிவிலாரிடத்தும், பிரிய - பிரிந்தால், (அப்பிரிவு) பெருபடர்நோய் - மிக்க துன்பமாகிய நோயை, செய்யும் - உண்டாக்கும், (ஆதலால் கூடுவதிலும்) பூர்மாட்டும் - யாவரிடத்திலும், கலவாமை - கூடாமை, கோடி உறும் - கோடிப்பங்கு நன்மையாம், எ-று.

பொ-ரை. பெருமையுடைய கெடாத நெடிய அளத்தையுடைய துறைவனே! விபரீத வையமின்றி மெய்ப்பொருள் விளங்கும்படி ஆராயும் அறிவிலாரிடத்தும் பிரிந்தால் அப்பிரிவு மிக்க துன்பமாகிய நோயை யுண்டாக்கும்; ஆதலால்கூடுவதிலும் யாவரிடத்துங்கூடாமை கோடிப்பங்கு நன்மையாம் என்பது.

தெரிவிலார்கண் உருபு மயக்கம். கண் என்பதை இடத்தை யுணர்த்தும் பெயர்ச்சொலெனவும், தெரிவிலார்கணணுமென்பதனை ஒற்றுமைப் பொருளதாகிய ஆரும் வேற்றுமைத் தொகையெனவுங் கொண்டு, அறிவிலாரிடத்து நின்று எனவுரைப்பினும் பொருந்தும். உம்மை இழிவுசிறப்பு. பிரிய - பிரியினென்பதன் திரிபு. யார்மாட்டு மென்பதில் உம்மை முற்றும்மை யாதலால் யா எஞ்சாமைப்பொருளது. கோடி மிகப்பல என்பதற்குக் காட்டியதோரெண்.

O Lord of shore of the big deep bay! The merit and demerit of friendship with the unworthy will be gradually understood. Severance of the friendship will cause some sorrow; so it is better not to be very intimately connected with any. (8)

169. கல்லாது போகிய நாளும் பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலு—மொல்லீ
கொடாஅ தொழிந்த பகலு மூரைப்பின்
படாஅ்வாம் பண்புடையார் கண்.

இ-ள். உரைப்பின் - சொல்லுமிடத்து, கல்லாது - (நூல்களைக்) கற்காமல், போகிய - கழிந்த, நாளும் - தினமும், பெரியவர் கண் - (கேள்வியின்பொருட்டுப்) பெரியவரிடத்து, செல்லாது - (தாம்) செல்லாமல், வைகிய - கழிந்த, வைகலும் - நாளும், ஒல்வ - (தம்மால்) இயலும் பொருள்களை, கொடாது - (இரப்பவர்க்குக்) கொடாமல், ஒழிந்த - கழிந்த, பகலும் - நாளும், பண்பு உடையார்கண் - நற்குண நற்செய்கை யுடையாரிடத்து, படாஅம் - உண்டாகாவாம், எ-று.

பொ-ரை. சொல்லுமிடத்து நூல்களைக் கற்காமல் கழிந்த தினமும், கேள்வியின் பொருட்டுப் பெரியவரிடத்துத் தாம் செல்லாமல் கழிந்த நாளும், தம்மால் இயலும் பொருள்களை இரப்பவர்க்குக் கொடாமல் கழிந்த நாளும், நற்குண நற்செய்கை யுடையாரிடத்து உண்டாகாவாம் என்பது.

குணமும் செயலுமடங்கப் 'பண்பு' என்றும், கல்லாமலும், பெரியவர்பாற் செல்லாமலும், கொடாமலும் கழிந்ததாகிய ஒருநாளும் அவர்க்கு உண்டாவதில்லை யாதலால் நாள் முதலிய மூன்றையும் ஒருமையாயும், நாள், வைகல், பகலென ஒரு பொருட் இளவியாய் அறிவை விளக்குதலால் மூன்றே கற்றலையும், அக்கல்வியறிவை உறுதிப்படுத்துவது கேள்வியாதலின் அதன்பின் இதனையும், இவற்றிற்குப் பயன் அறஞ்செய்தலாதலால் ஈற்றில்கொடுத்தலையும் வைத்துங் கூறி,

னும். பண்புடையார் கற்றுக் கேட்டும் இரப்பவர்க்கீந்தும் உயிர்வாழ்வ
ரென்பது கருத்துபகல் - தொழிலாகுபெயர்.

The day spent without learning anything (new), the day spent without the association of the great, the day spent without spending anything in charity, will not be approved by those who walk on the path of virtue. (9)

107. பெரியார் பெருமை சிறுதகைமை யொன்றிற்
குரியா ருரிமைம் யடக்கம்—தெரியுங்கால்
செல்வ முடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தா
ரல்லல் கடீப வெனின்.

இ-ள். தெரியுங்கால் - ஆராயுமிடத்து, பெரியார் - பெரியாருடைய, பெருமை - பெருமைக் குணமாவது, சிறுதகைமை - (செருக்கில்லாமல்) பணிவுடைய ராதலாம், ஒன்றிற்கு - பரம்பொருளுக்கு, உரியார் - உரிமை யாயினருடைய, உரிமை - உரிய தொழில், அடக்கம் - (மனமொழி மெய்கள் சுதந்தரமின்றி) அடங்கினவராதலாம், செல்வம் உடையாரும் - பொருட்செல்வ முடையாரும், தன் சேர்ந்தார் - தம்மை யடைந்தவருடைய, அல்லல் - (வறுமையாலாகிய) துன்பத்தை, கடீப எனின் - ஒழிப்பாராஞல், செல்வரே - செல்வரே ஆவர், எ - று.

பொ-ரை. ஆராயுமிடத்து பெரியாருடைய பெருமைக் குணமாவது செருக்கில்லாமல் பணிவுடையராதலாம். பரம் பொருளுக்கு உரிமையாயினருடைய உரியதொழில் மனமொழிமெய்கள் சுதந்தரமின்றி அடங்கினவராதலாம். பொருட்செல்வமுடையாரும் தம்மை யடைந்தவருடைய வறுமையாலாகிய துன்பத்தை ஒழிப்பாராஞல் செல்வரே ஆவர் என்பது.

ஒப்பும் உயர்வும் இல்லாததாதலால் பரம்பொருள் ஒன்றெனப் பட்டது. இது தொகைக் குறிப்பு. உரியராகுதல் தமக்கென ஒரு சுதந்தரமுமின்றி அதன் வயப்படல். எ-தேற்றம். தன் புன்மையினருமைவந்த வழுவமைதி.

The greatness of the great is their humility. The greatness of the learned is their self-restraint. The greatness of the wealthy depends on their spending their wealth in relieving the distress of those that seek their help. (10)

Chapter XVIII—Association with the Good

18-ம் அதிகாரம்: நல்லினஞ் சேர்தல்.

அஃதாவது நன்மையாகிய இனத்தைச் சேர்தலே புணர்த்துவது. நல்லினமாவது தீயநெறியின் விலக்கி, நன்னெறியிலே செலுத்தும் பேரறிவுடையாருடைய கூட்டம். அப்பெரியாரை அவமதியாமலொழுகுதலே அன்றி அவரைப் பிரியாமல் நட்புக்கொள்ளவேண்டுமென இதனால் உணர்த்துகின்றமையால் இது அதன் பின் வைக்கப்பட்டது.

171. அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தெரிழுகி யவ்வு—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு.

இ-ள். வெயில் - வெயிலானது, முறுக - வெப்ப மிகுந்து காய்வதினால், பனி - பனியானது, புல் - (தான்முன்பற்றியிருந்த) புல்லை, பற்றுவிட்டால் ஆங்கு - பற்றுதலை விட்டாற்போல, அறியாத பருவத்த - (ஒருவன்) பகுத்துணர்வில்லாத காலத்தில், அடங்காரோடு - பணிந்து நடவாதவருடனே, ஒன்றி - வேற்றுமையின்றிச் சேர்ந்து, நெறி அல்ல - முறையல்லாதனவற்றை, செய்து - செய்யாநின்று, ஒழுகியவும் - நடந்ததற்குக் காரணமாகிய தீக்குணங்களும், நெறி அறிந்த - முறையை அறிந்த, நல் சார்வு - நல்லினமானது, சார - (தன்னைச்) சார்வதினால், கெடும் - விட்டொழியும், எ-று.

பொ-ரை. வெயிலானது வெப்பமிகுந்து காய்வதினால் பனியானது (தான் முன் பற்றியிருந்த) புல்லைப் பற்றுதலை விட்டாற்போல, ஒருவன் பகுத்துணர்வில்லாத காலத்தில் பணிந்து நடவாதவருடனே வேற்றுமையின்றிச் சேர்ந்து முறையல்லாதனவற்றைச்செய்யாநின்று நடந்ததற்குக் காரணமாகிய தீக்குணங்களும் முறையை அறிந்த நல்லினமானது தன்னைச் சார்வதினால் விட்டொழியும் என்பது.

ஒழுகிய வினைமுதல், வினையைக் கருவியின்மே லேற்றிக்கூறும் இறந்தகால வினைப்பெயர், வகாரமெய்விரித்தல் விகாரம். சார்வு தொழிலாகுபெயர். புல் தனிக்குறி லொற்றடுத்த மொழியாதலால் ஈற்று லகரம் திரிந்தது. பனி குறிலிணை மொழியாதலால் வருமொழிப் பகரம் மிகுந்தது. பற்று முதனிலைத் தொழிற்பெயர். நற்சார்வு சார என்பது எழுவாய்த் தொகாநிலை; இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலை யன்

றென்பது உவமையால் விளங்கினது. பிறர்கேட்டைத் தன்கேட்டைப்போலக் கருதுவதால் நற்சார்வு தானே சார்வதாயிற்று. வெயில் பண்பாகு பெயர். வெம் பகுதி, குறில் நெடில் என்பவற்றிற்போல இல் பகுதிப்பொருள் விகுதி, முன்னின்ற மெய் திரிந்தது கந்தி.

Those who joined bad company in their youth and committed acts unworthy of them, may afterwards by contact with the good turn out very good men, just as the dew on the blade of grass dries up as the sun rises (in the horizon). (1)

172. அறமி னறிந்தெறி யஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின்வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

ஔ-ள். எஞ்ஞான்றும் - எல்லா காளிலும், அறமெறி - அறத்தின் வழியை, அறிமின் - அறிந்து நடவுங்கோள், கூற்றம் - கூற்றவனுக்கு, அஞ்சுமின் - அஞ்சி யொழுகுங்கோள், பிறர் கடுஞ்சொல் - பிறருடைய கடுஞ்சொற்களை, பொறுமின் - பொறுங்கோள், வஞ்சம் - வஞ்சிக்கும் செயலை, போற்றுமின் - (உம்மிடத்துத் தோன்றுமல்) பாதுகாவுங்கோள், வினைதீயார் - செயல் தீயவரது, கேண்மை - நட்பினை, வெறுமின் - வெறுங்கோள், பெரியார் வாய்ச்சொல் - பெரியோருடைய வாய்ச்சொல்லை, பெறுமின் - கேளுங்கோள், எ-று.

பொ-ரை. எல்லா காளிலும் அறத்தின் வழியை யறிந்து நடவுங்கோள். கூற்றவனுக்கு அஞ்சி யொழுகுங்கோள். பிறருடைய கடுஞ் சொற்களைப் பொறுங்கோள். வஞ்சிக்கும்செயலை யும்மிடத்துத் தோன்றுமற் பாதுகாவுங்கோள். செயல் தீயவரது நட்பினை வெறுங்கோள். பெரியோருடைய வாய்ச்சொல்லைக் கேளுங்கோள் என்பது.

கூற்றவனுக்கு அஞ்சுதலாவது மரணம்வருவது இன்னபோதெனக் குறிக்கப்படாமையால் அதற்கஞ்சி விரைந்து அறஞ்செய்ய விரும்பல்.

Know the ways of virtue; dread death; put up with others' angry words; beware of guile; dislike friendship with the bad character; always receive words of wisdom from the great. (2)

173. அடைந்தார்ப் பிரிவு மரும்பிணியுங் கேடு
முடங்குடம்பு கொண்டார்க் குறலாற்—றொடங்கிப்

பிறப்பின்ஞ தென்றுணருந் பேரறிவி ஞரை
யுறப்புணர்க் வம்மாவென் னெஞ்சு.

இ-ள். அடைந்தார் - (இன்ன முறையென) அடைந்தவரை, பிரிவும் - (சாவுகாரணமாகவாவது வேறொன்று காரணமாகவாவது) பிரிதலும், அருபிணியும் - (மருந்து முதலியவற்றால்) சாத்தியமாகாத நோயும், கேடும் - பொருளழிவும், உடங்கு - ஒற்றுமையாக, உடம்பு கொண்டார்க்கு - உடலை யடைந்தவருக்கு, உறலால் - அடைதலால், பிறப்பு - பிறப்பானது, தொடங்கி - (உண்டானது) தொடங்கி, இன்ஞது என்று - துன்பந் தருவதென்று, உணரும் - அறியவல்ல, பேர் அறிவிஞரை - மிக்க அறிவினையுடைய நல்லினமானவரை, என் நெஞ்சு - என்மனம், உறப்புணர்க - மிகுதியுஞ் சேரக்கடவது, அம்மா - இது வியப்பாகும், எ-று.

பொ-ரை. இன்னமுறையென அடைந்தவரை சாவுகாரண மாகவாவது வேறொன்று காரணமாகவாவது பிரிதலும், மருந்து முத லியவற்றால் சாத்தியமாகாத நோயும், பொருளழிவும், ஒற்றுமையாக வுடலை யடைந்தவருக்கு அடைதலால், பிறப்பானது உண்டானது தொடங்கித் துன்பந் தருவதென்றறியவல்ல மிக்க அறிவினையுடைய நல்லினமானவரை யென்மனம் மிகுதியுஞ் சேரக்கடவது. இது வியப்பாகும் என்பது.

அடைந்தார் தாய் தந்தை மனைவி புத்திரர் முதலியோர், சாவு பிரிவிலடங்குதலால் கேடு பொருளின்மேலது. சிறந்த அறிவுதோன் றும்படி அறியாமையி னீங்குதலாகிய மனத்தூய்மையும், மொழிமெய் களாற் செய்யும் வினைத்தூய்மையு முண்டாதல் பற்றிப் 'பேரறிவி ஞரை உறப்புணர்க' என்றும், பேரறிவினரை உறப்புணரக் கரு துங் கருத்துண்டாத லருமையாதலால் அதுதனக் குண்டாகியதைப் பற்றி வியந்தாரென்பது தோன்ற 'அம்மா' என்றுங் கூறினர். இது வியப்புப் பொருளதாகிய இடைச்சொல்.

Separation from those who are connected with us, incurable diseases and death, these have to be experienced by those who are in embodied existence on this earth. O mind, stick up to the wise who have understood that birth is productive of such evils.

174. இறப்ப நினையுங்கா லின்ஞ தெனினும்
பிறப்பினை யாரு முனியார்—பிறப்பினுள்

பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின்.

இ-ள். பண்பு ஆற்றும்-(தமக்கு) இயல்பாகிய அறங்களைச் செய்யும், நெஞ்சத்தவர்களோடு - மனமுடையார்களோடு, பிறப்பினுள் - (ஒருவர்) பிறந்த பிறப்பில், எஞ்ஞான்றும் - தம் ஆயுள் முற்றும், நண்பு ஆற்றி - அன்பு செய்து, நட்கப் பெறின் - நட்புக்கொள்ளப் பெறுவாராயின், நீனெய்துக்கால் - ஆராயின், இறப்ப இன்னுது எனினும் - மிகவும் துன்பந் தருவதாயினும், பிறப்பினை - அந்தப்பிறப்பை, யாரும் - எத்தன்மையாரும், மூனியார் - வெறுக்காமல் விரும்புவர், எ-று.

பொ-ரை. தமக்கு இயல்பாகிய அறங்களைச் செய்யும் மனமுடையார்களோடு ஒருவர் பிறந்த பிறப்பில் தம் ஆயுள் முற்றும் அன்பு செய்து நட்புக்கொள்ளப் பெறுவாராயின், ஆராயின் மிகவும் துன்பந் தருவதாயின் அந்தப் பிறப்பை எத்தன்மையாரும் வெறுக்காமல் விரும்புவர் என்பது.

மக்கட் கியல்பா யமைந்தசெயல் அறச்செயலே ஆதலின் அதனைப் 'பண்பு' என்றும், அவ்வறச்செயல் மனத்தொடு பொருந்தினவ ரென்பார் 'பண்பாற்று நெஞ்சத்தவர்' என்றும், அவர்களோடு நண்பாற்றி நட்புக்கொளல் அரிதும் பேறுமாமென்பார் 'பெறின்' என்றுங் கூறினர். நண்பென்னுங் காரியத்தின் பெயர் தன் காரணமாகிய அன்பின்மேலது.

If one has associated himself with those whose friendship is highly desirable, no one would dislike births even though a deep and profound consideration makes one think of the birth as something undesirable. (4)

175. ஊரங் கணஃதூ ருரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோரூங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

இ-ள். ஊர் - ஊரிலுள்ள, அங்கணஃநீர் - சலதாரைநீர், உரவுநீர் - வலியமைந்தநீரை, சேர்ந்தக்கால் - சேர்ந்தால், பேரும் - தனதுபெயரும், பிறிது ஆகி - அந்நீரின்பெயராகி, தீர்த்தம் உம் ஆம் - சிறந்தநீருமாகும், (அதுபோல) ஒரும் - மதிக்கத்தக்க, குலமாட்சி - குடிப்பிறப்

பின்பெருமை, இல்லாரும் - இல்லாதவரும், நலமாட்சி - குடிப்பிறப் பின் பெருமை, நல்லாரை - நல்லவரை, சார்ந்து - சேர்ந்து, குன்று போல - மலைபோல, நிற்பர் - நிற்பார், எ-று.

பொ-ரை. ஊரிலுள்ள சலதாரை நீர் வலியமைந்த நீரைச் சேர்ந்தால் தனது பெயரும் அந்நீரின் பெயராகிச் சிறந்தநீருமாகும். அதுபோல மதிக்கத்தக்க குடிப்பிறப்பின் பெருமை இல்லாதவரும், நல்லவரைச் சேர்ந்து மலைபோல நிற்பார் என்பது.

மாட்சியில்லார், மாட்சிஇலீலார் இரண்டும் திணைவழுவமைதி. குன்று போல என்ற உவமையால் அளவுசெய்யப்படாத கல்விப்பொ ருளும், பிறரால் குற்றஞ்சொல்லப்படாத அசைவின்மையும், கல்வி யறிவு ஒழுக்கங்களால் யாவரும்மியநிற்றலும், பொருளிலாக்காலத்தும் ஒப்புரவு செய்தற்குடன்படலும் முடையாராவரெனக்கொள்க. உரவுநீ ரென்றது கங்கைமுதலிய நதிகளையும் ஆலயங்களைச் சார்ந்த குளங்க ளையும். அவை தம்மில் மூழ்கினருடைய உடலைத் தூயதாக்குதலே அன்றி, பாவத்தையும் நீக்குமென்பர் ஆதலால் அந்நீக்கும் வலியுடை மையை நோக்கி அவற்றை 'உரவுநீர்' என்றார். தீர்த்தமும் என்னும் இறந்தது தழீஇய எச்ச உம்மை தொகுத்தலாயிற்று.

The sewage water of a town, when it falls into a river and mixes with it, (its filthy nature is forgotten) gains (because of its association) the name of sacred water. So also the people who have no status in life, will by their association with the great, stand firm and prominent as a rock.

176. ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய
வங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉங்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

ஓ-ள். ஓங்கிய - உயர்ந்த, அம்கண் - அழகிய இடமகன்ற, விசு ம்பில் - ஆகாயத்திலுள்ள, ஒள் கதிர் - விளக்கமாகிய கிரணங்களு டைய, வாள்மதியம் - ஒளிதங்கிய சந்திரனை, சேர்தலால் - சேர்ந் திருத்தலால், முயலுல் தொழப்படும் - முயலும் அஞ்சலிசெய்யப்படும். (அதுபோல ஒருவர்) சீர்மை குன்றியவர் ஆயினும் - (குடி, கல்வியறிவு முதலிய) சிறப்பில்லாராயினும், குன்று அன்னார் - மலையை ஒத்தவ ரது, கேண்மை கொளின் - உறவாக் தன்மையைப் பெறுவாராயின்,

சீர்பெறுவர் - (அவருக்குப் பிறரால் செய்யப்படும் வழிபாடு முதலிய) சிறப்பைத் தாமும் அடைவார், எ-று.

பொ-ரை. உயர்ந்த அழகிய இடமகன்ற ஆகாயத்திலுள்ள விளக்கமான இரணங்களையுடைய ஒளிதங்கிய சந்திரனைச் சேர்ந்திருத்தலால் முயலும் அஞ்சலிசெய்யப்படும்; அதுபோல ஒருவர் குடி கல்வியறிவு முதலிய சிறப்பில்லாராயினும் மலையை யொத்தவரது உறவாந்தன்மையைப் பெறுவாராயின். அவருக்குப் பிறரால் செய்யப்படும் வழிபாடு முதலிய சிறப்பைத் தாமும் அடைவார் என்பது.

முயலுக்கு அஞ்சலி செய்தல் செய்வார்க்குக் கருத்தின்றாயினும் அவ்வஞ்சலியைச் சந்திரனுள் இருந்தானும்பெறுதல்போல, சீர்மை குன்றினோர்க்குச் சிறப்புச்செய்தல் செய்வார்க்குக் கருத்தின்றாயினும் அச்சிறப்பைக் குன்றன்னு ளுள்ளிருந்து தாமும் பெறுவ ரென்பது கருத்து: குன்றிய சீர்மைய ரென்பதிற் சொற்களைப் பின்முன்னாக நிறுத்தி விகுதி பிரித்துக்கூட்டி உரைக்க. குன்றுதல் குறைதல்; அது இன்மைமேலது. உம்மைகளிரண்டில் முன்னது இழிவு சிறப்போடு இறந்தது தழீஇயதினும், பின்னது இழிவு சிறப்பினும் வந்தன.

The figure of the hare in the bright moon with pleasant beams, is worshipped because of its abode. Even so men with little or no fame, when in company with the famous men, are respected (because of their company with the great). (6)

177. பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றுதாந்—தேரின்
சிறியார் சிறுமையுந் தோன்றுதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

இ-ள். தேரின் - ஆராயின், பாலோடு - பாலினோடு, அளாய நீர் - கலந்த நீர், பால் ஆகும் அல்லது - பாலாகத்தோன்று மல்லாமல், நீர் ஆய் - (தான் தனியே) நீராயிருந்து, நிறம் தெரிந்து - தன்னிறம் வினங்கி, தோன்றுது - தோன்றமாட்டாது, (அதுபோலத் தாஞ் சேர்ந்த) நல்ல - நற்குண நற்செய்கை, பெரியார் - மிகுந்தவருடைய, பெருமையை - பெருந்தன்மையை, சார்ந்து - அடையப் பெற்றதனால், சிறியார் - நற்குண நற்செய்கை யில்லாருடைய, சிறுமையும் - சிறுமைத் தன்மையும், தோன்றுது - தோன்றமாட்டாது, எ-று.

பொ-ரை. ஆராயின் பாலினோடு கலந்த நீர் பாலாகத் தோன்று மல்லாமல் தான் தனியே நீராயிருந்து தன்னிறம் வினங்கித்தோன்று

மாட்டாது, அதுபோலத் தாஞ்சேர்ந்த நற்குண நற்செய்கை யிருந்தவ ருடைய பெருந்தன்மையை யடையப் பெற்றதனால் நற்குண நற் செய்கை யில்லாருடைய சிறுமைத் தன்மையுந் தோன்றமிட்டாது என்பது.

அளாய இறந்தகாலப் பெயரெச்சம்; அளா பகுதி; ய் இறந்த கால இடைநிலை, அ பெயரெச்சப் பொருண்மை விகுதி. தெரிந்தென் னுஞ் சினைவினை தோன்றுதென்னும் முதல்வினை கொண்டது. சிறி யார் பெரியா ரென்பதற்கு மறுதலையாகிய பெயர். நல்லபெரியார் தினைவழுவமைதி. நல்ல பண்படியாகப் பிறந்த பலவின்படர்க்கைப் பெயர். சார்ந்து சாரவென்பதன் திரிபு. உம்மை இழிவு சிறப்போடு இறந்தது தழீஇய எச்ச உம்மை.

Water mixed with milk does not show its nature but practically passes for milk. So also, if you think of it, the meanness of the low will not be apparent and escape detection when they are in company with the great. (7)

178. கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபு
லொல்காவே யாகு முழவு ருழுபடைக்கு
மெல்லியரே யாயினு நற்சார்வு சார்ந்தார்மேல்
செல்லாவாஞ் செற்றூர் சினம்.

இ-ள். கொல்லை - கொல்லையாகிய, இருபுனத்து - பெரிய புன த்திலுள்ள, குற்றி - மரக்கட்டையை, அடைந்த புல் - சேரமுளைத்த புற்கள், உழவர் - உழவர்கள், உழு - உழுகின்ற, படைக்கு - கலப்பை க்கு, ஒல்காவே ஆகும் - தளர்வடையாதனவே யாகும், (அதுபோல) மெல்லியரே ஆயினும் - வலியில்லாதவராகவே யிருந்தாலும், நல்சா ர்வு - வன்மையாகிய துணையாகுவோரை, சார்ந்தார்மேல் - அடையப் பெற்றவர்மேல், செற்றூர் - பகைவருடைய, சினம் - கோபங் காரண மாகிய செயல்கள், செல்லா ஆம்-சென்று பயன்படாதனவாம், எ-று.

பொ-ரை. கொல்லையாகிய பெரிய புனத்திலுள்ள மரக்கட்டை யைச் சேரமுளைத்த புற்கள் உழவர்களுழுகின்ற கலப்பைக்குத் தளர் வடையாதனவே யாகும். அதுபோல வலியில்லாதவராகவே யிருந்தா லும் வன்மையாகிய துணையிருவோரை யடையப் பெற்றவர்மேல் பகைவருடைய கோபங் காரணமாகிய செயல்கள் சென்று பய் படாதனவாம் என்பது.

கொல்லைப்புனம் இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலை. கொ ல்லை சிறப்புப்பெயர். குற்றி பண்படியாகப் பிறந்தபெயர். குறு பகுதி,

இ ஒன்றன்படர்க்கை விகுதி, தன்னொற்றிரட்டியதாகிய றகரத்தோற்றம் விரித்தல், உகரக்கேடு சந்தி. ஏகாரங்கள் தேற்றம். சார்வு தொழிலாகு பெயர். நற்சார்வென்றது பகைவரினுமிக்க வலியுடையாரை. தினம் காரியத்தைக் காரணமாக உபசரித்த உபசாரவழக்கு.

The grass that grows around a hard stump will not be interfered with by the plough-share. Even if the people are low in themselves, they are not injured by the anger of their enemies simply because they happen to remain in unassailable quarters. (8)

179. நிலநலத்தா னன்றி யெவ்லேப்பாற் றத்தங்
குலநலத்தா லாகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றுண்மை
தீயினஞ் சேரக் கெடும்.

இ-ள். சான்றோர் – (கல்வியறிவொழுக்கங்களால்) நிறைந்தோர், நிலநலத்தால் - விளைநிலத்தினது நன்மையினால், கந்திய - பெருகிய, நெல்லேபோல் - நெல்லையேபோல, தம்தம் – தங்கள் தங்களது, குலநலத்தால் - உயர்குடிப் பிறப்பினால், ஆகுவர்-(தம்மொழுக்கம்குறையாமல்) பெருகுவர், தீவளி – சுழல்காற்று, சென்று - போய்ச்சேர்ந்து, கலநலத்தை – மரக்கலத்தினது திண்மையை, சிதைத்தால் ஆங்கு - அழிக்க அஃது அழிந்தாற்போல, தீயினம்-தீயினமானது, சேர – சென்று சேர்வதினால், சான்று ஆண்மை – (கல்வியறிவுமுதலியவற்றால்) நிறைந்து (அவற்றை) ஆளுந்தன்மை, கெடும் - தன் திண்மை அழியும், எ-று.

பொ-ரை. கல்வியறி வொழுக்கங்களால் நிறைந்தோர் விளைநிலத்தினது நன்மையினால் பெருகிய நெல்லையேபோலத் தங்கள் தங்களது உயர்குடிப்பிறப்பினால் தம்மொழுக்கங் குறையாதலால் பெருகுவர். சுழல்காற்று போய்ச்சேர்ந்து மரக்கலத்தினது திண்மையை அழிக்க அஃது அழிந்தாற்போலத் தீயினமானது சென்று சேர்வதினால் கல்வியறிவு முதலியவற்றால் நிறைந்து அவற்றை யாளுந்தன்மை தன் திண்மை அழியுமென்பது.

சான்றோர் தீயினத்தைச் சேர்வாராயின் தம்மொழுக்க முதலியன கெடுவ்ரென அதனது தீமையின் சிறப்புக் கூறப்பட்டது. தீயினம் பண்புத்தொகைநிலை, விரித்தால்தீமையாகிய இனமெனவிரியும். தீயினத்தைச்சேர விரும்பாராதலால் 'தீயினஞ்சேர' என்றார். சிலர் இதற்குப் பொருளோடு உவமை மாறுபடவுரைப்பர்.

The paddy is judged good or bad from the nature of the field where it was grown or cultivated. So the greatness of men will be judged from the nature of the family they come from. As the sea-worthiness of a vessel is spoiled by the tornado goodness perishes because of bad company.

180. மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
வினத்தா லிகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
யெரிபுனற்தீப்பட்டக் கால்.

இ-ள். மனத்தால் - (ஒருவர்) மனத்தினன்மையால், மறு இலர் எனும் - குற்றமில்லாராயினும், தாம் சேர்ந்த - தாம் கூடிய, இனத்தால் - தீயினத்தால், இகழப்படுவர் - (அறிவுடையோரால்) அவமதித்துச் சொல்லப்படுவர், எரிபுனம் - வெட்டிய புனமானது, தீப்பட்டக்கால் - உழவர்களால் இட்ட தீப்பட்டால், புனத்து - அப்புனத்திலுள்ள, வெறிகமழ் - தன்மணங்கமழ்கின்ற, சந்தனமும் வேங்கையும் - சந்தனமரமும் வேங்கைமரமும், வேம் - பயனிலாமரங்களோடு ஒக்க வேகும், எ-று.

போ-ரை. ஒருவர் மனத்தினன்மையால் குற்றமில்லாராயினுந் தாங்கூடிய தீயினத்தால் அறிவுடையோரால் அவமதித்துச் சொல்லப்படுவர். வெட்டிய புனமானது உழவர்களாலிட்ட தீப்பட்டால் அப்புனத்திலுள்ள நன்மணங் கமழ்கின்ற சந்தனமரமும் வேங்கைமரமும் பயனிலா மரங்களோடு ஒக்கவேகும் என்பது.

இகழப்படுதற்குக் காரணமாய் நின்றமையால் இனம் தீயினமெனப்பட்டது. ஒருவருக்கு மனத்தால் மறுவின்மையே அன்றி இனநலமும் வேண்டுமென்பது கருத்து. எரி என்னும் வினைத்தொகை புனமென்னும் செய்பொருள் கொண்டது. மலராற் சிறந்தமையின் வேங்கை சந்தனமரத்தோ டெனென்னப் பட்டது. இது வேற்றுப் பொருள் வைப்பணி.

Even though men may be free from fault as far as their conscience is concerned, they will be subject to blame because of the company they keep. When there is a big fire it consumes the fragrant sandal tree as well as *vengai* tree in the field without making any distinction whatever. (10)

Chapter XIX—Greatness (Moral)

19-ஆம் அதிகாரம்: பெருமை.

அஃதாவது நற்குணங்களாற் பெரியாரது தன்மையை யுணர்த்துவது.

இப்பெருமை கல்வினத்தினுடைய தன்மையாதலின் அதன்பின் வைக்கப்பட்டது.

181. ஈத லிசையா திளமைசே ணீங்குதலால்
காத லவருங் கருத்தல்லர்—காதலித்
தாதுநா மென்னு மவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்.

இ-ள். ஈதல் – (வேண்டியவற்றைத்) தருதலும், இசையாது – இசையாமல், இளமை – இளமைப் பருவமும், சேண் – தூரத்தில், நீங்குதலால் – நீங்கிக் கழிந்தமையால், காதல் அவரும் – விரும்புதலுடைய அம்மங்கையரும், கருத்து அல்லர் – விருப்பமில்லாராயினர், காதலித்த – விரும்பப்பட்ட செல்வப்பொருளில், நாம் ஆதும் என்னும் – (ஒருவன்) நாம் பெருகுவோமென்று கருதும், அவாவினை – ஆசையை, கைவிட்டு – பற்றறவிட்டு, போவதே – (துறவுநெறியில்) சேர்வதே, பொருள் – (பிறப்பின்) பயனும், எ-று.

பொ-ரை. வேண்டியவற்றைத் தருதலும் இசையாமல் இளமைப் பருவமும் தூரத்தில் நீங்கிக் கழிந்தமையால் விரும்புதலுடைய அம்மங்கையரும் விருப்பமில்லாராயினர். விரும்பப்பட்ட செல்வப் பொருளில் ஒருவன் நாம்பெருகுவோ மென்று கருதுமாசையைப் பற்றறவிட்டுத் துறவு நெறியில் சேர்வதே பிறப்பின்பயனும் என்பது.

ஆக்கச்சொல்லும், காதலித்த என்பதன் பலவின்பாற்கைஅகர விகுதியும் விகாரத்தால் தொக்கன. அவரென்பதில் அகரச்சுட்டு ஈதலும் இளமையும், இசைந்திருந்த காலத்தில் ஆசைசெய்வரென்பதைக்குறித்து நின்றது. அறுசுவையுண்டியூட்டல் முதலியவற்றையெல்லாம் செய்தவராதலால் உம்மை உயர்வுசிறப்பு. அவர்கருத்தல்ல ராயினமை கூறவே மற்றவர் கருத்தல்லராயினமை கூறவேண்டாதாயிற்று. நீங்குதல் மூக்காலத்துக்கும் பொதுவாயினும் இங்கு இறந்தகாலத்தது. ஆதுமென்னும் தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்றில் தும் விகுதியே. இடத்தையும், பாலையும், காலத்தையும் உணர்த்திற்று. போலுமென்பது உரையசை. எ-பிரிநிலை.

"We can give no longer. Our youth is gone far off. Our beloved ones think of us no more. We must abandon the desire that makes us stick to the domestic life and hope for future joys, and renounce this mode of life"—that is the proper thing to do. (1)

182. இற்சார்வி னேமாந்தே மீங்கமைந்தே மென்றெண்
பொச்சாந் தொழுகுவர் பேதையா—ரச்சார்வு [ணிப்
நின்றன போன்று நிலையா வெனவுணர்ந்தா
ரென்றும் பரிவ திலர்.

இ-ள். பேதையார் - அறிவிலார், இல் - இல்வாழ்க்கைக்குரிய, சார்வின் - (மண், பெண், பொன்னாகிய) துணைகளினால், எமாந்தேம் - இன்புற்றோம், ஈங்கு - இவ்வுலகத்தில், அமைந்தேம் என்று - (யாதொன்றினாலும்) குறைவில்லோமென்று, எண்ணி - எண்ணி, பொச்சாந்து (பிறப்பின்பயனை) மறந்து, ஒழுகுவர் - நடப்பார், அச்சார்வு - அத்துணைகள், நின்றன போன்று - நிலைபெற்றனபோலக் காணப்பட்டு, நிலையா என - நிலைபெறாதனவென்று, உணர்ந்தார் - அவற்றின் உண்மை யுணர்ந்தவர்கள், என்றும்-எக்காலத்திலும், பரிவது இலர் - விரும் புதலில்லார், எ-று.

பொ - ரை. அறிவிலார் இல்வாழ்க்கைக்குரிய மண், பெண், பொன்னாகிய துணைகளினால் இன்புற்றோம், இவ்வுலகத்தில் யாதொன்றினாலும் குறைவில்லோமென்றுகருதிப்பிறப்பின்பயனை மறந்து நடப்பார். அத்துணைகள் நிலைபெற்றனபோலக் காணப்பட்டு நிலைபெறாதனவென்று, அவற்றினுண்மை யுணர்ந்தவர்கள் எக்காலத்திலும் விரும் புதலில்லார் என்பது.

சார்வு தொழிலாகுபெயர். தம்பேதைமையாலாகிய துணிவினால் எமாந்தேம், அமைந்தேமென எண்ணினமையால் நிகழ்காலம் இறந்த காலமாக வந்த தாலவழுவமைதி. எமாந்தேம் ஒரு சொல்லின் தன்மை யது; எமமென்னும் மொழியோடு யா என்பதன் மரூஉ ஆகிய ஆப் புணர, அது இடைக்குறையாய் நின்ற எமா பகுதி; த் சந்தி, த் இறந்த கால இடைநிலை, எம் தன்மைப்பன்மை விகுதி, சந்தித்தகரம் நகரமா ன்று மெலித்தல் விகாரம்.

"In the domestic life we have enjoyed much pleasure and were very happy. We have everything full here", so think the unwise and go on with this life. Those who know that this

domestic life only appears to be permanent and is not really so, never long for it. (2)

183. மறுமைக்கு விக்து மயலின்றிச் செய்து
சிறுமைப் படாதேநீர் வாழ்மி—னறிஞராய்
நின்றுழி நின்றே நிறம்வேறுங் காரண
மின்றிப் பலவு முளர்.

இ-ள். நின்றஉழி - (உடல்) நின்றநிலையில், நின்றே - இருந்தே, காரணம் இன்றி - காரணமில்லாமலே, நிறம் - (இளமைமுதலிய) தன்மைகள், வேறு ஆம் - வேறுபடும், பலஉம்உள - (அதுவுமன்றிப் பிணி வறுமைமுதலிய) பலவும் உண்டாவனவாம், (ஆதலால்) அறிஞராய் - நல்லறிவையுடையீராகி, மறுமைக்கு - மறுமை இன்பத்துக்கு, விக்து - காரணமாகிய அறத்தை, மயல் இன்றிச் செய்து - (அவ்வின்பம் உளதோ இலதோவென்னும்) ஐயமில்லாமல் செய்யாநின்று, சிறுமைப்படாதே - துன்பப்படாமலே, நீர் வாழ்மின் - நீங்கள் வாழுங்கோள், எ-று.

பொ-ரை. உடல் நின்ற நிலையிலிருந்தே காரணமில்லாமல் இளமை முதலிய தன்மைகள் வேறுபடும், அதுவுமன்றிப் பிணி வறுமை முதலிய பலவும் உண்டாவனவாம், ஆதலால் நல்லறிவை யுடையீராகி மறுமை யின்பத்துக்குக் காரணமாகிய அறத்தை அவ்வின்பம் உளதோ இலதோவென்னும் ஐயமில்லாமல் செய்யாநின்று துன்பப்படாமலே நீங்கள் வாழுங்கோள் என்பது.

உடலென்பது சொல்லெச்சம். அறிஞராயென்றமையால் மயல் ஐயத்துக்காயிற்று. இதில் ஐகாரத்துக்கு அகரம் போலி. சிறுமை என்றது ஐம்புலதுகர்ச்சியின் பொருட்டுண்டாந் துன்பத்தை. உடம்போடு கூடி நின்றவர் உணராதவகை இளமை முதலியன ஒழிதலுக்குத் தாங்கருதிச் செய்துகொண்ட காரண மின்மையைக் காரணமின்றி என்றுரன்றிக் கூலமாகிய காரணத்தை ஒழித்துக் கூறினரல்லர். உடல்நின்ற நிலையாவது உயிரோடுகூடி நின்ற நிலை; நின்ற என்னும் பெயரெச்சத்தீறு தொகுத்தலாயிற்று. ஏ இரண்டனுள் முன்னது பிரிநிலை; பின்னது தேற்றம். உம்மை இறந்தது தழீஇயதனோடு முற்றுப்பொருளது.

Do without bewilderment charitable deeds which may be of use in the next world and live on without trouble here. There are many, learned though they be, who change their mind and do no charity. (3)

184. உறைப்பருங் காலத்து மூற்றுநீர்க் கேணி [ஐஞ்
யிறைத்தீண்னீ மூராற்று மென்பர்—கொடைக்கட
சீர்அயக் கண்ணும் பெரியார்போன் மற்றையா
ராரீ்அயக் கண்ணு மரிது.

இ-ள். உறைப்பு அருங்காலத்தும் - (மேகம்) துளித்தலில்லாத காலத்திலும், ஊற்றுநீர் - ஊற்றுநீரையுடைய, கேணி - கேணியானது, இறைத்து - (தன்னிலுள்ள நீரைப் பயிர்களுக்கு) இறைத்து, உண்ணினும் - (தாமும்) உண்பாராயினும், ஊர் - (தன்னையடுத்த) ஊரிலுள்ளாரை, ஆற்றும் - (காக்கும்) வலியுடையதாகும், என்பர் - (யாவரும்) சொல்லுவர், (அதுபோலக்) கொடைக்கடனும் - (இரப்பவர்க்கு) ஈதலாகிய ஒப்புரவும், சாய்ந்தக்கண்ணும் - (வறுமையால்) தளர்ந்தவிடத்தும், பெரியார்போல் - குடிப்பிறப்புப் பெரியவரிடத்து உண்டாகுவதுபோல, மற்றையார் - இழிகுடிப் பிறப்பினர், ஆயக்கண்ணும் - (செல்வத்தால்) பெருகியவிடத்தும், அரிது - உண்டாகுதலில்லை, எ-று.

பொ-ரை. மேகம் துளித்தலில்லாத காலத்திலும் ஊற்றுநீரையுடைய கேணியானது தன்னிலுள்ள நீரைப்பயிர்களுக்கு இறைத்துத் தாமும் உண்பாராயினுந் தன்னையடுத்த ஊரிலுள்ளாரைக் காக்கும் வலியுடையதாகுமென்று யாவருஞ் சொல்லுவர். (அதுபோல்) இரப்பவருக்கு ஈதலாகிய ஒப்புரவும் வறுமையால் தளர்ந்தவிடத்தும் குடிப்பிறப்புப் பெரியவரிடத்து உண்டாகுவதுபோல இழிகுடிப் பிறப்பினர் செல்வத்தால் பெருகியவிடத்தும் உண்டாகுதலில்லை என்பது.

இடையில் உரைத்தவை இசை எச்சம். ஊற்றென்பது தல்விகுதி புணர்ந்து கெட்டமாத்திரையில் ஊறென்பது திரிந்ததாதலால் மூதனிலை திரிந்த தொழிற்பெயர். ஊற்றுநீர் இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலை; விரிந்தால் ஊற்றையுடைய நீரெனவிரியும். ஊர் இடவாகுபெயர். சாய்ந்தக்கணென்னும் இறந்தகால வினையெச்சம் சாயக் கண்ணென்னத் தொகுத்தலாயிற்று. தான்கு மாத்திரையதாதலால் அளபெடை செய்யுள் வழுவமைதி.

During the time of draught, the tank with springs serves the town that draws and drinks. So the great even in adverse circumstances dispense gifts to the height of their power whereas the low even when they have much in their possession, will not at all dispense with any portion of it. (4)

185. உறுபுன றந்துல கூட்டி யறுமிடத்துங்
கல்லூற் றுழியூறு மாறேபோற் செல்வம் [மிச்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க்காற்
செய்வர் செய்பற்பா லவை.

இ-னி. உறுபுனல் - (தன்னிடத்து) உள்ளநீரை, தந்து - மகிழ்த்து, உலகு - உலகத்தாரை, ஊட்டி - உண்பித்து, அறுமிடத்தும் - நீர்வற்றினவிடத்தும், கல் - தோண்டிய, ஊற்று உழி - ஊற்றுக்குழியில், ஊறும் - நீர்சுரக்கின்ற, ஆறேபோல் - யாற்றையேபோல, செல்வம் - (தம்மிடத்துள்ள) செல்வப்பொருளை, பலர்க்கு - (எற்ற) பலருக்கும், ஆற்றி - கொடித்தல் செய்து, கெட்டு - (அச்செல்வம்) சிறிதும் இலராகி, உலந்தக்கண்ணும் - தாம்வருந்தினாலும், சிலர்க்கு - சிலருக்கு, ஆற்றி - கொடித்தல்செய்து, செயற்பாலவை - மற்ற செய்தற்பாண்மையாகிய ஒப்புரவுகளை, செய்வர் - செய்வார், எ-று.

பொ-ரை. தன்னிடத்து உள்ளநீரைக்கொடுத்து உலகத்தாரை யுண்பித்து நீர்வற்றினவிடத்துந் தோண்டிய ஊற்றுக்குழியில் நீர்சுரக்கின்ற யாற்றையேபோலத் தம்மிடத்துள்ள செல்வப்பொருளை எற்ற பலருக்குங் கொடித்தல் செய்து அச்செல்வஞ் சிறிதுமிலராகித் தாம் வருந்தினாலும் சிலருக்குக் கொடித்தல்செய்து மற்ற செய்தற்பாண்மையாகிய ஒப்புரவுகளைச் செய்வார் என்பது.

செய்யவேண்டிய ஒப்புரவு பலவற்றுள்ளும் ஈதல் சிறந்ததாதலின் சிலர்க்காற்றிச் செயற்பாலதை செய்க என்றார். பலர்க்குமென்னும் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. மற்ற உம்மைகளிரண்டும் இழிவு சிறப்புப் பொருளன. போ என்னுஞ் செயவெனெச்சத் தீறும் தொகுத்தலாயிற்று. ஏ மற்றநீர்நிலைகளினின்றும் பிரித்தலால் பிரிநிலை.

The river when it had overflowed its banks, watered so many places and even in the time of draught it is able to feed a few with its springs. So also the great even after having exhausted much of their wealth, and in their reduced circumstances, will be able to feed a few at least. (5)

186. பெருவரை நாட பெரியோர்கட் டமை [யைக்
கருவரைமேற் சூடேபோற் றேய்ந்துங்—கருவரை
கொன்றன்ன வின்ன செயினுஞ் சிறியார்மே
லொன்றனுந் தோன்று கெடும்.

இ-ள். பெருவரை நாட - பெருமையாகிய மலைநாட்டை யுடையானே, பெரியார்த்தன் - பெரியோரிடத்துண்டாகிய, தீமை - ஒருதீச் செயலான்தை, கருநரைமேல் - பெருமையாகிய வெள்ளெருத்தின் மேலுள்ள், சூடேபோல்-சூட்டின் வடுவேபோல், தோன்றும் - நன்கு விளங்கும், கருநரையை - பெருமையாகிய வெள்ளெருத்தை, கொன்றூல் அன்ன - சாகும்படி சூடுகள் சூடினாலொத்த, இன்ன - தீச் செயல்கள் பலவற்றை, செயினும் - செய்வாராயினும், சிறியார்மேல் - கீழ்மக்களிடத்து, ஒன்று ஆனும் - சிறிதாயினும், தோன்றூ - (அவை) தோன்றுதனவாகி, கெடும் - இல்லாதனவாகும்; எ-று.

பொ - ரை, பெருமையாகிய மலைநாட்டை யுடையானே! பெரியோரிடத்துண்டாகிய ஒரு தீச்செயலானது பெருமையாகிய வெள்ளெருத்தின்மேலுள்ள சூட்டின் வடுவேபோல நன்கு விளங்கும். பெருமையாகிய வெள்ளெருத்தைச் சாகும்படிசூடுகள் சூடினாலொத்த தீச்செயல்கள் பலவற்றைச்செய்வாராயினுங் கீழ்மக்களிடத்துச்சிறிதாயினும் அவை தோன்றுதனவாகி இல்லாதனவாகும் என்பது.

தோன்றுதல் பாவருங் கருதிப்பேசுதல். பெரியார் செய்த தீமை ஒன்றென்பது சூடென்ற ஒருமையாலும், சிறியார் செய்த தீமை பல வென்பது நரையைக் கொன்றன்ன வென்ற உவமையாலும், தோன்றூ என்னும் பலவின்பாற்கை எதிர்மறை முற்றாலும் பெற்றும். அவை கருதுவாரும் பேசுவாரும் இல்லாமையால் 'தோன்றூ கெடும்' என்றார். நரை பண்பாகுபெயர்; நரை-வெண்மை. பகுதிப்பொருள் விகுதியாகிய மையீறு கெட்டு நின்ற இன்ன என்னும் பண்புப்பெயர் செயலுக்தானமையால் அவ்வாகுபெயராம். ஒன்றென்னும் வரையறைப் பண்பு சிறுமைக்காயிற்று. ஏ-தேற்றம். ஆனென்பது ஆயினென்பதன் மரூஉ.

O Lord of lofty hills! If there be any blot on the great people, it will appear all the more prominent like the branding mark on a fatty white bull; if the low people commit crimes as heinous as the killing of the bull, nobody will ever care to notice them or to remark about them. (6)

187. இசைந்த சிறுமை யியல்பிலா தார்கண்
பசைந்த துணையும் பரிவா—மசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னார்கண்
மிகையேயும் பாடு பெறும்.

இ - ள். இசைந்த - தகுந்துள்ள, சிறுமை - கீழாகிய தொழிலைச் செய்யவல்ல, இயல்பிலாதார்கண் - நற்குணமில்லாரிடத்து, பசைந்த தினைதும் - (ஒருவன்) நட்புக்கொண்ட வளவும், பரிவு ஆம் - (அவனுக்குத்) துன்பம் வினையும், அசைந்த - நடுங்குதற்குக் காரணமாகிய தீச்செயல்களை, நகையேயும் - விளையாட்டிலேயும், வேண்டாத - (பிறருக்குச்செய்ய) விரும்பாத, நல் அறிவினர்கண் - நல்லறிவுடையாரிடத்துக்கொண்ட, பகையேயும் - பகையிலேயும், பாடுபெறும் - பயன்பெறுவான், ஏ - ற்.

பொ-ரை. தகுத்துள்ள கீழாகிய தொழிலைச்செய்யவல்ல நற்குணமில்லாரிடத்து ஒருவன் நட்புக்கொண்டவளவும் அவனுக்குத்துன்பம் வினையும், நடுங்குதற்குக் காரணமாகிய தீச்செயல்களை விளையாட்டிலேயும் பிறருக்குச் செய்ய விரும்பாத நல்லறிவுடையாரிடத்துக் கொண்ட பகையிலேயும் பயன்பெறுவான் என்பது.

நல்லறிவினரிடத்துக் கொண்டபகை பின் ஒரு தீங்கையுந் தராமையால், அத்தீங்கு தராமையைப் 'பாடு' என்றார். பாடென்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர் பகையின்பின் உண்டாம் பயனுக்கு ஆதலால் தொழிலாகுபெயர். அசைந்த-நல்லறிவினர் தீச்செயல் செய்ய நடுங்குவராதலால் அவர் அசைதலாகிய வினைமுதல் வினையைக் காரணமாகிய தீச்செயலின் மேலேற்றிக் கூறிய இறந்தகால வினைப்பெயர். அவர் நடுங்காமலிராரென்னுந் தணிவுபற்றி அசைவ என்பது இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. படாவுளசெயல், விளையாட்டுச்செயலிரண்டினின்றும் நகையையும், நட்புப் பகையிரண்டினின்றும் பகையையும் பிரித்தலால் ஏ இரண்டும் பிரிநிலை.

In proportion to the degree of intimacy with the mean-minded who have not an iota of good quality, sorrow accrues, but enmity of those who even in jest never care to think of forbidden things, will confer dignity. (7)

188. மெல்லிய நல்லாருண் மேன்மை யதுவிறப்
தொன்னீருட் கூற்றுட்கு முட்குடைமை யெல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவரு
ணன்மை வரம்பாய் விடல்.

இ - ள். மெல்லிய நல்லாருள் - மென்மையாகிய இயல்புடையாரிடத்து, மேன்மை - மேன்மையாகிய தன்மையும், ஒன்னீருள் - பகைவரிடத்து, அது இறந்து - மேன்மையாகிய இயல்பைவிட்டு

கூற்று உட்கும் - கூற்றுவனும் அஞ்சத்தகும், உட்கு - பயங்கரத்தை, உடைமை - கொள்ளுமிடி எல்லாம் - எல்லாச்செயலும், சல்வாரூர் - வஞ்சனையாரிடத்து, சால - (அவர் வஞ்சனையினும்) மிக்க, வஞ்சனையும், நலவரூர் - வஞ்சனையில்லாரிடத்து, நன்மை சனையின்மையும், வரம்புஅய்விடல் - (ஒருவர்) எல்லையாய் விடக்கட வர், எ-று.

பொ-ரை. மென்மையாகிய இயல்புடையாரிடத்து மென்மை யாகிய தன்மையும் பகைவரிடத்து மேன்மையாகிய இயல்பைவிட்டு கூற்றுவனும் அஞ்சத்தகும் பயங்கரத்தைக்கொள்ளலும் எல்லாச்செய லும் வஞ்சனையாரிடத்து அவர் வஞ்சனையினும் மிக்க வஞ்சனையும், வஞ்சனை யில்லாரிடத்து வஞ்சனை யின்மையும் ஒருவர் எல்லையாய் விடக்கடவர் என்பது.

மென்மைபிறர்செய்த தீங்கைப் பாராட்டாத குணம். இறந்தெ ன்னும் இறந்தகால வினையெச்சம் உடைமையென்னுங் குறிப்புத் தொழிறபெயர் கொண்டது. கூற்றமென்னு முயர்வுசிறப்பும்மைதொ குக்கப்பட்டது. உட்கை உண்டாக்குவதனை உட்கென்றது உபசார வழக்கு. அது முதனிலைத் தொழிற்பெயர். சலவர் ஈறுதிரிந்த குறிப்பு வினைப்பெயர்; எல்லாஞ் சலவர் நிணவழுவமைதி. மெல்லிய நல் லா ரென்பதில் மென்மையையே நன்மை யென்றமையின், கூத்த கடை, உண்ட ஊண், செய்தசெயல் என்பனபோல அக்குறி யரெச்சம் முதனிலையாகிய நன்மையென்னுங் குறிப்புத் பெயர்கொண்டது. இவ்வாறெழுக வல்லார்க்கு அந்நால்வரும் பகைவரென்பது கருத்து. ஒன்னார் தெரிநிலையாகிய மறைவினைப் பெ யர்; இதில் ஒன்றென்பதன் மரூஉவாகிய ஒன் பகுதி.

With maidens soft, use gentleness surpassing theirs; with foes display your wrath which Yama himself will be terrified at; as regards the falsehood-uttering people, you had better out-do them in their art. With the good people, move in a good way. Let this be the law of life. (8)

189. கடுக்கி யொருவன் கடுங்குற்ற மேசி
மயக்கி விடினு மனப்பிரிப்பொன்—றின்றித்
துளக்க மிலாதவர் தூய மனத்தார்
விளக்கினு ளொண்சுடரே போன்று.

இ-ள். துளக்கம் இல்லாதவர் - (அறிவு) கலங்குத வில்லாதவர், ஒருவன் கடுக்கி - (பொருமையால்) ஒருவன் விரைந்து வந்து, கடு

குறளே பேசி- (நட்டோன்மேல் தம்மிடத்து) மிக்கசொளச்சொல்லி, மயக்கி விடினும் - மயங்கும்படி செய்துவிட்டாலும், மனப்பிரிப்பு - மனத்தால் (நட்பினைப்) பிரித்தல், ஒன்று உம் இன்றி - சிறிதுமில்லாமல், விளக்கினுள் - விளக்குத்தண்டினுளேற்றிய, ஒள்கடரே - ஒள்ளிய சுடரையே, போன்று - ஒத்து, தூயமனத்தார் - குற்றமில்லாத மனமுடையராயிருப்பர், எ-று.

போ - ரை. அறிவு கலங்குதலில்லாதவர் பொறுமையால் ஒருவன் விரைந்துவந்து (நட்டோன்மேல் தம்மிடத்து) மிக்க கோளைச் சொல்லி மயங்கும்படி செய்துவிட்டாலும், மனத்தால் நட்பினைப் பிரித்தல் சிறிதுமில்லாமல் விளக்குத்தண்டினுளேற்றிய ஒள்ளியசுடரையே ஒத்துக் குற்றமில்லாத மனமுடையராயிருப்பர் என்பது.

விளக்கினு ளொண்சுடர் தன்னைச்சாரும் பிறபொருள்களைச் சுட்டெரிப்பதல்லாமல் தன்னிற் கொளாததுபோல, ஒருவன்கூறுங் கடுங்குறளை உண்மையெனக் கொள்ளாமல் நட்டோனிடத்து வைத்த நட்பினை விடாரென்பது. கடுகி என்பது தொடை நோக்கி ககரவொற்று விரியநின்றது. முக்குணங்களும் மாறிமாறி வருதல் யாவர்க்கு முளதாதலால் தாமதகுணத்தால் மயங்கினராயினும் பின் அவன் குறளைக் கிணங்காரென்பார் மனப்பிரிப் பொன்றின்றித் தூயமனத்தார் என்றார். இன்றியென்னுங் குறிப்பு வினையெச்சம் மனத்தாரென்னுங் குறிப்புவினை கொண்டது. விளக்குத் தானியாகுபெயர்.

Though one may vex by his slanderous words those who are pure in heart will never get ruffled, but will be steady like the flame inside the lamp. (9)

190. மூற்றுற்றுங் துற்றினை நாளு மறஞ்செய்து
பிற்றுற்றுத் துற்றுவர் சான்றவ—ரத்துற்று
முக்குற்ற நீக்கி முடியு மளவெல்லாந்
துக்கத்து ணீக்கி விடும்.

இ-ள். மூன் துற்றும் - மூன் (தாம்) உண்ணுதற்குரிய, துற்றினை - உணவை, நாளும் - தினமும், அறம்செய்து - விருந்தினர் முதலானவர்க்குக் கொடுத்து, பின்துற்று - மிகுதியான உணவை, துற்றுவர் - உண்ணுவர், சான்றவர் - மேலோர், அத்துற்று எல்லாம் - அவ்வாறுண்ணு முணவெல்லாம், முக்குற்றம் நீக்கி - (காமவெகுளி மயக்கமாகிய) மூன்று குற்றங்களையும் நீக்கி, முடியும் அளவு - உடலினின்று முயிர்நீங்கும் அளவில், துக்கத்துள் - துக்கத்துக்குக் கார

ணமாகிய பிறப்பினின்றும், நீக்கிவிடும் - (அவ்வுயிரை) ஒழித்து விடும், எ-று.

பே - ரை. முன் தாம் உண்ணுதற்குரியீ உணவைத் தினமும் விருந்தினர் முதலானவர்க்குக் கொடுத்து மிகுதியான உணவை உண்ணுவர் மேலோர். அவ்வாருண்ணு முணவெல்லாம் காமவெகுளிமயக்க மாகிய மூன்று குற்றங்களையும் நீக்கி உடலினின்றும் உயிர் நீங்குமளவில் துக்கத்துக்குக் காரணமாகிய பிறப்பினின்றும் அவ்வுயிரை ஒழித்துவிடும் என்பது.

தற்றல் உண்ணல். தற்றென்னும் முதனிலைத் தொழிற்பெயர் உண்ணப்படும் பொருளுக்கானதால் தொழிலாகுபெயர். பிற்றுற்று என்றது பிறருண்டு மிகுந்தவுணவை. தற்றுவர் பல்லோர் படர்க்கை எதிர்காலவினைமுற்று; தற்று பகுதி, வ் எதிர்கால இடைநிலை, அர்பல்லோர் படர்க்கை விகுதி. தத்துங் தத்தினை, தத்தித் தத்துவர், அத்தத்து எனக்கூறுவாருமுளர். தத்தும் என்னும் பெயரெச்சத்துக்குத் து என்பது பகுதியும், உம் விகுதியும் ஆயினபின், தகரங்கள் இடையே வருவதற்கோ ரியையின்மையாலும், தத்து என்பது பகுதியாதல்வேண்டும்; தத்தென ஓர் முதனிலையின்மையாலும், தத்தென்பது தவ்விகுதிபெற்று நின்ற தொழிற்பெயரெனக் கொண்டு அது உணவிற்குத் தொழிலாகுபெய ராயிற்றெனின் அவ்வாறு இச்சொல் வழங்குத லின்மையாலும், இம்முதனிலையின் அடியாக எதிர்கால வினைமுற்று தப்பாரென வருமேயன்றித் தத்துவரென வராமையாலும் இவை வழுவெனல் அவர் நோக்கிற்றிலர்போலும். எல்லாமென்பதை அத்தற்றென்பதனோடு கூட்டுக. துக்கம் காரணத்தைக் காரியமாகக் கூறினர்.

The great will daily give to the needy what is served to them first, what is served them a second time they will eat. That conduct removes the three faults and sets men free from all sorrows through out their life. (10)

Chapter XX—Perseverance

20-ஆம் அதிகாரம், தாளாண்மை.

அஃதாவது மெய்ம்முயற்சி யுடையாராதல். நல்லினத்தைச் சார்ந்தொழுகுதலா லுதித்த நல்லறிவுடையான் செய்யலுறும் அறத்துக்கு இன்றியமையாச் சிறப்பினதாகிய பொருளை ஆக்குவதாதலின் இது அதன்பின் வைக்கப்பட்டது.

191. கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்
கேளிவ ரூண்டு கிளைகளோ துஞ்சுப [போல்
வாளாடு கூத்தியர் கண்போற் றடுமாறுந்
தாளாளர்க் குண்டோ தவறு.

இ-ள். கோள் - (தாம்நீர்) கொள்ளுதலே, ஆற்ற - (குளம்) செய்வதினால், கொள்ளா - நீரைப்பெற்று, குளத்தின்கீழ் - குளத்தினருகிலுள்ள, பைங்கூழ் துஞ்சுதல்போல் - பயிர்நிலைபெறுதல்போல, கேள் - உறவினனாகிய முயற்சியுடையான், ஈவது - ஈயும் உணவை, உண்டு - உண்ணுகின்று, கிளைகளோ - (தம்மைச்சார்ந்துள்ள) உறவினரோ துஞ்சுப - (முயற்சித் துன்பமின்றி) நிலைபெற்று வாழ்வார், வாள் ஆடி - வாளாட்டி ஆடுகின்ற, கூத்தியர் கண்போல - நாடகப்பெண்களுடைய கண் உலாவல்போல, தடுமாறும் - சோம்பாமல் உலாவுகின்ற, தாள் ஆளர்க்கு - முயற்சியை யாளுதலுடையார்க்கு, தவறு - (உபகாரியாந் தன்மை) தவறுதல், உண்டோ - உளதாகுமோ இல்லை, எ - று.

பொ-ரை. (தாம் நீர்) கொள்ளுதலே (குளம்) செய்வினால் நீரைப் பெற்றுக் குளத்தினருகிலுள்ள பயிர் நிலைபெறுதல்போல, உறவினனாகிய முயற்சியுடையான் ஈயுமுணவை உண்ணுகின்று தம்மைச் சார்ந்துள்ள உறவினரோ (முயற்சித் துன்பமின்றி) நிலைபெற்று வாழ்வார். வாளாட்டி ஆடுகின்ற நாடகப் பெண்களுடைய கண் உலாவல் போல, சோம்பாம லுலாவுகின்ற முயற்சியை யாளுதலுடையார்க்கு உபகாரியாந் தன்மை தவறுதல் உளதாகுமோ, இல்லை என்பது.

பொருளுக்குக்கூறிய துஞ்சுதலென்னும் தொழில் உவமைக்கும் வருவிக்கப்பட்டது. கேள் பண்பாகுபெயர். ஈவது எதிர்கால வினையாலணையும்பெயர். முன்னுள்ள ஓ உயர்வு சிறப்பு. பின்னுள்ள ஓ எதிர்மறை. தாளாளரென்றது விடாமுயற்சியுடையாரை. உண்டு உண்ணுகின்றென்பதன் திரிபு. கண்போலத் தடுமாறுதல் கண் வாளாட்டுமுற்றுப்பெறுமளவும் பிடித்தாடும் வாள் சென்றவழியெல்லாஞ் செல்வதுபோலத் தாம்மேற்கொண்ட முயற்சி எவ்வெவ்வழியாற் சென்று செய்யின் முற்றப்பெறுமோ அவ்வவ்வழியாற் சென்று செய்து, முடியுமளவும் முயற்சியை விடாதுதல்.

The kindred that feed upon what their relatives give will be like the green paddy below a tank that does not contains a sufficient supply of water. Is failure possible to men of perseverance whose movements are as quick as the eyes of those who perform the sword-dance? (1)

192. ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉங்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங்—கந்தாகும்
வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றன்
ஊழ்வின்றித் தன்னைச் செயின்.

இ-ள். ஆடு - (பிறர் பற்றுதலால்) துவளுகின்ற, கோடு ஆகி - கொம்பாக, அதரிடை - வழியில், நின்றதும் - நின்ற மரக்கன்றும், காழ்கொண்ட கண் - உள் வயிரங்கொண்டவிடத்து, களிறு - யானையை, அணைக்கும் - கட்டுதற்குரிய, கந்து ஆகும் - தறியாகும், ஒருவன் - (யாவர்க்கும் எளியனாக இருந்த) ஒருவன், தாழ்வு இன்றி - சோம்புதலிலனாகி, தான் தன்னைச்செயின் - தான் தன்னை (முயற்சியுடையனாகச்) செய்து கொள்வனனால், வாழ்தலும்-பொருளுடையனாகுதலும், அன்ன தகைத்தே - அதுபோலுந் தன்மையுடையதேயாம், எ-று.

பொ-ரை. பிறர் பற்றுதலால் துவளுகின்ற கொம்பாக வழியில் நின்ற மரக்கன்று உள்வயிரங் கொண்டவிடத்து யானையைக் கட்டுதற்குரிய தறியாகும். யாவர்க்கும் எளியனாக இருந்த ஒருவன் சோம்புதலிலனாகித் தான் தன்னை முயற்சியுடையனாகச் செய்து கொள்வனனால் பொருளுடையனாகுதலும், அதுபோலுந் தன்மையுடையதேயாம் என்பது.

உம்மை இரண்டில் முன்னது இழிவு சிறப்புப் பொருளது, பின்னது இறந்தது தழீஇயதனோடு உயர்வு சிறப்புப் பொருளது. முன்னுள்ள ஏ ஈற்றசை, பின்னுள்ள ஏ தேற்றம். போற்றிவளர்ப்பாரிலென்பார் 'அதரிடை நின்றதூஉம்' என்றார். அப்பொருள் பொருளில் தானென்ற சொல்லாற்றலால் வந்தியைதல் அறிக. நின்றது இறந்தகால வினைப்பெயர்.

The twig that was on the wayside bending to the touch of everyone, when its core is developed, becomes hard enough to have an elephant tied to it. Even the life is like this; a man may himself make himself.

193. உறுபுலி யூனிரை யின்றி யொருநாள்
சிறுதேரை பற்றியுந் தின்னும்—மறிவனல்
காற்றெழி லென்று கருதற்க கையினல்
மேற்றெழிலு மாங்கே மிகும்.

இ-ள். உறுபுலி - வலிமிகுந்த புலி, ஊன் இரை - இறைச்சியாகிய இனிர, இன்றி - கிடைத்தலில்லாமல், ஒருநாள் - ஒருகாலத்தில், சிறுதேரையும் - தன்னிரைக்குத் தகாத தவளையையும், பற்றித் தின்னும் - பிடித்துத் தின்னும், (அதுபோல ஒருவன்) அறிவினுல் - மிக்க கல்வியறிவுடைமையால், கால்தொழில் என்று - (கிடைத்ததொழில்) காலால் செய்யப்படுஞ் சிறுதொழிலென்று, கருதற்க - அவமதியாமல் மேற்கொள்ளக் கடவன், கையினுல்-கையினுல் செய்யப்படும், மேல் தொழிலும் - மேன்மையாகிய தொழிலிலும், ஆங்கே - அச்சிறுதொழில் செய்யப்புகுந்த இடத்தே, மிகும் - உயர்வான், எ-று.

பொ-ரை. வலிமிகுந்த புலி இறைச்சியாகிய இரை கிடைத்தலில்லாமல் ஒருகாலத்தில் தன்னிரைக்குத்தகாத தவளையையும் பிடித்துத் தின்னும். அதுபோல ஒருவன் மிக்க கல்வியறிவுடைமையால் கிடைத்ததொழில் காலால் செய்யப்படுஞ் சிறுதொழிலென்று அவமதியாமல் மேற்கொள்ளக் கடவன். கையினுல் செய்யப்படும் மேன்மையாகிய தொழிலிலும் அச்சிறுதொழில் செய்யப்புகுந்த இடத்தே உயர்வான் என்பது.

கால் அறிவின் சிறுமையையும், கை அறிவின் மிகுதியையும் உணர்த்தவந்த குறிப்புச்சொல். சிறுமைப்பண்பு தகுதியின்மையை உணர்த்தியது. எ-பி.நிலை.

If the valiant tiger can't get its prey proper, sometimes it takes hold of a frog to appease its hunger. So don't think and say "I gain by my knowledge only menial tasks here." To the skilful hand even there noble employments will be found. (3)

194. இசையா தெனினு மியற்றியோ ராற்று
லசையாது நிற்பதா மாண்மை—யிசையுங்கால்
கண்ட நிரையலக்குங் கானலந் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று.

இ-ள். கண்டல் - தாழையை, திரை - அலைகள், அலைக்கும் - அலைக்கின்ற, கானல் - சோலையையுடைய, தண் சேர்ப்ப - குளிர்ச்சியாகிய துறையை யுடையானே, இசையுங்கால் - (ஒருதொழில்) எளிதில் முடிவதானுல், மற்றுப் பெண்டிரும் - ஊக்கமில்லாத பெண்டகளும், வாழாரோ - (முடித்து) வாழ்தல் செய்யாரோ, (ஆதலால்) இசையாது எனினும் - செய்ய முடியாதாயினும் ஒர்ற்றுல் - (செய்யப்புகுந்த) ஒருநிலையிலே, அசையாது நின்று - ஊக்கமழியாமல் நின்று,

இயற்றுவது - செய்து முடிக்கவல்ல தன்மை, ஆண்மை - ஆண்மக னதியல்பு, எ-று.

பொ-ரை. தாழையை அலைகள் அலைக்கின்ற சோலையையுடைய குளிர்ச்சியாகிய துறையையுடையானே! ஒருதொழில் எளிதில்முடிவு தானுல் ஊக்கமில்லாத பெண்கெளும் முடித்து வாழ்தல் செய்யா ரோ ஆதலால், செய்ய முடியாதாயினும் செய்யப்புகுத்த ஒரு நிலை யிலே ஊக்கமழியாமல் நின்று செய்து முடிக்கவல்ல தன்மை ஆண்மக னதியல்பு என்பது.

இயற்றி அசையீறு நிற்பது என்பதனைப் பின்முன்னுக நிறுத்தி விகுதிபிரித்துக் கூட்டி உரைக்க. ஆற்றல் உருபு மயக்கம். ஆம், அம் சாரியை. மற்று - பிறிதென்னும் பொருளது. ஓ எதிர்மறை. ஆண்மை இழிவு சிறப்பு. கானல் நெய்தனிலத்துச்சோலை. செய்தற்குரியதைச் செய்து முடிப்பது ஆண்மை என்பது கருத்து.

It is manliness to stand firm and steadfast and to work on even if the attempt were not to succeed. Lord of the cool sea-shore where the waves agitate the scented tilocs! When everything is easily done, will not even woman get on well (what is the difference then between men and women). (4)

195. நல்ல குலமென்றுந் தீயகுல மென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பி
னெண்பொரு ளொன்றே தவங்கல்வி யாள்வினை
யென்றிவற்று ணுகுங் குலம்.

இ-ள். நல்லகுலம் என்றும் - உயர்குடிப் பிறப்பென்றும், தீய குலம் என்றும் - இழிகுடிப்பிறப்பென்றும், சொல் அளவு அல்லால் - சொல்லுதலினளவல்லாமல், பொருள் இல்லை - (அச்சொற்களுக்குப்) பொருளில்லையாம், தொல் சிறப்பின் - தொன்றுதொட்டு வரும் சிறப் பினையுடைய, ஒள்பொருள் ஒன்றே - (உடையானுக்கு) ஒளியைத் தரும் பொருளும், தவம்-தவமும், கல்வி - கல்வியும், ஆள்வினை - மு யற்சியும், என்ற இவற்றுன் - என்று சொல்லப்பட்ட இவற்றினுலே, குலம் ஆகும் - குடிப்பிறப்பின் மேன்மை யுண்டாகும், எ-று.

பொ-ரை. உயர்குடிப் பிறப்பென்றும் இழிகுடிப் பிறப்பென் றும் சொல்லுதலினளவல்லாமல் அச்சொற்களுக்குப் பொருளில் யாம். தொன்றுதொட்டு வரும் சிறப்பினையுடைய, (உடையானுக்கு) ஒளியைத்தரும் பொருளும், தவமும், கல்வியும், முயற்சியும் என்று

சொல்லப்பட்ட இவற்றினுலே குடிப்பிறப்பின் மேன்மையுண்டாகும் என்பது:

இதனுல் பொருண் முதலியவற்றினுண்மை யின்மைகளின்உயர் விழிவுகளைக் கூறியவாருயிற்று. ஆகவே இவற்றினின்மையால் நல்ல குலத்தா னிவமதிப்பையும் இவற்றினுண்மையால் தீயகுலத்தான் நன்கு மதிப்பையும் பெறுவாரென்பது கருத்தாகக் கொள்க. இதுபற்றியே முயற்கோடு, தன்னுரிக்குடரென்பன போலப் பொருளில்லே யென்றும், ஆள்வினையால் பொருளும், கல்வியறிவால் தவமும் பெறப்படுவனவாதலால் காரியக் காரணங்களை எதிர்நிர னிறையாக வைத்துங் கூறினர். தொல் சிறப்பாவது படைப்புத் தொடங்கி யாவராலும் மேன்மையாகக்கொள்ளப்படுதல். ஒண்மையைத்தருவதனை ஒண்பொருளென்றது ஒர்மாபுவழுவமைதி. ஒன்ரே என்பது எண்ணிடைச் சொல். என்ற என்னும் பெயரெச்சம் ஈறு தொகுக்கப்பட்டது.

To say (that one is of a) good family or low family is mere a form of speach, but has no real meaning. That one is of a good family is determined not by ancestral possessions but by self denial, learning and persevering energy. (5)

196. ஆற்றுந் துணையு மறிவினை யுள்ளடக்கி
யூக்க முரையா ருணர்வுடையா—ரூக்க
முறுப்பினு லாராயு மொண்மை யுடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு.

இ-ள். ஊக்கம் - (பிறர் மேற்கொண்ட) முயற்சியை, உறுப்பினுல் - (அவருடைய முகங் கண் ஆகிய) அவயவங்களால், ஆராயும் - ஆராய்ந்தறியவல்ல, ஒண்மைஉடையார் - நல்லறிவுடையாரது, குறிப்பின் - கருத்துக்கு, கீழ்ப்பட்டது - பணிந்து நடப்பர், உலகு - உலகத்தார், (ஆதலால்) உணர்வு உடையார் - பேரறிவுடையார், ஆற்றும் துணையும் - செய்துமுடிக்கு மளவும், அறிவினை - மூடிக்கு முபாயங்களை, உள்ளடக்கி - புறத்தே தோன்றுமல் வைத்து, ஊக்கம் - (தம் முடைய) முயற்சியை, உரையார் - (தம் முகமுதலியவற்றினும்) வெளிப்படுத்தார், எ - று.

பொ-ரை. பிறர் மேற்கொண்ட முயற்சியை அவருடைய முகங் கண் ஆகிய அவயவங்களா லாராய்ந்தறியவல்ல நல்லறிவுடையாரது குறிப்புக்குப் பணிந்து நடப்பவ ருலகத்தார். ஆதலால் பேரறிவுடையார் செய்துமுடிக்குமளவும் முடிக்கு முபாயங்களைப் புறத்தே தோன்றுமல்வைத்துத் தம்முடைய முயற்சியைத் தம்முக முதலியவற்றினும் வெளிப்படுத்தார் என்பது.

அறிவென்னுங் காரணத்தின் பெயர் உபாயமாகிய காரியத்துக்கும், ஒண்மையென்னுங் காரியத்தின் பெயர் நல்லறிவாகிய காரணத்துக்கும் ஆயின. முகமுதலியன முகம், கண், வடிவு, தொழில், கொல் முதலாயின. உரையாமை வெளிப்படுத்தாமையின் மேல்தம் ஒண்மையுடையார் குறிப்பின்கீழ்ப்பட்ட தலகாதலின் தாம் மேற்கொண்ட தொழிலை அவரறிவாராயின் ஒருகாலத்து இடையூறுசெய்தலுங்கூடும்; அதுபற்றி 'அறிவினை வுள்ளடக்கி யூக்கமுடையா ருணர்வுடையார்' என்றார்.

Men of understanding keep to themselves their designs without revealing them till the time for action comes. The world is subject to the nods of the brilliant men who are able to understand other men's motives and designs by their outward indications, and act thereon. (6)

197. சிதலை தினப்பட்ட வால மரத்தை
மதலையாய் மற்றதன் வீழ்ஞன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிற்றன் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்.

இ-ள். சிதலை - செல்லினால், தின்னப்பட்ட - அரிக்கப்பட்ட, ஆலமரத்தை - ஆலமரத்தினை, அதன்வீழ் - அதனது விழுது, மதலை ஆய் - தாங்குவதாகி, ஊன்றினால் ஆங்கு - (அருகில்) ஊன்றி நின்றாற் போல, தந்தைகண் - தந்தையாகிய ஒருவனிடத்து, குதலைமை - அறியாமைக்குற்றம், தோன்றின் - உண்டாயின், தான்பெற்ற புதல்வன் - தான்பெற்ற புத்திரன், மறைப்ப - (தன்முயற்சியால்) மறைப்பதினால், கெடும் - தோன்றுததாகும், எ-று.

பொ-ரை. செல்லினால் அரிக்கப்பட்ட ஆலமரத்தினை அதனது விழுது தாங்குவதாகி அருகில் ஊன்றிநின்றாற்போல, தந்தையாகிய ஒருவனிடத்து அறியாமைக் குற்றம் உண்டாயின் தான்பெற்ற புத்திரன் (தன் முயற்சியால்) மறைப்பதினால் தோன்றுததாகும் என்பது.

மதலை - தூண். வீழ் தொழிலாகுபெயர். குதலைமை மழலைச் சொல்லின் தன்மை; அது அறியாமைக்காயிற்று. புதல்வன் முயற்சியுடையனாகியிருப்பானாயின் அவன் தந்தையினது அறியாமையாலாகிய குற்றம் தன்னேர்ப்பேசுவாரின்றி மறையுமென்பது கருத்து. இதனால் முயற்சியினது சிறப்புக் கூறப்பட்டது. மறைப்ப என்றது இலக்கணை.

When the trunk of a banyan tree is eaten away by the white ants, its *branch-roots* bear it up like a buttress. Even so when decay appears in the father, his son shall hide it and the weakness is no more. (7)

198. ஈனமா யில்லிருந் தின்றி விளியினு
மானந் தலைவருவ செய்பவோ—யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றா
ளரிமா மதுகை யவர்.

இ-ள். யானை – பெரிய யானையினது, வரிமுகம் – புள்ளியுள்ள முகத்தை, புண்படுக்கும் – புண் செய்யவல்ல, வள் உகிர் – கூர்மையாகிய நகங்களுள்ள, நோன் தாள் – வலியமைந்த கால்களையுடைய, அரிமா – சிங்கத்தினை ஒத்த, மதுகையவர் – (பெருமுயற்சி செய்யவல்ல) வலியையுடையார், ஈனம் ஆய் – (பொருள்) இல்லாராகி, இல் இருந்து – இல்வாழ்க்கையிலிருந்து, இன்றி –(உணவு) இல்லாமல், விளியினும் – இறக்கினும், மானம் – பழியாகிய குற்றம், தலைவருவ – தம்மிடத்து அடையத்தகும் சிறுமுயற்சிகளை, செய்பவோ – செய்ய வுடன்படுவாரோ உடன்படார், எ-று.

பொ-ரை. பெரிய யானையினது புள்ளியுள்ள முகத்தைப் புண் செய்யவல்ல கூர்மையாகிய நகங்களுள்ள வலியமைந்த கால்களை யுடைய சிங்கத்தினையொத்த பெருமுயற்சி செய்யவல்ல வலியுடையார்பொருளில்லாராகி இல்வாழ்க்கையிலிருந்து உணவில்லாமல் இறக்கினும் பழியாகிய குற்றந் தம்மிடத்து அடையத்தகும் சிறுமுயற்சிகளைச் செய்ய வுடன்படுவாரோ உடன்படார் என்பது.

ஈனம் இன்மையின்மேல் நின்றது. வருவ இடவழுவமைதி. அரிமா புண்படுக்குமென்றமையால் மக்களால் போற்றப்படும் யானையன்றென்பது விளங்குதலால் வரி புள்ளிக்காயிற்று. புள்ளிதக்கவயதிலுண்டாகுவது. கோலமெழுதியவெனப் பொருள்கொள்ளின் அது மலைமுதலிய இடங்களிலுள்ள யானைகளுக்குப் பொருந்தாமையறிக. பொருளில் இல்லிருந்தின்றி விளியினு மென்றதற்கேற்ப உவமையில் குகையிலிருந்து உணவின்றி இறக்கினு மென்றும், உவமையில் யானை வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றா ளென்றதற் கேற்பப் பொருளில் பெருமுயற்சியைச் செய்துமுடிக்கும் கூரறிவும், தக்க உபாயமு முடையாரென்றும் விரித்துரைக்க. மேன்மக்களை வறுமை யாஎ உணவின்றி உயிர் நீங்குவதாயினும் சிறுமுயற்சிசெய்து வாழா ரென்பது கருத்து.

The lion with its pointed and fearful claws will wound the spotted face of the mighty Elephant. Those who have power like the lion's tho' bereft of all will die in want in their home. Will they do deeds that will bring them dishonour?

199. *தீங்கரும் பின்ற திரள்கா லுளேயலரி*
தேங்கமழ் நாற்ற மிழந்தா அங் கோங்கு
மூயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை.

இ - ள். *தீங்கரும்பு* - மதுரமாகிய கரும்பினால், *ஈன்ற* - பெறப் பட்ட, *திரள்கால்* - திரண்டகாலையுடைய, *உளேஅலரி* - (சிங்கத்தின்) பிடர்மயிரை ஒத்தமலர், *தேன் கமழ்* - இனிதாக மணக்கின்ற, *நாற் றம்* - மணத்தை, *இழந்தால்* அங்கு - இழந்தாற்போல, *பெயர்பொறிக் கும்* - (அறிவுடையோரால்) தன்பெயரை எழுதி வைப்பதற்குரிய, *பேராண்மை* - (பிறர் செய்தற்கு) அருமையாகிய முயற்சிகளைச் செய் தல், *இல்லாக்கடை* - இல்லாவிடத்து, *ஓங்கும் உயர்குடியுள்* - மிக உயர்ந்த குடியில், *பிறப்பின்* - (ஒருவன்) பிறந்ததனால், *என் ஆம்* - யாதுபயன் ஆகும், *எ-று.*

போ-ரை. மதுரமாகிய கரும்பினால் பெறப்பட்ட திரண்டகாலை யுடைய சிங்கத்தின் பிடர்மயிரை யொத்தமலர் இனிதாக மணக்கின்ற மணத்தை யிழந்தாற்போல, அறிவுடையோரால் தன்பெயரையெழுதி வைப்பதற்குரிய பிறர் செய்தற்கு அருமையாகிய முயற்சிகளைச் செய்தல் இல்லாவிடத்து மிக வுயர்ந்த குடியிலொருவன்பிறந்ததனால் யாது பயனுகும் என்பது.

திரள்காலுளே என உவமையை விசேடித்தமையால் பொருளுக் குக் கண்ணுக் இனிதாகத் தோற்றும் தோற்றமுடைமை கொள்க. பேராண்மை அருமையாகிய முயற்சிகளைச் செய்தலென்பது "நயக் கும் பேராண்மை யொன்றே நாட்டியவருமை செய்தல்" என்னும் நிகண்டாலு முணர்க. ஓங்குமுயர் ஒருபொருட் பன்மொழி. பொறிக்கு மென்னும் காரியப் பொருட்டாகிய பெயரெச்சம் தன் காரணமாகிய பேராண்மை யென்னும் பெயர்கொண்டது. ஒருவன் அருமைசெய்த வினையின் உயர்குடிப் பிறப்பாலும், கண்ணுக்கினிய தோற்றத்தா லும் பயனில்லையென்பது கருத்து.

If the flower on a rounded stalk, with the filaments that sweet cane bears has lost its fragrance, of what use is it? So

also of what use is it to a man if he be of a very noble family but has not got the energy that makes the name of the family noteworthy? (9)

200. பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்
கருணைச்சோ றூர்வர் கயவர்—கருணையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும்.

இ-ள். பெருமுத்தரையர் - (ஈகையிற்சிறந்த) பெருமுத்தரையரென்னுஞ் சிறப்புப் பெயருடையார், பெரிது உவந்து - சிறிதும் வெறுப்பின்றி, ஈயும் - ஈகின்ற, கருணைச் சோறு - பொரியலோடு கூடிய சோற்றை, ஆர்வர் - உண்பர், கயவர் - கீழ்மக்கள், கருணையை - அப்பொரிக்கறியை, பேரும் - பெயரினையும், அறியார் - அறியாதவராய், நனிவிரும்பு - மிகுதியும் விரும்பிச் செய்கின்ற, தாளாண்மை - முயற்சியாற் கிடைத்த, நீரும் - சோற்றோடுகூடிய நீரும், அமிழ்து - அமுதம்போல, (அவருக்கு) ஆய்விடும் - சுவையுடையதாகவே யிருக்கும், எ-று.

பொ-ரை. ஈகையிற் சிறந்த பெருமுத்தரையரென்னுஞ் சிறப்புப் பெயருடையார் சிறிதும் வெறுப்பின்றி ஈகின்ற பொரியலோடு கூடியசோற்றை உண்பர் கீழ்மக்கள். அப்பொரிக் கறியைப் பெயரினும் அறியாதவராய் மிகுதியும் விரும்பிச் செய்கின்ற முயற்சியாற் கிடைத்த சோற்றோடு கூடிய நீரும் அமுதம்போல அவருக்கு சுவையுடையதாகவே யிருக்கும் என்பது.

இச்செய்யுள் செய்த ஆசிரியர் காலத்துப் பெருஞ் செல்வத்தினராய் ஈகையிற்சிறந்த ஒருவர் இருந்தனராகல் வேண்டும். அவருடைய கொடைச் சிறப்புப்பற்றி அவர்க்குப் பெருமுத்தரையரெனச் சிறப்புப் பெயர் வழங்கியது போலும். இப்பெயர் மூப்பதாம் அதிகாரத்தில் ஆறாவது செய்யுளாலுங் கூறுதல் காண்க. சொற்றுக் பொருள் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு ஆகிய பெரிய மூன்று நிலங்களுக்கும் தலைவரென்பது. சோற்றோடு கூடிய நீரை மிகுதிபற்றி நீர் என்றார். "நீருண்டார் நீரான்வாய்ப் பூசுப" வென்பதில் முதலிலுள்ள நீர் இப்பொருள்படல் காண்க.

The base feed on the food of different flavours supplied by the lords of the triple lands. Whereas men of energy that never know what rich meal is, will consider as ambrosia the water won by them with strenuous toil. (10)

Chapter XXI—The support of Kindred

21-ஆம் அதிகாரம்: சுற்றந்தழால்.

அஃதாவது உறவினரை நீங்காதவகைத் தழுவுதலே யுணர்த்துவது. சுற்றமென்பது பிறப்பு முறையாலாகிய இயற்கை நட்பினையும், முன்செய்த உதவிபற்றி வரும் செயற்கை நட்பினையும். மேற் கூறிய தாளாண்மையிற் கைகூடித்த பொருளைப் பெற்றதனால் பெறும் பயன் இதுவாதலால் தாளாண்மையின் பின் வைக்கப்பட்டது. தழா லென்பதில் ஆல் புடைபெயர்ச்சி விகுதி.

201. வயாவும் வருத்தமு மீன்றக்கா லேவுங்
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாஅங்
கசாஅத்தா னுற்ற வருத்த மூசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

இ-ள். தாய் - தாயானவள், வயாவும் - கருவினுலடைந்த வருத்தத்தையும், வருத்தமும் - (பெறுங்காலத்தடைந்த) வருத்தத்தையும், ஈன்றக்கால் நோவும் - பெற்றபின் (அடைந்த) வருத்தத்தையும், கவான் - தன் தொடையின்மேலுள்ள, மகன் கண்டு - புத்திரனைக் காணுகின்று, மறந்தால் ஆங்கு - மறந்தாற் போல, அசா - (முயற்சி முடியாமையாலாகிய) தளர்ச்சியால், தான் உற்ற - (ஒருவன்) தான் அடைந்த, வருத்தம் - வருத்தமானது, ஊசா - ஆராய்தலில் மிக்க, தன் கேளிரை - தன் உறவினரை, காண - காணுதலால், கெடும் - நீங்குவான், எ-று.

பொ-ரை. தாயானவள் கருவினுலடைந்த வருத்தத்தையும், பெறுங்காலத்தடைந்த வருத்தத்தையும், பெற்றபின் அடைந்த வருத்தத்தையும் தன் தொடையின்மேலுள்ள புத்திரனைக் காணுகின்று மறந்தாற்போல, முயற்சி முடியாமையாலாகிய தளர்ச்சியால் ஒருவன் தானடைந்த வருத்தமானது ஆராய்தலில் மிக்க தன் உறவினரைக் காணுதலால் நீங்குவான் என்பது.

உசா ஆராய்தலாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொல்; "உசாவே சூழ்ச்சி" என்பதனாலுமுணர்க. வயா கருப்பம், அது தன்னுலாம்வருத்தத்திற்குக் காரணமாகலால் காரணவாகுபெயர். தான்வருத்தங் கெடுமென்பது திணை வழுவமைதி. கேளிர் பண்படியாகப் பிறந்த பல்லோர் படர்க்கைப்பெயர், கேள் பகுதி, இர் பல்லோர் படர்க்கை விகுதி. இவ்விகுதி புத்தேளிர், மகளிர் என்பனவற்றிலுங் காண்க.

Just as the mother when she sees her son upon her lap, forgets the langours, the pains and the throes of birth, so the trouble a man is undergoing will disappear when he sees his relations around him. (1)

202. அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கிப்–பழுமரம்போல்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகிற்குக் கடன்.

ஓ-ள். அழல் - வெயிலினது வெப்பம், மண்டு போழ்தின் - மிக்க காலத்தில், அடைந்தவர்கட்கு எல்லாம் - (தன்னை விரும்பி) அடைந்தவர்களுக்கெல்லாம், நிழல் மரம்போல் - (வெயில் வெப்பத்தைத் தான்தாங்கிச் சமனாக) நிழலைத்தருகின்ற ஆலமரத்தைப்போல, நேரொப்ப - சமனாக, தாங்கி - (தன்னையடைந்த பலர் குடும்பபாரத்தை) ஏற்றுக்கொண்டு, பல்லார் - அப்பலரும், பயன்துய்ப்ப - (தான்பெற்ற) செல்வத்தை அநுபவிக்கும்படி, பழுமரம் போல் - (தன் கனிகளைப் பல பறவைகளும் தன்னிலிருந் துண்ணநிற்கும்) அவ்வாலமரம்போல, தான்வருந்தி - (முயற்சியால் வருந்துன்பத்தால்) தான் வருத்தமுற்று, வாழ்வதே - உயிர் வாழ்வதே, நல் ஆண்மகற்கு - நற்குணமுள்ள ஆண்மை யுடையானுக்கு, கடன் - கடமை, எ-று.

போ - ரை. வெயிலினது வெப்பம் மிக்க காலத்தில் தன்னை விரும்பி யடைந்தவர்களுக்கெல்லாம் வெயில் வெப்பத்தைத் தான் தாங்கிச் சமனாக நிழலைத் தருகின்ற ஆலமரத்தைப்போல, சமனாகத் தன்னை யடைந்த பலர் குடும்ப பாரத்தை யேற்றுக்கொண்டு, அப் பலரும் தான்பெற்ற செல்வத்தை யநுபவிக்கும்படி, தன் கனிகளைப் பல பறவைகளுந் தன்னிலிருந் துண்ணநிற்கும் அவ்வாலமரம்போல, முயற்சியால் வருந்துன்பத்தால் தான் வருத்தமுற்று உயிர் வாழ்வதே நற்குணமுள்ள ஆண்மை யுடையானுக்குக் கடமையென்பது.

குளிர்ந்த வினிநிழலைத்தருவது வேறின்மையால் நிழன் மரமென் றது ஆலமரத்தை. ஆதலின் பழுமரம் சுட்டுப்பெருவாதா நின்றது. பழுமரம் பழுத்தலையுடைய மரமென்பது பொருள். இது மிகுதிபற்றி வந்தபெயர். நேரொப்ப ஒருபொருட் பன்மொழி. அதிகாரத்தால் சுற்றார் உறவினருக்காயிற்று.

The duty of a good man is that he should afford shelter to his people like the tree which welcomes those that seek its

shelter during the hot part of the day, and that he should be of use to many and if necessary subject himself to some inconvenience like the fruit-trees. (2)

203. அடுக்கன் மலைநாட தற்சேர்ந் தவரை
யெடுக்கல மென்னுர் பெரியோ—ரடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினு மில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

இ-ள். அடுக்கல் - அடுக்கலாகிய, மலைநாட - மலையைச் சார்ந்த நாட்டானே, தன் சேர்ந்தவரை - தம்மைச் சார்ந்த உறவினரை, எடுக்கலம் - நாம் தாங்கோம், என்னுர் - என்று சொல்லி நீக்கார், பெரியோர் - மேன்மக்கள், அடுத்து அடுத்து - மிகுதியும் நெருங்கி, வல்காய் - வன்மையாகிய காய்கள், பலபல காய்ப்பினும் - பலபல காய்த்தாலும், தன்காய் - தன்னுடைய அக்காய்களே, பொறுக்கலாத - தாங்கமாட்டாத, கொம்பு இல்லை - கொம்பு இல்லை, எ-று.

பொ-ரை. அடுக்கலாகிய மலையைச் சார்ந்த நாட்டானே! தம்மைச் சார்ந்த உறவினரை நாம் தாங்கோம் என்று சொல்லி நீக்கார் மேன்மக்கள். மிகுதியும் நெருங்கி வன்மையாகிய காய்கள் பல பல காய்த்தாலும் தன்னுடைய அக்காய்களைத் தாங்கமாட்டாத கொம்பு இல்லை என்பது.

அடுக்கன்மலை இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலை. னுள்ள அடுக்கு இடைவிடாமைப் பொருளது. பின்னுள்ளது மருதிப்பொருளது. காயினது அடைமொழியாகிய வன்மை, பொருளில் சேர்ந்தவருடைய வறுமையின் மிகுதியை யுணர்த்திற்று. உவமையின் ஆற்றலால் தம் வருத்தத்தை நோக்கா ரென்பதாயிற்று. பெரியோர் தம் வருத்தத்தை நோக்கி உறவினரைத் தாங்காமலிரார் ரென்பது கருத்து.

Lord of the mountainous regions ! the great would not say "we will not bear the burdens of others". The branch of a fruit-bearing tree never gives way however heavy and numerous are the fruits thereon. (3)

204. உலகறியத் தீரக் கலப்பினு நில்லா
நிலபகலாஞ் சிற்றினத்தார் கேண்மை—நிலதிரியத
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றுணைத்தா
வொற்கமி லாளர் தொடர்பு.

இ-ள். சிறு இனத்தார் - கீழானவர், கேண்மை - (பிறரிடத்துக் கொள்ளும்) உறவுகள், உலகு அறிய - நம்நாட்டிலுள்ளார் யாவரும் அறியுமீபடி, தீர - (அகம்புறம்) முற்றும், கலப்பினும் - கலந்து நின்றாலும், நில்லர் - நிலைபெறுதனவாகி, சிலபகல் ஆம் - சிலநாளே நிற்கும், ஒற்கம் இல் ஆளர் - (பிறரைத்தாங்குவதில்) தளர்ச்சியின்மையை ஆளுதலுடையார், தொடர்பு - (கொள்ளும்) உறவு, நிலை - தவ நிலையில், திரியாமல் - வேறுபடாமல், நிற்கும் - நிற்கின்ற, பெரியோர் - மேலோர், நெறி - தவவொழுக்கத்தின், பயனே, அடைய - அடையும்படி, நின்றால் அனைத்து - (அவ்வொழுக்கத்தில்) நின்றாற்போல்வது, எ - று.

பொ-ரை. கீழானவர் பிறரிடத்துக்கொள்ளும் உறவுகள் தம் நாட்டிலுள்ளார் யாவரு மறியும்படி அகம்புறம் முற்றும் கலந்து நின்றாலும் நிலைபெறுதனவாகிச் சிலநாளே நிற்கும். பிறரைத் தாங்குவதில் தளர்ச்சியின்மையை ஆளுதலுடையார் கொள்ளும் உறவு தவ நிலையில் வேறுபடாமல் நிற்கின்ற மேலோர் தவ வொழுக்கத்தின் பயனை அடையும்படி அவ்வொழுக்கத்தில் நின்றாற்போல்வது என்பது.

பெரியார் சுற்றந் தழுவுதலின் நிலைமை இதனால் கூறப்பட்டது. அனையதென்னும் ஒன்றன்படர்க்கைக் குறிப்புமுற்றில் அகரந் தொகுக்கப்பட்டமையால் தகரமிக்கது. உலகு "உத்தான பாதனரு ளுரோம பத னென்றுளனவ் வுலகை யாள்வோன்" என்பதிற்போல நாட்டுக் காயிற்று. பயனே நெறி என்றார்; பின்னுண்டாவதாதலால். பெரியார் கேண்மை இழிப்பினால் பன்மைப்பாலாயிற்று.

The friendship of the little, though mingled in such great intimacy as all know of it, will last but for a little time. Whereas the friendship with the firm, unyielding men will last to the very last day. (4)

205. இன்ன ரினைய ரெமர்பிற ரென்னுஞ்சொ
லென்னு மிலரா மியல்பினுற்—றுன்னிக்
தொலைமக்க டென்பந்தீர்ப் பாரேயார் மாட்டுந்
தலைமக்க ளாகற்பா லார்.

இ-ள். இன்னர் - இத்தன்மையர், இனையர் - இவ்வளவினர், எமர் - உறவினர், பிறர் - அயலார், என்னும் சொல் - என்றிச் சொல்லப்படுஞ் சொல், என்னும் - சிறிதும், இலர் ஆம் - இல்லாராகிய, இயல்பினால் - தன்மையினால், துன்னி - தாம் சேர்ந்து, தொலைமக்

கள் - வலியிழந்த மனிதரது, துன்பம் தீர்ப்பாரே - துன்பத்தை நீக்க வல்லவரே, யார்மாட்டும் - பகைவர் அயலாரிடத்தும், தலைமக்கள் - மேன்மக்கள், ஆகல்பாலார் - ஆகுதலாகிய பான்மையுடையார். எ-று.

பே-ஈ. இத்தன்மையர், இவ்வளவினர், உறவினர், அயலார் என்று சொல்லப்படுஞ் சொல் சிறிது மில்லாராகிய தன்மையினுல் தாஞ் சேர்ந்து, வலியிழந்த மனிதரது துன்பத்தை நீக்க வல்லவரே பகைவர் அயலாரிடத்தும் மேன்மக்கள் ஆகுதலாகிய பான்மையுடையார் என்பது.

இன்னர் நன்மைதீமைகளைப் பற்றியும், இனையர் நட்புப் பகைகளைப் பற்றியும், எமர் குலத்தைப் பற்றியும், பிறர் இவை யொன்றுமின்மைபற்றியும் நின்றன. என்னென்னும் ஒன்றன்பட்டர்க்கை வினுப் பெயர் முற்றுப் பொருளோடு இழிவு சிறப்புப் பொருளதாகியே உம்மையைப் பெற்றமையால் சிறுமைக்காயிற்று. சொல் சிறிது மிலரெனவே அதற்குக் காரணமாகிய கருதலு மிலரென்பதாயிற்று. பகைவர் வறுமை முதலியவற்றாலும் தொலைவு வருமாதலால் பொதுப்படத் 'தொலைமக்கள்' என்றும், பகைமையையும், ஏதின்மையையும் பாராட்டாமல் துன்பந் தீர்த்தபின் அதுபற்றி அவர்களால் தலைமக்களெனக் கருதப்படுதலால் ஆகற்பாலாரென ஆக்கவினை தந்துங் கூறினர். துன்னி என்னும் வினையெச்சம் தீர்ப்பாரென்னும் வினைப்பெயர் கொண்டது. எ - பிரிநிலை.

Those that are worthy of being classed as the chief of men never say, "Such are these! these are ours, those are strangers". It is not their nature to say so. But they, without making any difference, relieve the sufferings of all that look to them for help. (5)

206. பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்க
லக்காரழ் பாலோ டமரார்கைத் துண்டலி
னுப்பிலிப் புற்கை யுயிர்போல் கிளைஞர்மாட்
டுக்கலத் தாறு மினிது.

இ-ள். பொன் கலத்து - பொன்னுற் செய்த பாத்திரத்தில், பெய்த - இட்ட, புலியுகிர் - புலியினதுநகம்போலும், வால்புழுக்கல் - வெண்மையாகிய சோற்றை, அக்காரம் ஒடு - சர்க்கரையோடு, பாலோடு - பாலோடும், அமரார்கைத்து - உள்ளன்பில்லாரிடத்தி உண்டலின் - உண்ணுதலினும், உயிர்போல் - உயிர்போன்ற, கிளைஞ

மாட்டு - உறவினரிடத்து, எக்கலத்து ஆனும் - கரபாத்திரத்திலாயினும், உப்பு இலி - உப்பில்லாததாகிய, புற்கை ஊ நொய்க்கஞ்சியை உண்ணல், இனிது - இனிமை தருவதாகும், எ-று.

பொழிப்புரை. பொன்னாற்செய்த பாத்திரத்திலிட்ட புலியினது நகம்போலும், வெண்மையாகிய சோற்றைச் சருக்கரையோடும், பாலோடும், உள்ளன்பில்லாரிடத்து உண்ணுதலிலும், உயிர்போன்ற உறவினரிடத்து சரபாத்திரத்திலாயினும் உப்பில்லாததாகியநொய்க் கஞ்சியை யுண்ணல் இனிமை தருவதாகும் என்பது.

புழுக்கல் தொழிலாகுபெயர். அமரார் எதிர்மறை வினைப்பெயர்; அமர்தல்-விரும்பல். உண்டலினென்னும் ஐந்தனுருபு உறழ்பொருளில் வந்தது; உறழ் பொருள் மாறுபடக் கூறப்படுவது. கைத்து பகுதிப் பொருளதாகிய தொழிற்பகுதி பெற்றபெயர்; பொருள் வசம். உப்பிலி பண்படியாகப் பிறந்த ஒன்றன்படர்க்கைப்பெயர்; உப்பில் பகுதி, இ ஒன்றன்படர்க்கை விகுதி. போல் வினைத்தொகையாதலால் ஈகாரம் தொகுதியாதியல்பாயிற்று. ஆன் ஆயினென்பதன் மரூஉ. மானங்கெடாமையின் புற்கையுண்ணல் இனிதாயிற்று.

It is better to share the poor meal served in an ordinary plate by the sympathetic kinsmen, than to feast along with the loveless people, even though the meal is rich and served on plates of gold. (6)

207. நாள்வாய்ப் பெறினுந்தந் நள்ளாதா ரில்லத்து
வேளாண்மை வெங்கருணை வேம்பாகுங்—கேளா
யபராணப் போழ்தி னடகிடுவ ரேனுந்
தமராயார் மாட்டே யினிது.

இ-ள். கேளாய் - நீகேள், தம் நள்ளாதார் - தம்மை (அகத்தில்) நட்புக்கொள்ளாதது, இல்லத்து-வீட்டில், வேளாண்மை - (அவரால்) ஈயப்பட்டதாகிய, இவம் - (கண்டோர்க்கு) விருப்பத்தைத் தருகின்ற, கருணை-பொரிக்கறியை, நாள்வாய்-முற்பகலில், பெறினும்-(உண்ணப்) பெற்றாலும், வேம்பு ஆகும் - (அறிவுடையார்க்கு) வேம்பின் விதை போலினிதாயிராது, அபராணப்போழ்தில் - பிற்பகலில், அடகு இடுவர் ஏனும் - இலைக்கறியை இடுவாராயினும், தமர் ஆயார் மாட்டே - (அகத்தில்) உறவாயினரிடத்தே, இனிது - (அது) இனிமையுடையது, எ-று.

பொ-ரை. நீ கேள்! தம்மை யுடைத்தில் நட்புக்கொள்ளாரது வீட்டில் அவரா லீயப்பட்டதாகிய கண்டோர்க்கு விருப்பத்தினைத் தரு கின்ற பொரிக்கறியை முற்பகலி லுண்ணப்பெற்றாலும் அறிவுடை யார்க்கு வேம்பின் விதைபோ லினிதாயிராது. பிற்பகலில் இலைக் கறியை யிவராயினும் அகத்தில் உறவாயினரிடத்தே அது இனி மையுடையது என்பது.

பின்னே அபாரணப்போழ்தி னென்றமையால் காள் சிறந்த முற்பகலுக் காயிற்று. பெறுதல் இடுதல்களி னின்மையை யுணர்த்த லால் உம்மைகள் எதிர்மறைப் பொருளன; மூறையே உயர்வு சிறப்பு இழிவு சிறப்பாக்கினும் பொருந்தும். கருனே அடகு உணவின் மேன்மை யிழிவுகளே யுணர்த்தவந்த குறிப்புச்சொற்கள். ஏ பிரிநிலை.

Hear me! Even though you get a very good meal in time in your enemy's house, it will be bitter like margosa. But on the other hand, the poor meal served in one's sympathetic kinsmen's house, though not in time, will be sweet. (7)

208. முட்டிகை போல முனியாது வைகலுங்
கொட்டியுண் பாருங் குறடுபோற் கைவிடுவர்
சுட்டுக்கோல் போல வெரியும் புகுவரே
நட்டா ரெனப்படு வார்.

இ-ள். முட்டிகை போல - (இரும்பைத் தாக்குகின்ற) சுத்தி போல, வைகலும் - சேர்ந்திருக்கும் நாளெல்லாம், முனியாது - அன்புகாட்டி, கொட்டி - (இன்னது வேண்டுமென) வருத்தி, உண் பாரும் - (வரங்கி) உண்ணும் இயல்பினரும், குறடுபோல்-குறட்டைப் போல, கைவிடுவர் - (தீங்கு நேரிட்ட விடத்து) விட்டு நீங்குவர், நட்டார் எனப்படுவார் - நட்பினரென்று சொல்லப்படுவர், சுட்டுக் கோல் போல - உலையாணிபோல, எரியும் புகுவர் - (தம்மால் நட்புச் செய்யப்பட்டார் தீப்புகுவராயின் தாமும் அவரோடு) தீயினும் புகு வார், எ-று.

பொ-ரை. இரும்பைத் தாக்குகின்ற சுத்திபோல, சேர்ந்திருக் கும் நாளெல்லாம் அன்புகாட்டி இன்னது வேண்டுமென வருத்தி வரங்கி யுண்ணு மியல்பினரும் குறட்டைப்போலத் தீங்கு நேரிட்ட விடத்து விட்டு நீங்குவர். நட்பினரென்று சொல்லப்படுவர் யாணிபோலத்தம்மால் நட்புச் செய்யப்பட்டார் தீப்புகுவராயின்த அவரோடு தீயினும் புகுவார் என்பது.

மூன்னுள்ளபோல என்னுஞ் செயவெனைச்சம் கொட்டி என்னும் விணைகொண்டது. உவமைகள் தொழிலுவமைகள். குறடு போலுதலாவது அது இரும்பைப்பற்றி நின்று, அவ்விரும்பு தீயை யடைந்தபோது விட்டு நீங்குதல்போல, கூடா நட்பினர் துன்பம் வரு முன்னெல்லாம் ஒருவரைப்பற்றி நின்று, அவர் ஒரு துன்பத்தை யடைந்தபோது விட்டு நீங்குதல். சுட்டுக்கோல் கொல்லனுக்குத் தீயினில் வைத்தபொருள் பதமானதையும் ஆகாததையும் அவனுணர் தற்கு மேலுள்ள கிட்டம், கரி முதலியவற்றை நீக்கிக் காட்டுதற்குரிய கோல், இது இரண்டாம் வேற்றுமைத்தொகை, சுட்டதலேயுடைய கோலெனவிரியும்; சுட்டு முதனிலைத் தொழிற்பெயர். உண்ணுதலின் சிறப்பைக் குறித்தலால் உண்பாருமென்னும் உம்மை உயர்வு சிறப்பு. எரியுமென்னும் உம்மை நட்பினர் வற்றமைத் துன்பமடைந்தபோது அத்துன்பத்தை அடைந்ததுமன்றி எனப்பொருள்தரலால் இறந்தது தழீஇய எச்சவும்மை.

The untrustworthy who, like hammer knock us down and squeeze out of us something for their livelihood every day, will in time of trouble leave us to ourselves, like the pincers, whereas the worthy friends will share our troubles like the smith's poker. (8)

809. *நறுமலர்த் தண்கோதாய் நட்டார்க்கு நட்டார்*
உறுமையுஞ் செய்வதொன் றுண்டோ—விறுமளவு
மின்புறுவ தின்புற் றெழீஇ யவரோடு
துன்புறுவ துன்புறுக் கால்.

இ-ள். நறுமலர் – நன்மண மமைந்த மலர்களாற் றொடுக்கப் பட்ட, தண்கோதாய் – குளிர்ச்சியாகிய மாலையை யணிந்தவளே, நட்டார் – உறவினரொருவர், இறும் அளவும் – (தாம்) உயிர் மூடியு மளவும், அவரோடு எழீஇ – (தம்மால்) உறவு செய்யப்பட்டவரோடு பிரி யாதிருந்து, இன்பு உறுவது – இன்பமடையுங் காரியத்தில், இன்பு உற்று – (ஒக்கத் தாமும்) இன்பத்தை அடைந்து, துன்பு உறுவ – துன்பமடையுங் காரியங்களில், துன்பு உறுக்கால் – துன்பத்தை அடையாவிடின், நட்டார்க்கு – அவ்வுறவினர்க்கு, உறுமையும் – மறு மையிலும், செய்வது ஒன்று – செய்வதாகிய ஒருதன்மை, உண்டோ – உளதோ இல்லை, எ-று.

பொ-ரை. நன்மண மமைந்த மலர்களாற் றொடுக்கப்பட்ட குளிர்ச்சியாகிய மாலையை யணிந்தவளே! உறவினரொருவர் தாம்

யாரோடு செய்யும், தொடர்பு - நட்பு, என்றும் - செல்வம் பெருகிய காலத்தும், குருத்திற்கு - குருத்தினுக்கு, எதிர்செல - எதிர் செல்லும்படி, தின்ரூல் அன்ன - தின்ரூலொத்த, தகைத்து - தன்மையுடையது, எ-று.

பொ-ரை. ஒவ்வொரு செய்யுளின் கருத்துரையை மூன் அறிந்து பல நூல்களையுங் கற்றுத் தெளிந்தவரோடு செய்யும் நட்பு, செல்வஞ் சுருங்கியகாலத்துங் குருத்தினின்று நுனிப்பினைத் தின்ரூற்போலுந் தன்மையுடையது. இனிமைக் குணம் இல்லாமையை யாளுதலுடையாரோடு செய்யும் நட்பு செல்வம் பெருகியகாலத்துங் குருத்தினுக்கு எதிர் செல்லும்படி தின்ரூலொத்த தன்மை யுடையது என்பது.

கற்றறிந்தார் தமது நட்புவேண்டி வந்தவரது நற்குண நற்செய்கைகளை மூன்னறியாமை காரணமாகப் பொதுவான அன்புவிடமை பூற்றிக் 'குருத்தின்' என்றும், அக்குணச்செய்கைகளை அறியுந்தோறும் அவரிடத்து அன்பு பெருகி வருதலான் 'குருத்திற் றின்றற்று' என்றும், மதுரமிலாளர் தம்மை நட்டோர்க்கு முதலிற் காட்டிய அன்பு பின் சுருங்குத லியல்பாதலால் 'குருத்திற் கெதிர்செலத் தின்றன்ன தகைத்து' என்றுங் கூறினர். ஆதலால் ஆராய்ந்து கற்றுணர்ந்தார் கேண்மையைக் கொள்க என்பது கருத்து. எ-தேற்றம். ஐந்தனுருபு எல்லைப் பொருளது. நான்கனுருபும் அப்பொருளில் வந்தது. அரோ அசை.

Friendship with the learned who understand the significance of what they utter, is like eating the sugar cane from the tender-shoots downwards. Whereas the connection with the worthless is like eating the cane from the other end upwards.()

212. இற்பிறப் பெண்ணி யிடைதிரியா ரென்பதோர்
நற்புடைக் கொண்டமை யல்லது—பொற்கேழ்
புனலெழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று.

இ-ள். பொன்கேழ்-பொன்னிறம்போலும் நிறமுள்ள, புனல் - அருவிநீர், ஒழுக - விழுதலால், புள் இரியும்-பறவைகள் பறந்து நீங்குகின்ற, பூங்குன்ற நாட - பொலிவாகிய மலைநாட்டானே, இல் பிறப்பு - (ஒருவரது) உயர்குடிப்பிறப்பினை, எண்ணி - ஆராய்ந்தறிந்து, இடை திரியார் - (இவர் நட்புச் செய்தபின்) நடுவிலே வேறுபடார், என்பது என்று சொல்லப்படுவதாகிய, ஓர் நல்புடைகொண்டு - ஒரு நல்ல பட்

சத்தைப் பெற்று, அமை - (அவரோடு) நட்புக்கொள், அல்லது - இதை அல்லாமல், மனம் அறியப்பட்டது - மனமறியப்பட்ட பட்சம், ஒன்று அன்று - ஒரு பட்சம் அன்று, எ-று.

பே-ரை. பொன்னிறம்போலும் நிறமுள்ள அருவிநீர் விழுதலால் பறவைகள் பறந்து நீங்குகின்ற பொலிவுகிய மலைநாட்டானே! ஒருவரது உயர்குடிப் பிறப்பினை ஆராய்ந் தறிந்து இவர் நட்புச்செய்த பின் நடவிலே வேறுபடார் என்று சொல்லப்படுவதாகிய ஒரு நல்ல பட்சத்தைப் பெற்று அவரோடு நட்புக்கொள். இதை அல்லாமல் மனமறியப்பட்ட பட்சம் ஒரு பட்சம் அன்று என்பது.

இல் உயர்ந்ததன் மேலது. எண்ணி என்னும் வினையெச்சம் கொண்டென்னும் வினையெச்சங் கொண்டது. உயர்குடிப் பிறப்பினர் கருத்துஞ் சொல்லுஞ் செயலும் தம்முள் மாறுபடாமையால் இடை திரியாரென்பதை 'நற்புடை' என்றும், மற்றவர்க்குப் புறத்தில் சொல்லும், செயலும் ஒருவழிப்பட மனம் வேறுமாதலால், சொல் செயல்களைக்கொண்டு மனத்தினியல்பைத் துணிவது துணிபன்றென்பார் 'மனமறியப் பட்டதொன் றன்று' என்றுங் கூறினர். மலையிலுள்ள செந்தேனையும், நாணமலர்களின் பராகத்தையும் கொண்டு வருதலால் அருவிக்குப் பொற்கே ழுளதாயிற்று. அமையா யென்னும் ஏவலொருமை ஈறுகெட்டு நின்றது.

O Lord of the flowery hills wherefrom the birds are scared away by the rush of the waterfall! It is simply taken for granted that taking into consideration the nobility of their birth, they will not swerve from the right path. But to say that we know their minds, is not the right thing. (2)

213. யானே யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானே
யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

இ-ள். யானே - யானேயானது, அறிந்து அறிந்தும் - நெடுநாள் அறிந்திருந்தும், பாகனையே - (தன்னெடுபழகிய) பாகனையே, கொல்லும் (தனக்கொரு குற்றஞ்செய்வானாயின்) கொலைசெய்யும் நாய் - நாயானது, எறிந்தவேல் - (தன்னெடு பழகினவன்) வீசிய வேலை யானது, மெய்யதாக - தன் உடலில் தைத்ததா யிருக்கையில், வால் குழைக்கும் - (அன்பின் குறியாக) வாலை வளைத்தாட்டா நிற்கும்,

(ஆதலால்) யானை அனையவர் - யானையை யொத்த இயல்பினரது, நண்பு ஓரீஇ-நட்பைக் கீக்கி, நாய் அனையார் - நாயையொத்த இயல்பினரது, தேண்மை - நட்பை, கேழீஇக் கொள்ளல்வேண்டும் - தழுவிக் கொள்ளல் வேண்டும், எ-று.

பொ-ரை. யானையானது நெடுநாள் அறிந்திருந்தும் தன்னை பழகின பாகனையே தனக்கொரு குற்றஞ் செய்வானாயின் கொலை செய்யும். நாயானது தன்னை பழகினவன் வீசிய படையானது தன்னுடலில் தைத்ததா யிருக்கையில் அன்பின் குறியாக வாலை வளைத் தாட்டாநிற்கும். ஆதலால், யானையை யொத்த வியல்பினரது நட்பை நீக்கி நாயை யொத்த வியல்பினரது நட்பைத் தழுவிக்கொள்ளல் வேண்டும் என்பது.

யானை யனையவர் நட்பிற் பிழை பொறுக்காதவர். நாயனையார் நட்பிற் பிழைபொறுப்பவர். அடக்குப்பண்மைப் பொருளது. வ. உயர்வு சிறப்பு. ஆக நிகழ்கால வினையெச்சம். உம்மையும் உயர்வுசிறப்பு.

One ought to avoid friendship with those whose intimacy resembles that of an elephant, but one ought to form friendship with those whose regard is like that of a dog, for the elephant even though it knows full well his keeper, will (under a slight povocation) kill him, whereas the dog even though its master in anger threw on it an arrow, the animal will, with the arrow dangling on one side and putting up with the pain, still wag its tail and look up to its master. (3)

214. பலநாளும் பக்கத்தா ராயினு நெஞ்சில்
சிலநாளு மொட்டாரோ டொட்டார்—பலநாளு
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்
தியாத்தாரோ டியாத்த தொடர்பு.

இ-ள். பலநாளும் - பலதினமும், பக்கத்தரீர் ஆயினும் - பிரியாமல் பக்கத்தி லிருப்பவராயினும், நெஞ்சில் - தம்மனத்தில், ஒட்டாரோடு - ஒற்றுமைகொள்ளும் இயல்பிலாரிடத்து, சில நாளும் ஒட்டார் - (அறிவுடையார்) சிலநாளும் ஒற்றுமைகொள்ளார், தம் நெஞ்சத்து - (ஒருவருக் கொருவர்) தம்மனத்தில், யாத்தாரோடு - உறுதியாகக் கொண்டவரிடத்து, யாத்த - (தாமும்) உறுதியாகக்கொண்ட, தொடர்பு - நட்பினை, பலநாளும் - பலதினமும், நீத்தார் எனை - (தம்மைப்) பிரிந்திருப்பாரென்று, கைவிடுதல் - விட்டொழிதல், உண்டோ - (அவரிடத்து) உளதோ இலது, எ-று.

பொ-ரை. பல தினமும் பிரியாமல் பக்கத்திலிருப்பவராயினும் தம் மனத்தில் ஒற்றுமை கொள்ளுமியல்பிலாரிடத்து அறிவுடையார் சிலகாலும் ஒற்றுமை கொள்ளார். ஒருவருக்கொருவர் தம் மனத்தில் உறுதியாகக் கொண்டவரிடத்துத் தாமும் உறுதியாகக்கொண்ட நட்பினைப் பல தினமும் தம்மைப் பிரிந்திருப்பாரென்று விட்டொழிதல் அவரிடத்தில் உளதோ இலது என்பது.

யாத்தல் கட்டுதல். மூன்றனுருபு ஏழாவதனிடப்பொருளது. நட்பின ரொருவருக்கொருவர் உள்ளஞ்சிலராயின் ஒருதேசத்தினராயிருந்து பலமுறை கண்டும் வார்த்தையாடியும் இணங்குஞ் செயலாற் பயனில்லை என்பது.

There can be no friendship with those whose mind and heart are not united with those of one, even though they be one's neighbours. Is it possible to give up friendship of those with whom we are united in bond of affection, even though they are separated from us and are away from us for a very long time? (4)

215. கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி—தோட்ட
கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரும்இல்.

இ-ள். நட்பு ஆட்சி - (நட்பினரிருவர்) நட்பை ஆளுகையாவது, கோடு பூப்போல - மரக்கிளையில் பூத்த பூப்போல, மலர்ந்து - (முன்னே) பெருகி, பின் - நாள் கழிகையில், கூம்பாது-சுருங்காமல், வேட்டதே - (முதலில் ஒருவரை யொருவர்) விரும்பியதே, வேட்டதா ஆம் - (முடிவு வரையும் மாறாது) விரும்பியதாகும், தோட்ட - தோண்டப்பட்ட, கயம் - குளத்தில் பூத்த, பூப்போல - (தாமரை முதலிய) பூவைப்போல, முன்மலர்ந்து - முன்னே அன்பு பெருகி, பின் கூம்புவாரை - நாள் செல்லுகையில் சுருங்கும் இயல்பினரை, நயப்பாரும் - விரும்பி நாடுவாரும், நட்பாரும் - நட்புக்கொள்வாரும், இல் - இலர், எ-று.

பொ-ரை. நட்பின ரிருவர் நட்பை ஆளுகையாவது மரக்கிளையில் பூத்த பூப்போல முன்னே பெருகி நாள் கழிகையில் சுருங்காமல் முதலில் ஒருவரையொருவர் விரும்பியதே முடிவு வரையும் மாறாது விரும்பியதாகும். தோண்டப்பட்ட குளத்தில் பூத்த தாமரை முத

லிய பூவைப்போல முன்னே அன்பு பெருகி நாள் செல்லுகையில் சுருங்கும் இயல்பினரை விரும்பி நாடுவாரும், நட்புக்கொள்வாரும் இலர் என்பது.

மலர்ந்தபோதுள்ள விரிவு உதிருமளவும் சுருங்காமையால், கோட்டுப்பூ, ஒருவரையொருவர் விரும்பி நட்புக்கொண்ட காலத்தில் வைத்த அன்பின் மிகுதி தாம் முடியுமளவும் குறையாத அறிவுடையாரது நட்புக்கும், மலர்ந்தபோதுள்ள விரிவு போது செல்லச்செல்லச் சுருங்குதலால், நீர்ப்பூ, ஒருவரையொருவர் விரும்பி நட்புக்கொண்ட காலத்து வைத்த அன்பின் மிகுதி நாள் செல்லச்செல்லச் சுருங்கி வரும் அறிவில்லாதவரது நட்புக்கும் உவமையாயின. கோட்டுப்பூ நீர்ப்பூ தொழிலுவமம். ஏ-தேற்றம். தோட்ட இறந்தகாலப்பெயரெச்சம், தொள் பகுதி, ட் இறந்தகால இடைநிலை, அ பெயரெச்ச விகுதி, ளகரம் டகரமாதல் சந்தி, இவ்வாறு முடிந்துநின்ற தொட்டவென்பது நீட்டல் பெற்றது; தோளாத என மறையிலும் வரும். தொடி என்பது பகுதி, அப்பகுதி ஒற்றிரட்டி, முதனீட்டல் பெற்றதெனினும் பொருந்தும்.

The best friendship is that which once formed is never withdrawn like the flower on a branch which having once blossomed never closes. No one ever formed or will ever form friendship with those who first form their friendship and then withdraw soon after, like the flower in a tank which unfolds and afterwards closes. (5)

216. கடையாயார் நட்பிற் கழுகனைய ரேனை
யிடையாயார் தெங்கி னனையர்—தலையாயா
ரெண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை புடையார் தொடர்பு.

இ-ள். கடையாயார்-கடையானவர், நட்பின்-நட்பினால், கழுகு அனையர் - கழுகமரத்தை ஒப்பார், ஏனை - மற்ற, இடையாயார் - இடையானவர், தெங்கின் அனையர் - தென்னமரத்தை ஒப்பார், தலையாயார் - முதன்மையுடையார், தொன்மையுடையார் - பழமை பாராட்டத் தலையாராகி, தொடர்பு-கொண்ட நட்பு, எண் அரு-(பயனை) அளவிடத் தருமையாகிய, பெண்ணைபோன்று - பெண் பனையைப் போன்று, இட்டஞான்று - நட்புச்செய்த நாளில், இட்டதே-செய்த உதவியேயாம், எ-று.

பொ-ரை. கடையானவர் நட்பினுல் கமுகமரத்தை ஒப்பார். மற்ற இடையானவர் தென்னமரத்தை யொப்பார். முதன்மை யுடையார் பழமைபாராட்டுத லுடையாராகிக் கொண்ட நட்பு, பயனே அன்றிதன லருமையாகிய பெண் பனையைப் போன்று நட்புச்செய்த நாளில் செய்த உதவியேயாம் என்பது.

கமுகு இடைவிடாமலும், தெங்கு இடைவிட்டும் போற்றிவளர்த்தல் செய்துவரின் பயன் தருமாதலால் அவைமுறையே, வேண்டிய வற்றை இடைவிடாது தருபவரிடத்து நட்புச்செய்யுங் கடையான வருக்கும், இடைவிட்டுத் தருபவரிடத்து நட்புச்செய்யும் இடையான வருக்கும், பனைவிதை நட்டு முதல்நாள் நீர்வார்த்தலொன்றுமே செய்யின் பயன் தருவதாதலால் அது சிறிதுதவி செய்யின் மிக்க நட்புச் செய்யும் தலையானவருக்கும் உவமையாயின; மூன்றுவமையுந் தொழிலுவமம். தூங்கு, கனிமுதலிய பயன்தரும் பனை பெண்ணை; இதில் ஐசாரியை. ஆண்பனை காய்க்குங் காய் ஆணங்காயெனவழங்கலாலு முணர்க. இடைதல் - ஈதல். ஏ - தேற்றம்.

The lowest sort of men in friendship are like the *areca nut* tree. The middle class is like the *cocoa-nut* tree. The best of men in friendship are like the palm tree of rare worth, for what was given it first day was given once for all. (6)

217. கழுநீருட் காரட கேணு மொருவன்
விழுமிதாக் கொள்ளி னமிழ்தாம்—விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினு மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.

இ-ள். ஒருவன் - ஒருவன், விழுமித ஆக - (மற்றவனுடைய நட்பு) சிறப்புடையதாக, கொள்ளின் - கருதுவானாயின், (அவனுலிடப்படுவது) கழுநீருள் - கழுநீரில் சமைத்த, கார் அடகு ஏனும் - பசுமையாகிய கீரையாயினும், அமிழ்து ஆம் - (அதுவே) அமுதம்போல இனிமை யுடையதாகும், விழுமிய - சிறந்த, குய் - நறும்புகை யூட்டிய, துவை - புளிங்கறி, ஆர் - நிரம்பிய, வெள் சோறே ஆயினும் - மாசு இல்லாத சோறேயாயிருப்பினும், மேவாதார் - உள்ளன்பில்லாருடைய, கைத்து - வசத்தில், உண்டல் - உண்ணுமுணவு, காஞ்சிரங்காய் - எட்டிக்காய்போல இனிமை யுடையதன்று, எ-று.

பொ-ரை. ஒருவன் மற்றவனுடைய நட்பு சிறப்புடையதாகக் கருதுவானாயின் அவனுலிடப்படுவது கழுநீரில் சமைத்த பசுமையாகிய

கீரையாயினும் அது அமுதம்போல இனிமை யுடையதாகும். சிறந்த நறும்புகை யூட்டிய புளிங்கறி நிரம்பிய மாசு இல்லாத சோறேயா யிருப்பினு உள்ளன்பில்லாருடைய வசத்தி லுண்ணு முணவு எட்டிக் காய்போல இனிமை யுடையதன்று என்பது.

கருமை பசுமைக்காயிற்று. நன்கு அடப்பட்ட தின்றென்பார் 'காரடகு' என்றார். இது இடுவோனுடைய வறுமையை விளக்கியது. குய் ஒலிபற்றி வந்தபெயர்; இது அதுகரணவொலி. விழுமிது குறிப்பு வினைமுற்று; விழுமு பகுதி, இ சாரியை, து ஒன்றன்பாற்கை விகுதி, உகரக்கேடு சந்தி. இதற்கு வினைமுதல் நட்பு. வெண்மைப் பண்பு மாசின்மையை யுணர்த்தியது. உண்டல் தொழிலாகு பெயர்.

If one take his meal in a friend's house even though the meal be a very poor one, it will be as sweet as ambrosia. To eat in one's enemy's house, even though the dishes are very rich, is like taking *nux vomica*. (7)

218. நாய்க்காற் சிறுவிரல்போ னன்கணிய ராயினு
மீக்கூற்றி னுணைபு முதவாதார் நட்பெண்ணுந் [லீக்கும்
சேய்த்தானுஞ் சென்று கொளல்வேண்டுஞ் செய்வி
வாய்க்கா லனையார் தொடர்பு.

இ-ள். நாய்க்கால் - நாயின் காலினது, சிறு விரல்போல - சிறுமையாகிய விரல்கள்போல, நன்கு அணியர் ஆயினும் - மிகுதியாக நெருங்கினவரா யிருப்பினும், ஈக்கால் துணையும் - ஈயினது அடியினளவும், உதவாதார் - (துன்பம் நேரிட்டபோது) உதவி செய்யாரது, நட்பு - நட்பினுல், என் ஆம் - யாது பயன் உளதாகும், செய்வினைக்கும் - வயலிலுள்ள பயிரை விளையச் செய்யும், வாய்க்கால் - வாய்க்காலை, அனையார் - ஒத்தவரது, தொடர்பு - நட்பு, சேய்த்து ஆனும் - நெடுந்தூரத்தி லுள்ளதாயினும், சென்று கொள்ளல்வேண்டும் - போய் (அந்நட்பை) கொள்ளுதல்வேண்டும், எ-று.

பொ-ரை. நாயின் காலினது சிறுமையாகிய விரல்கள்போல மிகுதியாக நெருங்கினவரா யிருப்பினும் ஈயினது அடியினளவுந் துன்பம் நேரிட்டபோது உதவி செய்யாரது நட்பினுல் யாது யு ளுளதாகும். வயலிலுள்ள பயிரை விளையச் செய்யும் வாய்க்காலை ஒத்தவரது நட்பு நெடுந்தூரத்தி லுள்ளதாயினும் போய் அந்நட்பைகொள்ளுதல் வேண்டுமென்பது.

உதவாதாரை இழித்தற்கு நாய்க்காற் சிறு விரலை உவமித்தார். கால் தன் சினையாகிய அடியையும், செய்தன்னிலுள்ள பயிரையும்

உணர்ந்தலால் முறையே முதலாகு பெயரும், இடவாகு பெயருமாக நின்றன! வாய்க்கால் தான்பெற்ற நீரைக்கொண்டுபோய்த் தன்னை யடுத்தீத் தூரத்திலுள்ள பயிருக்கு மூற்றும் உதவுதல்போல முயற்சி யாற் பெற்ற பொருளைத் தம்மை நட்டித் தூரத்துள்ளார்க்கு முற்றும் உதவுதலாலே அவ்வுதவுவார் வாய்க்காலனையா ராயினர். சேய்த்து குறிப்பு வினைமுற்று, மையீறு கெட்டுநின்ற சேய் பகுதி, த் சந்தி, து ஒன்றன்படர்க்கைவிகுதி. அவரிருப்பின் சேய்மை தொடர்பின் மேலேற்றப்பட்டது.

Of what value is the friendship with those who being near like the little claw on a dog's leg does not afford assistance even as little as that of a fly's foot? Even though you go far to seek friendship, it is better to seek friendship of those who are like the water channel that makes the crop in the field to flourish. (8)

219. தெளிவிலார் நட்பிற் பகைநன்று சாதல்
விளியா வருநோயி னன்று—ளளிய
யிகழ்தலிற் கோற லினிதேமற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

இ-ள். தெளிவு இல்லார் - கூரிய அறிவில்லாருடைய, நட்பின்-நட்பினும், பகை ஏ - (அவரோடு கொள்ளும்) பகையே, நன்று - இனிமையைத் தருவதாகும், விளியாமல் - (மருந்து முதலியவற்றால்) சாத்தியமாகாமல், வருநோயின் - வளரும் நோயினும், சாதல் ஏ - இறத்தலே, நன்று - இனிமையைத் தருவதாகும், அளிய - (ஒருவன் மனம்) நையும்படி, இகழ்தலின் - இகழ்வதினும், கோறல் ஏ - (அவனை) கொலை செய்தலே, இனிது - இனிமையைத் தருவதாகும், இல்ல - (ஒருவனிடத்து) இல்லாத நற்குண நற்செய்கைகளே, புகழ்தலின் - புகழ்ந்து பேசுவதினும், வைதலே - (அவனுடைய) தீக்குணத் தீச்செயல்களே எடுத்துச் சொல்லலே, நன்று - இனிமையையுடையது, எ-று.

பொ-ரை. கூரிய அறிவில்லாருடைய நட்பினும் அவரோடு கொள்ளும் பகையே இனிமையைத் தருவதாகும். மருந்து முதலிய வற்றால் சாத்தியமாகாமல் வளரும் நோயினும் இறத்தலே இனிமையைத் தருவதாகும். ஒருவன் மனம் நையும்படி இகழ்வதினும் அவனைக் கொலை செய்தலே இனிமையைத் தருவதாகும். ஒருவனிடத்து இல்லாத நற்குண நற்செய்கைகளே புகழ்ந்து பேசுவதினும் அவ

னுடைய தீக்குணத் தீச்செயல்களை யெடுத்துச் சொல்லலே இனிமை யுடையது என்பது.

ஐந்தினுருபுகள் உறழ் பொருளின்கண் வந்தன. இனிமை என்னும் பிரிநிலை ஏகாரத்தைக் கோறலென்பதனோடும், பகைதாதலென்பவற்றோடுங் கூட்டுக. விளியாமலென்னும் வினையெச்சம் ஈறுதொகுத்தலாயிற்று. இல்ல பண்படியாகப் பிறந்த பல்லின் படர்க்கைப் பெயர். தெளிவிலார் நட்பில்வருந் துன்பங்கள் அவரோடு பகையான போது வருதலின்மையால் பகையும், உயிர் நோயால் வருந்துவது உடலோடு கூடி நின்றுவரையு மாதலால் சாதலும், இகழ்தலைக்கேட்டு ஒருவன் மனம் வருந்துதலால் வரும் பாவம் பல, அவனைக் கொலை செய்தலால் வரும் பாவம் கோலைப் பாதகமாகிய ஒன்று ஆதலால் கோறலும், ஒருவனிடத்து இல்லாதனவற்றைக் கூறலால் வரும் பொய்ப்பாவம் உண்டாதலின்மையால் வைதலும் இனியனவரியின. கன்று ஒன்றன்படர்க்கைக் குறிப்பு வினைமுற்று.

Enemity is better than friendship of the ignorant. Death is better than the disease which comes on yielding to no remedy. Killing will be sweeter than torment. Abuse will be more welcome than the undeserved praise. (9)

220. மரீஇப் பலரொடு பன்ஞண் முயங்கிப்
பொரீஇப் பொருட்டீக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்ஞ
ரரீஇப் பின்னைப் பிரிவு.

இ-ள். பலரொடு – பலருடனும், பல்நாள் – பலநாள், முயங்கி – கூடி, பொரீஇ – (அவரை) ஒத்து, மரீஇ – பழகி, பொருள் – உண்மையாகிய, தக்கார் ஏ – தகுதியுடையாரையே, கோடல்வேண்டும் – நட்புக் கொள்ளுதல்வேண்டும், உயிர் செகுக்கும் – உயிரைக் கொலை செய்யும், பாம்பொடும் – பாம்பினிடத்தும், (ஆராயாமல்) பரீஇ – விரும்பி, மரீஇ – நட்புக்கொண்டு, பின்னை – தீக்குணத்தை அறிந்த பின்பு, பிரிவு – (அதனை) பிரிதல், இன்ஞ – இன்பந் தருவதாகும், எ-று.

பே-ரை. பலருடனும் பலநாள் கூடி அவரை ஒத்துப் உண்மையாகிய தகுதியுடையாரையே நட்புக்கொள்ளுதல்வேண்டும் உயிரைக் கொலை செய்யும் பாம்பினிடத்தும் ஆராயாமல் விரும்பி

நட்புக்கொண்டு நீக்குணத்தை அறிந்த பின்பு அதனைப் பிரிதல் துன்பந் தருவதாகும் என்பது.

நற்குணை நற்செய்கையுடையார் சிலரே யாதலால் பலரொடும் என்றும், அவருடைய குணஞ் செய்கை யிவற்றின் நன்மை தீமைகளைச் சில்நாளிற் றுணியப்படாமையால் பன்னாள் என்றும், முயங்கி மருவுதலால் அவர் தம்முடைய குணத்தையும் செயலையும் புறத்தே காட்டாராதலால் பொரீஇ என்றுங் கூறினர். பலரொடு என்பதனீற்றில் முற்றும்மை தொகுத்தலாயிற்று. பிரிவை இன்னா என்றது காரணத்தைக் காரியமாகக் கூறுவதோ ருபசாரவழக்கு.

After associating with all kinds of men for good many days, we must take hold of those with whom we can with advantage make friendship. After forming the friendship, separation causes affliction even though it be from a snake which slays people with its fangs. (10)

Chapter XXIII—Bearing and Forbearing in Friendship

23-ஆம் அதிகாரம்: நட்பிற் பிழைபொறுத்தல்.

அஃதாவது ஆராய்ந்துகொண்ட நட்பின்கிடத்துக்குற்றங்கண்டபோது அதனைப் பொறுத்துக்கொள்ளுதலே யுணர்த்துவது. மீஇப் பின்னைப் பிரிவு துன்பந் தருவதாதலால் சாமளவும் நட்புக்கெடாதிருத்தல்வேண்டு மென்பதற்கு இது நட்பாராய்தலின்பின் வைக்கப்பட்டது.

221. நல்லா ரெனத்தா னனிவிரும்பிக் கொண்டாரை
யல்லா ரெனினு மடக்கிக் கொளல் வேண்டும்
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

இ-ள். நல்லார் என - நல்லாரென்று, தான் நனிவிரும்பி - தான் மிகுதியும் விரும்பி, கொண்டாரை - நட்புக்கொண்டவரை, அல்லார் எனினும் - நல்லவரல்லாராயினும், அடக்கி (அவரது குற்றத்தை) வெளிப்படுத்தாமல், கொள்வேண்டும் - (அவர் குட்பை விடாமல்) கொண்டிருத்தல்வேண்டும், நெல்லுக்கு - நெல்லினுக்கு, உமி உண்டு - உமியுள்ளது, நீர்க்கு - நீரினுக்கு, நுரை உண்டு - நுரையுளது, பூவிற்கும் - பூவினுக்கும், புல் இதழ் உண்டு - புறவிதழுளது, எ-று.

பொ-ரை. நல்லாரென்று தான் மிகுதியும் விரும்பி நட்புக் கொண்டவரை நில்லவரில்லாராயினும் அவரது குற்றத்தை வெளிப் படுத்தாமல் அவர் நட்பைவிடாமல் கொண்டிருத்தல்வேண்டும். நெல் லினுக்கு உமியுள்ளது. நீரினுக்கு நுரையுள்ளது. பூவினுக்கும் புறவித ழுளது என்பது.

உடலோடு கூடி வாழ்தற்கு இன்றியமையாதன ஆதலால் நெல் லையும் நீரையும் முன்னும், உண்டபின் அணியப்படுவதாதலால் மல ரைப் பின்னும் வைத்தனர். நிற்குண நற்செய்கையே யுடையார் அரிய ராதலால், உமி, நுரை, புறவிதழாகிய சிறு குற்றத்தை நோக்காமல் நெல் நீர் பூக்களைக் கொள்ளுதல்போல விரும்பிக்கொண்டார் நட்பை அவரது நன்மை யல்லாமையைப்பற்றி விடற்க என்பது கருத்து. மண மின்மைபற்றிப் புறவிதழ்க்குப் புல்லியெனவும் பெயர் வழங் கும்.

If those whom we have chosen as our friends thinking they will be good men, prove otherwise (and fall short of our expectation) we must forgive them (not keep them out from us, for there is no rose but has a thorn). A grain of paddy has got its husk, water its foam, and flower has its own useless non-fragrant petals. (1)

222. செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டீர்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசை வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம் வேண்டிக் கொண்டார் தொடர்பு.

இ-ள். நீர் - நீரை, நசை-விரும்பி, வாழ்நர் - (அதனால்) வாழும் உழவர், செறுத்தோறு - கட்டுந்தோறும், உடைப்பினும்-(அக்கட்டை) உடைத்துச் செல்லினும், செம்புனலோடு - நன்மையைத் தரும் நீரோடு, ஊடாடூர்ந் - பிணங்காதவராகி, மறுத்தும் -மீட்டும், சிறைசெய் வர் - (அந்நீரை) கட்டுவார், (அதுபோல) தாம் வேண்டி - தாமாக விரும்பி, கொண்டார் - கொள்ளப்பட்டவர், வெறுப்ப வெறுப்ப - தாம் மீகுதியும் வெறுக்கும்படி, செயினும் - (குற்றங்களை) செய்வா ராயினும், தொடர்பு - (அவருடைய) நட்பாகிய பாரத்தை, பொறுப் பர் - (ஒருவர் தாம்) தாங்கிநிற்பர், எ-று.

பொ-ரை. நீரை விரும்பி அதனால் வாழும் உழவர் கட்டுந்தோ றும் அக்கட்டை உடைத்துச் செல்லினும் நன்மையைத் தரும் நீரோடு பிணங்காதவராகி மீட்டும் அந்நீரை கட்டுவார், அதுபோலத் தாமாக

விரும்பிக்கொள்ளப்பட்டவர் தாம் மிகுதியும் வெறுக்கும்படி குற்றங் களைச் செய்வாராயினும் அவருடைய நட்பாகிய பாரத்தை (ஒருவர் தரம்) தாங்கி நிற்பர் என்பது.

பொறுத்தல்-சுமத்தல். தாம் மிகுதியும் வெறுக்கும்படியான குற் றங்களைச் செய்தலால் அவர் நட்பைப் பாரமாகவும், அவராலாகும் பயனைக் கருதி வெறுக்காது கொள்ளலால் பொறுப்பர் என்றுங் கூறி னர். இது ஏகதேச வுருவகம். செறு, நசை என்னும் மூதனிலைத் தனி வினைகள் முறையே பெயரெச்ச வினையெச்சப் பொருள்பட நின் றன. அடைக்கு மிகுதிப்பொருளது. செம்மையைத்தரும் புனலைச் செம் புனலென்றது ஓர்மரபு வழுவமைதி. சிறை செய்வர் ஒரு சொல்லின் தன்மையது. ஒருவர் குற்றங்கள் பல செய்யினும் அவரால் உண்டாம் பெருஞ்பயன் பொருட்டு அவர் நட்பினை விடார் அறிவுடையா ரென் பது கருத்து.

No one would resent the action of the water when it makes breaches in the dam (which prevented its flow) and escapes. Those who care for the storage of water, will again and again repair the breaches in the dam. If the actions of friends are very very disgusting, we must forgive them as we have chosen them as our friends. (2)

223. இறப்பவே தீய செயினுந்தந் நட்டார்
பொறுத்த றகுவதொன் றன்றே—நிறக்கோங்
குருவவண் டார்க்கு முயர்வரை நாட
வொருவர் பொறை யிருவர் நட்பு.

இ-ள். நிறம் – நன்னிறமாகிய, கோங்கு – கோங்கமலரில், உரு வம்–அழகாகிய, வண்டு – வண்டுகள், ஆர்க்கும் – ஆரவாரிப்பதற் கிட மாகிய, உயர்வரைநாட – உயர்ந்த மலைநாட்டரசனே, தம் நட்டார் – தம்மால் நட்புச்செய்யப்பட்டவர், இறப்ப – மிகுதியாக, தீயவே – தீமையான காரியங்களையே, செய்யினும் – செய்தாராயினும், பொ றுத்தல் – (அறிவுடையோர்) பொறுத்துக்கொள்ளுதல், தகுவது–(நட் புக்கு) தகுந்திருப்பதாகிய, ஒன்று – ஒருசெயல், அன்றே – ஆம், ஒரு வர் பொறை – (நட்டாரிருவருள்) ஒருவருடைய பொறுமையால், இரு வர் நட்பு – அவ்விருவருக்கும் நட்புளது. எ – று.

பொ-ரை. நன்னிறமாகிய கோங்கமலரில் அழகாகிய வண்டுகள் ஆரவாரிப்பதற்கிடமாகிய உயர்ந்த மலைநாட்டரசனே! தம்மால் நட் புச்செய்யப்பட்டவர் மிகுதியாக தீமையான காரியங்களையே செய்தா

ராயினும் அறிவுடையோர் பெரிருத்துக்கொள்ளுதல் நட்புக்குத் தகுந் திருப்பதாகிய ஒருசெயல் ஆம். நட்டாரிருவருள் ஒருவருடைய பொறுமையால் அவ்விருவருக்கும் நட்புளது என்பதாம்.

செயினுமென்பது செய்யாமையை விளக்கி நிற்றலால் எதிர் மறையும்மை. பொறுக்காமை நட்பினுக்குரிய தன்றென்பார் பொறுத்தலைத் தகுவது என்றும், நட்பினளவை வெளிப்படுப்ப திதுபோலில்லை யென்பார்அப்பொறுத்தலை ஒன்று என்றும் கூறினர். தகுவது ஒன்றன் படர்க்கை எதிர்காலவினைப்பெயர். கோங்கு மூதலாகுபெயர். இது வேற்றுப்பொருள் - வஞ்சப்பணி.

Is it not proper that one should forget and forgive his friend even though that friend has inflicted severe injury. O Lord of the land with lofty hills where the bees hum with its sweet melody! (Of two friends) if one is of a forbearing nature then the friendship between the two (will endure). (3)

224. மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தங்
கடிவிசை நாவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப
விடுதற் கரியா ரியல்பிலரே னெஞ்சஞ்
சுடுதற்கு மூட்டிய தீ.

இ-ள். மடிதிரை - மடியு மியல்புள்ள அலைகள், தந்து - தூவி, இட்ட - கோத்த, வால் கதிர்-வெண்மையாகிய கிரணங்களையுடைய, முத்தம் - முத்துகளைப்போல, கடிவிசை - (அணியாக) விரைந்தோடுகின்ற, நாவாய் - மரக்கலங்களை, கரை - கரையில், அலைக்கும் - அலையச்செய்யும், சேர்ப்ப - துறையையுடையானே, விடுதற்கு - (நட்பை) விட்டுவிடுதற்கு, அரியார் - அருமையாயிருப்பவர், இயல்புஇலரேல்-நற்குணமிலராயின், (அவர் தம் நட்பினரது) நெஞ்சம் - மனத்தை, சுடுதற்கு - சுடுவதற்காக, மூட்டிய தீ - மூட்டியதீயாவர், எ-று.

பொ-ரை. மடியு மியல்புள்ள அலைகள் நூலில் கோத்த வெண்மையாகிய கிரணங்களையுடைய முத்துகளைப்போல அணியாக விரைந்தோடுகின்ற மரக்கலங்களைக் கரையில் அலையச்செய்யும் துறையையுடையானே! நட்பை விட்டுவிடுதற்கு அருமையாயிருப்பவர் நற்குணமிலராயின் அவர் தம் நட்பினரது மனத்தைச் சுடுவதற்காக மூட்டிய தீயாவர் என்பது.

மூத்தமென்பதனீற்றில் உகரம்சொல் தொகுத்தலாய் நின்றது விடுதற்கரியாராவார் அவராலாகும் பெரும்பயன் கருதி நட்பினை விடல்

கூடாதவர். அவரது நற்குணமின்மை நட்டாருடைய மனத்தை வருத்துதலால் அவரைத் தீ என்றார். நான்கனுருபு நிமித்தகாரண காரியப்பொருளது.

O Lord of the shore where the waves of the sea bring in pearls and vessels of the greatest speed call very often! If those whom we cannot easily do away with, are not of any worth, they are the fire that consumes our mind. (4)

225. இன்ன செயினும் விடற்பால ரல்லாரைப் [ஞெடு
பொன்னுகப் போற்றிக் கொளல்வேண்டும்—பொன்
நல்லிற் சிதைத்ததீ நாடொறு நாடித்தம்
இல்லத்தி லாக்குத லால்.

இ-ள். பொன்னெடு – செல்வப்பொருளோடு, நல்இல் – அலங்காரமாகிய வீட்டை, சிதைத்ததீ – எரித்து அழித்த தீயை, நாள் தொறும் – தினந்தோறும், நாடி – (அவ்வீட்டாரும் இருக்குமிடத்தை)த் தேடிப்பெற்று, தம் இல்லத்தில் – தம்முடைய வீட்டில், ஆக்குதலால் – விருத்தி பண்ணுதலால், இன்னசெயினும் – துன்பந் தருவனவற்றைச் செய்தாராயினும், விடல் பாலர் அல்லாரை – நட்பை விடுதலாகிய தன்மையரல்லாரை, பொன்னுக – பொன்போல, போற்றிக்கொளல் வேண்டும் – காத்துக் கொள்ளுதல் வேண்டும், எ–று.

பொ–ரை. செல்வப்பொருளோடு அலங்காரமாகிய வீட்டை எரித்து அழித்த தீயைத் தினந்தோறும் அவ்வீட்டாரும் இருக்குமிடத்தைத் தேடிப் பெற்று தம்முடைய வீட்டில் விருத்தி பண்ணுதலால் துன்பந் தருவனவற்றைச் செய்தாராயினும் நட்பைவிடுதலாகிய பான்மைய ரல்லாரைப் பொன்போலக் காத்துக்கொள்ளுதல் வேண்டும் என்பது.

விடற்பாலரல்லரென்றது உவமையால் இன்றியமையாத பயன் தரும் நட்பினரை. ஆக உவமவுரு பிடைச்சொல். பின் பொன்னென்றது செல்வப்பொருளை யுணர்த்தவந்த குறிப்புச்சொல். இப்பாடம் பழம் புத்தகத்திற் கண்டது. பொன்னனையெனப் பாடமாயின் திருமகளை ஒத்தவளை யெனவுரைக்க.

If those, whom we cannot do without, do harmful acts to us, they must be hugged to our bossom. For even the fire which destroys gold and other properties in the house, (when the house is burnt away), is kept in spite of its mischievous nature.

226. இன்ன செயினும் விடுதற் கரியாரைத்
தின்னத் துறத்த றகுவதோ—துன்னருஞ்சீர்
விண்ணத்து நீள்வரை வெற்ப கலிப்பவோ
கண்குத்திற் றென்றுதங் கை.

இ-ள். துன் அரு - பெறுதலருமையாகிய, சீர் - சிறப்பை யுடைய, விண்ணத்து - விண்ணுலகத்தில், நீள் வரை - நீண்டுயர்ந்த மூங்கிலையுடைய, வெற்ப - மலையை யுடையானே, இன்ன செயினும் - துன்பந் தருவனவற்றைச் செய்தாராயினும், விடுதற்கு அரியாரை - (நட்பை) ஒழிதற்கு அருமையானவரை, தின்னுமல் - நெருங்கியிராமல், துறத்தல் - விட்டொழிதல், தகுவதோ - தகுதியுடையதாகுமோ ஆகாது, கண் குத்திற்று என்று - கண்ணைக் குத்தியதென்று, தம் கை - தமது விரலை, கலிப்பவோ - (ஒருவர்) குறைத்துவிடுவரோ குறைத்துவிடார், எ-று.

பொ-ரை. பெறுதலருமையாகிய சிறப்பையுடைய விண்ணுலகத்தில் நீண்டுயர்ந்த மூங்கிலையுடைய மலையையுடையானே! துன்பந் தருவனவற்றைச் செய்தாராயினும் நட்பை ஒழிதற்கு அருமையானவரை நெருங்கியிராமல் விட்டொழிதல் தகுதியுடையதாகுமோ ஆகாது; கண்ணைக் குத்தியதென்று தமது விரலை ஒருவர் குறைத்து விடுவரோ குறைத்துவிடார் என்பது.

விண்ணத்து நீள்வரை வெற்ப கலிப்பவோ என்னும் பாடம் நச்சினார்க்கினியார் காட்டிய உதாரணம். விண்குத்து நீள்வரை எனும் பாடமுண்டு. விண்ணுலகத்தை, அல்லது மேகத்தைத் தொளைக்கின்ற நீண்ட மூங்கிலென உரைக்க. தன் முதனிலைத்தொழிற்பெயர். தன்னுமென்பது ஈறு தொகுக்கப்பட்டது. கை முதலாகுபெயர். வரை பண்பாகுபெயர். இது வேற்றுப்பொருள் வைப்பணி.

If those whom it is difficult to keep out from us, do some harm, is it good to give up their friendship? O Lord of the lofty mountains that pierce the sky! would any cut off his hand because it pricked his eye? (6)

227. இலங்குநீர்த் தண்சேர்ப்ப வின்ன செயினுங்
கலந்து பழிகாணார் சான்றோர்—கலந்தபின்
நீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
காமு மவரிற் கடை.

இ-ள். இலங்கு நீர் – கடலினது, தண்சேர்ப்ப – குளிர்ச்சியாகிய துறையையுடையானே, இன்னு செயினும் – துன்பந் தருவனவற்றைச் செய்தாராயினும், கலந்து – (ஒருவரோடு) நட்புக்கொண்டு, பழிகாணுர் – (அவற்றை) குற்றமாக நினையார், சான்றோர் – (அறிவால்) நிறைந்தோர், கலந்தபின் – நட்புக்கொண்டபின், தீமை, (அவர் செய்த) தீச்செயலை, எடுத்து உரைக்கும் – எடுத்துச் சொல்லும், திண் அறிவு இல்லாதார் தாமும் – கலங்குதலில்லாத அறிவில்லாதவரும், அவரின் – இன்னு செய்தவரினும், கடை – கீழானவர் – எ–று.

பொ–ரை. கடலினது குளிர்ச்சியாகிய துறையையுடையானே! துன்பந் தருவனவற்றைச் செய்தாராயினும் ஒருவரோடு நட்புக் கொண்டு அவற்றைக் குற்றமாக நினையார் அறிவால் நிறைந்தோர். நட்புக் கொண்டபின் அவர் செய்த தீச்செயலை எடுத்துச் சொல்லும் கலங்குதலில்லாத அறிவில்லாதவரும் இன்னு செய்தவரினும் கீழானவர் என்பது.

நட்டார் செய்யும் தீமையைப் பொறுக்கும் வலியில்லாமையால் அவரைத் 'தீமையெடுத்துரைக்குந் திண்ணறிவில்லாதார்' என்றார். உரைக்கு மென்னும் காரியப்பொருட்டாகிய பெயரெச்சம் திண்ணறிவின்மையென்னுங் காரணப்பெயர்கொண்டது. இலங்குநீர் வினைத் தொகையைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர். கடை பண்பாகுபெயர்.

O Lord of the cool shore of the shining sea! If friends do harm, the great will not find fault with them once they formed their friendship. Those who expose the weakness of their friends are worse than their worthless friends. (7)

228. ஏதிலார் செய்த திறப்பவே நீதெனினு
நோதக்க தென்னுண்டா நோக்குங்கால்—காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட
விழுமிதா நெஞ்சத்து ணின்று.

இ-ள். கறங்கு – (மலையினின்று விழுவதினால்) ஒலிக்கின்ற, அருவி நாட – அருவியையுடைய நாடனே, நோக்குங்கால் – ஆராயுமிடத்து, காதல் கழுமியார் – (நின்னிடத்து) அன்புமிக்க சுற்றத்தார், செய்தது – (நினக்கு) செய்தபிழை, விழுமிது ஆக – துன்பஞ் செய்வதாக, நெஞ்சத்துள் – நின்மனத்தில், நின்று – நிற்பதினால், ஏதிலார் –

செயற்கையாகிய நட்பினர், செய்தது - செய்த பிழை, இறப்ப - மிகுதியும், நீதே எனினும் - துன்பஞ் செய்வதேயாயினும், நோவத்தக்கது - வெறுக்கத்தகுந்த காரணம், என் உண்டு - யாதுண்டு ஒன்று மிலது, எ-று.

பொ-ரை. மலையினின்று விழுவதினால் ஒலிக்கின்ற அருவியையுடைய நாடனே! ஆராயுமிடத்து நின்னிடத்து அன்புமிக்க சுற்றத்தார் நினக்கு செய்தபிழை துன்பஞ் செய்வதாக நின் மனத்தில் நிற்பதினால் செயற்கையாகிய நட்பினர் செய்தபிழை மிகுதியும் துன்பஞ் செய்வதேயாயினும் வெறுக்கத்தகுந்த காரணம் யாதுண்டு ஒன்று மிலது என்பது.

இயற்கை நட்பாகிய சுற்றத்தினின்றும் வேறுபடுத்தற்கு முன் செய்த வுதவிபற்றி வருநட்பாகிய செயற்கை நட்பினர் எதிலாரெனப்பட்டார். இயற்கைநட்புப் போலச் செயற்கைநட்புச் சிறந்த தில்லாமையால் நோவதற்குச் செயற்கைநட்புக் காரணமாகா தென்பார் 'என்' என்றார். நோவ என்பதனீற்று விகுதியும், செய்ததென்பதனீற்று விகுதியும் தொகுத்தலாயின. நின்று காரணப் பொருட்டாகிய நிற்க என்பதன் திரிபு. குற்றஞ் செய்யா நட்பின ரரியராதலால் நட்பிற் பிழைபொறுத்தல் வேண்டு மென்பது கருத்து.

If you consider a little, what is there to feel sorry for if strangers have done you much harm. O Lord of the land wherein flow many streams! If the injury inflicted by a friend, is not taken to heart, and he is forgiven, there lies the greatness. (8)

229. தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயி னவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்மூ டடக்கிக் கொளல்.

இ-ள். தமரென்று - உறவினரென்று, தம்மால் கொள்ளப்பட்டவரிதம்மை - தம்மால் வீரும்பப்பட்டவரை, தமர் அன்மை - உறவினரல்லாமையை, தாம் அறிந்தார் ஆயின் - (ஒருவர்) தாமறிந்தாராஞல், அவரை - உறவினரல்லாரை, தமரினும் - உறவினரினும், நன்கு மதித்து - உயர்வாக மதித்து, தமர் அன்மை - உறவினரல்லாமையை, தம்மூள் - (பிறர்க்குத் தெரிவிக்காமல்) தமக்குள், அடக்கிக்கொளல் - அடக்கிக்கொள்ளக்கடவர், எ-று.

போ-ரை. உறவினசென்று தம்மால் விரும்பப்பட்டவரது உறவினரல்லாமையை ஒருவர் தாமறிந்தாராலும் உறவினரல்லாமை உறவினரினும் உயிர்வாக மதித்து உறவினரல்லாமையைப் பிறர்க்குத் தெரிவிக்காமல் தமக்குள் அடக்கிக்கொள்ளக்கடவர் என்பதாம்.

கொள்ளப்படுதல் தம்மினுமிய தொழிலாதலால் இதற்குக் கருத்தா மூன்றும் வேற்றுமைக் கருத்தாவாகல் வேண்டுமாதலால் தாமென்பது, தம்மென்பது நீட்டல் பெற்றதெனவும், மூன்றுமுருபு தொகுத்தல் பெற்றதெனவுங் கொள்க. கொள்ளப்பட்டவர்தம்மை யென்னும் இரண்டாவதை ஆறுவதாக்குக. தமரன்மை தம்முளடக்கி னன்கு மதிப்பாராயின் அவரே நாணித் தமரன்மை ஒழிவரென்பது.

If persons who have been taken within the fold of friendship, prove unworthy of our confidence, we must show to the public that we have greater respect to those people but reserve to ourselves (without over exposing) their untrustworthiness. (9)

230. குற்றமு மேனைக் குணமு மொருவனை
நட்டபி னுடித் திரிவேனே—னட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
வறைகடல்சூழ் வையக ஙக.

இ - ள். ஒருவனை நட்டபின் - ஒருவனை நட்புக்கொண்டபின், குற்றமும் - குற்றமான செய்கையையும், ஏனைக்குணமும் - மற்ற நீக்குணத்தையும், நாடி -(அவனிடத்துளதோ இலதோ வென்று) ஆராயாதின்று, திரிவேனேல் - திரிவேனாயின், நட்டான் - நட்புக்கொண்டவன் சொல்லிய, மறை - இரகசியத்தை, காவாமல் - தன்னுள் அடக்கி வையாமல், விட்டவன் - வெளிவிட்டதீயோன், செல் உழி - செல்லுதற்குரிய நரகத்திற்கு, அறைகடல் சூழ் - ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட, வையம் - உலகத்தார், நக - (என் செய்கையைப் பற்றி) அவமதித்துச் சிரிக்கும்படி, செல்க - செல்லக்கடவேன், ஏ - து.

போ - ரை. ஒருவனை நட்புக்கொண்டபின் குற்றமான செய்கையையும் மற்ற நீக்குணத்தையும் அவனிடத்துளதோ இலதோ வென்று ஆராயாதின்று திரிவேனாயின் நட்புக்கொண்டவன் சொல்லிய இரகசியத்தைத்தன்னுள் அடக்கிவையாமல் வெளிவிட்டதீயோன் செல்லுதற்குரிய நரகத்திற்கு ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட உலகத்தார் என் செய்கையைப்பற்றி அவமதித்துச் சிரிக்கும்படி செல்லக் கடவேன் என்பது.

மறை வெளிப்பட்டால் குற்றம் விளையுமென்றஞ்சிப் பிறரை மறைத்துச்சொல்லிய சொல்; மறைபகுதி, ஐ செய்யப்படு பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. காவாமல் ஈறு தொகுக்கப்பட்டது. செல்வழி என்பதில் வகரம் உடம்படு மெய்யல்லாத மெய். வையத்தார் சிரித்தல் குற்றத்தையும் தீக்குணத்தையும் நாடித்திரிதலும், மறைவை வெளிவிட்டதுமாகிய இழிசெயலைப்பற்றி. நட்புச்செய்தபின் குற்றத்தையுங் குணத்தையும் நாடித்திரிதலால் நட்பு வஞ்சமாய் முடிதலின் அது பாவமாயிற்று.

If I begin to search in my friend his merits and demerits after forming his friendship, let me go to the place destined to those who do not keep the secrets of his friends (but expose them) while the world girt by sea scorn me. (10)

Chapter XXIV—Unreal friendship

24-ஆம், அதிகாரம்: கூடாநட்பு.

அஃதாவது கொள்ளக் கூடாத நட்பி னியல்பைக் கூறுவது. கொள்ளக்கூடாத நட்பாவது உயர்குடிப்பிறப்பு, கல்வியறிவு, ஒழுக்க முதலியன இல்லாரோடு செய்யும் நட்பு. இந்நட்பு இம்மை மறுமைப் பயன்களை இழப்பித்தலால் அதனைக் கூடாநட்பென்றார். இயற்கை செயற்கையாகிய நட்புக்கூறு முடித்தமையின் இனி நட்புச் செய்யலாகாதாரை உணர்த்தல் வேண்டுவது முறையாதல் பற்றி இஃது இங்கு வைக்கப்பட்டது.

231. செறிப்பில் பழங்கூரை சேறணை யாக
விறைத்துநீ ரேற்றுங் கிடப்பர்—கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட
தங்கருமம் மூற்றுந் துணை.

இ-ள். கறைக்குன்றம் - மாசுபடிந்த சிறுமலைகள், பொங்கு - பெருகி, விழுகின்ற, அருவி - அருவியில், தாழும் - மூழுகுகின்ற, புனல் - நீர்வளமுள்ள், வரை நல்நாட - மலையினது நல்ல நாட்டையுடையாரே, செறிப்பு இல் - (வேய்ந்த பரப்புமுதலியன) அடர்ச்சியில்லாத, பழகூரை - பழமையாகிய சிறுவீட்டில், சேறு அணையாக - சேறு ஆணையாம்படி, இறைத்தும் - (ஒழுகியநீரை) இறைத்துக்கொண்டும், நீர் ஏற்றும் - (மேல் சிந்துகின்ற)நீரை ஏற்றுக்கொண்டும், தம் கருமம் - (அச்சிறு வீடுடையார்) (மழையில் நனையாமையாகிய

தம்முடைய காரியம், முற்றும் தூண - முடியுமளவும், கிடப்பர் -(அதனுள் வருந்தி) கிடப்பார், எ - று.

பொ - ரை. மாசுபடிந்த சிறு மலைகள் பெருகிவிழுகின்ற அருவியில் முழுகுகின்ற நீர்வளமுள்ள மலையினது நல்ல நாட்டை யுடையானே! வேய்ந்த பரப்பு முதலியன அடர்ச்சியில்லாத பழமையாகிய சிறுவீட்டில் சேறு ஆணையாம்படி ஒழுகிய நீரை இறைத்துக்கொண்டும் மேல் சிந்துகின்ற நீரை ஏற்றுக்கொண்டும் அச்சிறு வீடுடையார் மழையில் நனையாமையாகிய தம்முடைய காரியம் முடியுமளவும் அதனுள் வருந்திக்கிடப்பார் என்பது.

இறைத்து, ஏற்று இரண்டும் நிகழ்கால வினையெச்சத் திரிபு இருத்தலினிழிவுபற்றிக் 'கிடப்பர்' என்றார். தாழுமென்னும் பெயரெச்சம் நாட்டெனன்னும் பெயரின் முதனிலையாகிய இடப்பெயர் கொண்டது. குன்று-சிறுமலை. அம் சாரியை. அருவி நீர்ப்பெருக்கால் குன்றுகள் வெளிதோன்றுமையை மாசுள்ள குன்றுகள் அருவியில் மூழ்கினவாகக் கவிகுறித்தலால் இது தற்குறிப்பேற்றம். இச்செய்யுள் உயர்ந்தோர் கூடாத நட்பினரால் முற்றுப்பெறவேண்டிய தம் கருமம் முற்றுமளவும் அவரோடு வருந்தாநின்று நட்புப்பாராட்டுவரென்னும் பொருள் தோன்ற நின்றமையால் பிறிது மொழிதலென்னும்

Lord of the well watered mountain regions where the boiling waterfalls rush down from the dark hills! (Poor people linger beneath the old roof that cannot afford any shelter, (baling out the (rain) water (that invades the house) and making mud embankments to keep out the water and enduring the down pour (though it drenches them completly). (So false friends stick up) so long as it serves their own interests to do so. (11)

132. சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோன் மாண்ட பயத்தா—மாரி
வறந்தக்காற் போலுமே வால்அருவி நாட
சிறந்தக்காற் சீரிலார் நட்பு.

இ - ள். வால் அருவி - வெண்மையாகிய அருவிநீரையுடைய, நாட - மலைநாட்டை யுடையானே, சீரியார் - மேன்மக்களது, கேண்மை - நட்பு, சிறந்த சிறப்பிற்று ஆய் - மிகுந்த சிறப்புடையதாய்,

மாரிபோல - மழைபெய்தாற்போல, மாண்ட - மாட்சிமைப்பட்ட, பயத்தது ஆம் - (கொண்டவர்க்கு) பயனுள்ளதாகும், சீர்இலார்நட்பு - கீழ்மக்களது நட்பு, சிறந்தக்கால் - மிகுந்த விடத்து, மாரி - மழை, வறந்தக்கால் போலும் - பெய்யாது விட்டபோற்போலப் பயனிலதாகும், எ-று.

பொ-ரை. வெண்மையாகிய அருவிநீரையுடைய மலைநாட்டையுடையானே! மேன்மக்களது நட்பு மிகுந்த சிறப்புடையதாய் மழை பெய்தாற்போல மாட்சிமைப்பட்ட (கொண்டவர்க்கு) பயனுள்ளதாகும். கீழ்மக்களது நட்பு மிகுந்தவிடத்து மழை பெய்யாதுவிட்டாற் போலப் பயனிலதாகும் என்பது.

Lord of the land watered by streams white and foaming! The friendship of the Virtuous is of great excellence and productive of good like the rain in due season. Whereas the friendship of the worthless, even at its height, is as when the rain fails in the time of draught. (2)

கீழே வீறந்தக்கா லென்றமையால் மேலே பெய்தாலென்பது வருவிக்கப்பட்டது. கூடாத நட்பினருடைய நட்புச் சிறிதும் பயனில தென்பது. மாண்டமானென்னும் உரியடியாகப் பிறந்த பெயரெச்சம்.

233. நுண்ணுணர்வி னொடுகூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழுவிற்றா— னுண்ணூ
லுணரிலரா கிய வூதிய மில்லார்ப்
புணர்த னிரயத்து ளொன்று.

இ-ள். நுண்உணர்வினொடு - கூர்மையாகிய கல்வியறிவினையுடையாரோடு, கூடி - நட்புக்கொண்டு, நுகர்வு உடைமை - (அவரால் கூறப்படும் நூற்பொருள்களை) அநுபவித்தலுடையராதல், விண் உலகே ஒக்கும் - சுவர்க்கலோகத்தை விரும்புதலேப்போலும், விழுவிற்று - (அறிவுடையோரால்) விரும்புதலுடையது, நுண்நூல் - நுண்ணியபொருள்களை யுணர்த்தும் நூல்களை, உணர்வுஇலர் ஆகிய - அறிதலில்லாராகிய, ஊதியம் இல்லார் - (பிறப்பின்) பயனில்லாதவரை, புணர்தல் - கூடுகட்டு, நிரயத்துள் - நரகங்களில், ஒன்று - ஓர்சேட நரகமதம், எ-று

பொ-ரை. கூர்மையாகிய கல்வியறிவினையுடையாரோடு நட்புக்கொண்டு அவரால் கூறப்படும் நூற்பொருள்களை அநுபவித்த

லுடையராதல் சுவர்க்கலோகத்தை விரும்புதலேப்போலும். அறிவுடையோரால் விரும்புதலுடைய நுண்ணிய பொருள்களை யுணர்த்தும் நூல்களை அறிதலில்லாராகிய பிறப்பின்பயனில்லாதவரைக்கூடாநட்பு நரகங்களில் விசேட நரகமாம் என்பது.

நகரிவென்றதனால் அதற்குரிய செயப்படு பொருள் வருவிக்கப் பட்டது. பாவமிருதியால் மறுமையி லநுபவித்தற்குரியன நரகங்கள்; இம்மையி லநுபவித்தற்குரிய தீதலாகிய விசேட முடைமைபற்றி ஊதியமில்லாரைப் புணர்தலை 'ஒன்றி' என்றார். பொருள்களினது நுண்மை நூலின்மே லேற்றப்பட்டது. பிறப்பின் பயனுள் நுண்ணூலுணர்வு மொன்றுதலால் அது ஊதியமாயிற்று. புணர்ந்து நுகர்வுடைமை யென்னுது புணர்தலென்றது அவர் நட்பின் கொடுமை பற்றி, கூடா நட்புடையானுக்குப் பலதுன்பங்களும் நேரிடுமென்பது கருத்து.

The enjoyment of the company of men of refinement resembles the very heaven in the pleasures it gives. Association with those destitute of learning resembles the experience of one of the hells. (3)

234. பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போ
லொருபொழுதுஞ் செல்லாதே நந்து—மருகெல்லாஞ்
சந்தனநீள் சோலைச் சாரன் மலைநாட
பந்தமி லாளர் தொடர்பு.

இ-ள். அருகு எல்லாம் - பக்கங்களிலெல்லாம், சந்தனம் - சந்தனமரங்கள், நீள் - வளர்கின்ற, சோலை - சோலைகளையுடைய, சாரல் - சாரலையுடைய, மலைநாட - மலைநாடனே, பந்தம் இல் ஆளர் - உறுதியான அன்பின்மையை ஆராய்தலுடையாராது, தொடர்பு - நட்பு, வைத்தீப்போல - வைக்கோலினது தீயைப்போல, பெருகுவதுபோலத் தோன்றி - (மூன்) பெருகுவதுபோலக் காணப்பட்டு, ஒருபொழுதும் - சிறிது பொழுதும், செல்லாதே - நடவாமலே, நந்தும் - கெடும், எ-று.

போ-பை. பக்கங்களிலெல்லாம் சந்தனமரங்கள் வளர்கின்ற சோலைகளையுடைய சாரலையுடைய மலைநாடனே! உறுதியான அன்பின்மையை ஆராய்தலுடையாராத நட்பு வைக்கோலினது தீயைப் போலமுன்பெருகுவதுபோலக் காணப்பட்டுச் சிறிது பொழுதும் நடவாமலே கெடும் என்பது.

வைத்தீ முன் பெருநெருப்பாகப் பற்றி எரிந்து சிறிது பொழுதில் எவ்வளவுந் தேரீன்றுதலால் பந்தமிலாளர் தொடர்புக் குவமையாயிற்று. இது தொழிலுவமை. பந்தம்-கட்டு. அது திண்மையாகிய அன்பின் மேலது. ஏதேற்றம். திண்மையாகியி அன்பில்லாருடைய நட்புப் பெருகுவதுபோலத் தோன்றி, உடனே கெடுமென்பது கருத்து.

Lord of the land where extensive groves of sandal cover the mountain slopes! friendship with those who are not united with us by bonds of real love will appear to be growing but never extends and only dies out like fire in the straw. (4)

235. செய்யாத செய்துநா மென்றலுஞ் செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக்கொண் டோட்டலு—மெய்யாக
வின்புறூஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கு மற்றிலேயே
துன்புறூஉம் பெற்றி தரும்.

இ-ள். செய்யாத - (தன்னுல்) செய்யப்படாத அறங்களை, நாம் செய்தும் - நாம் செய்து முடித்தோம், என்றலும் - என்று பெருமை கூறுதலும், செய்வதனை - செய்யக்கடவதாகிய ஒரு கருமத்தை, செய்யாது - செய்யாமல் வைத்து, தாழ்த்துக்கொண்டு - தாமசஞ்செய்துகொண்டு, ஓட்டலும் - (காலம்) கழித்தலும், மெய்யாக - தவறுதலில்லாமையாக, இன்பு - சுகத்தை, உறும் - அடைதற்குக் காரணமாகிய, பெற்றி - பேரறிய தவத்தை, இகழ்ந்தார்க்கு - வமமதித்து விட்டார்க்கு, அற்றிலே உம் - அவ்வவ மதித்தலும், துன்பு உறும் - துன்பத்தையடைதற்குக் காரணமாகிய, பெற்றி - (கேடாகிய) பயனை, தரும் - கெடுக்கும், எ-று.

பொ-ரை. தன்னுல் செய்யப்படாத அறங்களை நாம் செய்து முடித்தோம் என்று பெருமை கூறுதலும் (செய்யக்கடவதாகிய ஒரு கருமத்தை செய்யாமல் வைத்து தாமசஞ் செய்துகொண்டு காலம் கழித்தலும்) தவறுதலில்லாமையாகச் சுகத்தை அடைதற்குக் காரணமாகிய பேரறிய தவத்தை அவமதித்து விட்டார்க்கு அவ்வவமதித்தலும் துன்பத்தை யடைதற்குக் காரணமாகிய கேடாகிய பயனைக் கெடுக்கும் என்பது.

நாம் தன்னித்தன்மைப் பன்மை. செய்தும் தன்மைப் பன்மை. பிறந்தகாலவினை மூற்று; செய்பகுதி, தம் தன்மைப்பன்மை பிறந்தகால விகுதி. தாழ்த்துக்கொண்டு இகழ்கால் வினையெச்சம்; தாழ்

தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாயினும் இங்குப் பிறவினைக் கண்வந்தபகுதி, த் சுந்தி, து சாரியை, க் சுந்தி; கொண்டு நிகழ்கால இடைநிலை, உ வினையெச்ச விகுதி, உகரக்கேடு சந்தி. இப்பகுதி பிறவினைப்படுத்தும் விகுதியாகிய துவ் விகுதி யேற்றுத் தாழ்த்தென வும் வரும். தாழ்த்தலும், ஒட்டலும் ஒரு காலத்திலாதலால் கொண்டு நிகழ்கால இடைநிலையாயிற்று. பேசிக்கொண்டு நடந்தான் என வழக்கத்திலும் வரல் காண்க. பெற்றி என்பதில் இ செயப்படு பொருண்மை விகுதி. பெறப்பட்டதென்பது பொருள். இச்சொல் முன்பயன் மேலும் பின்பயனின்மை மேலும் நின்றது.

To promise to do what one cannot do, and to put off doing what is in one's power to do, will wound the feelings of even such great men who look upon with contempt the pleasant experiences of life. (5)

236. ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர்க் குவளையை யாம்பலொக் கல்லா
பெருநீரார் கேண்மை கொளினுநீ ரல்லார்
கருமங்கள் வேறு படும்.

இ-ள். ஒருநீர் - ஒருகுளத்து நீரில் ஒருங்குப்பிறந்து - ஒன்றுகப்பிறந்து, நீண்டக்கடைத்தும் - வளர்ந்தாலும், விரிநீர் - விரியுந் தன்மையையுடைய, குவளையை - குவளைகளை, ஆம்பல் - அல்லிகள், ஒக்கலாத - ஒப்பாகா, (அதுபோல) பெருநீரார் - பெருமையாகிய குணமுடையாரது, கேண்மை - நட்பை, கொள்ளினும் - கொண்டாலும், நீரல்லார் - இனிமைக்குண மில்லாரது, கருமங்கள் - செயல்கள், வேறுபடும் - (பெருங்குணமுடையார் செயல்களிலும்) வேறுயிருக்கும். எ-று.

பொ-ரை. ஒரு குளத்து நீரில் ஒன்றுகப் பிறந்து வளர்ந்தாலும் விரியுந் தன்மையையுடைய குவளைகளை அல்லிகள் ஒப்பாகா. அதுபோலப் பெருமையாகிய குணமுடையாரதுநட்பைக் கொண்டாலும் இனிமைக் குணமில்லாரது செயல்கள் பெருங் குணமுடையார் செயல்களிலும் வேறுயிருக்கும் என்பது.

குளமென்னும் இடத்தினது ஒன்றென்னும் வரையறுப்புண்பு அவ்விடத்து நிகழ்பொருளாகிய நீரின்மேல் ஏற்றப்பட்டது. நீண்டக் கடைத்து இறந்தகால வினையெச்சம்; நீள் பகுதி, த் அ சாரியை, கடை இறந்தகால வினையெச்ச விகுதி, ஏகரம் டகரமானதும், உக

ரக்கேடும், ககரத்தோற்றமும் சந்தி, டகரம் ணகரமானது மெலித்தல், து கடையெனினும் விகுதியாகிய பகுதிப்பொருள் விகுதி, த் சந்தி. ஒக்கலாத இடைச்சொல்லடியாகப்பிறந்த பலவின் பழுக்கை எதிர்மறை வினைமுற்று; ஓ பகுதி, க் சந்தி, கு சாரியை, அல் எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்தும் ஒருபகுதி, ஆ சாரியைத் தொழித்துப்பேறு, அ பலவின் படர்க்கை விகுதி.

The water-lily does not equal the *Kavalai* though both of them grow side by side in the same pool. Though one may associate with the virtuous, the actions of the former will vary from those of the latter. (6)

237. முற்றற் சிறுமந்தி மூற்பட்ட தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலைநாட வின்னுதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.

இ-ள். முற்றல் - முதிர்ச்சியில்லாத, சிறுமந்தி - சிறுகுரங்கு, மூன்பட்ட - (தன்) எதிர்வந்த, தந்தையை - தந்தையை, நெற்றுக் கண்டால் அன்ன - (பயற்றங்காயின்) நெற்றைக் கண்டாலொத்த, விரலால் - (தன்கை) விரலால், குற்றி - குத்தி, ஞெமிர்த்திட்டு - (அதன்கையை) விரியச்செய்து, பறிக்கும் - (அதிலிருக்கும்பொருளை) அபகரிப்பதற் கிடமாகிய, மலைநாட - மலையைச்சார்ந்த நாட்டை யுடையானே, ஒற்றுமை - (மனத்தில்) ஒன்றுந்தன்மையை, கொள்ளாதார் - கொள்ளாதவரோடு செய்யும், நட்பு இன்னுதே - நட்புத் தன்பக் திருவதே ஆம், எ-று.

பொ-ரை. முதிர்ச்சியில்லாத சிறு குரங்கு தன் எதிர்வந்த தந்தையைப் பயற்றங்காயின் நெற்றைக் கண்டாலொத்ததன் கைவிரலால் குத்தித் தன் கையை விரியச்செய்து அதிலிருக்கும் பொருளை அபகரிப்பதற் கிடமாகிய மலையைச்சார்ந்த நாட்டை யுடையானே! மனத்தில் ஒன்றுந்தன்மையை கொள்ளாதவரோடு செய்யும் நட்புத் தன்பக் தருவதே ஆம் என்பது.

ஞெமிர்தல் பிரித்தல்; ஞெமிர்த்திட்டு பிறவினையாகிய இறந்த கால வினையெச்சம்; ஞெமிர் பகுதி, து சாரியை, இது பகுதிப் பொருள் விகுதி, தகரத்தோற்றமும், உகரக்கேடும் சந்தி, அனைத்தும் ஒருபகுதி, உ வினையெச்ச விகுதி, டகரவொற்றிரட்டல் (முற்றிய ஓகாரமதலால்) விரித்தல், இதுவே காலங்காட்டியது பகுதியீற்று

உகரக்கேடு சந்தி. ஞெமிரென்னும் முதனிலை தன்வினை பிறவினை இரண்டுக்கும் பொதுவாயினும் இங்குப் பிறவினையாய் நின்றது. ஒற்றுமையுடைய நட்பின ரிருவருள் ஒருவர் தமக்கு வேண்டியபொருள் மற்றொருவரிடத்திலிருக்கக் காண்பாராயின் அவனைக் கேளா மலே வலியஎடுத்துக்கொள்ளவென்னும் பொருள் படும்படி மலையை வருணித்தமையால் அது பிறிதுமொழிதலின் பாற்படும். முற்று முத னிலைத் தொழிற்பெயர். அல் என்னும் பண்படி சந்த இன்பப் பொருட்டுத் திரிந்தது. ஞெமிர்த்திட்டு, மறிச்குமென்பவை செயப்படு பொருள் குன்றுவினைபோதலால் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டன.

O Lord of the mountain regions where the little monkey, with its finger like the bean-pod, pokes his father when it meets him and snatch away fruit from him. Friendship with the unreal is productive of evil. (7)

238. மூட்டுற்ற போழ்தின் மூடுகியென் ஞருயிரை
நட்டா ஞருவன்கை நீட்டேனே—னட்டான்
கடிமனை கட்டழித்தான் செவ்வுழிச் செல்க
நெடுமொழி வையக நக.

இ-ள். மூட்டு - (என்னுடு நட்புச் செய்தவனுக்கு) இடுக்கண், உற்றபோழ்தின் - நேர்ந்தகாலத்தில், மூடுகி - (அவனதைச் சொல்லு முன்) விரைந்து, என் ஆர் உயிரை - என்னுடைய அருமையாகிய உயிரை, நட்டான் ஒருவன்கை - அந்நட்டவனுகிய ஒருவன் கையில், நீட்டேனேல் - கொடேனுனல், நெடுமொழி - பெருமையாகிய மொழியைக் கூறுகின்ற, வையம் - அறிவுடையோர், நக - (கண்டு) அவமதித்துச் சிரிக்கும்படி, நட்டான் - தன்னுடு நன்புச் செய்தவனது, கடிமனை - மணஞ்செய்த மனைவியை, கட்டு அழித்தான் - கற்பழித்த தீயோன், செல்உழி - சென்ற இடமாகிய நரகத்தில், செல்க - (நானும்) செல்லக்கடவேன், எ-று.

பொ-ரை. என்னுடு நட்புச் செய்தவனுக்கு இடுக்கண்நேர்ந்த காலத்தில் அவனதைச் சொல்லுமுன் விரைந்து என்னுடைய அருமையாகிய உயிரைஅந்நட்டவனுகிய ஒருவன் கையில் கொடேனுனல், பெருமையாகிய மொழியைக் கூறுகின்ற அறிவுடையோர் கண்டு அவமதித்துச் சிரிக்கும்படி தன்னுடு நட்புச் செய்தவனது மணஞ் செய்த மனைவியைக் கற்பழித்த தீயோன் சென்ற இடமாகிய நரகத்தில் நானும் செல்லக்கடவேன் என்பது.

ஆரும்வேற்றுமைத் தொகை. விரி என்னும் சாதிப்பண்பு பண்பியை யுணர்த்தலால் பண்பாகுபெயர். அல்வன் குளிரன் என்பனபோல அஃறிணையொருமை யுணர்த்தும் அன் விகுதியோடு புணர்ந்து விரிய னெனவும் வரும்.

The absence of friendly nature in those whose appearance is pleasing is like the mingling of water with the milk provided for food. When men of proper understanding take to bad company, it is like the disporting of a cobra with a female snake. (10)

Chapter XXV—Possession of practical Wisdom

25-ஆம் அதிகாரம் : அறிவுடைன்மை.

அஃதாவது உண்மை யறிவுடையாஞகுதலை யுணர்த்துவது. கல்வியறிவுடையாஞகிப் பெரியாரைப் பிழையாமல் நடந்து நல்லினஞ் சேர்ந்து இருவகை நட்பினையுந் தழுவி நடந்து ஒரு காரியஞ் செய்யலுற்றானுக்கு இஃது இன்றியமையாததாதலால், கூடாநட்பின் பின் வைக்கப்பட்டது.

241. பகைவர் பணிவிட நோக்கித் தகவுடையார்
தாமேயு நாணித் தலைச்செல்லார் காணு
யிளம்பிறை யாயக்காற் றிங்களோச் சேரா
தணங்கருந் துப்பி னரா.

இ-ள். தகவு உடையார் - நடுவுநிலைமையுடைய திண்ணியர், பகைவர் - பகைவர்கள், பணிவுஇடம் - தளர்ந்ததாகிய நிலைமையை, நோக்கி - அறிந்து, நாணி -(போர்க்குச்செல்ல)நாணி, தாமே - தாமேயாக, தலைச்செல்லார் - (அப்பகைவரிடத்துப் போர்வேண்டி) செல்லார், அணங்கு அரு - (பிறிதொன்றினுல்) தன்பமில்லாத துப்பின் - வலியையுடைய, அரா - இராகுவென்னும் பாம்பு, இளபிறை - இளமையாகிய பிறை, ஆயக்கால் - ஆயினுல், திங்களை - சந்திரனிடத்து, சேராது - (தனக்குள்ளாக்க) செல்லமாட்டாது, எ - று.

பொ-ரை. நடுவு நிலைமையுடைய திண்ணியர் பகைவர்கள் தளர்ந்ததாகிய நிலைமையை அறிந்து போர்க்குச் செல்ல நாணிதாமேயாக அப்பகைவரிடத்துப்போர்வேண்டிச்செல்லார். பிறிதொன்றினுல் தன்பமில்லாத வலியையுடைய இராகுவென்னும் பாம்பு இளமையாகிய பிறை ஆயினுல் சந்திரனிடத்து (தனக்குள்ளாக்க)ச் செல்லமாட்டாது.

தகமே என்னும் பிரிநிலை ஏகாரத்தால் அவர் தம்மேல்வரின் செல்வாரென்பதாயிற்று. உம்மை சாரியை. செல்லாமைக்குக் காரணம் நிலைவுநிலைமையாதலால் அதனை அவர்க்குடைமையாக்கித் 'தகவுடையார்' என்றார். அராவைத்துப்பினென விசேடித்தமையால் தகவுடையார் இண்ணியரென்பது பெற்றாம். நாணுதல் தம்வீரத்தக்கு மாசுவருதலைக் கருதி. பிறை தொழிலுடியாகப் பிறந்தபெயர்; பிற பகுதி, ஐ வினைமுதற்பொருண்மைவிகுதி, பகுதியீற்று அகரக்கேடு கடைக்குறை. காணுய் முன்னிலை ஒருமையசை.

Behold, strong invulnerable serpent does not draw near the moon in its crescent days (with a view swallow it.) The reasonable men when they see their enemies at a disadvantage, would feel it very much and never stoop to advance against them. (1)

242. நளிகடற் றண்சேர்ப்ப நல்கூர்ந்த மக்கட்
கணிகல மாவ தடக்கம் பணிவில்சீர்
மாத்திரை யின்றி நடக்குமேல் வாழூர்
கோத்திரங் கூறப் படும்.

இ - ள். நளிகடல் - பெரியகடலினது, தண்சேர்ப்ப - குளிர்ச்சியுடையதுறையை யுடையானே, நல்கூர்ந்த மக்கட்கு - பொருளில்லார்க்கும், அணிகலம் ஆவது - அழகுசெய்யவல்ல ஆபரணமாவது, அடக்கம் - பணிந்துநடக்குதலாம், பணிவு - அடக்கம், இல் - இல்லாமல், சீர்மாத்திரை - (தம்வறிய) நிலைமையினதளவு, இன்றி - இல்லாமல், நடக்குமேல் - நடப்பாராயின், வாழும்ஊர் - (அவர்) வாழ்கின்ற ஊராரால், கோத்திரம் - (அவருடைய)பிறப்பின்மூலம், கூறப்படும் - நிந்திக்கப்படும், ஏ - று.

பொ-ரை. பெரியகடலினது குளிர்ச்சியாகிய துறையையுடையானே பொருளில்லார்க்கு அழகு செய்யவல்ல ஆபரணமாவது பணிந்து நடக்குதலாம். அடக்கமில்லாமல் தம் வறிய நிலைமையினதளவு இல்லாமல் நடப்பாராயின் அவர் வாழ்கின்ற ஊராரால் அவருடைய பிறப்பின்மூலம் நிந்திக்கப்படும் என்பது.

இல் என்னும் பண்பின் முதனிலை வினையெச்சக் குறிப்புப் பொருள்பட நின்றது. அடக்கம் அவர்க்கு வேண்டியவற்றைப் பிறரால் உபகரிப்பிக்கின்றமைபற்றி அதனை அணிகலம் என்றார். நடக்கு மேலென்பது இழிபினுல் பன்மைப்பா லொருமைப்பாலாயிற்று

"கொடியார்வருமென்று குலாவுவதே" எனப்பிறர் கூற்றுணுமுணர்க. கோத்திரமென்றது தந்தை முதலியோரை. ஊர் இடவாகுபெயர்.

O Lord of the cool shore of the spreading sea! The best adornment of the poor is humility. But if their behaviour is anything but that, his fellow towns-people will talk of their race in a contemptuous way. (2)

243. எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னுட் டவருஞ் சுவர்க்கம் புகுதலாற்
றன்னுற்ற ஞ்கு மறுமை வடதிசையுங்
கொன்னுளர் சாலப் பலர்.

ஓ-ள். எந்நிலத்து - எத்தன்மையதாகிய நிலத்தில், வித்திடினும் - நட்டாலும், காஞ்சிரம் - எட்டிமரத்தினது, காழ் - விதைகள், தெங்கு ஆகா - தென்னைமரங்களாக முளையா, (அதுபோல) தெற்கு நாட்டவரும் - தென்திசையிற் பிறந்தவரும், சுவர்க்கம் புகுதலால் - (அறிவுடைமையால் அறஞ்செய்து) சுவர்க்கத்தில் புகுதலாலும், வடக்குத் திசையும் - வடதிசையிலும், கொன் - (நரகத்துக் கேதுவாகிய) அச்சந்தருஞ் செயல்களை, ஆளர் - விடாது செய்பவர், பலர் ஆதலால் - பலருளராதலாலும், தன் ஆற்றான் - (ஒருவனுக்கு) தன் செய்கையாலே, மறுமை - மறுமைப்பயன், ஆகும் - உளதாம், எ-று.

பொ-ரை. எத்தன்மையதாகிய நிலத்தில் நட்டாலும் எட்டிமரத்தினது விதைகள் தென்னைமரங்களாக முளையா; அதுபோலத் தென்திசையிற் பிறந்தவரும் அறிவுடைமையால் அறஞ்செய்து சுவர்க்கத்தில் புகுதலாலும் வடதிசையிலும் நரகத்துக் கேதுவாகிய அச்சந்தருஞ் செயல்களைவிடாது செய்பவர் பலருளராதலாலும் ஒருவனுக்குத் தன் செய்கையாலே மறுமைப் பயன் உளதாம் என்பது.

எந்தச் சாதியிற் பிறக்கினும் அவரவரியற்கையறிவு மாறுதென்பது கருத்து. பிதிர் தேவதைகளது கருமங்களைச் செய்வார் தன்னை நோக்குதற்குரியதும், நரகமிருப்பது மீதலால் தென்திசையை யிழிவினதாகவும், மங்கலகாரியங்கள் செய்வார் தன்னை நோக்குதற்குரியதும், போக பூமியிருப்பது மாதலால் வடதிசையை உயர்வினதாகவுங் கொண்டோர். கொன் அச்சப்பொருளதாகிய இடைச்சொல்; அது அச்சத்துக் கேதுவாகிய செயலின்மேலது. ஆற்று முதனிலைத் தொழிற்பெயர். ஆதலால் என்னுஞ் சொல் எஞ்சியது.

Sow in whatever soil you please *nux vomica* seed will never grow into a palm. As even the men in the South is capable of entering heaven, one's place in the next birth depends on one's own action. There are many from the North who are denizens of hell. (3)

244. வேம்பி னிலையுட் கனியினும் வாழைதன்
நீஞ்சுவை யாதுந் திரியாதா—மாங்கே
வினந்தீ தெனினு மியல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்க மரிது.

இ-ன். வாழை - வாழைக்காய், வேம்பின் இலையுள் - வேப்பிலையினுள் இருந்து, கனியினும் - பழுத்தாலும், தன் நீசுவை - தனது இயற்கையாகிய இனியசுவை, யாதும் - சிறிதும், திரியாது - மாறாது, ஆங்கே - அதுபோலவே, இயல்பு உடையார் - இயற்கையாகிய நல்லறிவுடையார், இனம் - (தாம் சேர்ந்த) இனம், தீது எனினும் - தீயதாயினும், கேண்மை - (அவ்வினத்தினது) நட்பினால், மனம் - (தம் முடைய) மனம், தீதாம் பக்கம் - தீயதாகும் பக்கம், அரிது - இலது, எ-று.

பொ - ரை. வாழைக்காய் வேப்பிலையினுள் இருந்து பழுத்தாலும் தனது இயற்கையாகிய இனியசுவை சிறிதும் மாறாது; அதுபோலவே இயற்கையாகிய நல்லறிவுடையார் தாம் சேர்ந்த இனம் தீயதாயினும் அவ்வினத்து நட்பினால் தம்முடைய மனம் தீயதாகும் பக்கம் இலது என்பது.

வாழை முதலாகுபெயர். மரத்தை யுணர்த்துகையில் தொழிலடியாகப் பிறந்த காரணப் பெயர்; வாழ் பகுதி, ஐ வினைமுதற் பொருண்மை விகுதி. ஒரு வாழையி னடியினின்று கன்றுகளும், அவை வளர்ந்தபின் அவற்றினடியினின்றும் மற்றும் கன்றுகளும் இடைவிடாது உண்டாதல்பற்றி அம்மரம் அப்பெயர்த்தாயிற்று. இயற்கையாகிய நற்குணமுடையார் தாஞ்சேர்ந்த தீயினத்தினால் குணம் வேறுபடாரென்பது கருத்து.

Though ripened amidst margosa leaves, the plantain fruit never loses its fragrant flavour. So even if good men are in the midst of evil beings, they hardly change their good nature. (4)

245. கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலைசார்ந்து
மூப்பீண் டுவரி பிறத்தலாற் றத்த

மினத்தனைய ரல்ல ரெறிகடற்றண் சேர்ப்ப
மனத்தனையர் மீக்களென் பார்.

இ-ள். எறி - (அலைகளை) எறிகின்ற, கடல் - கடலினது, தண் சேர்ப்ப - குளிர்ச்சியாகிய துறையையுடையோனே, கடல்சார்ந்தும் (நன்னிலம் உவரையுடைய) கடலைச்சார்ந்திருந்தும், இன்நீர்பிறக்கும்- அதில் இனிமையாகிய நீர்பிறக்கும், மலைசார்ந்தும் - (உவரில்லாத) மலையை (உவர்நிலம்) சார்ந்திருந்தும், உப்பு ஊண்டு - அதில் உப்பாகிய சுவைமிகுந்த, உவரி பிறத்தலால் - உப்புநீர் பிறத்தலினால், மக்கள் என்பார் - மக்களென்று சொல்லப்படும் கல்வியறிவுடையார், தம்தம்-தம்தம்முடைய, இனத்து - (சேர்ந்த) இனத்தினை, அனையர் அல்லர்- ஒத்தசெயலினரல்லர், மனத்து - தம்மனத்தை, அனையர் - ஒத்த செயலினராவர், எ-று.

போ-ரை. அலைகளை எரிகின்ற கடலினது குளிர்ச்சியாகிய துறையையுடையோனே! நன்னிலம் உவரையுடைய கடலைச்சார்ந்திருந்தும் அதில் இனிமையாகிய நீர்பிறக்கும். உவர்இல்லாதமலையை உவர்நிலம் சார்ந்தும் அதில்உப்பாகிய சுவைமிகுந்த உப்புநீர் பிறத்தலினால் மக்களென்று சொல்லப்படும் கல்வியறிவுடையார் தம்தம் உடையசேர்ந்த இனத்தினை ஒத்த செயலினரல்லர். தம் மனத்தை ஒத்த செயலினராவர் என்பது.

மக்களெனல் கல்வியறிவுடையோரை யாதலால் அவரைவாளா மக்களென்பார் என்றார். இதுகுறி மாத்திரையாய் உவரியென்பது உப்புநீரை யுணர்த்தலால் உப்பீண்டென விசேடிக்கப் பட்டது, "பனைக்கைக்கரி" என்பதுபோல. என்பாரென்பதில் படு விகுதி தொகுத்தலாயிற்று. சார்ந்தென்னும் வினையெச்சங்களிரண்டுக்கு நன்னிலம், உவர்நிலமென்னும் வினைமுதல்கள் எஞ்சிநின்றன.

Close by the sea sweet waters very often spring up. Whereas it is sometimes found the water that gushes out from the mountain side is saltish. O Lord of cool shore of the dashing sea! men's conduct depends upon the bent of their mind and not upon the nature of classes from which they have sprung up. (5)

246. பூராஅரைப் புன்னை பீடுகடற் றண்சேர்ப்ப
ஓவாராஅ லுள்ளுமோர்ட்டலுஞ் செய்பவோ நல்ல
மரூஉச்செய் தியார்மாட்டுந் தங்கு மனத்தார்
ஓராஅஅய்ச் செய்யாமை நன்று.

இ-ள். பராரை - பருத்த அரையையுடைய, புன்னை-புன்னை மரங்கள், படி - உண்டாகின்ற, கடல் - கடலினது, தண்சேர்ப்ப - குளிர்ச்சியாகிய துறையையுடையானே, யார்மாட்டும் - எல்லாரிடத்தும், நல்லமரூஉச்செய்து - மிக்கநட்பைச்செய்து, தங்கும்மனத்தார் - (அந்நட்பில்) நீங்குதலில்லாத மனமுடைய அறிவுடையார், ஓராலும் - (நட்டாரிடத்து ஒருமுறை) பிரிதலேயும், ஒட்டலும் - (பின்) கூடுதலேயும், செய்பவோ - செய்யார், (ஆதலால்) விராய் - (ஒருவரோடு ஆராயாமல்மனம்) கலந்து, செய்யாமை - நட்புச் செய்யாமையே, நன்று - நன்மையைத்தருவது, எ-று.

பொ-ரை. பருத்த அரையையுடைய புன்னை மரங்கள் உண்டாகின்ற கடலினது குளிர்ச்சியாகிய துறையையுடையானே! எல்லாரிடத்தும் மிக்க நட்பைச்செய்து அந்நட்பில் நீங்குதலில்லாத மனமுடைய அறிவுடையார் நட்டாரிடத்து ஒருமுறை பிரிதலேயும் பின் கூடுதலேயும் செய்யார். ஆதலால் ஒருவரோடு ஆராயாமல் மனம் கலந்து நட்புச்செய்யாமையே நன்மையைத்தருவது என்பது.

மரூஉ இம்முதனிலைதிரிந்த தொழிற்பெயர் ஈறுபெடையால் மருவுதலென்னும் பொருள்படநின்றசொல்லிசையளபெடை; இதனை ஆடூஉ, மகடூஉ என்பனபோல இயற்கையளபெடையென்பாருமுளர். விராஅய் இவ்வினையெச்சத்தில்வந்த அளபெடை செய்யுளிசை நிறைக்கவந்தது; ஆகாரம் நான்குமாத்திரை யளபெடாவிடின் வெண்பாவில் வரப்பெறாத ஆசிரியத்துக்குரிய நேரொன்றாசிரியத்தளையாய்ச் செப்பலோசை குன்றுமாறறிக. பிரிதலுங் கூடுதலுஞ் செய்யாமல் யாவரிடத்தும் தங்குமனத்தார் ஒருவரை ஆராயாமல் நட்புக்கொண்டபின் அவர் தீயோராயிருப்பின் அந்நட்பு நீங்குதருதலால் 'விராய்ச் செய்யாமை நன்று' எனோர். பராரை மரூஉ. ஓரால் ஆலீற்றுத் தொழிற்பெயர்.

O Lord of the cool shore of the sea, where flowrish the *punnai* trees of immense size! Persons of pure mind will not for sometime keep aloof from good men and at other times be intimate with them; it is better not to acsociate very intemately with any of the people (without studying them). (6)

247. உணர வுணரு முணர்வுடை யாரைப்
புணரிற் புணருமா மின்பம்—புணரின்
றெரியத் தெரியுந் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமா நோய்.

இ-ள். உணர-(எல்லா நூற்பொருள்களையும்) அறியும்படி, உணரும்-ஆராயும், உணர்வுடையாரை-கூரறிவுடை யாரிடத்து, புணரின்-கட்புச்செய்தால், இன்பம்புணரும்-சுகம்சேரும், தெரிய-(நூற்பொருள்கள்) விளங்கும்படி, தெரியும்-ஆராய்ந்தறியும், தெரிவு இல்லாதாரை-அறிவில்லாதவரை, புணரின்-கூடுதலினின்றும், பிரிய-பிரிவதினால், நோய்-துன்பம், பிரியும்-நீங்கும், எ-று.

பொ-ரை. எல்லாநூற்பொருள்களையும் அறியும்படி ஆராயும் கூரறிவுடையாரிடத்து நட்புச்செய்தால் சுகம் சேரும். நூற்பொருள்கள் விளங்கும்படி ஆராய்ந்தறியும் அறிவில்லாதவரைக் கூடுதலினின்றும் பிரிவதினால் துன்பம் நீங்கும் என்பது.

இன்பமாவது உணர்வுடையாரை ஒருவன் கூடுவானாயின் அவனுக்கு அவரால் கூறப்படும் நூற்பொருள்களைக் கேட்பதினாலாகும் இன்பமேயன்றி அவரோடு சேர்க்கையால்வரும் நல்லொழுக்கத்தாலும், பிறரால் பழிக்காமையாலும் உண்டாகுமின்பமுமாம். துன்பமாவது தெரிவிலாதாரைக் கூடுவானாயின் அவரால்கூறப்படும் பயனில் சொல்முதலியன கேட்பதினாலுண்டாகுந் துன்பமேயன்றி அவரோடு சேர்க்கையால்வரும் தீயொழுக்கத்தாலும், பிறராற் கூறப்படும் பழிப்பினாலும் வருந்துன்பமுமாம். பின்னுள்ள புணரினென்பதில் புணர் முதனிலைத்தொழிற்பெயர்; இன் நீங்கற்பொருளதாகிய ஐந்தனுருபு. இதுசொற்பொருட் பின்வருநிலை.

As you make friendship with those who know the value of friendship, the pleasure resulting from it, will gradually grow. As you get rid of those who cannot understand the value of friendship, the pain that resulted from the company will vanish. (7)

248. நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானு—நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.

இ-ள். நல்நிலைக்கண்-நன்மையாகிய நிலையில், தன்னை நிறுப்பானும்-தன்னை நிறுத்தவல்லவனும், தன்னை நிலைகலக்கி-தன்னை நன்னிலையினின்று தவறுதல்செய்து, கீழ் இடுவானும்-தீயநிலைமையில் இருத்தும் மெல்லியனும், நிலையினும்-நன்னிலையினின்றும், மேல் மேல் மேலு மேலும், உயர்த்து நிறுப்பானும்-உயரச்செய்து நிறுத்தவல்லவ

னும், தன்னைத்தலையாக-தன்னை (யாவரினும்) முதன்மையுள்ளவனாக, செய்வானும்-செய்யவல்லவனும், தான்-தானே ஆம், எ-று.

பொ-னை. நன்மையாகிய நிலையில் தன்னை நிறுத்த வல்லவனும், தன்னை நன்னிலையினின்று தவறுதல் செய்து தீயநிலைமையில் இருத்தும் மெல்லியனும், நன்னிலையினின்றும் மேலு மேலும் உயரச்செய்து நிருத்தவல்லவனும், தன்னை யாவரினும்முதன்மையுள்ளவனாகச் செய்யவல்லவனும் தானே ஆம் என்பது.

நன்னிலைமையில் தன்னை நிறுத்தலுமுதலிய மூன்றுக்கும் கன்முயற்சியும், கீழ்திதலுக்கு அஃதில்லாமையும் காரணமாயினும் அவற்றை அறிந்து செய்தலுந் செய்யாது தவிர்தலும் தானுதலால் அவன் மேல்வைத்துக் கூறினர். உயர்த்து இறந்தகால வினையெச்சம்; தன் வினை பிறவினை யிரண்டிற்கும் பொதுவாயினும் பிறவினைக்குரியதாய் நின்ற உயர் பகுதி, த் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ வினையெச்சவிகுதி; பிறவினைப்படுத்தும் தகுவிகுதிபெற்றல் உயர்த்து என்பது முதனிலையாகி உயர்த்தி எனவரும். கீழ், தலை பண்பாகுபெயர்.

It is oneself(ie by his own action) that tries to keep himself on in good path. It is he that brings his own down fall; it is he that raises his own state. It is he that makes himself prominent and chief among men. (8)

249. கருமை வரிசையாற் கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாருஞ் சேறல்—அருமையின்
ஓதை மரற்று மொலிகடற் றண்சேர்ப்ப
போதகமை யன்ற தறிவு.

இ-ள். அருமைபின்-அருமையாகிய முறைமையினால், ஓதம்-அலைகள், அரற்றும்-இரைகின்ற, ஒலிகடல்-ஒலிக்கின்றகடலினது, தண் சேர்ப்ப-குளிர்ந்த துறையையுடையானே, கருமவரிசையால்-(முன்செய்த) வினைகளினது முறையால், கல்லாதார்பின்னும்-கல்வியறிவில்லார்பின்னும், பெருமை உடையாரும்-பேரறிவுடையாரும், சேறல்-சென்றுயிர்வாழ்தல், போதகமை அன்று-அறிவின்மையாலன்று, அது-பின்செல்லல், அறிவு-அறிவினாலாம், எ-று.

பொ-னை. அருமையாகிய முறைமையினால் அலைகள் இரைகின்ற ஒலிக்கின்ற கடலினது குளிர்ந்த துறையையுடையானே! முன் செய்த வினைகளினது முறையால் கல்வியறிவில்லார்பின்னும் பேரறி

வுடையாரும் சென்றுயிர்வாழ்தல் அறிவின்மையாலன்று; பின்செல்லல் அறிவிலாம் என்பது.

கருமவரிசையென்றது நல்வினை தீவினையிரண்டிற் செய்யப்பட்டமுறை பிறழ்ந்து வராமையை. பெருமையுடையார் தாம்கல்லாதார் பின்சென்று உயிர்வாழ்தற்குக்காரணம் முன்செய்த தீவினைப்பயனென நன்குணர்வாராதலின் அதினைப்பேதைமையன்றென்ற மாத்திரையினமையாது அறிவுஎன்றுங் கூறினார். ஓசைம் இருவினைகள்போலச்சிறிதும்பிறழாமல் முறையாகவருதல்பற்றி அருமரபினென விசேடிக்கபட்டது. ஒலி வினைத்தொகைக்குறிப்பரிதலால் கரமிகாதியல்பாயிற்று. இஃது விசேடியத்தினியல்புணர்த்தி நின்றவிசேடணம். அது பெயராயின் ஒலிக்கடலெனைக்கரமிக்கு நிற்கும்.

If persons of good rank and position follow men unlearned in the course of their affairs, O Lord of the cool shore of sounding sea with roaring billows ! it is not folly but wisdom. (9)

250. கருமமும் முள்படாப் போகமும் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—வொருநிலையே
மூட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்.

இ-ள். கருமமும்-(பொருளைடைதற்குக்காரணமாகிய) முயற்சிக்கும், உள்படா-உள்ளாகிநடந்து, போகமும்-(தேடியபொருளால்) சுகங்களையும், துவ்வா-அநுபவித்து, தருமமும்-(ஈகையாகிய) அறத்தையும், தக்கார்க்கே-நல்லவர்க்கே, செய்யா-செய்து, மூட்டுஇன்றி-குறைவுபாடில்லாமல், மூன்றும்-இம்மூன்று செயலும், ஒருநிலையே-ஒருதன்மையனவாகவே, முடியுமேல்-(ஒருவன்) நிரம்புவாழ்வினின், அஃது-அந்நிரம்புதல், பட்டினம்-(தூரதேசங்களுக்குச்சென்றுமீண்டு) பட்டினத்தை, பெற்றகலம்-அடைந்தமரக்கலமாம், என்ப-என்று (அறிவுடையோர்) சொல்லுவர், எ-று.

பொ-ரை. பொருளைடைதற்குக் காரணமாகிய முயற்சிக்கும் உள்ளாகிநடந்து, தேடியபொருளால் சுகங்களையும் அநுபவித்து, ஈகையாகிய அறத்தையும் நல்லவர்க்கேசெய்து, குறைவுபாடில்லாமல் இம்மூன்று செயலும் ஒரு தன்மையனவாகவே ஒருவன் நிரம்புவாழ்வினின், அந்நிரம்புதல் தூரதேசங்களுக்குச்சென்று மீண்டு பட்டினத்தை அடைந்த மரக்கல மாம் என்று அறிவுடையோர் சொல்லுவர் என்பதி.

கருமமென்பதனீற்றில் நான்கனுருபு தொகுக்கப்பட்டது. முயற்சிக்கு உள்ளாகி நடத்தலாவது முடிவுபெறும்வரையும் சோம்பியிராமல் அதனைச்செய்துமுடித்தல். ஒரு தன்மையனவாகுதல் கருமத்துக்கு உள்படலீ, போகத்தையுண்ணல், தக்கார்க்குத் தருமத்தைச் செய்தலாகிய மூன்றும் ஒன்றினொன்று குறைவுபாடின்மை. முடிதலினருமைநோக்கி அதனைப்பட்டினத்தைக்கடைதல் என்றார். தான் வலியனாயிருந்து மற்றை இரண்டையும் நடத்தவேண்டுதலின் போகத்தைத் தவ்வலும் அவற்றோடெண்ணப்பட்டது. ஏ இரண்டில் முன்னது பிரிநிலை; பின்னது தேற்றம்.

If a man has done worthy deeds, enjoyed all seemly pleasures, done deeds of charity to worthy men, if he has in this one state accomplished all these three without impediments, people will say of him:—this is a ship which has safely reached the harbour. (10

Chapter XXVI— The want of wisdom

26-ஆம் அதிகாரம்: அறிவின்மை.

அஃதாவது உண்மையறிவிலனாகுதலே உணர்த்துவது. அறிவுடைமை அறிவின்மையாகிய இரண்டும் தங்காரியமாகிய நற்செயல், தீச்செயல்களின் மேல்நின்றன. அதிகார முறைமை கூறுமலே விளங்கும்.

251. நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வ—மெண்ணுங்கால்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்.

இ-ள். எண்ணுங்கால்-ஆராயின், நுண் உணர்வு-கூரறிவு, இன்மை-(ஒருவனுக்) இலனாகுதல், வறுமை-வறுமையாம், அஃது உடைமை-அக்கூரறிவை யுடையனாகுதல், பண்ணி-தேடிவந்திறுல், பணைத்த-மிகுந்த, பெருஞ்செல்வம்-பெருமையைத்தருஞ் செல்வமாம், பெண்-பெண்தன்மையை, அவாய்-விரும்பி, ஆண்-ஆண்தன்மையை, இழந்த-(அவ்வவாவியவளவு) நீங்கிய, பேடி-பேடியானவள், கண்-(பார்ப்பவருடைய) கண்கள், அவாத்தக்க-விரும்பத்தகுந்த, கலன்-ஆபரணங்களை, அணியாளோ-(தன்முயற்சியால்) அணிந்துகொள்வாளோ, அணிந்துகொள்வள், (ஆதலால்) பொருளுடைமை செல்வமும், அஃதில்லாமை வறுமையுமாகா, எ-று.

பொ-ரை. ஆராயின் கூரறிவு ஒருவன் இலனாகுதல் வறுமையாம். அக்கூரறிவையுடையனாகுதல் தேவரினும் மிகுந்த பெருமையைத்தருஞ் செல்வமாம். பெண்தன்மையை விரும்பி ஆண்தன்மையை அவ்வவாவினளவு நீங்கிய பேடியானவள் பார்ப்பவருடைய் கண்களை விரும்பத்தகுந்த ஆபரணங்களைத் தன் முயற்சியால் அணிந்து கொள்ளாளோ அணிந்து கொள்வள். ஆதலால் பொருளுடைமை செல்வமும் அஃதில்லாமை வறுமையுமாகா வென்பதூஉம்.

ஈற்றில் தந்தரைத்தன இசையெச்சம். அவாவுதலும் இழத்தலும் இலக்கணை. அவாய் இறந்தகாலவினையெச்சம். அவாவ என்னும் வினையெச்சம் ஈறுதொகுக்கப்பட்டது. துண்ணுணர்வில்லாத போது பொருட்செல்வம் பயன்படுதலின்றிக் கழிகின்றமையாலும், அவ்வுணர்வுடைமை நிலையுடையதாகி இருமையின்பவினைவகளைத்தருதலாலும் அதனைப் பெருஞ்செல்வம் என்றார்.

Want of accurate perception of things is poverty, and the possession of it is a very great and abundant wealth. Will not a enuch who looks more like a woman than man adorn herself with jewels that is pleasing to her eyes. (1)

252. பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரேற்—றெல்சிறப்பி
னுவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.

இ-ள். ஆன்ற-நிறைந்த, பல்கேள்வி-பலவகையாகியகேள்விகளினால் ஆம், பயன் உணர்வார்-பயனுணர்ந்தபுலவர், பாடு அழிந்து-(பொருளின்மையால்) பெருமைகெட்டு, அல்லல் உழப்பது-துன்பப்படுதற்குக்காரணத்தை, அறிதிரேல்-(உலகீர்) அறிந்துகொள்ளவேண்டின், தெல்-மிக்கபுத்தொடங்கிவரும், சிறப்பின்-சிறப்பினையுடைய, நாவின்கிழத்தி-(கற்பவருடைய) நாவில்வசிப்பதற்குரியசரச்சுவதி, உறைதலால்-(அவரிடத்து) வசிப்பதினால், பூவின்கிழத்தி-செந்தாமரைமலரில்வசிக்குந்திருமகள், புலந்து-(அவரோடு) பிணங்கி, சேராள்-சேர்ந்திட்டாள் என்பது, எ-று.

பொ-ரை. நிறைந்த பலவகையாகிய கேள்விகளினால் ஆம்பயனுணர்ந்த புலவர் பொருளின்மையால் பெருமைகெட்டு துன்பப்படுதற்குக்காரணத்தை உலகீர்! அறிந்துகொள்ளவேண்டின், படைப்புத்

தொடங்கிவரும் சிறப்பினையுடைய (கற்பவருடைய) நாவில் வசிப்ப தற்குரிய சரச்சுவதி அவரிடத்து வசிப்பதினால் செந்தாமரைமலரில் வசிக்கும் திருமகள் அவரோடு பிணங்கிச் சேரமாட்டாள் என்பது.

நாவின்கிழத்தி உறைதற்குக்காரணம் கேள்விப்பயனுணர்வார் நன்கு பாராட்டுதலாதலால் பூவின்கிழத்திக்குத் தன்மருகியைப்பாரா ட்டுவோரோடு புலவியுண்டாயிற்றென்க. அறிதிர் முன்னிலைப்பன்மை எதிர்காலமுற்று; காலங்காட்டுவது தகா இடைநிலை. எனிலென்ப தன் மரூஉ ஆகிய ஏலென்பது தான்சார்ந்த வினைமுற்றை வினையெ ச்சமாக்குமியல்புள்ளது. இது தற்குறிப் பேற்றவணி.

Persons of varied learning of very great excellence are subject to much misery. This you see. As 'the lady of the tongue' (goddess of learning) abides with them, 'the lady of the flower' (goddesss of wealth) draws not near because of jealousy. (2)

253. கல்லென்று தந்தை கழற வதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்—மெல்ல
வெழுத்தோலை பல்லார்முன் னீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும்.

இ-ள். கல் என்று-(கல்வியை) கற்றுக்கொளென்று, தந்தை-பிதா, கழற-சொல்ல, அதனை-அச்சொல்லை, ஓர்சொல் என்று-ஒப்பற்ற சொல்லென்று, கொள்ளாது-ஏற்காமல், இகழ்ந்தவன்-(இளமையில்) அவமதித்தவன், பல்லார்முன்-பலர்முன்பு, எழுத்து ஓலை-(எழுதிய) எழுத்தையுடைய ஓலையை, மெல்லநீட்ட-(தந்தை) மெள்ளக் கொடுத்ததினால், இளியா-(அவனை) இழித்துப்பேசி, வழு-(காயமாகிய) குற்றத்தைத்தரத்தக்க, கோலை-தடியை, கொண்டுவிடும்-(கையில்) கொள்ளாமலிராண், எ-று.

பொ-ரை. கல்வியைக்கற்றுக்கொளென்று பிதா சொல்ல அச் சொல்லை ஒப்பற்ற சொல்லென்று ஏற்காமல் இளமையில் அவமதித்த வன் பலர் முன்பு எழுதிய எழுத்தையுடைய ஓலையை தந்தை மெள்ளக்கொடுத்ததினால அவனை இழித்துப்பேசி, காயமாகிய குற்றத்தைத் தரத்தக்க தடியைக் கையில் கொள்ளாமலிரான் என்பது.

கல்லென்பது ஆய் விகுதிகெட்ட ஏவலொருமைமுற்று. எழுத்து தொழிலடியாகப்பிறந்தபெயர். எழுதென்னும்முதனிலை செயப் படுபொருண்மை விகுதியாகிய ஐ புணர்ந்து கெட்டமாத்திரையில்

பகுதி ஒற்றிப்பட்டிமுடிந்தது. இவ்வாறன்றித் தல்விகுதி பிணர்ந்து கெட்டமாத்திரையில் முதனிலை எழுத்தெனத்திரிந்தமையால் முதனிலைதிரிந்ததொழிற்டெயரெனப்பட்டு, வரிவடிவினை உணர்த்தலால் தொழிலாகுபெயரெனினும் பொருந்தும். கல்வியறிவில்லாத ஒருவன் தாய்தந்தையர்களே வழிபாடுசெய்தலும் அறியானென்பது கருத்து.

When the father said to his son "you had better learn" the son who did not heed this, when a palm scroll letter is put into his hands to be read before an assembly, will, with contempt, take up a club to knock (the man who gave the latter to him). ()

254. கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
விருப்பினு நாயிருந் தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத் தற்று.

இ-ள். உலகத்து-உலகத்தில், கல்லாது-(நூல்களை) கற்காமல், நீண்ட ஒருவன்-வளர்ந்த ஒருவன், நல் அறிவு ஆளர்-குற்றமற்றகல்வியறிவையாளுதலுடையாரது, இடைப்புக்கு-சபையிற்புகுந்து, மெல்ல இருப்பினும்-(அவர்பேசுதலை அறியமாட்டாமையால்) அடக்கமாக இருந்தாலுயினும், நாய் இருந்ததே அற்று-(அவனிருப்பு) நாயிருப்பு தேபோலும், இராது-அடக்க மில்லாமல், உரைப்பினும்-(ஏதேனு மொன்றை) பேசுவாலுயினும், நாய்குரைத்தது ஏ அற்று-(அப்பேசுதல்) நாய்குரைப்பதேபோலும், எ-று.

போ-ரை. உலகத்தில் நூல்களைக் கற்காமல் வளர்ந்த ஒருவன் குற்றமற்ற கல்வியறிவை யாளுதலுடையாரது சபையிற் புகுந்து அவர் பேசுதலை அறியமாட்டாமையால் அடக்கமாக இருந்தாலுயினும், அவனிருப்பு நாயிருப்பதேபோலும். அடக்கமில்லாமல் ஏதேனு மொன்றைப் பேசுவாலுயினும் அப்பேசுதல் நாய்குரைப்பதே போலும் என்பது.

கல்வி உலகத்தில் இன்றியமையாச் சிறப்பினதென்பதற்கு உலகத்து என்றும், அவனுடைய வளர்ச்சியை இழித்தற்கு நீண்ட என்றும், அவின் மக்களோடெண்ணப்படானென்பதற்கு நாய் என்றும், அவனிருப்பு அச்சபையினதழகைக் கெடுப்பதென்பதற்கு நாயிருந்தற்று என்றும், உரைத்தல் பொருளிலதும், அறிவுடையோர் செவிக்கு அருவருப்புள்ளது மென்பதற்கு நாய்குரைத்தற்று என்றுங்கூறினர். பிரிநிலை ஏகாரத்தை இருந்ததென்பதோடும், குரைத்ததென்பதோடுங்

கூட்டுக. மெல்ல பண்படியாகப் பிறந்த உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சம். இது லகரத்துக்கு ளகரம் போலியாய் மெள்ள எனவும் வழங்கும்.

If the man who had grown without education, goes and stays in a learned assembly, it is like the presence of a dog there; if he begins to open his month, it is like the barking of that dog. (4)

255. புல்லாப் புன்கோட்டிப் புலவ ரிடைப்புக்குக்
கல்லாத சொல்லுங் கடையெல்லாங் கற்ற
கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார் பொருண்மேல்
படாஅ விடுபாக் கறிந்து.

இ-ள். கடைஎல்லாம் - கீழ்மக்களெல்லாரும், புல்புல்லாத - புல்லறிவைப் பொருந்தாத, கோட்டி - சபையிலுள்ள, புலவரிடை - புலவர்நடுவில், புக்கு - (தாமே) சென்று, கல்லாத - கற்றுணராதவற்றை, சொல்லும் - எடுத்துச்சொல்லுவர், சான்றவர் - அறிவால் நிறைந்த மேன்மக்கள், கற்ற - தமக்குத் தெரிந்தனவற்றை, கடாயினும் - (கீழ்மக்கள்) வினவினும், பொருண்மேல் - அப்பொருளினிடத்து, படாஅல் - (அவரறிவு) பொருந்தாமல், விடுபாக்கு - நீங்குதலை, அறிந்து - தாம்அறிந்திருக்கின்றமையால், சொல்லார்-மௌனமாயிருப்பர், எ-று.

பொ-ரை. கீழ்மக்களெல்லாரும் புல் அறிவைப் பொருந்தாத சபையிலுள்ள புலவர் நடுவில் தாமே சென்று கற்றுணராதவற்றை எடுத்துச் சொல்லுவர். அறிவால் நிறைந்த மேன்மக்கள் தமக்குத் தெரிந்தனவற்றைக்கீழ்மக்கள்வினவினும் அப்பொருளினிடத்து அவரறிவு பொருந்தாமல் நீங்குதலைத் தாம் அறிந்திருக்கின்றமையால் மௌனமாயிருப்பர் என்பது.

புல்லாப்புல் என்பதைப் பின் மூன்றாக நிறுத்தி உரைக்க. அவையிலுள்ளாரது புன்மை புல்லாமைகளை அவையின்மேலேற்றியது ஓர் மரபுவழுவமைதி. புன்மை என்றது கல்வியறிவின்மையை. கடாஅயினும் என்னும் வினையெச்சத்தின் ஆகாபெடை தானில்லாவிடினுஞ் சிலகெடாமையால் செய்யுளிசை நிறைக்க வந்ததன்று; ஆகாபெடை யின்றியும் கடாயினென்பது வினையெச்சமாய் நிற்றலின் சொல்லிசை நிறைக்கவந்ததுமன்று; ஆகலின் இன்னிசை யளபெடையாம். மற்றொன்று செய்யுளிசை யளபெடை. விடுபாக்கு என்பதில் பாக்கீறு

தொழிற்பெயர் விகுதிப்பொருள்பட நின்றது. "அஞ்சுதும்வேபாக் கறிந்து" என்பதிலும் அப்பொருள்படலறிக. நீர் உறங்குவதனேன், அவர் நடப்பானேன் என மற்றும் வான் பானீறும் அப்பொருளனவாதல் காண்க.

The baser sort of men betake themselves to the assembly of the learned and utter some illiterate rubbish. But men with much learning will not part with their lore even thogh asked for knowing that they (askers) will not apply their mind to the import of what they would say. (5)

256. கற்றறிந்த நாவினர் சொல்லார்தஞ் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர்—பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி.

இ-ள். எஞ்ஞான்றும் – எந்நாளிலும், கற்று – (பல நூல்களையும்) கற்று, அறிந்த – (அவற்றின் பொருள்களை) உணர்ந்த, நாவினர் – (பிறர்க் கறிவுறுத்தும்) சொல்லாற்றலுடையார், தம் சோர்வு அஞ்சி – தம்மறதியை அஞ்சி, சொல்லார் – (உரைக்கப்படும் பொருளை முன் உள்ளத்தமைக்காமல்) சொல்லமாட்டார், மற்றையர் ஆவார் – கற்றறியாதவர், பகர்வர்–(பலவற்றை எடுத்து) சொல்லுவர், பனையின்மேல் – பனைமரத்தில், வற்றிய ஓலை – ஈரமில்லாத ஓலைகள், கலகலக்கும் – கலகலவென்றொலிக்கும், பச்சோலைக்கு – பசுமையாகிய ஓலைகளுக்கு, ஒலி இல்லை – ஒலித்தலில்லையாம், எ-று.

பொ-ரை. எந்நாளிலும் பல நூல்களையும் கற்று அவற்றின் பொருள்களை உணர்ந்து பிறர்க் கறிவுறுத்தும் சொல்லாற்றலுடையார் தம் மறதியை அஞ்சி உரைக்கப்படும் பொருளை முன் உள்ளத்தமைக்காமல் சொல்லமாட்டார். கற்றறியாதவர் பலவற்றை எடுத்துச் சொல்லுவர். பனைமரத்தில் ஈரமில்லாத ஓலைகள் கலகலவென்றொலிக்கும். பசுமையாகிய ஓலைகளுக்கு ஒலித்தலில்லையாம் என்பது.

சோர்வு யாவர்க்கும் ஒப்ப நிகழும் உயிர்க்குணமாகிய மறதி. நாக்கருவியாகுபெயராய்ச் சொல்லை யுணர்த்தியது. கலகலக்குமென்னும் முற்றில் கல்கல என்னும் பகுதி இரட்டைக்கிளவியாதலால் அதனைப் பிரிக்கிறது கொள்க. பச்சோலை என்பதில் பசுவென்னும் பண்படி தன்னெற்றிரட்டியது.

The learned will be afraid of giving utterance to what they know lest they would fail in the act; whereas the empty people will boldly utter what comes to their lips. The dried palm leaves on the tree make much noise at the rush of the wind whereas the green ones never do so. (6)

257. பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்றா
னன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்
குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா வாகுஞ் செவிக்கு.

இ-ள். நன்று - (தம்முயிர்க்கு) நன்மை தருவதனை, அறியாத மாந்தர்க்கு - உணரமாட்டாத மக்களுக்கு, அறத்து ஆறு - அறத்தினது பயன்களை, உரைக்குங்கால் - சொல்லுகையில், (அச்சொற் றொடர்கள்) குன்றின்மேல் - மலையின்மேல், கொட்டும் - கடாவப்படும், தறிபோல் - (மரத்தாற் செய்யப்பட்ட) மூளைகூர் சிதைவது போல, தலைதகர்ந்து - தம்தலை சிதைந்து, சென்று இசையா ஆகும் - போய்ப் பொருந்தாதன ஆகின்ற, செவிக்கு-(அவரது) காதுகளுக்கு, (அவ்வுரைத்தல்) பன்றி - பன்றிகளினது, கூழ் - கூழைவார்ப்பதற்குரிய, பத்தரில் - சிறு தொட்டியில், தேமா - மதுரமாகிய மாங்கனிகளை, வடித்தால் அற்று - பிழிந்தாற்போலும், எ-று.

பொ-ரை. தம்முயிர்க்கு நன்மை தருவதனை உணரமாட்டாத மக்களுக்கு அறத்தினது பயன்களைச் சொல்லுகையில் அச்சொற்றொடர்கள் மலையின்மேல் கடாவப்படும் மரத்தாற் செய்யப்பட்ட மூளைகூர் சிதைவதுபோலத் தம் தலை சிதைந்துபோய்ப் பொருந்தாதன ஆகின்ற அவரது காதுகளுக்கு அவ்வுரைத்தல் பன்றிகளினது கூழை வார்ப்பதற்குரிய சிறு தொட்டியில் மதுரமாகிய மாங்கனிகளைப் பிழிந்தாற்போலும் என்பது.

தலை என்றது சொற்றொடரினீற்றெழுத்தை. தேமா வடித்தற்றென்ற வுவமையால் சொற்றொடரினருமையும் பெருமையும் கெட்டுப் பயன்படா என்பதுபெற்றும். பின்னதாதலால் பயன் ஆறு எனப்பட்டது. தறி முதனிலைத் தொழிலாகுபெயர். ஆகுமென்னும் பெயரெச்சம் செவி என்னும் நிலப்பெயர் கொண்டது.

Preaching ways of virtue to men who can't comprehend what good ways are, is like pouring juice of sweet mangoes in a

food trough for the pig. Like the stake driven on the side of the rock, it will never enter into their ear at all. [7]

258. பாலாற் கழீஇப் பலநா ளுணக்கினும்
வாலிதாம் பக்க மிருந்தைக் கிருந்தன்று
கோலாற் கடாஅய்க் குறினும் புகலிலீர்ல்லா
நோலா வுடம்பிற் கறிவு

இ-ள். பலநாள் - எண்ணிறந்தநாள், பாலால்-பாலினால், கழீஇ-கழுவி, உணக்கினும் - உலர்த்தினாலும், வாலிதாம் பக்கம் - வெண்மையுடையதாகின்ற தன்மை, இருந்தைக்கு - கரிக்கு, இருந்தது அன்று - இருந்தது இல்லை, (அதுபோல) நோலாத - (கல்வியறிவு பெறுதற்கேற்ற) அறத்தைச் செய்யாத, உடம்பிற்கு - ஒருவனுக்கு, கோலால் - கோலினால், கடாய் - (அவன் காதில்) கடாவித் தொளை செய்து, அறிவு - அறிவை விளக்கும் பொருள்களை, கூறினும்-சொல்லினும், புகல் இல்லா - (அவை) புகுதல் இசையா, என்று.

பொ-ரை. எண்ணிறந்தநாள் பாலினால் கழுவி உலர்த்தினாலும் வெண்மையுடையதாகின்ற தன்மை கரிக்கு இருந்தது இல்லை. அது போலக் கல்வியறிவுபெறுதற்கேற்றஅறத்தைச்செய்யாதஒருவனுக்குக் கோலினால் அவன் காதில் கடாவித் தொளைசெய்து அறிவை விளக்கும் பொருள்களைச் சொல்லினும் அவை புகுதல் இசையா என்பது.

கழீஇ சொல்லிசையளபெடை. மற்றது செய்யுளிசை யளபெடை. பாலாற் கழுவுதல் கோலாற் கடாவுதலுக்கும், உணக்கல் கூறுதலுக்கும் உவமையெனக் கொள்க. இருந்ததென்பதும் நோலாதவென்னும் எதிர்மறைப் பெயரெச்சமும் ஈறு தொகுத்தலும், கூறினென்பது முதல் குறுக்கலும் பெற்றன. இப்பெயரெச்சம் காரணப் பொருட்டாய்க் காரியமாகிய உடம்பைக் கொண்டது. கூறமறிவினையுணருந்தன்மையிலனுதலாகிய இழிவுபற்றி அறிவிலானை உடம்பென்றார். இது திணைவழுவமைதி. வாலிது உரியடியாகப்பிறந்த குறிப்பு வினைப்பெயர்; வால் - பகுதி, இ - சாரியை, து-ஒன்றன்படர்க்கை விகுதி.

If charcoal is washed in milk and even dried for days together, it can never become white. Knowledge can never be imparted with advantage to those who are not in a position to avail themselves of it by their good deeds in the former birth. (8)

259. பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லா
இழிந்தவை காமுறூஉ மீப்போ—லிழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினர்க் கென்னுங்குந் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொற் றேர்வு.

இ-ள். பொழிந்து - (தேனை) சொரியாநின்று, இனிது நாறினும் - நன்மணம் மணக்கினும், பூ - மலரிடத்து, மிசைதல் - தேனுண்ணலுக்கு, செல்லாது - செல்லாமல், இழிந்தவை - இழிந்த பொருள்களை, காமுறும் - விரும்பி உண்கின்றீ, ஈப்போல - ஈயைப் போல, இழிந்தவை - அழிவாகிய கருத்துகள், கலந்தநெஞ்சினர்க்கு - பொருந்தியுள்ள மனமுடையார்க்கு, தக்கார் - மேன்மக்களுடைய, வாய் - வாயிலுண்டாம், தேன்கலந்த - இனிமையுள்ள, தேற்றச் சொல் - தெளிவைத்தருஞ் சொற்களினது, தேர்வு - துணிவு, என் ஆகும் - யாதுபயனைத்தரும். எ-று.

பொ-ரை. தேனைச் சொரியாநின்று நன் மணம் மணக்கினும் மலரிடத்துத் தேனுண்ணலுக்குச் செல்லாமல் இழிந்த பொருள்களை விரும்பி உண்கின்ற ஈயைப்போல, இழிவாகிய கருத்துகள் பொருந்தியுள்ள மனமுடையார்க்கு மேன்மக்களுடைய வாயிலுண்டாம் இனிமையுள்ள தெளிவைத்தருஞ் சொற்களினது துணிவு யாதுபயனைத் தரும் என்பது.

இனிதென்னும் பண்படியாகப் பிறந்தபெயர் நறுமணத்துக்காயிற்று. மூன்றுள்ள இழிந்தவை இடக்கரடக்கல். அவைபிணி முதலியவை. தக்காருடைய துணிவு அவர் சொல்லின்மே லேற்றப்பட்டது. வாயென வேண்டாது கூறியது அது தேன்கலந்த தேற்றச் சொல்லோடு பயிலும் சிறப்புணர்த்தற்கு. உயர்ந்தோருடைய சொல் தமக்குப் பயன்படாமையால் இழிந்தோர் கேட்கவிரும்பாரென்பது கருத்து.

Just as a fly never gets at a flower for drinking the honey stored in it, but alights on impurities with great delight, so men of impure mind, never resort to the sweet words of the great.(9)

260. கற்ற நுரைக்குங் கசடறு நுண்கேள்வி
பற்றுது தன்னெஞ் சுகைத்தலான்—மற்றுமோர்
தன்போ லொருவன் முகநோக்கித் தானுமோர்
புன்கோட்டி கொள்ளுமாங் கீழ்.

இ-ள். கற்றீர் - கற்றுவல்லோர், உரைக்கும் - சொல்லுகின்ற, கசடு - (விபரீத ஐயங்களாகிய) பழுது, அறும் - நீங்குதற்குக் காரணமாகிய, நுன்கேள்வி - கேட்டுணரத்தக்க நுட்பமாகிய பொருளை, பற்றாது - (உறுதிப் பொருளென) கொள்ளாமல், தன்நெஞ்சு - தன மனம், உதைத்தலான் - அவ்மதித்து விடுதலால், கீழ் - கீழ்மகன், ஓர்தன்போல் - சிறுமையாகிய தன்னைப்போன்ற, ஒருவன் முகம் நோக்கி - ஒரு பேதையினுடைய முகத்தைப் பாராநின்று, தானும் - அறிவில்லாததானும், ஓர்புல்கோட்டி - ஒருசிறு சபையை, மற்றும் கொள்ளும் - மேலும் அங்குக்கொள்ளுவான். எ - று.

பொ - ரை. கற்று வல்லோர் சொல்லுகின்ற விபரீத ஐயங்களாகிய பழுது நீங்குதற்குக் காரணமாகிய கேட்டுணரத்தக்க நுட்பமாகிய பொருளை உறுதிப்பொருளெனக் கொள்ளாமல் தன் மனம் அவமதித்து விடுதலால், கீழ்மகன் சிறுமையாகிய தன்னைப்போன்ற ஒரு பேதையினுடைய முகத்தைப் பாராநின்று அறிவில்லாததானும் ஒரு சிறு சபையை மேலும் அங்குக்கொள்ளுவான் என்பது.

பொருளினது நுண்மை கேள்விமே லேற்றப்பட்டது. உதைத்தல் அவமதித்தலே யுணர்த்தியது. நுண்கேள்வியை உணர்ந்துகொள்வதற்குரிய நல்லறிவில்லாமையால் கீழ்மகனெஞ்சுபற்றாது அவமதிப்பதாயிற்று. புன்கோட்டி கொள்ளுமென்றது இருபொருளை மாறித்துப் பேசுதலே. மற்று வினைமாற்றுப் பொருளது. மற்றுமென்றவும்மை இறந்ததுழீஇயதிலும், மற்றது அதனோடு இழிவு சிறப்பிலும் வந்தன.

As the minds of the low cannot imbibe the clear instructive sayings of the learned they under the circumstances look at one like themselves and try to mingle with a very poor society. (10)

Chapter XXVII—Profitless wealth

27-ஆம். அதிகாரம் நன்றியில் செல்வம்.

அஃதாவது தேடினனுக்கும், பிறர்க்கும் பயன்படாத செல்வத்தினியல்பைக் கூறுவது. தேடினனது நன்றியின்மையாகிய குணம் அவன் செல்வத்தின்மே லேற்றப்பட்டது, அறிவிலான் தேடிய செல்வமே இங்ஙன மாதலால் இஃது அறிவின்மையின்பின் வைக்கப்பட்டது.

261. அருகல தாகிப் பல்பழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வம்
கருதுங் கடப்பாட்ட தன்று.

இ-ள். அருகலதாகி - (தம்மிடத்துக்கு) அருகிலுள்ளதாய், பலபழுத்தக் கண்ணும் = பலகனிகளைப் பழுத்திருப்பினும், பொரி தாள் - பொரிந்த அடியையுடைய, விளவினை - விளமரத்தை, வாவல் - வௌவால்கள், குறுகா - (அக்கனிகளை யுண்ணவிரும்பி) நெருங்கமாட்டா, (அதுபோல) பெரிது அணியர் ஆயினும் - மிகுதி யும் அருகிலுள்ளவரா யிருப்பினும், பீடு இலார்செல்வம் - பெருமைக் குணமில்லாதவரது செல்வப்பொருள், கருதும் - (மானங்கெடாத இரப்போரால்) நினைக்கப்படும், கடப்பாட்டது - ஈகையுடையது, அன்று - அல்லதாம், எ-று.

போ-ரை. தம்மிடத்து அருகிலுள்ளதாய் பல கனிகளைப் பழுத் திருப்பினும் பொரிந்த அடியையுடைய விளமரத்தை வௌவால்கள் அக்கனிகளை யுண்ணவிரும்பி நெருங்கமாட்டா. அதுபோல மிகுதி யும் அருகிலுள்ளவரா யிருப்பினும் பெருமைக்குண மில்லாதவரது செல்வப்பொருள் மானங்கெடாத இரப்போரால் நினைக்கப்படும் ஈகையுடையது அல்லதாம் என்பது.

அருகலது பண்படியாகப் பிறந்த ஒன்றன்படர்க்கைப் பெயர்; அருகு பகுதி, அல், அ சாரியை, து ஒன்றன்படர்க்கை விகுதி, உக ரக்கேடு சந்தி. அருகலதாகி என்பதற்குக் குறைதலிலதாகி எனஉரைத் தலுமாம்; அருகு முதனிலைத் தொழிற்பெயர். உடையாரது ஈகைத் தொழில் அவர் செல்வத்தின்மே லேற்றப்பட்டது. ஒருவனுக்கு ஈகை தவிருந் தன்மையதன்றுதலால் அதனைக் கடப்பாட்டது என்றார். தாளென்றது அடியை.

The bat never seeks shelter in the thorny wood-apple tree even though it be near. The wealth of the unworthy people even though they be near is not a thing to be considered of any great moment. (1)

262. அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ் வாயினுங்
கள்ளிமெற் கைநீட்டார் சூடும்பூ வன்மையால்
செல்வம் பெரிதுடைய ராயினுங் கீழ்களை
நல்லா றறிவுடை யார்.

இ-ள். அள்ளிக்கொள்வது அன்ன - அள்ளிக்கொள்வதற்குத் தக்க அவ்வளவான், குறுமுகிழ ஆயினும் - சிறிய பேரரும்புகளையுடையனவாயினும், சூடும்பூ அன்மையால் - (அவை) அணிவதற்குரிய மலர்களல்லாமையால், கள்ளிமேல் - கள்ளிகளின்மேல், கைநீட்டார் - (பூவிருப்புள்ளார் அவ்வரும்பைப் பெறவேண்டி) கையை நீட்டார், (அதுபோல) செல்வம் - செல்வத்தை, பெரிது உடையர் ஆயினும் - மிகுதியாக உடையாராயினும், கீழ்கள் - கீழ்மக்களை, அறிவுடையார் - நல்லறிவுடையமேலோர், நள்ளார் - (அச்செல்வத்தைப்பெறவேண்டி) நெருங்கார், எ-று.

பொ-ரை அள்ளிக்கொள்ளுதற்குத்தக்க அவ்வளவான சிறிய பேரரும்புகளையுடையனவாயினும் அவை அணிவதற்குரிய மலர்களல்லாமையால் கள்ளிகளின்மேல் பூவிருப்புள்ளார் அவ்வரும்பைப்பெற வேண்டிகையைநீட்டார். அதுபோலச்செல்வத்தைமிகுதியாக உடையாராயினும் கீழ்மக்களை நல்லறிவுடைய மேலோர் அச்செல்வத்தைப் பெறவேண்டி நெருங்கார் என்பது.

கொள்வதென்பது ஒன்றன்படர்க்கைஎதிர்காலத்தொழிற்பெயர். அது ஈறுதொகுக்கப்பட்டது. முகிழ சினையடியாகப்பிறந்த பலவின் படர்க்கை குறிப்புவினைப்பெயர். அள்ளிக்கொள்வதன்ன என்பது அரும்புகளினளவின்மை குறித்துநின்றது. சூடும்பூ அன்மையாகிய இழிவைக் குறிப்பிக்கப் பறிப்பதற்குக் காரணமாகிய கைநீட்டலொன்றையே கூறினர். அறிவுடையாரென்றது மானங்கெடாத இரவலரை.

Though the *Kalli* bears delicate round buds very bewitching to the sight, no one would stretch out his hand to pluck it as it will not be of any use. So wise people form no friendship with the base however great their wealth may be. (2)

263. மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் செல்லுண்பார்
செல்வம் பெரிதுடைய ராயினும் சேட்சென்றும்
நல்குவார் கட்டே நசை.

இ-ள். மல்கு - பலவாகவருகின்ற, திரைய - அலைகளையுடைய, கடற்கோடு - கடற்கரையில், இருப்பினும் - (நீர் விருப்புள்ளோர்) இருப்பாராயினும், உவர்இல் - உப்பில்லாத, வல்ஊற்று - சிறுகச் சுரத்தலையுடைய, கிணற்றின்கண்சென்று - (சுரத்துள்ள) சிறு

கிணற்றினிடத்துச்சென்று, உண்பர் - நீருண்பர், (அதுபோல) செல்வம் பெரிது உடையர் ஆயினும் - தமக்கு அருகில் (கீழ்மக்கள்) செல்வமிகுதியாக உடையாராயிருப்பினும், (அவர்பாற் செல்லாமல்) சேண்சென்றும் - நெடுந்தூரம் சென்றும், நசை - (அறிவுடையோர் இரக்க) விரும்புதல், நல்குவார்கட்டே - ஈயும்மேன்மக்களிடத்தே ஆம், எ-று.

பொ-ரை. பலவர்களருகின்ற உலகளையுடைய கடற்கரையில் நீர் விருப்புள்ளோர் இருப்பாராயினும் உப்பில்லாத சிறுகச்சுரத்தலையுடைய தூரத்துள்ள சிறு கிணற்றினிடத்துச் சென்று நீருண்பர். அதுபோலத்தமக்கு அருகில் கீழ்மக்கள் செல்வமிகுதியாக உடையாராயிருப்பினும் அவர்பாற் செல்லாமல் நெடுந்தூரம் சென்றும் அறிவுடையோர் இரக்க விரும்புதல் ஈயும் மேன்மக்களிடத்தே ஆம் என்பது.

பொருளில் தந்துரைத்தனவெல்லாம் உவமையாற்றலாலென்க. உம்மைகள் மூன்றில் முன்னைய இரண்டும் உயர்வுசிறப்பு; பின்னையது இழிவுசிறப்பு. ஏ பிரிநிலை. கட்டு இடமடியாகப்பிறந்தகுறிப்பு முற்று. நல்குவார்கட்டு ஒற்றுமைப் பொருளதாகிய ஆறாம்வேற்றுமைத்தொகைநிலை: அவ்வாறுவது கட்டென்னுஞ்சொல்லின் முதனிலைகொண்டது.

Though one happens to be on the billowy sea-shore, he will have to go for drinking purposes to a fresh-water well however distant it may be. Though men have by their side persons possessing enormous wealth, yet they will go to a person who will be willing to give them, even though he lives far away. (3)

264. புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே
புணர்வ துடையா ரிருப்ப—வுணர்வினோ
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே
பட்டுந் துகிலு முடித்து.

இ-ள். புணர் - இடையிலறாத, கடல்சூழ் - கடலாற்சூழப்பட்ட, வையத்து - பூமியில், உணர்வது - (எல்லா நூல்களையும்) அறியும் அறிவை, உடையார் - உடைய மேன்மக்கள், இருப்ப - (செல்வத்தைப் பெறும்படி) இருக்க, உணர்வு இல்லாத-அவ்வறிவில்லாத, வட்டும் - உண்டையையும், வழுதுணையும் - கண்டங்கத்திரிச் செடியை

யும், போல்வாரும் - ஓத்த கீழ்மக்களும், பட்டும் - பட்டாடையையும், துகிலும் - மெல்லிய ஆடையையும், உடுத்து வாழ்வர் - உடுத்துக்கொண்டு வாழ்வுடையரா யிருக்கிறார், (ஆதலால்) புண்ணியமோ - புண்ணியமென்பதோ, வேறே - முறைபிறழ்வுடையதே ஆம், எ-று.

பொ-ரை. இடையிலருத கடலாற் சூழ்ப்பட்ட பூமியில் எல்லா நூல்களையும் அறியும் அறிவையுடைய மேன்மக்கள் செல்வத்தைப் பெறும்படி இருக்க, அவ்வறிவில்லாத உண்டையையும் கண்டங்கத்திரி செடியையும் ஒத்த கீழ்மக்களும் பட்டாடையையும் மெல்லிய ஆடையையும் உடுத்துக்கொண்டு வாழ்வுடையராயிருக்கிறார்; ஆதலால் புண்ணியமென்பதோ முறைபிறழ் வுடையதே ஆம் என்ப.

மேன்மக்கள் செல்வத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்க; கீழ்மக்கள் எல்லாச் செல்வங்களையும் பெற்று வாழ்வதை நோக்கிச் செல்வத்துக்குக் காரணமாகிய புண்ணியத்தின் சிறப்பினது உண்மையை மறுத்து வேறொன்றைப் பிறிதொன்றாகக் கூறுகின்றமையால் இது சிறப்பவதுமி. கடல் இடையில் அரணமிருத்தலால் அதற்குப் புணர் என்பது அடையாக வந்தது. இதுபற்றியே கடலுக்குப் புணரியெனப் பெயர்வழங்கும். தாம் சொல்லிய சொல் புரளுதலால் வட்டம், இரப்போர் தம்மிடத்துப் பெறவேண்டிய தொன்றை மிக வருந்திப் பெறவேண்டுதலால், வழுதுணையும் கீழ்மக்களுக்கு உவமையாயின. நீ உயர்வுசிறப்பு. முன்னுள்ள ஏ தேற்றப்பொருளது; பின்னது அசைநிலைப் பொருளது, இரக்கப்பொருள தெனினுமொக்கும். உணர்வது உடையான் தொழிலைக் கருவியின்மே லேற்றிக் கூறப்படுவதாகிய வினையாலணையும்பெயர்; ஒருவனுணர்தற்கு அறிவு கருவியாதலாலென்க.

In this world girt by the extensive sea, merit is quite an indifferent thing. Men of understanding are poor; and those of no understanding—who are like *palm tree tufts* and *brinjals*, live prosperously clad in silk and rich garments. (4)

265. நல்லார் நயவு நிருப்ப நயமிலாக்
கல்லார்க்கொன் றுகிய காரணம்—தொல்லை
வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்.

இ-ள். வேல் - வேல்போலும், நெடுங்கண்ணுய் - நெடுமையாகிய கண்களை யுடையாளே, நல்லார் - (யாவர்க்கும்) நல்லவராகி, நயவர் - (தற்குந்தோறும் தூற்பொருள்தரும்) இன்பமுடையார், இருப்ப - பெருதவராயிருக்க, நயம்இல்லாத - அவ்வின்பமில்லாத, கல்லார்க்கு - மூடர்களுக்கு, ஒன்று - செல்வமாகிய ஓர்பொருள், ஆகிய காரணம் - உண்டாயிருக்கிற காரணம், தொல்லை - முன்செய்த, வினைப்பயன் - நல்வினையாகிய பயன், அல்லது - அல்லாமல், நினைப்ப - எண்ண, வருவது ஒன்று - (அவ்வெண்ணத்தில்) வருவதாகிய ஒரு காரணம், இல் - இல்லை, எ - று.

பொ - ரை. வேல்போலும் நெடுமையாகிய கண்களை யுடையாளே! யாவர்க்கும் நல்லவராகிக் கற்குந்தோறும் தூற்பொருள் தரும் இன்பமுடையார் பெருதவராயிருக்க, அவ்வின்பமில்லாத மூடர்களுக்குச் செல்வமாகிய ஓர்பொருள் உண்டாயிருக்கிற காரணம் முன் செய்த நல்வினையாகிய பயன் அல்லாமல் எண்ண அவ்வெண்ணத்தில் வருவதாகிய ஒருகாரணம் இல்லை என்பது.

செய்யத் தகுவனவற்றை அறிந்து செய்யவல்ல கல்வியறிவுடையாரைச் சாராமல், அவற்றை அறிந்து செய்யமாட்டாத கல்லாதவரைச் செல்வப்பொருள் சார்ந்திருத்தல் முறைபிறழ்வன்றெனக் காரணங் கூறியவாராயிற்று. நயவர் பண்படியாகப்பிறந்த குறிப்பு வினைப்பெயர்; நயம் பருதி, மகரக்கேடும் வகரத் தோற்றமுஞ் சந்தி, அர் பல்லோர் படர்க்கைவிகுதி. இதில் அத்துச் சாரியை தொகுத்தலெனினு மொக்கும். நல்வினை பிறப்பின் பயனு ளொன்றுதலால் அதனை வினைப்பயன் என்றார். வினைப்பயன் இருபெயரொட்டுப் பண்புத் தொகைநிலை. ஆறுவதன் தொகைநிலையாகக் கொண்டால் பயன்செல்வமாகிய காரியமாமே அன்றிக் காரணமாகாமையால் கொள்ளலாகாதென்க. உலகத்தில் யாவருள்ளும் தன்னையுடையானை மேம்படச் செய்ய வல்லதாதலால் செல்வப்பொருளை ஒன்று என்றார். ஒன்றென்பன இரண்டும் எண்ணலளவையாகுபெயர். நல்லார் குறிப்புமுற்று வினையெச்சமாயிற்று.

While the good and the just are (poor), men unjust and ignorant are in the enjoyment of wealth and happiness. It is the fruit of *ancient deeds*. O thou with eyes sharp as darts! No other reason can be assigned. (5)

266. நாருத் தகுடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்
நீரும் நிலத்து விளியரோ—வேருய

புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலு
நன்மக்கள் பக்கீந் துறந்து.

(இ - ள்.) நன்மலர்மேல் - தாமரைமலரிலெழுந்தருளிய, பொன் - பாவாய் - பொன் பிரதிமைபோன்ற திருமகளே, பொன்போலும் - பொன்போலக் குணமாறுதலில்லாத, நல்மக்கள்பக்கம் - மேலோரிடத்தில், துறந்து - புகுதலேவிட்டு, வேறுய - (மக்கட்டன்மையில்) வேறுபட்ட, புல்மக்கள் பக்கம் - கீழ்மக்களிடத்து, நீ புகுவாய் - நீ சேர்வாய், (ஆதலால்) நிலத்து - பூமியில், நாறுத - மணக்காத, தகடே போல் - புறவிதழையேபோல் அவமதிக்கப்பட்டு, விளிந்து-இறந்து, நீறு ஆ - சாம்பராதக் கடவை, எ - று.

பொ-ரை. தாமரை மலரிலெழுந்தருளிய பொன் பிரதிமை போன்ற திருமகளே! பொன்போலக் குணமாறுதலில்லாத மேலோரிடத்தில் புகுதலேவிட்டு மக்கட் டன்மையில் வேறுபட்ட கீழ்மக்களிடத்து நீ சேர்வாய். ஆதலால் பூமியில் மணக்காத புறவிதழையே போல அவமதிக்கப்பட்டு இறந்து சாம்பராகக் கடவை என்பது.

பெற்ற செல்வத்தைப் பயன்படச் செய்யவல்ல மேன்மக்களது வறுமையையும், அதனைப் பயன்படச்செய்ய வறியாத கீழ்மக்களது செல்வத்தையும் கண்டு மனம் பொறாமலிவ்வாறு செல்வியைக் கூறுவாராயினர். போலென்னும் இடைச்சொலடியாகிய முதனிலை விளையெச்சப் பொருள்பட நின்றது. பாவை உவமையாகுபெயர். விளிந்த பின் நீறுதல் வேண்டுமாதலால் நீறுய்விளி என்பதைப் பின்முன்னாக நிறுத்தி விகுதிபிரித்துக் கூட்டி உரைக்க. விளி ஆய்விகுதி புணர்ந்து கெட்ட ஏவலொருமை வினை. துறந்து, புகுவாயின்பனஇலக்கணை. ஏ பிரிநிலை.

O Golden dame on the beautious (lotus) flower, with scentless external petals! Die and fall in ashes to the ground! You forsake men who are pure as gold; whereas you freely enter the homes of the worthless people. (6)

267. நயவார்க ணல்குரவு நீணின்று கெரல்லோர்
பயவார்கட் செல்வம் பரம்பப்—பயின்கொல்
லீயிவாய்காண் வேற்கண்ணு யிவ்விரண்டு மாங்கே
நயவாது நிற்கு நிலை.

இ - ள். வேல் கண்ணுய்-வேல்போலுங் கண்களையுடையாளே, நயவார்கண் - உலகநடையை அறிந்து நடப்பவரிடத்திலுள்ள, நல்

குரவு - வறுமை, நாண் இன்றுகொல் - நாணமிலதோ, பயவார்கண் - (பிறர்க்கு) பயன்படுத வில்லாரிடத்துள்ள, செல்வம் - செல்வப்பொருள், பரம்ப - நீங்காமல் பெருகுதலால், பயின்கொல்-பிசினே, இவ்விரண்டும் - இவ்வறுமையும் செல்வமும், ஆங்கு - அவ்விருவகையாரிடத்து, தீவாத - தமக்கு இன்பமில்லனவாகி, நிற்குங் கிலே - நிலேத்திருக்கும் இருப்பை, வியவாய் - வியந்துகொள், எ - று.

பொ-ரை. வேல்போலுங் கண்களே யுடையாளே! உலகந்தடையை அறிந்து கடப்பாரிடத்துள்ள வறுமை நாணமிலதோ. பிறர்க்கு பயன்படுத வில்லாரிடத்துள்ள செல்வப்பொருள் நீங்காமல் பெருகுதலால் பிசினே. இவ்வறுமையும் செல்வமும் அவ்விருவகையாரிடத்துத் தமக்கு இன்பமில்லனவாகி நிலேத்திருக்கும் இருப்பை வியந்துகொள் என்பது.

மேன்மக்கள் தன்னே மதியாமல் தாம் செய்யவேண்டிய ஒப்புரவுகளேச் செய்துவருதலால் அவரிடத்துள்ள வறுமைக்கும், கீழ்மக்கள் ஒப்புரவுசோச் செய்து தன்னேப் பயன் படுத்துதலின்மையால் அவரிடத்துள்ள செல்வத்துக்கும் இன்பமில்தாயிற்று. இவ்விரண்டும் அவ்விருவரிடத்தும் நீங்காமல் நிற்பதைப் பற்றி முறையே நாணமிலதோ பிசினே என ஐயப்படுவனவும் வியக்கப் படுவனவுமாயின. பயவார் எதிர்மறை வினேப்பெயர்; பயமென்னும் பெயரடியாகப் பிறந்த பயகுதி, வ் சந்தி, ஆ எதிர்மறை விகுதி, அனேத்து மொருபகுதி, ஆர் பல்லோர் படர்க்கைவிகுதி, விகுதி, ஆகாரக்கேடு முதற்குறை. பரம்ப காரணப் பொருட்டாகிய செயவெனெச்சம். கொல்இரண்டும் ஐயம். ஈற்றசை. வியவாய் எவலொருமை விதிவினே. நயவாது எதிர்மறை வினேயெச்சம். காண் முன்னிலே யசைச் சொல்.

Has poverty that takes hold of righteous people, no shame? Is wealth which stick up so fast to the ungenerous, glue? O woman of dart-like eye! Look with wonder how these two unjustly resort to such places (where they ought not to go). (7)

268. வலவைக ளல்லாதார் கால்மாறு சென்று
கலவைக ளுண்டு கழிப்பர்—வலவைகள்
காலாறுஞ் செல்லார் கருணையாற் றுய்ப்பவே
மேலாறு பாய விருந்து.

இ-ள். வலவைகள் - (பிறர்க்கு உபகரித்தல் முதலியவற்றைச் செய்யக்) கூடியவர்கள், அல்லாதார் - அல்லாத மேன்மக்கள்; கால் -

தங்கால்களால், ஆறுசென்று - நெடுந்தூர வழிநடந்து, கலவைகள் - (அம்மூயற்சியால் கிடைத்த) கலப்பாகிய வுணவுகளை, உண்டு கழிப் பர் - உயிர்வாழுநின்று காலங் கழிப்பார்கள், வலவைஎள் - (தாமுடைய செல்வத்தினால் அவற்றைச் செய்ய) கூடிய கீழ்மக்கள், கால் - தங் கால்களால், ஆறும் செல்லார் - நெடுந் தூரவிழியும் நடவாமல், விரு ந்து - (பிறர் இடம்) விருந்தினுணவை, மேல் - தம்முடம்பில், ஆறு பாய - ஆறுபோல வியர்வை பாயாநிற்க, கருவேயால் - பொரிக்கறிக ளோடு, துய்ப்ப - உண்பார்கள், ஏ - று.

பொ-ரை. பிறர்க்கு உபகரித்தல் முதலியவற்றைச் செய்யக் கூடியவர்கள் அல்லாத மேன்மக்கள் தங்கால்களால் நெடுந் தூரவழி நடந்து அம்மூயற்சியால் கிடைத்த் கலப்பாகிய உணவுகளை உண்ணு நின்று காலங் கழிப்பார்கள். தாமுடைய செல்வத்தினால் அவற்றைச் செய்யக்கூடியகீழ்மக்கள் தங்கால்களால் நெடுந்தூரவழியும் நடவாமல் பிறர் இடம் விருந்தினுணவைத் தம்முடம்பில் ஆறுபோல வியர்வை பாயாநிற்கப் பொரிக்கறிகளோடு உண்பார்கள் என்பது.

வலவைகள் ஒன்றைச் செய்யமாட்டுவோர். இது பண்படியாகப் பிறந்த பெயர்; வல் பகுதி, அ சாரியை, வ் சந்தி, ஐ ஆண்பாற் படர்க்கை விகுதி; இவ்வாறு முடிந்து நின்ற பெயர்கள் விகுதி ஏற்றுப் பலர்பாலுக் குரியதாயிற்று. ஐ விகுதி பெண்பாலையும் உணர்த்தலால் வலவை ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாயினும் இங்குத் தலைமைபற்றி ஆண்பாலுக்காயிற்று. இதில் வன்மை செல்வ முடை மையால் பிறர்க்குபகரிக்கக் கூடியவன்மை, உணவின் சிறுமைதோன் றக் கலவைகள் என்றும், பெருஞ் செல்வத்தினரென்பது தோன்றக் காலாறுஞ் செல்லார் என்றும், உடலுக்கு நேரும் வருத்தத்தை நோக் காமல், வயிற்றை நிரப்புத லொன்றையே நோக்குவா ரென்பது தோன்ற மேலாறுபாய என்றும், தம் பொருளா லுண்ணுரென்பது தோன்றவிருந்து துய்ப்ப என்றுங் கூறினர். ஆலுருபு "பெண்டகை யால் பேரமர்க்கட்டு" என்பதிற்போல உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. கலவை தொழிலடியாகப் பிறந்தபெயர்; கல பகுதி, வ் சந்தி, ஐ செயப்படு பொருண்மை விகுதி; உண்டென்ற குறிப்பால் உண் வின்மேலது. புதுமையை உணர்த்தும் விருந்தென்பது முன் அறிந் திருத்தலால் குறித்து வருவாரும், அஃது இல்லாமையால் குறியாமல் வருவாருமாகிய புதியவிருக்குப் பண்பாகுபெயராய் அவர்பொருட்டுச் செய்யப்பட்ட உணவுக்குக் காரண வாகுபெயராயிற்று.

Men who are not devoid of shame, will go to a distant land on foot and feed on scraps. Shameless people will never

stir out but will (hang on others like parasites) spend their life in feasting with dainties at home perspiring profusely all the time. (8)

269. பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்னொளிர் வானங் கடவுள்ளுங் கான்றுருக்கும்
வெண்மை யுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்
வண்மையு மன்ன தகைத்து.

இ-ள். பொன்னிறம் - பொன்னினது நிறம்போலும் நிறமுள்ள, செம் நெல் - செந்நெல் விளையும்பயிர், பொதியொடு - மேல் மூடிய தாளுடனே, பீள்வாட - கதிராகிய கரு வாடாநிற்க, மின் ஒளிர் - மின்னல் விளங்குகின்ற, வானம் - மேகம், கடவுள்ளும் - கடலினிடத்தும், கான்று - நீரைக் கக்கி, (பெய்து) உருக்கும் - சிந்தும், வெண்மை உடையார் - புல்லறிவை யுடையார், விழுச் செல்வம் - சிறப்பைத் தருஞ் செல்வம், எய்தியக்கால்-(முன் வினையால் தம்மை) அடைந்தால், வண்மையும் - அவரது ஈகையும், அன்ன தகைத்து - அதுபோலும் தன்மையது, எ-று.

பொ-ரை. பொன்னினது நிறம்போலும் நிறமுள்ள செந்நெல் விளையும் பயிர் மேல் மூடிய தாளுடனே கதிராகிய கரு வாடாநிற்க மின்னல்விளங்குகின்றமேகம்கடலினிடத்தும்நீரைக்கக்கிப் (பெய்து) சிந்தும். புல்லறிவை யுடையார் சிறப்பைத்தருஞ் செல்வம் முன்வினையால் தம்மை அடைந்தால் அவரது ஈகையும் அதுபோலும் தன்மையது என்பது.

அன்னதகைத்தென்ற உவமையில் செந்நெற் பொதியொடு பீள்வாட என்றதினால் தமக்குரிய ஒப்புரவுகளைச் செய்யவல்ல மேலோர் வருந்தாநிற்க என்பதும், கடலுள் கான்றுருக்கு மென்றதினால் பிறர்க்குப் பயன்படுதலில்லாத பெருஞ் செல்வத்தினர்க்கு ஈவாரென்பதும், விழுச்செல்வ மென்றதனால் இம்மை மறுமைக்குரிய எல்லாச் சிறப்பையுந் தருவதென்பதும் பெற்றும். வெண்மையுடையாராதலின் விழுச்செல்வ மெய்தியதற்குக் காரணம் வருவிக்கப்பட்டது. வெண்மை அறிவினது மூதிர்ச்சியின்மை. பொன்னிற மென்னும் விசேடணம் செந்நெலென்னும் இயற் பெயர்ப்பொருளை விசேடிக்கவந்தது. நெல் சினையாகுபெயர். கடலுள்ளுமென்ற உம்மை இழிவு சிறப்பு. வண்மையுமென்ற உம்மை இறந்தது தழீஇயது.

While the paddy of golden hue is parched to the very core and dies, the clouds gleaming with lightning pour forth

its treasures on the sea. When foolish people get enormous wealth, their liberal gifts are similarly bestowed. (9)

270. ஓதியு மோதா ருணர்விலா ரோதாது
மோதி யனையா ருணர்வுடையார்—தூய்தாக
நல்கூர்ந்துஞ் செல்வ ரிரவாதார் செல்வரு
நல்கூர்ந்தா ரீயா ரெனின்.

இ - ள். உணர்வு இலார் - (உலகத்தோ டொக்க நடத்தலே) அறிதலில்லாதவர், ஓதியும் - (பல நூல்களையும்) கற்றறிந்தவராயினும், ஓதார் - கல்லாதவரே, உணர்வு உடையார் - (அந்நடையை) அறிதலுடையார், ஓதாதும் - கல்லாதவராயினும், ஓதி அனையார் - கற்றவரை ஒத்தவரே, இரவாதார் - இரக்காத மானமுடையார், தூய்து ஆக - (ஒருபொருளும்) இலதாக, நல் கூர்ந்தும் - வறுமை யடைந்தவராயினும், செல்வர் - எல்லாச் செல்வமு முடையாரே, செல்வரும் - செல்வ முடையாரும், ஈயார் எனின் - (இரப்பவர்க்கு) கொடாராயின், நல்கூர்ந்தார் - வறியவரே, எ-று.

பொ-ரை. உலகத்தோ டொக்க நடத்தலை அறிதலில்லாதவர் பல நூல்களையும் கற்றறிந்தவராயினும் கல்லாதவரே. அந்நடையை அறிதலுடையார் கல்லாதவராயினும் கற்றவரை ஒத்தவரே. இரக்காத மானமுடையார் ஒருபொருளும் இலதாக வறுமை யடைந்தவராயினும் எல்லாச் செல்வமுடையாரே. செல்வ முடையாரும் இரப்பவர்க்குக் கொடாராயின் வறியவரே என்பது.

கல்வியறிவுக்குப் பயன் உலகத்தோ டொக்க நடத்தலும், செல்வத்துக்குப்பயன் இரப்போர்க்கீதலுமாதலால் அவ்வியல்வரை ஓதார் என்றும், நல்கூர்ந்தார் என்றும், அந்நடையை யுடையாரை ஓதியனையார் என்றும், மானங் கெடாது வாழ்தலே உயிர்வாழ்தலா மாதலால் மானங்கெட இரவாதாரைச் செல்வர் என்றுங் கூறினீர். சேற் றேதாரங்கள் விகாரத்தால் தொக்கன. ஓதி தொழிலடியாகப் பிறந்த பெயர்; ஓது பகுதி, இ வினைமுதற் பொருண்மை விகுதி, உகரக் கேடு சந்தி. ஓதியனையா ரென்பதை ஓதினலனையரெனப் பதம் பிரித்து, எல்லாநூல்களையுங் கற்றுற்போல்வரென உரைப்பினும் பொருந்தும். கற்காமல் கல்வியறிவு பெறப்படாமையால் அவர் ஓதியனையா ரெனப்பட்டார். ஓதியும், செல்வருமென்னு மும்மைகள் உயர்வு சிறப்புப்பொருளன; மற்ற இரண்டும் இழிவுசிறப்புப் பொருளன.

Persons with no understanding, even though they try to learn something, learn not. Men of understanding, though

not educated, are as men learned. They are rich, though miserably poor, who do not beg; the rich are poor if they do not dispense with their wealth freely. (10)

XXVIII—Absence of Charity.

28 - ஆம் அதிகாரம்: ஈயாமை.

அஃதாவது பொருளுடையார் ஏற்போர்க்கு ஈதலைச் செய்யாமையின் பயனைக் கூறுவது. நன்றியில் செல்வத்தாலாகும் தாமுண்ணுமை, ஒளிநிறக்காமை, புகழ்செய்யாமை, கேளிர்துயர்களையாமை, இரப்போர்க்கியாமைமுதலிய பலவற்றுள்ளும் மிகவிழிந்தது ஈயாமையாதலால் அதனை எடுத்துக் கூறுவாராயினர். இதனால் அதிகார முறைமை இனிது விளங்கும்.

271. நட்டார்க்கு நள்ளா தவர்க்கு முள்வரையா
லட்டது பூத்துண்ட லட்டுண்டா—லட்ட
தடைத்திருந் துண்டொழுகு மாவதின் மாக்கட்
கடைக்குமா மாண்டைக் கதவு.

இ-ள். உளவரையால் - (ஒருவர் தமக்கு) உள்ளபொரு ளளவினால், அட்டது - சமைத்த உணவை, நட்டார்க்கும் - சுற்றத்தார்க்கும், நள்ளாதவர்க்கும் - விருந்தினர்க்கும், பாத்து - பகுத்துக்கொடுத்து, உண்டல் - உண்ணுதலே, அட்டு உண்டல் - சமைத்துண்ணலாம், அட்டது - சமைத்த உணவை, அடைத்து - (கதவை) மூடிவைத்து, இருந்து - தனியராயிருந்து, உண்டு - உண்டு, ஒழுகும் - இவ்வாறுயிர்வாழ்கின்ற, ஆவது - (தாம்) பெருகுதற்குக் காரணமாகிய அறம், இல்மாக்கட்கு - உண்டாகுதலில்லாத மக்களுக்கு, ஆண்டைக் கதவு - துறக்க வுலகத்தின் கதவு, அடைக்கும் - அடைக்கப்படும், எ-று.

பொ-ரை. ஒருவர் தமக்கு உள்ளபொரு ளளவினால் சமைத்த உணவைச்சுற்றத்தார்க்கும் விருந்தினர்க்கும் பகுத்துக்கொடுத்து உண்ணுதலே சமைத்துண்ணலாம். சமைத்த உணவைக் கதவை மூடிவைத்துத் தனியராயிருந்து உண்டு இவ்வாறுயிர்வாழ்கின்ற (தாம்) பெருகுதற்குக்காரணமாகிய அறம் உண்டாகுதலில்லாதமக்களுக்குத் துறக்க வுலகத்தின் கதவு அடைக்கப்படும் என்பது.

நட்டாரென்றது பிறப்பின் முறையாலாகிய சுற்றத்தாரையும், மற்றவரையும். நள்ளாதாரென்றது இருவகை விருந்தினரை. அட்டது வினைமுதல் வினையைச் செய்யப்படுபொருளின்மே லேற்றிக்

கூறும் வினையாலணையும்பெயர். இவ்வாறன்றிச் செயப்பாட்டு வினையாலணையும் பெயரெனலுமாம். இதில் படு வீகுதி முதலியன தொகுத்தலெனிக. அடைக்குமென்பதும் செயப்பாட்டுவினை. துறக்கத்தை ஆண்டை என்றார்; அது சேய்மைத்தாதலால். ஆவதென்பதும் வினையாலணையும்பெயர். பாத்து இறந்தகால வினையெச்சம்; இதில் பகுதி பகு என்பதன் மரூஉ ஆகிய பா.

It is a real house keeping if you eat what you have cooked sharing the meal with those who are friends and those who are not, to the best of your ability. Those who shut their doors and reserve to themselves what has been cooked, and eat them, the doors of the other world will be shut against. (1)

272. எத்துணை யானு மியைந்த வளவினுல்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர் மற்றைப் [பா
பெருஞ்செல்வ மெய்தியக்காற் பின்னறிது மென்
றழிந்தார் பழிகடலத் துள்.

இ-ள். எத்துணையானும் - எவ்வளவானலும், இயைந்த அளவினுல் - (தம்மால்) கூடியவளவினுல், சிறு அறம் - சிறிது ஈதலாகிய அறத்தை, செய்தார் - செய்தவர், தலைப்படுவர் - (மக்களுள்) முதன்மையாவர், பெருஞ்செல்வம் - பெருஞ் செல்வத்தை, எய்தியக்கால் - அடைந்துள்ளபோது, பின் - மூப்பின்காலத்தில், அறிதும் என்பார் - (அறத்தை) செய்வோமெனக் கருதுவோர், பழி - (யாவராலும்) பழிக்கப்படுகின்ற, கடலத்துள் - (துன்பமாகிய) கடலில், அழிந்தார் - மூழ்கி அழிந்தவராவர், எ-று.

போ-ரை. எவ்வளவானலும் தம்மால் கூடிய வளவினுல் சிறிது ஈதலாகிய அறத்தைச் செய்தவர் மக்களுள் முதன்மையாவர். பெருஞ் செல்வத்தை அடைந்துள்ளபோது மூப்பின் காலத்தில் அறத்தைச் செய்வோமெனக் கருதுவோர் யாவராலும் பழிக்கப்படுகின்ற துன்பமாகிய கடலில் மூழ்கி அழிந்தவராவர் என்பது.

அழிந்தா ரென்றதினுல் கடல் துன்பத்தின்மேலது. பழிகடல் வினைத்தொகையிலை. பழி என்பது பெயராயின் பழிக்கடலெனக் ககரச் சந்தியேபெறும். அத்து சாரியை. மற்றை அசைநிலை யிடைச்சொல். ஈற்றிலுள்ள ஐ ஆண்டை என்பதிற்போல இடைச்சொல்லைக் குறித்துவந்த சாரியை. தெளிவுபற்றி எதிர்காலம் அழிந்தாரென இறந்தகாலமாயிற்று

If persons do lesser kinds of charity to the best of their power, they will attain to their excellence. But those who say "we will do acts of charity when we get much wealth" will be subject to much blame in this world and be ruined. (2)

273. துய்த்துக் கழியான் துறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை—வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும்.

இ - ள். துய்த்து - (பல இன்பங்களையும்) அநுபவித்து, கழியான் - இறவாமலும், துறவோர்க்கு - துறவிகளுக்கு, ஒன்று உம் - ஒரு பொருளையும், ஈகலான் - ஈந்திறவாமலும், வைத்து - (வருந்தித் தேடியபொருளை) வைத்து, கழியும் - இறக்கின்ற, மடவோன் - அறிவில்லாஞல், வைத்தபொருளும் - சேமித்துவைக்கப்பட்டபொருளும், உலகத்து - உலகத்தில், அவனை - அச்சேமித்து வைத்தவனை, நகும் - (தேடிய உனது பொருளல்லேனென்று) அவமதித்துச் சிரிக்கும், அருளும் - கருணையும், அவனை - அவ்வறிவில்லானை, நகும் - (அறச்செயலுக்குக் காரணமாகிய என்னைப் பெற்றிலாயென்று) அவமதித்துச் சிரிக்கும், எ - று.

பொ - ரை. பல இன்பங்களையும் அநுபவித்து இறவாமலும் துறவிகளுக்கு ஒரு பொருளையும் ஈந்திறவாமலும் வருந்தித் தேடிய பொருளைவைத்து இறக்கின்ற அறிவில்லாஞல் சேமித்துவைக்கப் பட்ட பொருளும் உலகத்தில் அச்சேமித்து வைத்தவனை, தேடிய உனது பொருளல்லேனென்று அவமதித்துச் சிரிக்கும். கருணையும் அவ் வறிவில்லானை அறச்செயலுக்குக் காரணமாகிய என்னைப் பெற் றிலா யென்று அவமதித்துச் சிரிக்கும் என்பது.

மடவோ னென்பதில் ஐ சாரியை. ஒன்றென்பதனோற்றில் இழிவு சிறப்போடு மூற்றுப் பொருள்தாகிய உம்மை தொகுத்தலாயிற்று. இம்மை மற்றும் பயன்களைத் தருவது பொருளும், இம்மை மறுமை இரண்டிலுந் தானேயாவது அருளும் ஆதலால் நகுவனாயின. பொரு ளும் அருளும் நகுமென்றது இயற்றுதலில்லாத அஃறிணைப்பொருளை இழந்தாற போலக் கூறும் இலக்கணை. முன்னுள்ள உம்மை எதிர்து ழீஇயதும், பின்னது இறந்தது தழீஇயதுமென்க. கழியுமென் னும் பெயரெச்சம் காரியப் பொருட்டாய்த் தன் காரணமாகிய ம டவோனென்னும் பெயரின் மடமையென்னு முரனிலை கொண்டது

The idiot who spends not his time in the enjoyment (of his wealth) and does not give anything to the pious, but simply hoards his wealth and dies, his own wealth will deride So all that is gracious in this world.

274. கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்ற விடுக்கணுடை
யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ மில்லத்
தருவுடைக் கன்னியரைப் போலிப் பருவத்தா
லேதிலான் றுய்க்கப் படும்.

இ - ள். கொடுத்தலும் - (அறத்தின் பொருட்டு) ஈதலையும், துய்த்தலும் - (தான்) அநுபவித்தலையும், தேற்றாத - தெளியாத, இடுக்கு உடைய - உலோபத்தன்மையை யுடைய, உள்ளத்தான் - உள்ள முடையோன், பெற்ற பெருஞ் செல்வம் - அடைந்துள்ள பெருஞ் செல்வமே, இல்லத்து - (தன்னுடைய) குடியிற்பிறந்த, உரு உடையநல்ல உருவமுடைய, கன்னியரைப்போல - கன்னிய ரின்பத்தைப் பிறரனுபவிப்பதுபோல, பருவத்தால் - தகுந்தகாலத்தில், ஏதிலான் - அயலானால், நுய்க்கப்படும் - அநுபவிக்கப்படும், எ - று.

பொ - ரை. அறத்தின் பொருட்டு ஈதலையும் தான் அநுபவித்தலையும் தெளியாத உலோபத் தன்மையையுடைய உள்ளமுடையோன் அடைந்துள்ள பெருஞ்செல்வம் தன்னுடைய குடியிற் பிறந்த நல்ல உருவமுடைய கன்னியரின்பத்தைப்பிறரனுபவிப்பதுபோலத்தகுந்த காலத்தில் அயலானால் அநுபவிக்கப்படும் என்பது.

ஒருவன் தின்குடியிற் பிறந்த கன்னியரைப் பாதுகாத்து வந்து அரின்பித்தைத் தான்பெற இயைபில்லாமையால் தக்கபருவத்தில் பிறன் பெறத்தருதல்போல, உலோபன் தான்பெற்ற பொருளைப் பாதுகாத்துவந்து அதனைக் கொடுத்தலும் துய்த்தலுமாகிய இயைபில்லாளுகித் தானிறந்த காலத்தில் பிறன்பெற இழப்பானென்பது. இல்லத்துக்கன்னியரை உவமித்தது அவனதுபொருளை இழித்தற்கென்க. தேற்றாத என்னும் காரியப் பொருட்டாகிய தன்வினைப் பெயரெச்சம் ஈறு தொகுத்தலாயிற்று. இது பிறவினைக்கும் வரும். இடுக்கு தல் விருதி புணர்ந்து கெட்டமாத்திரத்தில் 'இடுக்கெனத்' திரிந்ததாதலால் முதனிலை திரிந்த தொழிற்பெயர். இடுக்குதல் சுருங்குதல். இது பொருளை அழித்தலில் உள்ளம் விரியாமல் சுருங்கலாகிய உலோபகுணத்தை உணர்த்திற்று.

The enormous wealth obtained by the man of straitened mind, who would not either give or enjoy, like the fair virgin

in the house, will in time be taken possession of by strangers for enjoyment. (4)

275. எறிநீர்ப் பெருங்கட லெய்தி யிருந்து
மூறூநீர்ச் சிறுகிணைற் றூறல்பார்த் துண்பர்
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

இ - ள். எறி - அலைகள் எறிகின்ற, நீர் - நீரின் மிகுதியையுடைய, பெருங்கடல்-பெருவடிவினதாகிய கடலை, எய்தி இருந்தும்- (ஒருவர் தம்மருகே) பெற்றிருந்தும், நீர் அறு - நீரில்லாத, சிறுகிணறு- சிறுவடிவினதாகிய கிணற்றினது, ஊறல் - ஊற்று நீரை, பார்த்து - தேடிச்சென்று, உண்பர் - உண்ணுவர், (அதுபோல) மறுமை அறியாதார் - மறுமை யின்பத்தை அறியாத கீழ்மக்களது, ஆக்கத்தின் - (பிறர்க்குப் பயன்படாத) பெருஞ் செல்வத்தினும், சான்றோர் - (தூரத்திலுள்ள) மேன்மக்களது, கழிநல்குரவே - மிக்க வறுமையே, தலை- சிறந்ததாகும், எ - று.

பொ-ரை. அலைகள் எறிகின்ற நீரின் மிகுதியையுடைய பெருவடிவினதாகிய கடலை ஒருவர் தம்மருகே பெற்றிருந்தும் நீரில்லாத சிறு வடிவினதாகிய கிணற்றினது ஊற்று நீரைத் தேடிச்சென்று உண்ணுவர். அதுபோல மறுமை யின்பத்தை அறியாத கீழ்மக்களது பிறர்க்குப் பயன்படாத பெருஞ்செல்வத்தினும் தூரத்திலுள்ள மேன்மக்களது மிக்க வறுமையே சிறந்ததாகும் என்பது.

ஆதலால் மானங்கெடாத இரவலர் மேன்மக்கள் வறுமை யடைந்திருப்பினும் அவரையே அடைந்து இரந்துண்பரென்பது இசையெச்சம். நல்குரவென்றது பொருளினதுசுருக்கத்தை. ஊறல் தொழிலாகுபெயர். ஐந்தனுருபு உறழ் பொருளின்கண் வந்தது. சான்றோர் நல்குரவுற்ற காலத்துஞ் செய்யும் ஒப்புரவுகளைச் செய்வராதலின் அது தலையாயிற்று. எ பிரிநிலை.

Though men stand on the shore of the mighty sea with its dashing waves, they will wait for the stream slowly issuing from the little well, and there drink. So the great poverty of the virtuous people is preferable to the wealth of those who know not of the world to come. (5)

276. எனதென தென்றிருக்கு மேழை பொருளீ
யெனதென தென்றிருப்பென் யானுங்—கனதீயின்

ருணு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யாணு மதனை யது.

இ - ள். எனது எனது என்று - என்னுடைய பொருளே யென்று துணிந்து, இருக்கும் - இருக்கின்றீ, ஏழை - அறிவிலானது, பொருளை - செல்வப்பொருளே, யாணும் - (வருந்தித்தேடாத) நானும், எனது எனது என்று - என்னுடைய பொருளேயென்று துணிந்து, இருப்பேன் - இருப்பேன், தனது ஆயின் - தன்னுடைய பொருளாயிருப்பின், தானும் - (வருந்தித்தேடிய) தானும், அதனை - அவ்வாறு துணிந்திருக்கும் பொருளை, வழங்கான் - (அறத்தின்பொருட்டு) வழங்குதல் செய்யான், பயன் - (அதனாலாம்) பயனுகிய இன்பங்களை, துவ்வான் - அநுபவியான், யானும் - (எனதே யென்று துணிந்த) நானும், அதனை - அப்பொருளை, அது-வழங்கேன் பயனுகிய இன்பங்களையும் அநுபவியேன், எ - று.

பொ-ரை. என்னுடைய பொருளே யென்று துணிந்து இருக்கின்ற அறிவிலானது செல்வப்பொருளை வருந்தித் தேடாத நானும் என்னுடைய பொருளேயென்று துணிந்து இருப்பேன். தன்னுடைய பொருளாயிருப்பின் வருந்தித் தேடிய தானும் அவ்வாறு துணிந்திருக்கும் பொருளை அறத்தின்பொருட்டு வழங்குதல் செய்யான் அதனாலாம் பயனுகியஇன்பங்களை அநுபவியான். எனதேயென்று துணிந்தநானும் அப்பொருளை வழங்கேன், பயனுகிய இன்பங்களையும் அநுபவியேன் என்பது.

பொருளை வருந்தித் தேடினவன் தக்கவாறு அழிக்காமல் வைத்திருப்பானுயின் அப்பொருளுக்கு அவன் அந்தியனே என்பதுகருத்து. எனது தனதென்பன பொருளடியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயர்கள். அடுக்குகள் துணிவுப்பொருளன. மூதலீறுகளில் நின்ற உம்மைகள் இறந்தது தழீஇயதனேடு இழிவு சிறப்புப்பொருளன. இடையில் நின்ற உம்மை எதிரது தழீஇயதனேடு உயர்வு சிறப்புப்பொருளது. அது ஈனுங் குறிப்பு வினைமுற்று தொகுதி யொருமையாய் வழங்காமையையும், பயன்றுவ்வாமையையுஞ் சுட்டி நின்றதாதலால் செயப்படுபொருள் குன்றுவினையாய் அதனை என்னுஞ் செயப்படு பொருள் கொண்டது.

The wealth of which the miser says "It is mine, It is mine," I shall also say of it, "it is mine; it is mine." Though it is his, he does not spend it, he does not enjoy the fruit thereof my relation to it is also the same. (6).

277. வழங்காத செல்வரி னல்கூர்ந்தா ருய்ந்தா
ரிழந்தா ரெனப்படுத லுய்ந்தா—ரீழந்ததனைக்
காப்புய்ந்தார் கல்லுதலு மூய்ந்தார்தங் கைந்நோவ
யீப்புய்ந்தா ருய்ந்த பல.

இ-ள். உழந்ததனை – வருந்தித் தேடிய பொருளை, இழந்தார் – (அநுபவித்தலும் ஈதலு மில்லாமையால்) இழந்தார், எனப்படுதல் – என்று (பிறரால்) இகழப்படுதல், உய்ந்தார் – தப்பினர், காப்பு – (கள்ளர் முதலியோர் கொள்ளாவகை) காத்தல், உய்ந்தார் – தப்பினர், தம் கை நோவ – தமது கைகள் நோவும்படி, கல்லுதலும் – (நிலத்தைத்) தோண்டுதலும், உய்ந்தார் – தப்பினர், யாப்பு – (அத்தோண்டிய குழியில்) சேமித்துவைத்தல், உய்ந்தார் – தப்பினர், உய்ந்த – தப்பிய தொழில்கள், பல – பலவாயிருக்கின்றன, (ஆதலால்) நல் கூர்ந்தார் – வறுமை யடைந்தவரே, வழங்காத – (அறத்தின் பொருட்டுப் பிறர்க்கு) ஈயாத, செல்வரின் – செல்வ முடையாரினும், உய்ந்தார் – துன்பமிலராயினர், எ-று.

பொ-ரை. வருந்தித் தேடிய பொருளை அநுபவித்தலும், ஈதலு மில்லாமையால், இழந்தார் என்று பிறரால் இகழப்படுதல் தப்பினர்; கள்ளர் முதலியோர் கொள்ளாவகை காத்தல்தப்பினர்; தமது கைகள் நோவும்படி நிலத்தைத்தோண்டுதலும் தப்பினர்; அத்தோண்டிய குழியில் சேமித்துவைத்தல் தப்பினர். தப்பிய தொழில்கள் பலவாயிருக்கின்றன. ஆதலால் வறுமை யடைந்தவரே அறத்தின் பொருட்டுப் பிறர்க்கு ஈயாத செல்வ முடையாரினும் துன்பமிலராயினர் என்பது.

உய்ந்தாரெனப் பலமுறை கூறியது கேட்போர்க்கு அவருய்தலே வற்புறுத்தற்கென்க. எனப்படுதலுய்ந்தார் முதலிய நான்கும் தொகை வழுவமைதி. உழந்தது வினைமுதல் வினையைக் காரியத்தின்மேலேற்றிக் கூறும் ஒன்றன்படர்க்கை வினைப்பெயர். காப்பு, யாப்பு. இவற்றின் கல்லுதற்குக் கைந்நோ மிகுதி யாதலால் உம்மை உயர்வு சிறப்புப்பொருளது. பல பண்படியாகப் பிறந்த பலவின் படர்க்கைக் குறிப்பு வினைப்பெயர்.

The poor are better than the rich who do not spend (their wealth in charity); for they have (their wealth). They have escaped the trouble of saving it. They have escaped the trouble of digging (a pit to hoard the wealth). They have escaped the pain of the hands (securing it from the plunderers) Many are the troubles that the poor have escaped from. (7)

278. தனதாகத் தான்கொடான் ஈயத் தவருந்
தமதாய போழ்தே கொடாஅர்—தனதாக
முன்னே கொடுப்பி னவர்கடியாந் தான்கடியான்
பின்னை யவர்கொடுக்கும் போழ்து.

இ-ள். தாயத்தவரும் - ஞாதியரும், தமது - (தான் வருந்தித் தேடிய பொருள்) தமக்குரிய பொருள், ஆயபோழ்து - ஆகிய காலத்தில், கொடார் - (தன்னைக் குறித்து) தருமஞ் செய்யார், தனது ஆக - தன்னுடைய பொருளாம்படி, முன்னே - தான் வாழ்ந்திருந்த காலத்தில், கொடுப்பின் - (அறத்தின்பொருட்டு) கொடுப்பாளுளுல், அவர் கடியார் - அஞ்ஞாதியர் மறுக்கார், பின்னை - (தானிறந்த) பிற்காலத்தில், அவர் - அத்தாயத்தார், கொடுக்கும்போழ்து - (தமக்கு வேண்டியபடி அப்பொருளை) செலவிடுங்காலத்தில், தான் - வருந்தித்தேடிய தான், கடியான் - (வந்து) மறுக்கான், (ஆதலால்) தனது ஆக - தனக்குரியதாம்படி, தான் - வருந்தித்தேடியதான், கொடான் - (வாழுங் காலத்தில் அறத்தின்பொருட்டு) கொடுக்கின்றிலன். இதற்குக் காரணம் யாது, எ-று.

பொ-ரை. ஞாதியரும் தான்வருந்தித் தேடிய பொருள் தமக்குரிய பொருள் ஆகியகாலத்தில் தன்னைக்குறித்துத்தருமஞ் செய்யார். தன்னுடைய பொருளாம்படி தான் வாழ்ந்திருந்தகாலத்தில் அறத்தின்பொருட்டுக்கொடுப்பாளுளுல் அஞ்ஞாதியர் மறுக்கார். தானிறந்த பிற்காலத்தில் அத்தாயத்தார் தமக்குவேண்டியபடி அப்பொருளை செலவிடுங்காலத்தில் வருந்தித் தேடியதான் வந்து மறுத்தான். ஆதலால் தனக்குரியதாம்படி வருந்தித் தேடியதான் வாழுங்காலத்தில் அறத்தின் பொருட்டுக் கொடுக்கின்றிலன். இதற்குக் காரணம்யாது என்பது.

ஆதலாலென்பது சொல்லெச்சம். இதற்குக் காரணம் யாதென்பது இசையெச்சம். உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. கொடுப்பாளுளின் அப்பொருளால் இம்மையில் புகழும், மறுமையில் சுவர்க்க இன்பமும் உண்டாதலால் 'தனதுஆக' என்றார்.

While the wealth was his, he gave not (to the poor). His heirs, now it is theirs, give not. If he had given while it was in his possession, they would not have reproved him If they give (after his death) he cannot reprove them. (8)

279. இரவலர் கன்றுக வீவா ராவாக
வீரகிற் சுரப்பதாம் வண்மை—வீரகின்றி
வல்லவ ரூன்ற வடியாபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ்.

இ-ள். இரவலர் - இரப்பவர், கன்றாக - கன்றுகவும், ஈவார் - கொடுக்கும் மேன்மக்கள், ஆக - பசுவாகவும், விரகின் - உச்சாகத்தோடு, சுரப்பது - (பொருளாகியபாலை) சுரந்தீவது, வண்மையாம் - ஈகையாம், வல்லவர் - (கறக்க) வல்லவர், ஊன்ற - (தம் விரல்களால் சுரையை) ஊன்றிக் கறப்பதினால், வடியாபோல் - (பாலை) ஒழுக்குகின்ற பசுப்போல, கீழ் - கீழ்மகனாகிய பசு, (கள்ளாமுதலிய கன்றுகள்) வாய்வைத்து - (கிட்டி முதலிய கருவிகளாகிய) வாயைவைத்து, கொல்ல - வருத்துவதினால், விரகு இன்றி - உற்சாகமில்லாமல், சுரப்பது - (பொருளாகியபாலை) சுரக்கவல்லது, எ - று.

பொ-ரை. இரப்பவர் கன்றுகவும் கொடுக்கும் மேன்மக்கள் பசுவாகவும் உச்சாகத்தோடு பொருளாகிய பாலை சீரும்தீவது ஈகையாம். கறக்கவல்லவர் தம் விரல்களால் சுரையை ஊன்றிக் கறப்பதினால் பாலை ஒழுக்குகின்ற பசுப்போல, கீழ்மகனாகிய பசு கள்ளர் முதலிய கன்றுகள் கிட்டி முதலிய கருவிகளாகிய வாயைவைத்து வருத்துதினால் உற்சாகமில்லாமல் பொருளாகியபாலைசுரக்கவல்லது என்பது.

என்னே விரகின்றிச் சுரப்பது வண்மையன்றென்பது. இன்றி என்னும் குறிப்பு வினையெச்சம் சுரப்பதென்னும் வினைப்பெயர் கொண்டது. ஊன்ற, கொல்ல என்னும் செயவென்வாய்பாட்டு வினையெச்சங்கள் காரணப்பொருளனவாய் இறந்தகாலத்தன. கீழ் பண்பாகுபெயர். கீழ்மகன் தன்னை வருத்துவோர்க்கே ஈவானென்பது கருத்து. ஈரவலர் தொழிலடியாகப் பிறந்தபெயர்; இர பகுதி, வ் சந்தி, அல்புடை பெயர்ச்சி விகுதி பெற்றுமுடிந்த இரவல் பகுதி.

Liberality is that which yields its gifts spontaneously, the askers being as the calf and the givers as the cow; Meanness yields (very little) when put into a strait and compelled, as a cow with no good instinct gives a very scanty supply when strong ones bring pressure to bear upon it. (9)

280. ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பங்—காத்தல்

குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பச்
குறைபதி மற்றைப் பொருள்.

இ-ள். ஈட்டலும் - பொருளைத்தேடுதலும், துன்பம் - துன்பந்தருவது, ஈட்டிய - தேடப்பட்ட, ஒள்பொருளை - ஒளியைத்தரவல்ல பொருளை, காத்தலும் - (கள்ளர்முதலானோர் கவரவொட்டாமல்) காத்தலும், ஆங்கு - அக்காக்குங்காலத்தில், கடுந்துன்பம் - மிக்க துன்பத்தைத்தருவது, காத்தல் - காக்கப்பட்டபொருள், குறைபடின் - (தன்னளவில்) குறைந்தால், துன்பம் - (அக்குறைபாடும்) துன்பந்தருவது, கெடின் - (முழுமையும்) அழிந்தால், துன்பம் - (அவ்வழிவும்) துன்பந்தருவது, (ஆதலால்) பொருள் - செல்வப்பொருள், துன்பத்துக்கு - துனபங்களுக்கு, உறைபதி - தங்குமிடமாம், எ - று.

பொ - ரை. பொருளைத்தேடுதலும் துன்பந்தருவது. தேடப்பட்ட ஒளியைத் தரவல்ல பொருளைக் கள்ளர் முதலானோர் கவரவொட்டாமல் காத்தலும் அக்காக்குங் காலத்தில் மிக்க துன்பத்தைத் தருவது. காக்கப்பட்டபொருள் தன்னளவில் குறைந்தால் அக்குறைபாடும் துன்பந்தருவது; முழுமையும் அழிந்தால் அவ்வழிவும் துன்பந்தருவது. ஆதலால் செல்வப்பொருள் துன்பங்களுக்குத் தங்குமிடமாம் என்பது.

ஈட்டுதல் தருந்துன்பமொழிந்த மற்றைத் துன்பங்களுண்டாவன தாம் அநுபவித்தலும் அறத்தின்பொருட்டுப் பிறர்க்கீதலுஞ் செய்யாதார்க்கே ஆதலால் ஒருவர் ஈட்டியபொருளைத் தாமுமநுபவித்து, இரப்போர்க்குமீக என்பது கருத்து. ஈட்டல்முதலிய நான்குதொழிலும் பொருள் கிரணமாக உண்டாவன ஆதலால் அதனைத் 'துன்பக் குறைபதி' என்றார். காத்தல் "எல்லாமெனவ் பொது" என்பதுபோலத் தொழிலாகு பெயராய் நின்றது. துன்பந்தருவதனைத் துன்பமென்றது உபசாரவழக்கு. துன்பக்கு என்பதில் அத்துச்சாரியையை தொகுக்கப்பட்டது. ஐகாரச்சாரியை பெருதும், பெற்றுவந்த மற்று இரண்டும் அஃறிணை.

Gathering of wealth is beset with difficulties. Even so the guarding of the wealth so gathered; if it diminishes, it gives pain. If it perishes it troubles the mind. Wealth is the very abode of trouble. (10)

Chapter XXIX—Poverty

29 - ஆம் அதிகாரம்: இன்மை.

அஃதாவது பொருளில்லாமையிலுலாம் இழிவை யுணர்த்துவது. நன்றியில் செல்வத்தாலாகும் குற்றத்தை மேலையதிகாரத்தால் கூறிச்

செல்லு மின்மையினுலாகும் குற்றத்தை இவ்வதிகாரத்தாற் கூறுகின்ற மையின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

281. அத்திட்ட கூறை யரைச்சுற்றி வாழினும்
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்து
மொத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை.

இ - ள். (இழிகுடியிற் பிறந்தவன்) அத்துஇட்ட - செஞ்சாயம் ஊட்டிய, கூறை - ஆடையை, அரைச்சுற்றி - அரையில் சூழவுடுத்து, வாழினும் - வாழ்வதினும், பத்துஎட்டு - பத்தெட்டுப் பணத்தை, உடைமை - உடையனுகுதலால், பலருள்ளும் - பலரிலும், பாடெய்தும் - பெருமையை அடைவான், ஒத்த - (யாவர்க்கும்) உடன்பாடாகிய, குடிப்பிறந்தக்கண்ணும் - உயர்குடியிற் பிறந்தாராயினும், ஒன்றும் இல்லாதார் - பொருள் சிறிதும் இல்லாதவர், செத்தபிணத்தின் - இறந்தபிணத்தினும், கடை - கடைப்பட்டவர்.

பொ-ரை. இழிகுடியிற் பிறந்தவன் செஞ்சாயம் ஊட்டிய ஆடையை அரையில்சூழவுடுத்து வாழ்வதினும் பத்தெட்டுப்பணத்தை உடையனுகுதலால் பலரிலும் பெருமையை அடைவான். யாவர்க்கும் உடன்பாடாகிய உயர்குடியிற் பிறந்தாராயினும் றொருள் சிறிதும் இல்லாதவர் இறந்த பிணத்தினும் கடைப்பட்டவர் என்பது.

உலகத்தில் பலரும் பொருளுடைமையை அன்றிக் குல முடைமையைப் பாராட்டாரென்பது கருத்து. பிணத்திற்குச் செத்த என வேண்டாதீ கூறியது பொருளின்மையை இழித்தற்கு, பத்தெட்டென்பன மிகச்சில பொருளென்பதற்குக் காட்டியவெண். இவ்வெண் எண்ணலளவையாகுபெயராய்ப் பொருளையுணர்த்தின. அரை என்பதும் அவ்வாகுபெயர். வாழ் முதனிலைத் தொழிற்பெயர். உடைமை குறிப்புத்தொழிற்பெயர்.

If a man dresses himself (some what neatly) with a cloth dyed red, he will be considered to possess some wealth (some 10 or 8 coins) and consequently gain respect among men. The man devoid of wealth, though born in a good family, will be considered worse than a corpse. (1)

282. நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பம்—தேரின்

நிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து.

இ - ள். நெய் - நெய்யானது, நீரினும் - சலத்தினும், நுண்ணிது - நுட்பமானது, என்பர்-என்று (அறிவுடையோர்) சொல்லுவர், நெய்யினும் - நெய்யினும், புகை நுட்பம் - புகை நுட்பமாயிருத்தலை, யாரும் அறிவர் - கற்றவரும் கல்லாரும் அறிவார், தேரின் - (இல்லாமையி னிழிவை) ஆராய்ந்தால், நிரப்பு - வறுமையினது, இடும்பை யாளன் - துன்பத்தை யாளுதலுடையான், புகையும் - நுண்ணிய பூசையும், புகற்கு அரிய - நுழைதற் கருமையாயுள்ள, பூழை - துவாரங்களிலும், நுழைந்து புகும் - நுழைந்து செல்லுவான்,

பொ - ரை. நெய்யானது சலத்தினும் நுட்பமானது என்று அறிவுடையோர் சொல்லுவர். நெய்யினும் புகை நுட்பமாயிருத்தலைக் கற்றவரும் கல்லாரும் அறிவார். இல்லாமையி னிழிவை ஆராய்ந்தால் வறுமையினது துன்பத்தை யாளுதலுடையான் நுண்ணிய புகையும் நுழைதற் கருமையாயுள்ள துவாரங்களிலும் நுழைந்து செல்லுவான் என்பது.

நெய் நீரினும் நுண்ணிதாதல் அறிவுடையார்க்கே தோன்றுமாதலால் 'நீரினு நுண்ணிது நெய்யென்பர்' என்றும், புகையினது நுட்பத்தை அதைத் தொழில்புரியும் பேதையரு மறிதலால் 'புகை நுட்பம்' யாரு மறிவர், என்றும் கூறினர். இன்மையின திழிவை வியந்துரைத்தலாக, நிரப்பிடும்பையாளன் புகையும் புகற்கரிய பூழைநுழைந்து புகும் என்றமையால் இது தொழிலதிசயத்தின்பாற்படும். நிரம்பென்னுந் தன்வினைப்பகுதி, தல் விகுதி புணர்ந்துகெட்ட மாத்திரையில் நிரப்பென முதனிலைதிரிந்த தொழிற்பெயர் இன்மையை உணர்த்தலால் மங்கலவழக்கு; இல்லாமையாகிய குறைவுபாட்டை நிரப்புதலெனப் பொருள்கொண்டு, இன்மை எதுவாக நிரப்புதலாகிய தொழிற்காரிய மூண்டதலின் காரியவாகுபெயரெனினும் ஒக்கும். இங்ஙனங் கொள்ளும்போது நிரப்பு பிறவினையாகிய முதனிலைத் தொழிற்பெயர். நிரப்பிடும்பையாளுதலாவது நிரப்பிடும்பை நீங்காதிருத்தல். புகை தொழிலடியாகப் பிறந்த பெயர்; புகு பகுதி, ஐ வினைமுதற் பொருண்மை விகுதி, உகரக்கேடுசந்தி. இதுபற்றியே ஆசிரியர் 'புகையும் புகற்கரிய பூழை' எனவும், கம்பநாடர் "புகைபுகாவாயிலும் புகுவான்" எனவுங் கூறினர்.

Ghee is considered lighter than water. The smoke is lighter than ghee. If you think of it, the man debased by poverty will enter haunts where smoke scarcely finds a way. (2)

283. கல்லோங் குயர்வரைமேற் காந்தண் மலராக்கால்
செல்லாவாஞ் செம்பொறி வண்டினம்—கொல்லைக்
கலாஅற் கிளிகடியுங் கானக நாட
இலாஅ அர்க் கில்லை தமர்.

இ-ள். கல்லோங் - தினைப்புனத்தில், கல்லால் - கற்களினால், கிளி - (தினைக்கதிரை அழிக்கவரும்) கிளிகளை, கடியும் - (குறப்பெண்கள்) ஓட்டுகின்ற, கானகம் - காட்டைச்சார்ந்த, நாட - குறிஞ்சி நிலத்தலைவனே, கல் - கல்லாகிய, ஓங்குயர்வரைமேல் - மிகவும் உயர்ந்த மலையில், காந்தள் - காந்தளின் மலர்கள், மலராக்கால் - மலராவிடின், செம்பொறி - சிவந்த புள்ளிகளையுடைய, வண்டினம் - வண்டின் கூட்டங்கள், செல்லாஆழ் - செல்லாதனவாகும், (அதுபோல) இலார்க்கு - வறியவரிடத்து, தமர் - உறவினர், இல்லை - வந்துசேர்தலில்லை, எ-று.

போ-ரை. தினைப்புனத்தில் கற்களினால், தினைக்கதிரை அழிக்கவரும் கிளிகளைக் குறப்பெண்கள் ஓட்டுகின்ற காட்டைச்சார்ந்த குறிஞ்சிநிலத்தலைவனே! கல்லாகிய மிகவும் உயர்ந்தமலையில் காந்தளின் மலர்கள் மலராவிடின் சிவந்த புள்ளிகளையுடைய வண்டின்கூட்டங்கள் செல்லாதனவாகும். அதுபோல வறியவரிடத்து உறவினர் வந்து சேர்தலிலர் என்பது.

மலராக்கால் வண்டினம் செல்லா என்ற உவமையால் ஒருவர் பொருளுடையாராகிய காலத்தில் பலரும் உறவினராகச் சேர்வர், பொருளிலராகிய காலத்தில் சேராரென்பது கருத்து. செய்யுளிசை நிறைக்கவந்த அளபெடை யிரண்டில் பின்னது நான்குமாத்திரையதாதலால் செய்யுள் வழுவமைதி என்க. கல்வரை இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலை. கல் கருவியாகுபெயர். வரையென்னும் மூங்கிலின்பெயர் மலைக்கானமையால் தானியாகுபெயர். வரை என்னும் அளவுப்பண்பு மூங்கிலுக்கானது பண்பாகுபெயர். அளவென்றது கணுவை. ஓங்குயர் ஒருபொருட் பன்மொழி. வண்டினம் ஒன்றன்கூட்டத் தற்கிழமைப் பொருளதாகிய ஆறாம்வேற்றுமைத் தொகைநிலை.

If the *Kanthal* does not bloom on the high hill-crags the crimson spotted beetle tribe seek it not. Lord of the woody regions where from they scare away parrots with stones! The poor have no kin. (3)

284. உண்டாய போழ்தி னுடைந்துழிக் காகம்போற்
றொண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோ வென்பா
ரொருவரு மில்வுலகத் தில்.

இ-ள். இவ்வுலகத்து - இவ்வுலகத்தில், உண்டாய போழ்தின் - (செல்வப்பொருள் ஒருவருக்கு) உள்ளதாகியகாலத்தில், உடைந்துழி - (அவர்) இறப்பாராயின், காகம்போல - காகங்கள்கூடிப் புலம்புவது போல, ஆயிரவர் - பலர், தொண்டு - குற்றேவல் செய்பவராக, தொகுப - கூடிப் புலம்புவர், வண்டாய் - (செல்வப்பொருளில்லாதகாலத்தில்) வண்டு தேனைநாடிச் செல்வதுபோன்று, திரிதருங்காலத்து - (உணவை நாடி) திரியும்போது, தீது இலிரோ - சுகமுடையீரோ, என்பார் - என்று கேட்பவர், ஒருவரும்இல் - ஒருவருமிலர், எ - று.

போ-நை. இவ்வுலகத்தில் செல்வப்பொருள் ஒருவருக்கு உள்ளதாகிய காலத்தில் அவர் இறப்பாராயின் காகங்கள்கூடிப் புலம்புவது போல, பலர் குற்றேவல் செய்பவராகக் கூடிப் புலம்புவர். செல்வப்பொருளில்லாதகாலத்தில் வண்டு தேனைநாடிச் செல்வதுபோன்று உணவை நாடித் திரியும்போது சுகமுடையீரோ என்று கேட்பவர் ஒருவருமிலர் என்பது.

காகங்கள் மற்ற பறவைகள்போலாது தம்மில் ஒன்றிறந்தால் பலகூடிப் புலம்புவனவாதலால் காகம்போலத் தொகுப என்றார். இது தொழிலுவமம். வண்டென்பதும் இது. செல்வரிறந்தாலும் பலர் கூடுவர்; வறியவர் உயிர் வாழினும்அவரது வாழ்க்கையை விரைவுவா ரொருவரு மிலரென்பது கருத்து. இதனால் செல்வத்தினது மேன்மையும், வறுமையின திழிவும் கூறப்பட்டன. தொண்டு பண்பாகுபெயர். ஆயிரவரென்பது மிகப் பலரென்பதற்குக் காட்டியதோ ரெண்ணுப் பெயர். தீது பண்புப்பெயர்; முழுதென்பதிற்போல இதில் துவ்விகுதி பகுதிப்பொருள் விகுதி. உடைந்துழி 'இறந்தகால வினையெச்சம்

When wealth is with one, myrrjods will assemble like the crows around the fallen corpse. When one in adverse circumstances wanders like a beetle, no one in the world will ask—"Is it well with you?" (4)

285. பிறந்த குலமாயும் பேராண்மை மாயுஞ்
சிறந்ததங் கல்வியு மாயுங்—கறங்கருவி

கன்மேற் கழூஉங் கணமலை நன்னாட
வின்மை தழுவப்பட் டார்க்கு.

இ-ள். கறங்கு அருவி - (பாயாநின்று) ஒலிக்கின்ற அருவி, கல்-கற்களினை, மேல்கழூஉம் - மேற்புறத்தைக் கழுவுகின்ற, கணமலை - கூட்டமாகிய மலைகளைச்சார்ந்த, நல்நாட - நன்மையாகிய குறிஞ்சி நிலத்தலைவனே, இன்மை - வறுமையினால், தழுவப்பட்டார்க்கு-சாரப் பட்டவர்க்கு, பிறந்தகுலம் - (தாம்) பிறந்த குடிப்பிறப்பின்பெருமை, மாயும் - ஒழியும், பேராண்மை - (பிறர் செய்தற்கு) அரியவற்றைச் செய்யும் வல்லமை, மாயும் - ஒழியும், சிறந்த -(நீங்குதலில்லாத) சிற ப்புள்ள, தம் கல்வியும் - தமது கல்வியறிவும், மாயும் - மழுக்கமடை யும், எ-று.

போ - ரை. பாயாநின்று ஒலிக்கின்ற அருவி கற்களினது மேற் புறத்தைக் கழுவுகின்ற கூட்டமாகிய மலைகளைச் சார்ந்த நன்மையா கிய குறிஞ்சி நிலத்தலைவனே! வறுமையினால் சாரப்பட்டவர்க்குத்தாம் பிறந்த குடிப்பிறப்பின் பெருமை ஒழியும். (பிறர் செய்தற்கு) அரிய வற்றைச் செய்யும் வல்லமை ஒழியும். நீங்குதலில்லாத சிறப்புள்ள தமது கல்வியறிவும் மழுக்கமடையும் என்பது.

பொருளுடைமையை யன்றிக் குடிப்பிறப்பை பாராட்டுவாரரிய சாதல் பற்றிக்குலமும், பொருளின்மை காரணமாக இடமுமேவலும் வாய்க்காமைபற்றிப் பேராண்மையும், கவலைபெருகுதல்பற்றிக் கல்வி யறிவும் மாய்வனவாயின. கல்வி உயிரினிடத்துக் கிடந்து எழுபிறப்பி னும் உதவுதலால் தம்கல்வி என்றும், அதுபற்றிச் சிறந்த என அடை கொடுத்துங் கூறினர். குலம், கல்வி காரணவாகுபெயர். கழூஉம் சொல்லிசை அளபெடை.

Lord of the pleasant land of clustering hills which are washed by resounding water-falls! When men are held in poverty's embrace, their race will be obscured, their manly prowess is gone, their rare learning is nothing. (5)

286. உள்கூர் பசியா லுழைநசைஇச் சென்றார்கட்
குள்ளரு நிருந்துமொன் முற்றுதா — னுள்ளரு
நிருந்தூயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தின னுதலே நன்று.

இ - ள். உள் - வயிற்றில், கூர் - மிகுகின்ற, பசியால் - பசியினால், நசைஇ - (ஒன்றைப்)பெற) விரும்பி, உழைசென்றார்கட்கு - தன்னிடத்துச் சென்றவர்க்கு, உள்ஊர் - ஊருக்குள், இருந்தும் - (செல்வமுடையனாக) இருந்தும், ஒன்றுஉம்மாற்றாதான் - சிறிதும் உபகரியாதவன், உள்ஊர் - ஊரினுள், இருந்து - (ஈதலாகிய அறஞ்செய்யாதவனாக) இருந்து, கொன்னே - (அறனாகிய) பயனில்லாமல், உயிர் கழியாது - உயிர்கழிந்துபோகாமல், தான் - (நிகையில்லாத) தான், போய் - (பிறர்இல்லில்) சென்று, விருந்தினன்ஆதலே - விருந்தினனாக உண்டுகழிதலே, நன்று - நன்மையுடையது, எ - று.

பொ-ரை. வயிற்றில் மிகுகின்ற பசியினால் ஒன்றைப்பெற விரும்பித் தன்னிடத்துச் சென்றவர்க்கு ஊருக்குள் செல்வமுடையவனாக இருந்தும் சிறிதும் உபகரியாதவன் ஊரினுள் (ஈதலாகிய அறஞ்செய்யாதவனாக) இருந்து அறனாகிய பயனில்லாமல் உயிர் கழிந்துபோகாமல் நகையில்லாத தான் பிறர் இல்லில் சென்று விருந்தினனாக உண்டு கழிதலே நன்மையுடையது என்பது.

உடம்பில் பலவகை உணவுகளும் தங்குதற்கு உள்ளிடமுடைய உறுப்பாதலால் வயிற்றை உள் என்றார். உள் என்னும் இடப்பெயர் கூர்பசியா லென்றதினால் வயிற்றுக்காயிற்றெனினும் பொருந்தும். கொன் பயனின்மையுணர்த்தும் இடைச்சொல். செல்வமுடைய ஒருவன் தன்பாவிரப்பவர்க்கு ஈயாதனையின் அதனால் பாவமும் பழிப்பும் உண்டாதல்போல இரத்தலினால் உண்டாகாமையால் விருந்தினனாதல் நன்றாயிற்று. முன்னுள்ள ஏ ஈற்றசை. உள்ளூரிருந்துகொண்டே கழித்தில், விருந்தினனாதல் இவ்விரண்டில் பின்னதைப் பிரித்தமையால் பின்னுள்ள ஏ பிரிநிலை. உள்ளூரென்பது பின்முன்னாக மாறிநின்ற உறுப்புத் தற்சிழமைப் பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகை. இஃது இலக்கணப்போலி.

To those who have come to receive something to appease heir anger, if the man in the locality does not render necessary help, it is better for him to waste his life thus in his place, than to go and live in distant place as a guest. (6)

287. நிர்மையே யன்றி நிரம்ப வெழுந்ததந்
கூர்மையு மெல்லா மொருங்கிழப்பர்— கூர்மையின்
மூல்லை யிலைக்கு மெயிற்றாய் நிரப்பென்னு
மல்ல லடையப்பட் டார்.

இ - ள். கூர்மையின் - (தாம்மிக்க) கூர்மை யுடைமையால், முல்லை - முல்லையரும்புகளை, அலைக்கும் - வெற்றிகொள்ளும், எயிற் றுய் - பற்களையுடையாளே, நிரப்புஎன்னும் - வறுமையென்று சொல் லப்படும், அல்லல் - துன்பத்தினால், அடையப்பட்டார் - அடையப் பட்டவர், நீர்மையேஅன்றி - நற்குணங்களையே அல்லாமல், நிரம்ப எழுந்த - குறைவில்லாமலுயர்ந்த, தங்கூர்மையும் - தமதுகூரறிவை யும், எல்லாம் - மற்றதீவிப்பிறப்பு நற்செய்கை முதலிய யாவற்றை யும், ஒருங்கு இழப்பர் - ஒருசேர இழந்துவிடுவர், எ - று.

பொ-ரை. தாம்மிக்கக் கூர்மையுடைமையால் முல்லை யரும்பு களை வெற்றிகொள்ளும் பற்களை யுடையாளே! வறுமையென்று சொல்லப்படும் துன்பத்தினால் அடையப்பட்டவர் நற்குணங்களையே அல்லாமல் குறைவில்லாம லுயர்ந்த தமது கூரறிவையும் மற்ற தீவிப் பிறப்பு நற்செய்கை முதலிய யாவற்றையும் ஒரு சேர இழந்துவிடுவர் என்பது.

நிரப்பென்னுமல்லலெனக் காரணத்தைக் காரியமாக உபசரித் தார் முல்லை முதலாகுபெயர். நிரம்பவெழுந்த கூர்மையாவது எல்லா நூற்பொருளையு மூட்டின்றியுணரும் அறிவு. ஏ பிரிநிலை.

O maiden whose teeth vie in sharpness with the jasmine-buds! When poverty assails men, they lose all their attributes of goodness at once and the acuteness of their mind gained from ample stores of learning. (7)

288. இட்டாற்றுப் பட்டொன் றிரந்தவர்க் கீற்றது
முட்டாற்றுப் பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலி
னெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைந்நீட்டுங்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று.

இ-ள். முயன்று - (ஒருவன் பொருள்பெற) முயன்று, இட்டு ஆற்றுப்பட்டு - ஈதலாகிய வழியில்தான்நின்று, ஒன்று - யாதாயினு மொருபொருளை, இரந்தவர்க்கு - (தன்னிடத்து) இரந்தவர்களுக்கு, ஆற்றாது - (ஈதலை) செய்யாமல், முட்டுஆற்றுப்பட்டு - (பொருளின்) குறைவாகிய வழியினின்று, உள்ளூர்வாழ்தலின் - ஊருக்குள் உயிர் வாழ்வதினும், நெடுஆற்றுச்சென்று - தூரவழிப்போய், நிரைமனை யில் - முறையாயுள்ளவீடுகளில், கைநீட்டும் - தன்கைகளைநீட்டி ஏற் கின்ற, கெட்டுஆற்றுவாழ்க்கையே - இன்மையாகிய வழியில் வாழ் தலை, நன்று - நன்மையுடையது, எ-று.

பொ-ரை. ஒருவன் பொருள்பெற முயன்று ஈதலாகிய வழியில் தான் நின்று யாதாயினு மொருபொருளைத் தன்னிடத்து இரந்தவர்களுக்கு ஈதலைச் செய்யாமல் பொருளின் குறைவாகிய வழியினின்று ஊருக்குள் உயிர்வாழ்வதினும் தூரவழிப்போய் முறையாயுள்ள வீடுகளில் தன்கைகளை நீட்டி ஏற்கின்ற இன்மையாகிய வழியில் வாழ்தலே நன்மையுடையது என்பது.

ஒருவன் பொருள்தேடி இரப்பவர்க்குக்கொடுத்து வாழத்தனக்கு இயலாதாயின் அவன் இரந்துண்ணல் நன்றேனும் இன்மையினிழிவு இதனைற் கூறப்பட்டது. இட்டு, கெட்டு என்பன இரண்டும் இடு, கெடு என்னும் முதனிலைகள் தில் விகுதி புணர்ந்து கெட்டமர்த்திரையில் தன்னெற்றிரட்டி னின்றமையால் முதனிலை திரிந்த தொழிற்பெயர்கள். இட்டாற்றுப் பட்டென்னும் இறந்தகால வினையெச்சம் ஆற்றுதென்னும் மறைவினையெச்சத்தின் முதனிலையோடு முடிந்தது. கை தனி யை ஆதலின் கைந்நீட்டென நகரமிக்கது. நீட்டுமென்னும் பிறவினையாகிய பெயரெச்சம் தன் காரணமாகிய கெட்டாறென்னும் பெயர்கொண்டது.

The life of begging in a distant place is preferable to the beggarly one lead in one's birth place where he is not able to give something to those who now come to beg of you. (8)

289. கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி
யிடகு பறித்துக்கொண் டட்டுக்—குடைகிலனு
வப்பிலி வெந்தைதின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்.

இ-ள். துப்புரவு - அநுபவிக்கப்படும் பொருள்கள், சென்று - நீங்கினதினால், உலந்தக்கால் - (ஒருவர்) இன்மை யுடையாராஞல், (செல்வமுடைய காலத்தில்) கடகம் - கடகமென்னும் பூண்கள், செறிந்த - நெருங்கியிருந்த, தம்கைகளால் - தமதுகைகளால், வாங்கி - (சிறுதூற்றினை) வளைத்து, அடகுபறித்துக்கொண்டு - இலைகளைப் பறித்துக்கொண்டு, அட்டி - பாகஞ்செய்து, குடை - குடைவாகப் பிடித்த தமதுகையே, கலன்ஆக - பாத்திரமாக, உப்புஇலி - உப்பில்லாததாகிய, வெந்தை - வெந்த இலைக்கறியை, தின்று - உண்டு, உள் அற்று - ஊக்கமழிந்து, வாழ்ப - உயிர்வாழ்வார், எ - று.

பொ-ரை. அநுபவிக்கப்படும் பொருள்கள் நீங்கினதினால் ஒருவர் இன்மையுடையாராலுல் செல்வமுடையகாலத்தில் கடகமென்னும் பூண்கள் நெருங்கி இருந்த தமது கைகளால் சிறுதூற்றினை யளைத்து இலைகளைப் பறித்துக்கொண்டு பாகஞ்செய்து குடைவாகப் பிடித்த தழை கையே பாத்திரமாக உப்பில்லாததாகிய வெந்த இலைக் கறியை உண்டு ஊக்கமழிந்து உயிர் வாழ்வார் என்பது.

இதனாலும் இன்மையினிழிவு கூறப்பட்டது. வெந்தை தொழிலடியாகப் பிறந்தபெயர்; வே பகுதி, த் சந்தி, த் விரித்தல், ஐ வினை முதற் பொருண்மை விகுதி, பகுதி ஏகாரம் எகரமானது குறுக்கல், சந்தித்தகரம் நகரமானது மெலித்தல், இச்சொல்லை ஒன்றன் படர்க்கை இறந்தகால வினைப்பெயரெனக்கொண்டு தகரவுயிர்மெய் தொகுத்தலென்பாருமுளர்; அங்ஙனமாலுல் ஈற்றில்நின்ற ஐ இரண்டனுருபாகல்வேண்டும்; ஆயின் வெந்தைத்தின்று எனத்தகரச் சந்தி பெறவேண்டும்; அது பாடமன்மையால் என்னலாகாதென்க. துப்புரவு தொழிற்பெயர். து பகுதி, ப் சந்தி, பு புடைபெயர்ச்சி விகுதி, உரவென்பது அப்பொருட்டாகிய விகுதி. இது விகுதிமேல் விகுதியாய்வந்தது. ஒப்புரவு என்பதும் இது. சென்று காரணப்பொருட்டாகிய செயவெனெச்சத்திரிபு.

When fortune is gone, the hands that were wearing golden bracelets, now cull the herbs of the forest and cook the meal; and then eat the mess unseasoned from a palm leaf for a dish. Thus pressed by poverty they live. (9)

290. ஆற்றத் தொறிய வணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவாம்—நீர்த்தருவி
தாழா வுயர்சிறப்பிற் றண்குன்ற நன்னாட
வாழாதார்க் கில்லை தமர்.

நீ - ள். நீர்த்து - நீர்வளமுடையதாகிய, அருவி - அருவியானது, தாழாத - இடையறாமல் பாய்கின்ற, உயர்சிறப்பின் - உயர்ந்த சிறப்பினையுடைய, தண்குன்ற நல்நாட - குளிர்ச்சியாகிய நல்ல மலைநாட்டானே, ஆர்த்தபொறிய - நிறைந்த புள்ளிகளையுடைய, அணிகிளர் - அழகுவிளங்குகின்ற, வண்டினம் - வண்டின் கூட்டங்கள், பூத்து - (பருவகாலத்தில்) மலர்ந்து, ஒழி - மாறிய, கொம்பின்மேல் - கொம்பினில், செல்லா - சேரா, (அதுபோல) வாழாதார்க்கு - பொருளில்லாதாரிடத்து, தமர் - உறவினராவார், இல்லை - இலர், எஅறு.

பொ-ரை. நீர்வளமுடையதாகிய அருவியானது இடையறாமல் பாய்கின்ற உயர்ந்த சிறப்பினை யுடைய குளிர்ச்சியாகிய நல்ல மலை நாட்டானே! நிறைந்த புள்ளிகளை யுடைய அழகு விளங்குகின்ற வண்டின் கூட்டங்கள் பருவகாலத்தில் மலர்ந்து மாறிய கொம்பினில் சேரா, அதுபோலப் பொருளில்லாதாரிடத்து உறவினராவார் இலர் என்பது.

ஆர்த்த வலித்தல். பொறியில் னையடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; அவ்வினைப்பெயரெனக்கொண்டு, அதனோடு வண்டின மென்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலையாகப் புணர்ந்த தெனினும் பொருந்தும். வாழாதார் என்பதில் வாழாமை பொருளின் மையை யுணர்த்திற்று. இதனைச் செல்வத்துக்கு வாழ்க்கையெனப் பெயர் வழங்கலாலுமுணர்க. நான்கனுருபு ஏழாவதனிடப் பொருளீ தது.

Lord of the good cool high hilly land, where bounteous streams flow down unceasingly! The humming beetles all bright in hue gather not on the branch of the flower tree that has ceased to blossom. (10)

Chapter XXX—Honour

30-ஆம், அதிகாரம்: மானம்.

அஃதாவது உயர்குடியிற் பிறந்தவர் இன்மையடைந்தகாலத்தும் தமது நிலையில் தாழ்வுபடாமையும், ஊழினுல் தாழ்வு நேரிடின் உயிர் வாழ விரும்பாமையுமாகிய தன்மை. மானங் கெடுதற்குரிய இன்மை வந்தகாலத்தும் அத்தன்மை கெடாதென்ப துணர்த்தற்கு இஃது இன் மையின் பின் வைக்கப்பட்டது.

291. திருமதுகை யாகத் திறனிலார் செய்யும்
பெருமிதங் கண்டக் கடைத்து—மெரிமண்டிக்
கானந் தலைப்பட்ட தீப்போற் கனலுமே
மான முடையார் மனம்.

இ-ள். திரு - செல்வப்பொருள், மதுகையாக - வலியதுணையா கக்கொண்டு, திறனில்லார் - (குடிப்பிறப்பாகிய) வகையில்லாதவர், செய்யும் - செய்கின்ற, பெருமிதம் - இறுமாப்பாகிய செயல்களை, கண்டக் கடைத்தும் - கண்டாலும், கானத்தலை - காட்டில், எரி மண்டி - தீப்பொருந்துதலால், பட்ட - உண்டாகிய, தீப்போல -

பெருந்தீப்போல, மானம்உடையார்மனம் - மானத்தை உடையோரது மனம், கனலும் - கொதிக்கும், எ - று.

பொ-ரை. செல்வப்பொருள் வலிய துணையாகக் கொண்டு குடிப்பிறப்பாகிய வகையில்லாதவர்செய்கின்ற இருமாப்பாகிய செயல் களைக்கண்டாலும் காட்டில் தீப்பொருந்துதலால் உண்டாகிய பெருந் தீப்போல மானத்தை உடையாரது மனம் கொதிக்கும் என்பது.

திறனின்மை அதிகாரத்தால் இழிகுடிப்பிறப்புக்காயிற்று. செய் யுமென்றதனால் பெருமிதம் செயலின்மேலது. தாம்செய்யாமையே யன்றி எனப் பொருள்தரலால் உம்மை இறந்தது தழீஇயதனைத்தே. இழிவு சிறப்பின்கண் வந்தது. காணீத்தலை சந்தவின்பப் பொருட்டுக் கானந்தலை யெனமெலித்தலாயிற்று. கண்டக் கடைத்துமென்பதில் து பகுதிப்பொருள் விகுதி. மண்டி செயவெனெச்சத் திரிபு.

The mind of the men of honourable feeling will kindle into flame and rage like the forest-fire, when they behold the haughty acts of the people destitute of virtuous habits, whose only strength is their wealth. (1)

292. என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார்—தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
கூரையாரோ தாமுற்ற நோய்.

இ-ள். தம் உடையார் - தம்மைத் தமக்குரியராக வுடையார் தம்பாடு - தமதில்லாமையின் வருத்தத்தை, உரையாமைமுன் - சொல் லாமைக்கு முன்னே, உணரும் - அறிந்து நீக்கவல்ல, ஒண்மைஉடை யார்க்கு உம் - கூரறிவுடையார்க்கும், தாம்உற்றநோய் - தாம் (இன் மையால்) அடைந்த வருத்தத்தை, உரையாரோ - சொல்லுமியல்பின ரல்லர், (அங்ஙனமாக) என்புஆய் - (தம்முடம்பு தசையின்றி) எலும் புடையதாகி, உகினும் - இளைக்கினும், இயல்பு இலிரார்பின் - (ஒரு வர் கருத்தைக் குறிப்பாலுணரும்) இயல்பில்லாதவர்க்குப் பின், சென்று - போய், தம்பாடு - தமதில்லாமையின் வருத்தத்தை, உரைப் பரோ - சொல்லியிரப்பாரோ இரவார், எ-று.

பொ-ரை. தம்மைத் தமக்குரியராக வுடையார் தமதில்லாமை யின் வருத்தத்தைச் சொல்லாமைக்கு முன்னே அறிந்து நீக்கவல்ல கூரறிவுடையார்க்கும் தாம் இன்மையால் அடைந்த வருத்தத்தைச் சொல்லு மியல்பினரல்லர், அங்ஙனமாக தம்முடம்பு தசையின்றி

எலும்புடையதாகி இளைக்கினும் ஒருவர்கருத்தைக் குறிப்பாலுணரும் இயல்பில்லாதவர்க்குப்பின் போய்த்தமதில்லாமையின் வருத்தத்தைச் சொல்லியிரப்பாரோ இரவார்என்பது.

தம்மை யுடைமையாவது பிறரவமதிக்கும்படி அவராணைக் குட்பட்டியிர் வாழாமை. உடையார்க் கென்பதினீற்றில் உயர்வு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. ஓ இரண்டில் முன்னது எதிர்மறை; பின்னது உயர்வு சிறப்பு. இவ்வாறு கொள்ளாமல் எதிர்மறைப் பொருளதாகக்கொண்டு உரையாரோ என்பதற்கு உரைப்பாடென வுரைக்கின் "அற்றம் - மறைக்கும் துணையார்க் குரைப்பவே தம்மைத், துறக்குந் துணிவிலாதார்" என்பதனோடு முரணுதலாலும், இப்பொருளால் மானத்தின் பெருமை தேன்றுமையாலும் உரைக்கலாகாதென்க. ஆண்மையென்னுங் கீரியத்தின்பெயர் அறிவென்னுங் காரணத்தின் மேலது. மானமுடையார் தமதின்மையை யார்க்கு முரையாரென்பது கருத்து.

Will men of honour who are masters of themselves go after useless men to tell of their sufferings even though they are reduced to a mere skeleton? Do they not communicate them to the persons of righteous souls that understand their suffering before they speak? (2)

293. யாமாயி னெம்மில்லங் காட்டுதுந் தாமாயின்
காணீவே கற்பழியு மென்பார்போ—ணணிப்
புறங்கடை வைத்தீவர் சோறு மதனன்
மறந்திடுக செல்வர் தொடர்பு.

இ-ள். யாம் ஆயின் - வறுமையுடைய யாம் (அவர்க்கு) உணவு தந்தால், எம் இல்லம் - எம் மனையாளை, காட்டுதும் - (அவர்) காண இசைவோம், தாம் ஆயின்-தாம் (எமக்கு) உணவுதந்தால், காணீவே - (தம்மனையாளை யாம்) பார்க்கவே, கற்பு அழியும் - கற்புகிலை கெடுவான், என்பார் - என்று கருதி, நாணி - (மனையினுட் கொண்டு போக) கூசி, புறங்கடை - தலைவாயிலில், வைத்து - (எம்மை) வைத்து, சோறும் - சோற்றையும், ஈவர் - ஈவார், அதனால் - அவ்வாறு நடத்துதலால், செல்வர் - செல்வருடைய, தொடர்பு - நட்பை, மறந்திடுக - (நீ) மறக்கக்கடவாய், எ-று.

பொ-ரை. வறுமையுடைய யாம் அவர்க்கு உணவு தந்தால் எம் மனையாளை அவர்காண இசைவோம். தாம் எமக்கு உணவு தந்தால்,

தம்மனையாளை யாம் பார்க்கவே கற்புநிலை கெடுவாள் என்று கருதி மனையினுட் கொண்டுபோகக் கூசித் தலைவாயிலில் எம்மை வைத்து சோற்றையும் ஈவார். அவ்வாறு நடத்துதலால் செல்வருடைய நட்பை மறக்கக்கடவாய் என்பது.

மானங்கெடாத இரவலன் மானங்கெட்ட இரவலனை நோக்கிக் கூறியதாக இச்செய்யுள் செய்யப்பட்டது. ஒருவர் தம்மை மதியாதாரில்லத்தில் ஒண்ணலாகாதென்பது கருத்து. பின் ஈவர் சோறுமென்றதனால் ஆயினென்னும் வினையெச்ச மிரண்டும் அவ்வினையின் பொருள்படநின்றன. இல்லமென்னும் இடத்தின்பெயர் அவ்வாகுபெயராய்த் தலைமைபற்றி மனையாளை உணர்த்தியது. செல்வரது பெருமிதந் தோன்ற ஈவார் என்றும், அவர்க்கு வறியாரிடத்து நட்பின்மை தோன்றச் சோறென்ற மாத்திரையி லமையாது, சோறும் என இழிவு சிறப்பும்மை தந்துங் கூறினர். ஏ தேற்றம். போல் ஒப்பில்போலி.

'At least we shall show you our house; to our ladies if they see you, it would be the destruction of their womanly reserve' as though they thought and remarked like this, they seat us at the back door and give us meal. Therefore let us dismiss all idea of forming friendship with the rich. (3)

294. இம்மையு நன்ரு மியனெறியுங் கைவிடா
தும்மையு நல்ல பயத்தலால்—செம்மையி
னனங் கமழுங் கதுப்பினாய் நன்றேகான்
மான முடையார் மதிப்பு.

இ-ள். நானம் - கத்தூரி, கமழும் - மணக்கின்ற, கதுப்பினாய் - கூந்தலை யுடையாளே, மானமுடையார் - மானத்தை யுடையாரது, மதிப்பு - கொள்கை, இம்மையும் - இப்பிறப்பிலும், நன்று - புகழைத் தருவது, இயல்நெறியும் - நல்லொழுக்கத்தையும், கைவிடாது - சிறிதும் விடாமல், செம்மையின் - (அவ்வொழுக்கத்தில்) கோணுதலின்மையால், உம்மையும் - மறுமையிலும், நல்ல - இன்பங்களை, பயத்தலால் - தருவதினால், நன்றே - (யாவர்க்கும் ஒப்பமுடிந்த) நல்லதே, எ-று.

பொ-ரை. கத்தூரி மணக்கின்ற கூந்தலை யுடையாளே! மானத்தை யுடையாரது கொள்கை இப்பிறப்பிலும் புகழைத் தருவது; நல்லொழுக்கத்தையும் சிறிதும் விடாமல் அவ்வொழுக்கத்தில் கோணுதலின்மையால் மறுமையிலும் இன்பங்களைத் தருவதினால் (யாவர்க்கும் ஒப்பமுடிந்த) நல்லதே என்பது.

முதலில் நன்மையைத் தருவதனை நன்று என்றார்; இம்மைப்பேறு புகழாதலால். உண்டாரது கைவிடாமைத் தொழில் அவர் மதிப்பின் மேலேற்றப்பட்டது. கைவிடாது உகரவீற்று ஏதிர்மறை வினையெச்சம். கோணுதல் தவறுதல். காண் முன்னிலையசைச்சொல்.

O Lady whose looks diffuse the odour of fragrant musk! Behold it is very good to cultivate that which is esteemed by men of honour; for in this world it is good, and since it leads to strict adherence to the virtuous ways, it will also be productive of good in the world yonder. (4)

295. பாவமு மேனைப் பழியும் படவருவ
சாயினுஞ் சான்றவர் செய்கலார்—சாத
லொருநா ளொருபொழுதைத் துன்ப மவைபோ
லருநவை யாற்றுத லின்று.

மு-ள். சாதல்-இறத்தலென்பது, ஒருநாள் - ஒருதினத்தில், ஒரு பொழுதை - சிறிதுபொழுது அநுபவிக்கக்கூடவதாகிய, துன்பம் - துன்பந் தருவது, அவைபோல - பாவமும்பழியு மூண்டாம் செயல்கள் போல, அருநவை-நீக்குதலரிய அப்பழிபாவமாகிய குற்றத்தை, ஆற்றுதல் இன்று - செய்தலிலது, (ஆதலால்) சான்றவர் - கல்வியறிவொழுக்கங்களால்நிறைந்தமானிகள், பாவமும் - (விடாமல்பின்செல்வதாகிய) பாவமும், ஏனைப்பழியும் - அஃதல்லாத (இவ்வுலகத்துநிலைப்பதாகிய) பழியும், பட-உண்டாம்படி, வருவ - வரும்தீச்செயல்களை, சாயினும் - (செய்யாமையால்) இறத்தல்நேருமாயினும், செய்கலார் - செய்யார், எ - று.

பொ-ரை. இறத்தலென்பது ஒருதினத்தில் சிறிதுபொழுது அநுபவிக்கக்கடவதாகிய துன்பந் தருவது; பாவமும்பழியு மூண்டாம் செயல்கள்போல நீக்குதலரிய அப்பழிபாவமாகியகுற்றத்தைச்செய்தலிலது. ஆதலால் கல்வியறிவொழுக்கங்களால் நிறைந்த மானிகள் விடாமல் பின்செல்வதாகிய பாவமும் அஃதல்லாத இவ்வுலகத்து நிலைப்பதாகிய பழியும் உண்டாம்படி வரும்தீச்செயல்களைச் செய்யாமையால் இறத்தல் நேருமாயினும் செய்யார் என்பது.

மறுமையினுந்தொடர்தல்பற்றிப் பாவத்தை முற்படக்கூறினர். ஏனை பிறிதென்னும் பொருள்படும் இடைச்சொல். வருவ என்றதனிலக்கணை; அதுவினைப்பெயர். பழிபாவங்களுண்டாஞ் செயலைச் செய்ய நேரின் உயிர்விடுவர் என்பது கருத்து.

Men of honourable feeling never stoop to do things that entail sin & giult, even if death were an alternative. Death will be painful for one day and for a short time only. There is nothing that works irrepairable evil like sinful deeds. (5)

296. மல்லன்மா ஞாலத்து வாழ்வரு ளெல்லாஞ்
செல்வ ரெனினுங் கொடாதவர் நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கீண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்.

இ - ள். மல்லல்-வளப்பமிக்க, மா ஞாலத்து - பெரியபூமியில், வர்ழ்பவருள் எல்லாம் - செல்வமுடையாருளெல்லாம், செல்வர் எனினும் - சிறந்தசெல்வராயினும், கொடாதவர் எ - (அறத்தின்பொருட்டு) கொடுக்குந்தன்மை யில்லாதவரே, நல்கூர்ந்தார் - வறியர், நல்கூர்ந்தக்கண்ணும் - வறுமையடைந்திருப்பினும், செல்வரை - (குறிப்பறிந்தீயாத) செல்வரிடத்து, சென்று இரவாதார் எ - பேரும் இரக்குந்தன்மை யில்லாதவரே, பெருமுத்தரையர் - பெருமுத்தரையரோடொத்த செல்வர், எ - று.

பொ-ரை. வளப்பமிக்க பெரியபூமியில் செல்வமுடையாருளெல்லாம் சிறந்த செல்வராயினும் அறத்தின்பொருட்டுக் கொடுக்குந்தன்மையில்லாதவரே வறியவர். வறுமையடைந் திருப்பினும் குறிப்பறிந்தீயாத செல்வரிடத்துப்போய் இரக்குந் தன்மையில்லாதவரே பெருமுத்தரையரோடொத்த செல்வர் என்பது.

பெருமுத்தரையரே என்னும் பிரிநிலை எகாரத்தைக் கொடாதவர், இரவாதாரென்பவற்றோடு கூட்டுக. செல்வமுடைமையின் பயனெய்தாமை பற்றிக் கொடாதவரே வறியரென்றும், மறுக்குஞ் செல்வரிடத்திரக்தலால் மானங்கெடுகின்றமை பற்றி இரவாதவரே செல்வரென்றுங் கூறினர். இரண்டனுருபை ஏழாவதாக்குக.

Amongst those that live in this vast and enduring world, men of wealth if they do not help the poor are poor indeed. Those who do not go after the rich because of their poverty to beg of them will be considered very pure. (6)

297. கடையெல்லாங் காய்பசி யஞ்சுமற்றேனை
யிடையெல்லா மின்னுமை யஞ்சும்—புடைபரந்த்
விற்புருவ வேனெடுங் கண்ணுய் தலையெல்லாஞ்
சொற்பழி யஞ்சி விடும்.

இ - ள். புடை - (தமக்கு) மேற்புறத்தில், பரந்த - பரவியுள்ள, வில்புருவம் - வில்போலும் புருவங்களையுடைய, வேல் ஒடு கண்ணுய் - வேல்போலும் நெடியகண்களையுடையவளே, கடை எல்லாம் - (குடிப்பிறப்பு முதலியவற்றால்) கடையாயினு ரெல்லாரும், காய்பசி - (தம்மூடம்பு) இளைத்தற்குக் காரணமாகிய பசியை, அஞ்சும் - அஞ்சி உயிர்வாழ்வர், மற்று ஏனை - அவரல்லாத, இடை எல்லாம் - இடையாயினு ரெல்லாரும், இன்னுமை - (அரசனுல் செய்யப்படும்) தண்டத்தினை, அஞ்சும் - அஞ்சி உயிர்வாழ்வர், தலை எல்லாம் - தலையாயினுரெல்லாரும், சொல்பழி - (பிறரால்கூறப்படும்) பழிச்சொல்லை, அஞ்சிவிடும் - அஞ்சியே உயிர்வாழ்வர், எ - று.

பொ-ரை. தமக்குமேற்புறத்தில் பரவியுள்ள வில்போலும் புருவங்களையுடைய வேல்போலும் நெடிய கண்களையுடையாளே! குடிப்பிறப்பு முதலியவற்றால் கடையாயினு ரெல்லாரும் தம்மூடம்பு இளைத்தற்குக் காரணமாகிய பசியை அஞ்சி உயிர்வாழ்வர். அவரல்லாத இடையாயினு ரெல்லாரும் அரசனுல் செய்யப்படும் தண்டத்தினை அஞ்சி உயிர்வாழ்வர். தலையாயினுரெல்லாரும் பிறரால் கூறப்படும் பழிச்சொல்லை அஞ்சியே உயிர்வாழ்வர் என்பது.

புருவம் கண்ணுக்கு மேற்புறத்து நின்று அவற்றை அழகுபெறச் செய்தலால் புருவத்தைக் கண்ணுக்குடைமையாக்கிக் கூறினர். கடை, இடை, தலை மூன்றும் பண்பாகுபெயர். காயென்னும் வினைக்குறை ஆகுஞ் போகுஞ் என்பவற்றில் ஆகு, போகு என்பன போலக் காரியப் பொருளதாகிப் பசியென்னுங் காரணப்பெயர் கொண்டது. இன்னுமையென்னுங் காரியந்தன் காரணத்தின்மேனின்றது. எல்லாமெனவே அம்மூவர்க்கும் மூறையே பசியையஞ்சுதலும், இன்னுமையை யஞ்சுதலும், சொற்பழியை யஞ்சுதலும் இயல்பென்பது பெற்றும். இம்மையில் நிற்பதாகிய பழியை அஞ்சி விதிலைக்கூறவே பாவத்தை அஞ்சி விதிலைக் கூறவேண்டாதாயிற்று.

O thou of dart-like eyes with eyebrows extending far like a bow! Men of the lowest class dread burning hunger; the middle class dread what is unpleasant; those who belong to the highest class fear words that impute blame. (7)

298. கீழ்மை பெரிதளியர் நல்கூர்ந்தா ரென்றெள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால்—கொல்ல
னுயிரூனுந் தீயேபோ லுள்கனலுங் கொல்லோ
தலையாய சான்றோர் மனம்.

இ - ள். நல்லர் - (இவர் யாவர்க்கும்) நல்லவர், பெரிது - மிகுதியாக, அளியர் - (யாவரிடத்தும்) அன்புடையார், நல்கூர்ந்தாரென்று - (இதுபோழ்து) வறியராயினரென்று, எள்ளி - அவமதித்துப் பேசாநின்று, செல்வர் - செல்வர்கள், சிறுநோக்கு - அருகுபார்வையால், நோக்குங்கால் - பார்க்குங்காலத்தில், தலையாய - முதன்மைபெற்ற, சான்றோர்மனம் - (குடிப்பிறப்புக் கல்வி முதலியவற்றால்) குறைவில்லாரதுமனம், கொல்லன் - கருமாளல், உலை - உலைக்களத்தில், ஊதும் - ஊதப்படுதலா லெரிகின்ற, தீயேபோல - நெருப்பேபோல, உள் - உள்ளே, கனலுங்கொல்லோ - கொதியாநிற்குமோ யாம் துணியேம். எ-று.

பொ-ரை. இவர் யாவர்க்கும் நல்லவர். மிகுதியாக யாவரிடத்தும் அன்புடையார். இதுபோழ்து வறியராயினரென்று அவமதித்துப்பேசா நின்ற செல்வர்கள் அருகுபார்வையால் பார்க்குங்காலத்தில் முதன்மைபெற்ற குடிப்பிறப்புக் கல்வி முதலியவற்றால் குறைவில்லாரது மனம் கருமாளல் உலைக்களத்தில் ஊதப்படுதலா லெரிகின்ற நெருப்பேபோல உள்ளே கொதியாநிற்குமோ யாம் துணியேம் என்பது.

செல்வர், நல்லர், பெரிதளியரென்பன மனத்தோடு பொருந்தக் கூறுதன ஆதலால் எள்ளுதலாயின. ஊதுமென்னும் பெயரெச்சம் தீயென்னும் செயப்படுபொருள் கொண்டது. உள்கனலுங்கொல் என ஐயத்தால் ஒருதலையே கூறினர்; மானமுடையா ராதலால் கனலாமை சிறுபான்மைய தென்பதற்கு. ஓ இரக்கப்பொருளது. நோக்கு முதனிலைத் தொழிற்பெயர். ஊதுந்தீயே என்னும் பிரிநிலை ஏகாரத்தால் நல்லர்பெரிதளியர் நல்கூர்ந்தாரென்றெள்ளாநின்று சிறுநோக்கு நோக்குந்தோறும் உள்கனலா நிற்குமென்பது பெற்றம்.

When men of real worth see the rich men's glance of disparagement and condescension as they say in a contemptuous way, 'These are good people-persons now reduced to strait circumstances-poor people!' does not their mind kindle into flame like the fire by breath of the bellows in the black-smith's furnace? (8)

299. நச்சியார்க் கீயாமை நாணன்று நாணுளு
மச்சத்தா னுண்ணுத லுண்ணன்று—மெச்சத்தின்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லா திருப்பது நாண்.

இ-ள். கச்சியார்க்கு - (மானமுடையார் தம்மிடத்தொன்றை) விரும்பி வந்தேற்போர்க்கு, ஈயாமை - உதவப் பெருமையாலாகும் நாணம், நாண் அன்று - நாணமன்று, நாள் நாளும் - தினமும், அச்சத்தால் - (இல்லாமைபற்றித் தீயவற்றைச் செய்தற்கு) அஞ்சுதலால், நாணுதல் நாண் அன்று - நாணுதல் நாணமன்று, எச்சத்தில் - சந்ததியில், மெல்லியர் ஆகி - (ஒருவர் கல்வியறிவு ஒழுக்கமுதலியவற்றில்) எளியராயிருந்து, தம்மேலாயார் - தம்தாதை, மூதாதை முதலியோரால், செய்தது - செய்யப்பட்டமேலான காரியத்தை, சொல்லாதிருப்பது நாண் - (தம்கல்வி முதலியவற்றால் பிறர்க்கு) உணர்த்தாதிருத்தலாலாம் நாணம் நாணமாம்.

பொ-ரை. மானமுடையார் தம்மிடத்தொன்றை விரும்பி வந்தேற்போர்க்கு உதவப்பெருமையாலாகும் நாணம் நாணமன்று. தினமும் இல்லாமைபற்றித் தீயவற்றைச் செய்தற்கு அஞ்சுதலால் நாணுதல் நாணமன்று. சந்ததியில் ஒருவர் கல்வியறிவு ஒழுக்க முதலியவற்றில் எளியராயிருந்து தம் தாதை மூதாதை முதலியோரால் செய்யப்பட்ட மேலான காரியத்தைத் தம் கல்விமுதலியவற்றால் பிறர்க்கு உணர்த்தாதிருத்தலாலாம் நாணம் நாணமாம் என்பது.

கச்சியார்க் கீயாமையாலும், அச்சத்தாலும் உண்டாம் நாணத்தினும் மேலாயார்செய்தது சொல்லாதிருத்தலாலாகும் நாணம் மிக்கதென்பது. ஈயாமை, சொல்லாதிருப்பதென்பன காரியத்தைக் காரணமாகக்கூறிய உபசாரவழக்கு. தம்மேலாயார் செய்ததைச் சொல்லுதலாவது தம்கல்வியறிவு ஒழுக்கமுதலியவற்றை வியந்துகூறுவோர் தம்மேலாயார் செய்தமேலான காரியத்தையும் வியந்து உடன்கூறுவராதலால், அவற்றையுடையராக தம்மைச்செய்தல். நாண் முதனிலைத்தொழிற்பெயர், மெல்லியராகி என்னும் வினையெச்சம் சொல்லாதிருப்பதென்னும் வினைப்பெயரின் முதனிலையாகிய சொல்லென்பதனோடு முடிந்தது. ஒருவர் இறப்பினும் எஞ்சிநிற்பது சந்ததியாதலின் அதனை எச்சம் ஏற்றார். நாணம் மானமுடையார்க் குரியதாகலால் இங்ஙனங்கூறப்பட்டது.

It is no shame not to be able to give something to those who beg of us. The shrinking on account of fear is not shame. To become reduced in other ways & not to be able to speak out the great deeds done by (one's) forefathers, is shame. (9)

300. கடமா தொலைச்சிய காணுறை வேங்கை
யிடம்விழ்ந்த துண்ணு திறக்கு—மிடமுடைய

வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
ஊன மழுங்க வரின்.

ஈ-ள். கடமா - யானையை, தொலைச்சியே - வெற்றிகொண்ட, கான்உறை - காட்டில் வாழ்கின்ற, வேங்கை - புலி, இடம்வீழ்ந்தது - (தன்னுல் அறையுண்டு) இடப்புறத்தில் விழுந்த மிருகத்தை, உண்ணுது இறக்கும் - (அதனை) உண்ணவிரும்பாமல் செல்லும், (அது போல) விழுமியோர் - (குடிப்பிறப்பு முதலியவற்றில்) சிறந்தோர், இடம் உடைய - பரந்த இடத்தையுடைய, வான் அகம் - சுவர்க்கம், கைஉறினும் - (முயற்சியில்லாமல்) கிடைப்பதாயினும், மானம்அழுங்க - தம்மானங்கெடும்படி, வரின் - கிடைப்பதாயின், வேண்டார் - பெற விரும்பார், எ-று.

பொ-ரை. யானையை வெற்றிகொண்ட காட்டில்வாழ்கின்ற புலி தன்னுல் அறையுண்டு இடப்புறத்தில் விழுந்த மிருகத்தை (அதனை) உண்ணவிரும்பாமல் செல்லும். அதுபோலக் குடிப்பிறப்பு முதலியவற்றில் சிறந்தோர் பரந்தஇடத்தையுடைய சுவர்க்கம் முயற்சியில்லாமல் கிடைப்பதாயினும் தம் மானங்கெடும்படி கிடைப்பதாயின் பெற விரும்பார் என்பது.

மதமுடையதாதலால் யானைக்குக் கடமா காரணம்பற்றி வந்த பெயர். இதனைக் கடம் ஆ எனப் பதம்பிரித்து, காட்டுப் பசுவெனப் பொருள் கூறுவாருமுண்டு. ஏழாம்வேற்றுமைப் புணர்ச்சியில் மகரங் கெடாது நில்லாதாதலாலும், காட்டுப் பசுவைக் கொல்லுதல் புலிக்கு வெற்றியன்று மாதலாலும் அதுபோலியுரையென்க. மிக்க வெற்றியுடைய தென்ப துணர்த்தற்குக் கடமா தொலைச்சிய என்றும், இயற்கை வலியுடைய தென்பதுணர்த்தற்குக் கானுறை என்றும் புலியை விசேடித்தனர். வீழ்ந்ததென்னும் இறந்தகால வினைப்பெயர் உண்ணுதென்பதினுல் மிருகத்தின்மேல் நின்றது. தொலைச்சிய வென்பது இறந்தகாலப் பெயரெச்சம்; தொலை பகுதி, த்சந்தி, த் இறந்தகால விடைநிலை, இன் சாரியை, அ பெயரெச்சவிகுதி, சாரியையீற்றுனகரக்கேடு கடைக்குறை, யகரத்தோற்றம் சந்தி. தகரத்துக்குச் சகரம்போலி.

The tiger wandering in the jungle that slays the wild cow, would not eat but passes by what has fallen in its way(i.e corpse). So men of honour though heaven is offered would not care for it if it is to be obtained by the loss of honour. (10)

Chapter XXXI—The dread of Begging

31-ஆம் அதிகாரம்: இரவச்சம்.

அஃதாவது மானங்கெடவரும் இரத்தலுக்கு அஞ்சுதலை யுணர்த்துவது, இதனால் அதிகாரமுறைமை இனிதுவிளங்கும்.

301. நம்மாலே யாவரிந் நல்கூர்ந்தா ரெஞ்ஞான்றும்
தம்மாலா மாக்க மிலரென்று—தம்மை
மருண்ட மனத்தர்பின் செல்பவோ தாமுந்
தெருண்ட வறிவி னவர்.

இ - ள். இந்நல்கூர்ந்தார் - இவ்வறியவர், நம்மாலேயாவர் - நம்மாலே வாழ்வார், எஞ்ஞான்றும் - எந்நாளிலும், தம்மால்ஆம் ஆக்கம் - தம்மாலாகின்ற வாழ்க்கை, இலர் என்று - இல்லாரென்றுகருதி, தம்மை - தமது குடிப்பிறப்பு முதலியவற்றை, மருண்டமனத்தர் பின் - அறியாதமனமுடையார்பின், தொண்ட அறிவினவர்தாமும் - (உடலினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையும்) தெளிந்த அறிவினையுடையாரும், செல்பவோ - (ஒன்றைப்பெற வேண்டி) செல்வார்களோ, எ - று.

போ-ரை. இவ்வறியவர் நம்மாலேவாழ்வார் எந்நாளிலும் தம்மாலாகின்ற வாழ்க்கை இல்லாரென்று கருதித் தமது குடிப்பிறப்பு முதலியவற்றை அறியாத மனமுடையார்பின் உடலினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையும் தெளிந்த அறிவினையுடையாரும் ஒன்றைப் பெறவேண்டிச் செல்வார்களோ என்பது.

இங்கு ஆகுதல் வாழ்தல். பின்னின்ற தம் பொருளாகுபெயர். ஓ எதிர்மறை. உம்மை உயர்வு சிறப்பு.

Will men of clear understanding follow the vain people who lose their head and in bewilderment, say (of their suppliants) 'These poor people depend entirely on us ; they are without resources in themselves'. (1)

302. இழித்தக்க செய்தொருவ ரை வணலின்
பழித்தக்க செய்யான் பசித்த றவறே
விழித்திமைக்கு மாத்திரை யன்றே வொருவ
னழித்துப் பிறக்கும் பிறப்பு.

இ-ள். அழிந்து - (உடல்) அழிந்து, ஒருவன் பிறக்கும் பிறப்பு - ஒருவன் பிறக்கின்ற பிறப்பு, விழித்து - கண்ணை விழித்து, இமைக்கும் - இமைக்கின்ற, மாத்திரை அன்றே - காலத்தினளவின்தன்றே, (ஆதலால்) இழிக்கத்தக்கசெய்து - (அறிவுடையோரால்) இழித்துக் கூறத்தகுந்த செயல்களைச் செய்து, ஒருவன் ஆர உண்ணலின் - ஒருவன் (ஐம்பொறிகளாலும் அநுபவிக்கப்படும் பொருள்களை) நிரம்ப அநுபவிப்பதினும், பழிக்கத்தக்க - (அவரால்) பழிக்கத்தகுந்த செயல்களை, செய்யான் - செய்யாஞ்சி, பழித்தல் தவறே - அவற்றை அநுபவிக்கப் பெறாமல் வருந்துதல் குற்றமுடையதோ, எ - று.

பொ-ரை. உடல் அழிந்து ஒருவன் பிறக்கின்ற பிறப்பு கண்ணை விழித்து இமைக்கின்ற காலத்தினளவினதன்றே. ஆதலால் அறிவுடையோரால் இழித்துக் கூறத்தகுந்த செயல்களைச்செய்து ஒருவன் ஐம்பொறிகளாலும் அநுபவிக்கப் படும்பொருள்களை நிரம்ப அநுபவிப்பதினும் (அவரால்) பழிக்கத்தகுந்த செயல்களை செய்யாஞ்சி அவற்றை அநுபவிக்கப் பெறாமல் வருந்துதல் குற்றமுடையதோ என்பது.

நிலையாமையுடைய உடலைப் பாதுகாத்தலினும் நிலைத்தலுடைய மானங் கெடாமல் பழித்தல் குற்றமுடைய தன்றென்பது கருத்து. இழிக்க பழிக்க என்பன ஈறுதொகுத்தல் பெற்றன. தவறுடைய தினைத் தவறென்றது ஓர் மரபுவழுவமைதி. அழித்து வலித்தல்விகாரம். இச்சினைவினை பிறக்குமென்னும் முதல்வினைகொண்டது. ஓ இரண்டும் எதிர்மறை. மாத்திரை காலத்தின்மேலது.

Is not a man's death and birth measured by the twinkling of an eye? Will it be considered a fault if a man rather choose to suffer hunger (and brave death) dowing no act blameworthy than to feed stomach-full doing things that bring on disgrace. (2)

303. இல்லாமை கந்தா விரவு துணிந்தொருவீர்
செல்லாரு மல்லர் சிறுநெறி—புல்லா
வகம்புகுமி னுண்ணுமி னென்பவர்மாட் டல்லான்
முகம்புகுத லாற்றுமோ மேல்.

இ-ள். ஒருவர் இல்லாமை - ஒருவர் தமது வறுமை, கந்து ஆக - பற்றுக்கோடாக, இரவுதுணிந்து - இரத்தலுக்குத் துணிவுகொண்டு சிறுநெறி - அச்சிறியவழியில், செல்லாரும் அல்லர் - செல்லாதவரு மல்லர், புல்லா - (கண்டுமாத்திரையில் தம்மை) தழுவி, அகம்புகு

மின் - எம்வீட்டில் புகுங்கோள், உண்ணுமின் - உண்ணுங்கோள், என்பவர்மாட்டு அல்லால் எ என்றுபசரிக்குஞ் செல்வரிடத்துப் புகுதலல்லாமல், (இவ்வாறுபசரியாதவரிடத்து) முகம்புகுதல் உம் தம்முகம் காட்டுதலேயேனும், ஆற்றுமோ - செய்வாரோ, மேல் - மேன்மக்கள், எ-று.

பொ-ரை. ஒருவர் தமதுவறுமை பற்றுக்கோடாக இரத்தலுக்குத் துணிவுகொண்டு அச்சிறிய வழியில் செல்லாதவரு மல்லர். கண்டமாத்திரையில் தம்மைத்தீமூவி எம்வீட்டில் புகுங்கோள், உண்ணுங்கோள், என்றுபசரிக்குஞ் செல்வரிடத்துப் புகுதலல்லாமல் இவ்வாறுபசரியாதவரிடத்துத் தம்முகம் காட்டுதலேயேனும் செய்வாரோ மேன்மக்கள் என்பது.

இத்தன்மையாரிடத்துச் சென்றிரத்தலால் மானங்கெடாமையின் அது இரவாமையோ டொத்தல்பற்றி, அவர்பாலிரப்பர் என்றார். புகுதலுமென்னும் இழிவு சிறப்புமை விகாரத்தால் தொகுத்தலாயிற்று. மேல் பண்பாகுபெயர்.

People are not wanting in this world who, with poverty as their claim, take to a life of mendicancy. But will the noble-minded care to enter into the house of any one but those who with humility say "Enter my dwelling and eat of my food". (3)

304. திருத்தன்னை நீப்பினுந் தெய்வஞ் செறினு
மருத்த மனத்தோ டியர்வள்ளி னல்லா
லருத்தஞ் செறிக்கு மறிவிலார் பின்சென்
றிருத்திறைஞ்சி நில்லாதா மேல்.

ஓ-ள். திரு - திருமகள், தன்னை நீப்பினும் - தன்னைத்துறந்தாலும், தெய்வம் - ஊழ், செறினும் - கோபித்தெதிர்ப்பினும், உள்ளின் - (தம் வாழ்க்கையைக் குறித்தொன்றைச் செய்ய) நேரகினல், உருத்த மனத்தோடு - (அவற்றுல்)சோர்வடையாத மனமுடையாராய், உயர்வு அல்லால் - உயர்வாகிய தொன்றைக் கருதுதலல்லாமல், அருத்தம் - தேடியபொருளை, செறிக்கும் - (பிறர்க்கீயாமல்) சேமித்துவைக்கும், அறிவில்லாரிடத்து, சென்று - (ஒன்றைப்பெற) போய், எருத்து இறைஞ்சி - பிடர்வளைத்து, நில்லாது - நிற்கக்கருதான், மேல் - மேன்மகன், எ-று.

பொ-ரை. திருமகள் தன்னைத் துறந்தாலும், ஊழ்கோபித்தெதிர்ப்பினும் தம் வாழ்க்கையைக் குறித்தொன்றைச் செய்யக் கரு-

திஞல் அவற்றுல் சோர்வடையாத மனமுடையராய் உயர்வாகிய தொண்மைக் கருதுதலல்லாமல், தேடிய பொருளைப் பிறர்க்கீயாமல் தேமித்துவைச்சும் பேதையரிடத்து ஒன்றைப் பெறப்போய்ப் பிடர் வளைத்து நிற்கக் கருதான் மேன்மகன் என்பது.

ஏதிர்மறை உம்மைகள் இவனது ஒழுக்கங்கண்டு திருவும், தெய்வமும் நீத்தலும், கெறுத்தலும் செய்தலினருமை விளக்கின. உயர்வு-பண்பாகுபெயர். உருத்தில்-எழுதல். மூன்றனுருபு விசேடணப்பொருளது. அறிவிலார் ஒருசொல்லின் தன்மையது. மேலோன் மானங் கெட இரவானென்பது கருத்து.

The high-souled men, even when they are deserted by the goddess of fortune (though they have become poor), though they have incurred the displeasure of the gods, will endure their lot fixing their mind on things above but never stoop to stand in a suppliant position in the train of the foolish who hoard their wealth. (4)

305. கரவாத திண்ணன்பிற் கண்ணன்னர் கண்ணு
மிரவாது வாழ்வதாம் வாழ்க்கை—யிரவினை
யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு.

இ-ள் இரவினை - (உடையார்முன் இல்லார் சென்று) இரந்து நிற்றலின் கொடுமையை, உள்ளுங்கால் - நினைந்தால், உள்ளம் உருகும் - எம்மூள்ளம் கரைந்துருகும், கொள்வார் குறிப்பு - ஏற்பவருடைய கருத்து, கொள்ளுங்கால் - ஏற்குங்காலத்தி, என்ஞ - யாதாகுமோ, (ஆதலால்) வாழ்க்கை-(ஒருவர்) உயிர்வாழ்க்கை, கரவாத - (தமக்கு) இல்லையென்று மறுக்கவறியாத, திண் அன்பின் - மாறுத அன்பினையுடையர், கண் அன்னர்கண்ணும் - கண்ணேஒத்த இயல்பினரிடத்தும், இரவாது - (ஒன்றையும்) ஏற்காமல், வாழ்வது ஆம் - வாழ்தலாகும், எ-று.

பொ-ரை. உடையார்முன் இல்லார் சென்று இரந்துநிற்றலின் கொடுமையை நினைந்தால் எம்மூள்ளம் கரைந்துருகும். ஏற்பவருடைய கருத்து ஏற்குங்காலத்து யாதாகுமோ. ஆதலால், ஒருவர் உயிர் வாழ்க்கை தமக்கு இல்லையென்று மறுக்கவறியாத மாறுத அன்பினையுடைய கண்ணே ஒத்த இயல்பினரிடத்தும் ஒன்றையும் ஏற்காமல் வாழ்தலாகும் என்பது.

எனவே இரவு தன்னைக் கருதுவோர்க்கும், மேற்கொள்வோர்க்கும் துன்பம் விளைத்தலால், கரவாத திண்ணன்பின் கண்ணன்னரிடத்தும் இரவாமைக்கு ஏது கூறினராயிற்று. கொள்ளல் ஏற்றல். அன்பு செய்யப்படுகிறவர்க்கு ஒரு துன்பம் நேரிட்டவிடத்து, அன்னை மூந்தி வெளிப்படுப்பது கண்ணீதலால் கரவாத திண்ணன்பினருக்கு அஃது உவமையாயிற்று. கரவாத திண்ணன்பினரிடத்தும் இரத்தல் ஆகாதென்னும் பொருள்பட நின்றமையால் உம்மை உயர்வு சிறப்பு. அன்பினென்பதில் இன்னென் ஏழாஞ்சாரியை யீற்றுனகரம் சந்தவின்பப்பொருட்டுத் திரிந்தது. ஓ இரக்கப்பொருளீது. கொல் அசை.

To live asking nothing even of friends who would never say 'no' and who are as dear to us as our eyes, is happy life. When the mind dissolves in shame at the very thought of beggary, when people beg of others, what are their thoughts? (5)

306. இன்ஞ விளைக வினிய வொழிகென்று
தன்னையே தானிரப்பத் தீர்வதற்—கென்னைகொல்
காதல் கவற்று மனத்தினுட் கண்பாழ்பட்
டேதி லவரை யிரவு.

இ-ள். இன்ஞ - (வறுமையாலாம்) துன்பத்தை, இனிய பொருந்தக்கடவை, இனிய -(செல்வப் பொருளாலாம்) இன்பங்களை, ஒழிகளென்று - விலகக்கடவையென்று, தன்னையேதான் இரப்ப -(ஒருவன்) தன்னையேதான் இரந்து கேட்டுக்கொள்வதனால், தீர்வதற்கு நீங்குமியல்பினதாகிய வறுமைக்காக, காதல் - (அநுபவிக்கப்படும் பொருளின்) ஆசையினால், கவற்றும் - கவலைப்படுத்துகின்ற, மனத்தினுட்கண் பாழ்பட்டு - மனத்தினுள் கண்ணொளிமழுங்கி, ஏதிலவரை - பிறரிடத்து, இரவு - இரத்தல், என்னை - என்ன, எ-று.

போ-ரை. வறுமையாலாம் துன்பத்தைப் பொருந்தக்கடவை, செல்வப் பொருளாலாம் இன்பங்களை விலகக்கடவை யென்று ஒருவன் தன்னையே தான் இரந்து கேட்டுக்கொள்வதனால் நீங்குமியல்பினதாகிய வறுமைக்காக அநுபவிக்கப்படும் பொருளின் ஆசையினால் கவலைப்படுத்துகின்ற மனத்தினுள் கண்ணொளி மழுங்கி பிறரிடத்து இரத்தல் என்ன என்பது.

தன்னையே தானிரத்தலென்றது தான் வறுமைத் துன்பத்தைப் பொறுத்து இன்பத்தை விரும்பாமையை இச்செய்யுள் இரவொழிதற்கு பாயங் கூறியபடி. ஏ பிரிநிலை. தீர்வது வினைப்பெயர். இஃதேற்று

கின்றநான்கனுருபு பொருட்டுப் பொருளது. கண்பாழ் படுதலாவது ஏற்பப்பிவோர் முகத்தை நோக்குகையில் உள்ளத்திற் றோன்றும் நாணத்தால் கண்ணொளி அருகுதல். ஆலுருபு எதுப்பொருளது. எதிலவ்வை யென்பதில் இரண்டாவது ஏழாவதனிடப்பொருளது.

Let one beg of himself saying "Let troubles come in and joys depart! Why should a man, with a view to get rid of poverty, go and beg of strangers, himself troubled by a covetous mind and his eyes wasted with weeping. (6)

307. என்றும் புதியார் பிறப்பினு மிவ்வுலகத்
தென்று மவனே பிறக்கலான்—குன்றின்
பரப்பெல்லாம் பொன்னெழுகுஞ் பாயிருவி நாட
விரப்பாரை யெள்ளா மகன்.

இ-ள். குன்றின் - மலையினது, பரப்பு எல்லாம் - பரந்த இடமெல்லாம், பொன் ஒழுகும் - பொன்னெடு விழுகின்ற, பாய் அருவி நாட - பாயுமியல்புள்ள அருவி நீரையுடைய குறிஞ்சிநிலத்தலைவனே, இவ்வுலகத்து - இவ்வுலகத்தில், புதியார் - புதிய உயிர்கள், என்றும் - ஒவ்வொருநாளும், பிறப்பினும் - பிறந்தாலும், இரப்பாரை - இரப்பவரை, எள்ளாதமகன் அவனே - அவமதியாத மகனுடைய அவனே, என்றும் பிறக்கலான் - ஒவ்வொருநாளும் பிறத்தலுடையான், எ-று.

பொ-ரை. மலையினது பரந்த இடமெல்லாம் பொன்னெடு விழுகின்ற பாயுமியல்புள்ள அருவி நீரையுடைய குறிஞ்சிநிலத்தலைவனே! இவ்வுலகத்தில் புதிய உயிர்கள் ஒவ்வொருநாளும் பிறந்தாலும் இரப்பவரை அவமதியாத மகனுடைய அவனே ஒவ்வொருநாளும் பிறத்தலுடையான் என்பது.

பிறப்பினது புதுமையால் உயிர்கள் புதியார் எனப்பட்டன. "இசைத்தலு மூரியவேறிடத்தான்" என்பதனால் அவை உயர்திணையாயின. உயிர்களென்றது மக்களுயிரை. எள்ளாமையாவது இரப்பார்க்கு ஈதல் இசையாதாயினும் அவருக்கு முகமலர்ந்து இன்சொற் கூறி உபசரித்தல். இச்செயல் ஒவ்வொருநாளும் காண்போர்க்குப் புதுமையதாகத் தோன்றலின் அப்புதுமைத் தோற்றத்தை உடையானே மேற்றியும், புதியார் பிறப்பினெடு அவன் பிறப்பிடை வேற்றுமை தோன்ற தேற்றேகாரந்தந்து அவனே பிறக்கலான் எனின்றும் கூறினர். பிறக்கலான் அல்லீற்றுத் தொழிலடியாகப் பிறந்த பெயர்.

O Lord of the hilly regions where gold is borne down by the rush of the streams! Though in this world men are continually born, that very man is ever born who does not scorn the poor beggars. (7)

308. புறத்துத்தன் னின்மை நலிய வகத்துத்தன்
னன்ஞான நீக்கி நிறீஇ யொருவனே
யீயா யெனக்கென் றிரப்பானே லில்லையே
மாயாளே மாற்றி விடின்.

இ-ள். புறத்து - புறத்தில், தன்இன்மை - தன்வறுமை, நலிய - (உடலை) வருத்துவதினால், அகத்து - அகத்தில், தன்நல்ஞானம் - தன் நல்லறிவை, நீக்கிநிறீ இ - நீக்கி (தன்னிடத்தைத் தோன்றாமல்) நிறுத்தி, ஒருவனை - செல்வப் பொருளுடைய ஒருவனிடத்து, ஈயாய் எனக்கு என்று - எனக்கு ஈயென்று சொல்லி, இரப்பானேல் - (மானந்தீரா இரவலன்) இரக்க உடன்படுவானுயின், மாற்றிவிடின் - (அச்செல்வன்) இல்லையென மறுத்துவிட்டால், அந்நிலையே - அப்பொழுதே, மாயாளை - உயிர் நீங்காம லிருப்பனை, இரான், எ-று.

பொ-ரை. புறத்தில் தன்வறுமை உடலை வருத்துவதினால் அகத்தில் தன் நல்லறிவை நீக்கி (தன்னிடத்தைத் தோன்றாமல்) நிறுத்தி செல்வப் பொருளுடைய ஒருவனிடத்து எனக்கு ஈயென்று சொல்லி மானந்தீரா இரவலன் இரக்க உடன்படுவானுயின் அச்செல்வன் இல்லையென மறுத்துவிட்டால் அப்பொழுதே உயிர் நீங்காமலிருப்பனை இரான் எனபது.

நன்ஞானநீக்கி நிறுத்துதலாவது இரத்தல் இழிவுள்ளதென்று நல்லறிவு உதிப்பினும் அதனை மேற்கொள்ளாது விடுதல். மாய்தலாவது இனியாது செய்வோமென் றேங்கிச் செயலறிறு நிற்றல். ஒ எதிர்மறை.

Poverty has wasted his outward frame; his wisdom he has laid aside; and so deciding, begs of some stranger, saying, "give me"—If then he is refused the alms, must he not the very moment die? (8)

309. ஒருவ னொருவரைச் சார்ந்தொழுக லாற்றி
வழிபடுதல் வல்லுத லல்லால்—பரிசழிந்து
செய்யீரோ வென்னுனு மென்னுஞ்சொற் கின்னுதே
தையத்தான் செல்லு நெறி.

இ-ள். ஒருவர் - வறியாரொருவர், ஒருவனை - பொருட்செல்வ முடைய வொருவரை, சார்ந்து - அடைந்து, வழிபட்டு - அடங்கி, ஒழுகல் ஆற்றல் - நடத்தலைச் செய்தல், வல்லுதல் அல்லால் - வலியுடைமை யாகுதலல்லாமல், பரிசு அழிந்து - தமது தன்மையாகிய மானமழிந்து, என்னுமென் - எதாயினு மோருதவியை, செய்யீரோ - (அவரைநோக்கி) செய்யமாட்டீரோ, என்னுஞ்சொற்கு - என்று இரக்கின்ற சொல்லினும், மைய - அடக்கமாக, செல்லுங்நெறி - நடக்கும் அவ்வொழுக்கம், இன்னுதே - தீயதோ அன்று, எ-று.

பொ-ரை. வறியாரொருவர் பொருட்செல்வமுடைய வொருவரை அடைந்து அடங்கி நடத்தலைச் செய்தல் வலியுடைமை யாகுதலல்லாமல் தமது தன்மையாகிய மானமழிந்து ஏதாயினு மோருதவியை அவரைநோக்கிச்செய்யமாட்டீரோ என்னும் இரக்கின்றசொல்லினும் அடக்கமாக நடக்கும் அவ்வொழுக்கம் தீயதோ அன்று என்பது.

இரந்துண் யிர்வாழ்தலினும், ஒருவர்க்கடங்கி ஒழுகி, அதனாற் கிடைத்த பொருளாலுண்டு வாழ்தல் தீயதன்றென்பதிகாரத்து. ஆற்றி வழிபடுதலென்பதனில் சொல் பின்முன்னாக நிறுத்தி விகுதி பிரித்துக்கூட்டி உரைக்க. வல்லுதல் பண்புப்பெயரடியாகப் பிறந்த தல்லீற்றுத் தொழிற்பெயர். குவ்வுருபு ஐந்தாவதன் உறழ்பொருளில் வந்தது. நெறி சுட்டுப்பொருளது. அல்லாலென்னும் மறைக்குறிப்பு வினையெச்சம் இன்னுதென்னும் அவ்வினை முற்றுக்கொண்டது. எ எதிர்மறை.

Men may form close friendship with others (the rich) and remain as their dependants, and this may be allowed. But is it more painful to be in that condition than to beg saying (lost to all sense of shame) "will you not do something for me"? (9)

310. பழமைசுந் தாகப் பசைந்த வழியே
கிழமைதான் யாதானுஞ் செய்க—கிழமை
பொருஅ ரவரென்னிற் பொத்தித்தங் நெஞ்சத்
தருஅச் சுடுவதோர் தீ.

இ-ள். பழமை - தொன்றுதொட்ட நட்பு, சுந்தாக - (இரக்கச் செல்லலுக்கு) பற்றுக்கோடாக, பசைந்தவழி - (ஒருவர்மற்றொருவரை) விரும்பிவந்து அடைந்தால், கிழமை - உரிமை தோன்றத் தரும்பொருளை, யாதானும் - எவ்வளவு சிறிதாயினும், செய்க - உப

காரிக்கக் கடவர், இழமை - அவ்வுரிமை தோன்றத்தரும் பெரியோர், அவர் - அவ்விரப்போர், பொருள்என்னின் - (விரும்பி) ஏற்றுக்கொள்ளாவிட்டால், (அச்செயல்) தம் நெஞ்சத்து - உபகரித்தவரது மனத்தில், பொத்தி - புறத்தே தோன்றுமல் வைக்கப்பட்டு, அறுமல் - நீங்காமல், சுடுவது ஓர் தீ - சுடுவதாகிய ஓர் நெருப்பாம், எ-று.

பொ-ரை. தொன்றுதொட்ட நட்பு (இரக்கச் செல்லலுக்கு) பற்றுக்கோடாக ஒருவர் மற்றொருவரை விரும்பிவந்து அடைந்தால், உரிமைதோன்றத் தரும் பொருளை எவ்வளவு சிறிதாயினும் உபகரிக்கக்கடவர். அவ்வுரிமை தோன்றத் தரும்பொருளை அவ்விரப்போர் விரும்பி ஏற்றுக்கொள்ளாவிட்டால் அச்செயல் உபகரித்தவரது மனத்தில் புறத்தே தோன்றுமல் வைக்கப்பட்டு நீங்காமல் சுடுவதாகிய ஓர் நெருப்பாம் என்பது.

இழமையைப் புலப்படுக்கும் பொருளைக் இழமையென்றது காரியவாகுபெயர். பழமை பண்பாகுபெயர். இரப்பவர் இடைத்தமட்டில் மகிழ்வுவென்பது கருத்து. விளக்குமுதலிய தீப்போலத் தண்ணீர் முதலியவற்றால் தணித்தலும், நீக்கலும் இன்மையால் ஓர் தீயென்றார் பொறுக்காமையை. பொறுத்தல் ஏற்றல்.

If people come to you for help depending on you because of old intimacy, you must do something for them. If they don't accept it, it will be a fire heaped up and burning in your bosom. (10)

Chapter XXXII—Knowledge of the audience

32-ஆம் அதிகாரம்: அவையறிதல்.

அஃதாவது சபையின தியல்பை யறிந்துரைத்தலைக் கூறுவது. அறிவுடையொருவன் தன்னுலுரைக்கப்படும் பொருளை அறியவல்லார் கூடிய சபையிற்கூறிற்பயன் படுமாதலின், சாலுரைப்பதற்கு முன் அவையின தியல்பை அறிதல் கடமையாதலாலும், அங்ஙனமறியாதுரைக்கின் அவமதிப்புண்டாமாதலாலும் மாணுமுடையான் அறிந்துரைக்க வென்பதுணர்த்தற்கு இங்கு வைக்கப்பட்டது.

311. மெய்ஞ்ஞானக் கோட்டி யுறழ்வழிவிட் டாங்கோர்
ஞ்ஞானந் தங்கிட் டதுவாங் கறத்துழாய்க்
கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர்முன்
சொன்ஞானஞ் சோர விடல்.

இ-ள். மெய்ஞ்ஞானம் - (நூற்பொருள்களே ஐயந்திரிபில்லாமல் உள்ளவாறுணர்ந்த) மெய்யறிவையுடைய, கோட்டி - சபையிலுள்ள புலவர், உறழ்முழிவிட்டு - ஒக்குமெனக்கொள்ளும் முறையைவிட்டு, ஆங்கு - அச்சபையில், ஓர் அஞ்ஞானம் - தமது அறிவின்மையாலாகிய தோர்பொருளே. தந்திட்டு - (நாணமின்றி) எடுத்துச்சொல்லி, அது - அப்பொருளே, ஆங்கு - அச்சொல்வதில், அறத்தாழாய் - மிகுதியும் பண்ணி, கைஞ்ஞானங்கொண்டு - குற்றமென்பாரை அறைதல் முதலிய தொழிலாகிய) கையினது புலமையால், ஒழுகும் - (வெற்றி கொண்டு) நடக்கின்ற, கீர்அறிவு ஆளர்முன் - மயக்கமாகிய அறிவை ஆராய்தலுடையார் முன்பு, சொல்ஞானம் - (அறிவுடைய வொருவன்) சொல்லுதற்குரிய அறிவாகிய பொருளே, சோர்விடல் - மெல்லவிட்டொழிக, எ-று,

பொ-ரை. நூற்பொருள்களே ஐயந்திரிபில்லாமல் உள்ளவாறுணர்ந்த மெய்யறிவை யுடைய சபையிலுள்ள புலவர் ஒக்குமெனக் கொள்ளும் முறையைவிட்டு, அச்சபையில் தமது அறிவின்மையாலாகியதோர் பொருளே நாணமின்றி எடுத்துச்சொல்லி, அப்பொருளே அச்சொல்வதில் மிகுதியும்பண்ணி, குற்றமென்பாரை அறைதல் முதலிய தொழிலாகிய கையினது புலமையால் வெற்றிகொண்டு, நடக்கின்ற மயக்கமாகிய அறிவை ஆராய்தலுடையார் முன்பு அறிவுடைய வொருவன் சொல்லுதற்குரிய அறிவாகிய பொருளே மெல்ல விட்டொழிக என்பது.

சொல்லா தொழிதலேக் காரறிவாளர் இங்கிதத்தால் அறிவாராயின் இகழ்வாதலால் அதுவுந் தோன்றுமல் சோரவிடல் என்றார். கைஞ்ஞான மென்பதற்கு அற்பபுத்தியெனப் பொருள் கூறுவாருமுளர்; அது பொருளன் றென்பதும், யாம் கூறியதே பொருளென்பதும் வருவிபாட்டால் நன்குவினங்கும். குற்றநிரம்பிய அறிவாதலால் அவரறிவு காரறிவெனப்பட்டது.

Never utter words of wisdom before heretics who having abandoned the way of the wise assembly, having laid down unwholesome rules of their own, for diligent propogation, live in accordance with their own shallow understanding. (1)

312. நாப்பாடஞ் சொல்லி நயமுணர்வார் போற்செறிக்குந்
தீப்புலவர் சேரார் செறிவுடையார்—தீப்புலவன்
கோட்டியுட் குன்றக் குடிப்பழிக்கு மல்லாக்காற்
சீர்ட்புடைக் கொள்ளா வெழும்.

இ - ள். நாப்பாடம்சொல்லி - (பொருளுணர்ச்சியின்றி) நாவாற்பாடஞ்செய்த மூலத்தைச்சொல்லி, நயம் உணர்வார்போல - அப்பாடத்தின் பொருளே யறிந்தவர்போல, செறிக்கும் - (பிறர்க்கு அப்பொருளை) அறிவுறுத்துகின்ற, தீப்புலவன் - கல்வியறிவில்லான், கோட்டியுள் - சபையில், குன்ற - தோற்பானுயின், குடிப்பிழிக்கும் - (தன்னை வெற்றி கொண்டவரது) குடிப்பிறப்பைப்பழித்துரைப்பான், அல்லாக்கால் - அது செய்யாவிடின், தோள்புடைக்கொள்ளா - தோளைத்தட்டா நின்று, எழுமே - (போர்க்கு) எழுவான், (ஆதலால்) செறிவு உடையார் - (அவமதிப்புக் கஞ்சி) அடங்கி ஒழுகுதலுடையார், தீப்புலவன் சேரார் - அத்தீப்புலவனைச் சேர்தலில்லார், எ - று.

போ-பு. பொருளுணர்ச்சியின்றி நாவாற் பாடஞ்செய்த மூலத்தைச்சொல்லி ஈப்பாடத்தின் பொருளை யறிந்தவர்போலப் பிறர்க்கு அப்பொருளை அறிவுறுத்துகின்ற கல்வியறிவில்லான் சபையில் தோற்பானுயின் தன்னை வெற்றிக் கொண்டவரது குடிப்பிறப்பைப் பழித்துரைப்பான். அது செய்யாவிடின் தோளைத்தட்டா நின்று போர்க்கு எழுவான். ஆதலால் அவமதிப்புக் கஞ்சி அடங்கி ஒழுகுதலுடையார் அத்தீப்புலவனைச் சேர்தலில்லார் என்பது.

நாப்பாடம் நாவினாற்செய்யும் பாடமென்பதாதலால் மூன்றும் வேற்றுமைத்தொகை. படித்தலுக்கு இதழ்முதலிய கருவிகளால் நிகழ்தது நாவாதலால் நாப்பாடம் என்றார். "யாகாவாராயினு நாகாக்க" என்றதும் இதுபற்றி. கொள்ளாதின்றென்பது கொள்ளா எனத்திரிந்தது. புடை முதனிலைத் தொழிற்பெயர். தீப்புலவனென்பதில் தீமை இன்மையை உணர்த்தியது.

Well-disciplined men never approach men of evil learning who repeat by rote some formulas pretending to have understood them. If the man of evil learning is worsted in the assembly, he will begin abuse the family of his opponents or will spring up and challenge them to fight. (2)

313. சொற்றொற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்
கற்றொற்றல் வன்மையுந் தாந்தேறார்—கற்ற
செலவுரைக்கு மீறறியார் தோற்ப தறியார்
பலவுரைக்கு மாந்தர் பலர்.

இ - ள். சுனைத்து எழுதல் - (தமது நாவில்) தினவு உண்டாகுதலால், சொற்று - (எவற்றையேனும்) சொல்லி, ஆற்றுக்கொண்டு-

(அத்தினைவை) தணித்தலேக்கொள்ள, காமுறுவர் - விரும்பி, கற்று - (நூல்களே முறையில்) கற்று, ஆற்றல் - (அவற்றின்பொருளே இதற்கு இன்னதாகுமெனச் சொல்லுதலே) செய்தலினது, வன்மையும் - திறத்தையும், தாம்தேறூர் - தாம் தெளியாமலும், கற்ற - தம் அறிந்தவற்றை, செல - (கேட்போருடைய மனத்தில்) பதியும்படி, உரைக்கும் ஆறு - எடுத்துச்சொல்லும் முறையை, அறியார் - அறியாமலும், தோற்பது அறியார் - (இன்னதற்கு இதைக்கூறின்) தோல்வியடைவோமென்பதை அறியாமலும், பல உரைக்கும் மாந்தர் - (ஒன்றைச் சில சொற்களா லுணர்த்தாமல்) பலசொற்களா லுணர்த்து, மக்கள், பலர் - பலருளர், எ - று.

பொ-ரை. தமது நாவில் தினவு உண்டாவதினால் எவற்றையேனும் சொல்லி அத்தினவைத் தணித்தலேக்கொள்ள விரும்பி நூல்களே முறையில் கற்று அவற்றின் பொருளே இதற்கு இன்னதாகுமெனச் சொல்லுதலே செய்தலினது திறத்தையும் தாம் தெளியாமலும், தாம் அறிந்தவற்றை கேட்போருடைய மனதில் பதியும்படி எடுத்துச் சொல்லும் முறையை அறியாமலும், இன்னதற்கு இதைக் கூறின் தோல்வியடைவோ மென்பதை அறியாமலும் ஒன்றைச்சில சொற்களா லுணர்த்தாமல் பல சொற்களா லுணர்த்து மக்கள் பலருளர் என்பது.

கற்றூற்றல் வன்மையுந் தாந்தேறி, கற்ற செலவுரைக்குமாறறிந்து சிலவுரைக்குமாந்தர் உண்டாயிருத்தலினை தருமைகுறித்துப் பலர் என்றூர். ஆற்றென்பது முதனிலைத் தொழிற்பெயர். சுனைத்தென்பதில் து பகுதிப்பொருள் விகுதி. காமுறுவர் முதலிய வினைமுற்று நான்கும் வினையெச்சமாயினும், முதலிலுள்ளது தனித்தும், மற்ற மூன்றும் அடுக்கியும் உரைக்குமென்னும் வினைகொண்டன.

Many are the men who are anxious to rise up (in debate) from mere love of talk; who do not comprehend the power of learning; who do not know how to utter with force what they have learnt; and who know not what defeat means. (3)

314. கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதையோர் சூத்திரம்—மற்றதனை
நல்லா ரிடைப்புக்கு நாணுது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்.

இ - ள். பேதை - அறிவிலான்; கற்றதும் இன்றி - பொருள் கேட்டுணர்ந்தது மில்லாமல், கணக்காயர் பாடத்தால் - எழுத்து நடை பயிற்றுவோர் கற்பித்த பாடத்திலுல், ஓர் சூத்திரம் - ஒரு செய்யுள், பெற்றீது ஆம் - மூகபாட மாக்கப்பட்டதாம், அதனை அச்செய்யுளை, கல்லாரிடை - குற்றமற்ற அறிவுடையார் கூட்டத்தில், புக்கு - புகுந்து, நாணுது - காணமில்லாமல், சொல்லி - (அந் நல்லோர் பேசும் பொருளுக்குப் பொருத்த மில்லாமல்) சொல்லி, தன் புல் அறிவு - தனது அறிவின்மையை, காட்டிவிடும் - வெளிப்படுத்தி விடுவான், எ - று.

பொ-ரை. அறிவிலான் பொருள்கேட்டுணர்ந்தது மில்லாமல் எழுத்து நடை பயிற்றுவோர் கற்பித்த பாடத்திலுல் ஒரு செய்யுள் மூகபாடமாக்கப் பட்டதா மச்செய்யுளை குற்றமற்ற அறிவுடையார் கூட்டத்தில் புகுந்து நாணமில்லாமல் அந்நல்லோர் பேசும் பொருளுக்குப் பொருத்த மில்லாமல் சொல்லித் தனது அறிவின்மையை வெளிப்படுத்தி விடுவான் என்பது.

நாணுது சொல்லுதற்குப் புல்லறிவு காரணமாயினும், பேதையானவன் பொருத்த மில்லாத செய்யுளைச் சொல்லியபின்பே அவ்வறிவு பிறரால்அியப் படுதலால், காட்டிவிடுதற்குச் சொல்லுதல் காட்சிக்காரணமாதல் பற்றிச்சொல்லி யென்பது காரணப் பொருட்டாகிய இறந்தகால வினையெச்சம். கற்றது, பெற்றது வினைப்பெயர்கள். பேதை பண்பாகுபெயர். சூத்திரமென்பது இங்குப் பொதுப்பட செய்யுளைக் காட்டிற்று.

The man who did not learn (much) and knew only a *sutra* from the teacher, will enter a learned assembly, will give it outregardless of the loss honour and exhibit his hollow understanding. (4)

315. வெல்லிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ-டொன்றி [ளார்
உரைவித் தகமெழுவார் காண்பமே கையுள்
சூரைவித்துப் போலுந்தம் பல்.

இ - ள். விலங்கு ஒத்து - மிருகத்தை ஒத்து, மெய் - (அறிவுடையோர் கூறும்) உண்மைப் பொருளை, கொள்ளார் - உணராமல், கன்றி - புழுங்கி, கறுத்து - கோபக்குறிகாட்டி, எழுந்து - எழுந்து நின்று, வென்றி - அவரை வெல்லுதலாகிய, பொருட்டால் - பொரு

ளமைந்த கடுஞ் சொல்லினால், காய்வாரோடு - கோபித்துப் பேசுமியல்பினரிடத்து, ஒன்றி - கூடி, வித்தகம் - நல்லறிவை, உரை - சொல்ல, எழுவார் - முயல்வோர், கையுள் - தம்கையில், சுரைவித்துப்போலும் - சுரைப்பின் விதை ஒக்கும், தம்பல் - தம்பற்களே, காண் பவே - காணு தொழியீர், எ - று.

பொ-ரை. மிருகத்தை ஒத்தி அறிவுடையோர் கூறும் உண்மைப்பொருளே உணராமல் புழுங்கிக் கோபக்குறிகாட்டி எழுந்து நின்று அவரை வெல்லுதலாகிய வீரருளமைந்த கடுஞ்சொல்லினால் கோபித்துப் பேசுமியல்பினரிடத்துக் கூடி நல்லறிவைச் சொல்ல முயல்வோர் தம் கையில் சுரையின் விதை ஒக்கும் தம்பற்களே காணு தொழியார் என்பது.

கடுஞ்சொல் கேட்டமாத்திரையில் நல்லறிவாளர் அடங்குதலே புல்லறிவாளர் தமக்கு வெற்றியெனக் கொள்ளுதலால் அவர் கூறுங் கடுஞ்சொல்லே வென்றிப் பொருட்டு என்றும், தாம் கூறுவது பொருத்த மிலது, நல்லறிவாளர் கூறுவது பொருத்தமுளதெனப் பகுத்துணர் வில்லாமையால் விலங்கொத்து என்றுங்கூறினர். புல்லறிவாளர்க்கு அறிவுறுத்துவோர் அடையும் பயன் அவமதிப்பென்பது கருத்து. விலங்கு முதனிலைத் தொழிலாகுபெயர். உரை என்னும் முதனிலை வினையெச்சப்பொருள் படநின்றது. ஏ தேற்றம்.

Those who enter into disputation with men who care for mere victory and not for truth, and consequently fret and fume with anger like beasts, shall see their teeth knocked down and placed in their hands like the seeds of the gourd. (5)

316. பாடமே யோதிப் பயன்தெரிதல் தேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால் - கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே மற்றவரை
ஈன்றாட் கிறப்பப் பரிந்து.

இ - ள். பாடமே ஓதி - மூல்பாடமொன்றையே படித்து, பயன்தெரிதல் தேற்றாத - (அப்பாடத்தின்) பொருளே ஆராய்தலே உணராத, மூடர் - புல்லறிவாளர், முனிதக்க - அருவருக்கத்தக்க பொருள் களே, சொல்லுங்கால் - சொல்லா நிற்கையில், கேடு அருசீர் - கெடுதலில்லாத சிறப்பினையுடைய, சான்றோர் - (கல்வியறி வொழுக்கங்களால்) நிறைந்தோர், அவரை - அம்மூடரை, ஈன்றாட்கு - பெற்றவளுக்கு, இறப்பப்பரிந்து - (மகப்பேற்றின் பயனைப் பெற்றிலளே

யென்று) மிகவும் இரக்கமுற்று, சமழ்த்தனர் - வருந்திக் கேட்டுக் கொண்டு, நிற்ப - வாளா இருப்பர், எ-று.

பொ-ரை. மூலபாடமொன்றையே படித்து, அப்பாடத்தின் பொருளை ஆராய்தலை உணராத புல்லறிவாளர் அருவருக்கத்தக்க பொருள்களை சொல்லா நிற்கையில் கெடுதலில்லாத சிறப்பினையுடைய கல்வியறிவொழுக்கங்களால் நிறைந்தோர் அம்மூடரைப் பெற்றவளுக்கு மகப்பேற்றின் பயனைப் பெற்றிலளே யென்று மிகுதியும் இரக்கமுற்று வருந்திக் கேட்டுக்கொண்டு வாளா இருப்பர் என்பது.

பாடமேதுதலை அமையுமெனக் கொண்டவராதலால் பயன் தெரிதல் தேறுதலவராயினர். வருந்தமாவது மூடர் கூறுவனவற்றைக் கேட்பதற்கு மனமொவ்வாமையாலாம் வருத்தம். மூடர், இழிப்பினுல் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று. சொல்லுங்கால் நிகழ்கால வினையெச்சம்; இதில் கால்வுகுதி காலங்காட்டியது.

When fools who have read much but not digested them, utter words which would provoke anger, the blameless great of undying fame, will stand by ashamed pitying the mother that gave birth to such sons. (6)

317. பெறுவது கொள்பவர் தோள்போ னெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லா மெளியநூன் மற்ற
முறிபுரை மேனிய ருள்ளம்போன் றியார்க்கு
மறிதற் கரிய பொருள்.

இ - ள். நூல்பொருள் - கல்வி நூலினது பொருள்கள், பெறுவது கொள்பவர் - (கொடுப்பவரைக் கொள்ளாமல்) விலையைக்கொள்கின்ற வேசியரது, தோள்போல - தோளைப்போல, நெறிபட்டு - வழிபாட்டுமுறையில் நின்று, கற்பவர்க்கு எல்லாம் - கற்கு மியல்புடையார்க்கெல்லாம், எளிய - எளிதிலுணரப் படுவனவும், முறிபுரை - மாந்தளிரை ஒத்த அம்மேனியர் - மேன்மையாகிய மேனியையுடைய அவ்வேசியரது, மற்று உள்ளம்போன்று - உள்ளத்தினிலைமையைப் போல, யார்க்கும் - வழிபாட்டு முறையில் நின்று கல்லாதவர்க் கெல்லாம், அறிதற்கு அரிய - அறிந்துகொள்ளுதற்கு அருமையாயுள்ளனவும், எ - று.

பொ-ரை. கல்வி நூலினது பொருள்கள் கொடுப்பவனைக் கொள்ளாமல் விலையைக் கொள்கின்ற வேசியரது தோளைப்போல, வழிபாட்டுமுறையில் நின்று கற்கு மியல்புடையார்க் கெல்லாம் எளி

திலுண்ரப் படுவனவாம். மாந்தளிரை ஒத்த மேன்மையாகிய மேனியையுடைய அவ்வேசியரதுஉள்ளத்தினிலேமையப்போலவுழிபாட்டு முறையில் நின்றி கல்லாதவர்க் கெல்லாம் அறிந்துகொள்ளுதற்கு அருமையாயுள்ளனவாம் என்பது.

நூலென்பதனீற்றில் தொகையாகநின்ற ஆறுவதற்குப் பயனிலை பொருளாதலால்இதனை அதனைகூட்டுக. பெறுவதென்றது தம்மையனுபவிக்கும் போகத்துக்கு ஈடாகக்கொள்ளும் பொருளை யாதலால் அதற்கு விலையெனப் பொருள் சொல்லப்பட்டது. உள்ளம் தோளினது எண்மையைப் போலாமையால் மற்று பிறிதென்னும் பொருளது. போன்று போல என்பதன்திரிபு. ஆசிரியர்க்கு வழிபாடுசெய்து கல்லாதவர்க்கு நூல் பயன்படுதலிலதென்பது கருத்து.

Like the charms of harlots that sell their love for what they get, the sacred books can be easily got at by those who like to learn them, whereas the meaning thereof will be as deep as the mind of the harlot and will be very hard to find. (7)

318. புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியா
ருய்த்தக மெல்லா நிறைப்பினு—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

இ-ள். புத்தகமே - நூல்களையே, சாலத்தொகுத்தும் - மிகச் சேர்த்தும், பொருள்தெரியார் - (அவற்றின்) பொருளை உணராதவர் உய்த்து - முயன்று கொண்டுவந்து, அகம்எல்லாம் - தம்வீடுமுழுமையும், நிறைப்பினும் - நிறைத்துவைத்தாலும், அவற்றை - அவற்றின் பொருளை, போற்றும் புலவரும் - (கேட்டு) மறவாமல் சிந்திக்கும் புலவரும், வேறே - வேறேயாவர், பொருள்தெரிந்து - (அவற்றின் பொருளை ஆராய்ந்தறிந்து, தேற்றும் புலவரும் வேறு - (பிறர்க்கு) அறிவுறுத்துகின்ற புலவரும் வேறே யாவர், எ-று.

பொ-ரை. நூல்களையே மிகச்சேர்த்தும் அவற்றின் பொருளை உணராதவர் முயன்று கொண்டுவந்து தம் வீடுமுழுமையும் நிறைத்துவைப்பாராயினும், அவற்றின் பொருளைக் கேட்டு மறவாமல் சிந்திக்கும் புலவரும் வேறேயாவர். அவற்றின் பொருளை ஆராய்ந்தறிந்து பிறர்க்கு அறிவுறுத்துகின்ற புலவரும் வேறேயாவர் என்பது.

போற்றும் புலவரென்றது தன் மாணாக்கர்களை; பொருடெரிந்து தேற்றும் புலவரென்றது நல்லாசிரியரை. இவ்விருதிறத்தாரு மல்

லாரே பொருடெரியா ராதலால் இவ்விருவரையும் வேறு என்றார். எ இரண்டும் பிரிகிலை ஈற்றிலுள்ள வேறென்பதனோடுக் கூட்டுக. மற்று வினை மாற்றுப் பொருளது. மூன்றுள்ள உம்மைமீ எதிரது தழீஇயதும்; பின்னது இறந்தது தழீஇயதுமாம்.

Men may collect books and fill up shelves after shelves, but those who merely take care of books are of one class and those who understand their contents and expound them to others are of another sort. (8)

319. பொழிப்பகல நுட்பநூ லெச்சமிந் நான்கின்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள்—பீழிப்பின்
னிரையாமா சேர்க்கு நெடுங்குன்ற நாட
வுரையாமோ நூலிற்கு நன்கு.

ப-ரை. ஆமாநிரை - காட்டுப் பசுவின் கூட்டத்தை, சேர்க்கும் - (தன்னிடத்து) கூட்டுகின்ற, நெடுங்குன்றம் - வளமிகுந்த மலையைச் சார்ந்த, நாட - குறிஞ்சிநிலத் தலைவனே, பொழிப்பு - தொகுத்துரை, அகலம் - அகலவுரை, நுட்பநூல் - நுட்பவுரை, எச்சம் - எச்சவுரை, (ஆகிய) இந்நான்கின் - இந்நான்குரையாலும், கொழித்து - ஆராய்ந்து, அகலம் காட்டாதார் - விரிவுரையை உணர்த்தாதவருடைய, சொற்கள் - பயனில் சொற்கள், நூலிற்கு - ஒரு நூலுக்கு, பழிப்பு இல் - (அறிவுடையோரால்) நிந்திக்கப்படுதலில்லாத, நன்கு உரை ஆமோ - நன்மையாகிய உரையாகுதலில்லை, எ-று.

பொ-ரை. காட்டுப்பசுவின் கூட்டத்தைத் தன்னிடத்துக் கூட்டுகின்ற வளமிகுந்த மலையைச் சார்ந்த குறிஞ்சி நிலத்தலைவனே! தொகுத்துரை, அகலவுரை, நுட்பவுரை, எச்சவுரை ஆகிய இந்நான்குரையாலும் ஆராய்ந்து விரிவுரையை உணர்த்தாதவருடைய பயனில் சொற்கள் ஒரு நூலுக்கு அறிவுடையோரால் நிந்திக்கப்படுதலில்லாத நன்மையாகிய உரையாகுதலில்லை என்பது.

தான் புல், நீர், நிழலின் வளமுடைமையால் ஆமா மூல்லையை விட்டுத் திரளாகத் தன்னிடத்துச் சேர்வதாயிருப்ப, சேர்க்கு நெடுங்குன்ற மென்றது அதன் வளத்தைச் சிறப்பித்தற்கு. சேர்க்குமென்னும் பிறவினை தன்வினையாமெனக் கூறுவாரு முளர். இந்நான்கு வகையினுலும் கூறவல்லார் நல்லறிவாளரென்பது கருத்து. பொழிப்பென்பது—மூலபாடம், தனிமொழிகளாகப்பிரித்துப் பொருளுரைத்தல், மேற்கோள் காட்டல் என்பவற்றால் உரைக்கும்பொருள். அகலம்

மென்பது ஒருவனுரையிடப் புகுந்த நூலிலும், வேறொருநூலிலும் கூறப்பட்டபொருள்களில் இஃது இங்ஙனங்கூறப்படுதல் முறையோ என வினவி, இங்ஙனம் வினவுதலால் தோன்றும் மாறுபட் பொருளைக்காட்டி யுரைத்தல். நுட்பம் - இன்னின்ன • ஏதுக்களினலென ஏதுக்களைக்காட்டி அம்மாறுபட பொருளைக்களைதல். சேர்ச்சம் - மாறுபடபொருளைக் களைந்து, தான் துணிந்த பொருளை யுரைத்தல். இவற்றை "பாடங் கண்ணழி வுதாரண மென்றிவை, நாடிற் றிரிவில வாருதல் பொழிப்பே, தன்னூன் மருங்கினும் பிறனூன் மருங்கினும், தன்னிய கடாவின் புறந்தோன்று விகற்பம், பன்னிய வகலமென்மனர் புலவர், எதுவி னுங்கவை துடைத்த னுட்பம், துணைத்துக்கொள் பொருளெயெச்சமென்ப" என்பதிற்றுணுமுணர்க. உரையும் நூலாதலால் நுட்பநூலென்றார்.

O Lord of the long chain of hills where gather together the herds of faultless wild kine! Can a commentary to a book be properly so called which does not deal with it in all the four divisions such as summary (concise summary=பொழிப்பு), amplification (paraphrase=அகலம்), exposition in details (critical notes=நுட்பம்), and supplementary information (நூல் எச்சம்). (9)

320. இற்பிறப் பில்லா ரெனைத்துநூல் கற்பினுஞ்
சொற்பிறரைக் காக்குங் கருவியரோ—விற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூ றேற்றுதார்
புல்லறிவு தாமறிவ தில்.

இ - ள். இல்பிறந்த - உயர்குடியில் பிறந்த, நல் அறிவாளர் - குற்றமற்ற அறிவையாளுத லுடையோரால், நவின்றநூல் - சொல்லப்பட்டனவற்றின் கருத்தை, தேற்றுதார் - தெளியாதவராகி, புல் அறிவுடம் - தமது சிற்றறிவையும், தாம் அறிவதுஇல் - தாம் அறிந்து கொள்ளும் இயல்பில்லார், (ஆதலால்) இல்பிறப்பு இல்லார் - உயர்குடிப் பிறப்பில்லாதவர், எனைத்துநூல் கற்பினும் - எவ்வளவு நூல்களைக் கற்றாராயினும், சொல் - (அவர் வாயிற்பிறக்கும்) சொல், பிறரை - உயர்குடியிற் பிறந்தகற்று வல்லவரது சொற்களை, காக்கும் - தடுத்தவல்ல, கருவி - கருவியேயாம், எ-று.

பொ-ரை. உயர்குடியில் பிறந்த குற்றமிற்ற அறிவையாளுத லுடையோரால் சொல்லப்பட்டனவற்றின் கருத்தைத் தெளியாதவராகித் தமது சிற்றறிவையும் தாம் அறிந்துகொள்ளும் இயல்பில்லார்,

ஆதலால் உயர்குடிப் பிறப்பில்லாதவர் எவ்வளவு நூல்களைக் கற்றாராயினும் அவர்வாயிற் பிறக்கும் சொல் உயர்குடியிற் பிறந்த கற்று வல்ல வரது சொற்களைத் தடுக்கவல்ல கருவியேயாம் என்பது.

பிதர் கருத்தாவாகுபெயர். உம்மை உயர்வுசிறப்பு. புல்லறிவென் பதனீற்றில் இறந்ததுதழீஇய எச்சவும்மை தொகுத்தல் பெற்றது. இற்பிறப் பில்லார் சொல் இற்பிறந்த கற்றவல்லோரது சொற்களைத் தடுத்தலென்றது இற்பிறப்பினர் கூறும் சொற்கள், ஆழமுடைமையால் அவை தமக்குப் புலப்படாமைபற்றி அவமதிப்பராதலால் அதற்கஞ்சி, அவர்வாய் பேசாதடங்குதலே. நால்-கருத்து. "காதல காதலறி யாமை" என்னுங்குறளில், "நூல்" என்பது இப்பொருட்டாதல் காண்க.

Will those who are not born of a high family, however learned they may be be fit to guard others from faults of speech ? Men of high birth who are learned will not care to show that they are aware of the deficiencies of those who do not understand the work they talk about. (10)

Chapter XXXIII—Insufficient knowledge

33-ஆம் அதிகாரம்: புல்லறிவாண்மை.

இனி இற்பிறப்பில்லாரது குணஞ்செயல்களே நான்கதிகாரங்களால் கூறத்தொடங்கி, முதற்கண் புல்லறிவாண்மை கூறுகின்றார். அஃதாவது புல்லிய அறிவினை ஆளுதலாகிய தன்மை. அது தாம் சிற்றறிவினரா யிருந்தே தம்மைப் பேரறிவினராக மதித்து, உயர்ந்தோர் கூறும் உறுதிமொழியைப் பொருளாகக் கொள்ளாமை.

321. அருளி னறமுறைக்கு மன்புடையார் வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வர் புலவர்—பொருளல்லா
வேழை யதனை யிகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழைச் சுவையுணரா தாங்கு.

இ-ள். அருளின் - (அறஞ்செய்யாது கெடுவாரை நோக்கி) கருணையினால், அறம் உரைக்கும் - அறநெறியைக் கூறுகின்ற, அன்பு உடையரேனும் - அன்பை யுடையாரது, வாய்ச்சொல் - வாயினிடத்தண்டாஞ் சொல்லை, புலவர் - அறிவுடையார், பொருளாகக் கொள்வர் - பயன் தருவதாக ஏற்றுக் கொள்வார், பொருள் அல்லாத - (அறிவுடையோரால்) ஒரு பொருளாக மதிக்கப்படாத, ஏழை - அறிவிலி,

மூழை - துழாவுந்துடுப்பு, பால்கூழை - பாயசத்தை, சுவை உணரா தது ஆங்கு - சுவை யறியாததுபோல, அதனை - அச்சொல்லை, இகழ்ந்து உரைக்கும் - (உணரும் வலியின்மையால்) அவமதித்துப் பேசுவன், எ-று.

பெரி-ரை. அறஞ்செய்யாது கெடுவோரை நோக்கிக் கருணையி னால் அறநெறியைக் கூறுகின்ற அன்பை யுடையாரது வாயினிடத் துண்டாஞ் சொல்லை அறிவுடையோர் பயன் தருவதாத ஏற்றுக்கொள் வார். அறிவுடையோரால் ஒரு பொருளாக மதிக்கப்படாத அறிவிலி துழாவுந் துடுப்பு பாயசத்தை சுவையறியாததுபோல, அச்சொல்லை உணரும் வலியின்மையால் அவமதித்துப் பேசுவன் என்பது.

அருளும் அன்பும் ஒரு சேரவுடையா ராதலின் மறங்கூற அறி யாரென்பதுணர்த்தற்கு வாயெனவேண்டாதே கூறினர். அருள் பிறர் கேட்டைக் குறித்து, உண்டாம் இரக்கம். அன்பு சம்பந்தமுடையார் மேல்வைக்கும் விருப்பம். உணரும் வலியின்மை யென்பது உவமை யாற் பெற்றாம். "அறிவின்மை இன்மையுளின்மை" ஆதலின் ஏழை பண்பாகுபெயராய் அறிவிலான்மேல் நின்றது.

Men of understanding will receive as something worthy words that come from sympathetic men who discourse on virtue. Just as the ladle cannot know the flavour of the rice boiled in milk, empty men will spurn them (and cannot appreciate them). (1)

322. அவ்விய மில்லா ரறத்தா றுரைக்குங்கால்
செவ்விய ரல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்
கவ்வித்தோ ரின்னுங் குணுங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளறேற்ற தாங்கு.

இ-ள். தேற்கவ்வித் தின்னும் - (அசுத்தமாகிய) தோலைக் கௌவித் தின்னுமியல்புள்ள, குணுங்கர் நாய் - சண்டாளருடைய நாய்கள், பாற்சோற்றின் - பாயசத்தினது, செவ்விகொளல் - (மஞ்ஞ் சுவைமுதலிய) தன்மையை அறிந்துகொள்ளுதலை, தேற்றாததாங்கு - உணராததுபோல, அவ்வியம் இல்லார் - பிறர்பேற்றைக்கண்டு மனி ழார்த இயல்பில்லாதவர், அறத்தாறு - அறத்தினெறியை, உரைக்குங் கால் - சொல்லுங்காற்றையில், செவ்வியர் அல்லார் - நற்குணத்தின ரல்லாதவர், செவிகொடுத்தும் - (மனம்புறத்தில் இடக்க) காதைக் கொடுத்தாயினும், கேட்கலார் - கேட்டல் செய்யார், எ-று.

போ-ரை. அசுத்தமாகிய தோலைக்கௌவித் தின்னுமியல்புள்ள சண்டாளருடைய நாய்கள் பாயசத்தினது மணஞ்சுவை முதலியவுண்மையை அறிந்துகொள்ளுதலே உணராததுபோலத் பிறர் பேற்றைக் கண்டு மகிழாத இயல்பில்லாதவர் அறத்தினெறியை சொல்லுகிற்கையில் நற்குணத்தின நல்லாதவர் (மனம் புறத்தில்லிடக்க) காதைக் கொடுத்தாயினும் கேட்டல் செய்யார் என்பது.

கொடுத்தலென்னும் இழிவுசிறப்பும்மையால் மனம் புறத்திற் கிடக்கைபெற்றும். மனம்புறத்திற் கிடக்கச் செவிகொடுத்துக் கேட்டல் கேட்பார் போன்றிருத்தல். தின்னுமேன்னும் பெயரெச்சம் நாயென்னும் கருத்தன்பெயர் கொண்டது. செவ்வி என்னும்பண்புப் பெயரில் பகுதிப்பொருள் விகுதியாகிய இகரவுயிர்ப் புணர்ச்சியால் செம்மேன்னும்முதனிலை ஈற்றுமகரம் வகரமாகத்திரிந்து இரட்டியது. அவ்வியம், கவ்வி என்பவற்றில் ஒளகாரத்துக்கு அகரவகரங்கள் போலியாக வந்தன.

When men of ungrudging soul expound the ways of virtue, those who are not right-minded will not even care to listen to the teaching just as the carrier's dog that keeps on biting leather does not appreciate the flavour of milk and rice. (2)

323. இமைக்கு மளவிற்றம் பின்னுயிர்போ மார்க்க
மெனைத்தானுந் தாங்கண் டிருந்துந்—தினைத்துணையு
நன்றி புரிகல்லாந்ணின் மடமாக்கள்
பொன்றிலென் பொன்றுக்கா லென்.

இ - ள். இமைக்கும் அளவில் - இமைக்குந்தொழில் நிகழுங் காலத்தில், தம் இன் உயிர் - தம்முடைய இனியவுயிர், போம்மார்க்கம் - உடம்பினின்று நீங்கும்முறைமையை, எனைத்தானும்-எவ்வளவு சிறிதாயினும், தாம் கண்டிருந்தும் - (காட்சிப்பிரமாணமாக) தாம் கண்டுவைத்தும், தினைத்துணையும் - தினையளவாயினும், நன்றிபுரிகலாத - (அறிவுடையோர்க்கு) ஒவ்வுதலுடையகருமங்களைச்செய்யாத, நாண் இல் - நாணுதலின்மையாகிய, மடமாக்கள் - புல்லறிவாளர், பொன்றில் என் - சாவாராயின் வருங்கேடியாது, பொன்றுக்கால் என் - சீவிதயிரோடிருப்பாராயின் வரும்பயன்யாது. எ - று.

போ-ரை. இமைக்குந்தொழில் நிகழுங்காலத்தில் தம்முடைய இனியவுயிர் உடம்பினின்று நீங்கும் முறைமையை எவ்வளவு சிறிதாயினும் காட்சிப் பிரமாணமாகத் தாம் கண்டுவைத்தும் தினையள

வாயினும் அறிவுடையோர்க்கு ஒவ்வுதலுடைய கருமங்களைச் செய்யாத நாணுதலின்மையாகிய புல்லறிவாளர் சாவர்தாயின் வரும் கேடியாதோ? சாவா துயிரோ டிருப்பாராயின் வரும் பயன் யாதோ? என்பது.

என் இரண்டும் இன்மைகுறித்து நின்றன. கண்டிருத்தலாவது பிறருயிர் நீங்குதலைத் தாம் கண்கூடாகப் பார்த்தறிதல். உயிரினும் நாண் சிறந்ததெனக் கொள்ளாமல் உயிர் சிறந்ததாகக்கொண்டவராதலால் தம் மின்னுயிர் என்றும், கருதியிற்பதிய வுணர்தல் ஒரோவழி ஒரோகாலத்தாதலின் எனைத்தானுங் கண்டிருந்தும் என்றுங்கூறினர். புரிகிலாத என்னும் காரியப்பொருட்டாகிய மறைவினைப் பெயரெச்சம் தன்காரணமாகிய நாணின்மை கொண்டது. இவ்வெச்சத்தில் நாறுதொகுத்த லென்க. நாண் தம்முடைய குடிப்பிறப்பு முதலியவற்றுக்கு ஒவ்வுதலில்லாத கருமத்தைச்செய்ய நாணுதல்; ஆதலின் நன்றி ஒவ்வுதலுடைய கருமத்தின்மேலது. மடம் - அறியாமை. புல்லறிவாளர் கெடினும், வாழினும் உலகிற்குப் பயனிலதென்பது கருத்து.

What if they live or die—the stupid shameless people who do no good not even so much as a grain of millet, though they know how their life so sweet to them passes away in the twinkling of an eye? (3)

324. உளநாள் சிலவா வுயிர்க்கேகம மின்றுல்
பலர்மன்னுந் தூற்றும் பழியால்—பலருள்ளுங்
கண்டாரோ டெல்லா நகாஅ தெவனெருவன்
றண்டித் தனிப்பகை கோள்.

இ - ன். உளநாள் - உடலோடுகூடி வாழுநாள், சில - சில வாயிருக்கின்றன, உயிர்க்கு - (அச்சிலநாளையுடைய) தன்னுயிர்க்கு, ஏமம் இன்று - (இடுக்கணோரிடின்) காத்தலிலது, பலரும்மன் தூற்றும் - பலராலும் மிகுதியும் பழிக்கப்படும், பழி - பழியைத்தருவது, (ஆதலால்) ஒருவன் - ஒருவன், கண்டாரோடு எல்லாம் - தன்னுல் காணப்பட்ட எல்லாரிடத்தும், நகாது - இனியமுகத்தனுய் நட்புக் கொள்ளாமல், தண்டி - (அன்பை) முற்றும்விட்டு, தனிப்பகை - தணியுருதற் கேதுவாகிய பகையை, பலருள்ளும் - பல்லிடத்தும், கோள் - கொள்ளுதல், எவன் - யாது. எ - று.

பொ-ரை. உடலோடுகூடி வாழுநாள் சிலவாயிருக்கின்றன, அச்சிலநாளையுடைய தன்னுயிர்க்கு இடுக்கணோரிடின் காத்தலிலது,

பலராலும் மிகுதியும் பழிக்கப்படும் பழியைத் தருவது ஆதலால் ஒருவன் தன்னுல்காண்பட்ட எல்லாரிடத்தும் இனியமுகத்தினேயீட்புக் கொள்ளாமல் அன்பை முற்றும்விட்டுத் தனியனுகுதற் கேதுவாகிய பகைமையைப் பலரிடத்தும் கொள்ளுதல் யாது என்பது.

உள்நாள் சில என்பது யாவர்க்கும் பொதுவாதலால் அதனே மூன்னும், உடலோடுகூடி வாழ்தலுக்குரிய தூதலால் எமம் அதன் பின்னும், பின்னுழுகும் நல்லெழுக்கத்தால் நீங்குதலுடைமையால் இறுதியில் பழியையும் வைத்தார். தந்தேவிடுதாதலால், பழிப்பத் தருவதாகிய பூகைகோள் பழியெனக்காரணம் காரியமாக வுபசரிக்கப் பட்டது. இவ்வாறுழுகுவானுக்கு நட்பினரில்லாமையால் பின்னின்ற பலர் அயலவரை உணர்த்தியது, எமமின்று, பழியைத் தருவ தென்பவற்றிற்குக் கருத்தன்பகைகோள், மன் மிகுதிப் பொருள்து.

"The days (Life) are few; Life has no safe guard; guilt blamed by many is life; that being so, why should, amid many men, without cheerfully exchanging greetings sulk apart and encourage hatred. (4

325. எய்தி யிருந்த வவைமுன்னர்ச் சென்றெள்ளி
வைதா னெருவ னெருவனே வையவ
யப்பட்டான் வாளா விருப்பானேல் வைதான்
வியத்தக்கான் வாழு மெனின்.

இ - ள். எய்தி இருந்த - (அறிவுடையோர்) கூடியிருந்த, அவைமுன்னர் - சபையினிடத்து, ஒருவன் சென்று - புல்லறிவாள னெருவன்போய், ஒருவனே எள்ளி - ஒருவனே அவமதித்து, வைதான் - நிந்தித்தான், வைய - நிந்திக்கையில், வயப்பட்டான் - நிந்திக்கப்பட்டவன், வாளா இருப்பானேல் - மாறுரைன்னுஞ் செய்யாதிருப்பானுயின், வைதான் - நிந்தித்தவன், வாழுமெனின் - வாழ்வுண்டையானுயிருப்பானுனல், வியக்கத்தக்கான் - (அறிவுடையோரால்) அதிசயிக்கத் தகுந்தவன், எ - று.

போ-ரை. அறிவுடையோர் கூடியிருந்த சபையினிடத்துப் புல்லறிவாள னெருவன்போய் ஒருவனே அவமதித்து நிந்தித்தான். நிந்திக்கையில் நிந்திக்கப்பட்டவன் மாறுரைன்னுஞ்செய்யாதிருப்பானுயின் நிந்தித்தவன் வாழ்வுண்டையானுயிருப்பானுனல் அறிவுடையோரால் அதிசயிக்கத் தகுந்தவன் என்பது.

ஒருவன் மாறுசெய்யத் தருதலில் தன்னே ஒருவன் எள்ளிவைதவை வைக்கேட்டபின்பே ஆசனின் வையவயப்பட்டான் என்றும்,

வைதான் கேட்டைதல் திண்ணமாதலின் வாழுமெனின் என்றும், அவன் வாழ்தலரிதாதலின், வியத்தக்கான் என்றுங் கூறினர். முன்னர் ஏழனுருபு. வையப்பட்டானெனன்பதில் ஈகாரத்தின் முன்னின்ற ஐகாரத்துக்கு அகரம் போலியாகவந்தது. வியக்கத்தக்கா னென்பதில் வினையெச்சத்தீறு தொக்குத்தது.

A man entered an assembly that had gathered together and reviled one of the audience, if the man reviled remains patient it is to be wondered if the reviler were to survive. (5)

326. மூப்புமேல் வாராமை முன்னே யறவினையை
யூக்கி யதன்கண் முயலாதா—னூக்கிப்
புறத்திரு போகென்னு மின்னாச்சொலில்லுட்
டொழுத்தையாற் கூறப் படும்.

இ-ள். மூப்பு - முதுமைப்பருவம், மேல்வாராமை முன்னே - ஏழாமைக்கு முன்னே, அறவினையை - அறமாகிய செயலை, ஊக்கி - செய்யத்தொடங்கி, அதன்கண் - அவ்வறத்தில், முயலாதான் - முயலுதலில்லாதவன், (தன் மூப்பில்) இல்லுள் - தன்மனையில், தொழுத்தையால் உம் - ஏவல் செய்பவளாலும், தூக்கி-தள்ளப்பட்டு, புறத்து இரு - ஒரு புறத்தில் இரு, போக என்னும் - வழி விலகுக என்று சொல்லப்படும், இன்னாத சொல் - துன்பந்தருஞ் சொற்களினால், கூறப்படும் - சொல்லப்படுவான், எ-று.

போ-னா. முதுமைப்பருவம் எழாமைக்கு முன்னே அறமாகிய செயலைச் செய்யத்தொடங்கி அவ்வறத்தில் முயலுதலில்லாதவன் தன் மூப்பில் தன் மனையில் ஏவல் செய்பவளாலும் தள்ளப்பட்டு ஒருபுறத்தில் இருவழிவிலகுக என்று சொல்லப்படும் துன்பந்தருஞ் சொற்களினால் சொல்லப்படுவான் என்பது.

மூப்பு ஒருவனது மன முதலிய அகக்கருவிகளையும், மெய் முதலிய ஐம்பொறிகளையும் வலி குறையச் செய்யாநின்று ஒங்குதலால் மூப்பு மேல்வராமை என்று கூறினர். இன்னாச் சொல் இல்லுள் தொழுத்தையாற் கூறப்படுதலைச் சொல்லவே மற்றையோரால் சொல்லப்படுதலைச் சொல்லவேண்டாதாயிற்று. இழிவு சிறப்புமை விகாரத்தால் தொக்கது. தொகையாக நின்ற மூன்றனுருபு கருவிப் பொருளது. விரிந்துநின்ற அவ்வுருபு கருத்தாப் பொருளது.

If one, before becoming old, does not undertake to do deeds of charity, will be pushed about in the house, addressed in

harsh language, and asked to get to one side or the other, or to go out even by the maid servants. (6)

327. தாமேயு மின்புறூர் தக்கார்க்கு நன்றுற்று
சேமஞ்சார் நன்னெறியுஞ் சேர்தலார்—தாமயங்கி
யாக்கத்துட் டேங்கி யவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னூர்.

இ-ள். புல் அறிவினூர் - புல்லறிவாளர், தாமேயும - தாமே ஆயினும், இன்பு உரூர் - (பொருளாலாகும்) இன்பத்தை யனுபவியார், தக்கார்க்கும் - அறிவொழுக்கங்களால் தகுதியுடையார்க்கும், நன்று ஆற்றூர் - ஈதலாகிய நல்லறத்தைச் செய்யார், ஏமம்சார் - (உயிர்க்கு) காவலாதலமைந்த, நல்நெறியும் - துறவறத்திலும், சேர்தலார் - சேர்தலிலர், தாம்மயங்கி - தாம் (உடல்செல்வ முதலியன நிலையாமையை) உணராமல், ஆக்கத்துள் - செல்வக்களிப்பில், தூங்கி - (மறுமைக்கு வேண்டியவற்றை) செய்யாதிருந்து, அவத்தமே - பயனில்லாத முயற்சியிலே, வாழ்நாளைப் போக்குவார் - தம் ஆயுளைக் கழிப்பார், எ-று.

பொ-ரை. புல்லறிவாளர் தாமே ஆயினும் பொருளாலாகும் இன்பத்தை யனுபவியார். அறிவொழுக்கங்களால் தகுதியுடையார்க்கும் ஈதலாகிய நல்லறத்தைச் செய்யார். உயிர்க்குக் காவலாதலமைந்த துறவறத்திலும் சேர்தலிலர். தாம் உடல் செல்வமுதலியன நிலையாமையை உணராமல் செல்வக்களிப்பில் மறுமைக்கு வேண்டியவற்றைச் செய்யாதிருந்து பயனில்லாத முயற்சியிலே தம் ஆயுளைக் கழிப்பார் என்பது.

ஈயப்படுதல் அறிவொழுக்க முடையாரிடத்தாயின் பயன்படுதலால் அவரைத் தக்கார் என்றும், இம்மையில் புகழும், மறுமையில் துறக்கமும் தருதலால் ஈதலே நன்று என்றுங் கூறினர். தூங்கல் நன் முயற்சியின்மையின்மேல் நின்றது.

Men of scanty wisdom never enjoy any sweets of life, never dispense charity to worthy men, draw not near the path of virtue but absorbed in the acquisition of wealth pass their days in vain. (7)

328. சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
பிறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளா—ரிறுகிறுகிப்
பின்னறிவா மென்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் பொலிவிளங்கா யாம்.

இ-ள். சிறுகாலையே - இளமைப்பருவத்தில் தானே, தமக்கு - தம்பொருட்டு, செல்உழி - செல்லும் துறக்கவழிக்குரிய, வல்சி - ஈதலாகிய அன்னத்தால், இறுக இறுக - சிறிது சிறிதாக, தோட்கோப்பு - ஆற்றுணவை, கொள்ளார் - செய்துகொள்ளாமல், இறுகி இறுகி - (இளமையில் மனம்) மிகுதியும் கடினமாகி, பின் அறிவாம் என்று இருக்கும் - மூப்பில் (ஈதலை) செய்துகொள்வோ மென்றிருக்கும், பேதையார் - புல்லறிவாளர், கைகாட்டும் - (சாங்காலத்தில் நாவெழாமையால்) கையால் குறித்துக் காட்டப்படும், பொன்னும் புளிவிளங்காய் ஆம் - (மனைவிமுதலியோரால்) பொன்னும் புளிவிளங்காயாக எண்பிக்கப்படும், எ-று.

பொ-ரை. இளமைப் பருவத்தில்தானே தம் பொருட்டுச்செல்லும் துறக்கவழிக்குரிய ஈதலாகிய அன்னத்தால் சிறிது சிறிதாக ஆற்றுணவைச் செய்துகொள்ளாமல் இளமையில் மனம் மிகுதியும் கடினமாகி மூப்பில் ஈதலைச் செய்துகொள்வோ மென்றிருக்கும் புல்லறிவாளர் சாங்காலத்தில் நாவெழாமையால் கையால் குறித்துக் காட்டப்படும் (மனைமுதலியோரால்) பொன்னும் புளிவிளங்காயாக எண்பிக்கப்படும் என்பது.

இறுகிறுக, இறுகிறுகி என்னும் வினையெச்சங்களில் முறையே அகரவிகுதியும், இகரவிகுதியும் தொகுக்கப்பட்டன. முன் அடுக்கு வினையாமைப் பொருளது. பின் அடுக்கு மிகுதிப் பொருளது. தமக்கென்னும் நான்கனுருபு கொள்ளாரென்னும் வினையையும், இறுகியென்னும் வினையெச்சம் இருக்குமென்னும் வினையையுங் கொண்டன. கைகாட்டும் பொன்னும் புளிவிளங்காயாமென்றது தக்கார்க்கு ஈதலின் பொருட்டுத் தாம் வைத்திருந்த பொன்னின் நிரலைக் கொண்டு வரும்படி ஒருவன் தன் நாவிழுக்தகாலையில் பெருவிரல் முதலிய மூன்று விரல்களால் குறிப்பித்தகாலை, இனி இவர் பேசுவதில்லை யென்னுந் துணிவினால் புளிவிளங்காய் வேண்டுமென்றிறு ரெனப் பிறருக்கு எண்பித்தலை. ஆதலால் இளமைப் பருவத்திலேயே ஈதலாகிய அறத்தைச் செய்க என்பது கருத்து.

People in their youth, do not care to take food (of charity) for their journey to the other world tying tight their wallet on their shoulders ; but they tie tightly (their treasure bags) and say "we will learn afterwards. The gold these fools in the last days in the grasp of death, indicate with their hands, when they are speechless, will be (interpreted by the by standers that he requires) sour *vilam* fruit. (8)

329. வெறுமை யிடத்தும் விழுப்பிணிப் போழ்தும்
மறுமை மனத்தாரே யாகி—மறுமையை
யைந்தை யனைத்தானு மாற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறிவி னர்.

இ-ள். சிற்றறிவினர் - புல்லறிவாளர், வெறுமை இடத்தும் - வறுமையடைந்த காலத்திலும், விழுப்பிணிப் போழ்தும் - மிக்க பிணியடைந்த காலத்திலும், மறுமை - மறுமைக்குரிய அறத்தைச் செய்யும், மனத்தாரே ஆகி - கருத்துடையாரே யாயிருந்து, காலத்து - (அவ்விரண்டுமொழிந்த) காலத்தில், ஐந்தை அனைத்தானும் - சிறுகடினவ்வளவினதாயினும், மறுமையை - மறுமைக்குரிய அறத்தை, ஆற்றிய - செய்ய, சிந்தியார் - கருதுதலிலராவர், எ-று.

பொ-ரை. புல்லறிவாளர் வறுமையடைந்த காலத்திலும் மிக்க பிணியடைந்தகாலத்திலும் மறுமைக்குரிய அறத்தைச் செய்யும் கருத்துடையாரே யாயிருந்தும் அவ்விரண்டு மொழிந்தகாலத்தில் சிறுகடினவ்வளவினதாயினும் மறுமைக்குரிய அறத்தைச்செய்யக் கருதுதலிலராவர் என்பது.

புல்லறிவாளர் வறுமை பிணிகள் வந்த காலத்திலன்றி, மற்ற காலத்தில் அறஞ்செய்யக் கருதுதலுஞ் செய்யாரென்பது கருத்து. ஐந்தை சிறிதென்பதற்குக் காட்டியதோ ரளவை. மறுமை காரியவாகுபெயர்.

Men of poor understanding think of their next birth, when they are in poverty-stricken condition and when they are suffering from dangerous diseases, but when they are in affluenent circumstances, they never think for a moment of charity that will decide their position in the next birth. (9)

330. என்னேமற் றிவ்வுடம்பு பெற்று மறநினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை—யன்னோ
வளவிறந்த காதற்றம் மாருயி ரன்னார்க்
கொள்விழைக்குங் கூற்றமுங் கண்டு.

இ-ள். அன்னோ - ஐயோ, அளவு இறந்த - அளவைக்கடந்த, காதல் - அன்பைவைத்த, தம் ஓர் உயிர் அன்னார் - தம்முடைய அருமையாகிய உயிரை ஒத்தவரை, கொள்ள - தான்கொள்ளுதற்கு, இழைக்கும் - (வேண்டுங் காரணங்களை) செய்த, கூற்றமும் கண்டு - யமனது செயலையுங் கண்டு, இவ்வுடம்பு - பெறுதலரிய மானுடவுடம்பை,

ம்பை, பெற்றும் - (முன்னே நல்வினையால்) பெற்றுவைத்தும், அறம் நினையார் - (மறுமைக்குரிய) அறஞ் செய்தலைக் கருதாமல், தம் வாழ் நாளை - தம்முடைய ஆயுளை, கொன்னே - பயனில்லாமலே கழிப் பர் - கழிக்கின்றனர், என்னே - இஃது யாதோ, எ - று.

பொ-ரை. ஐயோ! அளவைக் கடந்த அன்பைவைத்த தம்மு டைய அருமையாகிய உயிரை ஒத்தவனாத்தான்கொள்ளுதற்கு வேண் டிய காரணங்களைச் செய்த யமனது செயலையுங் கண்டு பெற்றதலரிய மானுடவுடம்பை முன்னே நல்வினையால் பெற்றுவைத்தும் மறுமைக் குரிய அறஞ் செய்தலைக் கருதாமல் தம்முடைய ஆயுளைப் பயனில் லாமலே கழிக்கின்றனர் இஃது யாதோ என்பது.

மானுடப்பிறப்பு அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு உறுதிப் பொருளையும் பெறுதற்குரியதாதலால் இவ்வுடம்பு பெண்பாலில் இகரச்சுட்டு உயர்வைக் குறித்து நின்றது. பெற்று மென்பதிலுள் காரணம் நல்வினையென்பது பெறப்பட்டது. இவ்வுடம்பு முன்னே நல்வினைப் பயனெனக் கருதாமல், மறுமைக்குரிய அறத்தைவிட்டுப் பயனில் செய்கையைச் செய்தலை நோக்கி என்னே என இரங்குவா ராயினர். கொள்ளுதற்கு வேண்டுங்காரணஞ் செய்தல் நோய் முதலி யவற்றை முன்னே செய்தல். இழைக்கும் இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமாகவந்த காலவழுவமைதி.

What a pity it is these men though their soul has the fortune of being put in in a human frame never think of charity and spend their days in vain. Pity it is these are so even when they see that Yama seizes away those who are near and dear to them. (10)

Chapter XXXIV—Folly

34-ஆம் அதிகாரம்: பேதைமை.

அஃதாவது யாதொன்றையும் அறியாமை. இஃது முன்போந்த புல்லறி வாண்மைக்குக் காரணமென்ப துணர்த்தற்கு அதன்பின் வைக்கப்பட்டது.

331. கொலைஞ ருலையேற்றிக் தீமடுப்ப வாழை
நிலையறியா தங்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் பெருங்கூற்றங் கோட்பார்ப்ப வீண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு.

இ-ள். கொலைவல் - உயிரைக் கவரும் தொழில் வல்ல, பெருகூற்றம் - மிக்கயமன், கொள்பார்ப்ப - (தம்முயிரை) கொண்டுபோதலைப் பாராநிற்க, (அஃதுணராமல்) ஈண்டைஉலை அகத்து - இவ்வுலகத்தின் அவாவாகிய வலையினிடத்து, கெம்மாப்பார் மாண்பு மயங்கி யிருப்பவரது இழிதன்மை, கொலைஞர் - புலாற்றின்பவர், உலை - உலை நீர்ப்பாத்திரத்தை, ஏற்றி - அடுப்பின்மேல் வைத்து, தீமடுப்ப - தீ யெரிக்கையில், ஆமை - (ஆப்பாத்திரத்தில் விட்ட) ஆமை, நிலை அறியாது - (அந்நீரில் தன்னை விட்ட) நிலைமையை அறியாமல், அந்நீர்படிந்து - தனக்குக் கேட்டைத்தரும் உலை நீரில் முழுகி, ஆடினல் அற்றே - விளையாடினற் போல்வது, எ - று.

பொ-ரை. உயிரைக் கவருந்தொழில் வல்ல மிக்க யமன் தம்முயிரைக் கொண்டு போதலைப் பாராநிற்க அஃதுணராமல் இவ்வுலகத்தின் அவாவாகிய வலையினிடத்து மயங்கி யிருப்பவரது இழிதன்மை, புலாற்றின்பவர் உலை நீர்ப்பாத்திரத்தை அடுப்பின்மேல் வைத்துத் தீயெரிக்கையில் அப்பாத்திரத்தில் விட்ட ஆமை அந்நீரில் தன்னை விட்ட நிலைமையை அறியாமல் தனக்குக் கேட்டைத்தரும் அந்நீரில் முழுகி விளையாடினற்போல்வது என்பது.

அவா தன்னுட் பட்டோரைப் புறத்தே செல்லவிடாமையால் அதனை வலை என்றார். வலை அப்பொருட்டாதல் ஈண்டையென்ற விசேடணத்தால் பெற்றும். கொலைஞரென்றது தினற்பொருட்டுக் கொல்லுவோரை யாதலால் அதற்குப் புலால் தின்பவரென்பது துணைக்கப்பட்டது. மாண்பு இழிவின்மேல் நின்றதோர் குறிப்புச்சொல். கூற்றுவனுக்குக் கொலையென்றது ஆயுளின் முடிவில் உயிரைக் கவர்தலே. அது ஒருவராலும் மறுக்கப்படாததும், மற்றையோர் முயற்சியினும் பெரிதுமாதலால் கொலைவல் பெருகூற்றம் எனப்பட்டான்.

The greatness of the folly of men who joy entangled in life's net while death waits to seize them, is something like the tortoise sporting about in the kettle put on fire without knowing what would become of it in a few minutes more. (1)

33. பெருங்கட லாடிய சென்றூ ரொருங்குடை
ஞாலை யவிந்தபின் ஞாடது—மென்றற்றூ
இற்செய் குறைவினை நீக்கி யறவினை
மற்றறிவா மென்றிருப்பார் மாண்பு.

இ-ள். இல் - தம் குடும்பத்தை, செய் - பாதுகாத்தற் குரிய, குறைவினை நீக்கி - குறைவாகிய செயல்களைச் செய்துமுடித்து, அற

வினை - துறவறத்துக் குரிய செயல்களை, மற்று அறிவாம் என்று - பின்செய்வோ மென்று கருதி, இருப்பாம்மாண்பு - செய்யா திருப் பாரது இழிதன்மை, பெருகடல் - பெரியகடலில், ஆடியசென்றார் - முழுகும்படி சென்றவர், ஓசை அவிந்தபின் - (அலைகளாலுண்டாம்) ஒலியடங்கியபின், உடன் - விரைந்து, ஒருங்கு - முற்றும், ஆடு தும் என்றல் அற்று - முழுகுவோமென்று கருதி அது செய்யா திருந்தாற்போலும், எ - று.

பொ-ரை. தம் குடும்பத்தைப் போதுகாத்தற்குரிய குறைவாகிய செயல்களைச் செய்துமுடித்துத் துறவறத்துக்குரிய செயல்களைப் பின் செய்வோமென்று கருதிச் செய்யாதிருப்பாரது இழிதன்மை பெரிய கடலில் முழுகும்படி சென்றவர் அலைகளாலுண்டாம் ஒலியடங்கிய பின் விரைந்து முற்றும் முழுகுவோமென்று கருதி அது செய்யா திருந்தாற்போலும் என்பது.

காரணங்கெடாது நிற்க, அதனால் தோன்றும் காரியங்கெடா தாதலால், அவாக்கெடாது நிற்க, அதனால் தோன்றும் காரியக்கு றைவு கெடாதென்பார், அதற்கு அலையினாலாம் ஓசையை உவமித்த னர். உவமிக்கவே ஓசையவித விலதாயினுற்போலக் குறை நீக்கலி ல்லை யென்பதாயிற்று. உவமையில் முற்றுமென்றதைப் பொருளில் கூட்டி அதற்குக் குறை முடித்தபின் மிக்க நாள்களெனவுரைக்க. துறவறத்துக்குரிய செயல்களாவன தவவொழுக்கங்கள். மற்று வினை மாற்றுப் பொருளது.

To say that one would practise virtue after getting rid of the domestic toils and cares, is something like the statement of the people who go out to bathe in the great sea and say, "Let us bathe after the roar of the waves subsides" (2)

333. குலந்தவங் கல்வி குடிமைமூப் பைந்தும்
விலங்காம லெய்தியக் கண்ணும்—நலஞ்சான்ற
மையறு தொல்சீ ருலக மறியாமை
நெய்யிலாப் பாற்சோற்றி னேர்.

இ-ள். குலம் - உயர்ந்த வகுணமும், தவம் - விரதவொழுக்க மும், கல்வி - கல்வியறிவும், குடிமை - உயர் குடிப்பிறப்பும், மூப்பு - பிராவுமுணர்ந்து ஒழுகத்தக்க) வயதின் முதிர்ச்சியும், ஐந்தும் - ஆகிய இவ்வைந்தையும், விலங்காமல் - (இவற்றுள் ஒன்றையும்) ஒழியாமல், எய்தியக் கண்ணும் - (ஒருவன்) பெற்ற விடத்தும், நலஞ் சான்ற -

னமை யமைந்த, மை அறு - மாசற்ற, தொல்சீர் - பழைய சிறப்பமைந்த, உலகம் அறியாமை - உயர்ந்தோரது ஒழுக்கத்தை அறிந்து ஒழுகுதலில் ஞகுதலால், (அப்பேறு) நெய் இல்லாத - நெய்யில்லாத, பால் சோற்றின் நீர் - பாலால் சமைத்த சோற்றை ஒக்கும். எ - று.

பொ-ரை. உயர்ந்த குணமும் விரத வொழுக்கமும், கல்வி யறிவும், உயர் குடிப்பிறப்பும், யாவுமுணர்ந்து ஒழுக்கத்தக்க வயதின் முதிர்ச்சி, ஆகிய இவ்வைந்தையும் (இவற்றுள் ஒன்றையும்) ஒழியாமல் ஒருவன்பெற்ற விடத்தும் நன்மை நிறைந்த மாசற்ற பழைய சிறப்பமைந்த உயர்ந்தோரது ஒழுக்கத்தை அறிந்து ஒழுகுதலில்லாகுதலால் அப்பேறு நெய்யில்லாத பாலால் சமைத்த சோற்றை ஒக்கும் என்பது.

குலமுதலிய ஐந்தையுஞ் சிறப்பச் செய்வதாதலால் நலஞ்சான்ற என்றும், குற்றமற்ற அறிவினையுடைய உயர்ந்தோரால் தொன்று தொட்டு ஒழுகுவதாகிய சிறப்புடையதாதலால் மையறு தொல்சீருலகம் என்றும், குலமுதலிய வைந்தையும் பெற்றாலும் அவற்றைப் பயன்படுத்துவது உலகமறிதலாதலால் அஃதில்லாவழி அவை பயன்படாமைபற்றி நெய்யில்லாத பாற்சோற்றை அவற்றிற் குவமித்துங் கூறினர். உலகமென்னும் பலபொரு ளொருசொல் இங்கு உயர்ந்தோரைக் கண்ணுதற் றானுடைமையால் அவரை யுணர்த்தி, கருத்தாவாகுபெயராய் அவரொழுக்கத்தை உணர்த்தியது.

Though a man is of good family, practises virtue, has acquired learning, is of a respectable clan, is of a ripe old age, and as such he is faultless in these five points, yet if he does not know the ways of this world, it is something like the rice boiled in milk devoid of ghee. (3)

334. கன்னனி நல்ல கடையாய மாக்களின்
சொன்னனி தாமுணராவாயினு—மின்னினியே
நிற்ற லிருத்தல் கிடத்த லியங்குதலென்
றுற்றவர்க்குத் தாமுதவ லான்.

இ-ள். நனிசொல் - (ஒருவர்) மிகுதியுஞ் சொல்லுதலே, தாம் உணரா ஆயினும் - தாம் கேட்டுணராமாட்டா ஆயினும், உற்றவர்க்கு - தம்மை நேருங்கினவர்க்கு, இன்னினியே - நேருங்கிய காலத்து, நிற்றல் என்று - நிற்குதலுக்கும், இருத்தல் என்று - இருத்தலுக்கும், கிடத்தல் என்று - படுத்தலுக்கும், இயங்குதல் என்று - நடத்தலுக்கும், தாம் உதவிலான் - தாம் உபகாரம்பண்ணுதலுடையராதலால், கடை ஆயமா

க்கரின் - கடைபபட்ட பேதையரினும், கல் - கருங்கற்பாறைகள், னனிநல்ல - மிகுதியும் நல்லன ஆம், எ - றீ.

போ-வு. ஒருவர் மிகுதியும் சொல்லுதலைத் தாம் கேட்டுணர மாட்டா ராயினும் தம்மை நெருங்கினவர்க்கு நேருங்கிய காலத்து நிற்குதலுங்கும், இருத்தலுக்கும், படுத்தலுக்கும், நடத்தலுக்கும், தாம் உபகாரமாத லுண்டமையால் கடைப்பிட்ட பேதையரினும் கருங்கற் பாறைகள் மிகுதியும் நல்லன ஆம் என்பது.

பேதையார் மக்கட் பிறப்பினரா யிருந்தும், அறிவுடையோர் கூறுவதைக் கேட்டுணராமையும், உற்றவர்க்கு ஒருவகையாலும் உத வாமையும் உடையாராதலால், உற்றவர்க்குத் தம்மாலுதவக் கூடிய உபகாரஞ் செய்யுங் கற்பாறையினும் இழிந்தவரென்பது கருத்து.

Stones are much better than the low class of men; though they are devoid of understanding what is being told, yet they are of use to men to stand upon, to sit on, to lie over, to be removed to places desired. (4)

335. பெறுவதொன் றின்றியும் பெற்றாளே போலக்
கறுவுகொண் டேலாதார் மாட்டுங்—கறுவினுல்
கோத்தின்னு கூறி வுரையாக்காற் பேதைக்கு
நாத்தின்னு நல்ல சுனைத்து.

இ - ள். பெறுவது ஒன்று - மேல்பெறப்படுவதாகிய ஓர்பயன், இன்றியும் - இலனுயிருந்தும், பெற்றாளேபோல - பெற்றுக்கொண் டானேபோலக்கருதி, கறுவுகொண்டு - தணியாத சினமுடையானுய், ஏலாதார் மாட்டும் - (தன்பகைமை) பொருள் செய்யாத உயர்ந்தோரிடத்தும், கறுவினுல் - தணியாத சினத்தினுல், இன்னு - தன்பந்தருஞ் சொற்களை, கோத்து - முறைபடுத்தி, கூறி - சொல்லி, உரையாக் கால் - (நீச்சொற்களுக்கு) பொருள் விளக்காவுயின், பேதைக்கு - பேதையாயினுனுக்கு, நல்ல சுனைத்து - நல்லதினவு, நாத்தின்னும் - நாவை வருத்தும், ஆதலால் கூறியுரையா தொழிவானன்னன், எ - று.

போ-சை. மேல்பெறப் படுவதாகிய ஓர் பயன் இலனுயிருந் தும் பெற்றுக் கொண்டானே போலக் கருதித் தணியாத சினமுடை யானுய்த் தன்பகையைப் பொருள்செய்யாத உயர்தோரிடத்தும் தணி யாத சினத்தினுல் தன்பந்தருஞ் சொற்களை முறைபடுத்திச்சொல்லி நீச்சொற்களுக்குப் பொருள் விளக்காவுயின் பேதையாயினுனுக்கு நல்ல தினவு நாவை வருத்தும்; ஆதலால் கூறி யுரையா தொழிவானன்னன் என்பது.

ஈற்றில் தந்துரைத்தது குறிப்பெச்சம். உயர்ந்தோரை இன்ன கூறி உரைத்தலே பேறென்னைக் கருதும் இயல்பின ஞதலால், பெற்ற னென்பதூ தணிவினால் எதிர்காலம் இறந்தகாலமாக வந்தகாலவழுவ மைதி. ஈறுகெட்ட இன்ன என்னும் பண்புப்பெயர் தன்னைத் தரும் சொல்லுக் காரணமையால் காரியவாகுபெயர். பொருள் விளக்குதலா வது இன்னின்ன எதுக்களால் இச்சொல்கள் முறையாகவைத்துக் கூறப்பட்டன வெனல். எனவே யாதொன்றும் அறியாஞயினும் இவ் வாறுகூறி யுரைத்தல் வல்லனென்பது பெற்றும். கருதி என்பது சொல்லெச்சம்.

If the fool even though he has nothing to gain, as if he does gain something, becoming angry, with these who disdain to talk to him, cannot give out a string of evil words, his tongue will be gnawed by a grievous itching. (5)

336. தங்கண் மரபில்லார் பின்சென்று தாம்மவரை
யெங்கண் வணக்குது மென்பவர்—புன்கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப
கற்கிள்ளிக் கையிழந் தற்று.

இ-ள். நல்தளிர்ப்புன்னை - பசியதளிர்களை யுடைய மரங்கள், மலரும் - பூப்பதற்கிடமாகிய, கடல்சேர்ப்ப - நெய்தனிலத்துத் தலை வனே, தங்கண் - (நல்லொழுக்க முடையாராகிய) தம்மிடத்துள்ள, மரபு - இடைவிடாத நல்லொழுக்கம், இல்லார்பின் - இலராயினரி டத்து, சென்று - போய், தாம்அவரை - தாங்கள் நல்லொழுக்கமிலீ லாத பேதையரை, எங்கண்-எம்முடைய நல்லொழுக்கத்தில், வணக் குதும்என்பவர் - இசைவிப்போமென்று முயல்பவரது, புல்கேண் மை - சிறுமையாகிய அன்பின்செயல், கல்கிள்ளி - (ஒருவன்) கரும் கல்லைக்கிள்ளி, கையிழந்தால் அற்று - கை வலி முதலியவற்றை இழந் தாற் போல்வதே, எ - று.

பொ-ரை. பசிய தளிர்களையுடைய புன்னைமரங்கள் பூப்பதற் கிடமாகிய நெய்தனிலத்துத் தலைவனே! (நல்லொழுக்க முடையா ராகிய) தம்மிடத்துள்ள இடைவிடாத நல்லொழுக்கம் இலராயினு ரிடத்துப்போய்த் தாங்கள் நல்லொழுக்கமில்லாத பேதையரை எம் முடைய நல்லொழுக்கத்தில் இசைவிப்போமென்று முயல்பவரது சிறுமையாகிய அன்பின்செயல் ஒருவன் கருங்கல்லைக் கிள்ளித் கைவலி முதலியவற்றை இழந்தாற் போல்வது என்பது.

மூறைமைப்பொருட்டாகிய மரபென்பது இடைவிடாத ஒழுகத்தின் மேலது. மரபில்லாரிடத்துச் செய்தமையால் கேண்மை புன்மையுள்ளதாயிற்று. வணக்குதுமென்பவர் கேண்மை யென்றமையால் அதற்குக் காரணம் அவர்கெடாதவண்ணந் தோன்றிய அன்பேயன்றி, அதனாற்பெறும் பொருளின் விருப்பன்றென்பது பெற்றும். கையிழந்தற்றென்ற உவமையால் தமதன்பின் செயல் பயன்படாமையே அன்றி, அப்பேதையரால் அவமதிப்பும் பெறுவரென்பது கருத்து. எம் காரணவாகுபெயர்.

O Lord of the sea-shore where the *punnai* with its luxuriant foliage flowers! The poor intimacy enjoyed by those who follow after utterly unconjenial men and say we will bend them to our will, is like losing one's hand by digging into a rock. (6)

337. ஆகா தெனினு மகத்துநெய் யுண்டாகின்
போகா தெறும்பு புறஞ்சுற்றும்—யாதுங்
கொடாஅ ரெனினு முடையாரைப் பற்றி
விடாஅ ருலகத் தவர்.

இ - ள். ஆகாது எனினும் - (தமக்கு) இடைத்தலிலதாயினும், அகத்து - உள்ளிடத்து, நெய்உண்டுஆகின் - நெய் உளதாஞல், எறும்பு - எறும்புகள், போகாது - விட்டு நீங்குதலில்லாமல், புறம்சுற்றும் - (அப்பாத்திரத்தின்) புறத்தில் சுற்றுநிற்கும், (அதுபோல) யாதும் கொடார் எனினும் - ஒரு சிறிதும் உதவுதலில்லாராயினும், உடையாரை - செல்வரை, உலகத்தவர் - வறியவர், பற்றி - சார்ந்து, விடார் - நீங்குதலிலர், எ - று.

பொ-ரை. தமக்குக் இடைத்தலிலதாயினும் உள்ளிடத்து நெய் உளதாஞல் எறும்புகள் விட்டு நீங்காமல் அப்பாத்திரத்தின் புறத்தில் சுற்று நிற்கும். அதுபோல ஒரு சிறிதும் உதவுதலில்லாராயினும் செல்வரை வறியவர் சார்ந்து நீங்குதலிலர் என்பது.

உடையார் உலகவழக்கு. வறியர் பலராதலின் அவரை உலகத்தவர் என்றார் பிறர்க்குதவுதலில்லாமை உணர்ந்தும் உடையாரைப் பற்றிவிடாமையால் அது பேதைமையாயிற்று. உலகத்தவரென்பதை ஒரு சொல்லாகக் கொள்ளாமல், உலகத்து அவரென இரு சொல்லாக்கொண்டு, உலகத்தில் வறியவரென உரைத்தலும் ஆமாக்கும். மேலே உடையாரென்றமையால் அவரென்பது வறியாரைக்காயிற்றன்க. அங்ஙனமன்றி, பேதைமையைக் குறித்து வறியாரென்க கூறி, அவரென்ற ரென்னலுமாம்.

If the jar contain ghee even though the ants cannot get at it, yet they will swarm around the outside; so the people of this world will cling to and not leave the wealthy though they will give these nothing.

338. நல்லவை நாடொறு மெய்தா ரறஞ்செய்யா
ரில்லாதார்க் கியாதொன்று மீகலா—லெல்லா
மினியார்தோள் சேரா ரிசைபட வாழ்வார்
முனியார்கொ லும்வாழ்நாள்.

இ-ள். (பேதையார்) நாள்தொறும் – தினமும், நல்அவை - குற்றமற்ற அறிவுள்ளோர் முடையாராகிய சபையை, எய்தார் - சேர்தலிலர், அறம் செய்யார் – (நூல்கள் விதித்த) அறத்தைச் செய்தலிலர், இல்லாதார்க்கு - வறியவர்க்கு, யாதொன்றும் - யாதொரு பொருளையும், ஈகலார் - ஈதலிலர், எல்லாம் இனியார்தோள் - நற்குணநற்செய்கைகளெல்லாமுடையநல்லமனைவியாரது தோள்களை, சேரார்-சேர்தலிலர், தாம் வாழும்நாள் - (இவற்றைச் செய்யாமல்) தாம் வாழ்கின்ற நாளை, முனியார்கொல் - வெறுத்துக்கொள்ளாரோ, எ-று.

பொ-ரை. பேதையார் தினமும் குற்றமற்ற அறிவுள்ளோர் முடையாராகிய சபையைச் சேர்தலிலர்; நூல்கள் விதித்த அறத்தைச் செய்தலிலர். வறியவர்க்கு யாதொரு பொருளையும் ஈதலிலர் நற்குணநற்செய்கைகளெல்லாமுடைய நல்ல மனைவியாரது தோள்களை சேர்தலிலர். இவற்றைச் செய்யாமல் தாம் வாழ்கின்ற நாளை வெறுத்துக் கொள்ளாரோ என்பது.

தாம் வாழுநாளை முனியுமுணர்வின ராயின் நல்லவை எய்தல் முதலிய ஐந்தனையும் செய்யாதிராரென்றபடி. நல்லவையை அடைவராயின் அவ்வவையாரால் உரைக்கப்படும் உறுதிமொழிகளால் அறஞ்செய்தல் முதலிய நான்கையும் அடைவரென்பதைக் குறிப்பித்தற்கு அதனை முதலிலும், அது முதலிய நான்கையும் செய்பவர் இம்மையில் அடையும் பயனின்னதெனக் குறிப்பித்தற்கு இசைபட வாழ்தலை ஈற்றிலும் வைத்தனர்.

No good they gain each day; nor do they deeds of virtue; nor do they enjoy sweet embraces of the loved ones. They live here devoid of any fame. Are they not disgusted with their life? (8)

339. விழைந்தொருவர் தம்மை வியப்ப வெவ்வுவர் [ரல்
விழைந்திலே மென்றிருக்குங் கேண்மை—தழங்குகு

பாய்திரைசூழ் வையம் பயப்பினு மின்னுதே
போய்நல மில்லாதார் மாட்டு.

இ-ள். ஆய்நலம் - (பலநூல்களையும்) ஆராய்ந்துணரும் நல்லறிவு, இல்லாதார்மாட்டு - இல்லாத பேதையாரிடத்து, ஒருவர் வியந்து-ஒருவர் நன்குமதித்து, தம்மை விழைய - அவர்நட்பை விரும்ப, ஒருவர் - அந்நல்லறிவில்லாத ஒருவர், விழைந்திலேம் என்று - யாம் விரும்பிலே மென்று, இருக்கும் கேண்மை - விரும்பாதிருக்கும் நட்பு, தழங்குகுரல் - மிகுதியும் ஒலிக்கின்ற ஒலியையுடைய, பாய்திரை சூழ் - பாய்கின்ற அலைகளை எறியும் கடலாற் சூழப்பட்ட, வையம் - பூமியை முழுதும், பயப்பினும் - முன்தருவதா யிருப்பினும், இன்னுதே - பின் துன்பந் தருவதே ஆம், எ-று.

பொ-ரை. பல நூல்களையும் ஆராய்ந்துணரும் நல்லறிவு இல்லாத பேதையாரிடத்து ஒருவர் நன்குமதித்து அவர் நட்பை விரும்ப அந்நல்லறிவில்லாத ஒருவர் யாம் விரும்பிலேமென்று வாளா இருக்கும் நட்பு மிகுதியும்ஒலிக்கின்ற ஒலியையுடைய பாய்கின்ற அலைகளை எறியும் கடலாற் சூழப்பட்ட பூமியை முழுதும் முன் தருவதாயிருப்பினும் பின் துன்பந்தருவதே ஆம் என்பது.

எனவே ஆய்நல முடையார் நட்பு ஒருபோதுமேயும் பயவாதாயினும் பின் உறுதி பயக்குமாதலின் அதைக்கொள்க என்பதாயிற்று. விழைந்து வியப்ப என்பதில் மொழிகளைப் பின் முன்னாக நிறுத்தி; விகுதிபிரித்துக் கூட்டி உரைக்க, சொற்கள் கிடந்தபடியே உரைக்கின் காரணகாரியமுறை பிறழ்ந்து குற்றமாய் முடியுமாதலின். வியத்தல் காரணம், விழைதல் அதன்காரியம்.

If a man cultivates with affectionate deference the friendship of another, and if the latter does not care for it and say "We entertain affection for none, friendship with such though it can give one this world which the sea with its noisy chime of leaping billows girds around, would be only affliction. (9)

340. கற்றனவும் கண்ணகன்ற சாயலு மிற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தல் தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப் படும்.

இ-ள். கற்றனவும் - தன்னால் கற்கப்பட்ட நூற்புலமைகளும், கண் அகன்ற - எங்கும் பரந்துள்ள, சாயலும் - தன் மேன்மையும்,

இல்பிறப்பும் - தன் உயர்குடிப் பிறப்பும், பக்கத்தார் - பிறரால், பாராட்ட - நன்குமதித்துப் பேசப்படுதலினால், பாடெய்தும் - (ஒருவன்) பெருமை அடைவான், தான்உரைப்பின் - (அவற்றை உடைய) தானே நன்குமதித்துப் பேசுவானாயின், மைத்தனர் - வீளையாடுவோர், பல்கி - பலருளராகி, (அவர்களால்) மருந்தின் - மருந்தினால் தணியாத பித்தன்என்று - தீராத பித்தநோயுடையா னென்று சொல்லி, எள்ளப்படும் - அவமதிக்கப்படுவான், எ-று.

பொ-ரை. தன்னால் கற்கப்பட்ட நூற் புலமைகளும் எங்கும் பரந்துள்ள தன் மேன்மையும் தன் உயர்குடிப் பிறப்பும் பிறரால் நன்குமதித்துப் பேசப்படுதலினால் ஒருவன் பெருமை அடைவான். அவற்றை உடையதானே நன்குமதித்துப் பேசுவானாயின் வீளையாடுவோர் பலருளராகி (அவர்களால்) மருந்தினால் தீராத பித்த நோயுடையரென்று சொல்லி அவமதிக்கப்படுவான் என்பது.

இல் உயர்ந்ததன்மேல் நின்றது. பக்கத்தாரென்றது தானல்லாத பிறரை. ஒருவனுடைய முறைபற்றி வீளையாட்டுச் செய்தற்குரியார் மைத்துனராதல்பற்றி வீளையாடுவோரை அவரென்றார். பித்து, தன் காரியமாகிய நோய்க்காரணமையால் காரணவாகுபெயர்.

The learning of a man, his world-renowned excellence, his nobility of birth will gain for him respect when by standers celebrate them. But if he blows his own trumpet his young kinsmen crowding around will deride him as one afflicted with a mania incurable. (10)

Chapter XXXV—Lowness

35-ஆம் அதிகாரம்: கீழ்மை.

அஃதாவது இருபத்தோ ரதிகாரங்களில் புலமைவாண்மை, பேதைமை அல்லாதனவற்றுற் கூறிய கல்வி முதலியன யாவுமில்லாத கீழோரது தன்மையை யுணர்த்துவது. ஆதலின் இஃதிதற்கண்வைக்கப்பட்டது,

341. கப்பி கடவதாச் காலைத்தன் வாய்ப்பெயினுங்
குப்பைகிளைப் போவாக் கோழிபோன்—மிக்க
கரும்பொதிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்.

இ-ள். காலை - தீனைதேக்குங் காலத்தில், கடவது ஆக - (உடையான் செய்யும்) கடமையுடையதாக, கப்பி - நொய்யை, தன்வாய்

பெய்யினும் - தன்வாயில் மிகுதியும் இட்டாலும், குப்பை - குப்பையை, கிளை - சிக்குந்தொழில், போவாத - நீங்குதலில்லாத, கோழி போல - கோழியைப்போல, மிக்ககனம் - மிக்க உயர்வாகியபொருள், பொதிந்த - தன்னுளடங்கிய, நூல் - நூற்பொருளை, விரித்து - பரக்க எடுத்துச்சொல்லி, காட்டினும் - (அறிவுடையோர் இளமையில்) தெளிவாகத் தெரிவித்தாலும், கீழ் - கீழ்மகன், தன்மனம் புரிந்த - தன்மனம் விரும்பிய, ஆறேமிகும் - வழியிலொழுகுதலே மிகுவான், எ - று.

பொ-ரை. தினைக்குங் காலத்தில் உடையான் செய்யும் கடமையுடையதாக நெய்யை தன்வாயில் மிகுதியும் இட்டாலும் குப்பையைச் சிக்குந்தொழில் நீங்குதலில்லாத கோழியைப்போல, மிக்க உயர்வாகிய பொருள் தன்னுளடங்கிய நூற்பொருளைப் பரக்க எடுத்துச் சொல்லி அறிவுடையோர் இளமையில் தெளிவாகத் தெரிவித்தாலும் கீழ்மகன் தன்மனம் விரும்பிய வழியிலொழுகுதலே மிகுவான் என்பது.

ஈறுதொகுத்தலாய் நின்றபோல என்னுஞ் செய்யுளெச்சம் மிகுமென்னும் வினைகொண்டது. உவமையிற் கூறிய காலை என்பது பொருளுக்குங்கூட்டி, அதற்கு இளமையென உரைத்தாம் நூல்கேட்டலுக்குரிய காலமதுவாதலால். கிளை முதனிலைத் தொழிற்பெயர், கிளைப்போவா என்பதைக் கிளைப்பு ஒவாத எனப்பிரித்து, சித்தல் ஒழிதலில்லாத என உரைத்தலுமாம்.

Just as the fowl, though each morning it is served duly with broken grain, resort to the rubbish heap and ceaselessly scratch in it; the low even though they are shown the works of learning full of weighty wisdom, they will all the more go on in the way in which they find delight. (1)

342. காழாய்கொண்டு கசடற்றூர் தஞ்சாரற்
றூழாது போவா மெனவுரைப்பின்—கீழதா
னுறங்குவா மென்றெழுந்து போமா மஃதன்றி
மறங்குவா மற்றொன் றுரைத்து.

இ-ள். காழாயகொண்டு - கலங்குதலில்லாத அறிவினால், கசடு அற்றூர் தம்சாரல் - (ஐயம்திரிபாகிய) குற்றம் நீங்கிய பெரியோரிடத்து, தாழாது - காலம் வீணில்கழியாமல், போவாம் என - நாமிருவோரும் போவோமென்று, உரைப்பின் - (மேன்மகன்) சொல்வா

ஞயின், கீழ் - கீழ்மகன், உறங்குவாம் என்று - நீயும் நானும் தூங்குவோமென்று சொல்லி, எழுந்துபோம் - எழுந்துபோவான், அஃது அன்றி - அவ்வாறுசொல்லுதல் அல்லாவிடின், மற்றுஒன்றுஉரைத்து - (தான் போவாமைக்குக் காரணம்) வேறொன்று சொல்லி, மறங்கும் பிணங்குவான், எ-று.

போ-வை. கலங்குதலில்லாத அறிவினால் ஐயம் திரிபாகிய குற்றம் நீங்கிய பெரியோரிடத்துக் காலம் வீணில் கழியாமல் நாமிருவோரும் போவோமென்று மேன்மகன் சொல்வானாயின் கீழ்மகன் நீயும் நானும் தூங்குவோமென்று சொல்லி எழுந்து போவான்; அவ்வாறு சொல்லுதல் அல்லாவிடின் தான் போவாமைக்குக் காரணம் வேறொன்று சொல்லிப் பிணங்குவான் என்பது.

மரத்தினுள்ளீரெனச் சார்த்தும் காழென்பது கலங்குதலில்லாத அறிவுக்காயிற்று; ஒருவனுக் குள்ளீடுபோல்வது அதுவாதலால். சாரல் தொழிலாகு பெயர். மேன்மகன் கசடற்றாரிடத்துச் செல்லாத காலம் பயனில் பொழுதாகக் கருதுதல்போலக் கீழ்மகன் அவரிடத்துச் செல்லுங்காலம் அப்பொழுதாகக் கருதுவனென்பது. கசடற்றார் தஞ்சாரல் தாழாது போதல் உறுதிப்பொருளைக் கேட்டற்கேயென்பது விளங்குதலால் அதனைக் கூறாது விட்டனர். போவாம், உறங்குவாமென்பன முன்னிலையானே உளப்படுத்திய தன்மைப்பன்மை.

If you say to the base man—'Let us go to the learned without delay,' he will rise up saying—'Let us slumber' or will perhaps demur and change the topic. (2)

343. பேருநடை தாம்பெறினும் பெற்றி பிழையாத
தேருநடைய ராகுவர் சான்றோர்—பெருநடை
பெற்றக் கடைத்தும் பிறங்கருவி நன்னுடை
வற்ற மொருநடை கீழ்.

இ-ள். பிறங்கு - நிறைகின்ற, அருவிநல்நாட் அருவியையுடைய நல்லகுறிஞ்சி நிலத்தலைவனே, சான்றோர் - (கல்வியறிவு கேள்விகளில்) நிறைந்தமேலோர், பெருநடை - பெருமித நடைக்குக் காரணமாகிய செல்வத்தை, தாம்பெறினும் - தாம்பெற்றகாலத்தும், பெற்றி - தம் இயல்பு, பிழையாது - பிறழாமல், ஒருநடையர் ஆகுவர் - ஒருவகைப்பட்ட ஒழுக்கமுடையராயிருப்பர், கீழ் - கீழ்மகன், பெருநடை - அச்செல்வத்தை, பெற்றக் கடைத்தும் - பெற்றானாயினும், ஒருநடை - (மூன்னையதின்) வேறுபட்ட ஒழுக்கத்தில், வற்றுதும் - வல்

பொ-ரை. நிறைநின்ற அருவியையுடைய நல்லூர் சூழ்ந்த நிலத்தலைவனே! கல்வியறிவு கேள்விகளால் நிறைந்த மேலோர் பெருமித நடைக்குக் காரணமாகிய செல்வத்தைத் தாம்பெற்ற காலத்தும் தம் இயல்பு பிறழாமல் ஒருவகைப்பட்ட ஒழுக்கமுடையரா யிருப்பர். கீழ் மகன் அச்செல்வத்தை பெற்றாலும் முன்னையதின் வேறுகிய ஒழுக்கத்தில் வல்லவனுவான் என்பது.

பெறினு மென்ற உம்மை பெற்றகாலத்தன்றி எனப் பொருள் தரலால் இறந்தது தழீஇயதும், பெற்றக்கடைத்து மென்ற உம்மை பெருமையை உணர்த்தி நிற்றலால் எதிர்மறையுமென்க. ஒரு நடை யென்பவற்றின் ஒன்றென்னும் வரையறைப் பண்புப்பெயர்களில் முன்னது வேறுபடாமையையும், பின்னது வேறுபடுதலையு முணர்த் தின. பெற்றிபிழையா தொருநடையராகும் உயர்வுற்றிச் சான்றோ ரென ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று. காரணமாகிய செல்வத் தைக் காரியமாகிய பெருநடையென்றது உபசாரவழக்கு. காரண முண்டான விடத்தும் மேலோர் தம்மியல்பு வேறுபடார்; கீழோர் வேறுபடுவரென்பது கருத்து.

Lord of the fertile land of swelling streams! If worthy men gain some additional honour, their good nature does not change but go on in the same path of virtue. If the base obtain some promotion, their conduct too likewise changes not (*i. e.* promotion does not in any way better them). (3)

344. தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்—பனையனைத்
தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியார் மாட்டு.

இ-ள். இலங்கு - (நீரின்மிகுதியால்) விளங்குகின்ற, அருவி நல்நாட - அருவியையுடைய நல்லநாடனே, சான் றோர்-(கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்த மேலோர், செய்தநன்று - (ஒருவரால்) செய்யப்பட்ட நன்றி, தினை அனைத்தே ஆயினும் - தினை யினளவினதா யிருப்பினும், உண்டால் - (தம்மிடத்து) உளதாஞல், பனை அனைத்து ஆக - (அது) பனையினளவினதாக, உள்ளுவர் - கருது வர், நன்று-நன்மைமறவாமையாலாம் பயனை, அறியார்மாட்டு - உணர மாட்டாத கீழ்மக்களிடத்து, என்றும் - நாடோறும், பனை அனைத்து- பனையினளவினதாகிய நன்றியை, செய்யினும் - (ஒருவர்) செய்தாரா யினும், நன்றுஇல - அவைபயன்படுதலில்லன, எ-று.

பொ-ரை. நீரின் மிகுதியால் விளங்குகின்ற அருவியையுடைய நல்ல குறிஞ்சி நிலத்தலைவனே! கல்வி யறிவு கேள்விகளால் நிறைந்த மேலோர் ஒருவரால் செய்யப்பட்ட நன்றி தினையினளவினதா யிருப் பினும் தம்மிடத்துளதாஞல் அது பனையின்னளவினதாகக் கருது வார். நன்றிமறவாமையாலாம் பயனை உணர்மாட்டாத கீழ்மக்களிட த்து நாடோறும் பனையினளவினதாகிய நன்றியை ஒருவர் செய்தா ராயினும் அவை பயன்படுத லில்லன என்பது.

நாடோறும் செய்தல்பற்றி நன்றி பலவாயின. என்றுமென்ப தில் உம்மை முற்றும்மையாதலால் எகரவினஞ்சாமைப்பொருளது. பின்னுள்ள நன்றிரண்டும் பயனென்னும் பொருளன. ஏ பிரிநிலை.

Lord of the fertile land of bright flowing torrents ! The great will consider the favour done to them oven though it be as small as a grain of millet, to be as large as a palm tree. On the other hand the ungrateful will never think of the favours done to them even though they be as great as palm tree, as anything of moment. (4).

345. பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய்பிற
செச்சிற் கிமையாது பார்த்திருக்கு—மச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும்.

இ-ள். பொன்கலத்து-பொன்னுற்செய்த பாத்திரத்தில், ஊட்டி-(நல்லுணவுகளை) உண்பித்து, புறந்தரினும் - (உடையோன் தன்னை) பாதுகாக்கினும், நாய் பிறர் எச்சிற்கு - நாய் பிறருடைய எச்சிலாகிய பொருளைப் பெறுதற்கு, இமையாது பார்த்திருக்கும் - இமைக்காமல் (அவன் முகத்தை) பார்த்திருக்கும், அச்சீர் - அச்செயல்போல, பெ ருமை உடைத்தாக ஆக - பெருங்குணமுடையானுக, கொளினும் - (பிறர் மதித்துத் தந்தனை) ஏற்றுக்கொண்டாலும், கீழ்செய்யும் - கீழ் மகனுல் செய்யப்படும், கருமங்கள் வேறுபடும் - காரியங்கள் (அவ வாறு மதித்து ஏற்றுக்கொண்டதற்கு) மாறுகவிருக்கும், எ-று.

பொ-ரை. பொன்னுற்செய்த பாத்திரத்தில் நல்லுணவுகளை உண் பித்து (உடையோன் தன்னை)ப் பாதுகாக்கினும் நாய் பிறருடைய எச்சிலாகிய பொருளைப் பெறுதற்கு இமைக்காமல் அவர் முகத்தைப் பார்த்திருக்கும். அச்செயல்போல் பெருங்குணமுடையானுகப் பிறர் மதித்துத் தன்னை ஏற்றுக்கொண்டாலும் கீழ்மகனுல் செய்யப்படும்

காரியங்கள் அவ்வாறு மதித்து ஏற்றுக்கொண்டதற்கு மாறாக விருக்கும்வன்பது.

பிறர் தன்னை மதித்து ஏற்றுக்கொண்டாலும் நாய்போலக் கீழா யினேன் தன்னியல்பு கெடாதெனன்பது. பிறர் மதித்து ஏற்றுக்கொள் ளுதலாவது மேலோர் தம்மோடொக்கவைத்து அளவளாவுதல்.

The dog even though food is given to it in a golden trough and protected, will always eagarly wait for the refuse of others. So even though the low people are received and treated with consideration as if they were possessed of greatness, the deeds of such will be otherwise. (5)

346. சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
ரெக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொ—லெக்காலு
மூந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
யிந்திரனு வெண்ணி விடும்.

இ-ள். விழுமியோர் - மேலோர், சக்கரச்செல்வம் - (உலகமுழு துந்) தமதாணைக்குட்படுத்துஞ் சிறப்பை, பெறினும் - பெற்றாராயி னும், மிகுதிச்சொல் - வரம்புகடந்த கடுஞ்சொல்லை, எக்காலும்-சொ ல்லுதற்குக் காரணமுண்டாகிய காலத்திலும், சொல்லார்-சொல்லார் கள், கீழ் - கீழ்மக்கள், மூந்திரிமேல் - மூந்திரியளவு பொன்னுக்கு மேல்; காணிமிகுவதேல் - காணியளவு பொன் மிகுவதானால், எக்கா லும் - தான் உலகிலுள்ள காலவரையும், தன்னை இந்திரன் ஆக - தன்னைத் தேவராசனாக, எண்ணிவிடும் - நினைத்தேவிடுவான், எ-று.

பொ-ரை. மேலோர் உலகமுழுதுந் தமதாணைக் குட்படுத்துஞ் சிறப்பைப் பெற்றாராயினும் வரம்புகடந்த கடுஞ்சொல்லைச் சொல்லு தற்குக் காரணமுண்டாகிய காலத்திலும் சொல்லார்கள். கீழ்மகன் மூந்திரியளவுப் பொன்னுக்குமேல் காணியளவு பொன் மிகுவதானால் தான் உலகிலுள்ள காலவரையும் தன்னைத் தேவராசனாக நினைத்தே விடுவான் என்பது.

சக்கரம் எங்குஞ் செல்லும் ஆணையை உணர்த்தவந்த குறிப்புச் சொல். சொல்லா தென்றமையால் மிகுதிச்சொல் கடுஞ்சொல்லின் மேலதாயிற்று மூந்திரி மிகச் சிறிய அளவைக்கும், காணி அதனின் மிக்க ஓர் சிற்றளவைக்கும் காட்டப்பட்டன. காணி பெறுதலுக்கு முன்னே என்பார் எதிர்காலத்தில் மிகுவதேல் என்றும், இந்திரனாக வெண்ணுதல் தேற்றமென்பார் எண்ணிவிடும் என்றும் கூறினர்.

The great even if they come in possession of great riches (of Indra), will never utter a word unbecoming. Whereas the low if they have a small fraction added to their scanty wealth, will consider themselves as great as Indra. (6)

347. மைதீர் பசும்பொன்மேன் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயா
மெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களோச்
செய்தொழிலாற் காணப் படும்.

இ-ள். மைதீர் - குற்றமற்ற, பசு பொன்மேல் - பசும்பொன் தகட்டின் மேற்புறத்து, மாண்ட மணி அழுத்தி - மாட்சிமைப்பட்ட மணிகளை அழுத்தி, செய்ததேனும் - செய்யப்பட்டதாயினும், செருப்பு - செருப்பு, தன் காற்கே ஆம் - செய்தவன்காலுக்குப் பூணப்படுதலுக்கே உரியதாம், (அதுபோலச்) செல்வம் எய்தினராயினும் - (பிறந்தபோதே சிறந்த) செல்வப்பொருளை அடைந்தவராயிருப்பினும், கீழ்களை - கீழ்மக்களை, செய்தொழிலால் - அவர் செய்யுந் தொழிலால், காணப்படும் - கண்டே யறியலாம், எ-று.

பொ-ரை. குற்றமற்ற பசும்பொன் தகட்டின் மேற்புறத்து மாட்சிமைப்பட்ட மணிகளை அழுத்தி செய்யப்பட்டதாயினும் செருப்பு செய்தவன் காலுக்குப்பூணப்படுதலுக்கே உரியதாம். அதுபோலப் பிறந்தபோதே சிறந்த செல்வப்பொருளை அடைந்தவராயிருப்பினும் கீழ்மக்களை அவர் செய்யுந் தொழிலால் கண்டே யறியலாம் என்பது.

எய்தியசெல்வத்தர் என்பதில் சொற்களைப் பின்முன்னாக நிறுத்தி விகுதி பிரித்துக் கூட்டி உரைக்க. உவமையில் பொன்மேல் மணி அழுத்திச் செய்த தென்றமையால் பொருளில் பிறந்தபோதே யென்பது வருவிக்கப்பட்டது. காற்கே என்னும்பிரிநிலை ஏகாரத்தால் மற்றவுறுப்புக்கும் பயன் படாததுபோலக் கீழ்கள் மேலோரால் நன்குமதியாமைக்கே உரியரென்பது பெற்றாம். கீழ்கள் சொல்லால் அஃதறிவு ஆதலால் அக்கீழ்களை எய்தி செல்வத்தரென்றது எய்திய செல்வத்தாஞ் சிறப்புக்கருதி. இஃது திணைவழுவமைதி.

The slipper even though wrought with choicest gems in gold, serves out for one's foot. Though the base be in prosperous condition their low nature will show itself in their actions

348. கடிக்கெனச் சொல்வற்றுங் கண்ணேட்ட மின்று
மிடிக்கண் பிறர்மாட் டுவக்கு—மடுத்தடுத்து

வேக முடைத்தாம் விறன்மலை நன்னாட
சேவகுமா மெள்ளுமாங் கீழ்.

இ-ள். விறல்மலை-வெற்றிகொண்ட மலையைச்சார்ந்த, நல்நாட-நலநாட்டுத் தலைவனே, கீழ் - கீழ்மகன், கடுக்கென - கடுமையாக, சொல்வற்று ஆம்-(ஒருவரை) சொல்லுதலில்வல்லவனாவன், கண்ணோட்டம் இன்று ஆம்-(யாவரிடத்தும்) தாட்சிணிய மில்லாதவன், பிறர் மாட்டு-பிறரிடத்து நேரிட்ட, இடுக்கண் - அபாயத்தைக் கண்டு, உவக்கும் ஆம் - மகிழ்வானவன், அடித்தடித்து - இடையிட் டிடையிட்டு, வேகம் உடைத்து ஆம் - (தக்க காரணமின்றியும்) கோபமுடையானவன், எகும் ஆம் - (தன்னை நன்குமதியாரிடத்தும்) செல்லுவானவன், எள்ளும்ஆம்-(நன்குமதியாமைகண்டு) இகழ்வானவன், எ-று.

பொ-ரை. வெற்றிகொண்ட மலையைச்சார்ந்த நல்ல நாட்டுத் தலைவனே! கீழ்மகன், கடுமையாக ஒருவரை சொல்லுதலில் வல்லவனாவன். யாவரிடத்தும் தாட்சிணிய மில்லாதவன். பிறரிடத்து நேரிட்ட அபாயத்தைக் கண்டு மகிழ்வானவன். இடையிட் டிடையிட்டுத் தக்க காரணமின்றியும் கோபமுடையானவன். தன்னை நன்குமதியாரிடத்தும் செல்லுவானவன். நன்குமதியாமை கண்டு இகழ்வானவன் என்பது.

கீழ்மகன் செய்தொழில் இவையென இதனுற் கூறியவாறு. சொல் முதனிலைத் தொழிற்பெயர். அடுக்குப் பன்மைப்பொருளது. மலை மற்ற நிலங்களைப்போலாது மழைபெய்யில்லாக் காலத்தும் வளந் தருதல்பற்றி அது விறல்கொள்வதாயிற்று.

Victorious lord of the good mountain land! The man of low nature is mighty in bitter words, is devoid of kindliness, takes delight in others' sorrows, is full of sudden wrath, will range up and down and talk ill of others. (8)

349. பழைய ரிவரென்று பண்ணட்பின் னிற்றி
னுழையினிய ராகுவர் சான்றோர்—விழையாதே
கள்ளுயிர்க்கு நெய்தற் கணைகடற் றண்சேர்ப்ப
வெள்ளுவர் கீழா யவர்.

இ-ள். கள் உயிர்க்கும் - தேனைத்தருகின்ற, நெய்தல் - நெய்தற் பூக்களையுடைய, கணைகடல் - ஒலிக்கின்ற கடலின்து, தண்சேர்ப்ப - குளிர்ச்சியாகிய துறையையுடையானே, சான்றோர் - கல்வியறிவு ஒழுக்கங்களால் நிறைந்த மேலோர், பல்நாள் - பலநாள், பின் நிற்பின்-

(தமக்கு ஒருவர்) அடங்கி நடப்பாராயின், இவர் பழையர் என்றும் இவர் தொன்றுதொட்டுவந்த நட்பினரெனக்கொண்டு, உழை இனியர் ஆகுவர் - அவரிடத்து விருப்பமுடையாராவர், கீழாயவர் - கீழ்மக்கள், விழையாது - (பலநாள் தம்பின் நிற்பவரிடத்து) விருப்பமிலராகி, எள்ளுவர் - அவமதிப்பாராவர், எ-று.

பொ-ரை. தேனைத்தருகின்ற நெய்தற்பூக்களையுடைய ஒலிக்கின்ற கடலினது குளிர்ச்சியாகிய துறையையுடையானே! கல்வியறிவொழுக்கங்களால் நிறைந்தமேலோர்பலநாள் தமக்கு ஒருவர் அடங்கி நடப்பாராயின் இவர் தொன்றுதொட்டுவந்த நட்பினரெனக்கொண்டு அவரிடத்து விருப்பமுடையாராவர். கீழ்மக்கள் பலநாள் தம்பின் நிற்பவரிடத்து விருப்பமிலராகி அவமதிப்பாராவர் என்பது.

இனிமை விருப்பத்துக்காயிற்று. ஆயவர் ஆகுவரென்பதுபோல ஆக்கவினை யன்று; பல்லோர் படர்க்கை காட்டலைந்த வினை யிலக்கணப்பெயர். மேலோர் தமக்கு அடங்கி யொழுகுவாரிடத்து விருப்பமுடையாராவர், கீழ்மக்கள் தம்மிடத்து ஒருவர் அவ்வாறொழுகின் அவர்க்குக் கடமையெனக் கருதி அவமதிப்பரென்பது கருத்து.

Lord of the resounding sea's cool shore, where the *Neythal* breathes fragrance all round! The great, if men wait in their train for some days, will say "These are our men" and will make the place congenial to them; the low in similar circumstances show no affection to such men but simply despise them. (9)

350. கொய்புற் கொடுத்துக் குறைத்தென்றுந் தீற்றினும்
வையம்பூண் கல்லா சிறுகுண்டை——யேபசே
ளெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

இ-ள். என்றும் - இளமைதொடங்கி, கொய்புல் தீற்றி - அரிந்த புல்லைத் தின்பித்து, குறைத்து - நீர் மொண்டு, கொடுப்பினும்-பருகுவிப்பினும், வையம் - தேரில், பூண் - பூண்டியழுக்குந்தொழிலை, கல்லா-அறியமாட்டா, சிறுகுண்டை-சிறுமையாகிய எருதுகள், (அதுபோல) செல்வம் எய்தினராயினும் - பிறந்தபோதே பிறந்த செல்வப்பொருளை அடைந்தவராயிருப்பினும், கீழ்களை - கீழ்மக்களை, செய்தொழிலால் - அவர் செய்யுந் தொழிலால், காணப்படும் - கண்டேயறியலாம், எ-று.

பொ-ரை. இளமை தொடங்கி அரிந்த புல்லைத் தின்பித்து நீர் மொண்டு பருகுவிப்பினும் தேரில் பூண்டிழுக்குந் தொழிலை அறிய மாட்டா சிறுமையுடைய எருதுகள். அதுபோல, பிறந்தபோதே சிறந்த செல்வப்பொருளை அடைந்தவராயிருப்பினும் கீழ்மக்களை அவர் செய்யுந் தொழிலால் கண்டே யறியலாம் என்பது.

பொருளில் எய்திய செல்வதீத தென்பதற்கேற்ப என்ற மென்பதற்கு இளமைதொடங்கி என்றும், குறைத்தல் - நீர்மொள்ளல், கொடித்தத் தீற்றி னென்பதைப் பின் முன்னுக நிறுத்தி, விகுதிபிரித்து உரைக்க. இது ஓராசிரியர்செய்த நூலன்றுமாதலின் பின்னிரண்டடியும் அநுவாதமென்னல் பொருந்தாதாயினும், பதுமனுரென்னும் பழையவுரைகாரர் செய்யுள்களை முறைப்படுத்தியதாதலால், அவர் கீழ்களை உணர்தற்குச்செய்தொழில் காட்சிப்பிரமாணமாயிருத்தல்பற்றி அநுமதித்தாரென்க.

Hear me, o Sir! The little calves will not learn to bear the yoke and draw the chariot, though they are given cut grass and carefully attended to. Though the low have gained wealth their nature will be seen in the deeds they do. (10)

Chapter XXXVI—Baseness

36-ஆம், அதிகாரம்: கயமை.

மேலையதிகாரத்தின் பொருளே இதற்கும் பொருள். மேலையதிகாரத்தில் கீழோரது தன்மை கூறிக் குறைவுரைமையால், அதனையே கயமையெனப் பெயரிட்டுக் கூறுகின்றமையின் அவ்வதிகாரத்தைச் சாரவைத்தனர். கீழ்மை இயற்சொல்லும், கயமை வழக்காய்த் திரிசொல்லுமாதல்கருதி அதனை முன்வைத்தனரென்க.

351. ஆர்த்தி வறிவின ராண்டிளை யராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப—மூத்தொழுக்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவுவேபோல்
போத்தறூர் புல்லறிவி னூர்.

இ-ள். ஆர்த்த - (கற்றல்கேட்டல்களால்) நிரப்பிய, அறிவினர்-அறிவினையுடையார், ஆண்டு இளையர் ஆயினும் - வயது சிறியராயிருப்பினும், காத்து - (தீய புலன்களில் பொறிகள் செல்லவொட்டாமல்) த்தித்து, ஓம்பி-(செய்தற்குரிய அறத்தை) வழுவாமற்செய்து, தம்மை அடக்குப - (இவ்வாறு) தம்மை அடங்கி ஒழுகச்செய்வர், புல் அறிவினூர் - (அக்கற்றல் கேட்டல்களால்) அறிவுநிரப்புதலில்லார், மூத்தொ

றும் - வயது முதிர்ந்தோறும், திரிதந்து - (பயனில்லாமல்) திரிந்து, தீத்தொழிலேகன்றி - தீமைசெய்கையே மிகுந்து, எருவைபோலகொ றுக்கைபோல, பொத்து அழுர் - அறிவின்மை நீங்குதலிலர், எறு.

பொரை. கற்றல் கேட்டல்களால் நிரம்பியீ அறிவினையுடையார் வயது சிறியராயிருப்பினும் தீயபுலன்களில் பொறிகள் செல்லவொட் டாமல் தடுத்து செய்தற்குரிய அறத்தை வழுவாழற்செய்து இவ்வாறு தம்மை அடங்கி ஒழுகச்செய்வர். அக்கற்றல் கேட்டல்களால் அறிவு நிரப்புதலில்லார் வயது முதிர்ந்தோறும் பயனில்லாமல் திரிந்து தீய செய்கையே மிகுந்து கொறுக்கைபோல அறிவின்மை நீங்குதலிலர் என்பது.

ஆர்த்த என்னும் பிறவினைப் பெயரெச்சம் அறிவினென்னும் வினைக்குறிப்புப் பெயரின் முதனிலையோடு முடிந்தது. இளைய என் பதில் இளமைப்பண்பு சிறுமையை யுணர்த்தியது. மூ முதனிலைத் தொழிற்பெயர். ஏ - பிரிநிலை. பொத்து - உட்புரை. அது அறிவின் மையின்மேலது. போத்தென நீட்டல் பெற்றது.

The really wise, though young in years, will guard themselves in stern self-repression. The low unwise people as they grow older in years, grow also in their wicked deed and can never get themselves free from hollowness. (1)

352. செழும்பெரும் பொய்கையுள் வாழினு மென்னாம்
வழும்பறுக்க கில்லாவாந் தேரை—வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணு நுணுக்கமொன் றில்லாதார்
தோல்கிற்கும் பெற்றி யரிது.

இ - ள். செழுபெரு பொய்கையுள் - நீர்வளமுள்ள பெரிய குளத்தில், தேரை வாழினும் - தவளைகள் வாழ்வன ஆயினும், என் றும் - எக்காலத்திலும், வழும்பு - (தம்முடலில்) வழுக்குதலாகிய அழுக்கை, அறுக்க கில்லா - நீக்கிக்கொள்ள வலியில்லன, (அது போல) வழும்பு இல்சீர் - தவறுதலில்லாத சிறப்பையுடைய, நூல் கற்றக் கண்ணும் - பொருள் வளமுள்ள பெருநூல்களைக் கற்றாராயி னும், நுணுக்கம் ஒன்றும் இல்லாதார் - கூரிய அறிவு சிறிது மில்லா தவர், தேர்கிற்கும் - (அந்நூல்களின் பொருள்களை) ஆராய்ந்து தெளி யும், பெற்றி அரிது - தன்மை (அவர்க்கு) இலதாகும், எ-று.

பொ-ரை. நீர்வளமுள்ள பெரிய குளத்தில் தவளைகள் வாழ் வன ஆயினும் எக்காலத்திலும் தம்முடலில் வழுக்குதலாகிய அழு

க்கை நீக்கிக்கொள்ள வலியில்லன. அதுபோல, தவறுதலில்லாத சிற ப்பையுடைய பொருள்வளமுள்ள பெரு நூல்களைக் கற்றாராயினும் கூரிய வறிவு சிறிது மில்லாதவர் அந்நூல்களின் பொருள்களை ஆரா ய்ந்து துணியும் தன்மை அவர்க்கு இலதாகும் என்பது.

ஆதலால் மனக்குற்ற மொழித்த லிலர் என்றபடி; இது வழும் பறுக்கில்லா என்பதற் கிசையவந்த இசையெச்சம். உவமையைச் செழும் பெருவென வீசேடித்தமை பொருளுக்குங் கொள்ளப்பட் டது. எதிர்மறையிலும், உடன்பாட்டிலும் இல் என்னும் இடைநிலை ஆற்றற் பொருண்மையது.

The frog though it lives in a big overflowing tank never gets rid of its sliminess. So for those devoid of fine perception, no amount of learning good books will be of any use. (2)

353. கணமலை நன்னுட கண்ணின் றொருவன்
குணனேயுங் கூறற் கரிதால்—குணனழுங்கக்
குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்க்குட்
கெற்ற லியன்றதோ நா.

இ-ள். கணமலை - கூட்டமாகிய மலைகளைச் சார்ந்த, நல்நாட - நல்ல குறிஞ்சிநிலத்தலைவனே, கண் இன்றி - புறத்தில், ஒருவர் - ஒருவருடைய, குணனேயும் - (நற்செயலைக் கூறு தொழிதலன்றி) நற்குண மொன்றையுமே, கூறற்கு அரிது - சொல்லுதற்கு இலது, குணன் அழுங்க - (அவருடைய) நற்செயல் மாகாதும்படி, குற்றம் - குற்றமான செயலையே, உழை நின்று - அவர் அருகே நின்று, கூறும் சிறியவர்கட்கு - (பலரறிய) சொல்லும் கீழ்மக்களுக்கு, நா - நாவா னது, எற்றால் - (தசையினுலன்றி) எப்பொருளினால், இயன்றதோ - செய்யப்பட்டதோ, அறியோம், எ-று.

பொ-ரை: கூட்டமாகிய மலைகளைச் சார்ந்த நல்ல குறிஞ்சிநிலத் தலைவனே! புறத்தில் ஒருவருடைய நற்செயலைக் கூறு தொழித லன்றி நற்குண மொன்றையுமே சொல்லுதற்கு இலது. அவருடைய நற்செயல் மாசுறும்படி குற்றமான செயலையே அவர் அருகே நின்று பலரறியச் சொல்லும் கீழ்மக்களுக்கு நாவானது தசையினுலன்றி எப் பொருளினால் செய்யப்பட்டதோ அறியோம் என்பது.

தசையால் செய்யப்பட்டதாயின் நற்குணநற்செயல்களைக்கூறுவ தென்பது குறிப்பெச்சம். அறியோமென்பது சொல்லெச்சம். கண் பொருளாகு பெயராய்ப் பார்வையை உணர்த்தலால், கண் இன்றி

என்பதற்குப் புறத்திலெனப் பொருள் கூறப்பட்டது. இன்று இன்றி என்பதன் திரிபு. அரிதென்னுங் குறிப்புவினைக்கு நா வினைமுதல். பின் குன்மென்னுங் காரணப்பெயர் தன் காரியமாகிய செவியின் மேல் நின்றது. எற்றி என்னென்னும் வினாப்பெயரி னடியாகப் பிறந்த வினைக் குறிப்புப்பெயர். ஓ இழிவுசிறப்பு.

Lord of the fertile land of mountain chains! It is hard to stand before a man and proclaim even his praise. How then can one's evil tongue depreciate a man's good qualities and proclaim his defects in his very presence? (3)

354. கோடேர் தகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீர்மை
சேடியர் போலச் செயறேற்றார்—கூடிப்
புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பர் மற்றை யவர்.

ஒ-ள். கோடு ஏந்து - வரம்புயர்ந்த, அகல் அல்குல் - அகன்ற வடிவினதாகிய அல்குலையுடைய, பெண்டிர் - குலமகளிர், தம் பெண்ணீர்மை - தமது பெண்ணுக்குரிய அலங்காரத்தை, சேடியர்போல - தம் பாங்கியர் தமக்குச் செய்தல்போல, செயல் தேற்றார் - செய்து கொள்ளுதலே அறியார், மற்றையவர் - பரத்தையர், புதுப்பெருக்கம் போல - புதுநீர்ப் பெருக்குப்போல, தம் பெண்ணீர்மை - தமது பெண்ணுக்குரிய அலங்காரத்தை, காட்டி - (செல்வர்களுக்குத் தாமேசெய்து) காட்டி, மதிப்பித்து - (தம்மை) நன்குமதிப்பித்து, கூடி - (அவரோடு) மருவி, இறப்பார் - (அவர்செல்வப்பொருளை முற்றும்பெற்று) பிரிவர், எ-று.

பொ-ரை. வரம்புயர்ந்த அகன்ற வடிவினதாகிய அல்குலையுடைய குலமகளிர் தமது பெண்மைக்குரிய அலங்காரத்தைத்தம் பாங்கியர் தமக்குச் செய்தல்போலச் செய்துகொள்ளுதலே அறியார். பரத்தையர் புது நீர்ப் பெருக்குப்போலத் தமது பெண்ணுக்குரிய அலங்காரத்தைச் செல்வர்களுக்குத் தாமே செய்துகாட்டித் தம்மை நன்கு மதிப்பித்து அவரோடு மருவி அவர் செல்வப்பொருளை முற்றும் பெற்றுப் பிரிவர் என்பது.

பின் பிற்றையவரென்றமையால் பெண்டிரென்பது குலப்பெண்டிர்மேலது. இனிமையாகக் கண்ணுக்குத் தோன்றுவது அலங்காரமாதலால் அதனை நீர்மை என்றார். அதையடுத்துநின்ற பெண்ணென்னும் விசேடணம் பிறிதினியைபு நீக்கிய விசேடணம். புதுநீர்ப்பெரு

க்கு தான் வந்த ஆற்றினது நீரையுங்கொண்டு செல்லுதுபோலப் பரத்தையர் தாம்சேர்ந்த செல்வர்களுடைய பொருளைக் கவர்ந்துகொண்டு பிரிவதென்பது படின்றமையால் புதுப்பெருக்கம் தொடுவமம். நல்லறிவாளர் தமது கல்வி நூற்புலமையைப்பற்றிப் பக்கத்தார் பாராட்டித் தம்மைப் புகழ்ந்துரைப்பதுபோலத் தாமறியாரென்பதும், புல்லறிவாளர் தம்மைப் பிறர் கன்குமதிக்கும்படி தம்மைத் தாமே புகழ்ந்து பொருள் கவர்வரென்பதும் படின்றமையால் இது பிறிது மொழிதலென்னும் அணி. மதிப்பீத்தென்பதில் பிவ் விகுதி தொகுத்தது.

Chaste women would not make an exhibition of their charms as is the case with the prostitutes. Like the everflowing fountain, the wantons make a display of their charms and vaunt their beauty as they pass. (4)

355. தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா
வுளிநீரார் மாதோ கயவ—ருளிநீரார்க்
கென்ஞனுஞ் செய்யா ரெனைத்தானுஞ் சீசெய்பவே
யின்ஞங்கு செய்வார்ப் பெறின்.

ஓ-ள். உளி நீரார்க்கு-(பிறர் துன்பத்தைத் தந் துன்பம்போலக் கருதி) இரங்கும் இனிய குணமுடையார்க்கு, என்ஞனும் செய்யார்-மாதோருபகாரத்தையாயினுஞ் செய்யார், இன்ஞங்கு - தமக்கு இடுக்கண், செய்வார்ப்பெறின் - செய்பவரைப் பெறுவாராஞல், எனைத்தானும் செய்பவே - எவ்வளவு பெரிய உபகாரத்தை யாயினுஞ் செய்யாதொழியார், (ஆதலால்) கயவர் - கீழோர், தளிர்மேலே நிற்பினும் - தளிரின்மேல் நின்றதாயினும், தட்டாமல் செல்லாத - (ஒருவன்) தட்டாமல் இறங்காத, உளி நீரார் - உளியின்தன்மையுடையாராவர், எ-று.

பொ-ரை. பிறர் துன்பத்தைத் தன் துன்பம்போலக் கருதி இரங்கும் இனியகுண முடையார்க்கு யாதோ ருபகாரத்தை யாயினுஞ் செய்யார். தமக்கு இடுக்கண் செய்பவரைப் பெறுவாராஞல் எவ்வளவு பெரிய உபகாரத்தையாயினுஞ் செய்யாதொழியார். ஆதலால் கீழோர் தளிரின்மேல் நின்றதாயினும் ஒருவன் தட்டாமல் இறங்காத உளியின்தன்மை யுடையாராவர் எனபது.

செய்யாரென்னும் மறைவினையால் என் என்பது இறுமையையும், செய்ப வென்னும் விதிவினையால் எனைத்தென்பது பெருமை

க்கு தான் வந்த ஆற்றினது நீரையுங்கொண்டு செல்லுதுபோலப் பரத்தையர் தாம்சேர்ந்த செல்வர்களுடைய பொருளைக் கவர்ந்துகொண்டு பிரிவரென்பது படநின்றமையால் புதுப்பெருக்கம் தொழிலுவமம். நல்லறிவாளர் தமது கல்வி நூற்புலமையைப்பற்றிப் பக்கத்தார் பூரா ட்டித் தம்மைப் புகழ்ந்துரைப்பதுபோலத் தாமறியா ரென்பதும், புல்லறிவாளர் தம்மைப் பிறர் நன்குமதிக்கும்படி தம்மைத் தாமே புகழ்ந்து பொருள் கவர்வரென்பதும் படநின்றமையால் இது பிறிது மொழிதலென்னும் அணி. மதிப்பித்தென்பதில் பிவ் விகுதி தொகுத்தது.

Chaste women would not make an exhibition of their charms as is the case with the prostitutes. Like the everflowing fountain, the wantons make a display of their charms and vaunt their beauty as they pass. (4)

355. தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா
வுளிநீரார் மாதோ கயவ—ருளிநீரார்க்
கென்ஞனுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே
யின்ஞங்கு செய்வார்ப் பெறின்.

இ-ள். உளி நீரார்க்கு-(பிறர் துன்பத்தைத் தந் துன்பம்போலக் கருதி) இரங்கும் இனிய குணமுடையார்க்கு, என்ஞனும் செய்யார்-யாதோருபகாரத்தையாயினுஞ் செய்யார், இன்ஞங்கு - தமக்கு இடுக்கண், செய்வார்ப்பெறின் - செய்பவரைப் பெறுவாராஞல், எனைத்தானும் செய்பவே - எவ்வளவு பெரிய உபகாரத்தை யாயினுஞ் செய்யா தொழியார், (ஆதலால்) கயவர் - கீழோர், தளிர்மேலே நிற்பினும் - தளிரின்மேல் நின்றதாயினும், தட்டாமல் செல்லாத - (ஒருவன்) தட்டாமல் இறங்காத, உளி நீரார் - உளியின்தன்மையுடையாரவர், எ-று.

பொ-ரை. பிறர் துன்பத்தைத் தன் துன்பம்போலக் கருதி இரங்கும் இனியகுண முடையார்க்கு யாதோ ருபகாரத்தை யாயினுஞ் செய்யார். தமக்கு இடுக்கண் செய்பவரைப் பெறுவாராஞல் எவ்வளவு பெரிய உபகாரத்தையாயினுஞ் செய்யாதொழியார். ஆதலால் கீழோர் தளிரின்மேல் நின்றதாயினும் ஒருவன் தட்டாமல் இறங்காத உளியின்தன்மை யுடையாராவர் எஞ்பது.

செய்யாரென்னும் மறைவினையால் என் என்பது இறுமையையும், செய்ப வென்னும் விதிவினையால் எனைத்தென்பது பெருமை

யையு முணர்த்தலால் அவற்றை அடித்த உம்மைகள் மூறையே இழிவும் உயர்வுங் குறித்துநின்றன. இன்னுங்கு செய்வார்க்குச் செய்த லென்றது அவர் பறிக்க இழத்தலேயாதலின் செய்ப வென்பது இலக்கணை.

The base people are like the chisel which, even though it be over the petals of a flower, moves not without being struck (by the mallet). On those who are ever courteous, the base people never confer any boon, but give everything to those who use voilent means. (5)

356. மலைநல முள்ளுங் குறவன் பயந்த
விளைநில முள்ளு முழவன்—சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைதலை யுள்ளி விடும்.

இ - ள். குறவன் மலைநலமும் - குறவன் மலையினது வளப்பத்தை, உள்ளும் - கருதிக்கொண்டிருப்பான், உழவன் - உழுநன், பயந்த - பயனைத் தந்த, விளைநிலம் - விளைவைத்தரு மியல்புள்ள நிலத்தை, உள்ளும் - கருதிக்கொண்டிருப்பான், (அவர் கருதல்போல) சான்றோர் - கல்வி யறிவு கேள்விகளால் நிறைந்து மேலாயினோர், ஒருவர் சிறந்து செய்த - ஒருவரால் (அன்பு) மிகுந்து செய்யப்பட்ட, நன்றி நற்செயலை, உள்ளுவர் - கருதிக்கொண்டிருப்பார், கயம் - கீழ்மகன், தன்னை வைததை - (பிறரால்) தன்னை வையப்பட்ட நிந்தையை, உள்ளிவிடும் - கருதாமலிரான், எ-று.

பொ-ரை. குறவன் மலையினது வளப்பத்தைக் கருதிக்கொண்டிருப்பான். உழுநன் பயனைத் தந்த விளைவைத்தரு மியல்புள்ள நிலத்தைக் கருதிக்கொண்டிருப்பான். அவர் கருதல்போல, கல்வி யறிவு கேள்விகளால் நிறைந்து மேலாயினோர் ஒருவரால் அன்பு மிகுந்து செய்யப்பட்ட நற்செயலைக் கருதிக்கொண்டிருப்பார். கீழ்மகன் பிறரால் தன்னை வையப்பட்ட நிந்தையைக் கருதாமலிரான் என்பது.

எடுத்துக்காட்டெவமையால் சான்றோர்க்கு ஒருவர் செய்த நன்றி யுள்ளுதலும், கீழ்மகனுக்கு ஒருவர் வைதலை யுள்ளுதலும் இயல்பென்பது. சான்றோரையும் உடன் கூறியது கீழ்மகனது இழிதன்மை தோன்றற்கு. வறப்பினும் வளந் தருதல்பற்றி மலைநலமென வாளர் கூறினர்.

The hill man thinks of the beauty of the hills; the husbandman thinks of the fields that have yielded him abundant crops; the good think of the boons conferred on them by their benefactors; the mind of the base is fixed on the rebukes he has received. (6)

357. ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறும் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயி
னெழுநூறும் தீதாய் விடும்.

இ-ள். சான்றோர் - மேலாயினோர், ஒரு நன்றி செய்தவர்க்கும் - தமக்கு ஒருபகாரத்தைச் செய்தவர்க்கும், ஒன்றி எழுந்த-இடைவிடாமல் அவரிடத்துத் தோன்றிய, பிழை நூறும் - நூறு பிழைகளையும், (முன் செய்த நன்றியைக் கருதி) பொறுப்பர் - பொறுத்துக் கொள்வார், கயவர்க்கு - கீழாயினோர்க்கு, எழுநூறு நன்றி செய்து - (ஒருவர்) எழுநூறு உபகாரங்களைச் செய்து, ஒன்று - (பின் அவர் செய்யும்) ஒருசெயல், தீது ஆயின் - (தமக்கு) இதமில்லாததாஞல், எழுநூறும் - அவ்வெழுநூறு உபகாரங்களும், தீது ஆய்விடும் - இதமல்லாததுபோல ஆகாமலிரா, எ-று.

பொ-ரை. மேலாயினோர் தமக்கு ஒருபகாரத்தைச் செய்தவர்க்கும இடைவிடாமல் அவரிடத்துத் தோன்றிய நூறு பிழைகளையும் முன் செய்த நன்றியைக் கருதிப்பொறுத்துக்கொள்வார். கீழாயினோர்க்கு ஒருவர் எழுநூறு உபகாரங்களைச் செய்து பின் அவர் செய்யும் ஒரு செயல் தமக்கு இதமல்லாததாஞல் அவ்வெழுநூறு உபகாரங்களும் இதமல்லாததுபோல ஆகாமலிரா என்பது.

தீதுபோல் ஆய்விடுதல் கயவரால் முற்றும் மறக்கப்படுதல். செய்தவர்க் கென்பதனீற்றில் இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. ஒன்றல் ஒன்றனை ஒன்றுசார்தல். எழுநூறு நன்றிசெய்தவர் நன்றல்லதைச் செய்யாராதலால் ஒன்று என்றும், அவ்வொருசெயல் இவர் செய்வினையால் இதமல்லாததாய் முடிந்தமையின் தீதாயின் என்றுங் கூறினர். தீது பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயர். பின் உள்ள எழுநூறு சுட்டுப்பொருளது. நூறு, எழுநூறென்பன மிகப்பல என்பதற்குக் காட்டிய எண்.

The great will put up with a hundred and one wrongs on the part of one who has done them good once; whereas the low

man, to whom nothing but good has been done on seven hundred occasions, if once some wrong be done inadvertently, will consider the previous good as something bad. (7)

358. ஏட்டைப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள்—கோட்டை
வயிரஞ் செறிப்பினும் வாட்கண்ணுய் பின்றி
செயிர்வேழ மாகுத லின்று.

இ-ள். வாள் கண்ணுய் ! வாள்போலுங் கண்களை யுடையாளே, கோட்டை - தின் தந்தங்களில், வயிரம் செறிப்பினும் - பூணைப் பூட்டினும், பன்றி - பன்றியானது, செயிர் - (போர்முகத்தில்) கோபிக்கு மியல்புள்ள, வேழம் ஆகுதல் - யானைபோலப் போர்செய்ய வல்லுதல், இன்று - இலது, (அதுபோல) இல் பிறந்தார் - உயர் குடியிற் பிறந்த அறிவுடையோரால், ஏட்டைப் பருவத்தும் - (பொருளின்மையால்) தளர்வு வந்தகாலத்தும், செய்வன - செய்யப்படுஞ் சிற்றறங்களை, முழுமக்கள் - இழி குடியிற் பிறந்த அறிவிலோர், மோட்டிடத்தும் - பொருளுண்டைமையாகிய உயர்ந்த நிலையில் நின்றகாலத்தும், செய்யார் - செய்ய அறியார், எ-று.

பொ-ரை. வாள்போலுங் கண்களை யுடையாளே ! தன் தந்தங்களில் பூணைப் பூட்டினும் பன்றியானது போர் முகத்தில் கோபிக்கு மியல்புள்ள யானைபோலப் போர் செய்ய வல்லுதல் இலது. அதுபோல, உயர் குடியிற் பிறந்த அறிவுடையோரால் பொருளின்மையால் தளர்வு வந்தகாலத்தும் செய்யப்படுஞ் சிற்றறங்களை இழி குடியிற் பிறந்த அறிவிலோர் பொருளுடைமையாகிய உயர்ந்த நிலையில் நின்றகாலத்தும் செய்ய அறியார் என்பது.

உவமையால் அறஞ்செய்தல் கயவர்க்கு இயல்பன்றென்பது கருத்து. ஐ வேற்றுமை மயக்கம். முழுமக்கள் இற்பிறந்தாரை விடிவாகிய ஒருவாற்றால் ஒத்தல்போலப் பன்றி யானையை ஒத்தலின் அதனை எடுத்தோதினர்.

O woman of bright eyes ! the wild boar even through its tusks are ringed and armed will never become a warlike elephant. Worthless men even in time of prosperity will not do deeds which men of noble birth perform even in their poverty. (8)

359. இன்றுது மிற்நிலையே யாது மினிச்சிறிது
நின்றுது மென்று நினைத்திருந்—தொன்றி

யுரையின் மகிழ்ந்துதம் முள்ளம் வேறாகி
முரையிலையின் மாய்ந்தார் பலர்.

இ-ள். இன்று - (ஒருகாலத்தில்) இதுபொழுது, ஆதும் என்று - துறவு பூண்போமென்றும், இங்கிலையே - (ஒருகாலத்தில்) நாம் நின்ற இல்வாழ்க்கையிலேயே, ஆதும் என்று - துறவு பூண்போமென்றும், இனிச் சிறிது நின்று - (ஒருகாலத்தில்) இனிச் சிலகாலம் இல்வாழ்க்கையில் நிலைத்து, ஆதும் என்று - துறவு பூண்போமென்றும், நினைத்து - எண்ணமிட்டு, இருந்து - (துறவுக்குரிய முயற்சி) இல்லாதவராய், ஒன்றி - (இல்வாழ்க்கையில்) பெயராமல் நின்று, உரையின் - (மேல் நினைத்தபடி) வாயாற் சொல்லுதலால், மகிழ்ந்து - (துறவு பூண்டவராக) மகிழ்ச்சியடைந்து, தம் உள்ளம் வேறாகி - தமது கருத்துப் பயன்படாமல், மரை இலையின் - (நீரைவிட்டு நீங்காத) தாமரையிலை அழிவதுபோல, மாய்ந்தார் - (துறவு பூணாமல்) அழிந்தவர், பலர் - பலராவர், எ-று.

பொ-ரை. ஒருகாலத்தில் இதுபொழுது துறவு பூண்போமென்றும் ஒருகாலத்தில் நாம் நின்ற இவ்வாழ்க்கையிலேயே துறவு பூண்போமென்றும், ஒருகாலத்தில் இனிச் சிலகாலம் இல்வாழ்க்கையில் நிலைத்துத்துறவுபூண்போமென்றும் எண்ணமிட்டுத்துறவுக்குரிய முயற்சி இல்லாதவராய் இல் வாழ்க்கையில் பெயராமல் நின்று மேல் நினைத்தபடி வாயாற் சொல்லுதலால் துறவு பூண்டவராக மகிழ்ச்சியடைந்து தமது கருத்துப்பயன்படாமல் நீரைவிட்டு நீங்காத தாமரையிலை அழிவதுபோலத் துறவு பூணாமல் அழிந்தவர் பலராவர் என்பது.

என்றென்னும் எண்ணிடைச்சொல்லை முன்னின்ற ஆதுமென்னும் இரண்டனோடும் கூட்டுக. இல்வாழ்க்கையில் துறவு பூணலாவதுயான் எனுதென்னு மிருபற்று மொழிதல். இங்கிலையே, இனிச் சிறிதுநின்று என்பவற்றாலும், உவமையாலும் துறவு பூணல் வருவிக்கப்பட்டது. ஆது மூன்றும் தனித்தன்மைப் பன்மை. இவ்வாறு கருதியும் சொல்லியும் பின் செய்யாமையால் இது கயமையாயிற்று.

"To day, this very moment, or a few minutes hence, we shall gain our purpose"—so many think and speak and take delight in the thought but soon their eagar minds are changed and they have perished like a lotus leaf. (9)

360. நீருட் பிறந்து நிறம்பசிய தாயினு
மீரங் கிடையகத் தில்லாகு—மொரு

நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்து
மறைப்பெருங் கல்லன் ருடைத்து.

இ-ள். நீருள் பிறந்து - நீரில்பிறந்து, நிறம்பசியதா ஆயினும் நிறப் பசுமையுள்ளதா யிருப்பினும், கிடை - நெட்டிச்செடி, அகத்து-தன்னுள், ஈரம் இல் ஆகும் - ஈரம் இலதாயிருக்கும், (அதுபோல) நிறை - நிறைவையுடைய, பெருஞ்செல்வத்து - பெருஞ்செல்வத்தில், நின்றக் கடைத்தும் - இருந்தவிடத்தும், அறைப்பெருங்கல் அன்ஞர் - பாறையாகிய பெருங்கல்போல இளகுதலில்லாத கயவரை, உடைத்து - இவ்வுலகம் உடையது, எ-று,

பொ-ரை. நீரில் பிறந்து நிறம் பசுமையுள்ளதா யிருப்பினும் நெட்டிச்செடி தன்னுள் ஈரம் இலதாயிருக்கும்; அதுபோல நிறைவை யுடைய பெருஞ்செல்வத்தில் இருந்தவிடத்தும் பாறையாகிய பெருங் கல்போல இளகுதலில்லாத கயவரை இவ்வுலகம் உடையது என்பது.

உவமையில் நிறம் பசியதென்றது ஆடையணி முதலியவற்றால் தம்மை அலங்கரிப்பவ ரென்பதையும், நீருட்பிறந்து ஈரங்கிடையகத் தென்றது நிறைப்பெருஞ் செல்வத்து நின்றதற்குப் பயன் இரப்பவர் முதலியோர்க் குபகரித்தலுக்குக் காரணமாகிய அருளுடைமை யென் பதையும் குறிப்பித்தறிகென்க. உலகில் இத்தன்மையர் பலராதலால் அவரை யுடைத்து என்றார். நிறைவாவது அமையுமெனத் தங்கருத்து மூற்றல். ஒரும் அசை.

Though born in water and looks green, the pith of the water-rush never takes in moisture. Though born in wealthy circumstances, the minds of the base are as hard as rock. (10)

Chapter XXXVII—Miscellaneous Topics

37-ஆம் அதிகாரம், பன்னெறி.

அஃதாவது, பலவாகிய நெறிகளைக்கூறுவது. முன்கூறப்பட்ட அதிகாரங்கள் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலாரையும் பின்கூறப்படும் அதிகாரங்களிரண்டும் பெண்பால்ரையும்பற்றி நின்றன ஆதலால் அவ்விருபாலாரையும் பற்றி நின்ற இஃது இங்கு வைக்கப்பட்டது.

361. மஞ்ஞைகளுக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பா
யிஞ்ஞாலத்துக் கின்றியமைப்பி னெண்ணும்—விஞ்ஞைதக்க
மாண்டூ மனையாளோ யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு.

இ-ள். விழைதக்க - (அறிவுடையோர் யாவரும்) நன்கு மதித்தற்குத் தகுதியாயின, மாண்ட - நற்குணநற்செய்கையுள்ள, மனையாளை - இல்லாளை, இல்லாதான் - உடையனுயிராதவனது, இல்லகம் - வீடு, மழைதிளைக்கும் - மேகங்கள் தவழ்வதற்குரிய, மாடமாய் - மேல்நிலைகளையுடையதாகி, மாண்பு அமைந்த - (கள்ளர் முதலானேர் தழைதலரிய) பெருமையமைந்த, காப்பாய் - காவலாளரையுடைதாய், இழைவிளக்கு-திரிநூல்விளக்கு, நின்று - (பகலிரவுகளில்) நிலைத்து, இமைப்பின் - (தன்னில்) பிரகாசித்தல், என் ஆம் - என்ன பயனுடையதாகும், காண்டற்கு அரியதி - (அறிவுடையாரால்) காணுதலுக்குக் கூடாததாகிய, ஓர்காடு - இகோடு போலும், எ-று.

பொ-ரை. அறிவுடையோர் யாவரும் நன்குமதித்தற்குத் தகுதியாயின நற்குண நற்செய்கையுள்ள இல்லாளை உடையவனுயிராதவனது வீடு, மேகங்கள் தவழ்வதற்குரிய மேல் நிலைகளையுடையதாகிக் கள்ளர் முதலானேர் தழைதலரிய பெருமையமைந்த காவலாளரையுடையதாய்த் திரிநூல் விளக்கு பகலிரவுகளில் நிலைத்துத் தன்னில் பிரகாசித்தால் என்ன பயனுடையதாகும்; அறிவுடையாரால் காணுதலுக்குக் கூடாதாகிய இகோடு போலும் என்பது.

மழை திளைக்கு மென்றது மாடத்தினுயர்வைக் குறிப்பித்ததாலால் குணவதிசயவணி. மழைதிளைக்கும் என்றதனுல் மாடம் மேனிலையையும், காண்டற்கரியது என்றதனுல் காடு இகோட்டையும் உணர்த்தின. உறவினர் விருந்தினர் முதலியோர் வந்து சேரப்பெறுமையால் அவ்வில்லிற்கு இடுகோடுவமையாயிற்று. இழைவிளக்கு நின்று விளங்கல் மங்கலக் குறிகளிலொன்று. இமைப்பினென்பதில் இமைத்தல் தன்காரணமாகிய ஒளி செய்தலின்மேனின்றது.

The palace towers high to the clouds. It is guarded by a band of watchmen. Jewells shine bright like lamps. What then? If the owner of the house has not a wife of dainty excellence, the house is a desert hard to explore. (1)

362. வழுக்கெனைத்து மில்லாத வாள்வாய்க் கிடந்து
மிழுக்கினைத் தாம்பெறுவ ராயி-னிழுக்கெனைத்துஞ்
செய்குறுப் பாணி சிறிதேயச் சின்மொழியார்
கையுறுப் பாணி பெரிது.

இ-ள். வழுக்கு - (கூரின்மை முதலிய) குற்றங்கள், எனைத்தும் இல்லாத-எவ்வளவு சிறிது முடையதல்லாத, வாள்வாய் - வாளினது

வாயில் இருப்பதுபோல, கிடந்தும் - (கற்பினெழுக்கத்தில்) அசையா திருந்தும், இழுக்கினை - (அவ்வொழுக்கத்தினின்று) தவறுதலை, தாம் பெறுவர் ஆயின் - பின் தாம் பெறுவாராஞல், அச்சில் மொழியார் - தவற்றலைப்பெற்ற மேன்மையாகிய மொழிகளையுடைய பெண்டிர், இழுக்கு - அத்தவறுதலை, எனைத்தும் - எவ்வளவு சிறிதும், செய்குறு தபாணி - செய்யாமல் தம்மைக்காத்த காலம், சிறிதே - (பெரிதேயா யினும்) சிறிதே ஆம், கைஉறுதபாணி - கற்பெழுக்கத்தில் பொருந் தாதகாலம், பெரிதஎ - (சிறிதேயாயினும்) பெரிதே ஆம், எ-று.

பொ-சை. கூரின்மை முதலிய குற்றங்கள் எவ்வளவு சிறிது மூடையதல்லாத வாளினது வாயில் இருப்பதுபோலக் கற்பினெழுக் கத்தில் அசையாதிருந்தும் அவ்வொழுக்கத்தினின்று தவறுதலை யின் தாம் பெறுவாராஞல் தவறுதலைப்பெற்ற மென்மையாகிய மொழி களையுடைய பெண்டிர் அத்தவறுதலை எவ்வளவு சிறிதும் செய்யாமல் தம்மைக் காத்தகாலம் பெரிதேயாயினும் சிறிதே ஆம். கற்பொழுக்கத் தில் பொருந்தாத காலம் சிறிதேயாயினும் பெரிதே ஆம் என்பது.

கற்பினெழுக்கத்தில் தவறுதகாலம் பெரிதேயாயினும், சிறிது தவறியபின் இருமைப்பயனையுந் தராமையால் சிறிதும், தவறியகாலம் சிறிதேயாயினும் அச்சிறிது பெரிதும் ஆயின. தேற்றேகாரத்தைப் பெரிதென்பதனோடுங் கூட்டுக. வழுக்கு முதனிலைத் தொழிற்பெயர். இழுக்கு முதனிலைத்திரிந்த தொழிற்பெயர். கூரின்மை முதலிய குற்றங்கள் கூரின்மை, ஒரு பொருளைத் துண்டிக்குந்தோறும் கூர் மழுங்கல், கோணுதல், முரிதலென்பன. தாம் பெறுவராயினென் னும் பழம்பிடத்தைத் தாம்பெறுராயினெனப் பாடமாற்றி உரைப்பாருமுளர். அங்ஙனமாயின் இழுக்கெனைத்துஞ் செய்குறுப் பாணிசிறிதேயெனக் கூறவேண்டுவதில்லை யாதலாலும், இழுக்கினைப் பெரிதுக்குக் கையுறுப்பாணி பெரிதென்னல் ஒருவாற்றலும் இயை யாமையாலும் அதுபாடமன்மை அறிக.

Even though surrounded by a faultless guard of swords, if once they gain freedom in little time they are stained with every fault; and long is the time those soft voiced maidens spurn every law of right. (2)

363. வாளியென் றெறிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலே
பட்டில் புகாதா ளரும்பிணி—யட்டதனீ
புண்டி யுதவாதா ளில்வாழ்பே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

இ-ள். எறி என்று - (கணவனி சற்றடித்தபோது என்னை) வாளால் வீசென்று சொல்லி, எதிர் நிற்பாள் - எதிரில் சலியாமல் நிற்குமியல்பினள், கூற்றம் - (கொண்டவனுக்கு இறுதியைத்தரும்) யமனும், சிறுகாலை - விடியற்காலத்தில், அட்டில் - மடைப்பள்ளியில், புகாதாள் - (சமையற்றொழில் செய்ய) புகாதவள், அரும்பிணி - (கணவனுக்கு) மருந்தால் தணியாத நோயாம், அட்டதனை - சமைத்த பொருளை, உண்டி - (கணவனுக்கு) உணவாக, உதவாதாள் - இடாமலுண்பவள், இல்வாழ்பேய் - வீட்டில் வசிக்கின்றபேயாம், இம்மூவர் - இத்தன்மையராகிய மூன்றுபெண்டிர்களும், கொண்டானை - (தம்மை) கொண்ட கணவனை, கொல்லும் படை - உயிர் வருத்தற்குரிய ஆயுதமாவர், எ-று.

பொ-ரை. கணவன் சற்றடித்தபோது என்னை வாளால் வீசென்று சொல்லி எதிரில் சலியாமல் நிற்குமியல்பினள் கொண்டவனுக்கு இறுதியைத் தரும் யமனும்; விடியற்காலத்தில் மடைப்பள்ளியில் சமையற் றொழில்செய்யப் புகாதவள், கணவனுக்கு மருந்தால் தணியாத நோயாம்; சமைத்த பொருளை கணவனுக்கு உணவாக இடாமலுண்பவள் வீட்டில் வசிக்கின்ற பேயாம். இத்தன்மையாகிய மூன்று பெண்டிர்களும் தம்மைக்கொண்ட கணவனை உயிர் வருத்தற்குரிய ஆயுதமாவர் என்பது.

பேயென்றமையால் உதவாதாளென்பதற்கு உதவாமலுண்பவ ளென்பு தரைக்கப்பட்டது. கணவன் அரசனுற் கொலையுண்ண வேண்டுமென்னுங் கருத்தால் எறியென்று நிற்பவளைக் கூற்றம் என்றும், காலமறிந்துணவு தராமைபற்றி நோய் நேருமாதலால் அட்டில் புகாதாளை அரும்பிணி என்றும், கணவன் பசியை நோக்காமையால் உண்டியுதவாதாளைப் பேய் என்றும், மரமுதலியவற்றில் வாழும்பே யோடு இப்பேயிடை வேற்றுமை தோன்ற இல்வாழ் என அடை கொடுத்தும், இம்மூவரால் கொண்டவருயிர் துன்புற்று வருந்தலால் அவரைக் கொல்லும் படை என்றுங் கூறினர். சிறுகாலை என்றது கணவன் உணவுகொள்ளுங் காலத்துக்கு முன் சமைக்குந்தொழில் முற்றுங்காலத்தின் மூற்பங்கை. மூவரென்பதனீற்றில் முற்றும்மை தொகுத்தலாயிற்று. கொண்டான் பன்மையினொருமை வந்த பால் வழுவமைதி. கொல்லல் வருத்தல். அட்டில் ஒரு சொற்றன்மைத்து. இஃது உருவகவுருவகவணி.

The wife that stands and stares at her husband and ask him to strike (her) is *Yama*. *Disease* is she who does not enter

the kitchen (and attend to cooking). *Devil Domestic* is she who cooks and gives no alms. These three are swords to slay their lords. (3)

364. கடியெனக் கேட்டுங் கடியான் வெடிபட
வார்ப்பது கேட்டு மதுதெளியான்—போர்த்தூமோ
ரிற்கொண் டினிதிரூஉ மேமுறுத லென்பவே
கற்கொண் டெறியுந்தவறு.

இ-ள். கடியென - (பூலவர்மணத்தை) கடியென்று சொல்ல, கேட்டும் - (அறிவிலான்) கேட்டிருந்தும், கடியான் - (மணத்தை) கடியாதவனுய், வெடிபட - அச்சமுண்டாம்படி, ஆர்ப்பது - (சாப் பறை தொண்டொண்டொடென) ஒலிப்பதை, கேட்டும் - கேட்டிருந் தும், அது தெளியான் - அவ்வொலிப் பொருளைத் தெளியாதவனுய், போர்த்தும் - அவ்விரண்டையுங் கேட்டபின்னும், ஓர் இல்கொண்டு - ஒருமனையாளைப் பெற்று, இனிது இரூஉம் - கவலையில்லாத இருக் கும், எழுறுதல் - மயக்கத்தை அடைதல், கல்கொண்டு - தான் ஒரு கல்லைப்பெற்று, எறியும் - (தன்மேல்தானே) எறிந்துகொள்ளும், தவறு - குற்றம், என்ப - என்று சொல்வர் அறிவுடையோர். எ - று.

பொ-ரை. பூலவர் மணத்தைக் கடியென்று சொல்ல அறிவி லான் கேட்டிருந்தும் மணத்தைக் கடியாதவனுய் அச்சமுண்டாம்படி சாப்பறை தொண்டொண் டொடென ஒலிப்பதை கேட்டிருந்தும் அவ்வொலிப்பொருளைத் தெளியாதவனுய் அவ்விரண்டையுங் கேட் டபின்னும் ஒருமனையாளைப்பெற்றுக்கவலையில்லாத இருக்கும்மயக்கத் தை அடைதல் தான் ஒரு கல்லைப்பெற்றுத் தன்மேல் தானே எறிந் துகொள்ளும் குற்றம் என்று சொல்வர் அறிவுடையோர் என்பது.

வெடிபட என்றதினுல் ஆர்ப்பதென்பதற்குச் சாப்பறை என்பது வினைமுதலாகு வருவிக்கப்பட்டது. ஒலிக்குமொலி தொண்டொண் டொடென்பது யாக்கை நிலையாமையில் - கூ - ஆம் செய்யுளால் பெறப்பட்டது. எழுறுதல் கற்கொண் டெறியுந்தவறுபோலத் தப் பாமல் தனக்கு நாசத்தைத் தருமென்பது.

Even though he has heard that marriage (is another name for) dread, he dreads it not; he hears the funeral drum, fearful as it is, it gives him no sense. To take a wife and dwell amidst domestic enjoyments, is punishing oneself with a piece of stone. So say the wise. (4)

365. தலையே தவமுயன்று வாழ்த் லொருவர்க்
இடையே யினியார்கட் டங்கல்—கடையே
புணராதென் றெண்ணிப் பொருணசையாற் றம்மை
யுணரார்பின் சென்று நிலை.

இ-ள். ஒருவர்க்கு - ஒருவருக்கு, தவம் - தவவொழுக்கத்தில், முயன்று - முயற்சிசெய்யா நின்று, வாழ்தல் - உயிர் வாழ்தல், தலையே - முதன்மையாகிய செய்கையே, இனியார்கண் - தவஞானங்களால் பெரியராயினரிடத்து, தங்கல் - கூடிவாழ்தல், இடையே - இடையாகிய செய்கையே, புணராது என்று எண்ணி - (பொருள் நம்மிடத்து) சார்தலிலதென்று கருதி, பொருள் நசையால் - பொருளின் விருப்பத்தால், தம்மை - தமது குடிப்பிறப்பு முதலியவற்றை, உணரார்பின் - அறிந்துகொள்ளாத கீழோர்க்குப் பின்னே, சென்று நிலை - போய்நின்று வாழ்தல், கடையே - கடையாகிய செய்கையே, எ-று.

பொ-ரை. ஒருவருக்குத் தவவொழுக்கத்தில் முயற்சி செய்யா நின்று உயிர்வாழ்தல் முதன்மையாகிய செய்கையே. தவ ஞானங்களால் பெரிய ராயினரிடத்துக்கூடிவாழ்தல் இடையாகியசெய்கையே. பொருள் நம்மிடத்துச்சார்தலிலதென்று கருதிப்பொருளின்விருப்பத்தால் தமது குடிப்பிறப்பு முதலியவற்றை அறிந்துகொள்ளாத கீழோர்க்குப் பின்னேபோய் நின்று வாழ்தல் கடையாகிய செய்கையே என்பது.

தம்மையடித்துக் கேட்டார்க்குப் பிறவிக் கடலி லழுந்தாமல் வீடென்னுங் கரையேறுதற்குரிய உறுதிமொழிகளை இனிதுரைத்தல் பற்றி அவரை இனியார் என்றார். எ மூன்றும் பிரிநிலை. முயன்று முயலாநின்றென்பதன் திரிபு. தலைமுதலிய மூன்றும் பண்பாகு பெயர். தன்னிலாம் பயனுகிய தவமுயன்று வாழ்தலில்லாமையால் இனியார் கட்டங்கல் இடையாயிற்று; இனியார்கண் என்பதற்கு இனியகுணமுஞ் செய்கையுமுடைய மனிவியாரிடத்து எனவுரைத்தலுமாம்; அஃதாவது இல்லறம். தம்பொருளாகுபெயர்.

The best thing is a life spent in doing penance. The middle course is to live with dear ones around; the worst thing is to follow those, who understand us not, in a subservient way, thro' desire of wealth thinking that we have not enough. (5)

366. கல்லீக் கழிப்பர் தலையாயார் கல்லலை
துவ்வாச் கழிப்ப ரிடைகள்—கடைக

னினிதுண்ணே மாறப் பெறேம்யா மென்னு
மூனிவிலுற் கண்பா டிலர்.

இ-ள். தலையாயார் - தலையாயினர், கல்லா - (அறிவு நூல்களை), கற்றறியா கின்று, கழிப்பர் - (தம்வாழ்நாளை) போக்குவார், இடை கள் - இடையாயினர், நல்லவை - (நீயவழியில் வராத) இன்பங்களை துவ்வா - அநுபவியா கின்று, கீழிப்பர் - வாழ்நாள் கழிப்பர், கடை கள் - கடையாயினர், யாம் - நாம், இனிது - இன்பத்தை, உண் ணேம் - அநுபவித்திலேம், ஆர் - குறைவற, பெறேம் என்னும் - (பொருள்) பெற்றிலேமென்றுகருதும், மூனிவிலில் - வெறுப்பினல், கண்பாடிலர் - (இரவிலும்) உறங்காதுகவல்வார், எ-று.

போ-ரை. தலையாயினர் அறிவு நூல்களைக் கற்றறியா கின்று தம்வாழ்னாள் போக்குவர். இடையாயினர் நீயவழியில் வராத இன் பங்களை அநுபவியா கின்று வாழ்நாள் கழிப்பர் கடையாயினர் நாம் இன்பத்தை அநுபவித்திலேம் குறைவற பொருள் பெற்றிலே மென் றுகருதும் வெறுப்பினல் இரவிலும் உறங்காது கவல்வார் என்பது.

யாம் தனித்தன்மைப் பன்மை. உண்ணுமையின் சிறுமைதோ ன்ற ஒருமையாக இனிது என்றும், இனி துண்ணுமைக்குக்காரணம் ஆரப்பெருமை யாதலின் அதனை ஈற்றில்வைத்துங் கூறினர். ஆர்த லாவது தாம் தம்மில்முன் குறித்துக் கொண்டவளவு பொருள் நிரம் பல். கண்பாடில னென்பதனல் எப்போதும் மூனி வுடையாராவ ரென்பது பெற்றும்.

The best of men pass their time in learning. The middle sort spend their time in the enjoyment of good things. The lowest class of men cry out "Our food is not good; we have not got our fill" and in angry mood lie sleepless. (6)

367. செந்நெல்லா லாய செழுமூளை மற்றுமச்
செந்நெல்லே யாகி விளைதலா—லந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர
மகனறிவு தந்தை யறிவு.

இ-ள். செந்நெல்லால் ஆய-செந்நெல் விதையினல் மூளைத்த, செழுமூளை - நல்ல முளைகள், மற்றும் - விளையுங்காலத்தும், அச்செந் நெல்லே ஆகி - அச்செந்நெல்லின் விதைகளே ஆக, விளைதலால் - விளைவதினல், அந்நெல் - அச்செந்நெற்பயிர், வயல் நிறையக்காய்க் கும் - வயல் நிரம்பும்படி கதிர்விடுகின்ற, வளவயல் ஊர - வளப்ப

மாகிய வயல்களால் சூழப்பட்ட மருத நிலத்துத்தலைவனே, தந்தை அறிவு ஏ - பிதாவினறிவே, மகனறிவு - மகனிடத்துண்டாம் அறிவு எ - றும்.

பொ-ரை. செந்நெல் விதையினுல் முளைத்த கல்ல மூலைகள் விளையும் நிலத்தும் அச்செந்நெல்லின் விதைகளே ஆக விளைவதினுல் அச்செந்நெற்பயிர் வயல் நிரம்பும்படிக் கதிர்விடுகின்ற வளப்பமாகிய வயல்களால் சூழப்பட்ட மருத நிலத்துத் தலைவனே! பிதாவினறிவே மகனிடத்துண்டாம் அறிவென்பது.

மூலை தொழிலாகு பெயர். ஏ தேற்றம். தந்தையினுடைய இயற்கையறிவின் மகனறிவு வேற்றுமைபடுதலிலதென்பது.

The fertile germ of the red grain in after time grows up and yields the same red grain. O Lord of the village surrounded by fertile fields of ripening crops! Wisdom of the son is the wisdom of the sire. (7)

368. உடைப்பெருஞ் செல்வருஞ் சான்றோருங் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களுங் கீழும்பெருகிக்
கடைக்கா றலைக்கண்ண தாகிக் குடைக்கால்போற்
கீழ்மேலாய் நிற்கு மூலகு.

இ-ள். உடைய பெருஞ் செல்வரும் - தொன்றுதொட்டு உடையதாகிய பெருஞ் செல்வத்தினரும், சான்றோரும் - (கல்வியறிவுகேள்விகளால்) நிறைந்த மேலோரும், கெட்டு - வறியராதலாலும், புடைப்பெண்டிர் மக்களும் - வேசையருடைய புத்திரர்களும், கீழும் - கீழ்மக்களும், பெருகி - செல்வத்தினராதலாலும், குடைக்கால்போல - குடையின் தண்டுபோல, கடைக்கால் - கீழிடத் திருத்தற்குரிய பொருள், தலைக்கண்ணது ஆகி - மேலிடத்திருத்தற்குரிய பொருளாகும்படி, கீழ்மேலாய் நிற்கும் - கீழ்மையுள்ளது மேன்மையுள்ளதாய் மாறும் இயல்பினது, உலகு - இவ்வுலகு, எ-று.

பொ-ரை. தொன்று தொட்டு உடையதாகிய பெருஞ் செல்வத்தினரும் கல்வியறிவு கேள்விகளால் நிறைந்த மேலோரும் வறியராதலாலும் வேசையருடைய புத்திரர்களும் கீழ்மக்களும் செல்வத்தினராதலாலும் குடையின் தண்டுபோலக் கீழிடத்திருத்தற்குரிய பொருள் மேலிடத் திருத்தற்குரிய பொருளாகும்படி கீழ்மையுள்ளது மேன்மையுள்ளதாய் மாறும் இயல்பினது இவ்வுலகு என்பது.

எனவே உலகியற்கை நோக்கிய தமக்குப் பிறந்த அறுதாப்பத்தால் அதனை ஏதித்துக்கூறினர் என்பதாயிற்று. பெருஞ் செல்வத்துக்கு உடைய என்னும் அடைதந்தலைமையால் தொன்றுதொட்டுவந்த தென்பதும் பெற்றும். புலைப்பெண்டிர் பொருள் கொடுப்பார் பக்கல் சாரும்பெண்கள். கெட்டு, பெருகி இரண்டும் காரணப்பொருள்ன ஆய், நிற்குமென்னும் வினைகொண்டன. கடைக்கால் இடம் த் அலீது இடவாகுபெயராய் அவ்விடத்துப் பொருளுச்சாயிற்று.

The wealthy with great possessions and the great have perished, while the sons of prostitutes, and base men multiply in great numbers. The last is the first and like the umbrella's handle this world is upside down. (8)

369. இனியார்த நெஞ்சத்து நோயுரைப்ப வந்நோய்
தணியாத வுள்ள முடையார் - மணிவரன்றி
வீழு மருவி விறன்மலை நன்னாட
வாழ்வின் வரைபாய்த னன்று.

இ-ள். மணிவரன்றி - இரத்தினங்களை வாரிக்கொண்டு, வீழும் அருவி - வீழுமியல்புள்ள அருவி விழுகின்ற, விறல்மலை நல்நாட - வெற்றியமைந்த நல்லகுறிஞ்சி நிலத் தலைவனே, இனியார் (அகத்தும் புறத்தும்) நல்லராயினர், தம் நெஞ்சத்து - (ஏதேனும் ஒரு பொருட் குறையைப்பற்றி) தம் மனத்தித் தோன்றிய, நோய் உரைப்ப - தன் பத்தைச்சொல்ல, அந்நோய் - அத்துன்பத்தை, தணியாத - நீக்குதலில்லாத, உள்ளமுடையார் - வலிய மனமுடைய செல்வர், வாழ்வின் - உயிர்வாழ்தலினும், வரைபாய்தல் - மலைமீதினின்றும் விழுந்திறத்தல், நன்று - நன்மையைத்தருவது, எ-று.

பொ-ரை. இரத்தினங்களை வாரிக்கொண்டு வீழுமியல்புள்ள அருவி விழுகின்ற வெற்றியமைந்த நல்ல குறிஞ்சி நிலத்தலைவனே! அகத்தும் புறத்தும் நல்ல ராயினர் ஏதேனும் ஒரு பொருட்குறையைப்பற்றித் தம் மனத்துத்தோன்றிய தன்பத்தைச்சொல்ல அத்துன்பத்தை நீக்குதலில்லாத வலியமனமுடைய செல்வர் உயிர் வாழ்தலினும் மலைமீதினின்றும் விழுந்திறத்தல் நன்மையைத் தருவது என்பது.

அந்நோயைத் தணிக்கவல்லவர் செல்வரே ஆதலாலும், தணியாத என்ற குறிப்பாலும் உள்ள முடையாரென்றது செல்வனை. தணியாமல் வாழ்தலின் பழிபாவங்கள் பெருகலால் வரைபாய்தல் நன்றாயிற்று.

Lord of the fertile land of mighty hills wherefrom the streams descend sweeping along gems! It is better to jump down a precipice than live with a mind not disposed to relieve the pain of the dear ones who give out what they suffer from. (9)

370. புதுப்புனலும் பூங்குழையார் நட்பு மிரண்டும்
விதுப்பற நாடின் வேறில்ல - புதுப்புன லு
மாரியறவே யுறுமே யவரன்பும்
வாரி யறவே யறும்.

இ-ள். புதுப்புனலும் - புது நீர்ப்பெருக்கும், பூங்குழையார் நட்பும் - பொலிவாகிய காதணியையணிந்த வேசியரது அன்பும், இரண்டும் - ஆகிய இரண்டும், விதுப்பு அற - (ஒன்றினிடத்தும்) விருப்பமில்லாமல், நாடின் - ஆராய்ந்தால், வேறு அல்ல - (ஒன்றிலொன்று) வேறுபடுவன அல்ல, புதுப்புனலும் - புதுநீர்ப் பெருக்கும், மாரி அறவே அறும் - மழை நீங்கவே நீங்கும், அவர் அன்பும் - அவ்வேசியர் (பிறர்பால்வைத்த) அன்பும், வாரி அறவே அறும் - (பொருளின்) வருவாய் நீங்கவே நீங்கும், எ - று.

போ-ரை. புது நீர்ப் பெருக்கும், பொலிவாகிய காதணியையணிந்த வேசியரது அன்பும் ஆகிய இரண்டும் ஒன்றினிடத்தும் விருப்பமில்லாமல் ஆராய்ந்தால் ஒன்றிலொன்று வேறுபடுவன அல்ல. புது நீர்ப் பெருக்கும் மழை நீங்கவே நீங்கும்; அவ்வேசியர் பிறர்பால் வைத்த அன்பும் பொருளின் வருவாய் நீங்கவே நீங்கும் என்பது.

இரண்டு பொருளில் ஒன்றினிடத்தில் விருப்பம் வைத்தால் அதன்குறைந் தோன்றுதாதலால் விதுப்பற என்றும், அவாவச்செய்வதில் ஆடல், பாடல் இரண்டினும் அழகே சிறந்ததாதலால் பூங்குழையார் என்றும் கூறினர். அறவே என்னும் இரண்டி லவும் தேற்ற மாகலின் அற்றபின் பெருக்கும், அன்பும் சிறிதுந்தோன்று என்பதாயிற்று, இச்செய்யுளை இங்குவைத்தது இனிவரும் அதிகாரம் இன்னதெனத் தோற்றுவாய் செய்தற்குப்போலும்.

If calmly examined there is no difference between the freshes and the love of those wantons adorned with jewels. The one fails when the rains stop away and the other ceases when income ceases. (10)

oil is out and the harlot's love ceases when the lavishing hand has spent its wealth. (1)

372. அங்கோட்டகலல்குல் லாயிழையா ணம்மொடு [டின்
செங்கோடு பாய்துமே யென்றுண்மன்—செங்கோட்
மேற்காண மின்மையான் மேவா தொழிந்தாளே
காற்காமேனுய் காட்டிக் கலுழ்ந்து.

அங்கோடு அகல்அல்குல் ஆயிழையாள் - அழகிய பக்கமுடைய அகன்ற அல்குலையும் ஆய்ந்த வாபரணங்களையுமுடைய பொதுமகள், நம்மொடு - நம்முடன், செங்கோடு பாய்துமே மன் என்றுள் - செம்மையாகிய மலைச்சிகரத்தினின்றும் உடனேறி வீழ்வேமென்று றுதிமொழி கூறினுள், காணமின்மையால் - கையிற்பணமின்மையான், செங்கோட்டின்மேல் - செம்மையாகிய மலைச்சிகரத்தில், மேவாது - நம்மொடு சேராமல், கால்கால்நோய் - காலின்கண் வாதநோயினை, காட்டிக்கலுழ்ந்து - காட்டிக்கலங்கிப் புலம்பி, ஒழிந்தாள் நீங்கினின்றுள்—எ-று.

பொ-ரை. அழகிய பக்கமுடைய அகன்ற அல்குலையும் ஆய்ந்த வாபரணங்களையுமுடைய பொதுமகள் நம்முடன் செம்மையாகிய மலைச்சிகரத்தினின்றும் உடனேறி வீழ்வேமென்றுறுதிமொழி கூறினுள். கையிற் பணமின்மையால் செம்மையாகிய மலைச்சிகரத்தில் நம்மொடு சேராமல் காலின்கண் வாதநோயினைக் காட்டிக் கலங்கிப் புலம்பி நீங்கினின்றுள் என்பது.

பாய்தும் - தம்மீற்றுத்தன்மைப் பன்மை, அதுவே எதிர்காலங் காட்டிநின்றது. காணம் - பொருள்; இதனைக் "கையிலென்று காணமில்லை" எனப் பிறரும் கூறுதல் காண்க. கால் - ஆருபெயர், பொருள்கொடுத்து வந்தவழி மலைச்சிகரத்தினின்றும் வீழினுமுடன் வீழ்வேமென்றுறுதிமொழி கூறி வந்த அவளே பொருணீங்கிய வழிக் காலிற் காலுவெனக் கூறிப்புலம்பியொழிதலின் அவர் நட்புக்காணத்தினுன்றி வேறின்றென்ப துணர்த்தி நின்றது. கலுழ்தல் என்பது பொய் யழுகையை.

The woman of enticing beauty adorned with choice jewels said, "I will jump with you down the precepice," but on the point of doing so, because I had no money, she weeping and pointing to her swollen foot, withdrew and left me alone. (2)

373. அங்கண் விசும்பி னமரர் தொழுப்படுஞ்
செங்கண்மா லாயினு மாகமற்—றங்கைக்

il is out and the harlot's love ceases when the lavishing hand as spent its wealth. (1)

372. அங்கோட்டகலல்குல் லாயிழையா ணம்மொடு [டின்
செங்கோடு பாய்துமே யென்றுண்மன்—செங்கோட்
மேற்காண மின்மையான் மேவா தொழிந்தாளே
காற்காணெனுங் காட்டிக் கலுழ்ந்து.

அங்கோடு அகல்அல்குல் ஆயிழையாள் - அழகிய பக்கமுடைய அகன்ற அல்குலையும் ஆய்ந்த வாபரணங்களையுமுடைய பொதுமகள், நம்மொடு - நம்முடன், செங்கோடு பாய்துமே மன் என்றுள் - செம்மையாகிய மலைச்சிகரத்தினின்றும் உடனேறி வீழ்வேமென்று றுதிமொழி கூறினாள், காணமின்மையால் - கையிற்பணமின்மை பான், செங்கோட்டின்மேல் - செம்மையாகிய மலைச்சிகரத்தில், மே வாது - நம்மொடு சேராமல், கால்கால்நோய் - காலின்கண் வாதநோ யினை, காட்டிக்கலுழ்ந்து - காட்டிக்கலங்கிப் புலம்பி, ஒழிந்தாள் - நீங்கினாள்—எ-று.

பொ-ரை. அழகிய பக்கமுடைய அகன்ற அல்குலையும் ஆய்ந்த வாபரணங்களையுமுடைய பொதுமகள் நம்முடன் செம்மையாகிய மலைச்சிகரத்தினின்றும் உடனேறி வீழ்வேமென்றுறுதிமொழி கூறினாள். கையிற் பணமின்மையால் செம்மையாகிய மலைச்சிகரத்தில் நம்மொடு சேராமல் காலின்கண் வாதநோயினைக் காட்டிக் கலங்கிப் புலம்பி நீங்கினாள் என்பது.

பாய்தும் - தும்மீற்றுத்தன்மைப் பன்மை, அதுவே எதிர்காலங் காட்டிநின்றது. காணம் - பொருள்; இதனைக்"கையிலென்று காண மில்லை" எனப் பிறரும் கூறுதல் காண்க. கால் - ஆகுபெயர். பொருள்கொடுத்து வந்தவழி மலைச்சிகரத்தினின்றும் வீழினுமுடன் வீழ்வேமென்றுறுதிமொழி கூறி வந்த அவளே பொருணீங்கிய வ்ழிக் காலிற் காணெனக் கூறிப்புலம்பியொழிதலின் அவர் கட்புக்காண த்தினின்றி வேறின்றென்ப துணர்த்தி நின்றது. கலுழ்தல் என்பது பொய் யழுகையை.

The woman of enticing beauty adorned with choice jewels said, "I will jump with you down the precepice," but on the point of doing so, because I had no money, she weeping and pointing to her swollen foot, withdrew and left me alone. (2)

373. அங்கண் விசும்பி னமரர் தொழும்படிஞ்
செங்கண்மா லாயினு மாகமற்—றங்கைக்

கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளிர் வண்ணர்
விடுப்பர்தங் கையாற் றொழுது.

அங்கண் விசும்பின் - அழகிய இடமகன்ற விண்ணுலகத்துள்ள, அமரர் தொழப்படும் - தேவரால் வணங்கப்படும், செங்கண்மரல் ஆயினுமாக - தாமரைக்கண்ணனுகிய கரியமாலாயினுமாகுக, தங்கைகொடுப்பது ஒன்று இல்லாரை - தங்கையாற் கொடுக்கப்படும் பொருளொன்றில்லாதாரை, கொய்தளிர் அன்னர் - கொய்தற்குரிய தளிர் போன்ற மேனியையுடைய பொதுமகளிர், தம்கையால் - தமதுகையான், தொழுது - கும்பிட்டு, விடுப்பர் - விடுப்பார்கள்,—எ-று.

பொ-ரை. அழகிய இடமகன்ற விண்ணுலகத்துள்ள தேவரால் வணங்கப்படும் திருமாலைக் கண்ணனுகிய கரியமாலாயினுமாகுக, தங்கையாற் கொடுக்கப்படும் பொருளொன்றில்லாதாரைக் கொய்தற்குரிய தளிர்போன்ற மேனியையுடைய பொதுமகளிர் தமதுகையாற் கும்பிட்டு விடுப்பார்கள் என்பது.

பொதுமகளிர் பொருளொன்றனையே கருதி நட்பாங்கன்மையெய்துவதல்லது பொருள்கொடாதான் செங்கண்மாலே யாயினுமவனை விழையாரென வுணர்த்தினர். கொய்தளிர் - வினைத்தொகை. ஆக வியங்கோள் வினைமுற்று. செங்கண் என்றது புருடவிலக்கணத்தினை யுணர்த்தி நின்றது. ஒன்று - ஆகுபெயர். இல்லார் குறிப்புவினையாலணையும் பெயர். அமரரென்பதுசாகாதாரென்பதுஇந்திரனிலக்கணை. ஆயினுமென்பதுயர்வு சிறப்பும்மை.

Let him be the god Vishnu worshipped by the Devas of the heaven, if in the hand he brings no gold, the women (harlots) tender as the buds culled out, will dismiss him, bowing low with folded hands. (3)

374. ஆணமி னெஞ்சத் தணிநீலக் கண்ணுர்க்குக்
காண மிலாதார் கடிவினையர்—காணவே
செக்கூர்ந்து கொண்டார்ருஞ் செய்த பொருளுடையா
ரக்காரு மன்னுரவர்க்கு.

இ-ள். ஆணமிற் நெஞ்சத்து - அன்பு நீங்கிய மனத்தினையுடைய, அணிநீலக்கண்ணுர்க்கு - அழகிய நீலமலர்போன்ற கண்ணையுடைய பொதுமகளிர்க்கு, காணமில்லாதார் - பொருளில்லாதார், கடிவினையர் - விடம்போற் கொடியராவார், காண - ஆராயுமிடத்து,

செக்கூர்ந்தாராயினும் - செக்கூர்ந்து பொருளீட்டினராயினும், செ
தம் பொருள் உடையார் - ஈட்டிய பொருளையுடையார், அவர்க்கு
நக்கானமன்னர் - அவர்க்குச் சருக்கரையைப் போன்றினியராவர். எ-று.

பொ-ரை. அன்பு நீங்கிய மனதையுடைய அழகிய நீலம்போன்றகண்ணையுடைய பொதுமகளிர்க்குப் பொருளில்லாதார்விடம் போற் கொடியராவர். ஆராயுமிடத்திச் செக்கூர்ந்து பொருளீட்டினராயினும் ஈட்டிய பொருளையுடையார் அவர்க்குச் சருக்கரையைப் போன்றினியராவர் என்பது.

செய்த பொருளென்றது ஈட்டியபொருளை. பொதுமகளிர் கைப் பொருளே யல்லது குலநல முதலிய வேண்டாரென்பார் செக்கூர்ந்தாராயினும் என்றார். செக்கூர்ந்தார் பொருளுதவியவழி யக்காரமென்றும், பொருளில்லா வழிக் கடுவென்று முவமை முகத்தார் கூறினார். அக்காரம் - சருக்கரை; இதனை "அக்காரவடிசில்" எனினும் வழக்கானுமுணர்க. உம்மை இழிவுசிறப்பு. காண மென்பதற்கு மேற் கூறினும். காண காரண காரியமில்லாதுவந்த செயவெனெச்சம். நீலமாகுபெயர். ஆணம் - அன்பு.

To the heartless and affectionless harlots whose eyes are as beauteous as blue water-lilies, those who have no wealth are as poison. Even those who were engaged in the oil press, if they have wealth, are as sugar to them. (4)

375. பாம்பிற் கொருதலை காட்டி யொருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டு மாங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்னர் வெள்ளறிவி னோர்.

இள். பாம்பிற்கு ஒரு தலை காட்டி - பாம்பினுக்கு ஒரு புறங் காட்டி, ஒருதலை - ஒருபுறம், தேன்படு தெண்கயத்து மீன்காட்டும் - இனிமையாகிய தெண்ணீர்க்கயத்து மீனுக்குக் காட்டும், மலங்கன்ன - விலாங்கு மீனைத்த, செய்கைமகளிர் தோள்சேர்வார் - செய்கையையுடைய பொதுமகளிர் தோளைத் தோய்பவர், விலங்கன்ன வெள்ளறிவினர் - விலங்கினையொத்த அறிவிலரதார், ஏ-று.

பொ-ரை. பாம்பினுக்கு ஒரு புறங்காட்டி ஒருபுறத் இனிமையாகிய தெண்ணீர்க்கயத்து மீனுக்குக் காட்டும் விலாங்கு மீனைத்த செய்கையையுடைய பொதுமகளிர் தோளைத் தோய்பவர் விலங்கினையொத்த அறிவிலாதார் என்பது.

வெள்ளறிவு என்புழி வெண்மை யுள்ளீடின்மை யுணர்த்திநின்றது. தன்னைப் பற்றுவாரும் பாம்பிற்குத் தலையையும் தனக் குண்வரு மீனுக்கு வாலையுங் காட்டித் தானொன்றானும் பற்றப்படாத் நிலையைக் காட்டலால் ஆசையொன்றுனே மயக்கும் பொதுமகளிர்க் கதனை யுவமைகூறினர். மீன் காட்டும் என்புழி நான்காம் வேற்றுமை யுருபு தொகுத்தல் பெற்றது; 'ஐந்தவித்தானுற்ற' வென்புழிப்போல. ஆங்கு - அசை. வெள்ளறிவு மங்கை வழக்கு.'

The stupid people who are as beasts seek the embraces of the harlots who are like the *eel* which shows its one end to the snake and the other to the fish in the sweet clear lake (it is of a deceitful nature.) (5)

376. பொத்தநூற் கல்லும் புணர்பிரியா வன்றிலும்போ
னித்தலு நம்மைப் பிரியல மென்றுரைத்த [ஞ்சே
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினு ணன்னெ
நிற்றியோ போதியோ நீ.

இ-ள். பொத்தநூற் கல்லும் - நூலொடு தொளைத்த மணியும், புணர்பிரியா வன்றிலும்போல் - கூடியிருப்பது நீங்காத வன்றிற் பறவையும் போன்று, நித்தலும் நம்மை பிரியலம்-என்றும் நம்மைப் பிரிதல் செய்யேம், என்றுரைத்த - என்று கூறிய, பொற்றொடியும் - பொன்னாற் செய்யப்பட்ட வளையலையுடைய பொதுமகளும், போர்த் தகர்க்கோடு ஆயினுள் - போர்த்தொழில் செய்யும் யாட்டின் கொம்பு போன்ற குண்முடையள்ளாயினுள், நல் நெஞ்சே - நல்ல நெஞ்சமே, நீ நிற்றியோ போதியோ - நீயவள்பால் நிற்கின்றனையோ என்பால் வருகின்றனையோசொல். எ-று.

போ-ரை. நூலொடு தொளைத்த மணியும் கூடியிருப்பது நீங்காத வன்றிற் புறவையும் போன்று என்றும் நம்மைப் பிரிதல் செய்யேம் என்றுகூறியே பொன்னாற் செய்யப்பட்ட வளையலையுடைய பொதுமகளும் போர்த்தொழில் செய்யும் யாட்டின் கொம்புபோன்ற குண்முடையளாயினுள். நல்லமனமே! நீ யவள்பால் நிற்கின்றனையோ? என்பால் வருகின்றனையோ? சொல். என்பது.

புணர்பிரியாமையென்றதுகூடியிருப்பதுநீங்காமையை.பொத்தலில் தொளைத்தில், கல்லுமன்றிலுமெண்ணும்மை, நித்தலுமென்ற உம்மை முற்று. நாம் நணியும், நீண் பெண் அன்றிலும்போல உம்மைப் பிரியேமென்றுவமைமுகத்தாற்கூறியதுஅவர் சொன்மாத்திரையாற் கூறி

யையுணர்த்தற்கு. பொற்றொடி அன்மொழித்தொகை. பேர்த்தகர்க் கோடாயிஞள் என்றார்; நூற்கல்லு மன்றிலும்பேர்ன்றவள் பொருளற் றவழி நீங்கலின். கோடிணைப்போலுந் திரிந்த குணமுடையளென்ப தணர்நிற்றலின். ஓவிரண்டும் விஞ. நிற்றி, போதி என்பன நிகழ்கா லங்காட்டும்வினை முற்றுகள்.

The damsel wearing golden bangles who said "I will stick on like the beads strung together in a string and the inseparable *Krounja* birds and never part from you,' has now become like the horns of a fighting ram. Dear heart! Dost thou linger still or wilt thou go? (6)

377. ஆமாபோ னக்கி யவர்கைப் பொருள்கொண்டு
சேமாபோற் குப்புறூஉஞ் சில்லெக்க ணன்பினே
யேமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே
தாமாம் பலரா னகை.

இ - ள். ஆமாபோல் நக்கி - காட்டுப்பசுப்போல் நக்கி, அவர் கைப்பொருள் கொண்டு - தம்மை யிணைந்தார் கைப்பொருள் கவர்ந்து கொண்டு, சேமாபோல் குப்புறும் - எருத்தைப்போல் குப்புறுகின்ற, சில்லெக்கண் அன்பினை - பரத்தை மாட்டன்றே, ஏமாந் தெமதென் றிருந்தார் - மயக்கமடைந்து எமக்குரிய தென்றிருந்தவர், தாம்-தாம், பலரால் நகைபெறுப - பலராலு நகைக்கப்படுவர், எ-று.

பொ-ரை. காட்டுப் பசுவைப்போல் நக்கி தம்மை யிணைந்தார் கைப்பொருள் கவர்ந்துகொண்டு எருதைப்போல் குப்புறுகின்ற பர த்தை மாட்டன்மை மயக்கமடைந்து எமக்குரியதென் றிருந்தவர் தாம் பலராலு நகைக்கப்படுவர் என்பது.

நக்கல் ஈண்டுப்பரிசித்தலே, ஆமா - காட்டுப்பசு. சேமா இருபெய ரொட்டுப் பண்புத்தொகை. சில்லை - சிள்வண்டினை, சில்லெக்கண் - அன்மொழித்தொகை; வண்டுபோன்ற கண்ணுடையா ளென்பது. வண்டு பூவிடைத் தேனிருக்கு மிடந்தொறுஞ் சென்று கவர்ந்து கொண்டு நீங்குதல்போற் காணமுடையாரிடத் தெல்லாஞ் சென்று நாடுங்கண்ணளென்பது குறிப்பாற் காட்டினின்றது. கண்ணென்ப தண்ணுட்டத்தை. எமாவென்பது ஒரு சொல்; செம்மா முதலியன போல; இவ்வாறே கூறுவர் பரிமேலழகரும். பெறுப வென்பது பலர் பால் வினைமுற்று. ஆமா வின்புற நக்கல்போன்று இவரும் ஆவிங்கண முதலியவற்றான் அவர் கைப்பொருளைக் கவர்தலின் ஆமாபோனக்கி என்றுவமை முகத்தாற் கூறினர். ஆம், எ, அசைநிலை.

"Those who reckon upon the devoted love of the harlot, who are like the wild cow which licks the hand (and draws in the blood) and then like the bull bounds away, will be subject to the ridicule of many. (7)"

378. ஏமாந்த போழ்தின் னினியார்போன் றின்னாராய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடா மூரேற்றிற்
றண்ணெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்துமென் பார்.

இ - ள். ஏமாந்த போழ்தின் இனியராய் - காமுகர்பாற் கைப்பொருள் கவர்ந்து தாமகிழ்ச்சி யெய்தியபொழுது, இனியார்போன்று - அவர்க்கினியராய்கைப்பொருளறக்கொண்டு, காம்ஆர்ந்தபோதே - தாம் பொருளா னிரம்பியபெழுதே, இன்னாராய் - அவர்க்கின்னாதாராய், தகர்க்கோடாம் - யாட்டின் கோட்டினைப்போன்று திருகுதலே யுடையராகிய, மான் நோக்கின் - மான்போலும் பார்வையினையுடையராய், தம் நெறிப் பெண்டிர் தடமுலை - தமக்குரிய களவின் வழியிற் றப்பாது நிற்கும் பரத்தையர் பெரியமுலையை, செந்நெறிச் சேர்துமென் பார் - செம்மையாகிய வீட்டு நெறியினைச் சேர்வேமென்பார், சேரார் - அடையக் கருதார், எ-று.

போ-ரை. காமுகர்பாற் கைப்பொருள் கவர்ந்து தாமகிழ்ச்சி யெய்தியபொழுது அவர்க் கினியராய் கைப்பொருளறக்கொண்டு தாம் பெருளா னிரம்பியபொழுதே அவர்க்கின்னாதாராய் யாட்டின் கோட்டினைப்போன்று திருகுதலே யுடையராகிய மான்போலும் பார்வையினையுடையராய்த் தமக்குரிய களவின் வழியிற் றப்பாது நிற்கும் பரத்தையர் பெரிய முலையைச் செம்மையாகிய வீட்டு நெறியினைச் சேர்வேமென்பார் அடையக் கருதார் என்பது.

ஆர்தல் - நிறைதல்; காமுகராவார் மயங்கிய வழி அவர் கைப்பொருளைக் கவருஞ் சிந்தையராகலின் ஏமாந்தபோதினினியராய்என்றார். அவர் தங் னிகடபொருளற் றிவர் நிரம்பியவழி யவர்பால் வெறுப்பெய்துவராகலிற் பரத்தையரைத் தகர்க்கோட்டிற் குவமை கூறினார். தகர்க்கோட்டிற் குவமை கூறல் அது மடவார் அவர் நம்மொடு மாறுபட்டிருத்தலே. சேர்தும் தாம்மீற்றுத்தன்மைப் பன்மை, சேர்துமென்பார் தன்னையொடு படர்க்கை வந்த வழுவமைதி. தன்நெறிப் பெண்டிர் - தன்நெறிச் சென்றவழிச் செல்பவர். செந்நெறி ஞான்றது சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தாய் அந்தமி லின்பத்தீழிலில் வீட்டு நெறியை.

Those who desire to walk in the way of rectitude never care for the embrace of the fawn-eyed fascinating harlots who are in a goodmood when they receive gifts and when once their expectations are realized, are like the horns of the fighting ram. (8)

379. ஊறுசெய் நெஞ்சந் தமமுள்ளடக்கி யொண்ணுத
தேற மொழிந்த மொழிகேட்டுத்—தேறி [லார்
யெமரென்று கொள்வாருங் கொள்பவே யார்க்குந்
தமரல்லர் தம்முடம்பி னர்.

இ-ள். ஒள்ளுதலார் - ஒள்ளிய நெற்றியை யுடையார், ஊறு செய் நெஞ்சம் - துன்பத்தைச் செய்யுங் கருத்தை, தம்முள் அடக்கி-தம்முட் புலப்படா தடக்கிக்கொண்டு, தேற - காமுகர் தெளிய, மொழிந்த மொழி கேட்டு - கூறிய சொல்லைச் செவியிற் கேட்டு, தேறி - அதனை யுண்மையாகத் தெளிந்து, எமரென்று கொள்வாரும் - எம்மவரென்று கொள்பவரும், கொள்ப-கொள்ளாநிற்பர், தம் முடம்பினர் - தம்முடம்பினைத் தமக்கே யுரியதாகக் கருது மியல்பினை யுடையார், யார்க்கும் தமரல்லர் - யாவர்க்குஞ் சுற்றத்தா ரல்லர், எ - று.

பொ-ரை. ஒள்ளிய நெற்றியையுடையார் துன்பத்தைச் செய்யுங் கருத்தைத் தம்முட் புலப்படா தடக்கிக்கொண்டு காமுகர் தெளியக் கூறிய சொல்லைச் செவியிற் கேட்டு அதனை யுண்மையாகத் தெளிந்து எம்மவரென்று கொள்பவரும் கொள்ளாநிற்பர். தம்முடம்பினைத் தமக்கே யுரியதாகக் கருது மியல்பினையுடையார் யாவர்க்குஞ் சுற்றத்தாரல்லர் என்பது.

பரத்தையர் தம் கருத்தைப் பிறர்க்குப் புலப்படாவண்ண மறைத்துத் தேறமொழிந்த மொழி கேட்டுத் தேறி யெமரென்று கொள்வாருங் கொள்வார் யார்க்குந் தமரல்ல ரவ்வாறல்லாரிகலின் தம்முடம்பினர் என்றார். உம்மை இரண்டின் முன்னது முற்று, பின்னது பெயர்வு சிறப்பு.

Let those who take the wantons as their own do so believing their words uttered with a view to inspire faith by the bright-browed damsels who keep hidden their wicked thought that lurks in their heart. Such people will not be of any use to their relations and will care for themselves. (9)

380. உள்ள மொருவ னுழையதா வொண்ணுதலார்
கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாங்—தெள்ளி
யறிந்த விடத்து மறியாராம் பாவஞ்
செறிந்த வுடம்பி னவர்.

இ-ள். ஒள் நுதலார் - ஒள்ளிய நெற்றியினை யுடையார், உள்ளமொருவ னுழையதாக - தம்மனம்பிற னொருவனிடத்ததாக, கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாம் - களவினு லன்பினை யுடையரைப்போற் செய்யு மெண்ண மனைத்தும், தெள்ளி யறிந்தவிடத்தும்-ஆராய்ந் தறிந்தபோழ்தும், பாவம் செறிந்த வுடம்பினவரறியார் - தீவினைச்செய னிரம்பிய யாக்கையை யுடையார் அறியமாட்டார், எ - று.

பொ-ரை. ஒள்ளிய நெற்றியினையுடையார் தம் மனம் பிறனொருவனிடத்ததாகக் களவினு லன்பினை யுடையரைப்போற் செய்யு மெண்ண மனைத்தும் ஆராய்ந் தறிந்தபோதும் தீவினைச்செய னிரம்பிய யாக்கையை யுடையார் அறியமாட்டார் என்பது.

இருமனப் பெண்டிராகலின் உள்ளமொருவ னுழையதா என்றும், அவர் செய்யும் பொய்யன்பா னறியமாட்டாமையிற் கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாம் என்றும், பாவஞ் செறிந்த வுடம்பினவராற் காண்பதரிதாகலின் அறியார்என்றுங் கூறினார். கள்ளத்தாற் செய்யுங் கருத்தென்பது பொய்யாகியு மூகமனை. கருத்தெல்லாம் ஒருமையிற் பன்மை வந்த வழுவமைதி. உம்மை சிறப்புணராநின்றது. உழையதாக வென்புழி ஈறு தொகுத்தல்பெற்றது. உள்ளமாருபெயர். பாவமென்றது தீவினையை. உடம்பினவ ரென்புழி உடம்புடையாரென் பதுமன்றி உடம்பினையுடைய வவரெனக் கொள்ளினு மிழுக்காது.

The harlot's mind is fixed on one, but they trick and deceive many (saying for the time being) that their love is centred on the one individual, Even after knowing their wicked intentions, they whose bodies are full of sin, do not recognize this. (10)

Chapter XXXIX—Chaste women.

39-ம் அதிகாரம்: கற்புடை மகளிர்.

கற்பாவது கணவன் சொல்வழி நிற்றல்; அது நாணமடமச்சம் பியிர்ப்பு முதலாயினவற்றிற் பொதுமகளிர் நலந்துய்த்தல் வேதநூற் பிராமண மன்றெனக்கூறி இவ்வதிகாரத்தான் மண

ஞ்செய்துகொண்ட குலமகளோடில்வாழ்க்கை செய்தல் அறநூற். பிர மாணம் என்பதுணர்த்துகின்றமையின் மேலையதிகாரத்தோ டியை புடைமை யுணர்க.

381. அரும்பெற்றற் கற்பி னயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும்—விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணு
நறுநுதலா ணன்மைத் துணை.

இ-ள். அரும்பெறல் கற்பின் - அரிய பெறுதலையுடைய கற் பின்கண், அயிராணியன்ன பெரும்பெயர் பெண்டிர் எனினும் - இந் திராணியை யொத்த பெரிய இசையினையுடைய மகளிரேயாயினும், விரும்பி பெறு நசையால் - தன்னை விழைய எண்ணிய ஆசையான், பின்நிற்பார் இன்மையே - தம்பின்னே நின்றிரப்புரை கூறுமாடவரி ன்மையையே, பேணு நறுநுதலாள் - காக்கு நன்மையாகிய நெற்றி யினையுடைய பெண்ணே, நன்மைத்துணை - தன்னைக்கொண்ட கண வனுக்கு விழுமியதோர் துணையாம், எ-று.

பொ-ரை. அரிய பெறுதலையுடைய கற்பின்கண் இந்திராணி யையொத்த பெரிய இசையினையுடைய மகளிரேயாயினும் தன்னை விழைய எண்ணிய ஆசையான் தம்பின்னே நின்றிரப்புரை கூறுமா டவரின்மையையே காக்குநன்மையாகிய நெற்றியினையுடைய பெண் ணே, தன்னைக்கொண்ட கணவனுக்கு விழுமியதோர் துணையாம் என்பது.

இரப்புரை கூறுமாடவரின்மையைக் காத்தலாவது தன்னை யாடையணி முதலியவற்றிற் கோலஞ்செய்து கோடலே. பெறலரு மைனக்கொண்டுரைப்பாரு மூளர். அரும் பெறலென்பதற் கிவ்வாறே பொருள் கூறினார் பேராசிரியரும் 'அன்னளரும்பெற லின்னுயி ரென்னுந் திருக்கோலையாருக்கென்க. அயிராணியை யுவமை கூறினார் நகுஷன் இந்திரனைகவந்து விழையவந்தழியுஞ் சாபவுதத்தனுக்காந் திருந்த இந்திரனேயென்றி விழையாமையானும் வானவர்மகளிரிற் சிறந்தாளாகலானுமென்க. அவ்விந்திராணியே சூழ்ச்சிகொண்டேழு முனிவர் சுமக்குஞ் சிவிகையினிவர்ந்து வருவனேவ்யான் விழைவதெல் லாம் கூறியவன் சிவிகையூர்ந்து வந்தழி முற்சுமக்கு முதுகீழ்குறைவு டைய மூற்றித்துறந்த குறுமுனிவனைப் பார்த்தளீரெனச் சீறிக்கப்பட் டமையாற் றன்னை காடி நிற்பாரின்மையே. யவள் கணவனுக்கு இன்னிலை நிகழ்த்தற்குரிய துணையாக விங்ஙனங் கூறினார். உம்மை சிறப்பு. பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற்றொக்கது.

Though women are as great as *Ayirani* in the rare gift of chastity, absence of men around about them enamoured of their charms will tend to the good of those of fragrant brow who guard themselves. (1)

382. குடநீரட் டெண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறுக் கொள்ளு மடமொழி
மாதர் மனமாட்சி யாள்.

இ-ள். குடநீரட்டெண்ணு மிடுக்கண்பொழுதும் - ஒருகுடத்து நீரைக்காய்ச்சி யுண்ணும் வறுமைப்பொழுதினும், கடனீரறவுண்ணும் கேளிர்வரினும் - கடனீரை வற்றச்செய்தாலொத்த சுற்றத்தவர் வந்த காலத்தும், கடன் நீர்மை - கடமையாகிய தன்மையை, கையாறு ஆக்கொள்ளும்-ஒழுக்க நெறியேயாகக் கொள்ளாநிற்கும், மடமொழி மாதர் மனமாட்சியாள் - மென்மைத் தன்மையையுடைய சொல்லே யுடைய பெண்ணே இல்வாழ்க்கைக்குரிய மாட்சிமையினையுடைய குணமுடையாள் என்று.

பொ-ரை. ஒரு குடத்து நீரைக்காய்ச்சி யுண்ணும் வறுமைப் பொழுதினும் கடனீரை வற்றச்செய்தாலொத்த சுற்றத்தவர் வந்த காலத்தும் கடமையாகிய தன்மையை ஒழுக்கநெறியேயாகக்கொள்ளா நிற்கும் மென்மைத்தன்மையையுடைய சொல்லேயுடைய பெண்ணே இல்வாழ்க்கைக்குரிய மாட்சிமையினையுடைய குணமுடையாள் என்பது.

மாதர் என்பது குற்றியலுகரவீறு அர்போலி பெற்றது. பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற் றொக்கது. கையாறுக என்புழியும் விகுதி அகரந்தொகுத்தல் பெற்றது. பொழுது மென்புழி உம்மை இழிவு சிறப்பு. கேளிர் வரினுமென்றது அதன் சிறப்புணராநின்றது. கையாறென்றது ஒழுக்கநெறியை. மடமொழியென்றது குதலைச் சொல்லே. சுற்றத்தவர் பலர்வந்துழியும் தன்கணவனிடுக்கட்பட்டிழி யுமுள்ளஞ் சோராது நின்றாளே இன்னிலைக்குரியளென்பதாம். கடனீரென்பது அவர் மிகுதியை யுணர்த்திற்று. குடநீரட்டெண்ணுமென்றது தண்டலைமிண்றித் தண்ணீரை வெந்நீராக்கிக்கொண்டருந்தலே.

When in poor circumstances they cook and eat with one pot of water, if relatives so numerous as to drain the sea were to come, the soft voiced dame, the glory of the home will fulfil her duty in the best way possible. (2)

383. நாலாறு மாறுய் நனிசிறிதா யெப்புறனு
மேலாறு மேலுறை சோரினு—மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பி
னில்லா ளமர்ந்ததே யில்.

இ-ள். நாலாறும் ஆறுய் - நாற்றிசையும் வழியேயாகி, நனிசிறி தாய் - மிகச்சிறிதாகி, எப்புறனும் - எப்புறத்தும், மேலாறு மேலு றை சோரினும் - ஆகாய வழியால் மேழைத்துளி தன் மேற்படினும், மேலாயவல்லாளாய் - மேலாயவறங்களீயாற்றவல்லளாகி, வாழுமூர் தான்வசிக்குமூரவர், தன்புகழும் - தன்னைப்புகழாநிற்கும், மாண்கற் பின் - மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய, இல்லாளமர்ந்ததேயில் - இல்வாழ்க்கைத் துணையொடு வாழ்வதே மனையெனப்படுவது. எ-று.

பொ-ரை. நாற்றிசையும் வழியேயாகி மிகச்சிறிதாகி எப்புறத் தும் ஆகாயவழியால் மழைத்துளி தன்மேற்படினும் மேலாய வறங் களை யாற்றவல்லளாகித் தாம்வசிக்குமூரவர்தன்னைப் புகழாநிற்கும் மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய இல்வாழ்க்கைத் துணையொடுவாழ் வதே மனைஎனப்படுவது என்பது.

பிரிநிலை யேகாரத்தா னங்ஙன மாட்சிமைப்பட்ட கற்பின்மை யினோடு வாழ்தல் இகழ்ச்சியொக்குமென்பது. நாற்றிசையென்புழி முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. நாலாறென்றது நாற்றிசையினை அவை கீழ்மேற்றென்வட லென்பனவாம். மேலென்பது மேலிட மாகிய பண்பாகுபெயராயிற்று. மேலென்பது தன்னுடம்பின்மே லென்க. மேலாயவென்றது அறவொழுக்கமாகிய ஒப்புரவு முதலிய வற்றை. இச்சிறப்பினை யிங்ஙனமாக விதந்தது அவ்வில்லினிகழும் வறுமையை யுணர்த்தற்கு. உறை - நீர்த்துளி. மாண்கற்பு பண்புத் தொகை நிலைத்தொடர். மனை வாய்த்தது கொண்டானது தவமாக லின் தற்புகழு மாண்கற்பினில்லா ளமர்ந்ததேயில் என்றார்.

The poor dwelling house is too small and open on all sides, the rain drips down every where; if the housewife has noble gifts and be so popolular as to be praised by the townsfolk for her modesty, such a wife's abode is a *home* in deed. (3)

384. கட்கினியாள் காதலன் காதல் விகைபுனைவீர்
ளுட்சூடையா ளூர்நா ணியல்பிலு—ளுட்கி
யிடனறிந் தூடி யினிதி னுணரு
மிடமொழி மாதராள் பெண்.

இ - ள். கட்கினியாள் - கண்ணுக்கினிய தோற்ற முடையாளும், காதலன் காதல் வண்டிபுனைவாள் - கொண்ட கணவன்இச்சையின்படி கோலஞ்செய்பவளும், உட்குடையாள் - ஊருக்கு நாண் கொள்ளுமியல்புடையாளும், ஊர் நாணியல்பினுள்-ஊராரைக்கண்டு நாணுங் குணமுடையாளும், உட்கி யிடனறிந்தூடி யினிதுணரும் மாதராள் - காதலனுக்கு அஞ்சிச் செவ்வியறிந்து பிணங்கியப்புலவி நீக்குங் குணமுடைய மென்மைத்தன்மையுள்ள மொழி பேசுபவளுமாகிய பெண்ணே, பெண் - பெண்டன்மை யுடையளெனப் படுவாள், எ - று.

பொ-ரை. கண்ணுக்கினிய தோற்ற முடையாளும் கொண்ட கணவன் இச்சையின்படி கோலஞ் செய்பவளும் ஊருக்கு நாண் கொள்ளுமியல்புடையாளும் ஊராரைக் கண்டு நாணுங் குணமுடையாளும் காதலனுக்கு அஞ்சிச் செவ்வியறிந்து பிணங்கியப் புலவி நீக்குங் குணமுடைய மென்மைத்தன்மையுள்ள மொழி பேசுபவளுமாகிய பெண்ணே, பெண் தன்மை யுடையளெனப்படுவாள் என்பது.

கணவனைக் கண்டவழி யவன் கண்ணுக்கினிய நோக்குடையளாகத் தோன்றுதல் வேண்டுமாதலின் கட்கினியாள் என்றும், அவனைத் தன் கோலத்தால் விழையச் செய்பவளாதல் வேண்டுமாதலின் காதலன் காதல்வகை புனைவாள் என்றும், பிறர் பேசற் கஞ்சுபவளாயிருத்தல் வேண்டுமாதலின் உட்குடையாள் என்றும், எத்தன்மையளாயினும் நாணியிருத்தல் இன்றியமையாக் குணமாதலின் ஊர் நாணியல்பினுள் என்றும், கணவன் கருத்துக்குயாது பிழைநேருமோவென்றஞ்சி யூடியவன் கருணையுறுபோதூடனீங்கி விழைபவளேமாதென்பவாதலின் உணருமாதராள் என்றும், அவளே பெண்ணெனப் படுமாதலின் பெண் என்றுங் கூறினர். இனியாளும், புனைவாளும், உட்குடையாளும், இயல்பினுளும் உணருமாதராளுமெனப் பெண்ணைப் பலமுறை விதந்துகூறியது அவள் இல்வாழ்க்கை நடத்துமியல்புணர்த்தற்கு. இதனை 'ஊடிப்பெறகுவங்கொல்லோ' என்னுங் திருக்குறள்முதலிய மதற்குப் பரிமேலழகர் கூறிய வுரையாலு மறிக.

She must be sweet to the eye and adorned in the way desired by the husband; her conduct must be awe-inspiring and her virtue must strike terror in the village people. She must be submissive, but in fitting time and place, she may be stern with her husband but soon should yield— Such a soft voiced damsel is a *wife*. (4)

385. எஞ்ஞான்று மெங்கணவ ரெந்தோண்மேற் சேர்ந்
தெழினு, மஞ்ஞான்று கண்டேம்போ ணாணுதுமா—
லெஞ்ஞான்றும், மென்னை கெழீஇயினர் கொல்லோ
பொருணசையாற், பன்மார்பு சேர்ந்தெழுகு வார்.

இ - ள். எஞ்ஞான்றும் எங்கண்வர் - எமது கணவர் எக்காலத்தும், எந்தோள்மேல் சேர்ந்து எழினும் - எமது தோள்களில் அணைந்தெழுந்தாலும், அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதும் - அக்காலத்தில் அவரைக் கண்டதேபோல நாணங்கொள்கின்றேம், எஞ்ஞான்றும் பொருணசையால் - எப்பொழுதும் பொருளாசையால், பன்மார்பு சேர்ந்தெழுகுவார் - பலர் மார்பையணைந்து நடக்கும் பரத்தையர், கெழீஇயினர் கொல்லோ - பலரையும் விரும்புமாறு என்னையோ, எ - று.

பொ-ரை. எமது கணவர் எக்காலத்தும் எமது தோள்களில் அணைந்தெழுந்தாலும் அக்காலத்தில் அவரைக்கண்டதேபோல நாணங் கொள்கின்றேம்; எப்பொழுதும் பொருளாசையால் பலர் மார்பையணைந்து நடக்கும் பரத்தையர் பலரையும் விரும்புமாறு என்னையோ என்பது.

தம்மைக் கொண்டவருகலின் எங்கணவர் என்றும், அவரைக் காண்பொழுதெல்லா மச்சமு நாணமு மீதூர்தலால் அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதும் என்றும், பன்மார்புதோயும் பரத்தையரெய்தாமை காரண மென்னையோ வென்பார் என்னை கெழீஇயினர் என்றும், காதல் காரண மிதுவன்றென்பார் பொருணசையால் என்றுங் கூறினர். நாணீதுமென்னுந் தம்மீற்றுத்தன்மை இயல்பிலுன் எதிர்கால நிகழ்காலங் காட்டினமையான் வழுவமைதியின்பாற்கொள்க. பன்மார்பென்றது பல்வாடவரை.

Whenever our husband embraces us, we feel a sort of timid shame as if we saw him for the first time, and the harlots every day through desire of money, submit themselves to the embraces of many; how is this? (5)

386. உள்ளத் துணர்வுடையா ளென்றியா னூலற்றுழி
வள்ளன்மை பூண்டான்க ணெண்பொரு—டெள்ளி,
வாண்மகன் கையி லயில்வா ளனைத்தரோ [ய
நாணுடையாள் பெற்ற நலம்.

இ-ள். வள்ளன்மை பூண்டான்கணுண் .பொருள்—ஈகைத் தன்மைமேற்கொண்டு நடப்பான்கணுள்ள ஒள்ளிய பொருள், உள்ள த்துணர்வுடையா ரேதிய நூலற்று - மனத்தின்கணுல்லறிவுடையான் கற்றுத் தேர்ந்த நூலேப்போன்று விளங்கும், நாணுடையாள் பெற்ற நிலம் - (அதுபோல) நாணமுடையளாகிய குலமகள் அடைந்தவழகு, தெள்ளிய ஆண்மகன் கையிலயில்வாளனைத்து - உணர்வுடைய ஆண் டன்மையுடையான் கையிற் பிடித்தகூரிய வாளினையொக்கும், எ-று.

பொ-ரை. ஈகைத்தன்மை மேற்கொண்டு நடப்பான்கணுள்ள ஒள்ளிய பொருள்மனத்தின்க ணல்லறிவுடையான் கற்றுத்தேர்ந்த நூலேப்போன்று விளங்கும்; அதுபோலநாணமுடையளாகியகுலமகள் அடைந்தவழகு உணர்வுடைய ஆண்டன்மையுடையான்கையிற் பிடித் த கூரியவாளினை யொக்கும் என்பது.

இயல்பாற்கொடைத் தொழின்மேற் கொண்டொழுகுவோன் தைப்பொருள் புகழெய்தலான் எண்பொருள் என்றார். கற்றவறிவினை யுடையாரேதிய நூற்பொருள் பயன்படுதல்போல இயல்பாக நாண முடையார் நலமும் யாவரானும் புகழப்படுதலின் அதனை ஆண்மகன் கையிலயில்வா ளனைத்து என்றார், அரோ அசை. அனைத்தென்பது அத்தனைத்தென்பதன்மரூஉ. வள்ளன்மை யென்பதில் மை விகுதி மேல் விகுதி; இவ்வாறு கொள்ளாது வேறு கூறுவாரு முளர். இது எடுத்துக் காட்டுவமை.

The wealth in the hands of a man of a generous spirit is like the work read and understood by a man of good understanding. The loveliness of a chaste woman is like the weapon in the hand of a clear-souled hero. (6)

387. கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென், ஒருருங்கொப்பக் கொண்டானு மூர—னெருங் கொவ்வா, நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்ப னீரா டா, தென்னையுந் தோய வரும்.

இ-ள். ஊரன் - ஊரில் வசிப்பவன், கருங்கொள்ளும் செங் கொள்ளுந் தூணிப்பதக்கென்றெருரும் கொப்பக் கொண்டான் - கரி யநிறமுள்ள கொள்ளினையுஞ் செம்மை நிறமுள்ள கொள்ளினையும் தூணிப்பதத்தென்னு முகத்த ளவையால் வாங்கிக்கொண்டனன், ஒருங்கு ஒவ்வாத - அதுபோலு முழுது மொப்பாகாத, நன்னுதலார் - அழகிய நெற்றியையுடைய பரத்தையரை, தோய்ந்த வரைமார்பன் -

அனுபவித்த மலைபோலு மார்பினையுடைய கணவன், நீராடாது நீரிற்றோயாது, என்னையுந் தோயவரும் என்னையு மணைய வருகின்றனன் இதென்ன புதுமை! எ-று.

பொ-ரை. ஊரில் வசிப்பவன் கரிய நிறமுள்ள கொள்ளினையும் செம்மைநிறமுள்ள கொள்ளினையும் தூணிப்பதக்கென்னு முகத்தலளவையால் வாங்கிக்கொண்டனன். அதுபோலு முழுதுமொப்பாகாத அழகிய நெற்றியையுடைய பரத்தையரை அனுபவித்த மலைபோலு மார்பினையுடைய கணவன் நீரிற் றோயாது என்னையு மணையவருகின்றனன் இதென்ன புதுமை! என்பது.

நகர் வாழ்க்கைய னல்லனகலின் ஊரன் என்றும், அவன் பேணுதமையால் வாங்குதலியல்பாகலிற் கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப்பதக்கென்றுரைத்தும் கொப்பக்கொண்டானும் என்றும், அவன் போலும் பேதைமையாற் பரத்தையர் பலரையு மென்கணவன் தோய்ந்தமையான் நண்ணுதலார்த் தோய்ந்தவரைமார்பன் என்றும், நீராற் புனிதமாமென்ப துணர்ந்தானீராடாமலென்னையு மணையவருகின்றனன் என்னையும் புனிதமில்லாளாகக் கருதினனென்பாள் நீராடாதென்னையுந் தோயவரும் என்றும் கூறினள். இதுவுமேலையணி.

The lord of the town (our lord) has accepted to be of the same value the black and the red grain of different quality and quantity. He with chest as broad as a rock, having embraced those whose hearts are not pure, seeks my society too. (7)

388 கொடிஞ்சைவை கூரறி பாணநீ கூறி
னடிபைய விட்டொதுங்கிச் சென்று—துடியி
னிடக்கண் ணனையம்யா மூரற் கதனுல்
வலக்கண் ணனையார்க் குரை.

இ - ள். பாண-பாணனே, கொடியஞ்சை கூரறி - கொடுஞ்சொற்களைக் கூறுதொழி; ஊரற்குயாம் துடியினிடகிண்ணனையம் - தலைவற்கு யாம் உடுக்கையினிடப் பக்கத்தை யொப்பாவேம், அதனுல் நீ கூறின்-அவ்வீகையால் நீயிரேனுஞ் சொல்லுமிடத்து, அடிபையவிட்டொதுங்கிச் சென்று-மெல்லென வடியிட்டொதுங்கியப்பாற்போய், வலக்கண்ணனை யார்க்குரை - அதன் வலப்பக்கத்தை யொப்பவரா கிய பரத்தையர்க்குக் கூறு, எ-று.

பொ-ரை. பாணனே! கொடுஞ்சொற்களைக் கூறுதொழி. தலைவற்கு யாம் உடுக்கையினிடப் பக்கத்தை யொப்பாவேம். அவ்வகை

யால் யோதேனுஞ் சொல்லுமிடத்து மெல்லென வடியிட்டொதுங்கி யப்பாற்போய் அதன் வலப்பக்கத்தை யொப்பவராகிய பரத்தையர்க் குக் கூறு மின்பது.

பாணனென்பான் வேறுவகைச் சாதியான், அவன் தலைவனுக்குந் தலைவிக்குந் தூதுரைப்பவன். துடியினிட மருங்கு பயன்படுதலும், வலமருங்குபயன் படாமையும்போல பயன்படாதவெனமை யொழித் துப்பயன்பட்டு மவர்பாரே சென்றுங்கூறென்றாள் துடியினிடக்கண் அல்லாயம்யாம் அதனல்வலக்கணல்லாயார்க்குரைநீயென்றுங்கூறினுள். இது தலைவி தன்றலைமகன் பரத்தையர் பாற்சென்வதைத் தன்பாற் கூற, அதைக்கேட்டு ஆற்றாது நீ சொல்லத்தக்கன வீண்டைக்கூறு தொழிந்து ஆண்டே கூறுகவெனல். இடக்கணல்லாயம் வலக்கணல்லா யார் என்பன வுவமை.

O bard! do not utter cruel words or if you persist in doing so, go and utter them to those who are like the right eye, for my part, I am considered to be the left eye. (8)

389. சாய்ப்பறிக்க நீர்நிகழுந் தண்வய லூரன்மீ
தீப்பறக்க நொந்தேனும் யானேமற்—றீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந் தணியகல
நோக்கி யிருந்தேனும் யான்.

இ - ள். சாய்பறிக்க நீர்நிகழுந் தண்வயலூரன் மீது - கோரை யைப்பறிக்க நீர்வளங்கும் குளிர்ச்சிபொருந்திய வயல் சூழ்ந்த ஊரை யுடையனாகிய தலைவன்மேல், ஈ பறக்க நொந்தேனும் யானே - ஈப்பறக்கையில் ஆற்றாது சாலமனம் வருந்தி நின்றேனும் யானே, தீப்பறக்கத்தாக்கி முலைபொருத தண்சாந்தணிய கலம் - தீ வீசப் பரத் தையர் கொங்கைகள் தாக்கிக் கலவிப்போர் செய்த குளிர்ச்சிபொருந் திய சந்தனச் சாந்தை யணிந்த மார்பினை, நோக்கி யிருந்தேனும்யான் - பார்த்திருந்தேனும் யானே, எ-று.

பொ-ரை. கோரையைப் பறிக்க நீர் வளங்கும் குளிர்ச்சிபொரு ந்திய வயல் சூழ்ந்த ஊரையுடையனாகிய தலைவன்மேல் ஈப்பறக்கை யில் ஆற்றாது சாலமனம் வருந்தி நின்றேனும் யானே. தீ வீசப் பரத் தையர் கொங்கைகள் தாக்கிக் கலவிப் போர்செய்த குளிர்ச்சிபொருந் திய சந்தனச் சாந்தையணிந்த மார்பினைப் பார்த்திருந்தேனும் யானே என்பது.

சாய் என்பது ஒருவகைப்புல்லின் விசேடம், அது கோரை. ஊரன் என்றது மருதநிலத்தலைவனை. என்னை கூடியிருக்குமென்று

ஈப்பற்க்கக் கண்டாற்றிருந்தேனும், இன்று பரத்தையர் கொங்கை தெரிமுன்கத்தாக்கிப் பொருத சந்தமணிந்த மார்பை விழைவேனும் யானே எனத் தலைவி கூறியவாறு. இதனுற் குலமகளிர் பரத்தையர் சேரியிற்சென்ற தலைவனை நீக்கா திருக்கவேண்டுமென்பது பெறப்பட்டது. மனிமிகுதிப்பொருளது. நொந்தேன் இருந்தேன் கற்புடை என்பன வினையாலணையும் பெயர்கள். உம்மை எண்ணின்கணின்றன. ஏகாரம் பிரிநிலை.

It is I that felt a pang when a fly alighted on (my lord) the lord of the town with cool fields all around over flowing with water where from the people pluck the grass of luxuriant growth. Now I live to look upon his breast adorned with sandal to be warmly embraced by others. (9)

390. அரும்பவிழ் தாரினு னெம்மருளு மென்று
பெரும்பொய் யுரையாதி பாண—கருப்பின்
கடைக்கண் ணனையநா மூரற் கதலு
விடைக்கண் ணனையார்க் குரை.

இ-ள். பாண - பாணனே, அரும்பவிழ்தாரினுன் - அரும்பு மலரும் மாலையணிந்த தலைவன், எம் அருளும் என்று பெரும்பொய் உரையாதி - எமக்கு இரங்குவனென்று பெரும் பொய்யினைப் பேசாதொழி, ஊரற்குக் கரும்பின் கடைக்கணனையம் நாம் - யாம் தலைவற்குக் கரும்பின் கடைக்கண்ணை யொப்பாவேம், அதனுல் இடைக்கண் அனையார்க்குரை-அதனுல் இம்மொழியை அக்கரும்பினிடைக்கணனைய பரத்தையர்க்கு நீயே சென்றுரை, எ-று.

பொ-ரை. பாணனே! அரும்பு மலரு மாலையணிந்த தலைவன் எமக்கு இரங்குவனென்று பெரும் பொய்யினைப் பேசாதொழி. யாம் தலைவற்குக் கரும்பின் கடைக்கண்ணை யொப்பாவேம். அதனுல் இம்மொழியை அக்கரும்பினிடைக்கணனைய பரத்தையர்க்கு நீயே சென்றுரை என்பது.

எம்மருளு மென்புழி நான்காவது தொகுத்தல் பெற்றது; ஐந்தாவித்தாலுற்ற லென்புழிப்போல. உரையாதி எதிர்மறை யேவலொருமை வினைமுற்று. கரும்பின் கடைக்கண் முதிரத்திற் குறைவும் அதனிடைக்கண் மதுரத்தின் மிகுதியுமுண்மையின் தம்மை லன்பின்மையு மவர்பால் அன்புண்மையும் உவமைமுகத்தாற் றெரிவிக்கப்பட்டன.

O bard! do not utter a gross lie saying that the lord wearing a garland of fragrant flowers will favour us. I am like the (tasteless) tip of the sugar cane; therefore tell such a tale to those who are like its middle joints. (10)

Part III.

ON LOVE.

ங. காமத்துப்பால்.

காமத்துப்பால்:—அறம் இம்மைமறுமை வீடென்னும் மூன்றனையும், பொருள் இம்மை மறுமையென்னும் இருமையையும், காமமாகிய இன்பம் இம்மை யொன்றனையுமே பயக்கும் ஆகலின் காமத்துப்பாலைப் பிற்கூறப் புகுந்தார்; அஃது அறம்பொருளிரண்டன் பிற் கூறவேண்டுமோசலின், தமிழ்நூலார் மாந்தர்க் குறுதிப் பொருளெனக் கொண்டன அறம்பொருளின்பங்களேயாம்; அற்றாகலினன்றே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் முப்பாலாகக் கூறினார். பாலின் முறைமையு மிணிதுவிளங்கும். இனிப்பரிமேலழகரும் "ஈண்டின்பமென்றது ஒருகாலத் தொருபொருளான் ஐம்புலனுகர்தற் சிற்புடைத்தாய காமவின்பத்தை; இச்சிறப்புப் பற்றியே வடநூலுட்போகரானுஞ் சுவை பலவென்று கூறுவார் கூறுக; யாம் கூறிய இன்பச்சுவை யொன்றனையுமே யென மிகுத்துக் கூறினேன்" என்றனர்.

Chapter XL—The 'Characteristies' of Love

40-ஆம் அதிகாரம்: காமநுதலியல்.

இவ்வதிகாரம் காமத்தின் பாகுபாட்டைக் கூறுவது.

391. முயங்காக்காற் பாயும் பசலைமற் றாடி
யுயங்காக்கா லுப்பின்றாங் காமம்—வயங்கோத
நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப
புல்லாப் புலப்பதோ ராறு.

இ - ள். வயங்கோதம் - விளங்குகின்ற கடலானது, நில்லாதிரையலைக்கும் - நில்லாமல் அலைகளான் மோதும், நீள்கழி தண் சேர்ப்ப - நீண்டகழிகளின் றண்ணியகரையையுடைய அரசனே, முயங்காக்கால் பாயும் பசலை - இருவருங்கூடியிராவிடத்துடம்பு முழுதும் பசலைபோர்க்கும்; ஆடி யுயங்காக்கால் - புலந்துவருந்தாவிடத்து, காமம் உப்பின்றாம் - இன்பம் உப்புத் தூய்ப்பனவற்றை இன்சுவையாக்கற்கு வேண்மெனவிற்றாகாதது, புல்லா புணர்ப்பது ஓராறு - புணர்ந்தே நின்றூடுவது இக்காமநோய்க் கோர் நன்னெறியாம், எ-று.

பே-ரை. விளங்குகின்ற கடலானது நில்லாமல் அலைகளான் மோதும் நீண்ட கழிகளின் றண்ணிய கரையையுடைய அரசனே!

இருவருங்கூடி யிராவிடத்துடம்பு முழுதும் பசலைபோர்க்கும், புலந்து வருந்தாவிடத்து இன்பம் உப்புத் துய்ப்பனவீற்றை இன்சுவை யாக்கற்குவேண்டுமுளவிற்றாகாது, புணர்ந்தே நின்றாடுவது இக்காம நோய்க் கோர் நன்னெறியாம் என்பது.

உப்பு துய்க்கப்படுவனவற்றைச் சுவையாக்குதல்போலப் புலவி நிகழாவிடத் தின்பமெய்தமாட்டாமையின் உயங்காக்காலுப்பின்றாங் காமமனவும், புல்லாப்புலப்பதோராறு எனவும், அவ்வாறாடிக்கூடிய வழிப்பருவரலெய்துமாகலின் முயிங்காக்கால் பாயும் பசலை எனவுங் கூறினர். ஊடல், புலவி என்பன ஒருபொருட்கிளவி. அஃது இருவகைத்து: துனி, புலவியெனத்; துனி யென்பது சிறுகலாழ், புலவி யென்பது பெருங்கலாம். இத்துனியும் புலவியுங் காமத்திற் கின்பமாகலின் "துனியும் புலவியு மில்லாயிற் காமங் – கனியுங் கருங் காயமற்று" என்றார். காம மூப்பின்றென்பது மாடுகோடு கூரிதி என் பதுபோன்ற வழுவமைதி. தலைமகன் புலவி நீங்கக் கூறியது.

Lord of the cool shore of the sea where the restless and noisy billows beat! If there is no sweet embrace a sickly hue will spread over the body, and if there be no love quarrels, love will lack its pleasure. To embrace first and disagree then is the way (of love). (1)

392 தம்மமர் காதலர் தார்சூழ் அணியகலம்
விம்ம முயங்குந் துணையில்லார்க்—கிம்மெனப்
பெய்ய வெழிலி முழங்குந் திசையெல்லாந்
நெய்த லறைந்தன்ன நீர்த்து.

இ - ள். தம்மமர் காதலர் தார் சூழ் அணியகலம் - தம்மாற் காத லிக்கப்படுந் தலைவருடைய மாலையணிந்த வழகிய மீர்பினை, விம்ம முயங்கும் துணையிலார்க்கு - பூரிக்கத் தழுவுந் தலைவராகிய துணைமை யில்லாதார்க்கு, இம்மெனப் பெய்ய எழிலிமுழங்குந்திசையெல்லாம்- இம்மென்னு மோசையுடன் மேகம் மழை பொழிய முழங்குகின்ற திசையனைத்தும், நெய்தலறைந்தன்ன நீர்த்து – சாப்பறை யறைந் தாற்போலுந் தன்மையினை யுடைத்து, எ-று.

பொ-ரை. தம்மாற் காதலிக்கப்படுந் தலைவருடைய மாலையணி ந்த வழகிய மார்பினைப் பூரிக்கத் தழுவுந் தலைவராகிய துணைமை யில் லாதார்க்கு இம்மென்னு மோசையுடன் மேகம் மழைபொழிய முழங் குகின்ற திசையனைத்தும் சாப்பறை யறைந்தாற்போலுந் தன்மை யினை யுடைத்து என்பது.

கணவனைப் பிரிந்த மாதர் கார்காலம் வந்தழிக் கணவனை நீங்கியய்யாராகலானும், முகிலோசை கேட்டாங்குப் பருவரலா னுயிர்ப்பாராகலானு நெய்தலறந்தன்ன நீர்த்து என்றுவமமுமுத்தாற் கூறினர். இதுவேலேத்தினை. அறைந்தன்ன என்புழி ஈறு தொகுத்தல் பெற்றது 'எண்ணிக்கொண்டற்று' என்புழிப்போல. இம்மென் ஒலிக் குறிப்பு. நெய்தலென்றது சாப்பறையை.

If the wife is not in a position to embrace her husband whose breast is adorned with garland and gems, the thunder clap of the clouds during the rainy season is to her the beating of the funeral drum. (2)

393. கம்மஞ்செய் மாக்கள் கருவி யொடுக்கிய
மம்மர்கொண் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள்
கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தா டுணையில்லார்க்
கிம்மாலை யென்செய்வ தென்று.

இ - ள். கம்மஞ்செய் மாக்கள் கருவி யொடுக்கிய மம்மர் கொள் மாலை - கம்மியர் தத்தங் கருவிகளைத் தொழிற்படுத் தொடுக்கிய மயக்கங்கொண்ட மாலைக்காலத்தில், மலராய்ந்து பூத்தொடுப்பாள் பூக்களை யாராய்ந்து மாலையாகத் தொடுப்பாள், கைமாலையிட்டு - கையகத்து மலர்மாலையை வைத்துக்கொண்டு, துணையில்லார்க்கு - தலைவரைப் பிரிந்த மடவார்க்கு, இம்மாலை யென் செய்வதென்று கலுழ்ந்தாள் - இம்மாலை யாது பயன் படுங்கொல்லோவென்று கலக்கங் கொண்டழுதாள், எ-று.

பொ-ரை. கம்மியர் தத்தங் கருவிகளைத் தொழிற்படுத் தொடுக்கிய மயக்கங்கொண்ட மாலைக்காலத்திற் பூக்களை யாராய்ந்து மாலையாகத் தொடுப்பாள். கையகத்து மலர் மாலையை வைத்துக்கொண்டு தலைவரைப் பிரிந்தமடவார்க்கு இம்மாலை யாதுபயன் படுங்கொல்லோவென்று கலக்கங்கொண்டழுதாள் என்பது.

பகற்பொழுதெல்லா மலரெடுத்தாய்ந்து மாலையாகத் தொடுக்குந்தொழிலின் முயன்றுளர்கலின் மலராய்ந்து பூத்தொடுப்பாள் என்றும், தலைவின் வரும்வருமென்றிருந்தபழி யவன் வராவழி யம்மாலை பயன்படாமையான் துணையில்லார்க் கிம்மாலை யென்செய்வதென்றலுற்றாள்-என்றும், இஃதுங் கார்ப்பருவமன்னை தலைத்தாகலின் மம்மர்கொள்மாலை என்றும், இடைவிடாது தொழிலாற்றுங் கம்மியருந்தத்தொழில் விட்டொழிப்பராகலின் கம்மஞ்செய்மாக்கள்

கருவியொடுக்கியவென்றுங் கூறினர். இது தலைமகன் செல்ல வுடன் படாமையைத் தலைவற்குப் பாங்கியுரைத்தது.

The wife at home culled flowers in the evening when the workmen all put by their tools, and wove a beautiful garland and then let it fall from her hands and sobbed saying 'What is the use of this garland to me who is alone?' (3)

394. செல்சுடர் நோக்கிச் சிதரரிக்கண் கொண்டநீர்
மெல்விரலூழ் தெறியாவிம்மித்தன் - மெல்விரலி
னுள்வைத்து நங்குற்ற மெண்ணுங்கொ லந்தோதன்
றோள்வைத் தணைமேற் கிடந்து.

இ-ள். செல்சுடர் நோக்கி - மேலைக்கடல் புகச்செல்கின்ற ஞாயிற்றைக்கண்டு, சிதரரிக்கண்கொண்டநீர் - சிதறிய செவ்வரி பரந்த கண்களிற்கொண்ட நீரை, மெல்விரல் ஊழ்தெறியா - மென்மையாகிய விரல்களால் முறையினெடுத்து வீசி, தன் மெல் விரலில் நாள் வைத்து - தம் மென்மையாகிய விரல்களால் நாளைக் கணக்கிட்டு, விம்மி - விம்மாநின்று, தன்தோள் அணைமேல் வைத்து - தலைவி தன்றோளை யணையாகவைத்து, கிடந்து நங்குற்றமெண்ணுங் கொல் அந்தோ - பதித்து ஐயோ நம் பிழையையெண்ணுமோவென்று பாகனெதி கூறினன்,—எ-று.

பொ-ரை. மேலைக்கடல் புகச்செல்கின்ற ஞாயிற்றைக்கண்டு சிதறிய செவ்வரிபரந்த கண்களிற் கொண்ட நீரை மென்மையாகிய விரல்களான் முறையினெடுத்து வீசித் தம் மென்மையாகிய விரல்களால் நாளைக் கணக்கிட்டு, விம்மாநின்று தலைவி தன் றோளை யணையாக வைத்துப் படுத்தி ஐயோ நம் பிழையை யெண்ணுமோ வென்று பாகனெதி கூறினன் என்பது.

ஞாயிறு குடதிசையை நோக்கிச் செல்வதாகலின் செல் சுடர் என்றான். செல் சுடர் அன்மொழித்தொகை. தலைவியைப்பிரிந்து தலைவன் தான் குறித்துப்போந்த காலத்தே வராமையின் அவன் சென்ற நாளைவைத்து விரலினெண்ணுமாகலானும், தன்கையணைமேல் இன்று செய்வே மென்பதனைச்செய்யாமை துன்பினமையானும் வருந்துமாகலின் நாள் வைத்து நங்குற்றமெண்ணுங் கொலந்தோதன்றோள் வைத்தணைமேற் கிடந்து என்றான். அந்தோ என்றது இரக்கத்தின் கண் வந்தது. செவ்வரிபரந்த கண்ணினழகையு மறைத்து நிற்பது என்பது தோன்ற சிதரரிக் கண்ணீர்கொண்ட என்றதென்க. இது

வினைமுற்றிநின்று தலைவன் பாகன் கேட்பக் கூறியது. பாகனென்பது இசையெச்சம்.

'Looking at the setting sun and wiping away the tears by her soft fingers and sobbing resting her arms in the couch, will she be counting with her fingers the days (of my absence) and my faults ! (4)

395. கண்கய லென்னுங் கருத்தினுறை காதலி
பின்சென்ற தம்மஞ் சிறுசிரல்—பின்சென்று
மூக்கினெழுந்து மிமிறிகல்லா வொண்புருவம்
கோட்டிய வில்வாக் கறிந்து.

இ-ள். கண்கயலென்னுங் கருத்தினுல் - கண்களைக் கயலென்றுசொல்லப்படுகின்ற கருத்தால், காதலி பின் சென்றதம்ம சிறுசிரல் - சிறிய சிரல் என்னப்படும் பறவை தலைவியின் பிறகுடர்ந்து சென்றது, பின்சென்றும்-பின்சென்று தொடர்ந்தும், மூக்கினெழுந்தும் - முயன்றும், ஒண்புருவம் கோட்டிய வில் வாக்கு அறிந்து எறிகல்லா - ஒள்ளிய புருவம் வளைக்கப்பட்ட வில்லின் வளைவு போலிருந்ததை யுணர்ந்து பிடியாம லின்றன,—எ - று.

பொ-ரை. கண்களைக் கயலென்று சொல்லப்படுகின்ற கருத்தால் சிறிய சிரல் எனப்படும் பறவை தலைவியின் பிறகுடர்ந்து சென்றது, பின்சென்று தொடர்ந்தும் முயன்றும் ஒள்ளிய புருவம் வளைக்கப்பட்ட வில்லின் வளைவுபோலிருந்ததை யுணர்ந்து பிடியாம லின்றன வென்பது.

சிரல் என்பது மீன் கொத்திப்பறவை; அது தன் காதலியின் கண்ணைக் கயலென்று கருதிச் சென்றடைந்து கோட்டிய புருவம் தோன்றுதலி கண்டாங்கு பிடியாமையாற் பாங்கனெனுந் தலைவன் வியந்தவளழகை க்கூறினன். கண்கயலென்பதும் புருவும் வில்லென்பது மூவிமை. அம்மவென்பதனை 'அம்மகேட்பிச்சும்' என்பதனுளமைக்க. வாக்கு முதனிலை திரிந்த தொழிற்பெயர். இது தலைவன்றனைத் தமை பாங்கற் குரைத்தல்.

The little king-fisher seeing the eyes of my beloved (as she was bathing in the tank) and mistaking it for the *Kayal* followed her. Though it did so and balanced itself in the sky over her, it did not come down, seeing her shiny brow bent above them which it mistook for a set of bows. (5)

396. அரக்காம்ப லூறும்வா யம்மருங்கிற் கன்னே
வரற்கான மாற்றின கொல்லோ—வரக்கார்ந்த
பஞ்சிகொண் டீட்டினும் பையெனப் பையெனவென்
றஞ்சிப்பின் வாங்கு மடி.

இள் அரக்கு ஆம்பல் நாறும் வாய் அம்மருங்கிறகு – செவ்வாம்பல் போலும் விளங்குகின்ற வாயையும் அழகிய இடையையுமுடையாட்கு, அரக்கு ஆர்ந்த பஞ்சிகொண்டீட்டினும் – செம்மை நிறமமைந்த பஞ்சிக்குழம்பைக்கொண்டு பூசினும், பையென பையென என்று–மிக மெல்லனவாகவென்று, அஞ்சி பின்வாங்குமடி–அஞ்சி ஆற்றாமல் வருந்துமடிகள், அன்னே பரற்கானமாற்றினகொல்லோ – பருக்கைக்கற்களையுடைய காட்டிற் செல்லப் பொறுத்தனவோ,—எ-று.

பொ-சை. செவ்வாம்பல்போலும் விளங்குகின்ற வாயையும் அழகிய இடையையுமுடையாட்குச் செம்மை நிறமமைந்த பஞ்சிக்குழம்பைக்கொண்டு பூசினும் மிக மெல்லனவாக என்றஞ்சி யாற்றாமல் வருந்துமடிகள் பருக்கைக் கற்களையுடைய காட்டிற்செல்லப் பொறுத்தனவோ என்பது.

அடிக்குப்பஞ்சி பூட்டியஞான்றுபையென பையெனவென்பாள், இற்றை ஞான்று பரற்கானந்தலைவன்பின் போந்தலெவ்வாறவளடிகள் பொறுத்தனளென்று தாய் மகளைப் போக்கி இரங்கல் உணர்த்திற்று. பையவென்பது ஈறுதொகுத்தல் பெற்றது. அடிக்குமிகுதிப்பொருளது. அம் என்றது அழகினை. மருங்குல் ஆகுபெயர். அம்மருங்குலென்புழி அம் உரிச்சொல்லாகலின் அதனையுரிச்சொற்றொடர்ப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையென்னலாமோ வெனின் வேற்றுமை விரிபண்பு உவமை உம்மையென்னும் இவ்வைந்து தொகைப்புறத்தும் புறத்து மொழிராதேனுமொன்று தொகப்பெறினன்மொழித்தொகையாக வருவதல்லது இவ்வாறு கொள்ளமாட்டாமையாலது பொருந்தாமையறிக. அன்னே இரக்கக் குறிப்பு. கொல்லோ ஐயப்பொருளது.

How did my dear child whose waist is lovely and whose mouth breathes the fragrance of the water-lily dare to go along the stony path, her foot being so very soft that she did not suffer me to apply the soft cotton soaked in the red dye, but said 'apply gently, gently' and shrinking drew it back? (6)

397. ஓஒக் கணக்க ரொலியடங்கு பூன்செக்கர்
மாலைப் பொழுதின் மணந்தார் பிரிவுள்ளி

மாலை பரிந்திட் டழுதாள் வனமுலைமேற்
கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து.

இ-ள். ஓலைக்கணக்கர் - ஓலையை யெழுதும் கணக்கருடைய, ஒலியடங்கு புல் செக்கர் - ஒசையடங்கா நிற்கும் புன்மையாகிய செவ்வானத்தையுடைய, மாலைப்பொழுதின் மணந்தார் பிரிவுள்ளி - மாலைக்காலத்தில் தன்கணவன் பிரிவையெண்ணி, வனமுலைமேல் - அழகியகொங்கைமேல், கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து - ஒப்பனை செய்த சந்தனப் பூச்சினையுதிர்த்தெழுத்து, மாலை பரிந்திட்டு - மாலைகளைக் கழற்றியெறிந்து, அழுதாள் - புலம்பி நின்றாள், - எ-று.

பொ-ரை. ஓலையை யெழுதும் கணக்கருடைய வேசை யடங்காநிற்கும். புன்மையாகிய செவ்வானத்தையுடைய மாலைக்காலத்தில் தன் கணவன் பிரிவை யெண்ணி யழகிய கொங்கைமேல் ஒப்பனை செய்த சந்தனப் பூச்சினை யுதிர்த்தெழுத்து மாலையைக் கழற்றி யெறிந்து புலம்பிநின்றாள் என்பது.

இது மாலைப்பொழுதின்கண் தன்கணவன் பிரிவுள்ளி மாலையைக் கழற்றிக்கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து தன் பாங்கியிடத்தழுது கூறலையுணர்த்திற்று. ஊரகத்துக் கணக்குகளை யெழுதுவோரை ஓலைக்கணக்கர்என்றார். மூணந்தார் என்றது தம்மைத் தெய்வமணத்தாற் கொண்டாரை. பரிதல் என்றது கழற்றி யெறிதலை. மாலையுனப் பொதுவகையாற் கூறினமையான மலர்மாலைகளென்றுரைப்பதன்றி முத்து வடமுதலியனவுங் கொள்க.

When the *Karnams* who con the palm-leaf scrolls had ceased their work owing to the dim light of the evening, she thought of her absent lord and wept and plucked off the flowers from out her wreath and brushed off the odorous sandal paste from her lovely breast! (7)

398. கீடக்கருங் கானத்துக் காளைபின் ஞாள்
நடக்கவும் வல்லியோ வென்றி—சுடர்த்தொடீஇ
பெற்ற னெருவன் பெருங்குதிரை யந்நிலையே
கற்ற னளிதாருமாறு.

இ-ள். சுடர்த்தொடீஇ - ஒளியமைந்த வளையல்களையுடையாளே, கடுங்க அரு கானகத்து - யாரும் கடந்து செல்லுதற் கருமையாகிய காட்டின்கண், காளைபின் - காளையன்னானுகிய தலைவன்பின் நாளை நடக்கவும் வல்லியோவென்றி - நாளை நீ நடந்து செல்லவமாட்

மெவ்யோவென்று கூறி நின்றனை, பெருங்குதிரைபெற்றான் ஒருவன் - பெரியகுதிரை யொன்றினைப்பெற்றானேயா லெருவன், அந்நிலையே- அதனைப்பெற்றவத்தினைப்போழ்தே, அஃதூருமாறுகற்றான்- அதனை மீதூர்ந்து நடத்துமாறு கற்றானே யாயின், ஆகையால் கணவன் பிற்சேறலறிதேயன்று,—எ - று.

பொ-ரை: ஒளியமைந்த வளையல்களையுடையாளே! யாருங்கடந்து செல்வதற் கருமையாகிய காட்டின்கண் காளையன்ஞெகிய தலைவன் பின் நாளை நடந்து செல்லுமாட்டுவையோ வென்று கூறி நின்றனை; பெரிய குதிரையொன்றினைப்பெற்றுடையானெருவன் அதனைப்பெற்ற வத்தினைப்போழ்தே அதனை மீதூர்ந்து நடத்துமாறுகற்றானேயாயின்; ஆகையால் கணவன் பிற்சேலறிதேயன்று என்பது.

கடக்கரு மென்புழி வினையெச்சத்தகரம் தொகுத்தல் பெற்றது. சுடர்த்தொடி அன்மொழித்தொகை; அளபெழுந்துவிளியுரு பேற்றது. உம்மை எதிர்மறை. ஆகையாற் கணவன்பின் சேறலிதேயன்று என்பது குறிப்பெச்சம். கற்றல் குதிரையூர்ந்து நடத்தல். காளை ஆகுபெயர். நாளை நடக்கவும் வல்லையோவென்றி என்பதனைப் பாங்கி கூறியதாகத் தலைவிகூறியதுணர்த்தப்பட்டது. பெற்றானெருவன் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. என்றி முன்னிலை வினைமுற்று. ஒகாரம் வினா: ஏகாரம் தேற்றம். கடக்கருங்கானமென்றது பிறர் கடத்தற்கருமை யுணர்த்தற்கு.

You asked "O damsel wearing bright bracelets! Have you strength enough to go along with your husband on the morrow?" When one has obtained a very good horse that moment he has learnt how to ride it. (8)

399. மூலைக்கண்ணும் முத்து முழுமெய்யும் புல்லு
மிலக்கணம் யாது மறியேன்—கலைக்கணிம்
வேங்கை வெரூஉ நெறிசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி.

இ - ள். மூலைக்கண்ணும் முத்து முழுமெயையும - மூலைக்கூம்புகளும் முத்துவடமும் அழுந்த என்னுடம்பு முழுதும், புல்லும் இலக்கணம் யாது மறியேன் — அணையுங் குறி சிறிதும்றிதல் செய்யேன், என் பூம்பாவை செய்த் குறி - தாமரைத் தண்சுகந்த பூவையின்னோரிய என்மகள் செய்த குறியானது, கலைக்கணம் வேங்கை வெரூஉம் நெறிசெலியபோலும் - மான் கூட்டம் வேங்கையிய லஞ்சும் வழியிற் போதற்குப்போலும், எ-று.

பொ-ரை. மூலைக்காம்புகளும் முத்துவடமும் அழுந்த என்னுடம்பு முழுதும் அணையுங் குறி சிறிது மறிதல் செய்யேன். தாமரைத்தவி சுகந்த பாவையன்னளாகிய என் மகள்செய்த குறியானது மாலைக்கூட்டம் வேங்கையை யஞ்சும் வழியிற் போதற்குப் போலும் என்பது.

"அச்சக்கிளவிக் கைந்து மிரண்டு - மெச்சமிலவே பொருளவலினை" என்ப தொத்தாகலின் வேங்கை வெரூஉ மென்பதற்கு வேங்கையை யஞ்சுமெனக் கொளப்பட்டது; இக்காலத்து வேங்கைக் கஞ்சுமெனக் கொள்வது வழக்கு. போலும் ஒப்பில் போலி; "ஒப்பில்போலியு மப்பொருட்டாகும்" என்பதனுற்கொள்க. பூம்பாவை என்பதன் மொழித்தொகை. உம்மை எண்ணின்கணின்றன. யாதுமென்புழி உம்மை முற்றுப் பொருளோடிழிவு சிறப்புப்பொருளது. அறியேனென்புழி ஏகாரமே யெதிர்மறைப் பொருளதென்பர், சேனாவரையரும், ஆகார விகுதிப்புணர்ந்து கெட்டதென்பதிக்காலவழக்கு. அளபெடுத்தலின்னிசை தருதற்கு. என் பூம்பாவை மூலைக்கண்ணும் முத்தமுழுமெய்யும் புல்லு மிலக்கண மென்பதனுன் நெருநல் அவள் இவ்வாறு செய்தனிந்நமை தான் பிரிதற்குப்போலு மென்பார் யாதுமறியேனென்றிழிவு சிறப்பும்மை கொடுத்துக் கூறினர்; அது யாவரு மஞ்சு நெறியென்பார் கலக்கணம் வேங்கைவெரூஉ நெறி என்றார். இது மகட்போக்கியதாய் கவன்றுரைத்தது.

My breast, necklace of pearls and my whole body she has embraced. What it meant I knew not. ~~It was the sign, I~~ now fancy, made by my dear lovely one that she was about to go out on the path where the antelopes flee in fright and panic from the tiger. (9)

400. கண்மூன் றுடையாளுங் காக்கையும் பையரவு
மென்னீன்ற யாயும் பிழைத்ததென்—பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனார் சென்ற நெறி.

இ - ள். பொன் ஈன்ற கோங்கரும் பன்னமுலையாய் - பொன் போலுஞ் சுணங்கட்டர்ந்த தோங்கரும்புபோன்ற கொங்கையை யுடையாய், கண் மூன்றுடையாளும் - கண்கள் மூன்றுடையாளும், காக்கையும் பையரவும் - சாக்கையும் படத்தையுடைய பாம்பும், என்னீன்றயாயும் - என்னைப் பெற்றதாயும், பிழைத்ததனன் - எனக்குச் செய்த பிழைபாதுமன்று, பாங்கனார் பொருள்வயிற் சென்ற நெறி - எமது தலைவர் பொருளீட்டுதற்காகப் போந்த நெறியேயாம், எ-று.

பொ-ரை. பொன்போலுஞ் சுணங்கடர்ந்த கோங்கரும்புபோன்ற கொங்கையை யுடையாய்! கண்கள் மூன்றுடையானுங் காக்கையும் படத்தையுடைய பாம்பும் என்னைப் பெற்ற தாயும் எனக்குச் செய்த பிழை யாதுமின்று, எமது தலைவர் பொருளீட்டுதற்குப் போந்த இந்நீயேயாம் என்பது.

கோங்கரும்பன்ன மூலையா னென்றது பாங்கியை. சுணங்கு நனிபூத்தமையின் பொன்னீன்ற வென்றதென்க. கண் மூன்றுடையானென்றது சிவனை; அஃது 'இலையாத மூக்கண் மூவரிற் பெற்றவர்' என்பதனாலுணர்க. முக்கணுவன்சோமன் சூரியன் அக்கினியென்பன. மலரம்பெறிந்த மாரனையெரித்து மீட்டுமுதவிய கண்மூன்றுடையானும், தன் கூட்டில் வளர்த்த குயிலைக் குத்திக்கொலை செயாது காத்தகாக்கையும்; மதியை விழுங்கிப் பின்னுமிழ்ந்தவரவும், எண்ணைப்பெற்ற ஞான்றே கொல்லாதுவிட்டு வளர்த்த தாயுமே பிழை செய்தனரெனத் தலைவி தன் பிரிவாற்றுமையைத் தோழியொடுரையது; இங்குக் கண் மூன்றுடையான் முதலியவாக விதந்து கூறினமை கணவனைப் பிரிந்துழித்தன்னை வருத்துமாறனையுங் குயிலையும் மதியையும் நான் கருதற்பாலதன்று; தாய் கொன்றிருந்தாளாயின் இத்துணைத் துன்ப மெய்தே னென்பாள் என்னீன்ற தாயெனப் பிற் கூறியவாறென்க. என் என்னும் வினாவினைக் குறிப்பு மூற்றீண்டென்னென்னு மின்மை குறித்து நின்றது; இதனைக் 'கற்றதனாலாயபயனென்கொல்' என்புழிப் பரிமேலழகர் கூறலாறு மூணர்க. கண் மூன்றுடையான் காக்கை படவரவு யாய் என்பன விரவி பிழைத்தென்னும் தொழிற்பெயர்கொண்டது. பொன் ஆகுபெயர்.

Maiden whose bosom resembles the *Kongu* bud of golden hue! The triple eyed, crow, the hooded snake, my mother:— What wrongs have these done to me? (None at all.) The way my lover went in search of wealth, is my pain. (10)

நாலடியார் மூலமும் உரையும்

முற்றிற்று.

கடவுள் துணை.

நாலடியார்

பாட்டு முதற்குறிப்பு அகராதி.

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
அகத்தாரே	31	ஆகாதெ	321	இல்லாவிடத்	89
அக்கேபோ	119	ஆடுகோடா	184	இழித்தக்க	288
அங்கண்	353	ஆட்பார்த்	21	இழைத்தநா	7
அங்கண்விசு	146	ஆணமிலெ	354	இளையானட	65
அங்கோட்	353	ஆமரபோ	357	இறப்பச்சிறி	97
அச்சம்	80	ஆர்த்தபொ	277	இறப்பநினை	166
அடுக்கன்ம	194	ஆர்த்தவறிவி	333	இறப்பவே	213
அடைந்தார்ப்	165	ஆவாநாமாக்க	32	இற்சார்வி	174
அத்திட்டகூ	269	ஆவேறுருவி	114	இற்பிறப்பில்	305
அம்பலயலெ	86	ஆற்றுந்து	187	இற்பிறப்பெ	202
அம்புமழலு	87	ஆண்பெ(கெ	228	இனநன்மை	141
அரக்கா	375	இகைத்த	178	இனியார்த்தெ	350
அருகலு	249	இசையாதெ	185	இன்பம்	78
அரும்பவிழ்	369	இசையாவொ	108	இன்றுது	340
அரும்பெறல்	24	இசையுமெனி	147	இன்றுகொ	36
அரும்பெறற்	361	இடம்பட	112	இன்னாரினைய	195
அருளிெ	306	இடும்பைகூர்	104	இன்னுசெயினுமி	75
அலகுசால்	135	இட்டாற்று	275	இன்னுசெயினும் விட	215
அவமதிப்பு	157	இணைக்குமள	308	இன்னுசெயினும் விடு	216
அவ்விய	307	இம்மியரிசி	92	இன்னுவியை	292
அழன்மண்டு	193	இம்மைபயக்	127	ஈட்டல	267
அள்ளிக்கொ	249	இம்மையு	281	ஈண்டீர்	106
அறம்புகழ்	81	இரவலர்கள்	267	ஈதலிசைபா	173
அறிவினுற	165	இருக்கையெ	138	ஈனமாயில்	189
அறியாப்பே	164	இரும்பார்க்கு	115	உடாஅது	11
அறியாரு	105	இலங்கிரீர்	216	உடுக்கை	136
அறிவதறிந்	73	இல்லமிளமை	53		
அறுசுவை	3	இல்லாமை	289		